நாட்டுப்புற ஆட்டக்கலைகள்:

அன்றும் இன்றும்

T. 27293

தொகுப்பும் பதிப்பும்:
முனைவர் த. கனகசபை

நாட்டுப்புற ஆட்டக்கலைகள் அன்றும் இன்றும்

தொகுப்பும் பதிப்பும் :

முனைவர் த. கனகசபை

களத்தலைவர், நிகழ்கலைப்பள்ளி

துறைத்தலைவர், நிகழ்கலைத்துறை

நிகழ்கலைத்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர்

திருச்சிராப்பள்ளி - 620 024

நாட்டுப்புற ஆட்டக்கலைகள்:
அன்றும் இன்றும்

தொகுப்பும் பதிப்பும் : முனைவர் த. கனகசபை

© பாரதிதாசன் பல்கலைக்கழகம்

முதற் பதிப்பு : மார்ச் 2009

விலை : ரூ. 200

கணினி அச்சு : இராஜகுணா, சென்னை-15

அட்டை வடிவமைப்பு : ஐசக்

நூலாக்க விவரம் : டெம்மி 1/8
என்.எஸ். மேப்லித்தோ
10 புள்ளி எழுத்துகள்
சாதா கட்டு
பக்கங்கள் 652

வெளியீடு : நிகழ்கலைத்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப் பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024

நூல் உருவாக்கம் : பொன்னி அச்சகம், சென்னை.

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
துணைவேந்தர்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024

வாழ்த்துரை

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் புதியதாக தொடங்கப் பெற்றுள்ள நிகழ்கலைத்துறையில் "நாட்டுப்புற ஆட்டக்கலைகள் : அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் நிகழ்கிற தேசியக் கருத்தரங்கமும் இக்கருத்தரங்கில் வழங்கப்பெற்றுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் இப்பொழுது பெருநூலாகவும் மலர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழரின் பேச்சு மொழிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடிப்படையான பங்களிப்பினை வழங்கி வருகிற நாட்டுப்புறப் பாடலும் ஆடலும் பழங்காலந்தொட்டு, பெற்று வந்துள்ள வளர்ச்சியையும் மலர்ச்சியையும் திருப்பங்களையும் இக்கட்டுரைத் தொகுப்பு நூலானது தக்கவாறு பதிவு செய்துள்ளது.

இலெமூரியாவில் மாந்த இனத்தின் தோற்றம் முதலாக, அவன் தன் இன்பங்களையும் துன்பங்களையும் பிறருக்குத் தெரிவிக்க சைகை மொழியும் பின், ஒலியின் வழியாகத் தொடங்கிப் பேச முனைவதற்கு முன்னதாகவே இசையையும் ஆடலையும் அறிந்திருந்தான். மானுடத்தின் சைகை மொழியானது ஆடல் அசைவுகளையும்

இவ்வசைவுகளால் ஒலியினோசை இசையாகவும் மெல்ல மெல்ல எழும்பலாயிற்று. இவன் தன்னுள் பீறிட்ட மகிழ்ச்சியில் தன்னை மறந்து துள்ளிக் குதிக்கவும் துன்பத்தில் துவண்டுச் சோர்ந்து ஒடுங்கவும் ஆடலும் இசையும் இவனுள் ஒருசேரக் கைகோர்த்தன. இவ்விரண்டும் அவனுள் மொழியின் தோற்றுவாயைத் திறந்தன. அவனுள் உணர்ச்சிகள் குவியல் குவியலாகச் சேர்ந்தபோது மொழி வெள்ளத்தில் மிதந்தான். தன்கூடவே இருந்த இன்னொருவனோடு பேசிப்பேசி எண்ணங்களை வளர்த்தான். மானுடம் பெற்ற இன்பங்களும் துன்பங்களும் இலக்கியமாயின. இலக்கியப் பயில்வால் அவனின் கனிந்த எண்ணம் வாழ்வின் அடையாளங்களாயின. இன்று செவ்விலக்கியமாக.... உலகோர் போற்றும் ஒப்பற்ற இலக்கியங்களாக... இசையாக... கூத்தாக விளங்கி வருகின்ற முத்தமிழின் வேராகவும் விழுதாகவும் நாட்டுப்புற இலக்கியமும் இசையும் கூத்தும் அமைந்த பாங்கினை இலக்கியத் தொடக்கமான வாய்மொழி மரபுகளின்வழி உருவான நாட்டுப்புறக் கலைகள் இனிதாய் எடுத்தியம்புகின்றன.

இத்தொகுப்பினுள் அமைந்துள்ள கட்டுரைகள், நாட்டுப்புறத்தில் வழங்கப்படுகின்ற சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட ஆட்டங்களில் அன்றைய ஆட்ட நிலையையும் மாறிவரும் சூழலில் அவற்றின் இன்றைய ஆட்ட முறையையும் ஆராய்ந்துள்ளன. குறிப்பாக கரகாட்டம், காவடியாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், சேவையாட்டம், கழங்காட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், சேவையாட்டம், கைச்சிலம்பாட்டம், தேவராட்டம், கழியலாட்டம், கொக்கலிக்கட்டையாட்டம், கோணங்கியாட்டம் போன்ற ஆட்டங்களை ஆவணப்படுத்தி இவை அன்றும் இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்ற முறைகளை விவரப்படுத்தியுள்ள பாங்கிலிருந்து இக்கட்டுரைகள் இக்கருத்தரங்கிற்கு வலிவையும் பொலிவையும் சேர்த்துள்ளன என்பதனை அறிகிறேன். மாந்தனின் உழைப்பிலிருந்து உருவாகிவருகின்ற நாட்டுப்புறக் கலைகள் உற்பத்தியைப் பெருக்கவும் கூடவே உழைப்பின் வலியை மாற்றவும் என மக்களுக்குப் பல்வேறு நிலைகளில் பயன்களைத் தந்துவருகின்றன. அப்பயன்களை அறிந்துணர, மேலும் ஆராய, ஆவணப்படுத்த இது போன்ற ஆய்வுகள் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இயற்கைக்கும் மாந்த வாழ்விற்கும் இடையேயான உறவுகளை நாட்டுப்புற ஆட்டக்கலைகள் வளர்த்தெடுத்துள்ளன. மாந்த வாழ்வின் தொடக்கத்தில் 'சேய்' போல உருவாகிய நாட்டுப்புறக் கலைகள் குமுகாய வளர்ச்சி நிலைகளுக்குத் தக்கவாறு தம்மைத் தகவமைத்துக் கொள்கின்ற

நிலையானது இக்கருத்தரங்கின் சிறப்பான நோக்கத்தின் உள்ளீடாக விளங்குகிறது. இங்கு வழங்கப்பட்டுள்ள கட்டுரைகளிலிருந்து இந்த நோக்கம் நிறைவேறியுள்ளது. இதிலிருந்து இக்கருத்தரங்கத்தின் பயனை நிகழ்கலைத்துறையானது அடைந்துள்ளது. இக்கருத்தரங்கில் பங்கு கொண்ட அனைத்துக் கட்டுரையாளர்களையும் நிகழ்கலைத் துறைத் தலைவர் முனைவர் த. கனகசபை மற்றும் துறை ஆசிரிய உதவியாளர் களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சிகொள்கிறேன்.

வாழ்த்துகள்...

19.03.2009

அன்புடன்

(முனைவர் மு. பொன்னவைக்கோ)

முதுமுனைவர் **அரு. மருததுரை**
புலத்தலைவர்,
இந்திய மற்றும் பிறமொழிகள் புலம்
களத்தலைவர்,
இந்திய மொழிகள் பள்ளி.

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - *620 024.*

அணிந்துரை

உலகத்தின் தொன்மைவழி முதன்மையையும் பண்பாட்டின் வாயிலாகத் தலைமையையும் பெற்றுத் திகழும் தமிழின் சிறப்புகளையும் தமிழர்களின் பெருமையினையும் இன்றளவும் பாதுகாத்து வருவது தமிழக நாட்டுப்புறவியல் ஆகும். கலை, அறிவியல், பண்பாடு, மானுடவியல், வரலாறு என எத்துறை நோக்கினும் அத்துறைச் செய்திகளை அள்ள அள்ளக் குறையாமல் அள்ளித்தருவது தமிழக நாட்டுப்புறவியலுக்குரிய தனிச்சிறப்பாகும். பல்வேறு அறிவியல் கூறுகளில் குறிப்பாகத் தமிழ் நாட்டுப்புற மருத்துவம் மற்றும் மூலிகைகள் ஒன்றே இச்சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இன்றளவும் மரபு வழியாகத் தொன்மைச் செல்வங்களை அழியாமல் காத்து மக்களுக்கு வழங்குவது தமிழக நாட்டுப்புறவியலின் தனிச்சிறப்பாகும். இத்தகைய சிறப்புமிக்க நாட்டுப்புறவியலின் ஒரு கூறாக அமைவது நாட்டுப்புறக் கலைகள் ஆகும்.

கலை உணர்வு இல்லாத உயிரினமே இல்லை எனலாம். எல்லா வற்றிலும் கலையுணர்வு பொதிந்துள்ளது. அது இயற்கையானது; இயல் பானது; மனத்திற்கு மகிழ்வூட்டுவது; சிந்தனையை மேம்படுத்துவது;

குறிப்பாகச் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காதது. உடலை வளப்படுத்தி, தன்னையும் மகிழ்வித்துச் சான்றோரையும் மகிழ்விப்பது தமிழக நாட்டுப்புறக்கலைகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும். உலகில் வாழும் மலையின மக்கள் அனைவரும் தொன்மைக்குடிகளின் எச்சமாகத் திகழ்கின்றனர். இவர்களிடையே பயில்வில் உள்ள பயன்கலைகள் மற்றும் நிகழ்கலைகள் அனைத்துமே நமது தமிழக நாட்டுப்புறக் கலைகளுடன் அமைப்பிலும் பயன்பாட்டு அடிப்படையிலும் இன்றளவும் நெருங்கிய உறவுடையனவாகத் திகழ்கின்றன. இது நமது கலைகளின் மரபறாதத் தொன்மைச் சிறப்புக்குச் சான்றாகும்.

தமிழக நாட்டுப்புறக்கலைகளைப் பதிவு செய்தலையும் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த மாற்றங்களை வெளிப்படுத்துதலையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்டு இக்கருத்தரங்கம் நடத்தப்படு கின்றது. கருத்தரங்கில் *111* கட்டுரையாளர்கள் தங்களது கட்டுரைகளை வழங்கியுள்ளனர். நாட்டுப்புறவியலுக்கு அடிப்படை யானது களப்பணி யாகும். களப்பணியின் வாயிலாகத் தகவல்களைத் திரட்டி ஆய்வாளர்கள் கட்டுரைகளை வழங்கியிருப்பது நாட்டுப் புறவியலுக்கு அவர்களது சிறந்த பங்களிப்பாகும். நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைத் திலும் பல அரிய தகவல்கள் விரவிக்கிடக்கின்றன. இத்தொகுப்பில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கலைகளை ஆய்வாளர்கள் களப்பணி யின் வாயிலாகக் கட்டுரைகளாக எழுதியிருப்பது சிறப்பிற்குரியது.

க. வினோத்குமார் என்பவர் கரகாட்டம் குறித்த தன்னுடைய கட்டுரையில் கரகாட்டத்திலுள்ள இசைவகைகளை ஆறு வகைகளாகப் பிரித்து விளக்கியுள்ளார். அத்துடன் கூத்துகளில் இசையும் இடம்பெறும் பாங்கினை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டு விரிவாக விளக்கியுள்ளார். காவடியின் வகைகள், ஆட்ட அடவுகள், அசைவுகள், இசை மற்றும் இசைக் கருவிகள் குறித்த தகவல்களைப் பேராசிரியர் அ. கணேசன் அவர்கள் விரிவாக எழுதியுள்ளார். பொய்க்கால் குதிரையாட்டம் அன்றும் இன்றும் எனும் தலைப்பில் நீ. சரவணன் என்பவர் பொய்க்கால் குதிரை ஆட்டக்கலை குறித்த பல்வேறு கலைக்கூறுகளைச் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார். புலியாட்டம் எனும் தலைப்பில் லி.கி. கிறிஸ்து ராஜேஷ் என்பவர் புலியைத் தெய்வமாகப் போற்றும் நிலையினையும் புலியாட்ட அடவுகளையும் *33* வகையான நடிப்பு வகைகளையும் கட்டுரையில் தந்துள்ளார். பேராசிரியர் பட்டாபிராமன் என்பவரின் ஒயிலாட்டம் குறித்த கட்டுரை, ஒயிலாட்டத்தின் கூறுகளை விளக்கப்படுத்தியுள்ளது. பழனி தைப்பூசத் திருவிழாவில் ஒயிலாட்டம் ஆடும் முறைகளைப் பேராசிரியர் சி.

கார்த்திகேயன் அவர்கள் பதிவுசெய்துள்ள செய்திகளில் ஒயிலாட்டத்தின் வாயில்களாக ஐந்து கூறுகளை விளக்கியுள்ளார். இரா. சுகன்யா தேவியின் கும்மியாட்டம் குறித்த கட்டுரை கும்மியாட்டப் போக்கினையும் பயன்பாட்டினையும் சிறப்பாகக் காட்டுகிறது. கும்மியாடல் பெண் களுக்கே உரியது என்பதைப் பாடல் சான்று தந்து விளக்கியுள்ளார்.

இரெ. இளங்கோவன் என்பவரின் கொக்கலிக்கட்டையாட்டம் நேர்த்திக்கடனுக்குரிய வழிபாட்டுக்குரிய ஆட்டமாகக் களத்தில் உள்ளமையைக் குறித்துள்ளதோடு ஆட்டக்கலை பற்றிய பல தகவல்களையும் தந்துள்ளார். தப்பாட்டக்கலையின் தொன்மை யினையும் இனங்களையும் ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். முனைவர் ஜான். மனுவேல் அவர்களின் வில்லுப்பாட்டு அன்றும்இன்றும் என்னும் கட்டுரை, வில்லுப்பாட்டின் பண்டைய செழுமையையும் இன்றைய நிலையையும் குறித்து விளக்குகிறது.

முனைவர் இரா. மாதவியின் கழியலாட்டம் என்ற கட்டுரையில் இக்கலை கோலாட்டக்கலையின் சிறப்புக் கூறாகத் திகழ்கிறது என்று விளக்கியுள்ளார். மாரியம்மன் விழாவில் நிகழும் கைச்சிலம்பாட்டம் குறித்து சா. பாலாபழனியின் கட்டுரை, இவ்வாட்டம் குறித்த சிறந்த பதிவாக விளங்குகிறது. பொம்மலாட்டம் குறித்து முனைவர் அறிவுராஜ் பதிவு செய்துள்ள தகவல்கள் குறிப்பிடத்தக்கன. சாமியாட்டம், வீரபத்ர சாமியாட்டம், நொண்டியாட்டம் ஆகியன குறித்தும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வில்லிசைக் கலை குறித்த முனைவர் த. நீலகண்டப் பிள்ளையின் கட்டுரை, கலையின் சிறப்பினையும் பயன்பாட்டினையும் நுட்பமாகக் காட்டியுள்ளது. இப்பொருளில் பல கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. பாவைக் கூத்து குறித்து மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அதுவன்றியும் காளியாட்டம், மயானக்கொள்ளை முதலான சடங்குகள் குறித்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. குரவைக் கூத்திலிருந்து மருவிய குலவைப்பாடல் என்னும் கட்டுரை குலவைப்பாடல் குறித்த செய்திகளைத் தருகிறது. ஈழத்து நவீன நாடக அரங்கில் கூத்தின் செல்வாக்கு ஓர் ஆய்வு எனும் ஸ்ரீபிரசாந்தன் என்ப வரின் கட்டுரை நாடகக்கூத்தின் செல்வாக்குப் பற்றி விளக்கியுள்ளது. கூத்தில் மரபுகளும் மாற்றங்களும் எனும் தலைப்பில் முனைவர் க. இந்திரசித்து என்பவரின் கட்டுரைப் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

சடங்குகளிலிருந்து பலகலைகள் உருவாகியுள்ளன. இக்கலைகள் கால ஓட்டத்தில் மக்களின் ஆர்வத்தாலும் ஈடுபாட்டாலும் சடங்குகளிலிருந்து பிரிந்து தனித்தனிக் கலைகளாக வடிவம் பெற்றன.

கரகாட்டம், வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், கொக்கலிக்கட்டையாட்டம் முதலான பலகலைகள் வழிபாட்டில் வழக்கிலிருந்தாலும் காலப் போக்கில் தனித்த கலைகளாக மக்களிடையே நிகழ்த்தப் பெறுகின்றன. புனிதம் என்கின்ற நிலையில் இக்கலைகள் போற்றப் பெற்றாலும் கலை என்ற பார்வையில் பொதுக்கலைகளாக மக்கள் மன்றத்தில் நிகழ்த்தப்பெறுகின்றன. ஆகவே, இக்கலைகள் பல மாற்றங்களைச் சந்தித்து வருகின்றன. இத்தொகுப்பிலுள்ள பல கட்டுரைகள் இச்செய்தியினைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. தமிழர்களின் பண்பாட்டினையும் தெய்வங்களின் தோற்ற வரலாற்றினையும் அறிந்து கொள்வதற்குப் பல செய்திகளைக் கலைகள் நல்கியுள்ளன. அவற்றை இனங்கண்டு ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளில் புலப்படுத்திக் காட்டியுள்ளனர். இன்றளவும் நாட்டுப்புற வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்திருக்கும் கலைகளை மரபு மாறாமல் போற்றிக்காத்து வருகின்றனர் என்பது கலைகள் மீது மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் மதிப்பினையும் காட்டுவதாகிறது. கலைகளின் இன்றைய நிலை குறித்து ஆய்வாளர்கள் கொண்டுள்ள கவலையினையும் கட்டுரைகள் வெளிக்காட்டியுள்ளன.

பாரதிதாசன் பல்கலைக்கழக நிகழ்கலைத்துறையின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான நாட்டுப்புறக் கலைகளைப் பதிவு செய்தல் எனும் நோக்கத்திற்கு இக்கருத்தரங்கக் கட்டுரைகள் துணை நிற்கின்றன எனின் மிகையில்லை. எதிர்வரும் ஆய்வுகளுக்குப் பல்லாற்றானும் இக்கட்டுரைகள் தம்மளவில் மிகுந்த பயன்களை நல்கிடும்.

பேராசிரியர் முனைவர் த. கனகசபை அவர்கள் பன்னெடுங்காலம் தமிழ்ப்பண்ணோடும் தமிழர் தம் பண்பாட்டை மீட்டெடுக்கும் பணியோடும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு உழைத்து வருபவர். நிகழ்கலைத்துறைக்குத் தக்கவர். தகுதிறம் மிக்கவர். இவர் பணிக்காலம் நெடுங்காலம் தமிழக நாட்டுப்புறவியலில் வீறுகொண்ட தடம் பதிக்கும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. வளர்க. பணி தொடர்க.

திருச்சிராப்பள்ளி - 24. வாழ்த்துக்களுடன்
19.03.2009

அரு. மருததுரை

முனைவர் **த. கனகசபை**
களத்தலைவர், நிகழ்கலைப்பள்ளி
துறைத்தலைவர், நிகழ்கலைத்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.

பதிப்புரை

திராவிட மொழிகளின் தாய்மொழியாக விளங்குகின்ற தமிழ்மொழி இயல் இசை நாடகம் என்ற முத்தமிழினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கருத்துகளை ஒருவொருக்கொருவர் அறியச்செய்ய இயற்றமிழும், உணர்வுகளை ஒருவரோடொருவர் ஒர்ந்தின்புற இசைத்தமிழும் நடப்புகளின் தேர்ந்த நிலையைப் பிறர்க்கு நடிப்பின் வழிப் புலப்படுத்த நாடகத்தமிழும் ஒரு சேரத் தமிழ் மொழிக்குள்ளே அமைந்திருப்பது எத்துணை சிறப்புக்குரியதாகும்! இத்தமிழை நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு வகைகளிளெல்லாம் காலந்தோறும் செழுமைப்படுத்தியே வந்துள்ளன. தமிழரின் நாகரிகம் பண்பாடு போன்றவை இப்பொழுது உலக நிலையில் வைத்து அடையாளப் படுத்தப்படுகின்றன என்றால் அதற்கான நிலைகளில் நாட்டுப்புறக் கலைகள் உள்ளீடாகப் பொதிந்து எஞ்ஞான்றும் உயிரூட்டி வருகின்றன.

இந்த நாட்டுப்புறக் கலைகளை நிகழ்கலைத்துறை மாணவர் களுக்கு ஆசிரியர்களால் கற்பித்து வருகின்றபோது ஆட்டக்கலைகளில் மாற்றங்கள் நிகழ்வது அறிந்துணரப்பட்டது. இந்த ஆட்டக்கலைகளின் மாற்றங்களை ஒரு கருத்தரங்கில் ஆவணப்படுத்திட வேண்டும் என்ற உந்துதலில் 'நாட்டுப்புற ஆட்டக்கலைகள் : நிகழ்த்தலும் ஆவணப்படுத் தலும்' என்ற தலைப்பில் கருத்தரங்கினைத் துறையின் வழியாக நடத்த வேண்டி பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. பல்கலைக்

கழக மானியக் குழுவின் ஒதுக்கீடு செய்யப்படாத நிதியிலிருந்து பல்கலைக்கழகம் வழங்கவிருந்த நிதிப்பகிர்வுக் கூட்டத்தில் எம் மாண்பமை துணைவேந்தர் அவர்கள் மேற்காட்டிய தலைப்பைச் சீர்திருத்தி 'நாட்டுப்புற ஆட்டக் கலைகள்: அன்றும் இன்றும்' என்ற செம்மையானதொரு தலைப்பினைச் சூட்டினார்கள். துணைவேந்தரின் தொலைநோக்குப் பார்வையை இத்தலைப்பானது எமக்குச் சுட்டிக் காட்டியதோடு கருத்தரங்கினை நடத்துவதற்கான ஆர்வத்தையும் ஆற்றலையும் இது வழங்கியது.

இந்தியா முழுவதும் தமிழ்த்துறை, நாட்டுப்புறவியல் துறை, கலைத்துறை, இசைத்துறை ஆகியவற்றிற்கு அழைப்பு அனுப்பப் பெற்றுக் கட்டுரைகள் கோரப்பட்டதன் விளைவாக இத்தேசியக் கருத்தரங்கிற்கு 111 கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் வரப்பெற்று இப்போது உங்கள் கைகளில் நூலாகத் தவழ்கிறது.

இக்கருத்தரங்கிற்கு வழங்கப்பட்டுள்ள கட்டுரைகள் அனைத்தும் நாட்டுப்புற ஆட்டக்கலைகளின் வளர்ச்சிநிலைகளையும் தேக்கநிலை களையும் மாற்ற நிலைகளையும் முறையே முன்வைக்கின்றன. தமிழகத் திலுள்ள குறிப்பிடத்தக்க கல்லூரிகளிலிருந்து பேராசிரியப் பெருமக்கள் இக்கருத்தரங்கிற்குக் கட்டுரைகள் வழங்கியிருக்கிறார்கள். ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களில் சிலர் கள ஆய்வு வழியிலான தேடலில் தங்கள் கருத்துகளை இக்கருத்தரங்கத்தின் வழியாக வழங்கியிருக்கிறார்கள். புதியதாகத் தொடங்கப் பெற்றுள்ள நிகழ்கலைத்துறை நடத்துகின்ற தேசியக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகப் பலர் இதில் கலந்து கொள்வதாக அறிந்தபோது நாட்டுப் புறக் கலைகளின் வளர்ச்சிக்கு ஆதரவு ஒன்றும் குன்றிவிடவில்லை என்ற கருத்தானது எம் நெஞ்சில் ஆழமாக நிலைப்பட்டுள்ளது.

செவ்வியற்கலைகளின் முன்னே ஒண்டி ஒடுங்கிய நிலைகளிலே வளர்ந்து வருகின்ற இக்கலைகளுக்குத் தம் உயர்ந்த உள்ளத்தால் ஆக்கமும் ஊக்கமும் தர எண்ணி ஒருசிற்பியாக நிகழ்கலைத்துறையை உருவாக்கி அதில் தமிழிசை, நாட்டுப்புற நடனம், தப்பாட்டக்கலை, இசையலகுக் கட்டை, (Key Board) வீணை,வயலின், மேளம், நாகசுரம் ஆகிய பட்டய மற்றும் முதுநிலைப் பட்டய வகுப்புகள் தொடங்கு வதற்கு இசைவளித்த பெருமகனார், மாண்பமை துணைவேந்தர்ப் பெருந்தகை முனைவர் மு. பொன்னவைக்கோ அவர்களைப் பொங்கியெழும் நன்றியுணர்ச்சி யோடு எண்ணிப்பார்க்கிறோம். பழந்தமிழரால் போற்றி வளர்க்கப்பட்ட நாட்டுப்புறக்கலைகளை அதன் நசிவிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்ற உள்ளார்ந்த அக்கறை யோடு ஒரு சேயைப் பராமரித்து வளர்த்துவரும் தாயாக எம் துணை

வேந்தர்ப் பெருந்தகை விளங்கி வருகிறார். பலகட்டுரைகள் அடங்கிய இந்நூலுக்கு அழகிய வாழ்த்துரையையும் வழங்கியுள்ளார்கள். சொற் களின் வழியில் நன்றியின் கனத்தினை இங்கே சொல்லிவிடமுடியாது.

மேலும் இந்தக் கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தும் நூலாக்கம் பெறுவதற்குப் பேராளர்கள் அனுப்பியுள்ள கட்டணத்தொகை போதாது என்ற கருத்துரு மாண்பமை துணைவேந்தர் அவர்களின் முன்வைக்கப் பட்டபோது அதைப் பரிவுடன் ஏற்று ஆவன செய்திருக்கிறார்கள்.

எம் பதிவாளர் முனைவர் த. இராமசாமி அவர்கள் இத்தேசியக் கருத்தரங்கு நடைபெறுவதற்குப் பல்வேறு ஆக்கநிலையிலான உதவிகளைச் செய்திருக்கிறார்கள். பதிவாளர் அவர்களுக்கு நிகழ் கலைத்துறையின் வழியாக நன்றியினைப் பதிவுசெய்துகொள்கிறோம்.

இக்கருத்தரங்கிற்கென நிதியுதவி செய்த பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு எம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முதுமுனைவர் அரு. மருததுரை அவர்கள் நிகழ்கலைப்பள்ளிக்குப் புலத்தலைவராக விளங்குகிறார். நாட்டுப்புறவியல் துறையில் இப்பேராசிரியர் ஆழங்கால்பட்டவர். இவர் அவ்வப்போது வழங்கிவருகின்ற அறிவுரைகளால் நிகழ்கலைத்துறையானது வளர்நிலையினை அடைந்து வருகிறது. இத்தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தையும் முழு மூச்சோடு படித்து தக்கதொரு அணிந்துரையையும் வழங்கியுள்ள இவருக்கு எம் நன்றி உரியதாகும்.

நிகழ்கலைத்துறையில் நாட்டுப்புற நடன ஆசிரிய உதவியாள ராகப் பணியாற்றி வருகின்ற திரு. நீ. சரவணன் இரவு பகலாக கருத்தரங்கச் செயற்பாடுகளுக்கும் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் பெறுவதற்கும் ஏதுவாக நாளும் உழைத்து வருபவர்; அவர்களுக்கு எம் நன்றி. யாழ் ஆசிரிய உதவியாளர் திருமதி புவனேஸ்வரி அவர்களுக்கும் எம் நன்றி உரியதாகும்.

உரிய நேரத்தில் இந்த அச்சுப்பணியை செய்து தந்தமைக்காக வைகறைக்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கட்டுரைகளை நல்ல முறையில் தட்டச்சு செய்து தந்த இராஜகுணா கணினியகத்தைச் சேர்ந்த திருமதி பேபி இராஜேந்திரன், நண்பர் திரு. இராஜேந்திரன் ஆகியோருக்கு என் நன்றி.

நிறைந்த நன்றியுடன்

19/03/09

(கு. கனகசபை)

பொருளடக்கம்

	வாழ்த்துரை	3
	அணிந்துரை	6
	பதிப்புரை	10
1	காளி வேடமிடுதலின் எதிர்காலம் - முனைவர் தே. அசோக்	17
2	நாட்டுப்புற ஆட்டக்கலைகள் வழிபாட்டுக் கலைகள் - காவடியாட்டம் - முனைவர் திருமதி எஸ். அலமேலு மங்காள்	24
3	நிகழ் கலைகளில் கரகாட்டம் - ப. அரிகுமார்	29
4	பொம்மலாட்டம் : அன்றும் இன்றும் - முனைவர் ந. அறிவுராஜ்	34
5	கும்மி ஆட்டத்தில் குலதெய்வ வழிபாடு நாட்டுப்புறக் கலையாகக் கும்மிப் பாடல்கள் - தெ.அனிதா	40
6	சேவையாட்டம் - க. ஆனந்தவள்ளி	45
7	பாவைக்கூத்து அன்றும் இன்றும் - சே.ஆனந்தி	53
8	சேலம் மாவட்டத் தெருக்கூத்தில் மரபுகளும் மாற்றங்களும் - முனைவர் க. இந்திரசித்து	58
9	கொக்கலிக்கட்டை ஆட்டம் - இரெ. இளங்கோவன்	64
10	தப்பாட்டம் - முனைவர் அ. இரவிச்சந்திரன்	69
11	கும்மிப்பாடல்கள் வழி அறியலாகும் வாழ்வியல் விழுமியங்கள் - முனைவர் இரா. இரவிச்சந்திரன்	72
12	கும்மி ஆட்டம் - ஒரு பார்வை - டாக்டர் இ.ஆர்.இரவிச்சந்திரன்	77
13	மயானக்கொள்ளை - ஓர் ஆய்வு - ஆ.இராஜாராமன்	82
14	கரக ஆட்டக்கலை - அன்றும் இன்றும் - இரா. இராஜலட்சுமி	90
15	வில்லுப்பாட்டு அன்றும் இன்றும் - முனைவர். ச. இரேணுகா	95
16	கரக ஆட்டக்கலை - ஒரு பார்வை - மு. இளங்கோவன்	102
17	பெண்கள் கலையுணர்வியல் கும்மியாட்டம் - சா. இளையராஜா	110
18	உறியடியும் இறை நம்பிக்கையும் - முனைவர் ச. ஈஸ்வரன்	114
19	பாவைக்கூத்து - அன்றும் இன்றும் - ச. உமாமகேஷ்	118
20	உறியடி - முனைவர் ச. உமாமகேஸ்வரி	122
21	கோலாட்டம் - கோ. கண்மணி	128
22	காவடியாட்டம் - ஆ. கணேசன்	133
23	நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் தப்பாட்டக் கலை - முனைவர். அ. கலீல் ரெஹ்மான்	139
24	குறவன் குறத்தி ஆட்டம் - ம. கற்பகம்	146

25	நாட்டுப்புறக் கலைகளில் வில்லுப்பாட்டு அன்றும் இன்றும் - கு. கஸ்தூரி	151
26	ஒயிலாட்டம் - மு. கார்த்திகேயன்	155
27	பழனி தைப்பூசத் திருவிழாவில் ஒயிலாட்டம் - முனைவர் சி. கார்த்திகேயன்	161
28	தெருக்கூத்து - முனைவர் இரா. கலாவதி	165
29	கழங்காட்டம் - முனைவர் ர.கீதா	170
30	இலாவணிப் பாடல்கள் அன்றும் இன்றும் - டாக்டர் தி.த. கீதாராணி	175
31	புலியாட்டம் - லி. கி. கிறிஸ்து ராஜேஷ்	182
32	வீரபத்ரசாமி ஆட்டம்: குறும்பர் பலகை ஆட்டம் - பெரு. குப்பம்மாள்	187
33	கிராமிய ஆடல்களில் காவடியாட்டம் - மு. குமார்	192
34	சாட்டையடி ஆட்டம் - முனைவர் பி. குருசந்தர்	198
35	தமிழர் கலை உலகில் கூத்தின் பரிணாமங்கள் - கோ. கௌதமன்	202
36	"வீரபத்ரசாமி ஆட்டம்" (குறும்பர் பலகை ஆட்டம்) - முனைவர். பொ. சத்தியபாமா	206
37	உடுக்கையடித்தல் அல்லது உடுக்கை நிகழ்ச்சி - பெ. சர்மிளா	212
38	காவடியாட்டம் - அன்றும் இன்றும் - இரா. சந்திரகலா	217
39	கும்மி ஒரு திறனாய்வு - ந. சரவணன்	221
40	பொய்க்கால் குதிரையாட்டம் - நீ. சரவணன்	228
41	கரகாட்டம் அன்றும் இன்றும் - இரா. சாந்தலெட்சுமி	235
42	கரகாட்டம் - திருமதி எம். சாந்தி	240
43	நாட்டுப்புற நிகழ்கலைகளில் தெருக்கூத்து - செ. சாமுண்டீஸ்வரி	247
44	மயானக் கொள்ளை - தி. சாமுண்டீஸ்வரி	251
45	நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் கும்மிப் பாடல்கள் : அன்றும் இன்றும் - இரா. சுகன்யாதேவி	257
46	குரவைக் கூத்திலிருந்து மருவிய குலவைப்பாடல் - முனைவர் ச. சுந்தரம்பாள்	262
47	நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் சேவையாட்டம் அன்றும் இன்றும் - சு. சுதா	268
48	பேய் பிடித்தலும் பேய் ஓட்டுதலும் - ம. செந்தாமரை	274
49	சாமியாட்டம் - முனைவர் ஆ. செந்தாமரைக்கன்னி	278
50	கும்மி : அன்றும் இன்றும் - க. செந்தில்குமார்	284
51	நாட்டுப்புற கலைகளில் தெருக்கூத்து - முனைவர் த. செந்தில் ஜோதி	290

52 பானை இசைக்கலைஞர் அரிகிருஷ்ணனின் நிகழ்த்துக் கலை
- ஓர் அறிமுகம் - த. செபுலோன் பிரபுதுரை 296
53 நாட்டுப்புறக்கலை - ஒயிலாட்டம் - ஆ.தங்கராஜ் 303
54 நாட்டுப்புற விளையாட்டுகள் : அன்றும் இன்றும்
- ஜெ. தமிழ்ச்செல்வி 309
55 கலித்துள்ளல் - யோ. தர்மராஜ் 316
56 சக்திக் கரகாட்டம் - தி. தர்மலிங்கம் 324
57 நாட்டுப்புற நடனக் கலை - ஓர் கண்ணோட்டம்
- Dr. பி. தனஞ்செயன் 329
58 கரகாட்டம் - வெ. தனராசு 338
59 தெருக்கூத்து - வ. திருஞான பழனியம்மாள் 344
60 தெருக்கூத்து - ஸி. திலகம் 350
61 தைரியராயர் கூத்து - அ. தும்மாபிரான்சிஸ் 357
62 ஸ்ரீ கோலாட்ட கங்கா - கௌரி அம்மன் வழிபாடு - மு. தேவகி 362
63 தந்தனத்தோம் - முனைவர் ஜெ. தேவி 368
64 கரகாட்டம் ஒரு பார்வை - நா. நாராயணன் 373
65 வில்லிசைக் கலை - முனைவர் தா. நீலகண்டபிள்ளை 377
66 கரகாட்டம் - மு.நிர்மலா ராணி 381
67 வில்லிசை அன்றும் இன்றும் - ச. பசுபதி 385
68 கரக ஆட்டம் - மு. பஞ்சவர்ணம் 389
69 ஒயிலாட்டம் என்றும் தனியாட்டம் - பேரா. ச. பட்டாபிராமன் 394
70 கும்மியாட்டம் : அன்றும் இன்றும் - ப. பரணி 399
71 கோணங்கி ஆட்டம் - ஓர் ஆய்வு - சீ. பரந்தாமன் 403
72 மயானக்கொள்ளை - மு. பழனிச்சாமி 409
73 நாட்டுப்புறக்கலைகளுள் வில்லுப்பாட்டு
- முனைவர் துரை.பன்னீர்ச்செல்வம் 414
74 நல்லிசையில் விளைந்த வில்லிசைப் பாடல் - ஆ. பாடாலிங்கம் 420
75 கும்மியாட்டம் - ச. பார்வதி 428
76 சேவையாட்டம் - பேரா. பால்சாமி 433
77 கைச்சிலம்பாட்டம் - முனைவர் ச. பாலாபழனி 438
78 கும்மி - அ. பானுமதி 445
79 ஈழத்து நவீன நாடக அரங்கில் கூத்தின் செல்வாக்கு - ஓர் ஆய்வு
- ஸ்ரீ. பிரசாந்தன் 453
80 அரியலூர் மாவட்டக் குறவன் குறத்தியின் வாழ்வியல் கூறுகள்
- சி. பிரபாகரன் 459

81 சில்லாக்காட்டம் அல்லது நொண்டி ஆட்டம் - த. பிரபாவதி 464
82 வில்லுப்பாட்டு - திரு. அ. பிரின்ஸ் 470
83 தற்காலச் சூழலில் நாட்டார் நிகழ்த்துக் கலைகள்
- மை. பீட்டர் ஆரோக்கியராஜ் 477
84 கும்மி அன்றும் இன்றும் - முனைவர் இரா. புவனா 484
85 கும்மிப் பாடல்கள் காட்டும் சமுதாயச் சிந்தனைகள்
- க. புவனேஸ்வரி 489
86 புலம்பெயர்ந்த சேவையாட்டம் - பி.புவனேஷ்வரி 494
87 திரைப்படப் பாடல்களில் கரகாட்டம் - கி. புஷ்பம் 501
88 கும்மி - அ. பூங்கொடி 506
89 கூத்துப்பாடல்கள் - பெ. பெரியசாமி 512
90 தலித் நிகழ்த்துக் கலைகள் - வே. பொன்ராஜ் 517
91 சிங்களாந்தபுரம் - தெருக்கூத்து ஓர் ஆய்வு
- திருமதி து. மகேஸ்வரி 523
92 காளியாட்டம் - ஸ்ரீபுரந்தான் காளி - திருமதி க. மல்லிகா 530
93 சங்ககாலம் முதல் இக்காலம் வரை
- சாமியாட்டம் - பொ. மரகதம் 534
94 வில்லுப்பாட்டு : அன்றும் இன்றும் - ஜான். மனுவேல் 540
95 கழியலாட்டம் தோற்றமும் வளர்ச்சியும் - முனைவர் இரா. மாதவி 546
96 பாவைக் கூத்து - முனைவர் திருமதி பா. மாலினி 551
97 தெருக்கூத்து அன்றும் இன்றும் - ப. மீனாட்சி 563
98 திருப்பத்தூர் வட்டாரக் கும்மிப்பாடல்கள் - சி. முடியரசன் 569
99 தேவராட்டம் - ச.மேனகா 578
100 பேயோட்டும் சடங்கு - வை. மோகன் 583
101 நிகழ்த்துக் கலைகளில் நையாண்டி மேளம் - த.ரெஜித்குமார் 588
102 தெருக்கூத்தும் பார்வையாளர்களும் - ஜா. லாலி எதேஷ் 594
103 கரகாட்டம் - தோற்றச் சூழல் - முனைவர் கி.லோகேஸ்வரி 600
104 வழிபாடு தொடர்பான நாட்டுப்புற ஆட்டங்கள் - சு. வடிவுக்கரசி 606
105 கரக ஆட்டக்கலை - கு. வசுமதி 611
106 நாட்டுப்புறப்பாடலில் கும்மி - மு. விசாலாட்சி 617
107 கரகாட்டம் - க. வினோத்குமார் 625
108 வாய்மொழி இலக்கியத்தில் கூத்து - ம. வெண்ணிலா 630
109 காவடியாட்டம் அன்றும் இன்றும் - செ.ஜான்சிராணி 636
110 ஒயிலாட்டம் - சௌ. ஸ்டெல்லா புஷ்பா 642
111 டண்டணக்கா - முனைவர் ந. விஜயசுந்தரி 649

1

காளி வேடமிடுதலின் எதிர்காலம்

முனைவர் தே. அசோக்

முன்னுரை

காளி வழிபாடு பழங்காலம் முதல் இருந்து வரும் வழிபாடாகும். பண்டையக் காலத்தில் வெற்றிக்காக நிகழ்த்தப்பட்ட இவ்வழிபாடு பிற்காலத்தில் மக்களின் அனைத்துத் தேவைகளுக்காகவும் நிகழ்த்தப் பட்டு வருகிறது. தற்காலத்தில் இவ்வழிபாட்டில் காளி வேடமிட்டு அருளோடு ஆடி வருவது வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வழக்கம் காலங்காலமாக நடைபெற்று வருகிறது. இவ்வழிபாட்டு முறையில் சில மாற்றங்களும் நிகழ்ந்தேறியுள்ளன. காளி வேடமிடுபவரையும், அதற்குரிய நாளையும் தெரிவு செய்தல், அவர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், வேடத்திற்குரிய பொருட்கள், நிகழ்த்தும் முறைகள் என இதற்குரிய வரையறைகளுக்கான களம் நீள்கிறது. இக்காளி வேடமிட்டு ஆடுதலில் மக்கள் கொண்டுள்ள பற்றினைக் கொண்டு இந்நிகழ்வு முறையின் எதிர்காலத்தை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

காளி வழிபாடு

காளி தெய்வ வழிபாடு நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் குறிப்பிடத்தக்க நிலையை வகிக்கின்றது. பாலை நிலத்திற்குரிய கொற்றவை தெய்வமே காளி தெய்வமாக நாட்டுப்புறச் சமூகத்தில்

காணப்படுகிறது. போரின் வெற்றியினைக் காளி தெய்வமே தருவதாக எண்ணி பழங்கால மக்கள் வழிபட்டனர். "கொற்றம் - வெற்றி. அம்மை - அவ்வை = தாய். கொற்றம் + அவ்வை = கொற்றவை எனப் பெயர் பெற்றதாக தேவநேயப் பாவாணார் குறிப்பிடுவார்.[1] இத்தெய்வமே பின்னாளில் காளியாக உருவெடுத்தது. 'கள் - காள் - காளம் - காளி = கருப்பி, நீலம் (கருப்பு) - நீலி. கருப்பி என்றும், நீலி என்றும் பெண்டிர்க்கு இடும் பெயரெல்லாம் காளி பெயரே என்பர்[2]; மேலும் 'காளி வழிபாடு ஆதி காலத் தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதி என்றும், பகைவர்க்குக் காளம் எனும் நஞ்சு போன்றவள் என்பதால் 'காளி' என்னும் பெயர் அவளுக்கு அமைந்தது என்பர். காளி என்பதற்குக் கரிய நிறத்தை உடையவள் என்ற பொருளும் உண்டென்பர்.[3] காளி வழிபாட்டின் தோற்றமும் நோய்களை ஏற்படுத்திக் குணப்படுத்தும் முகமாகத் தோன்றியதாகவே குறிப்பிடுவர். 'பாலை நிலத்திற்குரிய வேனிற் காலத்திற் காணும் கொப்புள நோய், அம்மையாகிய காளியின் சினத்தால் நேர்வதென்று கருதி, அதற்கு 'அம்மை' நோய் என்றே பெயரிட்டனர் என்றும், அம்மை நோய் மக்களெல்லார்க்கும் பொது வாயிற்று என்றும், இதனால் ஊர் தோறும் காளி கோயில் தோன்றிற்று என்பர்.[4] இவ்வாறாகத் தோற்றம் பெற்ற காளி வழிபாடு தமிழகமெங்கும் பரவலாகக் காணப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டத்திற்கு அருகில் உள்ள திருமங்கலம் என்னும் ஊரில் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் தொடர்ச்சியாகக் காளி வழிபாடு நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டில் சிறப்பாகக் கருதப்படுவது காளி வேடமிட்டு ஆடுவதேயாகும்.

காளி வழிபாட்டுத் தோற்றமும் மாற்றமும்

காளி வேடமிட்டு ஆடும் முறையின் தொடக்கத்தை மக்களால் கணித்துக் கூறமுடியாத அளவிற்குத் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. காலங்காலமாக இம்முறையானது நிகழ்த்தப்பட்டு வருவதாக மக்கள் கூறுகின்றனர். திருமங்கலம் கிராமத்தில் காளி வேடமிட்டு ஆடுபவர் முதலில் மண்ணச்சநல்லூரில் உள்ள "கைக்கோளர்" என்ற இன மக்களைச் சார்ந்தவராகவே இருந்து வந்திருக்கின்றனர். காளி வேடமிடுபவர் ஏனைய வேடங்கள் புனைப வரைப் போல் அல்லாமல் மிகுதியான கட்டுப்பாட்டினை மேற் கொண்டவராக விளங்கிட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க தாகும். அதாவது, பக்தியுடன் இருத்தல், உண்ணா நோன்பு இருத்தல், பெண் தொடர்பினை நீங்கியிருத்தல், போதைப் பொருட்களைப் பயன்படுத்

தாதிருத்தல் ஆகிய விதிமுறைகளை மேற்கொண்டிருத்தல் இவ்வேட மிடுபவரின் முதன்மையான கட்டுப்பாடுகளாகும். ஒரு காலத்தில் இம்முறையினைச் சரிவரப் பின்பற்றாத காளி வேடமிட்ட மண்ணச்சநல்லூர் 'கைக்கோளர்' ஒருவர் காளி ஆட்டத்தின்போது மாவடியான் கோயில் அருகில் வீதி உலா வரும் வேளையில் பறந்து சென்று, மறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.[5] சில காலங்களுக்குப் பிறகு வயல்வெளிப் பகுதிகளில் வேளாண்மை புரிந்து வந்த பள்ளர் மற்றும் கிறித்தவ இன மக்களால் மண்ணில் புதைந்திருந்த காளி வெளிப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிகழ்விற்குப் பிறகு திருமங்கலம் பகுதி பள்ளர் இன மக்களுக்கே முதல் மரியாதை அளிக்கும் விதமாகக் காளி உலாவின் போது முதல் ஆராதனை இவ்வினமக்களுக்கே அளிக்கப்படுகிறது. வயல்வெளிப் பகுதியில் இருந்து காளியை எடுத்து வர உதவிய கிறித்தவ இன மக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் காளி ஆட்ட உலாவின்போது இக்கிறித்தவ மக்கள் சேவலை அறுத்து இரத்தத்தைக் காளி வேடமிட்டவரின் நெற்றியில் திலகமிட அதன் பிறகே ஊரின் பிற தெருக்களுக்குக் காளி உலா மேற்கொள்ளப் படுகிறது. வயலிலிருந்து காளியை எடுப்பதற்கு முந்தைய வழிபாட்டு முறையில் இவ்வாறு பள்ளர் மற்றும், கிறித்தவ இனத்தாருக்கும் இவ்வாறான முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி வட்டத்தில் உள்ள திருமங்கலம் கிராமத்தில் நடைபெறுவது போன்று காளிவேடமிட்டு ஆடுதல் எங்கும் நிகழ்த்தப் படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காளி வேடத்திற்குரியவரைத் தேர்ந்தெடுத்தல்

மண்ணச்சநல்லூரில் கைக்கோலரே முதலில் காளி வேடமிட்டவர் என்று குறிப்பிட்டோம். அவ்வேடமிட்டவர் பறந்து மறைந்தமிறகு இவ்வுரிமை திருமங்கலம் 'செங்குந்த முதலியார்' என்றழைக்கப் படும் இன மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வினத்தில் காமாட்சியம்மன், அங்காயி அம்மன் வகையறா என்று இரு பிரிவுகளாக மக்கள் அமைந்துள்ளனர். இவ்வொவ்வொரு வகையறாவிலும் இரு பங்காளிப் பிரிவுகள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நான்கு பிரிவுகளிலிருந்தும் முறையே மாறிமாறிக் காளி வேடமிடுபவரை அவர்களுக்குள்ளாகக் கலந்து பேசித் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் காளி வேடமிடுபவர் முன்னர் குறிப்பிட்ட வழிபாட்டுக் கட்டுப்பாட்டின்படி விரதமிருக்கின்றனர். திருமணம் புரிந்தவரே காளிவேடமிடத் தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுகிறார்.

காளி உலாவிற்காக நாள் குறிக்கப்படுதல்

திருமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள காளி கிராம தேவதை யாகும். இக்கிராம மக்கள் திருமங்கலம், பண்டாரவடை, பனக்காட்டங் குடி என்ற மூன்று பகுதிகளாக அமைந்துள்ளன. இக்கிராமத்தின் அனைத்து இன மக்களையும் ஒன்று கூட்டியே காளி உலா மேற் கொள்ளப்படுகிறது. திருமங்கலம் கிராமம் மட்டுமின்றி இக்கிராமத்தின் அருகில் உள்ள அகலங்கநல்லூர், தாராநல்லூர், நகர் போன்ற கிராமங்களும் ஒருங்கிணைந்தே இக்காளி வேடமிடுதல் நிகழ்வினை நடத்திவருகின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்து மக்களையும் ஒன்று கூட்டி அனைவரின் பொருளாதார வாய்ப்புகளுக்கேற்ப மூன்று ஆண்டு இடைவெளியிலோ அல்லது ஐந்து ஆண்டு இடைவெளியிலோ இக்காளி உலா நடைபெறுகிறது. காளி உலா குறிக்கப்பெற்ற அந்த ஆண்டின் மாசி மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமையன்று திருமங கலத்தில் செல்லாண்டியம்மனுக்குக் காப்பு கட்டப்படுகிறது. காளிக் கென்று தனியாகக் கோவில் ஏதும் இங்கு இல்லை. எனவே, காளி வேடத்திற்குரிய பொருட்களின் இருப்பிடம் இந்த செல்லாண்டியம் மாளின் கோவிலையே அமைவிடமாகக் கொண்டுள்ளது. இரண்டாம் செவ்வாய் கிழமை காளி வேடமிட முடிவு செய்யப்பட்டவருக்கும், அப்பகுதியின் கிறித்தவர்களுக்கும் காப்பு கட்டப்படுகிறது. மூன்றாம் செவ்வாய் கிழமையின் காலை முதல் மாலை வரையுமான காலமே காளி உலா மேற்கொள்ளப்படும் நாளாகும்.

காளி வேடத்திற்குரிய பொருட்கள்

காளி வேடத்திற்குரிய பொருட்கள் மரத்தால் அமைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. காளியின் முகத்தோற்றமும் தோள் பகுதியிலிருந்து முழங்கை வரைக்கும், முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரைக்குமாகவும் மரத்தால் செய்யப்பெற்றதாகும். மேலும், நெஞ்சுப் பகுதிக்கும் மரத்தலான கூடும் உள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றிற் கெல்லாம் காளி விழாவுக்குரிய வர்ணம் பூசப்படுகிறது. மேலும், காளி வேடத்திற்குரிய சடை முடியும் உள்ளது. கிராம மக்கள் தங்கள் வேண்டுதலாக காளி தெய்வத்திற்குப் புடவையினைக் காணிக்கை அளிப்பது வழக்கம். அவ்வாறு அளிக்கப்பட்ட சேலையையே காளி உலாவின்போது காளி வேடமிட்டவர் அணிந்து கொள்கிறார்.

காளி ஆட்டம் நிகழ்த்தும் முறை

காளி வேடமிட்டவர் கிறித்தவர்களின் இரத்தத் திலகத்தை ஏற்றுக் கொண்டு பள்ளர் இன மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று

முதல் பூசையை ஏற்றுக் கொள்கிறார். பிறகு ஊரின் அனைத்து இன மக்கள் வசிக்கும் தெருக்களுக்கு ஓட்டமும், நடையுமாகத் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடி வருகிறார். இவ்வாறு அவர் போகும்போது பக்தர்களுக்குத் திருநீறு வழங்குகிறார். வேண்டுதல் புரிவோரும் பக்தியுடன் தங்களின் கோரிக்கைகளைக் காளியிடம் வேண்டிக் கொள்கின்றனர். குழந்தையில்லாதோர் வேண்டிக் கொண்டு குழந்தை பெற்றுக் கொள்கின்றனர். காளி வேடமிட்டவர் வரும் வேளையில் அப்பகுதியில் உள்ள தீட்டுடைய பெண்கள், சூல் கொண்ட பெண்கள் ஊரை விட்டு விலகியிருக்கின்றனர். மாறாக, காளி வேட்மிட்டவரை இத்தன்மையர் காணப் பெற்றால் பாதிப்புகள் அவர்களுக்குத்தான் என்பது மக்களின் நம்பிக்கைகளாக வெளிப்படுகின்றது. இவ்வாறு காளிவேடமிட்டு ஆடி வருபவர் ஊரைச் சுற்றி வரும் வேளையில் மாவடியான் கோயிலை நெருங்கியதும் காளி வேடமிட்டவர்க்குக் காளியின் அருள் மிகுதியாக வந்து ஆட்டம் மிகுதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, காளிவேடமிட்டவர் அவ்விடத்தை நெருங்கும்போது அவரை அருகில் இருப்பவர்கள் மிகவும் கைத்தாங்கலாகப் பற்றி அணைத்துச் செல்கின்றனர். இவ்வாறாகச் சென்று இறுதியில் செல்லாண்டியம்மன் கோயிலிலே காளியின் வேடம் கலைக்கப்படுகிறது. அப்பொழுது சில வேளையில் காளி வேடமிட்டவருக்கு நாக்கு மிகுதியாக வெளியில் தள்ளி விடும் என்றும் தனக்கும் அவ்வாறான நிகழ்வு ஏற்பட்டதை அவ்வூரில் காளி வேடமிட்டவரான திரு மீனாட்சி சுந்தரம் குறிப்பிட்டார். (கள ஆய்வு நாள்: *20.02.2009*)

காளி வேடமிடுபவரின் அனுபவம்

காளி வேடமிட்டு ஆடி வருபவர் காளி தெய்வத்தின் அருள் இருந்தால் மட்டுமே காலை முதல் உணவு அருந்தாமல் மாலை வரை ஊரைச் சுற்றிவர இயலும். இல்லையேல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. மேலும், வேடமிட்டு ஆடி வரும் வேளையில் சுய நினைவுகள் இல்லாமல் தாரை எழுப்பும் இசை மட்டுமே கேட்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு, காளி வேடமிட்டவர் பிற்காலத்தில் தனக்கு இருக்கும் தீய பழக்கங்களையும் விட்டுவிட வேண்டிய சூழல் உருவாகும் என்று கூறப்படுகிறது. காளி வேடமிடக் காப்பு கட்டிய காலத்தில் காளி வேடமிடுபவர் சரிவர விரதமுறைகளைக் கடைப்பிடிக்காவிடில் அதன் எதிர்விளைவுகளைக் காளி வேடமிட்டு ஆடிவரும்போது வெளிப்படும் என்று உறுதிபடக் கூறுகிறார்[6].

காளி ஆட்டத்தின் எதிர்காலம்

காளி ஆட்டமானது பிற ஆட்டங்களைப் போன்று வேறு விழாக்களுக்கு நிகழ்த்தப்படுவதில்லை. குறிப்பிட்ட ஆண்டில் மட்டுமே வழிபாட்டின்போது மட்டுமே நிகழ்த்தப்பெற்று வருகிறது. காளி வேடமிட்டு ஆடுகின்ற வழக்கம் காலங்காலமாக நிகழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. களஆய்வு செய்த வகையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே இவ்வேடமிட்டு ஆடுதல் நிகழ்த்தப் பெற்று வருவதாக அறிய முடிந்தது. வழிபாட்டு முறையில் கைக்கோலருக்குப் பிறகு ஏற்பட்ட வழிபாட்டு மாற்றம் ஒன்றைத் தவிர ஆட்டத்தில் மாற்றங்கள் இருப்பதாக அறியமுடியவில்லை. மேலும், மரபு வழியில் காளி வேடமிட்டு வரும் காளி ஆட்டமானது பிற்காலத்தில் மாற்றங்கள் இல்லாமல் தொடர்ச்சியாக நிகழவே வாய்ப்புள்ளதாக மக்களின் எண்ணங்கள் அமைகின்றன. எனவே, இந்தக் காளி ஆட்டமானது காலங்காலத்திற்கும் நிலைத்திருக்கும் என்பதை விளங்கலாம். மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்த நிலையில் வழி பாட்டுடன் நிகழ்த்தப்படும் இந்த ஆட்டம் எந்தவித எதிர்பார்ப்புமின்றி இறை பக்தியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப் பெற்று வருகிறது. இந்த ஆட்டத்தை நிகழ்த்துவோர் தன்னுடைய சொந்தப் பணம் ரூ.10000/- வரை விருப்பத்தோடு செலவு மேற்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். எத்தனை அறிவியல் வளர்ச்சி நிலைகளும், ஊடக வளர்ச்சிகளும் நாளுக்கு நாள் பெருகினாலும் தன்னுடைய இயல்பு மாறாமல் நாட்டுப்புற இயல்புகளுக்கு உரிய தன்மையுடன் இந்த காளிவேடமிட்டு ஆடுதல் நிகழ்ந்தேறி வருகிறது. இனி வரும் காலங்களிலும் வேடமிட்டு நிகழ்த்தப்பெறும் நிகழ்வு தொடர்ச்சியாக நிகழவே வாய்ப்புகள் உள்ளன.

முடிவுரை

பண்டைய காலத்தில் தொடங்கிய காளி வழிபாடு சில பரிமாணங்களை அடைந்து தற்காலம் வரையாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. ஏனைய வழிபாடுகள் போன்று உருவங்களை வைத்து வழிபடாமல் காளி வழிபாடு காளி வேடமிட்டு ஆடுதல் இந்நிகழ்வின் சிறப்புத் தன்மையாக அமைகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டத்தில் உள்ள திருமங்கலத்தில் இந்நிகழ்த்துமுறை சிறப்பாகவும், தொடர்ச்சியாகவும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மக்களின் கவனம் பக்தியோடு செலுத்தப்பட்டு முக்கியத்துவம் பெறுகிறது. இன்று அறிவியல் பன்மடங்கு வளர்ச்சியுற்ற நிலையிலும் காளிவேடமிட்டு ஆடுதலில்

மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை நோக்கும் வேளையில், இந்நிகழ்த்து முறை காலங்காலமாக நிகழ்த்தப்பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வழிபாட்டு முறைகளில் மாற்றம் இருப்பினும், காளி வேடங் கொண்டு நிகழ்த்தும் முறையில் மாற்றமில்லாமல் மரபு வழியில் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சான்றெண் விளக்கம்

1. *ஞா. தேவநேயப்பாவாணர், தமிழர் மதம். ப. 28*
2. *மேலது. ப. 28*
3. *கோ.மு. முத்துசாமிபிள்ளை, கோயிற்களஞ்சியம், பக். 91,92*
4. *ஞா. தேவநேயப்பாவாணர், தமிழர் மதம். ப. 28*
5. *தகவலாளர் ப. ஆறுமுகம், (45) திருமங்கலம், நாள் : 20.02.09*
6. *தகவலாளர் சா. மீனாட்சிசுந்தரம் (50) திருமங்கலம், நாள் : 20.02.09*

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரி,
பெரம்பலூர் - 621 212.

2

நாட்டுப்புற ஆட்டக்கலைகள் வழிபாட்டுக் கலைகள் - காவடியாட்டம்

முனைவர் திருமதி எஸ். அலமேலு மங்காள்

வழிபாடும் கலைகளும்

இறையுணர்வு உடையவர்கள் கடவுளுக்கு வழிபாடு செய்ய விரும்புவது இயல்பு. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பத்துக்கும் நம்பிக்கைக்கும் தக்கவாறு வழிபாடு செய்து வருகிறார்கள். தனது அறிவும் உணர்வும் இழுத்துச் செல்லும் முறைகளில் எல்லாம் இறைவனை நினைத்து வழிபட மனிதன் முயல்கிறான். கலைகள் மனிதனின் நுண்ணறிவின் கண்டுபிடிப்புகளாக விளங்குகின்றன. அவற்றைக் கொண்டு வழிபாடு செய்யலாம் என்று மனிதன் கருதுகிறான். அனைத்துக் கலைகளையும் அவ்வாறு பயன்படுத்தினாலும் சிலவற்றை அதற்காகவே இயற்றியுள்ளதாகத் தோன்றுகிறது. அவற்றை வழிபாட்டுக் கலைகளாகக் கருதி விளக்கம் காணலாம்.

காவடியாட்டம்

முருகக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாகத் தமிழ் நாட்டில் காவடியாட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. முருகனை வாழ்த்தியே காவடியெடுத்து ஆடுவர். பலவிதமான நோன்புகள் செய்து முருகன் கோயிலுக்குக் காவடியெடுத்துச் செல்வர். காவடி ஒரு குறுந்தடியால் செய்யப்பட்டிருக்கும். அதன் இரு முனைகளையும் இணைத்து

மேல்நோக்கி வளைந்த அமைப்பில் கட்டியிருப்பர். அதனை மயிற்பீலி, மலர் மாலைகள் ஆகியவற்றால் ஒப்பனை செய் திருப்பர். நடுப்பகுதியில் ஒருவேல் மேல்நோக்கிக் கட்டப்பெற்றிருக்கும். வண்ணத் துணிகளையும் சுற்றியிருப்பர். சிலர் முருகனின் படங்களை இரண்டு பக்கங்களிலும் பொருத்திக் கட்டியிருப்பர். பலவிதப் பொருட்கள் காவடியின் இரு முனைகளிலும் கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பதையும் காணலாம். ஒப்பனை செய்யப்பட்டுள்ள காவடி அழகின் கொலுவிருப்பாகவே இருக்கும்.

நையாண்டி மேளம் போன்ற வாத்திய இசை முழக்கப்படும். காவடி தூக்குவோருக்குத் தன்மேல் இறையேறிய உணர்வு தோன்றும். அவர் அத்தகைய உணர்வு மிக்கவராக மாறித் தன்னை மறந்து ஆடத் தொடங்குவார். மேள இசை உச்சநிலை அடையஅடைய அவரது ஆட்டமும் கூடிக்கூடி வேகநிலை அடையும். அனைவரும் முருகனை நினைத்து 'அரோகரா, முருகனுக்கு அரோகரா, வேல்வேல் முருகனுக்கு அரோகரா' என்ற ஒலிகளை எழுப்புவர். அங்கே ஒருவகை இறைத் தோற்ற நிலை உருவாகி விடும்.

காவடி எடுத்து ஆடுவோர் தங்கள் நாக்கிலும் உதடுகளிலும் சிறிய வேல்களைக் கொண்டு அலகு குத்திக் கொள்வதும் உண்டு. அவர்களால் வாய் திறந்து பேசவோ உணவு உட்கொள்ளவோ முடியாது. சில சமயம் முதுகில் செடல் குத்தி அதில் ஒரு தேரை இணைத்து இழுத்துக்கொண்டு வருவர். நோவைப் பற்றிச் சிறிதும் வருந்தாது இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். இச்செய்கைகளை நோக்கும்போது இது ஒரு கடினமான வழிபாட்டு முறையாகவே உள்ளது. தன்னை வருத்தி நோவைத் தானே வருவித்து இறையருளை வேண்டும் கடுமையான வழிபாட்டுச் சடங்காக இது நடைபெறுகின்றது.

இடும்பாசுரன் இரண்டு மலைகளைக் கட்டித் தூக்கி முருகனை வழிபடும் புராண நிகழ்ச்சியைப் பின்பற்றிக் காவடி எடுக்கும் வழக்கம் வந்ததாகக் கதை கூறுவர். குன்றுகளின் உச்சியில் பெரும்பாலும் முருகனுக்குக் கோயில்கள் அமைக்கப் பெற்றிருக்கும். இந்தக் கடவுளைக் 'குன்றுதோறும் ஆடும் முருகன்' என்று புகழ்ந்து கூறுவர். குன்றக் குரவையும் முருகனை வழிபடும் கலையாகவே உள்ளது. காவடியெடுத்து மலைமேலிருக்கும் கோவிலுக்குச் செல்வர். பழனி மலைக்கு ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான காவடிகள் எடுத்துச் செல்லப்படும். நெல்லை மாவட்டத்திலிருக்கும் கழுகுமலை முருகன் கோயிலுக்குக் காவடி யெடுக்கும் வழக்கம் பன்னெடுங்காலமாக இருந்துள்ளது. அவர்களுக்

காகவே அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்துப் பாடல்களைப் பாடியுள்ளார். பாண்டிச்சேரியை அடுத்த மயிலம் முருகன் கோயில், குமரியிலுள்ள குமார கோவில் போன்ற பல கோயில்களுக்குக் காவடி எடுக்கும் பழக்கம் இன்றும் உள்ளது. சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி என்று பலவகை உண்டு. மேலும், சேவல் காவடி, மச்சக் காவடி, வேல்காவடி என்று பல உண்டு. ஒவ்வொன்றும் வேறுபாடுடைய வழக்க முறைகளையுடையன. வேல்காவடி எடுப்போர் உடம்பில் ஆயிரத்து எட்டு, நூற்றி எட்டு என்ற கணக்குகளில் வேல்களைக் குத்திக் கொள்வர். காவடியெடுப்போர் அணியணியாக மலையில் ஊர்ந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இன்றைய வளர்ச்சி நிலையில் பல இடங்களில் காவடியாட்டம் தொழில் முறையில் நடத்தப்படுகிறது. பக்திப் பரவசம் இதில் இருப்ப தில்லை. ஆனால், கலைத்திறமும் ஆடல் நுட்பமும் மிகுதியாக இருக்கும். கலைச்சிறப்பு காட்டும் பலவிதமான உத்திகளைக் கையாண்டு கலைஞர்கள் மக்களைக் கவர்ந்து இழுப்பர். முதலில் காவடியைத் தோளில் தாங்கி மெதுவாக ஆடத்தொடங்குவர். இசையின் வேகம் மேலோங்குவதற்குத் தக்கவாறு ஆட்டத்தின் விறுவிறுப்பும் வேகமும் கூடிக்கொண்டே போகும். தோளிலிருக்கும் காவடியைக் கழுத்துக்கும், முதுகுக்கும் கையால்பிடிக்காமல் மாற்றி மாற்றி ஆடுவர். சில சமயம் காவடியைத் தலை உச்சி, நெற்றி, மூக்கு நுனி ஆகியவற்றில் நிறுத்திக் காட்டுவர். முன்னும் பின்னும் சுழலச் செய்வர். உடம்பின் பல பகுதி களிலும் காவடியை ஊர்ந்து வரச்செய்து தங்களுடைய திறமையைப் புலப்படுத்திக் காட்டுவர். உடற்பகுதியில் காவடி ஒட்டிச் சுழல்வது காந்தக் கவர்ச்சியில் ஒட்டி அசையும் இரும்பின் தோற்றம்போல் இருக்கும். கலைஞர் உடலை வளைத்தும், தரையில் குனிந்தும், மேலே எழும்பியும் ஆடுவது அவரது திறமைக்கு நல்ல சான்றுகளாக அமையும். அவர்கள் காலில் சதங்கை கட்டியிருப்பர். ஆடும்போது அவை அசைந்து இனிய தாள ஒலியை எழுப்பும். காவடியைப் பிடிக்காது கை, கால்களை அசைத்து ஆடுவது கலைக்காட்சியாக இருக்கும்.

காவுதடியே 'காவடியாகி' இருக்க வேண்டும். 'காவுதல்' என்பது கட்டித் தொங்கவிட்டுச் சுமத்தல் என்ற பொருளைத் தருவதாகும். ஒரு கம்பின் இருமுனைகளிலும் தண்ணீர் சேந்தும் தோண்டிகளைக் கட்டித் தொங்க விட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். அதனைக் 'காவட்டுத் தோண்டி' என்றே கூறுவர். இதே போன்று காவடித் தண்டின் மூலம் இருமுனைப் பாரம் சுமக்கும் வழக்கத்தை ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில்

பெருவாரியாகக் காணலாம். பல இடங்களில் கலையாக வளராத காவடிச் சுமைதாங்கி தமிழ்நாட்டில் மிகச் சிறந்த ஆடல் கலையாக வளர்ந்து பொலிந்துள்ளது சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

முருகன் கோயில்கள் பெரும்பாலும் மலைகள் மீது இருப்பதை அறிவோம். அங்கு இறைவழிபாட்டுக்குச் செல்வோர் பலவகையான படையல் பொருட்களையும் தங்களுக்கு வேண்டியவற்றையும் சுமந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது. மலைமீது நடக்கும்போது பொருட்களை ஒரு கம்பில் தொங்கவிட்டவாறு தோளில் தூக்கிக் கொண்டு செல்வது வசதியாகவும் எளிதாகவும் இருக்கும். காவு தடியைக் கையால் பிடிக்க வேண்டிய தேவை இல்லை. அதைச் சமன்படுத்திச் சுமந்தால் கையை வீசியவாறு மலைமீது ஒய்யாரமாக நடந்து செல்ல லாம். சுமைப்பளுவும் குறையும்; நடைவேகமும் கூடும். ஆகையினால், இத்தகைய வசதியை நினைத்து முதலில் மனிதன் காவு தடியைப் பயன்படுத்தி இருக்கவேண்டும்.

மலைமீது செல்லும் மக்கள் முருகனை வழிபடும் ஒரே நோக்கத் துடன் செல்வதால் அவனை வாழ்த்திப் புகழும் பாடல்களைப் பாடிக் கொண்டு சென்றிருப்பர். இன்று சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் ஐயப்பன் புகழைப் பாடிச் செல்வதை இங்கு நினைத்துப் பார்க்கலாம். முருக பக்தருக்காக வழிநடைப் பாடல்கள், காவடிச் சிந்துகள் பல இயற்றப்பட்டுள்ளன. அப்பாடல்களைப் பாடும்போது உணர்ச்சி ததும்ப ஆடிக்கொண்டே நடந்திருப்பார்கள். பாடலும் ஆடலும் பிறருடைய பாராட்டுக்கு உட்பட்டிருக்க வேண்டும். இதனை ஊக்க உந்தல்களாகக் கொண்டு திறமையுடையோர் சில கலை உத்திகளைக் கையாண்டு பலரைக் கவர்ந்து காவடியாட்டக் கலையை உருவாக்கி இருக்க வேண்டும்.

காவடியாட்டம் சமயவுணர்வில் தோன்றிய கலையாகும். சமயம் மனிதனைக் கட்டுப்படுத்தித் தான் விரும்பியவாறு செயல்படாமல் தடுக்கும் ஆற்றலுடையது. அத்தகைய கட்டுப்பாட்டிலிருந்து விடு பட்டுத் தன் திறமைகளை முழுமையாகக் காட்ட கலைஞன் விரும்பிய தனால் காவடியாட்டம் சமயப் பிடியிலிருந்து நழுவி உரிமைக் கலையாகப் பிரிந்திருக்க வேண்டும். இன்று அதுவே தொழில் முறைக் கலையாக வளர்ந்துள்ளது. இன்றுள்ள நிலையில் காவடியாட்டம் சமயச் சார்புடனும் கலைச் சார்புடனும் நடைபெறுகிறது.

காவடியாட்டத்தின் வளர்ச்சி நிலைகள்

↓

சுமை தாங்கல்

↓

சுமைதாங்கல் + பாடல் + ஆடல்

↓

வழிபாடு

↙ ↘

வழிபாடு — கலைத்தொழில் செய்தல்

எளிதாகச் சுமக்க உதவிய காவடி இறைவழிபாட்டு முறைகளுடன் இணைந்து வழிபட உதவும் சாதனமாகிப் பின்னர் கலை முனைப்பால் தொழிற்கலைக்கு உதவும் பொருளாகி இன்று இருவிதக் கூறுகளுக்கும் துணையாகும் கலைக் கருவியாக விளங்குகிறது. இறையுணர்வும் கலையுணர்வும் இவ்விரு பிரிவுகளுக்கும் காரணமாக அமைகின்றன.

காவடியாட்டம் நாட்டுப்புறக் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களில் மற்ற கலைகளுடன் இணையாக நடத்தப்படும்; தனியாகவும் ஆடுவது உண்டு. நையாண்டி மேளத்தின் இசை இதற்கு மிகப்பொருத்தமாக அமையும். கலையாகக் காவடியாட்டம் நடக்கும்போதும் அதை பக்தியுடன் ஏற்றுள்ள நிகழ்ச்சிகளும் உள்ளன. 'வள்ளித் திருமணம்' போன்ற நாடகக் காட்சிகளில் இடம்பெறும் காவடியாட்ட நிகழ்ச்சிகள் நாடக மேடையில் நடைபெறும்போது அதைக் கலைக்காட்சியாகக் கருதாது பக்தி வழிபாடாக மதித்து 'அரோகரா' ஒலியுடன் கற்பூர ஆராதனை செய்துள்ளனர். கலைக்காட்சிகளுடன் உண்மையான உணர்வுடன் ஒன்றிக் கலந்துவிடும் நாட்டுப்புற மக்களின் இயல்பை இது தெளிவாகக் காட்டுகிறது.

◆

தமிழ் விரிவுரையாளர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி,
கோடம்பாக்கம்,
சென்னை - 24.

3

நிகழ் கலைகளில் கரகாட்டம்

ப. அரிகுமார்

முன்னுரை

நாட்டுப்புற நடனங்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாகவே தோற்றம் பெற்றுக் காலங்காலமாய் வழக்கத்தில் இருந்து வருவனவாகும். இக்கலைகள் இம் மக்களின் வாழ்க்கையில் ஆழமாக வேரோடி உள்ளன. இவை அந்நாட்டு மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவர்தம் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றன. மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் நடனங்களில் இன்றும் மக்களால் ரசிக்கப்படுவது கரகாட்டக் கலையாகும். இது பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

நாட்டுப்புற நடனங்கள்

நகரப்புற நாகரிகத்திலிருந்து ஒதுங்கி நின்று முறையாக எழுத, படிக்கத் தெரியாதவர்களாகக் கிராமப்புறங்களில் வாழ்ந்துவரும் மக்களே நாட்டுப்புற மக்களாவர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஆடப்பட்டு வரும் நடனங்களே நாட்டுப்புற நடனங்கள் ஆகும். இவை ஒரு கலைஞராலோ, ஆசிரியராலோ முறையாகக் கற்றுக்கொடுத்து வழங்கி வரும் கலைகளல்ல. ஆடுகின்ற கலைகளின் ஆட்டத்தை உடனிருந்து பார்த்துப் பார்த்து, இதில் ஆர்வம் உள்ள ஆட்டக் கலைஞர்கள் கற்றுக் கொள்வர். இந்த நடனங்கள் தங்களுக்கென்று வரையறுக்கப்பட்ட வரைமுறைகளையோ மாற்றம் காண இயலாத கட்டுப்பாடுகளையோ

கொண்டவைகளல்ல. இவற்றில் காணப்படும் எளிமைத்தனம் பாராட்டப்பட வேண்டிய ஒரு சிறப்புக் கூறாகும்.

மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு, கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடு உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்வது கலையாகும். பண்டைக் காலத்தில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்திப் பல கலைகளை உருவாக்கி மகிழ்ந்தான். மனமகிழ்ச்சி ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது. மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகாலாய் இருந்தன. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததனால் கால வெள்ளத்தைக் கடந்துநின்று வாழ்ந்து வளர்ந்துகொண்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் ஜீவ ஊற்றாகும். நாட்டுப்புற மக்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பதாகும்.

நிகழ்த்துக் கலைகள் - விழாக்கள்

நிகழ்த்துக் கலைகள் விழாக் காலங்களில்தான் பெரும்பாலும் நிகழ்த்தப்படுகின்றன. தமிழர்கள் குறிப்பிட்ட மாதங்களில் விழாக்கள் நடத்துவது வழக்கமாக உள்ளது. மார்கழி மாதம், வைகுண்ட ஏகாதசி அன்று தொடங்கி மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆடி ஆகிய மாதங்களில் விழாக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. விழாக்கள் இல்லாமல் நடனம் இல்லை; நடனம் இல்லாமல் விழாக்கள் இல்லை என்னும் அளவிற்கு உள்ளது.

அரங்கக் கலையின் தோற்றமே உடல் இயக்கத்தில் தொடங்கி இருக்க வேண்டும். இவர்களுக்கு உடல் முக்கியமான ஒன்றாக உள்ளது.

நாட்டுப்புறக் கலைகளில் கரகாட்டம்

கரக ஆட்டம் மாரியம்மனுடன் தொடர்புடையதாகும். கரகம் என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியத்திலும், கலித்தொகையிலும் காண்கிறோம். பேராசிரியர் கரகம் என்பதற்குக் குண்டிகை எனப் பொருள் கொள்கிறார். சிலம்பு குறிப்பிடும் குடக்கூத்திலிருந்தே இன்றைய கரகம் தோற்றம் பெற்று இருக்க வேண்டும். விழாக்காலத்து எடுக்கும் கரகத்தைச் சக்திக் கரகம் என்றும், தொழில் முறையாக எடுக்கும் கரகத்தை ஆட்டக்கரகம் என்றும் கூறுவர். பக்தர்கள் எடுத்துச் செல்வது சக்திக் கரகமாகும். சக்திக் கரகத்தில் மேளமும் தப்பும் பிற தாளக் கருவிகளும் இடம் பெறுவதுண்டு. சக்திக் கரகத்தில் தண்ணீர் இருக்கும். அதற்கு மேலே வேப்பிலை, நடுவே தேங்காய் கும்பத்தைச் சுற்றி நூல் சுற்றப்பட்டு இருக்கும். விரதம் இருப்பவர்கள் கும்பத்தைச் சுமந்து

வருவர். ஆட்டக் கரகத்தின் அடிப்பாகம் குழியாக இருக்கும். உச்சியில் பொம்மை இருக்கும். குடத்தில் அரிசி நிரப்பப்பட்டிருக்கும். கரக ஆட்டம் ஆடும்போது மூன்று நிலைகளைக் காணலாம். (குணசேகரன், கே.ஏ. நாட்டுப்புற நிகழ்கலைகள், ப.37).

i) தொடக்க நிலை

ii) வேக நிலை

iii) அதிவேக நிலை

என 3 நிலைகள் உள்ளன. கரகாட்டத்தை கரகச் சொம்பு ஆட்டம், கரகாட்டம், கும்ப ஆட்டம் என்று கூறுவர்.

கரகம் என்பது தமிழ் நாட்டுப்புறக் கலைகளில் ஒரு பொதுவான சிறந்த கலையாகும். "கிராம தேவதைகளின் விழாக்காலங்களில் தேவதையின் ஊர்வலம் நடைபெறும்போது அதன் முன்னால் பலவித ஆட்டங்கள் நடைபெறும். அவற்றுள் கரகம் ஆடுதல்." (அறிவு நம்பி, அ. தமிழகத்தில் தெருக்கூத்து, 1989, ப.2) என்றும், "நாட்டு மக்களிடையே பிரபலமாக விளங்கும் கரகம் இசையும் நடனமும் கலந்த ஒரு அழகிய கேளிக்கையாகும்." (கலைக்களஞ்சியம், தொகுதி-3, ப. 237) என்று கரகாட்டம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

கரகம் பொருள் விளக்கம்

கரகம் என்ற சொல் முதலில் கமண்டலத்தையும் பின்னர் புனிதநீர் தாங்கிய குடத்தையும் செம்பையும் குறிப்பதாயிற்று. "கரகம்" என்னும் சொல்லுக்குக் கமண்டலம் என்றும் பிரார்த்தனைக்காக எடுக்கும் பூங்குடம் என்றும் பொருளுண்டு. (முத்துகிருஷ்ணன், தென்னிந்தியக் கிராமிய நடனங்கள், ப.21) கரகம் புதுவை, தமிழகத்தில் மட்டுமல்லாமல் கேரளா, மைசூர், ஆந்திரா முதலிய பகுதிகளில் எல்லாம் காணப்படுகின்றது. (கலைக்களஞ்சியம், தொகுதி 3, ப.237) இவ்வாட்டம் பழங்காலத்தது என்பதைக் காட்டுவதற்கு ஆதாரமான சிலைகள் தமிழகத்திலும் கேரளத்திலும் கிடைத்துள்ளன.

கரகாட்டக்கலை உடை ஒப்பனையில் வண்ணங்கள்

கரகாட்டம் ஆண், பெண் என இரு பாலர்களால் ஆடப்பட்டு வருகின்றது. ஆண் கலைஞர்கள் மிகக் குறைவாகவே காணப்படு கின்றனர். பெண்களே பெரும்பாலும் இக்கலையை நிகழ்த்துகின்ற வர்களாக விளங்குகின்றனர். இக்கலையை தமிழ்ப் பண்பாட்டிற்கு உகந்த சேலையை எடுத்துப் பின் கொசுவம் வைத்து, மேல்கட்டு மேல் சட்டை

அணிந்த பெண்கள் ஆடுகின்றனர். இவ்வாறு அணியப்படும் புடவை தற்போது கிளிப்பச்சை நிறம், சிவப்பு நிறம், அரக்கு நிறம், மஞ்சள் நிறம், நீல நிறம் என்ற சரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய சேலை களை இடுப்பில் கட்டிக் கொண்டு அந்த இடுப்புச் சேலையுடன் மாற்று வண்ண மேலாடை அணிந்து பெண்கள் ஆடுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்த மரபுநிலைக் கரகாட்ட உடை 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கைவிடப்பட்ட விளக்கொளியில், பளபளவென சரிகை வேலைப்பாடு அமைந்த கருப்பு நீல வண்ணத்தில் அமைந்த இறுக்கமான காலுறை களைப் பரதநாட்டியக் கலைஞர்போல அணிந்து கொண்டு சிவப்பு, நீலம், கருப்பு போன்றவற்றை உடைகளில் சிகினா வேலைப்பாடு களுடன் அமைத்து அதனையே இடுப்பிற்கு மேல் அணியும் ஜாக்கெட் என்னும் மேலாடைகளாக அணிந்து கரகம் ஆடிவந்தார்கள். இக்கலை ஞர்கள் மார்பை மறைக்கும் முந்தானை அல்லது தாவணி அல்லது மாராப்பு என்று அழைக்கப்படும் மேலாடை போர்த்திக் கொள்வது இல்லை. சேலையைக் கட்டிக் கொண்டு ஆடுவது கரகாட்டக் கலையை ஆடுவதற்குத் தடையாக உள்ளது. சுதந்திரமாக கால்களை அகட்டி வைத்தும் பக்கவாட்டில் வீசியும் ஆடுவதற்குத் தடையாக உள்ளது என்பதால் சேலையைத் தவிர்த்து பரதநாட்டிய உடை போன்ற ஆடை அணிந்து ஆடத் தலைப்பட்டனர்.

கரகாட்டக் கலைஞர்கள் உடுத்தும் உடை, சிகினா வேலைப் பாடுகள் செய்யப்பட்டு இரவில் விளக்கொளியில் ஆடும் பெண் கலைஞரின் அழகை மிகுவித்துக் காட்டுகின்ற வகையில் ஆட்டக் கலைஞர்களின் கரகாட்டக் கலை அமைந்துள்ளது. பெண் கலைஞர்கள் முகத்தில் பூச்சு வண்ணத்தை முதலில் வெள்ளை நிறத்தில் பூசிக் கொள்வர். அதன்மேல் ரோசா மலரின் வண்ணத்தில் அமைந்த வண்ணக் கலவையைப் பூசிக்கொள்வர். புருவத்தில் மை தீட்டி காதணிகளையும் கழுத்தணிகளையும் அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொள்வர். இவர்கள் வட்ட வடிவில் வளையம்போல் அமைந்த பந்து வளையத் தைத் தலைமுடியின் பின்புறம் வைத்து அழகாகக் கொண்டை போட்டுக் கொள்வர். இந்தக் கொண்டையின் மேல் நரியின் வால்களில் பொருந்தியுள்ள முடிகளைப் பிறைச்சந்திரன் வடிவத்தில் அமைக்கப் பட்ட வடிவத்தோடு சேர்த்துப் பின்தலையில் சொருகி இருப்பர். தலையில் செம்பு தட்டை வடிவில் இருக்கும். அந்த செம்பில் அலங் கரிக்கப்பட்டு கிளி போன்று பச்சை நிறத்தில் பொருத்தப்பட்டிருக்கும். அந்தக் கிளியானது ஆடும்போது தனியாக சுழன்று சுற்றும்.

ஆட்டக்கலைஞர்களின் திறன் காட்டுதல்

ஆட்டக்கலைஞர்கள் தங்களின் ஆடல் கலையின் ஆழம் காட்ட வேண்டி கண்ணைக் கட்டிக் கொண்டு கத்தியால் வாழைப்பழம் வெட்டுவார்கள். பலகையில் உருட்டுக் கட்டையை போட்டுச் சமநிலையில் நின்று உருளச் செய்து நடனமும் ஆடுவர். கரகாட்டத்தைத் தலித் இனமக்கள் பெரும்பாலும் ஆடுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் கருப்பு நிறத்தில் இருப்பர்.

தமிழ்நாட்டில் உள்ள கரகத்தைப் போன்றல்லாது கர்நாடகாவில் கரகத்திற்குப் பதிலாக அம்மனைப் பூவால் அலங்கரித்து முழு உருவச் சிலையைத் தலையில் வைத்து ஆடுகின்றனர். இக்கலை ஆண்களால் நிகழ்த்தப்படுகின்றது. இதைக் கரகக்காவடி என்று கூறுகின்றனர். நிகழ்த்துக் கலைகளில் பெரும்பாலும் நீல வண்ணத்தை அதிகமாகக் காண முடிவதில்லை.

முடிவுரை

ஒரு கலை வடிவம் ஒரு காலத்தில் வெவ்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுக் காலப்போக்கில் செழுமைப்படுத்தப்பட்டு நிகழ்த்துக் கலைகள் ஆயின. கரகாட்டம் விழாக்களின் முடிவில் கிராமங்களில் இன்றும் அவை ஆடப்பட்டு வருகின்றன. மக்களுக்கு எளிமையான வகையில் சென்று சேர்கிறது. கரகாட்டக்காரர்கள் வீதி வீதியாகச் சென்று ஆடுவதால் மக்கள் தங்களால் இயன்ற உணவுப் பொருளை (அதாவது டீ, காபி, கடலை,) தருகின்றனர். கரகாட்டம் இன்றும் தமிழர்களின் கலையாக உள்ளது என்பதில் ஐயம் இல்லை.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக்கழகம்.

4

பொம்மலாட்டம் : அன்றும் இன்றும்

முனைவர் ந. அறிவுராஜ்

நவீன ஊடகங்களின் வருகையால் இன்று கிராமம் மற்றும் குக்கிராமங்களெல்லாம் 'நகரமயமாதல்' எனும் நிலைக்கு மாறிக் கொண்டு வருகின்றன. இதன் விளைவாக நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளெல்லாம் மெல்லமெல்ல மறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளை நிகழ்த்தும் கலைஞர்கள் ஒரு சிலரே இருந்தாலும் அவர்களுக்கு அக்கலையை நிகழ்த்துவதற்கு வாய்ப்பின்மை, தொடர்ச்சியாக நிகழ்த்தப்படாமை, நிகழ்த்துவதற்கேற்ப ஊதியமின்மை முதலிய காரணங்களால் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளைக் கலைஞர்கள் நிகழ்த்த முன்வருவதில்லை. ஆனால், சடங்குகளோடு தொடர்புடைய நிகழ்த்துக் கலைகள் மட்டுமே நிலைத்து நிற்க வாய்ப்பிருக்கிறது. பொம்மலாட்டம் முதலிய தொழிற் சாந்த நிகழ்த்துக் கலைகள் அரசு மற்றும் பொதுமக்கள் ஆதரவின்மை யால் முற்றிலுமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதே நிலை நீடித்தால் நம்முடைய முன்னோர்களின் கலைச்செல்வங் களையெல்லாம் இழந்துவிடுகின்ற சூழல் உருவாகும். எனவே, நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளை ஆவணப்படுத்துதல் அவசிய மாகிறது. அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்டம் கொல்லையூரில் பொம்மலாட்டக் கலைஞரான கலைமாமணி பி. தேவராஜ் அவர் களிடம் பொம்மலாட்டம் தொடர்பான தரவுகளைச் சேகரித்து ஆவணப்படுத்துதல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோற்றம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நமது நாட்டில் தோன்றிய கலைகளில் ஒன்று பொம்மலாட்டக் கலையாகும். இப்பொம்மலாட்டக் கலை தமிழகத்தைப் பொருத்தவரை இரண்டு வகையான மரபுகள் உள்ளன. ஒன்று மரப்பாவைக் கூத்து, பிறிதொன்று தோல்பாவைக் கூத்து. இந்த இரண்டு கூத்துகளையும் தற்பொழுது 'பொம்மலாட்டம்' என்றே கூறுகின்றனர். பொம்மலாட்டம் ஆரம்ப காலத்தில் மக்களிடம் நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டியது. உயிரற்ற பொருளாகிய பொம்மைகள் உயிப்புள்ள மனிதனால் இயக்கப்பட்டு ஒருவகை நாடகக் காட்சியாக அமைந்தது. பொம்மலாட்டக் கலைஞர்கள் நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். 'உலகைப் படைத்த பிரம்மாவின் வாயிலிருந்து பிறந்த முதல் கலைஞர் கள் நாங்கள்' என்பது அவர்களின் நம்பிக்கை. பொம்மலாட்டம் படிப் படியாக வளர்ச்சிபெற்று இன்று நடிகர்களுக்குப் பதிலாக பொம்மை களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித்து விட்டது. இது மனித இனத் தின் மிகத் தொன்மையான இயல்புணர்ச்சிகளின் சின்னமாக விளங்கு கிறது. இத்தொன்மைச் சின்னங்களைப் பற்றி திருவள்ளுவர் மனத்தின் நாணமில்லாத மக்கள் உயிருடையர்போல் இயங்குதல் மரத்தால் இயன்ற பாவையைக் கயிறுகொண்டு ஆட்டி உயிருள்ளதாகத் தோன்று மாறு மயக்கினாற் போன்றது' என்ற செய்தியைக் கூறும் இடத்தில்

"நாணகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று'' குறள்: 1020)

எனும் குறளின் மூலம் அறியலாம்.

'வறுமையால் இரப்பவர் இல்லையானால் குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகினரின் நடமாட்டம் மரப்பாவை இயக்கும் கயிற்றால் ஆட்டப் பட்டு சென்று வந்தாற் போன்றதாகும்' என்பதனைக் கூறும் இடத்தில்

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மாஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று'' (குறள்:1058)

இவ்விரு பதிவுகளினூடே பொம்மலாட்டச் செய்தி உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களிடத்தில் பொம் மலாட்டம் செல்வாக்குப் பெற்றிருந்ததை உணரமுடிகிறது.

பொம்மலாட்டம் - விளக்கம்

பாவை என்பதற்கு சித்திரம், பதுமை, மதில், பெண், இலக்குமிக் கூத்து"[1] எனப் பலபொருள்களைக் கூறுகின்றது தமிழ்மொழி அகராதி.

பாவாய் என்ற சொல் பாவம் என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து பிறந்தது.

பாவை என்ற பெயரில் தமிழகத்தில் இருவகையான கூத்துகள் காணப்படுகின்றன. அவை தோல்பாவைக் கூத்து மரப்பாவைக் கூத்து"[2] என்பன.

பாவைகளை மரத்தாலும் தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் அசைத்துக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப்புறக் கலைக்குப் பாவைக்கூத்து"[3] என ஏ.என். பெருமாள் குறிப்பிடுகிறார்.

பாவைகளைத் திரைமறைவில் நிழலாகக் காட்டி அதன்மூலம் கதை நிகழ்த்திக் காட்டினால் அது தோற்பாவை அல்லது மரப்பாவை அல்லது மனிதனாக இருந்தாலும் அது நிழற்கூத்து என்று கூறப்படும்[4] என்கிறார் மு. இராமசுவாமி.

"பாவைக்கூத்து என்பது பொம்மையாட்டம். இது மிருதுவான தோலில் பொம்மைப் படங்களை வரைந்து வெள்ளைத் திரையில் ஆடச் செய்து காட்டுவதால் இதற்கு பாவைக்கூத்து[5] என்று கூறுவர் ஜே.ஆர். சுரேந்திரன். நாட்டுப்புறங்களில் மக்கள் இதனைப் பாவைக்கூத்து என்றும் பாவை நாடகம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இசைக்கருவிகளும் இசைப்போரும்

பொம்மலாட்டத்தில் சுருதிப்பெட்டி (ஆர்மோனியம்) மிருதங்கம் (தபேலா), சிங்கி தாளம் (ஜாலரா), குழல் போன்ற கருவி (பாவுரா) ஆகிய இசைக்கருவிகள் இடம்பெறுகின்றன. பொம்மலாட்டக் குழுவின் ஆசிரியர் என்பவர் பாடல் பாடுபவராகவும் உரையாடல் களைப் பேசுபவராகவும் இருப்பர். பொம்மைகளைக் கயிறிட்டு ஆட்டுபவர் இருவர். இவர்களுக்கு உதவியாளர் ஒருவர். சுருதிப்பெட்டி, மிருதங்கம், சிங்கிதாளம், குழல் போன்ற கருவிகளை இசைக்க நான்கு நபர்கள் ஆக மொத்தம் எட்டுபேர் இடம் பெறுகின்றனர்.

மேடையின் அமைப்பு

பொம்மலாட்ட நிகழ்விற்கு மிக எளிய முறையில் மேடை வடிவமைக்கப்படுகின்றது. 12 அடி நீள அகலம் 5 அடி உயரம் உள்ள மேடையில் இரண்டு முகப்புகளை உள்ள திரைகள் அமைக்கப்படு கின்றன. முதல் முகப்பில் பொம்மைகள் ஆடவும் அடுத்த முகப்பில் மறைவாக நின்று கொண்டு பொம்மைகளை ஆட்டவும்கூடிய

இடவசதியுடன் திரைச்சீலைகள் கறுப்பு மற்றும் நீல வண்ணத் துணிகளால் அமைக்கப் படுகின்றன.

மேடையின் உட்புறத்தில் பாடுபவர், இசைக்கருவியாளர்கள், உதவியாளர் போன்றோர் அமர்கின்றனர். காட்சிக்குத் தேவைப்படும் பொம்மைகளை மேடையின் உட்புறத்தில் வரிசையாகக் கட்டி வைத்துள்ளனர்.

பொம்மையின் அமைப்பு

கல்யாண முருங்கை மரத்தால் பொம்மலாட்டப் பொம்மைகள் செய்யப்பட்டுள்ளன. இப்பொம்மைகள் தரமானதாகவும் முகப்பொலிவு உடையதாகவும் செய்து பலவண்ணப் பூச்சுகளைப் பூசுகின்றனர். பிறகு பளபளக்கும் பட்டுத் துணியாலும் சரிகைத் துணியாலும் ஆடைகளை உடுத்துகின்றனர். பொம்மைக்கு நெற்றிச்சுட்டி, மூக்குத்தி, கம்மல், சிமிக்கி, கண்டசரம் கைஅத்து போன்ற நகைகள் அணிவிக்கின்றனர்.

பொதுவாகப் பொம்மைகளுக்குக் கால்கள் வைப்பதில்லை. ஆனால், சிவன், திருமால், நாரதர், முதலிய ஒரு சில தெய்வ வடிவ பொம்மைகளுக்கு மட்டுமே கால்கள் வைக்கின்றனர். கைகளை மடக்க வும் நீட்டவும் தலையைத் திருப்பவும் பொம்மையை முழுவதுமாகத் திருப்பவும் கால்களை நீட்டி அமரவும் என பொம்மையின் உடலில் பல இடங்களில் கயிற்றினை இணைத்துள்ளனர். இக்கயிறு கறுப்பு வண்ணத்தில் இருக்கும்.

பொம்மைகளின் இயக்கம்

பொம்மைகளை எழிலுற இயக்குவது என்பது இக்கலையின் முதன்மையான நோக்கமாக அமைகின்றது. பொம்மையின் பல இடங் களில் இணைக்கப்பட்டுள்ள கயிறுகளைக் குச்சிகளில் இணைத்தும் வளையத்தில் இணைத்தும் வைத்துக் கொள்கின்றனர்.

குச்சிகளைக் கைவிரல்களிலும் வளையத்தைத் தம்முடைய தலையிலும் பிணைத்துக் கொண்டு அசைவுகளைக் கொடுக்கப் பொம்மைகள் உயிரோட்டம் உடையதாக மாறிவிடுகின்றன.

ஆசிரியர் பாடும் பாடலுக்கும் உரையாடலுக்கும் ஏற்பக்கயிறு களைப் பிணைத்திருப்போர் பொம்மையை அசைக்கின்றனர். அவ்வாறு அசைக்கும்பொழுது பொம்மையின் ஊடே அவரே ஆடுவதைப் போன்று தோற்றத்தை நமக்குப் புலப்படுத்துகின்றனர். உடலசைவு மொழியினைக் கற்றவரைப்போன்று பொம்மைகள் முகபாவனை

செய்வதும் கைகளை வீசுவதும் கைகளை ஆட்டுவதும் பார்வையாளர் களை மெய்சிலிர்க்கவைத்து விடுகின்றன.

நிகழ்ச்சியும் பாடுபொருளும்

கோயில் நிகழ்வுகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் மாலை நேர நிகழ்வாகப் பொம்மலாட்டம் நிகழ்கின்றது. இப்பொம்மலாட்டத்தின் கட்டமைப்பு விநாயகர் வழிபாடு, கதைப்பகுதி, நகைச்சுவைப் பகுதி என மூன்று கருத்துக் கூறுகளைக் கொண்டுள்ளது.

பொம்மலாட்டத்தின் பாடுபொருளாக இராமாயணம், மகாபாரதம், அரிச்சந்திரன் கதை, வள்ளித் திருமணம், பக்தபிரகலாதன் மற்றும் நல்லதங்காள் போன்ற புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. ஆனால், அண்மைக் காலங்களில் சமூகச் சீர்திருத்தம் தொடர்பான எய்ட்ஸ் விழிப்புணர்வு, சுற்றுப்புற விழிப்புணர்வு, இரத்த தானம், பெண்சிசுக்கொலை, குடும்பக் கட்டுப்பாடு, மழைநீர் சேகரிப்பு முதலிய கருத்துகளை நிகழ்த்திக் காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

ஆசிரியரின் பங்கு

பொம்மலாட்டக் குழுவின் ஆசிரியரே முதன்மையான பங்கினை வகிக்கின்றார். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதிலிருந்து பொம்மைகளைத் தயார் செய்வது, ஒழுங்குபடுத்துவது, பாடல்களைப் பாடுவது, உரை யாடல்களைப் பேசுவது, தயாரிப்பது எனப் பல பணிகளைச் செய்து வருகின்றார்.

பாடல்களைப் பொருத்தமட்டில் பெரும்பாலும் திரைப்படச் சாயலும் கர்நாடகச் சாயலையுடைய பாடலும் பாடுகின்றனர். சிறுபான்மையே நாட்டுப்புற மெட்டுக்களைப் பயன்படுத்துகின்றனர். உரையாடல்களை நிகழ்த்தும்பொழுது பொம்மைகளின் தன்மைக்கேற்ப நடையில் ஏற்ற இறக்கம் கையாளப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் பேசுகின்ற பொம்மையின் இயல்பிற்கேற்ப அதன் அசைவுகள் அமைவது போற்றுவதற்குரியது.

அடிக்குறிப்புகள்

1. நா. கதிரைவேற்பிள்ளை *தமிழ்மொழியகராதி*, ப. *1001.*
2. *கலைக்களஞ்சியம், தொகுதி-7* ப.*240.*
3. A.N.Perumal, Folk arts in Tamil,P . *140.*

4. மு. இராமசுவாமி தோற்பாவை நிழற்கூத்து, ப.3.

5. ஜே.ஆர். சுரேந்திரன், தமிழகக் கிராமிய நடனங்கள், பக். 22-23.

6. தகவலாளர் பெயர்: கலைமாமணி பி. தேவராஜ், வயது:55, சாதி: பறையன் (எஸ்.சி.), ஊர்: கொல்லையூர், மாவட்டம்: புதுக்கோட்டை, தேதி: 22.2.2009.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரி,
பெரம்பலூர் - 12.

5
கும்மி ஆட்டத்தில் குலதெய்வ வழிபாடு நாட்டுப்புறக் கலையாகக் கும்மிப் பாடல்கள்

தெ.அனிதா

முன்னுரை

மனித மனம் அகத்தில் எழும் உணர்ச்சி உந்தலின் பயனாக வேகமாக எழுச்சியுற்றுப் பலவிதமான புறச்செயல்களைச் செய்து அவ்வுணர்வின் போக்கையும் தன்மையினையும் பிறருக்குப் புலப்படுத்திக் காட்டும் இயல்புடையது. இத்தகைய உணர்ச்சிப் புலப்பாட்டில் ஓர் ஒழுங்கு அமையும்போது அதில் ஒருவகையான இன்பமும் கவர்ச்சியும் ஏற்படுகிறது. அதுவே பலவகையான கலைகளாக உருவெடுத்துக் கண்ணுக்கும் காதுக்கம் கருத்துக்கும் சுவை பயக்கின்றது.

பெறப்படும் சுவையானது இன்பமாகவோ துன்பமாகவோ இருக்க லாம். எதுவாக இருந்தாலும் அதில் கலைத்தன்மை உயிர்ப்புடன் தோன்றி உணர்வுடன் வெளிப்பட வேண்டும். செம்மை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் உண்மையான உணர்ச்சிப் புலப்பாடு இருக்க வேண்டும். அத்தகைய உணர்ச்சி வெளிப்பாட்டில் அடுத்தவர்கள் தங் களுடைய உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை மக்கள் விரும்பி ஏற்பர்; கலைகளாக ஒப்புக்கொள்வர். அவையே ஒழுங்கு சிறந்து விளங்குமானால் அவற்றைச் சிறப்பாக மதிப்பர். அவற்றை வழங்கும் கலைஞர்களை மனமுவந்து ஆதரித்து மகிழ்வர். திறமைக்குத் தகுந்த பரிசிலும் கொடுப்பர்.

முதன் முதலில் இத்தகைய கதைகள் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது ஏதோ ஒருவிதமான ஒழுங்கை இயல்பாகக் கொண்டு விளங்கி நிற்கும். அதனையே நாட்டுப்புறக் கலைகள் என்று கூறுவர். இத்தகைய இயல்பான கலைகளை இன்றும் நாட்டுப்புற மக்கள் ஆதரித்து வருகின்றனர். விழாக்களில் இத்தகைய கலைகளுக்குச் சிறப்பான இடம் கொடுத்து வளர்க்கிறார்கள். கும்மியடித்துப் பாடும் கலை நாட்டுப்புறத்தில் சிறப்பான இடம் பெற்றுத் தமிழ்நாட்டில் பல ஊர்களில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அது ஆடல், பாடல் ஆகிய இரு கலைகளும் இணைந்த ஒரு கலையாக விளங்குகிறது.

கும்மி: சொற்பொருள் விளக்கம்

பல பெண்கள் இணைந்து இன்ப உணர்வைப் புலப்படுத்தும் பாங்கில் கைகொட்டிக் களித்துப் பலபொருள் குறித்துவரும் கதைப் பாடல்களைச் சமய, சமூக விழாக்களில் சுவை ததும்பப் பாடியும் கலை சிறக்க ஆடியும் பிறரை மகிழ்விப்பது கும்மியாகும். இதைக் கும்மி யடித்தல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் எனப் பல்வேறு முறையில் கூறுவர்.

'கும்மி கசிந்தடி யுங்கோ'

என்று மாடன் கும்மியிலும்,

'கும்மி யடியுங்கடி'

என்று இசுலாமியக் கும்மிப் பாட்டிலும்

'பதம் பாடிக் கொம்மி யடியுங்கடி'

என்று கோயிற் கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மிப் பாடலிலும்

'கொம்மி கொட்டுமின்'

என்று குன்றக்குடிக் குமரன் கும்மியிலும் வருவதைக் காணலாம். 'கொப்பி' என்ற சொல் வழக்கு ஆந்திரப்பிரதேசத்திலும் செட்டி நாட்டிலும் இன்றும் பழக்கத்தில் உள்ளது. கும்மியடித்தல், கும்மியாடுதல், கும்மிகொட்டுதல் எனப் பலவாறாகக் கூறுவதில் இக்கலையின் போக்கும் தன்மையும் ஓரளவு விளங்கும்.

இலக்கிய இனங்களை வகைப்பாடு செய்யும்போது அவற்றின் அகப்புறக் கூறுகளை நன்றாக அறிதல் வேண்டும். நூலின் உள்ளடக்கம், அமைப்புமுறை ஆகியவற்றைத் தெரிதல் வேண்டும். தேவை, சூழல், பாடுபொருள், அமைப்புமுறை ஆகியவற்றுள் எது வகைப்பாடு செய்ய வாய்ப்பாக உதவுகிறதோ அதனை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது சிறப்பாகவும் முறையாகவும் அமையும்.

கும்மிப் பாடல்கள் பாடப்படும் சூழலை இரண்டாகப் பிரிக்கலாம். அவை ஆலய விழாக்கள், சமூகச் சடங்குகள் ஆகும். இந்த இரு பிரிவுக்குள் கும்மிப்பாடல்களை அடக்க முயன்றால் வகைப்பாடு சிறப்பாக அமையாது. இசையமைப்பைப் பொறுத்தவரை ஒன்றிரண் டைத் தவிர மற்றவை அனைத்தும் கும்மி மெட்டுப் பாடல்களைக் கொண்டுள்ளன. பாடலமைப்பைக்கொண்டு இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்று மூன்றாகப் பகுத்துள்ளனர். இவற்றைத் தவிர ஏலேலக்கும்மி, கோலாட்டக்கும்மி என்று பிரித்துக் காட்ட முயன்றுள் ளனர். இன்னும் சிறப்பாகக் கும்மிப் பாடல்களை வகைப்படுத்த விரும் பினால் அவற்றின் பாடுபொருளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறாயின் அனைத்துக் கும்மிப் பாடல்களையும் சமூகம், சமயம், வரலாறு ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம்.

கிராமங்களில் வச்சி எடுத்தா ரெண்டு பேர் கும்மிப்பாட்டு சொல்லும்போது களைப்பிருக்காது. இப்படி ஒரு ஆளாசொல்றப்ப களைப்பிருக்கும். இங்க 'வச்சி' எடுத்தா என்பதற்குப் பதிவு செய்தல் என்று பொருள். 'ரெண்டு பேர் கும்மிப்பாட்டு சொல்லும் போது' என்பதற்குப் பாடகர் பாடி பெண்கள் பின்பாடுவது குறிப்பிடப்படுகிறது. ஓய்வெடுத்துக் கொண்டு பாடுமாறு கூறியதைக் கேட்காமல் தொடர்ந்து பாடினார். பாடல் வெவ்வேறு மெட்டில் பாடப்பட்டாலும் கும்மிப்பாடல்தான் என்றார்.

கும்மி இலக்கிய வகைப்பாடு

இலக்கிய இனங்களை வகைப்பாடு செய்யும்போது அவற்றின் அகப்புறக் கூறுகளை நன்றாக அறிதல் வேண்டும். நூலின் உள்ளடக்கம் அமைப்புமுறை ஆகியவற்றைத் தெரிதல் தேவை. சூழல், பாடுபொருள் அமைப்புமுறை ஆகியவற்றுள் எது வகைப்பாடு செய்ய வாய்ப்பாக உதவுகிறதோ அதனை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது சிறந்த முறையாகவும் அமையும்.

குலதெய்வ வழிபாட்டில் கும்மி

கும்மி ஆட்டம் மகளிர்க்குரியது. இந்த ஆட்டத்திற்கென மகளிர் தனிப்பட்ட ஒப்பனை எதுவும் செய்து கொள்வதில்லை. குழு நடனமாக விளங்கும் இந்த ஆட்டத்தில் எத்தனை பேர் வேண்டுமானாலும் வயது வேறுபாடில்லாமல் கலந்து கொள்ளலாம். நீண்ட பாடல்கள் கும்மியின் போது பாடப்பெறுகின்றன. பயிர் செழித்து வளரவும் வாழ்க்கை வளம் பெறவும் தெய்வத்திடம் வேண்டும் பாடல்கள் அதிகம். கும்மிப்

பாடல்கள் வழிபாட்டுச் சூழல்களில் பாடப்படுவதால் அவை வழிபாட்டுப் பாடல்களில் வைக்கப்பெற்றன.

குலதெய்வ வழிபாட்டுக் கும்மியில் ஏழை காத்தம்மன் வழிபாட்டுக் கும்மி

வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கிராம மக்களும் புரட்டாசி மாதத்தில் காப்புகட்டி பதினைந்து நாட்களுக்கு ஏழை காத்தம்மனையும் வல்லடியாரையும் வழிபடுவர். அந்த நாட்களில் மாமிசங்கள் உண்ணமாட்டார்கள். பச்சை மண்ணைத் தொட மாட்டார்கள். எண்ணெய் பலகாரங்கள் உண்ணவோ செய்யவோ மாட்டார்கள். உணவு தாளிப்பதுமில்லை. அந்தத் திருவிழா நாட்களில் பெண்கள் கும்மியடித்துப் பாடும் பாடல் ஒன்றில் மீனாட்சி பிறப்பு, வளர்ப்பு, திருக்கல்யாணம் முதலில் சுட்டப்படுகிறது. பின்னர், எழுவரில் இளையவளான ஏழைகாத்தம்மன் அருள் பாலித்தல் சுட்டப்படுகிறது. இருவேறு தெய்வங்கள் ஒன்றாக்கப்படுகின்றன. பார்வதி, மீனாட்சி, ஈஸ்வரி, ஏழைகாத்தம்மன், முத்தாரம்மன், முத்துமாரி, காளி இந்த இரு அணிகளும் இணைக்கப்படுகின்றன.

"தானானெ தானானே
தானானெ தானானே
தானானெ தானானே
தானானெ தானானே
தானானெ தானானே"

"ஆதி நல்ல பராசக்தி
அவனிதனில் வீற்றிருக்கும்
அங்கையர்கள் ஐவரிடம்
அம்பிகையும் விடைபெற்றாள்"

என்று பாடப்படுகின்றது.

"மேள தாளம் முழங்கிடவே
மெல்லி ஏளை காத்தாளுக்கு
சங்கீத மேளங்களும் - தாயே
சக்தி நல்ல ஈஸ்வரிக்கு என் தாயே
சக்தி நல்ல ஈஸ்வரிக்கு
தாம்பூல வினைகளும்
சதுராட்டம் நடக்க

தொப்புதப்பு சத்தம் கேளு அம்மா
கோபாலன் தங்கையர்க்கு என்
கோபால தங்கையர்க்கு

பூமி நல்லா முளக்கமிட
குமரேசன் அன்னையர்க்கு
அதிர்வேட்டு புகை வேட்டுக என் தாயே
அலறுதங்கே மாதுமைக்கே''

குறிப்பு

குரல் வளமிக்க சிறந்த பாடகர் ஏழை காத்தம்மன் வழிபாட்டின் போது வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்தோர் பாடகருக்கு எழுதித் தந்த பாடல் இது. அங்கு படித்துக் கற்றுக்கொண்ட பாடகர் இரண்டாண்டு கள் திருவிழாவின்போது இதனைப் பாடியுள்ளார். பாடகர் இப்பாடலைப் பாட பெண்கள் கும்மி அடிப்பர் என்று கூறப்பட்டது. பாடல் வெவ்வேறு மெட்டுகளில் பாடப் பெற்றது. பாடல் இசைக் கருவிகளுடன் பாடிக் காட்டப்பெற்றது. பெண்கள் கும்மியடிக்கும் போது பாடினால் பாடகருக்குச் சிரமமாக இருப்பதாகவும் பாடகர் குறிப்பிட்டார். 161 அடிகள் பாடி முடித்தபோது சற்று பாடலை நிறுத்தினார் பாடகர். பாடல் முடிந்ததா என்று கேட்டபோது அவர் கூறியது: 'இன்னும் இருக்கு.'

முடிவுரை

கும்மியில் இசையுடன் பல்வேறு சந்த இசைப்பாடல்களும் இருப்பதனால் அவற்றைக் கொண்டு தமிழ் இசைப்பாடல் தன்மைகளை அறிய முடியும். அந்த மெட்டுகளைக் கொண்டு பின்னர் வந்த புலவர்கள் எப்படிக் கவிதைகளைப் புனைந்துள்ளனர் என்றும் தெரிய முயலலாம். குலசைமாடன் கும்மியும் திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மியும் இசைப்பாடல் வளர்ச்சிக்கு உறுதியாகத் துணை செய்திருக்கும் என்று நம்பலாம்.

வரலாறு, அரிய கருத்து ஆகியவற்றைக் கொண்டு எழுதப் பட்ட கும்மிப் பாடல்கள் இலக்கிய உலகில் என்றும் வாழும். தமிழ் இலக்கிய வானில் தனக்கே உரிய தனித்துவத் தன்மைகளுடன் தனி இலக்கிய இனமாக விளங்கும் தகுதியுடன் கும்மிப் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. முந்தைய தலைமுறைக்குக் கலையின்பம் கொடுத்த கும்மிப் பாடல்கள் இனிவரும் தலைமுறையினருக்கு இலக்கிய இன்பம் கொடுத்து வாழும் என்று உறுதியாக நம்பலாம்.

◆

இளநிலை ஆய்வாளர்,
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

6
சேவையாட்டம்

க. ஆனந்தவள்ளி

முன்னுரை

ஆட்டக்கலைகள் என்பவை மக்களின் வாழ்க்கை நடத்தை முறை களையும், தமிழ் மரபையும், மண்ணின் பண்பாட்டு வேர்களையும் வெளிப்படுத்தும் வாயில்களாக விளங்குகின்றன. மேலும், இவற்றி னுடன் அவர்களின் சடங்கு, வழிபாட்டு நிலைகளைப் பின்னணியாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலில் நிகழ்த்தப்படுவனவாகவும் வழிபாட்டுச் சூழலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் குறிப்பிட்ட ஆட்டங்கள், குறிப்பிட்ட தெய்வ வழிபாடுகளில் சிறப்பிடம் பெறுவனவாகவும் கருதப்படுகின்றன. ஆட்டம் ஆடப்படும் பண்பாட்டின் பல கூறுகளுள் ஒன்று தனக்கென ஒரு தனித்தன்மையைக் கொண்டுள்ளது. இந்தத் தனித்தன்மைக்கு ஏற்றவாறு ஆட்டத்தைப் பதிவு செய்வது இன்றியமையாதது[1]. இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரால் மட்டுமே ஆடப்பெற்று வரும் ஆட்டக்கலையாகச் சேவையாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. கம்பளத்து நாயக்கர்களின் ஒரு பிரிவினரால் மட்டுமே ஆடப்பட்டு வரும் சேவையாட்டம் குறித்த செய்திகளைக் காண்போம்.

கம்பளத்து நாயக்கர்கள்

கம்பளத்து நாயக்கர்கள் தமிழகத்தில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், தேனி, திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய

மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் 16ஆம் நூற்றாண்டு அளவில் தமிழகம் வந்து குடியேறியதாகத் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்[2].

தெலுங்கு அரசர்கள் தமிழகத்தை ஆட்சி செய்த நிலையில் தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பல்வேறு இனத்தவர்கள் தமிழகத்தில் குடியேறியுள்ளனர். அவர்களில் கம்பளத்து நாயக்கர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களின் அனைத்துச் செயல்பாடுகளிலும், கம்பளி முக்கியத்துவம் பெறுகின்ற காரணத்தினால் கம்பளத்தார் என்ற பெயர் வழங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது.

கம்பளத்து நாயக்கர்களின் இனச்சார்புக் கலையாகவும் வழி பாட்டுக் கலையாகவும் ஆடப்பட்டு வரும் ஆட்டக் கலையாக சேவை யாட்டம் திகழ்கின்றது. குறிப்பாக, இவர்களுடைய வழிபாட்டுச் செயல் பாடுகள் அனைத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. கம்பளத்தார் பிரிவில் ஏழு முழுக்கு நடைமுறை உள்ளவர்கள் மட்டுமே சேவையாட்டத்தை ஆடி வருகின்றனர்.

சேவையாட்டம் பெயர்க்காரணம்

சேவையாட்டம், சேவாட்டலு, சேவையாட்டம், உறுமி, கோமாளியாட்டம், தாதராட்டம் என்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெறுகின்றது. சேவை + ஆட்டம் = சேவையாட்டம். சேவை, சேவித்தல், தொண்டு செய்தல், வணங்குதல் என்ற பொருள் களைக் கொண்டதாகும். இறைவனைச் சேவிப்பதற்காக வணங்கு வதற்காக ஆடப்பெறும் ஆட்டம் என்ற பொருளில் இவ்வாட்டம் இப்பெயர் பெற்றுள்ளது.

திருமால் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும், திருமால் ஆடிய ஆட்டத்தை இக்கடவுளுக்கே சேவை செய்வதற்காகக் கம்பளத்தார் ஆடி வருகின்றனர்.

சேவையாட்டத் தொன்மக் கதை

சிவபெருமான், கோபத்தில் பிரம்மனின் தலையைக் கிள்ளிவிட பிரம்ம கபாலம் சிவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. இதன் காரணமாக சிவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடிக்கின்றது. இதை அறிந்த மகாவிஷ்ணு தொப்பை கூத்தாடியாக (கோமாளி) வேடமிட்டு பாதி ஆணும், பாதி பெண்ணுமாக ஒப்பனை செய்த சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பிரம்ம கபாலத்தின் முன்பு வேடிக்கை ஆட்டங்கள் ஆட சிரிப்புத் தாளாமல் பிரம்ம கபாலம்

சிவனின் கையை விட்டு கீழே விழுகின்றது. சிவனுடைய பிரம்மஹத்தி தோஷம் நீங்குகின்றது. இவ்வாறு சிவபெருமானுக்குச் சேவை செய்வதற்காக விஷ்ணுவால் ஆடப்பட்ட வேடிக்கை ஆட்டமே சேவையாட்டம் என்று கூறப்படுகின்றது.

கம்பளத்தார் சேவையாட்டம்

தொப்பைக் கூத்தாடி என்ற கோமாளியை மையமாகக் கொண்டு, பாடலுக்கேற்ப சேவையாட்டம் ஆடப்படுகிறது. திருமாலின் அவதாரமாகக் கருதப்பெறும் கோமாளியே ஆட்டப் பாடல்களைப் பாடி இவ்வாட்டத்தை வழி நடத்துவார்.

ஒப்பனை

1. கோமாளி ஒப்பனை

தலையில் நீண்டு, நுனியில் வளைந்த கூம்பு வடிவில் குல்லாய். தலையில் கொண்டை போட்டுப் பூ வைத்து நெற்றியில் நாமம் போட்டுக் கண்ணைச் சுற்றிக் காவி மற்றும் வெள்ளை வண்ணக் கோடுகளும், கற்றாழை நாரினால் செய்யப்பட்ட நரைத்த மீசையும், தாடியும் வைத்துச் சோழிகள் கோர்க்கப்பட்ட பல் வரியையும் குஞ்சங்கள் வைத்துத் தைக்கப்பட்ட கறுப்புநிற (அ) நீல நிற தொள தொள சட்டையையும் நீளமான கால்சட்டையையும் தொப்பை வயிறையும் கொண்டிருப்பார்.

2. பிற ஆட்டக்காரர்கள் ஒப்பனை

ஏழு (அ) ஒன்பது ஆட்டக்காரர்கள் ஜரிகையால் அலங்கரிக்கப் பட்ட தலைப்பாகை நெற்றியில் நாமம், மேல்சட்டை, முழங்கால் வரை நீண்ட அங்கவஸ்திரம் இடுப்பின்கீழ் அகலமாகத் தைக்கப்பட்ட வண்ணப் பாவாடை அதன்மேல் அணியும் மில்லஞ்சி கொத்துக் கொத் தாக இரு கால்களிலும் சலங்கைகள். உடைமேல்பாதி ஆண்களுக்குரிய தாகவும் கீழ்ப்பகுதி பெண்களுக்குரியதாகவும் இருக்கும்.

சேவையாட்டப் பாடல்கள்

பாடலை அடிப்படையாகக்கொண்டு ஆடப்படும் ஆட்ட மாகச் சேவையாட்டம் திகழ்கின்றது. 'சேவைப்பாட்டு' என்றே இப்பாடல் அழைக்கப்படுகின்றது. பெருமாள் வழிபாட்டில் முக்கிய நிகழ்வாக இவ்வாட்டம் அமைவதால் பெருமாள் அவதாரப் பாடல் களும் இராமாயணக் கதைப்பாடல்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

சேவையாட்டத் தொடக்கத்திலும் முடிவிலும் இந்தப்பாடல்தான் இடம்பெற வேண்டும் என்ற ஒழுங்குமுறை காணப்படுகின்றது. தமிழ், தெலுங்கு மொழியில் பாடப்படுகின்றன. மிகுதியான பாடல்கள் தெலுங்கு மொழியிலேயே பாடப்படுகின்றன.

கோமாளி வட்டத்தில் நின்று பாடலைப்பாடி ஆட்டத்தைத் தொடங்கிவிட்டு வட்டமையப் பகுதிக்கு வந்து பாடுகின்றனர். பார்வையாளர்களும் இவ்வாட்டத்தில் கலந்து கொண்டு பாடுவர்.

சேவையாட்ட இசைக்கருவிகள்

சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தேவதுந்துபி

தொடக்கத்தில் தேவதுந்துபியே இவ்வாட்டத்தை இயக்கு கின்றது. கோமாளி பாடத் தொடங்கியவுடன் துந்துபியின் இயக்கம் நின்று விடுகின்றது. இக்கருவி இல்லாமல் இவ்வாட்டம் நிகழ்த்தப் படுவதில்லை என்னுமளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆட்ட மல்லாது கம்பளத்தாரின் வாழ்க்கை மற்றும் வழிபாட்டுச் சடங்குகளிலும் பிரிக்க முடியாத ஒன்றாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாலா இனத்தவரே இக்கருவியை இசைப்பர்.

2. சேமப்பலகை

ஒரு முகப்பறையாக இக்கருவி கருதப்படுகிறது. இக்கருவியின் தொடக்க வாசிப்பு சேவை திமிரேதி என்றும், முடிப்பு வாசிப்பு சேவை துவிசேதி என்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்விசைக் கருவியை அடிப்படையாகக் கொண்டே ஆட்டத்திற்கான பெயர் குறிப்பிடப்படு கின்றது. பாடலுக்கேற்ற இசைப்பு முறையைக் கொண்டது.

3. சேமக்கலம்

இக்கருவி சேகண்டி என்றும் அழைக்கப்படுகின்றது. சேவை யாட்டத்தில் சேவைப் பலகையுடன் இணைத்து வாசிக்கப்படுகிறது.

4. சலங்கை

'கெஜ்ஜலு' என்று தெலுங்கில் குறிப்பிடப்படுகிறது. பாடலுக்குத் தாளமாகக் கால் மிதிக்கு அழகு சேர்க்கவும் பயன்படு கின்றது. இதனை இடுப்பில் கட்டிக்கொண்டும் கையில் பிடித்துக் கொண்டும் ஆட்டக்காரர்கள் ஆடுவர்.

5. ஜால்ரா

கையில் பிடித்துக் கொண்டு ஆடுவர். சேவையாட்டத் துணை இசைக்கருவியாகப் பயன்படுகிறது. சேவையாட்டக்காரர்களில் இறுதியாக நிற்பவர் சேவைப்பாடலுக்கு ஜால்ராவை இசைத்துக் கொண்டு ஆடுவார்.

சேவையாட்டத்தைத் தொடங்கி வைத்தவர் பற்றிய கருத்து

லக்கையன் கோட்டை என்ற ஊரில் இவ்வாட்டத்தைத் தோற்றுவித்தவர்கள் வாழ்ந்ததாகக் கருத்து நிலவி வருகின்றது. முன்னாளிலெல்லாம் தேவளம் பகுதியில் முக்கிய வழிபாட்டு நிகழ்வுகளில் சேவையாட்டம் ஆடும் பொழுது லக்கையன் கோட்டையிலிருந்து வயதான பெரியவர் ஒருவர் வந்திருந்து பூஜை செய்து சேவையாட்டத்தைத் தொடங்கி வைத்ததாகக் கூறப்படுகின்றது[3].

தாத்தையா சுவாமி கோயில் இந்தப் பெரியவர் நினைவாகக் கட்டப்பட்டு உள்ளது. இவரை வணங்கி இவ்வாட்டத்தைத் தொடங்குகின்றனர். இவர் இர்ரிவர் பிரிவைச் சார்ந்தவராதலால் இப்பிரிவினர்களே சேவையாட்டத்திற்குத் தலைமையானவர்களாகவும் இருந்து வருகின்றனர் எனலாம்.

சடங்கில் சேவையாட்டம்

சேவையாட்டத்திற்குச் சடங்குச் சூழல் களம் அமைத்துத் தருகின்றது. கம்பளத்தாரின் வழிபாட்டுச் சடங்குச் சூழலில் ஆட்டம் நிகழும்போது சடங்கில் பங்கேற்பவர்களே ஆட்டத்தின் பார்வையாளர்களாகவும் செயல்படுகின்றனர். மேலும், இவரில் ஒருவர் சேவையாட்டப் பாடலைப் பாடுபவராகவும் விளங்குகின்றார். சடங்கு தொடங்கும் போது ஆட்டம் தொடங்கும். முடியும்போது ஆட்ட நிகழ்வும் முடிவு பெறும். வழிபாட்டுச் சடங்குச் சூழலில் ஆட்டம் நிகழ்த்தப்படுவதன் மூலம் ஆட்டம் எவ்வாறு புதிய அர்த்தத்தை, புதிய பொருளைக் கொண்டதாக அமைகிறது என்பதை அறிய வழி ஏற்படுகின்றது என்று கருத இடமுளது.

வழிபாட்டில் சேவையாட்டத்தின் பங்கு

தெய்வ வழிபாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. பெருமாள் வழிபாட்டில் தெய்வ அழைப்பு ஆட்டமாகவும், தெய்வத்திற்குச் செலுத்தப்படும் காணிக்கை ஆட்டமாகவும் ஆடப்படுகின்றது. தம்பிரான் ஜக்கம்மா வழிபாட்டிலும் ஆடப்படுகின்றது.

வழிபாடு தொடங்கும் முன்பே ஆட்டம் தொடங்குகின்றது. வழிபாட்டின்போது அனைவரையும் பங்குகொள்ளச் செய்யவும், உணர்வுப் பூர்வமாகத் தயார் நிலைக்குக் கொண்டு வரவும் இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. தெய்வவிழாவில் வழிபாடாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

சேவையாட்டம் நிகழும் இடம் நேரம்

கோவிலில் சிறப்பு வழிபாடுகள் நிகழும் போதும், வைகுண்ட ஏகாதசியன்றும் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது. ஊர்வலம் வரும் தெய்வங்களுக்கு முன்பும், கோவிலின் கருவறைக்கு எதிரேயும் இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. இதனால், சேவையாட்ட ஆடு களம், அதன் வெளி விரிந்த பரப்புடையதாக அமைகின்றது. திருவிழாக் காலத்தில் இரவு நேரங்களில் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது.

சேவையாட்டம் நிகழ்த்தும் முறை

கோமாளியைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டு ஆட்டம் நிகழ்த்தப்படுகிறது. கோமாளியை மையமாகக் கொண்டு சேவை யாட்டப் பாடல்கள் பாடப்பெற்று இவ்வாட்டம் ஆடப்படுகின்றது.

சேவையாட்ட அமைப்பு

இசைக்கருவிகளின் செயல்பாடுகள் கொண்டு ஆட்ட அமைப்பு உருவாக்கப்படுகின்றது. இவ்வாட்டம் ஒரு கதை வாயிலாக இணைக்கப்படுகின்றது. அது இராமாயணக் கதை ஆகும். கோமாளிப் பாடல், பாடலுக்கேற்ற தாளம் இவற்றுடன் கூடிய ஆட்டமுமாக இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகின்றது.

சேவையாட்டம் தொடங்கும் முன் அனைத்துக் கலைஞர்களும் வரிசையாக நிற்கின்றனர். தொடக்க நிலையில் ஒருவர் கலப்பட நீர் தெளித்துச் சாம்பிராணிப் புகை காட்டி ஆட்டக்காரர்களின் காலில் விழுகின்றார். இவர் பெரும்பாலும் ஊர் நாட்டாண்மையாக இருக் கிறார் எனலாம். சேவையாட்டக்காரர்களை மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தச் செய்யப்படும் சடங்காக இது கருதப்படுகிறது.

தொடக்க வழிபாடு முடிந்தவுடன் ஆட்டக்காரர்கள் இசைக் கருவிகளைக் கோவிலின் முன்பு இசைத்துக் கொண்டே ஆடுகளத்திற்கு வருகின்றனர். கோமாளி ஆட்டத்தைத் தொடங்க ஏனைய அனைவரும்

அவரைப் பின்பற்றி ஆடுகின்றனர். தொடக்க நிலையில் தேவத்துந்துபி இசைப்பு முறைக்கேற்பச் சில ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. சேவையாட்டம் நேர் வரிசையில் ஆடப்படுவதில்லை. இதன் அடவுகள் வட்டத்திலேயே ஆடப்படுகின்றன. தெய்வ வழிபாட்டின்போது மட்டுமே நேர்வரிசையில் ஆடப்படும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆட்டச் செயல்பாடு

சேவையாட்ட அடவுக் கூறுகள் ஒரு பொருளுள்ள இயக்கமாக அமைந்து பார்வையாளர்களின் புலனுணர்வில் அதிர்வை ஏற்படுத்துகின்றன. பார்வையாளர்களும் ஆட்டக்காரர்களோடு இணைந்து பாடல்கள் பாடி தன் பங்களிப்பைச் செலுத்தும் வகையில், சுதந்திரப் போக்கையும், அனைவரையும் ஒன்றியைத்து ஏற்றத்தாழ்வை அகற்றிச் சமத்துவ உணர்வை வெளிப்படுத்தும் நிலையையும் கொண்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

சேவையாட்டப் பொருண்மை

சேவையாட்டப் பொருள் வெளிப்பாடு என்பது ஆட்டத்தினாலும், பாடலினாலும் உணர்த்தப்படுகின்றது. சேவையாட்டப் பாடலுக்கேற்ப ஆடப்பெறும் அடவுகள் பார்வையாளர்களைத் தன்பக்கம் ஈர்க்கும் பணியைச் செய்கின்றது. தெய்வத்தைப் போற்றிப் பாடுகின்ற கருத்துள்ள பாடல்களே பார்வையாளர்களை ஆட்டத்தோடு ஒன்றிணைக்கச் செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சேவையாட்டத்தில் வட்டவடிவின் பங்கு

கம்பளத்தாரின் வீடுகளும், கோயில்களும் ஊரின் மையப்பகுதியில் வட்டமாகவே அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களது வேட்டை முறையிலும் வட்டமுறை பின்பற்றப்படுகிறது. எனவே, இவர்களது வாழ்க்கைச் செயல்பாடு, வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் வட்டவடிவாகவும் திகழ்கின்றது. வட்டவடிவில் ஆட்டம் ஆடப்படுவதன் மூலம் ஆட்டக்காரர்களிடையே சமத்துவ உணர்வை, ஏற்றத்தாழ்வினை அகற்றி, ஒற்றுமையைத் தூண்டும் விதமாக இவ்வட்ட வடிவம் விளங்குவதனை அறிய முடிகின்றது.

வட்டமாக நின்று ஆடப்படும் ஆட்டங்களின் மையப்பொருள் வழிபாடாகவே அமைகின்றது[4].

முடிவுரை

சேவையாட்டம், திருமாலுக்குச் செய்யும் சேவை ஆட்டமாக ஆடப்பட்டு வருகின்றது. இன்றைய நிலையில் விழாக்களில் பயிற்சி களின்றி ஆடல், பாடல் முறைகள் குறைந்து ஆடப்பட்டு வருகின்றன. வைணவக் கோயில்களில் பிரிக்க முடியாத ஒன்றாக ஆடப்பட்டு வருகின்றது. இசைச்சார்புக் கலையாக இருப்பதினால் நிகழ்த்துதல், நிகழ்த்துச் சூழல்களின் வேறுபட்ட தன்மை கொண்டு தனித்துவம் பெற்று விளங்குகின்றமையையும் அறிந்து கொள்ள முடிகின்றது. வழிபாட்டு நிலையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கலையாக இருப்பதினால் இன்றளவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

அடிக்குறிப்புகள்

1. Royce, 1980, PP. 31-32.
2. Thurston. E., Castes and Tribes of Southern India, 1915, Vol. VII, P.148.
3. சேவையாட்டம், ஒ. முத்தையா, ப.38.
4. சுதானந்தா, 1991. ப.80.

துணைநூல்கள்

1. சேவையாட்டம், முனைவர். ஒ. முத்தையா, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், காந்தி கிராமம், தமிழ்நாடு, ஏப்ரல் - 2002.
2. சுதானந்தா, ஆட்டமும் அமைப்பும் பதிப்புத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 1991.
3. முருகேசன். கு., தமிழக நாட்டுப்புற ஆட்டக் கலைகள், தேவி பதிப்பகம், சென்னை - 1989.
4. இரத்தினம். க., தென்னிந்திய குலங்களும் குடிகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 1984.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் 'பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

7
பாவைக்கூத்து அன்றும் இன்றும்

சே.ஆனந்தி

முன்னுரை

நாட்டுப்புறக் கூத்துகள் மக்களை மகிழ்விக்கும் ஒரு சிறந்த கலை வடிவமாகும். இக்கூத்துகளில் ஒன்றாகத் தோற்பாவைக் கூத்து நடைபெறுகிறது. எழுத்தில் மட்டுமே தோற்பாவைக் கூத்து என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், வழக்கில் பாவைக்கூத்து என்றே வழங்கப்படுகிறது. இக்கட்டுரையில் தோற்பாவைக் கூத்தின் அன்றைய சமூக நிலைபற்றியும் இன்றைய சமூக நிலைபற்றியும் ஆராயலாம்.

பாவைக் கூத்து

பாவைகளை மரத்தாலும் தோலாலும் செய்து அவற்றை நூல்களைக்கொண்டு கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆட்டியசைத்துக் கதைகளை விளக்கச் செய்யும் நாட்டுப்புறக் கலையையே பாவைக் கூத்து என்பர். இது நிழலாட்டம், பொம்மலாட்டம் என்றும் வழங்கப்படுகிறது.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு இலக்கியமான மாணிக்கவாசகரின் திருவாசகத்தில்,

> "சீலமின்றி நோன்பின்றிச்
> செறிவே இன்றி அறிவின்றித்

தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை'' (ஆனந்தமாலை. 3)

என்னும் பாடல் வரிகளினால் தோற்பாவை நிழற்கூத்து அக்காலத்திலேயே சிறப்புற்று விளங்கியதை அறியலாம்.

பல்வேறு நாடுகளில்

தோற்பாவை நிழற்கூத்து மற்றைய கூத்து வகைகளைவிட மிக நீண்ட மரபினை உடையதாக இருந்தாலும் தற்பொழுது எட்டு நாடுகளில் (இந்தியா, திவாங்க், இந்தோனேசியா, சீனா, மலேசியா, கம்போடியா, தாய்லாந்து, துருக்கி) மட்டுமே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இத்தோற்பாவை நிழற்கூத்து ஒரிஸா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களில் நடைபெறுகிறது. ஆந்திராவில் குமார சம்பவம், உத்தரஹரிவம்சம், ரங்கநாத இராமாயணம் போன்ற பாவைக்கூத்துகள் சிவராத்திரி விழாவிலும் கோயிலிலும் நடைபெறுவதுண்டு. மைசூரில் யட்சகானம் என்பர்[1]. தமிழகத்தில் இக்கூத்தினை மராட்டிய ராஜீவ்கள் நடத்துகின்றனர். இக்கலை மக்களை நம்பித்தான் வளர்ந்து வருகிறது.

தோற்பாவைகள்

கூத்தின் இன்றியமையாத பகுதியாக இருப்பவை பாவைகள். இப்பாவைகள் உயிருள்ள பாத்திரங்கள் உயிரற்ற பாத்திரங்கள் ஆகியவற்றைக் கூத்தரங்கில் காட்டுவதற்குப் பயன்படுகின்றன.

உயிருள்ள பாத்திரங்கள் (அகஸ்தியன், அலங்காரி, அனுமன் போன்ற பாத்திரங்கள்)

உயிரற்ற பாத்திரங்கள் (தாமரை, ரதம், பாணம், கல்யாண வில் போன்ற பாத்திரங்கள்)

எனவே, பாவைகளை ஆட்டிக் கதை நடத்திச் செல்வதற்கு அழகிய பாவைகளைத் தயரித்தல் என்பதும் மிக முக்கியமானதாகிறது.

தோற்பாவை நிழற்கூத்து என்று பெயரளவில் வழங்கப்பட்டாலும் இன்று அனைத்துக் குழுக்களிலும் பயன்படும் பாவைகள் பெரும்பாலும் தோலில் செய்ததாக இருப்பதில்லை. அமெரிக்காவிலிருந்து அனுப்புகிற பால் பவுடர் அட்டைகளை இவர்கள் அதிகம் உபயோகிக்கின்றனர்.[2] மேலும், கனத்த தாள்களில் படங்களை

வரைந்தும் பயன்படுத்துகின்றனர். இவற்றின் நிழல்கள் தோற்பாவைகளின் நிழல்களைப்போல் தெளிவாகவோ அழகாகவோ இருப்பதில்லை. ஆனாலும், இதைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் கலைஞர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கலைஞர்கள்

இக்கூத்தில் பெரும்பாலும் மிகக்குறைந்த அளவு எண்ணிக்கையிலேயே கலைஞர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்கள்

1. பாவையாட்டி.
2. சுரப்பெட்டி இசைப்பவர்.
3. ஜால்ரா இசைப்பவர்.
4. பணியாளர்கள்.

இக்கலைஞர்கள் அனைவரும் ஒரே குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் என்பது இக்கலையின் சிறப்புக்கூறு ஆகும்.

அரங்கம்

சிறிய அறையொன்று துணிகளால் அமைக்கப்பெற்றிருக்கும். முன்புறத்தில் ஒரு வெண்மையான திரைச்சீலை அத்துணியுடன் இணைக்கப்பெற்றுக் காணப்படும். பாவைகளை ஆட்டுவிப்பவர் திரைக்கு உள்ளேயே அமர்ந்திருப்பார். அவர் வலது காலில் ஒரு கட்டையும் கையில் ஒரு சலங்கையும் கட்டியிருப்பார். அவரைச் சுற்றித் தோற்பாவைகள் இருக்கும். பாவையாட்டியின் தலைக்கு மேலே ஒரு விளக்கு இருக்கும். அது பொருளாதாரத்திற்குத் தகுந்தபடி எண்ணெய் விளக்காகவோ, பெட்ரோமாக்ஸ் விளக்காகவோ, மின் விளக்காகவோ இருக்கலாம். விளக்கின் ஒளியால் கூத்துக்காரர் ஆட்டுகின்ற பாவையின் நிழல் திரைக்கு வெளியே தெரியும்.

கூத்தமைப்பு

நாட்டுப்புற மக்களின் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றிக் கிராமத்தின் பிஞ்சு உள்ளங்களில் இந்தியக் கலாச்சாரத்தையும் ஏற்றி வைக்க இக்கூத்து பெரும்பாலும் பயன்படுகிறது. இக்கூத்துகள் இரவு 9 மணிக்குமேல் தொடங்கி மூன்று மணி நேரத்திற்குமேல் நடைபெறுகிறது. இதனை, "கூத்தாடி கிழக்கே பார்ப்பான்; கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்" என்ற பழமொழி வாயிலாக அறியலாம்.

இராமாயணம், நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை போன்ற கதைகளை இக்கூத்துகளில் நடத்துகின்றனர். இக்கூத்துகள்,

1. கடவுள் வாழ்த்து.
2. கூத்துத் தொடக்கம்.
3. கதைப்பகுதி.
4. முடிவு.

என்ற அமைப்பில் நடத்தப்படுகின்றன. இவ்வமைப்பு முறையே நாடகத்திற்கு வழிவகுத்ததனைப் பிற்காலத்தில் தோன்றிய நாடகத்துக்கு வழி செய்தது பாவைக் கூத்தே[3] என்று ஏ.பி.கீத் கூறுவார்.

கடவுள் வாழ்த்துப் பாடலில் கணபதி, கலைமகள் ஆகிய தெய்வ வணக்கங்கள் கூறப்படுகின்றன.

"கணபதி ஆடினாரே
கூத்தாடும் பிள்ளை
கணபதி ஆடினாரே"[4]

தெய்வ வணக்கம் முடிந்த பிறகு கூத்து அறிமுகம், கோமாளி பேசுதல், அடுத்தநாள் நிகழ்ச்சிகளைக் கூறுதல் போன்ற காட்சிகள் இடம்பெறுகின்றன.

தற்கால நிலை

சரபோஜி மன்னர் காலத்தில் கலைஞர்களுக்கு நிலபுலன்கள், உதவிப்பணம் கொடுத்து வந்ததனால் தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் முன்னர் சிறப்பாக வாழ்ந்திருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியில் தங்கள் சொத்துகளை இழந்தனர். எனவே, இவர்களின் முன்னைய சமூக மதிப்புநிலை மாறியது. முன்பு ஊர்ப்பொதுவில் இக்கூத்தை நடத்தி மக்கள் தருகின்ற உணவுகளை உண்டுவிட்டு இறுதி நாளில் அவர்கள் தருகின்ற துணிமணிகளையும் பண்டங்களையும் பெற்றுச் சென்றனர். மறைப்பில்லாமல் நடத்திக் கொண்டிருந்த கூத்தைப் பணம் தருபவர்களுக்காக மறைப்பிற்குள் கொண்டுவர வேண்டியதாகிறது. அன்றன்றைய வருமானத்தைக் கூத்து காண வந்திருக்கிற ஒவ்வொரு வரிடமிருந்தும் எதிர்பார்த்து நடத்த ஆரம்பிக்கின்றனர்.

முடிவுரை

மராட்டியர்களின் காலத்தில் சிறப்புற்று விளங்கிய தோற்பாவைக் கூத்தானது ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பிறகு நலிவடைந்தது. எனவே, இக்கலைஞர்கள் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் ஊர் ஊராகச்

சென்றதோடு மட்டுமல்லாமல் பணத்தினையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர். தோற்பாவை நிழற்கூத்தின் இன்றைய நிலை இருட்டாகவே உள்ளது. இந்நிலையை மாற்றக் கற்றவர்கள் இக்கலையைப் பேணுவதோடு அறிவியல் சார்ந்த ஆய்வுகளை இத்துறைகளில் மேற்கொள்ள வேண்டும்.

துணை நின்றவை

1. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப. 107

2. மு.இராமசுவாமி, தோற்பாவை நிழற்கூத்து, ப. 89

3. கீத். மஞ்சரி, ப. 23 (ஏப். 63)

4. மு.இராமசுவாமி, தோற்பாவை நிழற்கூத்து, ப. 107.

◆

நிறைஞர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
கிராமியப்பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

8

சேலம் மாவட்டத் தெருக்கூத்தில் மரபுகளும் மாற்றங்களும்

முனைவர் க. இந்திரசித்து

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் முதன்மையானதாக விளங்குவது தெருக்கூத்துக் கலையாகும். சங்க காலத்திலிருந்து நாட்டியத்தையும் நாடகத்தையும் 'கூத்து' என்றே அழைத்து வந்துள்ளனர். பண்டைய கூத்து நிகழ்ச்சியில் பாடல்கள் மிகுதியாக இடம் பெற்றிருந்தன. ஆனால், இன்றைய கூத்தில் பாடலும் உரையாடலும் ஏறத்தாழ சம அளவில் இடம் பெற்றுள்ளன. தெருக்கூத்து, கழைக்கூத்து, பாவைக்கூத்து, கணியான் கூத்து, டப்பாங் கூத்து போன்ற பல்வேறு வகையான கூத்துகள் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டத்தில் எடப்பாடி, ஜலகண்டாபுரம், வாழப்பாடி, கன்னங்குறிச்சி, மல்லூர், ஏற்காடு, வெண்ணந்தூர், ஆத்தூர் போன்ற ஊர்களில் தெருக்கூத்துகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒப்பனைகள் குறைவாகவும் எளிய முறையிலும், தெருவிலும் நடத்தப்படுவது தெருக்கூத்தாகும். புராண, இதிகாசக் கதைகளையே பெரும்பாலும் தெருக்கூத்தாக நடத்துகின்றனர். தெருக்கூத்து, கடவுளோடும் நாட்டுப்புற நம்பிக்கைகளோடும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், நாகரிகம், பண்பாடு, கடவுள் நம்பிக்கை போன்றவை தெருக்கூத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால், இன்றைய நவீன வாழ்க்கைமுறை தெருக்கூத்தின் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தெருக்கூத்தின் மரபு வகையான நிகழ்த்து

முறைகளிலும், கதை அமைப்பிலும், உரையாடல் உத்தியிலும், பாடல் வடிவத்திலும் பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்ந்து வருவதைக் களப்பணி மூலம் பெறப்பட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. சேலம் மாவட்டத் தெருக்கூத்தில் காணப்படுகின்ற மரபுகளும் மாற்றங்களும் இங்கு ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

தெருக்கூத்தின் மரபுகள்

இருபதாம் நூற்றாண்டுவரை தமிழில் நடத்தப்பட்ட நாடகங்கள் எல்லாம் கதை தழுவிய கூத்துகளே என்றும் நாடக மேடைகளோ, காட்சித் திரைகளோ இல்லாமல் தெருக்களில் நடத்தப்படுவது தெருக்கூத்து என்றும் கலைக்களஞ்சியம் கூறுகிறது.[1] "தெருக்களில் மேடை இல்லாமல் இதிகாசக் கதைகளை இசைப்பாடல், வசனம் போன்றவற்றுடன் நடித்துக் காட்டும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி"[2] என்று தெருக்கூத்திற்கான விளக்கத்தினை வரையறுத்துக் கூறுவர். சேலம் மாவட்டம் புகழ்பெற்ற கொங்குநாட்டின் ஒரு பகுதியாக விளங்குகிறது.[3] இம்மாவட்டம் வரலாற்றுச் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது.[4] சேலம் மாவட்டத்தில் நீண்ட நெடுங்காலமாக மரபுவழித் தெருக்கூத்துகள் நடைபெற்று வருகின்றன. கொங்கு நாட்டு அகராதி கூத்தில் இடம் பெற்று நடிப்பவர்களைக் 'கூத்தான்' என்னும் சொல்லால் குறிப்பிடு கிறது.[5] சேலம் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் தெருக்கூத்துகளில் பண்டைய தெருக்கூத்து மரபுகள் சில அப்படியே பின்பற்றப்பட்டு வருகின்றன. தெருக்கூத்துகளை, திருவிழாக் காலங்களில் கிராம அரங்குகளில் நடத்தப்படும் நாடகம் என்று கூறுவர்.[6] இதற்கேற்பச் சேலம் மாவட்டத் திருவிழாக்களில் தெருக்கூத்து நடத்துவதை மரபாகக் கொண்டுள்ளனர். இச்செய்தியைத் தகவலாளர் கூற்று உறுதிப்படுத்து கின்றது. (நேர்காணல் : க. சக்கரபாணி, கன்னங்குறிச்சி, சேலம் மாவட்டம், *17.2.2009*) தெருக்கூத்திற்கென்று சில பொதுவான வடிவங்கள் உள்ளன என்று கூறுவர்.[7] அவை வருமாறு:

1. துதி
2. கட்டியங்காரன் வரவு
3. பாத்திரங்கள் திரைக்கு உள்ளிருந்து பாடுதல்
4. பாத்திரங்கள் திரைக்கு வெளியே இருந்து பாடுதல்
5. தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்
6. மங்களம் பாடுதல்

பொதுவாக இம்மரபுகள் எல்லாத் தெருக்கூத்துகளிலும் பின் பற்றப்படும். எனினும் சில நேரங்களில் சில இடங்களில் நடைபெறும் தெருக்கூத்தில் மேற்கண்ட மரபுகளில் ஒன்றிரண்டு தேவை கருதி விடு படுதலும் உண்டு என்பர். (நேர்காணல்: சி. கந்தசாமி, மல்லூர், சேலம் மாவட்டம், 19.2.2009) தெருக்கூத்தினை தெற்கத்தி பாணி, வடக்கத்தி பாணி என்று இருவகையாகப் பிரித்துக் கூறுவர். "கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும், தெற்கத்திப் பாணிக் கூத்தும், திருவண்ணாமலை, வேலூர், செங்கல் பட்டு மாவட் டங்களில், வடக்கத்திப் பாணிக் கூத்தும் நடைபெற்று வருகின்றன"[8] என்று கூறுவர். இதில் சேலம் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் தெருக்கூத்துகளை 'வடக்கத்தி பாணிக் கூத்துகள்' என்னும் பிரிவில் அடக்கலாம்.

தெருக்கூத்தின் உள்ளடக்கம்

தெருக்கூத்தை நில அடிப்படையிலும் வேறுசில அடிப்படை யிலும் அறிஞர்கள் வகைப்படுத்திக் கூறியுள்ளனர். தெருக்கூத்துகளின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அ) புராண இதிகாசங்கள் ஆ) வரலாற்று நிகழ்வுகள் இ) சமுதாயச் சிந்தனைகள் என்னும் மூன்று வகையாகப் பிரித்துக் கூறியுள்ளனர். பெரும்பாலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வருகின்ற சிறுசிறு நிகழ்ச்சிகள் தெருக்கூத்தின் கதைகளாக அமைந்துள்ளன. வன்னிய புராணம், இரணிய புராணம், லவகுசா, கர்ணன் நாடகம், மன்மதன் கூத்து, அபிமன்யூ சண்டை, மாடுபிடி சண்டை, அல்லி அர்ஜுனா, கீசகன் வதம், சின்ன அர்ஜுனன் சண்டை, இராமன் பாதுகா பட்டாபிஷேகம், மார்க்கண்டேய புராணம், சீதா கல்யாணம், சூர்ப்பனகை மானபங்கம், வாலி வதை, இராவணன் வதம் போன்ற கதைகளும் அரிச்சந்திரன், முருகன், கிருஷ்ணன் ஆகியோரைப்பற்றிய கதைகளும் தெருக்கூத்தாக நடிக்கப்படுகின்றன. வரலாறு அல்லது வரலாறு தொடர்பான புனைகதைகள் தெருக்கூத்தின் உள்ளடக்கமாக அமைந்துள்ளன. வீரபாண்டிய கட்டபொம்மன், வள்ளலார் சரித்திரம், நந்தனார் சரித்திரம், சிறுதொண்டர் சரித்திரம் ஆகியவைகளும் தெருக்கூத்தாக நடத்தப்படுகின்றன. சமுதாயச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் சில தெருக்கூத்துகள் நடத்தப்படுகின்றன. இரண்டு பெண்டாட்டிக்காரன் துயர், மாற்றாந் தாய்க் கொடுமை, மாமியார் கொடுமை போன்றவை தெருக் கூத்தில் இடம்பெறுகின்றன. சில தெருக்கூத்தின் கதைகள் வறுமையைக் காட்டு வதாகவும் நீதி நெறியைக் கூறுவதாகவும் அமைக்கப்படுவதுண்டு. நல்லதங்காள் கதை, சித்திரவள்ளி, பவளக்கொடி, குறவஞ்சி போன்றவை

இந்த அடிப்படையில் நடத்தப்படும் தெருக்கூத்துகளாகும். இவை களைத்தவிர இலக்கியத் தொடர்பான கோவலன் கதையும், கற்பனைக் கதையான காத்தவராயன் கதையும் தெருக்கூத்தின் பாடு பொருள்களாக அமைந்துள்ளன.

கலைஞர்களும் காலமும்

கூத்தாடுகின்ற கலைஞர்களைப் பொதுவாகக் கூத்தாடிகள் என்றே அழைப்பது வழக்கம். 'கூத்தர்' என்ற இனம் இருந்ததாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. தெருக்கூத்துக் கலைஞர்களைக் கீழ்க்கண்ட இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கூத்தாடுவதையே தொழிலாகக் கொண்ட கலைஞர்கள்.

2. அவ்வப்போது கூத்தாடிக் கொண்டு பிறதொழில் செய்யும் கலைஞர்கள்.

தொழில்முறைக் கலைஞர்கள் ஊர்ஊராகச் சென்று அந்த அந்த மக்களின் ஆதரவுபெற்று, தெருக்கூத்து நடத்தி, குறைந்த தொகையை ஊதியமாகப் பெறுவதுண்டு. ஆனால், இன்றைக்கு நவீன திரைப் படங்கள், நவீன நாடகங்கள், நவீன கண்காட்சிகள் போன்ற வற்றின் தாக்கத்தால் தெருக்கூத்திற்கு ஆதரவு குறைந்து வருவதால் இப்போது யாரும் முழுநேரத் தொழில்முறைக் கலைஞர்களாக இருக்க விரும்பு வதில்லை. (நேர்காணல் : தமிழ்நாடன், சேலம், 22.2.2009) வேளாண் பணிபுரியும் உழைக்கும் மக்கள் ஊரில் ஏதேனும் திருவிழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தால் அதற்காகக் கூத்தாடுவதும் உண்டு. தொழில்முறைக் கலைஞர்களைவிட அவ்வப்போது கூத்தாடும் இவர்களிடம் ஊக்கமும் உற்சாகமும் மிகுந்திருப்பதைக் காணலாம் (கட்டுரை ஆசிரியர் நேரில் கண்டது). தெருக்கூத்து நடத்துவதற்கென்று ஒரு குறிப்பிட்ட, வரையறுத்த காலம் இல்லை. எனினும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி போன்ற மாதங்களிலேயே தெருக்கூத்தைப் பெரும் பாலும் நடத்துவர். ஏனென்றால், அக்காலங்களில்தான் அறுவடை போன்ற வேளாண்மைப் பணிகள் முடிவடைந்து கிராமப்புற மக்கள் ஓய்விலிருப்பர். தெருக்கூத்து இரவு சுமார் 10 மணிக்குத் தொடங்கி விடியும்வரை நடைபெறும். தெருக்கூத்து, (அ) கிராமத் தெய்வங்களுக்கு நடத்தப்படும் விழாக்களிலும், (ஆ) மழையை வரவழைக்கவும், (இ) இருதரப்பார் கருத்து வேறுபாட்டால் பிரிந்து மீண்டும் ஒன்று சேரும் போதும் நிகழ்த்தப்படும்.[9]

மேடை அமைப்பும் பார்வையாளர்களும்

தெருக்கூத்து நடத்தப்படும் மேடை மிகவும் எளிமையாகத் தென்னங்கீற்றுகளால் வேயப்பட்டிருக்கும். சில நேரங்களில் தெருக்கூத்து நடைபெறும் மேடையாக வீட்டுத் திண்ணை, களத்து மேடு, மதகுக் கண்மாய் போன்ற இடங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேடையின் இருபுறங்களிலும் மின்சார விளக்கு, அரிக்கன் விளக்கு அல்லது பெட்ரோமாக்ஸ் விளக்கு வைக்கப்பட்டிருக்கும். மேடையின் ஓர் ஓரத்தில் மிருதங்கம், சுதிப்பெட்டி, ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளுடன் கலைஞர்கள் அமர்ந்திருப்பர். மேடையில் பெரும்பாலும் ஒரே ஒரு திரைச்சீலை மட்டுமே பயன்படுத்தப்படும். இப்போது திரைப்படம் மற்றும் நாடகங்களின் பாதிப்பால் பலவண்ணத் திரைச் சீலைகள் பயன்படுத்தப்படுகின்றன (நேர்காணல்: க. கணேசன், ஏற்காடு, சேலம் மாவட்டம் 18.2.2009). தெருக்கூத்துக் கலைஞர்களின் ஒப்பனை மிகவும் எளிமையான முறையில் அமைந்திருக்கும். அவர் களுடைய ஒப்பனையில் அரிதாரம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. அரசர்களும், மந்திரிகளும் மேடையில் தோன்றும்போது திரையை மிகவும் மெதுவாகவும், எமன், அரக்கன் போன்ற கதாபாத்திரங்கள் தோன்றும்போது திரையை மிகவும் வேகமாகவும் இழுப்பது தெருக் கூத்தின் மரபாக அமைந்துள்ளது. சில தெருக்கூத்துகள் பல இரவுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. சில தெருக்கூத்துகள் மாதக்கணக்கில் நடத்தப்படுவதும் உண்டு. மூன்றுநாள் நடிக்கப் படுவதும் உண்டு. மூன்றுநாள் நடிக்கப்படும் அரிச்சந்திரன் கதையில் மயான காண்டத்தை இரண்டாம் நாளே நடித்துவிடுவது வழக்கமாகும். சில தெருக்கூத்துகள் சில ஊர்களில் மட்டுமே நடிக்கப்படுகின்றன. மன்மதன் கூத்து, சிறுதொண்டர் கூத்து, சேலம் மாவட்டத்தில் சில வட்டாரங்களில் மட்டுமே நடிக்கப்படுகின்றன. தெருக்கூத்தைப் பயிற்றுவிப்போர் நாடக வாத்தியார் அல்லது கூத்து வாத்தியார் என்று அழைக்கப்படுகின்றனர்.

தெருக்கூத்தோடு தொடர்புடையவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்த, வறுமை நிலையில் வாழும், வேளாண் பணிபுரியும் உழைக்கும் மக்களே ஆவார்கள். தெருக்கூத்தை இவர்களே பார்வையாளர்களாக இருந்து, உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் சுவைத்து மகிழ்கிறார்கள். தங்கள் வறுமை, வாழ்வியல் துயரங்கள் போன்றவற்றைச் சிறிது நேரம் மறப்பதற்கு இவர்கள் தெருக்கூத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதற்காகத் தெருக்கூத்தோடு நேரடித் தொடர்பில்லாத செய்திகள்கூட தெருக்கூத்தில் இடம் பெறுகின்றன. தெருக்கூத்தில் வருகின்ற கோமாளி அல்லது 'பபூனை' பார்வையாளர்கள்

பெரிதும் வரவேற்கிறார்கள். கோமாளி என்பவன் விடியவிடியக் கூத்துப் பார்க்கும் மக்களுக்குச் சோர்வு ஏற்படாமல் இருப்பதற்காகவும் சிரிக்க வைப்பதற்காகவும் வருகின்றான். இவன் பெரும்பாலும் கதைக்குத் தொடர்பில்லாத செய்திகளைக் கூறித்தான் மக்களைச் சிரிக்க வைக்கின்றான். சில வேலைகளில் இவன் கூறும் வார்த்தைகள் மிகவும் கொச்சையாகவும் ஆபாசமாகவும் இருப்பதுண்டு. தற்காலத் திரைப் படத்தில் வரும் திரையிசைப் பாடல்களைக் கூறி மக்களைச் சிரிக்க வைக்கின்றான். தெருக்கூத்தில் வரும் கோமாளி என்னும் இந்தக் கதாப் பாத்திரத்தைப் பார்வையாளர்கள் மிகவும் விரும்பிச் சுவைத்து மகிழ்கிறார்கள்.

குறிப்புகள்

1. *கலைக்களஞ்சியம், தொகுதி 6, பக். 366, 380*
2. *க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ப. 577*
3. *சு. சண்முகசுந்தரம், 'நாட்டுப்புற இலக்கியத்தில் சேலத்தின் சிறப்பு', 'சேலம் மாவட்டம் சில ஆய்வுகள்', தமிழ்நாடன் (தொ.ஆ.), ப. 153.*
4. *லேனா தமிழ்வாணன் (ப.ஆ.), சேலம் மாவட்டம், ப. 5.*
5. *இரா. இரவிக்குமார், கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி, ப. 56*
6. *வி.வி. சடகோபன், தென்னிந்தியக் கிராமிய நடனங்கள், ப. 50*
7. *ஆறு. இராமநாதன், திறனாய்வுக் கட்டுரைகள், ப. 222.*
8. *சு. பாலசுப்பிரமணியன், தமிழக நாட்டுப்புறக் கலைகள், பக். 31-32*
9. *சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப. 209.*

◆

தமிழ் விரிவுரையாளர்,
அரசுக் கலைக்கல்லூரி,
உடுமலை - 642 126.

9

கொக்கலிக்கட்டை ஆட்டம்

இரெ. இளங்கோவன்

முன்னுரை

மக்கள் வாழ்க்கையிலிருந்து தாமாகவே தோன்றிய நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புற மக்கள் வாழ்க்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளன. நாட்டுப்புற நடனங்கள் ஒரு நாட்டின் பாரம்பரிய மரபு சார்ந்த நடனங்கள் ஆகும். இவை அந்நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தும், அவர்தம் வாழ்க்கை அனுபவங்களி லிருந்தும் தாமே உருவாகின்றனவாம். இவை, அந்நாட்டு மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவர்தம் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றன.

நாட்டுப்புறக் கலைகள் பார்வையாளர்களைத் திருப்திப்படுத்துதல் என்ற நோக்கத்திற்காக மட்டுமன்றி நாட்டுப்புற ஆட்டக் கலைஞர்களின் மனமகிழ்ச்சிக்காவும் ஆடப்படுவனவாக உள்ளன. தொன்மையான வையும் தோற்றம் காண இயலாதவையுமாகிய நாட்டுப்புறக் கலைகள் சந்தப் பாங்கோடு தாமே ததும்பி வழியும் உணர்ச்சிகளின் வெளிப் பாடுகளாகவே உள்ளன. இவற்றின் பின்புலத்திலேயே செவ்வியல் கலைகள் வளர்ந்து தழைக்க வேண்டியுள்ளன. இவ்வாறு நடத்தப்படும் நாட்டுப்புறக் கலைகளில் கொக்கலிக்கட்டை ஆட்டம் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கொக்கலிக்கட்டை ஆட்டம் பற்றி

நீண்ட கால்களையுடைய கொக்கினைப் போன்று நீண்ட மரக்கட்டைகளைக் காலில் கட்டிக்கொண்டு ஆடும் ஆட்டத்தினைக் 'கொக்கலிக்கட்டை ஆட்டம்' என்று சுட்டுகின்றனர். மூன்று, நான்கு கால்களையுடைய இருக்கைகள் முறையே முக்காலி, நாற்காலி என்று சுட்டப்படுவதைப்போன்று கொக்கு கால்களைப்போல உயரமான கால்கள் 'கொக்காலி' என்று சுட்டப்பட்டுப் பின்னர் 'கொக்கலி' என்று வழங்கப்பட்டிருக்கலாம். திரு. கார்மேகன் என்னும் தகவலாளரும் இக்கருத்தையே கூறினார்.

வேலூர், வாலாசாபேட்டை முதலான ஊர்களில் வைகாசி மாதம் அமாவாசையை அடுத்துவரும் செவ்வாய்க்கிழமை கெங்கை யம்மன் கோயிலுக்குக் காப்புக்கட்டி அடுத்த செவ்வாயன்று அதாவது, காப்பு கட்டிய எட்டாம் நாள் திருவிழா நடத்தப்படுகிறது. அத்திரு விழாவில் அம்மனுக்கு நேர்ந்துகொண்ட ஆண்கள் கொக்கலிக்கட்டை ஆட்டத்தில் கலந்து கொள்வர். பெண்கள் இந்த ஆட்டத்தை ஆடுவ தில்லை எனக் கூறப்படுகிறது. ஆனால், ஆப்பிரிக்காவில் இவ்வாட் டத்தை பெண்கள் ஆடுகின்றனர் எனத் தினத்தந்தி பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது (தினத்தந்தி, 3.10.1991, ப. 11). இந்த ஆட்டம் ஆடுவதால் கெட்ட ஆவி தங்களிடம் நெருங்காது என்று அவர்கள் நம்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாதியம்

ஆதிதிராவிடர்கள் இந்த ஆட்டத்தில் ஆட்டக்காரரர்களாகக் கலந்து கொள்வதில்லை. அகமுடைய முதலியார், நாயக்கர் முத்தரையர், மந்திரி (பிள்ளை, கோனார்) வன்னியர் போன்ற சாதியினர் ஆடுகின்றனர். வாலாசாபேட்டையில் வன்னியர்களே மிகுதியாகக் கலந்து கொள்கின்றனர். ஆனால், இப்போது எல்லா இனத்தவரும் கொக்கலிக் கட்டை ஆட்டத்தை ஆடுகின்றனர்.

பயிற்சி முறைகள்

ஆட்டத்தில் கலந்துகொள்ளுமுன் பயிற்சி பெறுகின்றனர். முதிர்ந்த ஆட்டக்காரரர் பயிற்சியளிக்கிறார். வாலாசாபேட்டையைச் சேர்ந்த முப்பதாண்டு ஆடிய அனுபவமுடைய அறுபத்தோரு வயதான சி. கண்ணன் கூற்றுப்படி பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் என்று அறியமுடிந்தது. தைரியமும், உற்சாகமும்

மிக்க ஒருவர் இரவு நேரங்களில், நாளொன்றுக்கு இரண்டு மணி வீதம் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் இந்த ஆட்டத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். இத்தகைய பயிற்சி தவிர இந்த ஆட்டத்தைக் கற்றுத்தரப் பள்ளி எதுவும் கிடையாது.

இந்த ஆட்டத்தின் மிக முக்கியமான பொருள் காலில் கட்டிக் கொண்டு ஆடும் மரக்கட்டைதான். இக்கட்டை இரண்டரை அடி முதல் ஐந்து அடி உயரங்கொண்டதாக இருக்கும் என்று வாலாசா பேட்டையில் கூறப்பட்டது. மூன்று, ஐந்து, ஏழு அடி உயரக் கட்டைகள் பயன்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. கட்டையின் தோற்றம் பொதுவாக அடியில் மெலிந்து மேலே செல்லக் கனமாகிப் பாதம் வைக்குமளவு இருக்கும். பாதம் வைக்குமிடத்திற்கு மேலே சற்று மெலிவாக அரையடி உயரம் நீட்டிக்கொண்டிருக்குமாறு செய்யப் பட்டிருக்கும். காலோடு கட்டையை வைத்துப் பிணைத்துக் கொள்வதற்கு இப்பகுதி உதவுகிறது.

விரதம் இருத்தல்

கொக்கலிக்கட்டை ஆட்டம் ஆடுவோர் அம்மனுக்குக் காப்புக் கட்டியது முதல் ஆட்டம் முடியும்வரை கடுமையாக விரதமிருக் கின்றனர். இரவில் கோயிலிலேயே படுக்கின்றனர். இவ்வாறு விரதம் இருத்தலால் அவர்களின் நம்பிக்கை வெளிப்படுகிறது.

கொக்கலிக்கட்டை ஆட்டத்தில் ஒப்பனை

ஆட்டக்காரர்களுக்கான ஒப்பனை தனித்தன்மை வாய்ந்தது. வாலாசாபேட்டையில் திருவிழா நடப்பதற்கு முதல்நாள் இரவு ஏழு மணிக்கே ஒப்பனை செய்யத் தொடங்குகின்றனர். ஒருவர், மூவருக்கு ஒப்பனை செய்வதற்குள் விடிந்துவிடும். ஒப்பனை செய்யும் நேரம் வேலூர் அருகிலிருக்கும் ரங்காபுரத்தில் மாறுகிறது. இங்கு காலை பதினோரு மணிக்கு ஒப்பனை செய்யத் தொடங்கிச் சுமார் மூன்று மணிநேரம் நடைபெறும் என்று கூறப்படுகிறது. உடலில் பழங்குத்துதல் ஒப்பனையின் இன்றியமையாத அம்சம். மெல்லிய ஊசியில் நூல்கோர்த்து அதனை எலுமிச்சம் பழத்தில் குத்திப் பின்னர் மார்புத் தோலில் கோர்த்து விடுவர். இரு கைகளிலும் பழம் குத்தி ஒப்பனை செய்து கொள்வதும் உண்டு. தோளில் பிளாஸ்டிக் அல்லது பஞ்சால் செய்யப்பட்ட கிளிகளைக் கட்டிக் கொள்வர். பின்பு மார்பில் பெருக்கல் குறிபோல மலர் மாலை போடுவர். பாரம்பரியமாக மஞ்சள் அரைக்கால் சட்டை அணிவர். இப்போது எல்லாவகையான நிறக் கால்சட்டை

களையும் அணிந்து ஆடுகின்றனர். கட்டையில் சலங்கையும் கட்டப் பட்டிருக்கும். கட்டைகளைக் கட்டுமுன் அவற்றைக் கோயில் வாசலில் வைத்து சூடமேற்றி வணங்குவர் என்பதும் ஈண்டு குறிக்கத் தக்கது. இத்தகைய ஒப்பனைகளுடன் ஆட்டம் தொடங்குகின்றது.

கொக்கலிக்கட்டை ஆட்டம் ஆடும் விதம்

இரு கைகளையும் விரித்தால் இடிக்காத அளவு இடைவெளி விட்டு ஆட்டக்காரரர்கள் நின்றுகொள்வர். வீதிகளில் செல்லும்போது இரண்டு இரண்டு பேர் அல்லது மும்மூன்று பேர் கொண்ட வரிசையாக நின்று ஆடுவர். சற்று அகன்ற இடங்களிலும் கோயில் முன்புறமும் வட்டமாக நின்று கொப்பி (கும்மி) கொட்டி ஆடுவர். ஆட்டத்தில் ஒத்தஅடி, ரெட்டடி என்று ஏழு அடிவரை உள்ளதாகக் கூறப் படுகின்றது.

இலக்கியத்தில் சான்று

இந்த ஆட்டத்தின் தொன்மையான வரலாறு பற்றித் தெரிய வில்லை. ஆட்டக்காரரர்கள் தலைமுறை தலைமுறையாக ஆடி வருகிறோம் என்று கூறினர். மாதவி ஆடியதாக இளங்கோவடிகள் சுட்டும் பதினோரு ஆடல்களுள் ஒன்றான 'மரக்காலாடல்' கொக்கலிக்கட்டை ஆட்டத்தோடு பிணைத்துப் பார்க்கத் தக்கதாக உள்ளது. அதேநேரத்தில் பதினோராடல்களில் முதல் ஆறு ஆடல்கள் நின்றாடும் ஆடல்கள் என்றும் ஏனைய ஐந்தும் 'வீழ்ந்தாடல்'கள் என்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார்.

'துடிகடையும் பேடு மரக்காலே பாவை
முடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து'

என்ற பாடலில் துடிக்கூத்து, கடையக்கூத்து, பேடியாடல், மரக்கா லாடல், பாவைக்கூத்து முதலானவை வீழ்ந்தாடல் என்று குறிக்கப் படுகிறது. மரக்காலாடலை வீழ்ந்தாடல் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவதும் தற்போதைய கொக்கலிக்கட்டையாட்டம் நின்றாடும் ஆட்டமாக இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

கொக்கலிக்கட்டை ஆட்டத்தில் வருமானம்

தமிழகத்தைப் பொறுத்தவரை வேலூர், வாலாசாபேட்டை முதலான ஊர்ப்பகுதிகளில் கெங்கையம்மன் கோயில் விழாவில் மட்டுமே ஆடப்பட்டுவந்த இந்த ஆட்டம் கடந்த பத்து ஆண்டுகளில் தன் ஆடுகளத்தை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. அழைப்பின் பேரில்

வெளியூர்க் கோயில் விழாக்களில் சென்று ஆடுகின்றனர். வெளியூர் செல்லும்போது சுமார் பத்துபேர்வரை செல்கின்றனர். பழம், நூல், ஊசி, துணி, போக்குவரத்து, உணவு செலவுகள் தவிர ஒரு நாளைக்கு ரூ.25 முதல் ரூ.100 வரை கூலி பெறுகின்றனர். இதன் வாயிலாகக் கோயிற் சடங்குக்கலை தொழிற்கலையாகவும் மாறிவருவதை உணரமுடிகிறது. சுதந்திர தினம், குடியரசு தினம், அமைச்சர்கள் வரவேற்பு முதலான அரசு விழாக்களிலும் அரசியல் தலைவர்களின் பிறந்தநாள் வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் அழைப்பின் பேரில் ஆடச் செல்கின்றனர். ஆனால், இத்தகைய ஆட்டங்களில் கலந்துகொள்ள இவர்கள் விரதம் ஏதும் இருப்பதில்லை.

பிற மாநிலங்களில் கொக்கலிக்கட்டை ஆட்டம்

மரக்கட்டை மீது ஏறிநின்று ஆடும் ஆட்டம் ஆந்திரம், மத்தியப் பிரதேசம் முதலான மாநிலங்களில் ஆடப்படுவதாகத் தெரிகிறது. ஆடுவோர், ஆடப்படும் நோக்கம், காலம் பற்றி அறியமுடிய வில்லை. கர்நாடகத்தில் இவ்வாட்டம் 'மரக்காலு பீசு கம்சாலே' என்று சொல்லப்படுகிறது. ஆட்டத்தின்போது மாகதேசுவரனைப் பற்றிய பாடல்கள் பாடப்படுகின்றன.

முடிவுரை

நாட்டுப்புறக் கலைகளில் கொக்கலிக்கட்டை ஆட்டம் சிறப் பாகக் காணப்பட்டாலும் சில இனத்துக்கான ஆட்டமாகத் திகழ்ந் துள்ளது என்பதைக் காணமுடிகிறது. இந்நிலையில் போதிய வருமானமோ, வரவேற்போ இல்லாததால் இக்கலை தேயத் தொடங்கியது. ஆனால், இன்றைய நிலையில் இவ்வாட்டத்தின் சிறப்பினை அறிந்து மக்கள் விரும்பிய வகையில் அமைய சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற அரசு விழாக்களில் இக்கலை நிகழ்த்துவதன் மூலம் புத்தொளி பெற்று வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டுள்ளதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 10.

10

தப்பாட்டம்

முனைவர் அ. இரவிச்சந்திரன்

கலையின் தோற்றமும், மனிதனின் தோற்றமும் ஒன்றோடொன்று இணைந்ததேயாகும். இதில் மனிதன் முதன்முதலில் தன்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். இதற்குக் காரணம் உடலுடன் பசி இருப்பதால் மனிதன் தன்னுடைய உணவுத் தேடலைத்தான் துவங்கி இருப்பான். உணவுப் பசி தீர்ந்தவுடன் குழுக்களாக அலைந்து திரிந்த நாடோடி வாழ்க்கையில் இரண்டாம் நிலையாகத்தான் கலைகள் தோன்றியிருக்க வேண்டும். வனாந்தரங்களிலும், சமவெளிகளிலும், மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் நீர்நிலைகளிலும் தன்னுடைய வாழ்க்கையைக் கடந்துவந்த மனிதக் குழுக்கள் இளைப்பாறுதல் நேரங்களிலேயே கலைகளைப் பற்றிச் சிந்திக்கவும், செயல்படுத்தவும் தம்மையும் தம்மைச் சார்ந்த குழுக்களையும் ஈடுபடுத்தியிருப்பான்.

> **“கலைஞர்கள் விதிமுறை அறிவினாலோ**
> **செயல்முறைப் பயிற்சியினாலோ**
> **படைப்புத் தொழிலைச் செய்கின்றனர்.[1]”**

சமுதாயத்தில் மனிதர்களே கலைஞர்களாகவும் காட்சியளிக் கின்றார்கள். கலைஞர்கள் என்ற வரையறைக்குள் வருகின்றபொழுது மனிதர்கள் தங்களுக்கென்று விதிமுறைகளை அமைத்துக் கொள்கின் றனர். இந்த விதிமுறைகள் ஒரே தன்மையாக, மாறுபாடு இல்லாமல்,

ஒரு கலையில் பங்கெடுத்துக் கொள்ளும் கலைஞர்கள் அனைவரும் ஒரே நேர்க்கோட்டில் தங்களுடைய கலைகளை மற்ற பார்வையாளர் களுக்குக் கருவிகளையும் வாசித்துக் காட்டுகின்றார்கள்.

வரையறுக்கப்பட்ட விதியானது கலைஞர்களுக்குள்ளே சிந்தனையிலிருந்து தோன்றிய பிறகு செய்முறையில் கொண்டுவந்து தங்களது படைப்புத் தொழிலைச் செய்கின்றனர் என்பது இங்கு ஆராயப்பட்டுள்ளது.

உலகத் தோற்றத்தின் வளர்ச்சி நிலைகளில் மனிதக் குழுக் களி டையே கலைகள் தோன்றுவதற்கும் அந்தக் கலைகளுக்குள் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவதற்கும் அடித்தளமாக அமையும் காரணி பொரு ளாதாரம். இந்தியாவின் இனக்குழுக்கள் ஆதிதிராவிடர், பழங்குடி யினர்கள் ஆகிய இருபிரிவினர்களும் அனைத்து இனக்குழுக்களிட மிருந்து ஒதுக்கப்பட்ட மக்களாக, புறந்தள்ளப்பட்ட மக்களாக வாழ் கிறார்கள். ஆனால், உயர்ந்த சாதியினரைத் தாழ்த்தப் பட்டவர்கள் உயர்வாகக் கருதுகின்றார்கள். பொருளாதாரத்தில் வறுமையில் அகப் பட்டுக் கொண்டவர்கள் அவர்களுடைய நிதியின் அளவுகோலுக்கு ஏற்ப அவர்கள் தங்களுக்கென்று இசைக் கருவிகளை வடிவமைத்துக் கொண்டு அதனைப் பயன்படுத்தவும் முயற்சி செய்து வெற்றி கொண்டனர். அதேசமயம் அந்தக் கருவிகளையும் அதிலிருந்து தோன்றும் இசைகளை யும் வடிவமைப்பதற்குப் பொருளாதார நீரோட்டம் தேவைப்படுகிறது.

உயர்சாதியினர் கல்வி கற்றலில் மேல்நோக்கி வருகிறார்கள். கற்றலின் விளைவாக அவர்கள் கீர்த்தனைகள் பாடுகின்றனர். கற்றலுக்கு உரிய பொருளாதாரம் அவர்களிடம் இருந்திருக்கின்றது. கீர்த்தனை களுக்கு ஒத்திசையாகப் பல கருவிகளைப் பயன்படுத்துகின்றார்கள். கல்வியும் இசைக்கருவிகளைப் பயன்படுத்தவும் பொருளாதாரம் வழி வகுக்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்குப் பொருளாதார நீரோட்டம் இல்லாததால் அவர்கள் மிக எளிய முறையில் வடிவமைக்கக்கூடிய பொருளாதார செலவற்ற தப்பு என்ற கருவியைப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாயினர்.

வளர்ச்சியடைந்த சமூகத்தினரின் இல்லத்தின் இறந்த ஆட்டினைத் தூக்கிக்கொண்டுவந்து அதன் இறைச்சியினை உண்டு அதன் தோல் மூலம் தப்பு செய்து மூங்கில் பிளாச்சிகளைப் பொருளா தாரச் செலவின்றி எளிய முறையில் உடைத்துத் தப்பு வாசிக்கும் முறையினைக் கையாண்டனர். தப்பாட்டம் மனித இனக் குழுவுக்குள் ஒரு குறியீடாக உள்ளது. பள்ளர், பறையர், சக்கிலியர் போன்ற புறந்தள்ளப்பட்ட மக்கள்தான் இந்த இசைகருவிகளைப் பயன்படுத்து

கிறார்கள். இதனைப் பறையடித்தல், பறை கொட்டுதல், பறை மேளம் கொட்டுதல் என்றும் சொல்லப்படுகிறது.

பலா மரத்தால் தப்பு என்ற வட்ட வடிவமான இசைக்கருவி தயாரிக்கப்படுகிறது. ஆட்டுத்தோலை வட்டமான பலா பலகையின் மேல் வைத்து இழுத்து ஆணி அடித்துவிடுவார்கள். சாம்பலைத் தோலின் மீது தூவி ஆட்டின் முடிகளை நீக்கிவிடுவார்கள். கொட்டாங்குச்சி வைத்துத் தேய்ப்பார்கள். பிறகு, புளியங்கொட்டையை அரைத்துத் தீயிட்டுக் காய்ச்சி, இதனை பலா மரத்தில் பூசி தோலை இழுத்து ஒட்டவேண்டும். இப்படித் தப்பு இசைக் கருவிகளைத் தயாரிக்கின்றார்கள்.[2]

மனிதனும் சடங்குகளும் என்று ஆராய்கின்றபொழுது மண்ணில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து மரணம் அடையும்வரை பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வகையான சடங்குகளைக் கையாளுகின்றான். இதில் பெண் கர்ப்பம் தரித்து ஏழெட்டு மாதங்கள் ஆனபிறகு மணமகன் வீட்டில் வளைகாப்பு என்ற நிகழ்ச்சியைச் செய்கின்றார்கள். தாய்மாமன் மடியில் அமரவைத்து குழந்தைகளுக்குக் காதணி விழா நடத்துகின்றார்கள். பூப்பு நீராட்டுவிழா எடுக்கின்றார்கள். திருமணம் மற்றும் மரணம் போன்ற சடங்குகள் நிகழும்போது தப்பு வாசிக்கின்றார்கள். இப்படி மனித வாழ்வியலின் அனைத்து நிலைகளிலும் இந்த இசைக்கருவி கையாளப்படுகிறது. அதுவும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடம் மட்டுமே ஆகும்.

இதுமட்டுமல்லாமல் இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டின் மக்களிடம் தகவல்களை எடுத்துச் சொல்வதற்கு ஒரு ஊடகமாகக் கையாளப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. மணவாளன், அரிஸ்ட்டாட்டிலின் கவிதையியல், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98.
2. இரத்தின புகழேந்தி - தப்படித்தல் ஒரு நாட்டுப்புறக் கலை வடிவம், தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழக ஆறாவது மாநாடு.

◆

விரிவுரையாளர்
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 10

11

கும்மிப்பாடல்கள் வழி அறியலாகும் வாழ்வியல் விழுமியங்கள்

முனைவர் இரா. இரவிச்சந்திரன்

முன்னுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடி நாட்டுப்புறப் பாடல்கள் என்றே குறிப்பிடலாம். நாட்டுப்புறப் பாடலைப் பாடுவதோடு மட்டுமல்லாமல் பாடலோடு சேர்ந்து ஆட்டமும் ஆடக்கூடிய தனிச்சிறப்பு கும்மிப் பாடலுக்கே உண்டு. அத்தகைய கும்மிப் பாடல்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் வட்டத்திற்குள் அமைந்த ஆலத்துடையான்பட்டி கிராமத்தில் ஆண்டுதோறும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இக்கிராமம் துறையூரி லிருந்து புளியஞ்சோலைக்குச் செல்லும் வழியில் சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரில் நிகழ்த்தப்படுகின்ற கும்மிப் பாடல்களின் வாயிலாக நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சிந்தனைகள் வெளிப்படுகின்றன என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையின் வழி கும்மிப்பாடல்கள் பற்றியும், அவற்றின் வழி வெளிப்படுகின்ற வாழ்வியல் விழுமியங்கள் பற்றியும் காண்போம்.

கும்மிப்பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல் வகைகளில் ஒன்று கும்மிப்பாடல். இது 'குமுமி' என்ற சொல்லிலிருந்து உருவாகியிருக்க வேண்டும் என்றும்,

'கும்மாளம் என்ற சொல்லுக்குக் குதித்தாடுதல் என்று பெயர்; கும்மாள மிட்டு ஆடுவதைக் கும்மி என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்' என்றும், 'கும்முதல் என்ற சொல்லிற்குக் கைகொட்டுதல் என்று பொருள்; கைகளைக் கொட்டி ஆடுவதைக் கும்மி என்று குறிப்பிட்டி ருக்க வேண டும்' என்றும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றனர். இருப்பினும், மக்கள் எல்லோரும் குழுமி அல்லது ஒன்று கூடி வட்டமாக நின்று கைகளை மேலும் கீழுமாகத் தட்டிப் பாடலைப் பாடிக்கொண்டே நகர்வதைக் 'கும்மி' என்று குறிப்பிடுகிறோம். பாடலைத் துவங்கும் போது,

"தன்னன்னே நாதினும் தன்னன்னே நாதினும்
தன்னன்னே நாதினும் தன்னானே"

என்ற அசையோடு துவங்கி முதலில் இறைவணக்கம் செய்கின்றனர். எவ்வாறெனில்,

"முந்துவி முந்துவி நாயகரே – போற்றி
முப்பத்து முக்கோடி தேவர்களே
கந்தனுக்காகவே முன்பிறந்தாகவே –போற்றி
கட்சிகணபதி முன்னடவாய் – அங்கே
வேலவர்காகவே முன்பிறந்தாகவே
நாயகரே அங்கே முன்னடவாய்"

என்று பாடப்படுகிறது. எந்த ஒரு நிகழ்வுக்கும் இறைவனை வழிபட்டால் இறைவன் நமக்கு எல்லா வகையிலும் துணையாக நிற்பார் என்ற நம்பிக்கையை இந்த ஊர் மக்களிடையே காணமுடிகிறது. அந்த அடிப்படையிலேயே கும்மிப்பாடலைத் துவங்கும்போதும் முதல் பாடலாக விநாயகரை வழிபடுவதைக் களஆய்வில் கண்டறிய முடிந்தது. குறிப்பிட்ட விழாக்காலங்களில் மட்டுமே கும்மி அடிக்கின்றனர். குறிப்பாக, சித்திரை மாதத் திருவிழா, கார்த்திகை தீபம், மாவிளக்கு பூஜை போன்ற விழாக்காலங்களில் கும்மியடிக்கப்பட்டாலும் இந்த ஆய்வுக்கட்டுரை கார்த்திகை தீபமன்று சேகரிக்கப்பட்ட கும்மிப்பாடல் களைக் கொண்டு அமைகிறது.

கார்த்திகை தீபவிழா

கார்த்திகை தீபத் தினத்தன்று காலையில் மாரியம்மன் கோவில் நன்னீரால் தூய்மைப்படுத்தப்பட்டு பூசை நடைபெறுகிறது. பத்துமணிக்குமேல் கோவில் முக்கியஸ்தர்களால் பச்சைப் பனைமட்டை வெட்டி வந்து மாரியம்மன் கோவிலின் முன்பு கூம்பு வடிவ கோபுரம்

அமைக்கப்படுகிறது. மாலை ஐந்து மணியளவில் பச்சைப் பனைமட்டை யால் அமைக்கப்பட்ட கோபுரத்தின் உள்ளே சிட்டிகையால் ஆன தீபம் ஏற்றப்படுகிறது. இரவு ஏழு மணிக்கு அவ்வூர் மக்கள் கோவிலின் முன்பு கூடுகின்றனர். மக்கள் கோவிலுக்கு வரும்போது சோளம் அல்லது கம்மந்தட்டையால் ஆன சூந்து (சோளம் அல்லது கம்மந்தட்டையால் கட்டப்பட்ட நீண்ட வடிவத்திற்கு பெயர் சூந்து) கையிலே எடுத்து வருகின்றனர். மாரியம்மன் கோவில் பூசாரி பச்சை மட்டையால் கட்டப்பட்ட கோபுரத்தை முழுமையாகப் பற்றவைக்கிறார். தீ பற்றி எரியும்போது மக்கள் தாம் கொண்டு வந்த சூந்தினை அந்தத் தீயின்மீது போடுகின்றனர். தீ பற்றி எரிகிறது. எரிகின்ற தீயின்மீது உப்பை வீசு கின்றனர். அது 'சடசட' என்ற சப்தத்தோடு எரிகிறது. இவ்வாறு கார்த் திகை தீபத் தினத்தன்று நிகழ்த்தப்படுகின்ற அந்நிகழ்வைச் 'சுடலை' என்ற பெயரால் அழைக்கின்றனர் ஆலத்துடையான்பட்டி கிராம மக்கள்.

தீபம் எரிந்து அணையப்போகின்ற நேரத்தில் நீண்ட நெடிய தடியை வைத்து கிளறி விடுகின்றனர். அதனுள்ளே இருக்கின்ற பனை மட்டையை எடுக்கின்றனர். அந்த மட்டையை எடுத்து தோட்டத்தின் நடுவே நட்டுவைத்தால் எந்த விதமான சீக்கும் இல்லாமல் பயிர் நல்ல விளைச்சலைத் தரும் என்று அவ்வூர் மக்கள் நம்புகின்றனர். மேலும் தீபம் எரிந்து அணைந்த நிலையில் இருக்கின்ற சாம்பலை எடுத்து நெற்றியில் பூசிக்கொள்கின்றனர்.

தீபத்தைச்சுற்றி இதுபோன்று நம்பிக்கைக்குரிய செயல்கள் நடைபெற்றாலும் தீபத்தின் வலப்பக்கமும் இடப்பக்கமும் ஆண்கள், பெண்கள் தனித்தனியே வட்டமாக நின்று கும்மியடிக்கின்றனர். இறைவணக்கத்தோடு தொடங்கப்பட்ட கும்மிப்பாடல் வாழ்வோடு தொடர்புடைய சிந்தனைகளையும் எடுத்துக் கூறுகிறது. உதாரணமாக,

''நல்லவரம் தர வல்லவராம் - அவர
நாடியே கும்மி அடியுங்கய்யா - அங்கே
ஒற்றுமையாகவே எல்லோரும் கூடியே
நித்தமும் கும்மிய அடியுங்கய்யா''

என்ற கும்மிப்பாடல் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை யாக எல்லோரும் கூடினால் கோடி நன்மை கிடைக்கும் என்ற உண்மையை உணர்த்துகிறது. மேலும், நல்ல வரம் தரக்கூடிய இறைவனை நாடி வழிபட வேண்டும் என்பதையும் கூறுகிறது. தீபத்தைக் கண்டுகளித்த மக்கள் கும்மி ஆட்டத்தைக் கண்டு மகிழ்கின்றனர் என்பதே இதன் சிறப்பாகும்.

கும்மிப்பாடல்களின் பொருண்மையாக வள்ளி கும்மி அடிக்கப் படுகிறது. தினை விதைத்து, வளர்த்து, அதனை காவல் காத்து அறுவடை செய்து தேனுடன் கலந்து உண்ணும் நிகழ்வுவரை கும்மிப்பாட்டில் பாடப்படுகிறது. 'அல்லி நல்லி கிழங்கெடுத்து' என்ற அடியின் மூலம் துவங்கப்படுகின்ற இந்தப்பாடல்,

கொல்லி மல தேனெடுத்து – வள்ளி
கொழிச்ச மாவ பிடிச்செடுத்தா – அடி
பச்சமல தேனெடுத்து – வள்ளி
பிசந்த மாவ பிடிச்செடுத்தா
ஆண்டிக்குத்தான் ரெண்டுருண்ட – வள்ளி
அண்ணனுக்கு மூணுருண்ட – அடி
திங்க திங்க தெவட்டுதடி – வள்ளி
தின்ன கொஞ்சம் தாடி வள்ளி''

என்ற அடிகளோடு முடிவடைகிறது இந்த கும்மிப்பாடல். இதன் மூலம் குறிஞ்சி நில மக்கள் தேனும் தினைமாவும் உணவாக உட்கொள் கின்றனர் என்பதையும், அதை அனைவரும் பங்கிட்டு உண்ணும்போது மனதிற்கும் நிறைவு தருகின்றது என்பதையும் உணர்த்துகிறது. இதன்வழி ''பங்கித் தின்றால் பசி ஆறும்'' என்ற வாழ்வியல் உண்மை வெளிப்படுகிறது.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடைபெற்ற நிகழ்வுகள் கூட கும்மிப்பாடலில் பாடப்படுகிறது.

தன்னே நன்னே நானே நன்னா – அர்ச்சுனராஜன்
நானே நன்னே நானே நன்னா – அந்த

குந்தி அம்மா தேவி பெற்ற – அர்ச்சுனராஜன்
குல மணிகள் ஐவருண்டு – அங்கே

பாண்டு மகாராஜன் பெற்ற – அர்ச்சுனராஜன்
பஞ்சவர்கள் ஐவருண்டு – அவர்கள்

போகும் அந்த வழிதனிலே – திடியோதிரன்
பொய் குழியை வெட்டி வைத்தான் – அவர்கள்

நடக்கும் அந்த வழிதனிலே – திடியோதிரன்
நச்சு முள்ளை நாட்டி வைத்தான் – அவர்கள்

குளிக்கும் அந்த குளந்தனிலே – திடியோதிரன்
குருசியை நாட்டி வைத்தான் – அவர்கள்

அதுக்கும் தப்பி பிழைத்தாரய்யா - அர்ச்சுனராஜன்
ஆதிராமர் கிருபையாலே - அவர்கள்

உண்ணும் அந்த சாதத்திலே - திடியோதிரன்
ஒருகோடி நஞ்சை வைத்தான் - அவர்கள்

அதுக்கும் தப்பி பிழைத்தாரய்யா - அர்ச்சுனராஜன்
ஐவர் பஞ்ச பாண்டவர்கள் - அவர்கள்

அரக்கினாலே கோட்டை கட்டி - திடியோதிரன்
ஐவரையும் போட்டடைத்து - திடியோதிரன்
அக்கினியை மூட்டிவைத்தான் - அவர்கள்
அதுக்கும் தப்பி பிழைத்தாரய்யா - அர்ச்சுனராஜன்
ஆதிராமர் கிருபையாலே

தன்னே நன்னே நானே நன்னா - அர்ச்சுனராஜன்
நானே நன்னே நானே நன்னா.

இந்தக் கும்மிப்பாடலின் வழியாகக் கௌரவர்கள் பாண்டவர்களுக்குச் செய்த தீய விளைவுகளும் இறைவனது கிருபையால் பாண்டவர்கள் உயிர்ப் பிழைத்ததையும் சுட்டிக்காட்டுகிறது. இது போன்ற கருப்பொருள்களை அடிப்படையாகக்கொண்டு கார்த்திகை தீபத் தினத்தன்று கும்மி ஆண்டு தோறும் அடிக்கப்பட்டு வருகிறது.

தொகுப்புரை

'சுடலை' என்று சுட்டப்படுகின்ற கார்த்திகை தீபத்தன்று ஆலத்துடையான்பட்டி மக்களிடம் வெளிப்படுகின்ற வாழ்வியல் சிந்தனைகளைக் கும்மிப்பாடல்கள் வழி அறிய முடிந்தது. ஒற்றுமையுடன் கூடிமகிழ்வதும், பிறருக்குப் பகிர்ந்துண்ணும் எண்ணமும், பிறருக்குத் தீங்கு செய்தால் கேடு நம்மை வந்தடையும் என்பன போன்ற பல வாழ்வியல் விழுமியங்களைக் கும்மிப்பாடல்கள் வழி அறியமுடிகிறது.

◆

முதுநிலை விரிவுரையாளர்,
தமிழாய்வுத் துறை,
தேசியக்கல்லூரி,
திருச்சி - 620 001.

12

கும்மி ஆட்டம் - ஒரு பார்வை

டாக்டர் இ.ஆர்.இரவிச்சந்திரன்

முகவுரை

மனிதனிடத்தில் இயல்பாகத் தோன்றுகிற உணர்ச்சி கலையுணர்ச்சி. அதனை ஒழுங்குபடுத்தியும், அழகுபடுத்தியும் ஆதரிப்பது மனித இயல்பு. இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கொண்ட மனிதன் இயல்பான கலையுணர்வில் மூழ்கித் திளைப்பது இயற்கை. அந்த வகையில்தான் கலைகளின் பிறப்பிடமாக, கலப்படமில்லாத கலைகளின் இருப்பிடமாக நாட்டுப்புறக் கலைகள் திகழ்கின்றன. பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் தூக்கிப் பிடித்துப் பாதுகாத்து வருபவை நாட்டுப்புறக் கலைகளே. இதில் கரகாட்டம், காவடியாட்டம் என்று ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. இவை அனைத்தும் தனித்தனிச் சிறப்புடையவை. அவற்றில் ஒன்றான கும்மியாட்டம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

கலை - விளக்கம்

மனிதனுடைய செயல்பாடுகள் ஒவ்வொன்றும் ஒருவிதக் கலைதான். கலைகளின் வாயிலாக மகிழ்வையும், விழிப்புணர்வையும், விஞ்ஞானத்தையும் தர முடியும். அத்தகைய பெருமைக்குரிய கலையைப் பற்றி லியோடால்ஸ்டாய் பின்வருமாறு விளக்குகிறார். அதாவது,

"ஒருவன் முன்பு அனுபவித்த ஒரு உணர்வை
தன்னுள்ளத்தில் மீண்டும் எழுப்பி அதனை

அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், ஒலிகள்
அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வைப்
பிறரும் உணரும்படிச் செய்ய வேண்டும். இதுவே
கலையின் செயலாகும்"[1]

(டி.சி.ராமசாமி மொ.பெ, கலையும் வாழ்வும், ப.62)

என்று மிக அழகாக அறிவுறுத்துகிறார். இதனை நுணுகிப் பார்க்கின்றபோது, ஒரு கலைஞன் தன்னை, தன்னுடைய உணர்வை, உணர்வு சார்ந்த கலையை கண்டறிந்தால் மட்டுமே அவன் தன்னுடைய உணர்விற்கு வடிவம் கொடுத்து வெளிப்படுத்த இயலும் என்பது புலனாகிறது. மேலும், கலை என்பது ஒவ்வொரு மனிதனிடத்திலும் பொதிந்து கிடக்கிறது. கலையுணர்வில்லாத மனிதனே இல்லை. இதனை உணர்ந்த லியோடால்ஸ்டாய்

"கலை மனிதனுடைய செயல்களில் ஒன்றாகும்.
ஒருவன் தான் அனுபவித்த உணர்ச்சிகளைச் சில
வெளிக்குறிப்புகள் மூலம் பிறருக்கு வெளியிட்டு
அவர்களிடம் இந்த உணர்ச்சிகள் பரவி அவர்களும்
அவனைப்போல் அனுபவித்தால் அது கலையாகும்"[2]

(டி.சி.ராமசாமி மொ.பெ, கலையும் வாழ்வும் ப.63)

என்று கலையின் சிறப்பைப் புலப்படுத்துகிறார்.

கும்மி

கலைகளின் வாழ்விடமாக வலம்வருகிற மனிதன் மகிழ்வின் உச்சத்திற்குப் போகிறபோது கை தட்டி ஆரவாரம் செய்து மகிழ்ந்து போவதுண்டு. அவனுடைய மகிழ்ச்சிக்கு அடிப்படையாய் அமைவது அவனின் கலையுணர்ச்சி என்றால் மிகையில்லை. மழைமுகம் கண்ட பயிர், செடி, கொடிகள் மகிழ்ச்சியில் அசைந்தாடி காற்றொலி எழுப்ப முயற்சிப்பதைப்போல், தாய்முகம் கண்ட மழலை கைக்கொட்டி (சப்பாணி பருவத்தில்) மகிழ்வதைக் காண முடியும். கை கொட்டி மகிழ்வது மழலைப் பருவத்திலிருந்து தொன்றுதொட்டு வருவது. அதன் வளர்ந்த நிலைதான் இன்றைக்குக் கிராமியக் கலைகளில் ஒன்றான கும்மி ஆகும். இது "கைகளைக் கொட்டுவதிலே ஓர் ஒழுங்கு முறையை உருவாக்கி இசைத்தன்மையை மேலேற்றி, பெண்கள் வட்டமாக நின்று அவ்வொலிக்கேற்பப் பாடும் பாடலே கும்மியாகும்"[3] (நசீர் அலி. மீ.அ. நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.91) என்று நாட்டுப்புறக் கலை விற்பன்னர்களால் வரையறுக்கப்படுகிறது. இத்தகைய கும்மிக்கு தமிழக ஆடற்கலையில் ஒரு முக்கிய இடம் உண்டு. தமிழகத்தில் ஆண்கள், பெண்கள் என இருபாலரும் கும்மியாடினாலும் பெண்களின் கும்மிக்கே

மிகுந்த சிறப்பும் உயர்ந்த இடமும் கொடுக்கப்படுகிறது. ஏனெனில், ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மென்மையாக இருப்பதோடு, அவர்களின் அபிநயமும், ஒய்யாரமும், குரல் இனிமையுமே பெண்களின் கும்மிக்குப் பெருமை சேர்க்கின்றன. இந்நிலையில் "பெண்கள் ஒழுங்குபட வளைந்து நின்று குத்துவிளக்கு அல்லது தெய்வத்தின் முன்னால் பாட்டுப்பாடி கைகளைத் தட்டுவதே கும்மியாகும்"[4] (கிராமியப் பாடல்கள், கள ஆய்வு, ப.68) என்கிற குறிப்பும் மேற் சொன்ன கருத்திற்கு வலிமை சேர்க்கிறது. பெண்கள் கும்மியடிக்கிற போது எழு கின்ற கர ஒலியும், வளையல் சத்தமும், குரல் இனிமையும் கேட்போரின் காதுகளுக்குத் தேனாறு பாய்வது போன்றதொரு உணர்வை ஏற்படுத் தும். அதனால்தான், இன்றளவும் தமிழகக் கிராமங்களில் மாரியம்மன், முத்தாலம்மன், அய்யாளம்மன், பகவதி அம்மன் போன்ற பெண் தெய்வங் களுக்குக் கொடைவிழா எடுத்துப் பத்து நாட்கள் பெண்களால் கும்மிப் பாடல் பாடப்படுகின்றன. அது மட்டுமின்றி பொங்கல் திருநாள், மழை வேண்டல், மாவிளக்கேற்றல், பிற சடங்குகள் போன்ற விழாக் காலங் களில் நிலாக்காலக் கோடையைப் பெண்கள் கும்மியடித்துப் பாட்டுப் பாடி இனிதாகக் கழிப்பது வழக்கம். அத்தகைய பாடல்களில் பெண் களின் மகிழ்ச்சியும் ஆரவாரமும் அழகுற வெளிப்படும். எவ்வாறெனில்,

'கும்மியடிக்கவே வாருங்கடி நல்ல
கோதையர் ஒன்றாகச் சேருங்கடி"[5]

(சிறுத் தொண்ட நாயனார் சாத்திரக் கும்மி, பா.6)

என்று பாடுவதில் எல்லோரையும் கூவி அழைத்து, ஒருங் கிணைத்துப் பாடி மகிழ்வது புலனாகிறது. மேலும்,

"கும்மியடிப் பெண்ணே கும்மியடி மிகு
கோலாகலமாகக் கும்மியடி"[6]

(பாதிரிகள் வாயாப்புக் கும்மி, பா.3)

என்கிற வரிகளில் பெண்களின் ஆரவாரமும், அளவற்ற மகிழ்ச்சியும் தென்படுவதை உணர முடியும்.

கும்மிப்பாடல்களை முதலில் அக்குழுவின் தலைவி பாடுவாள். அவளைப் பின்பற்றி மற்ற பெண்கள் பாடுவர்; அனைவரும் சேர்ந்து பாடுவதும் உண்டு; எதிர்ப்பாட்டு பாடுவதும் உண்டு. இக்கும்மியில் மங்கலப் பெண்களே கலந்துகொண்டு பாடி மகிழ்வர் என்பது தனிச்சிறப்பு. இதனை,

"குங்குமம் பொட்டுகள் தானணிந்து வண்ணக்
கூட்டங்கள் போலவே சேர்ந்து கொண்டு

மங்கலப் பெண்களெல்லாம் அபிசேக
மண்டபம் முன் வந்து சேருங்கடி"[7]

(மருதப் பாண்டியன் கும்மி, பா.7)

என்கிற பாடல் வரிகள் கும்மியின் சிறப்பை மிக அழகாக எடுத்துரைப்பதை உணர முடியும்.

கும்மி ஆடிப்பாடும் முறை

கும்மிக்குழுவின் தலைவி பாடலைப் பாட மற்ற பெண்கள் சேர்ந்து பாடுவர். இச்செய்தியை,

"கும்மியடி பெண்ணே கும்மியடி
குனிந்து கும்மி யடியுங்கடி
நம்மையாளும் கொங்கை முத்தாலம்மனை
நாடிக் கும்மி அடியுங்கடி – புகழ்த்
தேடிக்கும்மி அடியுங்கடி"[8]

(பெரியண்ணன்.கோ, கிராமியப் பாடல்கள், ப.69)

என்று கும்மி பாடும் முறையை அழகுற எடுத்துரைக்கிறது இப்பாடல். இப்படி ஒருசில வரைமுறைகளை வகுத்துக்கொண்டு அழகாகவும், ஒழுங்காகவும், மகிழ்ச்சியுடனும் ஆடிப்பாடி மகிழ்வர். இது உடலியல் ரீதியாக மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தருகிறது என்றால் மிகையில்லை. நாட்டுப்புறச் சடங்குகள், நிகழ்வுகள் எதுவானாலும் காரண காரியமின்றி எதுவும் இருக்காது. தெரிந்தோ தெரியாமலோ அதில் சில நன்மைகள் உள்ளடங்கி இருக்கும்.

சமய நல்லிணக்கத்தில் கும்மி

கிராமப்புறங்களில் சாதி, மதம், இனம், மொழி என்கிற வேறுபாடுகள் இருந்தாலும் திருவிழாக் காலங்களில் இந்துக்கள் கிறிஸ்துவர்கள் இருக்கும் இடத்திற்கும், கிறிஸ்துவர்கள் இந்துக்கள் இடத்துக்கும் சென்று கும்மியடித்து ஆடிப்பாடி மகிழ்வது இன்றும் நடைமுறையில் உள்ள ஒரு செய்தியாகும். கும்மி எளிமையான கலையாக இருந்தாலும் சாதி, சமய பேதங்களைக் களைந்து மக்களிடையே ஒருமைப்பாட்டுடனான சமத்துவச் சிந்தனையை ஏற்படுத்துகின்ற ஒரு சிறந்த கலையாகும். அதுமட்டுமின்றி சமூகக் கருத்துகளை எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வல்லமை படைத்ததாகவும் இருக்கிறது. அத்துடன் தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப சுவையான இயல்புகளுடன் திகழ்கிறது. மக்கள் தங்களைக் கவர்ந்த நிகழ்ச்சிகளைத் தங்கள் கற்பனைத் திறத்தால் கும்மிப்பாடலாகப் பாடி ஆடி மகிழ்ந்துள்ளனர்.

ஒயில்கும்மி (அல்லது) ஒயிலாட்டம்

கும்மி என்றாலே அது பெண்களுக்கானது என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால், ஒயில்கும்மி சிறிது வித்தியாசப்படுவதோடு இது முழுக்க ஆண்களாலேயே ஆடப்படுகிறது. ஆண்கள் தலையில் முண்டாசும், கழுத்தில் மலர் மாலையும், காலில் சலங்கையும் கையில் கைக்குட்டையும் வைத்துக்கொண்டு ஆடும் ஆட்டம் ஒயில்கும்மி.

ஆண்கள், இந்த ஒயில்கும்மியை ஒரே வரிசையில் ஆடுவதும் உண்டு. குதித்து ஆடுவதும் உண்டு. ஒயில்கும்மியில் பதின்மூன்று அடிப்படை ஆட்டங்கள் உண்டு என்கின்றனர். ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஆடும்முறை வேறுபடும், இதனை

"சிறகை விரித்தால் மயிலாட்டம்
சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம்
சீறிப் பாய்ந்தால் புலியாட்டம்
திரையில் மறைந்தால் நிழலாட்டம்"[9]

(சுப்ரமணி. வீரியப்பட்டி)

என்று ஒயில்கும்மியின் சிறப்பைச் சொல்கிறது இப்பாடல் வரிகள்.

இதனைக் கண்ணுறுகையில் கும்மியாட்டம் பெண்களுக்கு மட்டு மல்ல ஆண்களுக்கும் உரியதுதான் என்பதை அறியமுடிகிறது. அத்துடன் கலைக்கு ஆண் பெண் பேதமில்லை என்பதையும் உணரமுடிகிறது.

நிறைவுரை

நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான கும்மி எதுகை மோனை யுடனும், சந்த நயத்துடனும் மக்கள் வாயிலாக உலாவந்து, இன்று எழுத்து வடிவம் பெற்று இலக்கியமாக உயர்ந்து வருகிறது. இத்தகைய கும்மி நிகழ்காலத்திற்கு மட்டுமின்றி எதிர்காலத்திற்கும் மகிழ்ச்சியைத் தரும் கலையாகத் திகழும். மனித மனங்களில் நல்ல சிந்தனைகளை நிலைநிறுத்தும் என நம்பலாம்.

துணை நூற்பட்டியல்

டி.சி.ராமசாமி : கலையும் வாழ்வும், இந்திர பதிப்பகம், C2. 198 டவுன்ஷிப், திருச்சி-620014 முதற்பதிப்பு-செப். 1995.

நசீர் அலி.மு.அ.மீ : நாட்டுப்புறப் பண்பாட்டியல் இக்ரஹ் பப்ளி கேஷன்ஸ் 636இ பராங்குசம் தெரு, கே.கே.நகர், திருச்சி-21, 1987.

◆

இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
உருமு தனலெட்சுமி கல்லூரி,
திருச்சி-620 019.

13

மயானக்கொள்ளை - ஓர் ஆய்வு

ஆ.இராஜாராமன்

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். சமுதாய மாற்றத்தால் புதிய புதிய திருவிழாக்களும் தோன்றுகின்றன. இவ்விழாக்கள் மூலம் கலையும் கலையனுபவமும் மேலோங்கி வளர்கின்றன. கலைகளின் வளாச்சிக்கே திருவிழாதான் மூலகாரணமெனின் மிகையாகாது. திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் பின்னிப் பிணைந்துள்ளன. கோயில் என்றாலே திருவிழா, திருவிழா என்றாலே கோயில் விழாக்கள். சமயத்தின் கூறாக மட்டுமின்றிக் கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்கின்றன. திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப் பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன.

நாட்டுப்புறப் பெண்தெய்வங்களில் ஒன்றாக அங்காளம்மன் விளங்குகிறது. மயானக்கொள்ளை விழா அங்காளபரமேஸ்வரிக்கு நடைபெறும் விழாவாகும். புதுவைப் பகுதிகளிலும் தமிழகப் பகுதிகளிலும் இவ்விழாவினை மாசி மாதம் காணலாம். சில கோயில்களில் மூன்று நாட்கள் விழாவாகவும் சில இடங்களில் ஐந்து, ஏழு, பத்து, பதினொன்று என்ற நாட்கணக்கில் வைத்தும் விழாவை மக்கள் மிக விமரிசையாகக் கொண்டாடுவர். புதுவைப் பகுதியில் உள்ள பூரணாங்குப்பத்திலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் ஆய்வாளர் கடந்த

ஆண்டு பிப்ரவரி மாதம் களப்பணி மூலம் தரவுகளைச் சேகரித்தார். அவைகளில் பூரணாங்குப்பம் என்ற ஓர் ஊரைக் களமாகக் கொண்டு 'மயானக்கொள்ளை' பற்றி விளக்க முற்படுகிறது இக்கட்டுரை.

முதல் மயானக்கொள்ளை

இவ்விழாவில் கொள்ளையிடல் நிகழ்ச்சி முதல் நாளும் ஒன்பதாவது நாளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா அங்காளம்மனுக்கு மஞ்சள் நீராட்டுச் செய்வதையும் சேர்த்துப் பத்து நாட்கள் நடைபெறும் விழாவாகும். வருடா வருடம் மாசி மாதம் மகாசிவராத்திரி அன்று கொடியேற்றத்துடன் தொடங்குவர். திருவிழாவின் முதல்நாள் அன்று சுண்ணாம்பு ஆற்றங்கரைக்குச் சென்று நூல் சுற்றிய புதுப்பானையில் நீர் எடுத்துத் தேங்காய் மா இலைக்கொத்து வேப்பிலைக்கொத்து, பூ சேர்த்து கரகம் அலங்கரிப்பர். வெள்ளைத் துணியை மஞ்சள் நீரில் நனைத்துக் கொடியாக மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்துக்கொண்டு வருவர். கோயிலின் முன்பு உள்ள கொடி மரத்தில் தர்ப்பைபூமாலை சாத்திப் பூசை செய்து கொடியேற்றுவர்.

பிறகு, அன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு அங்காளம்மன் சிலை அலங்கரித்துப் பல்லக்கில் ஊரில் உள்ள சுடுகாட்டிற்கு இழுத்துச் செல்வர். அப்போது கொழுக்கட்டை மற்றும் நிலத்தின் விளை பொருட்களைக் கொள்ளை விடுவார்கள் அவ்வூர் மக்கள். அதற்கு முன்பே அண்மையில் இறந்து எரிக்கப்பட்டவரின் சாம்பலில் பெண் உருச்செய்து இருப்பர். அதற்கு எலுமிச்சம்பழம் கோழி முதலான வற்றைப் படையலிட்டுக் காவு கொடுப்பர். அவற்றின் உள்ளே மஞ்சள் துணி ஒன்றை வைத்திருப்பர். அம்மஞ்சள் துணியை மக்கள் போட்டி போட்டுக்கொண்டு எடுப்பர். அத்துணியை வீட்டில் வைத்து பூசை செய்துவந்தால் சகல செல்வங்கள் பெருகும்(தண்டபாணி:வயது-45) என்பது அம்மக்களின் நம்பிக்கையாகும். இவ்வாறு செய்வதே முதல் நாள் கொள்ளையிடுதல் என்பர். அப்போதும் கொழுக்கட்டை மற்றும் நிலத்தில் விளையும் பொருட்களைக் கொள்ளை விடுவார்கள். பிறகு வரிசையாக ஒவ்வொரு நாளும் திருவிழா நடைபெற்று வரும். இரவு நேரங்களில் தெருக்கூத்து, நாடகம் நடத்துவார்கள். அந்நிகழ்ச்சிகளில் அங்காளம்மனை மையமிட்டதாகவே கதை அமைந்திருக்கும். சாமி வீதியுலா முன்பு பறை, பம்பை, உடுக்கை, மேளம், நாதஸ்வரம் இசைப்பர். மற்றும் மயிலாட்டம், குதிரையாட்டம், கரகாட்டம் நடைபெறும். இந்நிகழ்ச்சிகள் அந்தந்த உபயதாரர்களின் செல்வாக்கைப் பொறுத்து அமைகின்றன.

அங்காளம்மன் கோயில் தோன்றிய கதை

அங்காளம்மன் கோயில் தோன்றிய கதை பற்றிப் பல்வேறு கருத்துகள் நாட்டுப்புறங்களில் காணப்படுகின்றன. "வல்லாளக் கண்டன், பூவாடைக்கண்டன், ருத்தகண்டன், இருளக்கண்டன், மோகனக் கண்டன் என்பவர்கள் கொடிய அரக்கர்களாகப் பூமியில் அவதரித்து மனிதர்களைத் தின்றும் துன்புறுத்தியும் வந்தனர். இவர்களைக் கொல்லவே அங்காளம்மன் பரதவர் குலத்தில் தோன்றிப் பின்பு அரக்கர்களை அழித்தாள். வல்லாளக் கண்டனின் மனைவிக்குக் குழந்தை பிறந்தால் இந்த உலகத்தில் உள்ள அனைத்துச் சீவராசிகளையும் அழிக்க வேண்டிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கவே அங்காளம்மன் மருத்துவச்சி வேடம் பூண்டு அரக்க இனத்தை அழித்தாள் என்பது புராணக்கதை என்று கூறப்படுகிறது (கோ.அருட்கலை:*1998:124-125*).

மற்றொரு கதை வல்லாளக் கண்டன் என்பவன் ஒரு கொடிய அரக்கன். அவனுக்குப் பிள்ளை இல்லை. சிவனிடம் பிள்ளைவரம் ஒன்று கேட்கிறான். அதற்குச் சிவபெருமான் தருகிறேன் என்று சத்தியம் செய்கிறார். தான் வலிமை பொருந்தியவன் என்பவனாக இருந்தாலும் உலகில் உள்ள மக்கள் தனக்கு அடிமையாக இருக்க வேண்டும். ஆதலால், அழிக்கும் கடவுளாக இருக்கும் சிவனே எனக்குப் பிள்ளையாகப் பிறக்க வேண்டும் என்கிறான். சிவனும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வரம் கொடுத்து விடுகிறார். இச்செய்தியைக் கேள்வியுற்ற பார்வதிதேவி கண்ணனிடம் முறையிடுகிறாள். கண்ணன் 'நீ குறத்தி வேடம் புகுந்து மருத்துவச்சியாகச் சென்று குழந்தையை அழித்தால் உன் கணவரையும் உலக மக்களையும் காப்பாற்ற முடியும்' என்று கூறுகிறார். அதேபோல் குறத்தி வேடம் புகுந்து மருத்துவச்சியாகச் சென்று அரக்கியின் குழந்தையைக் கொன்று குடலைப்பிடுங்கி மாலையாகப் போட்டுள்ளாள் என்று தண்டபாணி என்ற தகவலாளி கூறியுள்ளார். இவைபோல் இன்னபிற நாட்டுப்புறக் கதைகளும் அங்காளம்மன் தோன்றிய கதைகளைக் கூறுகின்றன.

இரணகளிப்பு முறை

இரணகளிப்புமுறை மயானகொள்ளையோடு தொடர்புடையது. இதனை இரணகளிப்பு என்றும் வல்லாளக் கோட்டை அழித்தல் என்றும் கூறுவர். மேற்கூறிய கதைகளுக்கேற்ப எட்டாம் நாள் விழாவில் இரணகளிப்பு நிகழ்ச்சி நடைபெறும். வல்லாளக் கண்டியின் அரக்க உருவம் மிகப்பெரியதாகக் கோரவடிவுடன் கோயிலின் எதிரில் மண்-

ணால் அமைக்கப்படுகிறது. இதனை வல்லாளன் கோட்டை என்றும் அழைப்பர் (தட்சணாமூத்தி:வயது:50). அவ்வுருவம் கர்ப்பமுற்ற பெண்ணின் உருவத்தைப்போல் அமைக்கப்பட்டு இருக்கும். அவற்றை மக்கள் சுற்றிவந்து வணங்குவர். இரவு பத்து மணிக்கு ஊரில் உள்ள வன்னிய இனத்தைச் சோந்த குடும்பத்தாரின் வீட்டில் இருந்து ஆடு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுக் கோயில் அருகில் உள்ள வேப்பமரத் தடியில் வெட்டப்படும். அவ்வாட்டின் இரத்தம் தனியே பாதுகாக்கப் படுகிறது. ஆட்டின் ஈரல், குடல் போன்றவை புதிய மண்சட்டியில் வைத்து மஞ்சள் துணியால் போர்த்தப்பட்டு வல்லாளக்கண்டியின் அடிவயிற்றுப் பகுதியில் புதைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும் (கோ.அருட்கலை:1998:126). இதற்கிடையில் பல்வேறு மக்கள் நேர்த்திக் கடனாக ஆடு, மாடு, கோழிகளைக் கோயிலில் விடுவார்கள். மறுபக்கத்தில் பாவாடைராயன் வேடம் அணிந்தும், அங்காளம்மன் வேடம் அணிந்தும், காட்டேரி வேடம் அணிந்தும் பக்தர்கள் இருப்பர்.

பாவாடைராயன் (அங்காளம்மனின் காவல் தெய்வம்) வேட மிட்டவர் வல்லாளக்கண்டியின் உருவத்தைச் சுற்றிக் கைக்கோர்த்து நின்று கொண்டு இருப்பர். இரவு பன்னிரெண்டு மணிக்கு அங்காளம்மன் சிங்க வாகனத்திலும் பாவாடைராயன் இன்னொரு பல்லக்கிலும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். அவை வல்லாளக்கண்டியின் தலைப் புறமும் கால்புறமும் நேர் எதிராக நிறுத்தப்பட்டு இருக்கும். அவ்வேளை யில் அங்காளம்மன் குறத்தி(மருத்துவச்சி) வேமிட்ட பூசாரி அவ்வுருவ அடிவயிற்றுப் பகுதியில் அமர்ந்திருப்பார். அப்போது கோயில் பூசாரி யின் உறவினர் மஞ்சள் துணியால் மூடப்பட்டு வாயில் எலுமிச்சைப் பழத்தை ஆவேசமாக ஆடி எடுத்துவருவார். அரக்கியின் மண் சிலைமீது அமர்ந்துள்ள மருத்துவச்சி வேடமிட்டவரிடம் எலுமிச்சைப் பழத்தைக் கொடுத்தவுடன் மருள் வந்து வீழ்ந்து விடுவார். உயிர்ப்புச் சக்தியைப் பெற்ற குறத்தி(மருத்துவச்சி) வேடமணிந்தவர் மருள் வந்தவராய் வேகமாக அரக்கியின் அடிவயிற்றில் உள்ள ஆட்டின் ஈரல், குடல் முதலியவற்றை வாயில் எடுத்துக் கவ்விக் கொண்டு வருவார். இதற் கிடையில் காட்டேரி வேடம் அணிந்தவர் அரக்கியின் உருவத்தைச் சுற்றிச் சுற்றி வருவார். ஆய்வாளர் தகவலாளியை ஏன் காட்டேரி வேடம் அணிந்தவர் சுற்றிச் சுற்றி வருகிறார் என்று கேட்டதற்குக் காட்டேரிக்கு இரத்த வாடை என்றால் மிகவும் பிடிக்கும். பிரசவம் பார்க்கும்போது இரத்த வாடை அடிக்கிறது. மருத்துவச்சியாக உள்ள அங்காளம்மன் இல்லை என்றால் அக்குழந்தையை அது கவ்விக்

கொள்ளும் என்றார். இங்கு இரத்தம் குடிக்கும் தெய்வமாகக் காட்டேரி அமைந்துள்ளதை நாட்டுப்புற வழக்காறாகப் பார்க்க முடிகிறது.

இரத்தச் சோறு வழங்குதலும் நம்பிக்கையும்

ஆட்டின் இரத்தத்தோடு கலந்த சோற்றைப் புது முறத்தில் வைத்துக்கொண்டு அங்காளம்மன் வேடமிட்டவர் மக்களுக்கு வழங்குவார். அச்சோற்றினை உதிரச்சோறு என்பர். உதிரச்சோறு வாங்கி உண்பதால் பிள்ளை இல்லாதவர்களுக்குப் பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கை மக்களிடத்தே பரவலாகக் காணப்படுகின்றது. இந்நிகழ்வின் போது தலைச்சன் பிள்ளைகளும் முதல் கர்ப்பமடைந்தவர்களும் கலந்து கொள்ளக் கூடாது என்கிற நம்பிக்கையும் நிலவுகிறது. மீண்டும் கலந்து கொண்டால் உயிர்ப்பலி ஏற்படும் என்று அச்சப்படுகின்றனர். ஆரம்பகாலம் முதல் தற்கால அறிவியல் வளர்ச்சியின் காலத்திலும் இந்நிகழ்வு நிலவி வருவதை அவ்வூரில் காணமுடிகிறது.

மயானக்கொள்ளையிடுதல்

இவ்விழாவில் முக்கிய நிகழ்ச்சியாகக் கொள்ளையிடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதனைப்பற்றிப் பல்வேறு சான்றுகள் பின்வருமாறு அமைகின்றன. மயானத்தில் படைக்கப்படுவதால் மயானக்கொள்ளை என்று பெயர் பெற்றிருக்கலாம் (சு.சக்திவேல்:2002:244). கொள்ளை என்பதற்குத் தமிழ் அகராதி சூறை கொள்ளுதல் என்றும் மாசானக் கொள்ளை என்பதற்குப் பகற்கொள்ளை என்றும் பொருளுரைக்கின்றது என்று கோ.அருட்கலை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொள்ளை என்பதற்குக் கொள்ளையிடுதல் என்று தமிழ்ச் சொல்லகராதி(1998:952) கூறுகிறது. மயானம் என்பதற்குப் பிரமன் முதலில் பூத சிருட்டிகளைச் செய்ய அப்பூதங்கள் பிராணிகளைப் பயமுறுத்தி வருத்தத் தொடங்கின. பிரமன் சிவமூர்த்தியை வேண்ட சிவமூர்த்தி அவற்றை அடக்கப் பரிசுத்தமாய் சனங்கள் சஞ்சரிக்காத இட மாதலால் அங்குத் தங்கினர் என்று அபிதான சிந்தாமணி (2001:1259) கூறுகின்றது. தமிழ்மொழியகராதி மயானம் என்பதற்கு மயானக்கரை, இடுகாடு, சுடுகாடு(1991:190) என்று கூறுகிறது. எனவே, மயானக் கொள்ளை என்பது மயானத்தில் செய்யப்படுகின்ற ஒரு சடங் காகும். வேறு எந்த தெய்வ வழிபாட்டிலும் பின்பற்றப்படாத கொள்ளை யிடல் நிகழ்ச்சி இத்தெய்வத்திற்கு மட்டுமே காணப்படுகின்றது.

ஒன்பதாம் நாள் திருவிழாவின் காலையில் அவ்வூரில் இறந்த முன்னோர்கள் புதைக்கப்பட்ட இடங்களை அழகுபடுத்தி பூக்களாலும்

மஞ்சள் குங்குமத்தாலும் அலங்கரித்துப் படையல் வைத்து வழிபடு கின்றனர். இதன்வழி முன்னோர் வழிபாட்டு நிலையே பின்னாளில் சிறுதெய்வ வழிபாடாக மாறிய நிலையை உணர முடிகிறது. இவ்வாறு, அமைப்பது இத்திருவிழாவிற்கே உரிய சிறப்பாகும். மதியம் பக்தர்கள் குறத்திபோல் வேடம் அணிந்து தலையிலோ அல்லது இடுப்புப் பகுதியிலோ சிறிய கூடையை வைத்திருப்பர். அக்கூடையில் மஞ்சள் குங்குமம் வைத்து, வண்ணத்தாள் ஒட்டி அலங்காரம் செய்திருப்பர். அக்கூடையை வேடம் அணிந்தவர் வீடுவீடாகச் சென்று திருநீறு கொடுத்துத் தருமம் பெறுவார். அதனை இறுதியில் கோயிலில் சேர்ப்பார். பறை அடிக்க வேடமிட்டவர் காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடிக் கொண்டு செல்வார். அவ்வாறு குறக்கூடை எடுப்பதால் அங்காளம்மன் அருள் கிட்டும் என்பது நம்பிக்கையாகும். அன்று மாலை பாவாடை ராயன், அங்காளம்மன் உருவச்சிலைகள் அலங்காரம் செய்து தயாராக வைத்திருப்பர். அங்காளம்மனைத் தேரிலும் பாவாடைராயனை மற்றொரு பல்லக்கிலும் வைத்துச் சுடுக்காட்டை நோக்கி இழுத்துச் செல்வர்கள். பாவாடைராயன் முன்புசெல்ல அங்காளம்மன் தேரில் பின்னே வரும். தேரின் முன்பு காட்டேரி, அங்காளம்மன், பாவாடை ராயன், குறத்தி போன்ற வேடங்கள் புனைந்து ஆடிக்கொண்டே பக்தர்கள் செல்வார்கள் என்பது குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். இடையே மக்கள் தீபாரதனை செய்வார்கள். அரிசி மாவால் கொழுக்கட்டை மற்றும் மனித உடல் உறுப்புகளான கை, கால்களைச் செய்து கொள்ளை விடுவர். மேலும், தங்கள் நிலத்தில் விளைந்த பொருட்களை வழி நெடுகிலும் வாரி கொள்ளை விடுவர் மக்கள். தேர் சுடுகாட்டை நோக்கிச் சென்றபடியே இருக்கும்.

தேர் சுடுகாட்டில் போய் நின்றவுடன் அதற்கு முன்பே அண்மை யில் இறந்து எரிக்கப்பட்டவரின் சாம்பலில் பெண் உருச்செய்து அதற்கு எலுமிச்சம்பழம் மற்றும் கொழுக்கட்டை, மற்றபொருட்களையும் வைத்திருப்பர். கோயிலிருந்து தேரின் முன்பு பூசாரி மஞ்சள் துணியால் போர்த்தப்பட்டு அழைத்துச் செல்லப்படுவார். அங்குப் பூசாரி ஆவேசமாகக் கோழியைத் தனது வாயால் கடித்து அதின் இரத்தத்தைத் தனது உடம்பில் பூசிக்கொண்டு நினைவிழப்பார். அப்பொழுதும் மக்கள் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொள்ளை விடுவர்கள். இந்நிகழ்ச் சியே கொள்ளையிடுதல் எனப்படுகிறது. அவ்வாறு சுடுகாட்டில் படைத்த படையலை உண்டால் குழந்தைப்பேறு கிட்டும் என்றும் நோய்கள் வராமல் இருக்கும் என்றும் கூறுவர். மேலும், அப்பெண் உருவச் சாம்பலை எடுத்துக்கொண்டு போய் விளைநிலங்களில்

இறைத்தால் மகசூல் அதிகம் கிட்டும் என்பது இன்றும் வழக்கில் உள்ள நம்பிக்கையாகும். பிறகு, தேர் வீதியுலா செல்லும் காட்சி இன்றளவும் காணப்படுகிறது. அன்று இரவு நேரங்களில் தெருக்கூத்தின் வாயிலாக அத்திருவிழாவின் சிறப்பை வெளிக்கொணரும் முகமாக மக்களிடையே பரப்புகின்றனர்.

தொகுப்புரை

1. மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக இருந்தாலும் அவர்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாவாக இருப்பதைக் காணமுடிகிறது.
2. எந்த ஒரு திருவிழாவாக இருந்தாலும் கொடியேற்றம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அவ்விதத்தில் அங்காளம்மன் விழாவும் குறிக்கத்தக்கது.
3. அங்காளம்மன் கோயில் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதைக் களவழிச் செய்திகளின் மூலம் அறிந்து கெள்ளமுடிகின்றது.
4. கொடிய அரக்கனின் வம்சத்தை அழித்து மக்களுக்கு எல்லாம் காவல் தெய்வமாக அங்காளம்மன் விளங்குவதைக் காணமுடி கின்றது.
5. இரத்தச்சோறு என்று வெறுமனே நினைக்காமல் அதில் தெய்வச் சக்தி அடங்கியுள்ளது என்றும் குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தைப்பேறு கிட்டும் என்பதையும் அறியமுடிகிறது.
6. மயானத்தில் நிகழும் சடங்கு முறைகளையும் மக்கள் நேர்த்திக் கடன் செய்கின்ற முறையையும் கொள்ளையிடுகின்ற முறை யையும் காணமுடிகின்றது.
7. மரபுக் கலைகளான தெருக்கூத்து, நாடகம், குறத்தியாட்டம், காட்டேரி ஆட்டம், அங்காளம்மன் ஆட்டம், கரகாட்டம், மானாட்டம், மயிலாட்டம் போன்ற பழமரபுக் கலைகளை நிகழ்த்தக் கூடிய ஒரு விழாவாகவும் காணப்படுகிறது.
8. இறந்தோரை நினைவு கூருமுகமாக முன்னோர் வழிபாட்டைத் தெரிவுபடுத்துகிறது.

இவையே மயானக்கொள்ளையின் சிறப்பம்சங்களாகும்.

குறிப்புகள்

1. சக்திவேல். சு, நாட்டுப்புறஇயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம் சென்னை - 2002.

2. புதுவை நாட்டுப்புறவியல், சு.சண்முகசுந்தரம், சிலம்பு நா.செல்வராசு (தொ.ஆ) புதுச்சேரி வழங்கும் நம்பிக்கைகள் (தொகுப்பு), தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 1998.

3. புதுச்சேரி அங்காளம்மன் வழிபாடு, புதுவை நாட்டுப்புறவியல் தொகுப்பு, கோ.அருட்கலை, தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 1998.

4. பெருமாள்.அ.நா, நாட்டுப்புறவியல் சிந்தனைகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.

5. இராமநாதன்.ஆறு, நாட்டுப்புறஇயல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

6. சிங்காரவேலு முதலியார். ஆ, அபிதான சிந்தாமணி, Asian Educational Services, New Delhi, Madras, 2001.

7. சுப்பிரமணியக் கவிராயர்.சே.ரா, தமிழ்ச்சொல்லகராதி-2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

8. ராமநாதன்.பி, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, இன்ஸ்டிடியுட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடிஸ், சென்னை, 1991.

9. தண்டபாணி வயது:45 ஊர் - பூரணாங்குப்பம் - நாள்:23.2.2008.

10. தட்சணாமூத்தி வயது:50 ஊர் - பூரணாங்குப்பம் - நாள்:23.2.2008.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 605 014.

14

கரக ஆட்டக்கலை - அன்றும் இன்றும்

இரா. இராஜலட்சுமி

முன்னுரை

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் கலைகளையும் ஆராயும் இயலாக நாட்டுப்புறவியல் விளங்குகிறது. நாட்டுப்புறப் பாடல்கள் கதைகள் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் முதலியன பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. நாட்டாருடைய கலை களைப் பற்றிய செய்திகளும் ஆராய்ச்சிகளும் குறைவாகவே தரப் பெற்றுள்ளன என்ற செய்தியைப் பலரும் முன்வைக்கின்றனர்.

நாட்டுப்புறக் கலைகள்

இயல்பாக மனிதனுக்குத் தோன்றும் உணர்ச்சிகளின் உறைவிட மாய் மக்களைக் களிப்படையச் செய்வதாக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக கதைகள் விளங்குகின்றன. இயற்கையோடி யைந்த கலைகள் சமயத்துடனும் பின்னர் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. நாட்டுப்புற மக்களின் அழகியல் உணர்வுகளின் மையமாகத் திகழ்கின்றன.

கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று பிரிவாகக் கொள்ளலாம் என்று சு.சக்திவேல்(2002:77) குறிப்பிடுகிறார்.

1. தொன்மைக்கலை (Primitive Art)
2. நாட்டுப்புறக்கலை (Folk Art)
3. செம்மைக்கலை (Classical Art)

தொன்மைக் கலையைப் பழங்குடி மக்களிடையேயும் நாட்டுப்புறக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும் செம்மைக் கலையை உயர்குடி மக்களிடையேயும் காணலாம். சமயச் சார்பின தாகவும் சமூகச் சார்பினதாகவும் உணர்வு சம்பந்தமாகவும் அமைக்கப் பட்ட கலைகள் பலவும் இன்று அழிவை நோக்கிச் செல்வதைக் காண முடிகிறது. சில கலைகள் வியாபார நோக்கினதாகவும் மாறிவருவதைக் காணமுடிகிறது. இக்கலைகளில் கரக ஆட்டக்கலையின் நிலைகளை விளக்க இக்கட்டுரை முயல்கிறது.

கரக ஆட்டம்

தமிழக நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுள் கரகாட்டமும் ஒன்று. கரகாட்டம் வழிபாட்டுச் சடங்கின் ஓர் அங்கமாகவும், பொதுவான ஊர்வலங்களிலும் மேடைகளிலும் பொழுதுபோக்குக்காகவும் ஆடப்படுவதாக உள்ளது.

கரகம் - சொற்பொருள்

1. கரகம் என்பது நீர் தாங்கிய கமண்டலத்தைக் குறிப்பதாகத் தொல்காப்பியம் குறிக்கிறது(*தொல்.மரபு.71*).
2. பிங்கல நிகண்டு நீர் தாங்கும் செம்பு என்ற பொருள்படக் கரகம் என்ற சொல்லை விளக்குகின்றது. "கர்க்கரி சிரகம் கன்னல் கரகம்" (*பி.நி.நூ.1743*).
3. இன்றைய கரக ஆட்டத்தின் தொடக்க வடிவமாகிய குடக் கூத்துப் பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.
4. கரகம் அல்லது கும்பம் புண்ணியச் செயலுக்காகப் புனித நீர் வைக்கப்பட்டுள்ள குடம் ஆகும், என்பது சோமலெ தரும் விளக்கமாகும்.

கரகாட்டம் - விளக்கம்

கரகாட்டம் அதன் ஆடுபொருளைக் கொண்டு இரு வகையாகக் கூறுவர். ஒன்று தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது 'சக்திக்கரகம்' எனப்படும். மற்றொன்று தொழிலாக நடத்தப்படுகின்ற 'ஆட்டக்கரகம்'

ஆகும். கரகம் என்பது செம்பு அல்லது பித்தளையினால் ஆகிய செம்பை அலங்கரித்துத் தலையில் வைத்துக்கொண்டு அச்செம்பு கீழே விழாதவாறு நையாண்டி மேளத்தின் துணையோடு தாளத்திற்கேற்ப ஆடப்பெறுவதாகும்.

சக்திக்கரகம்

சக்திக்கரகம் என்பது மாரியம்மன், பிடாரியம்மன், புற்றுமாரியம்மன், கெங்கையம்மன் போன்ற விழாவோடு தொடர்புடையது. மழை பெய்வதற்காக வேண்டிக்கொள்ளும்போதும், தொத்து நோய்கள் வராமல் இருப்பதற்காகவும் விழாக் காலங்களிலும் சக்திக்கரகம் நிகழ்த்தப்பெறுகிறது.

சக்திக்கரகத்தில் மேளமும் தப்பும் பிற தாளக் கருவிகளும் இடம் பெறுதலுண்டு. சக்திக் கரகத்தில் கும்பத்தில் தண்ணீர் இருக்கும்; அதற்கு மேலே வேப்பிலை, நடுவே தேங்காய், கும்பத்தைச் சுற்றி நூல் சுற்றியிருக்கும். விரதமிருப்பவர்கள் கும்பத்தைச் சுமந்து வருவர். கும்பத்தைக் கோயிலில் வைத்தவுடன் விரதம் முடிந்துவிடும். விரதமிருக்கும் சக்திக் கரகத்தார் ஒரு நாளில் ஒரு வேளையே உணவு உண்பர். இரவில் பழமும் பாலும் மட்டுமே உட்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

சக்திக் கரகக்காரர் ஆற்று நீரில் குளித்த பிறகு ஈர உடைகளைக் களைந்துவிட்டு தூய வெள்ளை வேட்டியை அல்லது மஞ்சள் நீரில் நனைத்துக் காயப்போட்ட வேட்டியை இடுப்பில் தார்ப்பாய்ச்சாக வரித்துக் கட்டிக்கொள்வர். உடம்பில் சந்தனத்தைக் கரைத்துப் பூசிக்கொள்வர். விபூதியை நீரில் குழைத்து நெற்றி, தோள், மார்பு முதலிய பகுதிகளில் பட்டையாக அடையாளக் குறியாகப் பூசிக்கொள்வர். சக்திக் கரகம் எடுப்பவர்கள் ஆண்கள் மட்டுமே. பெண்கள் தீட்டு உடையவர்கள் என்பதால் சக்திக் கரகம் எடுப்பதில்லை. இது அக்காலம் முதல் இக்காலம்வரை நிலவி வரக்கூடிய கருத்தாகும்.

ஆட்டக்கரகம்

ஆட்டக்கரகம் என்பது பொது நிகழ்ச்சிகளில், மேடைகளில், அரசியல் மற்றும் கோயில் திருவிழா ஊர்வலங்களில் ஆடப்படுகிறது. ஆடும்போது கரகம் கீழே விழுந்துவிட்டால் ஆட்டக்காரர் திறமையற்றவராகக் கருதப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்கள், பெண்கள் என இருவருமே ஆட்டக்கரகத்தை ஆடுவர். இது பொழுது போக்கை நோக்கமாகக் கொண்டது. பார்வையாளரை வசீகரிக்கும்

அலங்கார ஒப்பனைகள் கொண்டது. இதற்கு இடையிடையே கோமாளியின் ஆட்டமும் பாடலும் நடைபெறும். மற்றும் தொழில் திறமையை வெளிப்படுத்தும் ஆட்டங்களையும் ஆடிக்காட்டுவர்.

1. தலையில் கரகத்தை வைத்துக் கொண்டே சமநிலைப் படுத்திக் கொண்டு இரு கைகளிலும் இரண்டு ஏணிகளைப் பிடித்துக் கொண்டு ஏறித் தனது திறமையை வெளிப்படுத்தும் ஆட்டம்.

2. சோடா புட்டியை வாயில் கவ்விக்கொண்டு ஆடுவர்.

3. ஒரு கரகத்திலிருந்து பிரிந்து செல்லும் பல்வேறு கிளைக் கம்பிகளில் பொருத்தப்பட்டுள்ள ஒன்பது கரகங்களையும் சோத்து மொத்தம் பத்துக் கரகங்களைத் தலையில் தாங்கி ஆடும் ஆட்டம்.

இவ்வாறு, பல்வேறு நிகழ்வுகளையும் கரகம் ஆடும்பொழுது நிகழ்த்துகின்றனர்.

தற்காலத்தில் கரகாட்டம் என்பது பொழுதுபோக்கிற்காக என்பதையும் தாண்டி பாலுணர்வைத் தூண்டுவதாக அமைகின்றது. அவர்களின் ஒப்பனைகளும் ஆடை அணிகலன்களும் விரசத்தை ஏற்படுத்துகின்றன. கரகாட்டத்தையே தொழிலாகக் கொண்டிருப்பதால் இவர்களுக்குக் கூலி முக்கியம் என்பது குறிக்கத்தக்கது. கரகாட்டத்திற் கென பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. கலைக்குழுவைச் சேர்ந்தவர்களும் விழாக்களில் கரகம் எடுத்து ஆடுவர்.

தெய்வ சக்தி உடையவராகக் கரகக்காரர்கள் மதிக்கப்பெற்றது அன்று. இன்றோ கரகாட்டக் கலைஞர்கள் சாதாரணமாக நடத்தப் படுகின்றனர். சில சமயங்களில் தாழ்வாகக்கூட நடத்தப்படுகின்றனர். இதற்குக் காரணம் சிலர் பாலுணர்வைத் தூண்டுவதுபோல நடனம் ஆடுவதும் அவர்கள் செய்கையுமே ஆகும். இன்று கரகாட்டக் கலையில் பெரும்பாலும் ஈடுபடுபவர் பெண்களே என்பது முக்கியமானதாகும்.

முடிவுரை

கரகாட்டம் என்பது பக்தியோடு தொடர்புடையதாகக் கருதப் பட்டது அன்று. வெறும் பொழுதுபோக்கிற்காக ஆடப்படுவது இன்று. கால மாற்றத்தில் பல ஆட்டக்கலைகளும் நிகழ்த்துக் கலைகளும் மறைந்து வருகின்றன என்பது கண்கூடாகத் தெரியக்கூடிய உண்மை யாகும். அவற்றுள் கரகாட்டம் என்பது தன் மரபு நிலையி லிருந்து காலத்திற்கேற்ப மற்றைய பொழுதுபோக்கு அம்சங்களுடன் போட்டி

யிடுவதற்காக மக்களைத் தன்பக்கம் ஈப்பதற்காகப் பல்வேறு மாற்றங்களுடன் இன்று நிகழ்த்தப்பெறுகின்றது.

துணை நூற்பட்டியல்

1. இராமநாதன்.ஆறு, நாட்டுப்புற இயல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.
2. சக்திவேல்.சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002.
3. பெருமாள்.அ.நா, நாட்டுப்புறவியல் சிந்தனைகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.
4. வேலுசாமி.நா, கரக ஆட்டக்கலை, தேன்மொழி நூலகம், மதுரை, 1986.

◆

இளமுனைவர்பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 605 014.

15
வில்லுப்பாட்டு அன்றும் இன்றும்

முனைவர். ச. இரேணுகா

முன்னுரை

நாட்டுப்புறவியல் (Folk lore) என்ற சொல், போக்(Folk), லோர்(Lore) என்ற இருசொற்கள் இணைந்த ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இச்சொல் 1846ஆம் ஆண்டு வில்லியம் ஜான் தாமஸ் என்பவரால் 'நாட்டுப்புறவியல்' (Folk lore)என்று வழங்கப்பட்டது. நாட்டுப்புற வழக்காறுகள் வேறு, நாட்டுப்புறவியல் வேறு(Folkloristics); போக் என்ற சொல் நாட்டுப்புற மக்களையும் லோர் என்ற சொல் அம்மக்களின் அறிவின்பாற்பட்ட படைப்புகளையும் குறிப்பதாகும்.[1]

இந்நாட்டுப்புற இயலில் இசை, நடனம், ஓவியம், கூத்து, சிற்பம், சமையல், கைவினை ஆகிய கலைகள் அடங்கும்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் சார்ந்த புலவர். பாண்டு எழிலன் ஒரு வில்லுப்பாட்டுக் கலைஞர், இவரிடமும் இவர் குழுவைச் சேர்ந்த புலவர் சண்முகம், புலவர் சி. வித்தியாசாகரன் ஆகியோரிடமும், அண்மையில் ரோசரி மெட்ரிகுலேசன் மகளிர் மேனிலைப்பள்ளி, மயிலாப்பூர், சென்னை-4இல் நடந்த பள்ளி ஆண்டுவிழாவில் பங்கேற்ற மாணவியர் சி. தாமரை, தேவி, சே. அர்ச்சனா ஆகியோரிடமும் நேரில் கண்டு களஆய்வு செய்ததன் அடிப்படையில் உருவானது இக்கட்டுரை.

வில்லுப்பாட்டின் தோற்றம்

முத்தமிழ்க் கலைகளிலே மூத்த கலை வில்லுப்பாட்டு. இது மட்டுமல்ல, முத்தமிழும் இணையும் ஒரு கூட்டுக்கலை, பாட்டுக்கலை, நாட்டுக்கலை என்கிறார் மூத்த வில்லுப்பாட்டுக் கலைஞர் கலைமாமணி திரு. சுப்பு ஆறுமுகம்.[2]

பாணர்கள் மீட்டும் யாழுக்கு அன்னை, வில்லிசைக்கருவிதான் என்பது இசைப்புலவர்களின் பொருந்தும் ஆராய்ச்சியாகும். வில்லிலே மாட்டுத் தோலை உரித்து இருதுருவங்களையும் வளைத்து இணைத்துக் கட்டி, கைக்கருவியாகிய வீசுகோலால் தட்டும்பொழுது பிறப்பதே 'தனத்-தனத்' என்ற ஒலி. அதைத் தழுவிய வண்ணம் வில்லின் ஓரத்தில் தாயைத் தழுவிய குழந்தைகளைப் போலிருந்து ஒலிப்பதே மணிகளின் நாதம். இதில் முதலில் பிறந்த ஒலியைத் தொடர்ந்த சிந்தனைதான், யாழ். இன்றும் வில்லைக் குறிப்பிடும் போது 'ஆதியாழ்' என்றே சொல்வர். தோலை உரித்துக் கயிறாக்கித் தட்டுவதற்கே இந்த நாதம் என்றால், மெல்லிய நரம்பினால் கட்டி விரலால் மீட்டினால் ஏற்படும் ஒலியை எண்ணிப் பார்க்கவே பிறந்தது வில் பற்றிய சிந்தனை.[3]

.... குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி[4]

என்ற பெரும்பாணாற்றுப்படை அடியிலிருந்து வில் போன்ற வடிவுடைய யாழ் இசையே பின்னாளில் வில்லுப்பாட்டாக உருவெடுத்தது என்பதை உணர்த்துகிறது.

இன்றைய வில்லுப்பாட்டுக் கலை தமிழகத்தில் தோன்றியது ஏறக்குறைய நானூறு வருடங்களுக்கு முன்பாகும். மேலும், இது தோன்றி வளர்ந்த இடம் தென்தமிழ்நாடு என்று கூறப்படும் திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி,சிவகங்கை மாவட்டங் களில்தான். அம்மாவட்டங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பெரும்பாலும் வில்லுப்பாட்டு தவறாமல் இடம்பெறும்.[5] இன்று இக்கலை தமிழ்நாடெங்கும் பரவியுள்ளது.

வில்லுப்பாட்டு பெயர் விளக்கம்

'வில்லுப்பாட்டு' என்பதனை வில்பாட்டு, வில்லு, வில்லடி, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் பலவாறாக அழைப்பதும் உண்டு. இசை அமைதியும், இசைப்பவரும், இசைக்கும்

கருவியைப் பொறுத்தும் பாடல்கள் பெயர்பெறும் எனவும் வில் என்னும் கருவியை முதன்மையாகக் கொண்டு வில்லுப்பாட்டு என்னும் பெயர் அமைவதால் இது இசைக்கும் கருவியால் பெறும் பெயர் எனவும் கூறுவர்.[6]

வில்லுப்பாட்டின் அமைப்பு

இக்கலை தனி ஒருவரால் நிகழ்த்தப்படுவதன்று. ஒரு குழுவாக இருந்து நிகழ்த்தப்படுவது. வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய உறுப்புகளைக் கொண்டு இக்கலை அமைந்துள்ளது. இவற்றில் வில்லும் உடுக்கையும் பழமையானது. இக்கலை போர் வீரரின் ஓசையி லிருந்து பிறந்த யாழ் இசையின் ஒரு வகையாகும் என்ற கருத்தும் உண்டு.

கருவிகள்

இக்கலைக்குரிய கருவிகளாக அன்று வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகியவை இடம்பெற்றன. இக்கலை வளர வளர பம்பை, உருமி, தக்கை, துந்துமி ஆகிய கருவிகளும் இடம்பெற்றன. இடையில் ஆர்மோனியம், டோலக், கிளாரினட், மொராக்கோஸ், புல்புல்தாரா, மோர்சிங் ஆகியவையும் இடம்பெற்றன. இன்று கீபோர்டு, மிருதங்கம், கொத்துச் சலங்கை போன்ற கருவிகளும் இடம் பெறுகின்றன. வில்லைத் தவிர்த்த பிற கருவிகள் எல்லாம் பக்கக் கருவிகளாகும்.

வில் அமைப்பு முறை

வில்லுப்பாட்டின் முதன்மையான கருவி வில் ஆகும். அன்று இதனை உருவாக்க வில்கதிர், முனைக் குப்பிகள், வடம், மணிகள், வளையங்கள், கம்பிகள், கயிறுகள் ஆகியவை தேவைப்பட்டன. மேலும், கூந்தற்பனையின் அடிமரத்துண்டிலிருந்து வில்லினை வடிவமைத்தனர்.[7]

இடைக்காலத்தில் மூங்கிலை வளைத்து வில்லமைத்தனர். இன்று மரத்துண்டுகளை வில் போன்று வளைத்தோ, பக்கவாட்டில் நிறுத்தியோ வில் அமைக்கின்றனர். மேற்கூறிய வில்லின் இரு நுனியையும், கயிற்றால் இழுத்துக்கட்டி, அந்த நாணில் மணிகளைக் கட்டித் தொங்கவிடுகின்றனர். மேலும், அன்று வில்லினை வண்ண மலர் மாலைகளால் சுற்றி அழகு செய்தனர். இன்று வண்ண ஜரிகைகளால் சுற்றி அழகு செய்கின்றனர். இவ்வில்லினை அடிக்க அன்றும் இன்றும் கட்டையே பயன்படுத்தப்படும்.

அன்று வில் கதிரின் நடுப்பகுதியில் மண் குடத்தின் கழுத்துப் பகுதியைச் சேர்த்துக் கட்டியிருப்பர். தொழில்முறை வில்லுப் பாட்டினர்

நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்பொழுது இந்த முறையிலேயே வில்லினை எடுத்துச் செல்வர். ஒருசிலர் தாங்கள் செல்லும் ஊர்களில் மண் குடத்தை வாங்கித் தங்கள் வில்லுடன் சேர்த்துக் கட்டிக்கொள்வர். ஆனால், இன்று இந்த மண்குடம் இல்லாமலேயும் வில்லிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வில்லுப்பாட்டு நடைபெறும் நிகழ்ச்சிகள்

தொடக்க காலங்களில் தெய்வ வழிபாடு நடைபெறும் சூழலில் இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.[8] இன்று கோயில் திருவிழா, அரசு விழா, பள்ளி, கல்லூரி விழா, சமுதாய நிகழ்ச்சி போன்ற மக்கள் கூட்டம் நிறைந்த பகுதிகளில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கலை உறுப்பினர்கள்

அன்று இக்கலைக் குழுவில் ஐந்து அல்லது ஏழு பேர் இடம் பெற்றனர். இன்று பள்ளி, கல்லூரி விழாக்களில் இருபது பேர் அளவில் கூட இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

இக்குழுவின் கதாநாயகர் தமிழில் புலவராகவோ, தமிழை நன்கு கற்றறிந்த அறிஞராகவோ இருப்பார். இவர் கதையைச் சுவையாகச் சொல்லுவார். இவர் மேடையில் குழுவின் நடுவில் அமர்ந்திருப்பார். இவருக்குப் பக்கவாட்டிலும் பின்பக்கமும் அமர்ந்திருப்பவர்கள் இடையிடையே பாடலும், வசனங்களும், கேள்வி பதில்களும், நகைச்சுவைத் துணுக்குகளும், நையாண்டிகளும் செய்வர்.

சில நிகழ்ச்சிகளில் கதை சொல்பவரே பாடலும் பாடுவார். இன்றைய பள்ளி, கல்லூரி விழாக்களில் கதை நிகழ்ச்சிகளை வில்லிசையாகத் தொடங்கி அரங்கின் பக்கவாட்டில் அக்கதை நிகழ்ச்சிகளை நாடகப் பாங்கில் நடத்திக் காட்டுகின்றனர்.

நிகழ்ச்சியின் தொடக்கம்

புதுவையையும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் கோயில் திருவிழாக்களில் விற்கருவிகளுக்குத் தேங்காய் உடைத்துக் கற்பூர தீபம் காட்டிப் பூசை செய்து அனைவருக்கும் அக்கற்பூர தீபத்தைக் காட்டி அவர்கள் வணங்கிய பிறகே நிகழ்ச்சி தொடங்கும்.

நிகழ்ச்சியைத் தொடங்கும்போது பெரும்பாலும் இறைவணக்கம் அல்லது தமிழ்த்தாய் வணக்கம் பாடுவர்.

'தன்தன்' என்று குடம் ஒலிக்க, 'தனத் தனத்' என்று வீசு கோல் பேச, 'ஓம்ஓம்' என்று உடுக்கை ஓங்கார நாதம் முழங்க, 'தந்தனத்தோம்'

என்று வில்லினில் பாட வந்தருள் புரிந்துகொண்டிருந்தாள் கலைமகள்[9] என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, 'தந்தனத்தோம்' என்று சொல்லியே வில்லினில் பாட வந்தருள்வாய் கணபதியே என்று பெரும்பாலோர் பாடுவர். சில பாடகர்கள், கணபதியே என்பதற்குப் பதிலாகக் கலைமகளே என்றும் தமிழ்மகளே என்றும் பாடுவர். திரு. சுப்பு ஆறுகம், திரு. பாண்டு எழிலன் போன்றோர் கலைமகளே என்று பாடுவர்.

கருவிகள் இயக்கம்

பாடல்களைப் பாடும்போது வில்லை அடித்தும் ஏனைய பக்க வாத்தியங்களை இயக்கியும் நிகழ்ச்சியை நடத்துவர். ஆனால், கதை சொல்லும்போது மிக மென்மையாகக் கருவிகளை இசைப்பர்.

பாடுபொருளும், நிகழ்ச்சி அமைப்பும்

தொடக்கக் காலங்களில் புராணம், இதிகாசம், இலக்கியம் ஆகியவையும், இடைக்காலத்தில் தனிமனித வரலாறு, நாட்டு வரலாறு, ஆன்மீகச் சிந்தனை போன்றவையும் பாடுபொருள்களாயின.

இன்று மக்களுக்கு அந்தந்தக் கால கட்டங்களில் மக்களின் தேவை, அவர்களின் அறியாமை நீக்கம், சமுதாய மேம்பாடு, விழிப்புணர்ச்சி, பொழுதுபோக்கு, நாட்டு வரலாறு, தனி மனித வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், பெண் கல்வி, குழந்தைத் தொழிலாளர் நிலை போன்றவை பாடுபொருள்களாக இடம்பெறுகின்றன. எனவே, இவற்றின் அடிப்படையில் சந்தப் பாடல்களும், கதைகளும் அதற்கேற்ற சம்பவங்கள், வசனங்கள் ஆகியவையும் தமிழறிஞர்களால் அவ்வப்போது எழுதப்படுகின்றன. இவை பாடுபவர், சொல்பவர் திறமையால் கேட்பவர் ரசிக்குமாறு இக்கலை நிகழ்ச்சி அமைகிறது.

வில்லுப்பாட்டுப் பாடுபவருக்கு உதவியாக ஒருவர் ஆஹா ஓஹோ, ஆமாம், அப்படியா, ஆமா அப்பு போன்ற சொற்களைப் பொருத்தமான இடங்களில் சொல்லி அவரை உற்சாகமூட்டுவார்.

நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் இக்கலையிலிருந்த அவலச் சுவைகளை நீக்கி, சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும் வகையில் சீர்திருத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் மட்டுமல்லாது நான்காவது தமிழாக 'நகைச்சுவைத் தமிழ்' என்று பெயரிடலாம். எனவே, நாலும் அறிந்து நாலும் தெரிந்தவராக வில்லிசைக் கலைஞன் மேடைக்கு வந்தால் நாலுபேர் பாராட்ட நல்லபடியாக வளர முடியும்.[10]

மக்களின் பாராட்டுகள்

கிராமப்புறங்களில் மக்கள் அன்றும் இன்றும் கதையின் இடையில் புலவரையோ பாடுபவரையோ அல்லது அக்குழுவில் யார் தங்கள் மனதைக் கவர்ந்தார்களோ அவர்களைப் பாராட்டி 'மொய் வைத்துச்' சிறப்புச் செய்வர். இதற்கு மொய் பெற்றவர் நன்றிக் கடனாகப் பாட்டாலோ, வசனத்தாலோ மொய் அளித்தவரைப் பாராட்டுவார்.

கலை வளர்ச்சிக்கு உதவி

அன்று கிராமப்புறங்களின் கலையாக இருந்துவந்த வில்லுப் பாட்டு வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றால் மக்களிடம் அறிமுகமாகி இன்று நகர்ப்புறங்களிலும் புகழ் அடைந்து வருகிறது.

நமது தமிழக அரசு, கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கும் போது வில்லுப்பாட்டிற்கும் சிறப்புச் செய்கிறது. தமிழக அரசின் சார்பில் 1978இல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சென்னையில் நடத்திய கிராமியக் கலைவிழாவில் வில்லுப்பாட்டுக்கு இரண்டு நாள் நிகழ்ச்சி நடத்திச் சிறப்பித்தது.[11] ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு விஜிபி தங்கக் கடற்கரையில் அந்நிறுவனத்தினர் 24 மணிநேர தொடர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை நடத்தினர். வட்ட வடிவமான சுழல் மேடையின் முன்புறம் உள்ள குழுவினர் அரை மணிநேரம் ஒரு நிகழ்ச்சியை நடத்த மேடையின் பின்புறம் அமர்ந்துள்ள குழுவினர் மேடை சுழற்சியால் திரைக்கு முன்னே வந்து அடுத்த அரை மணிநேரம் நிகழ்ச்சியை நடத்தும் புதுமைப் போக்கைச் செயல்படுத்தினர். இதில் 50 குழுவினர் இடம்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு இன்று தமிழகத்தின் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் இடம்பெறத்தக்க ஒரு நல்ல கலையாக வளர்ந்து வருகிறது. இதனால் சாதி, சமய பேதமின்றியும் படித்தவர், பாமரர் வேற்றுமையின்றியும் நடுநாயகமாக இருந்து பல நல்ல கருத்துகளை இக்கலை வழங்கி வருகின்றது. இந்நிகழ்ச்சியின் தொடக்க கால அமைப்புமுறை இன்று பலவடிவ மாற்றங்களைப் பெற்றாலும் அனைவரும் போற்றி விரும்பி ரசித்துப் பார்த்து அந்நிகழ்ச்சி வாயிலாக நல்ல செய்திகளைப் பெறத்தக்க கலையாக உள்ளது என்பது வில்லுப்பாட்டுக்குரிய சிறப்பாகும். மேலும், இக்கலை இன்று மனிதநேய வளர்ச்சிக்கும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கும், சுற்றுச்

சூழல் பாதுகாப்புக்கும் உதவும் வகையில் அமைக்கப்பெற்றால் நாடு நலம் பெறும். மாந்தர் நேயம் பெருகும், அவர்தம் வாழ்வும் வளம் பெறும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"[12]

என்னும் பவணந்தியின் நன்னூல் இலக்கண மொழிக்கேற்ப மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

மேற்கோள் நூல்கள்

1. த. கனகசபை, நாட்டுப்புறப் பாடல்களின் அழகியல் கட்டமைப்பு, முதற்பதிப்பு, டிசம்பர் 2004, பொன்னி வெளியீடு, சென்னை 91, முன்னுரை, ப. 13, மேற்கோள்.
2. சுப்பு ஆறுமுகம், வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும் (கட்) ப. 344, ஐந்தாம் உலகத் தமிழ்மாநாட்டு விழா மலர், மதுரை, 1981.
3. மேற்படி.
4. பெரும்பாணாற்றுப்படை, அடி 180-182.
5. ராம்குமார், இந்தியப் பாரம்பரியக் கலைகள், முதற்பதிப்பு, டிசம்பர் - 1998, சென்னை 5, ப. 45.
6. தி.சி. கோமதி நாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள், மார்ச் 1979, தமிழ் பதிப்பகம், சென்னை 20, ப. 4. மேற்கோள்.
7. மேற்படி, ப. 7.
8. மா. கோதண்டராமன், நாட்டுப்புறவியலும் பண்பாடும், டிசம்பர் - 2003, பாரதி புத்தகாலயம், சென்னை 17, ப. 148.
9. சுப்பு ஆறுமுகம், வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும் (கட்) ப. 345, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர்.
10. மேற்படி, ப. 347.
11. மேற்படி, ப. 346.
12. நன்னூல், கழக வெளியீடு, சென்னை.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சென்னை - 108.

16

கரக ஆட்டக்கலை - ஒரு பார்வை.

மு. இளங்கோவன்

முன்னுரை

ஆதி மனிதன் தனித்தனியாகக் குகைகளில் வாழ்வதிலிருந்து மாறி, குழுக்களாய் வாழ முற்பட்டபோது, கலையும் தோன்றி வளரத் தொடங்கியது. இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் மனித வாழ்வு. அவற்றை உணர்ந்து அனுபவிப்பது மனித மனம். மனிதனின் மனத்திலிருந்து பல்வேறு விதமான உணர்வுகள் எழுகின்றன. இவை தனிமனிதர்களின் ரசனைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும், திறமைக் கேற்பவும், இசை, இலக்கியம், ஓவியம், நடனம் எனப் பல்வேறு பரிமாணங்களாய் உருவெடுக்கின்றன. நாகரிகம் வளரவளர, கலையின் பரிணாம வளர்ச்சியும் மாறிக் கொண்டே வருகிறது.

நாட்டுப்புறக்கலை (Folk Art) என்பது மிகப்பழமையான தொன்மைக் கலைக்கும் (Primitive Art) செம்மைப்பட்ட செவ்வியல் கலைக்கும் (Classical Art) இடைப்பட்ட ஒரு நிலையை உடையது.

நிகழ்கலைகள் (Performing Arts)

ஆட்டம், பாட்டம் மற்றும் கருவி இசையும் பிணைந்த இயங்கு கலைதான் நிகழ்கலை அல்லது நிகழ்த்துக்கலை என்பதாகும். கரகாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கோலாட் டம், கும்மியாட்டம், கழியலாட்டம், சக்கையாட்டம், பொய்க்கால்

குதிரையாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், கைச்சிலம்பாட்டம், ஆவியாட்டம், புலியாட்டம், காளையாட்டம், தெருக்கூத்து பாவைக்கூத்து (தோற்பாவை மற்றும் மரப்பாவை), கணியான்கூத்து ஆகியவை தமிழகத்தில் காணப்படும் முக்கியமான நிகழ்கலைகளாகும். இதில் கரகாட்டம் மிகவும் தொன்மையானதும், முக்கியமானதுமாகும். கரகாட்டம், இக்கலையை ரசிக்கும், பார்க்கும் அனைவரின் கண்களையும் கருத்தையும் ஒருங்கே ஈர்க்கும் தன்மை கொண்டது. அத்தகைய சிறப்பு வாய்ந்த கரகக் கலையைப் பற்றிய ஒரு சிறு பார்வை.

தமிழ் இலக்கியத்தில் கரகம்

செம்பு (தாமிரம் - Copper) அல்லது பித்தளையினால் செய்யப் பட்ட சிறிய தோண்டி அல்லது செம்பை பூ, மாலை மற்றும் அலங்காரப் பொருட்களால் நன்கு அலங்கரித்து அதை தலையில் வைத்துக்கொண்டு (கைகளினால் தொடாமல்) அச்செம்பு கீழே விழாதவாறு நையாண்டி மேளத்தின் துணையோடு தாளத்திற்கேற்ப ஆடுவதே கரக ஆட்டம் எனப்படும். தற்காலத்துக் கரக ஆட்டத்தின் ஆதி வடிவம் 'குடக்கூத்து' எனப்படும்.

கரகம் என்ற சொல் முதலில் நீர் தாங்கும் கமண்டலத்தையும் பின்னர் புனித நீர் தாங்கிய குடம் அல்லது செம்பைக் குறிப்பதாயும் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகிறது.

"நூலே கரகம் முக்கோல் மனையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

(*தொல்காப்பியம், மரபியல், 71*)

"கர்க்கரி சிரகம் கன்னல் கரகம்"

(*பிங்கல நிகண்டு, நூற். 1743*)

" உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்"

(*கலித்தொகை, 9:2*)

மற்றும்

"நீர்மலி கரகம் போல"

(*கலித்தொகை, 133:4*)

"உறித்தாழ் கரகமும் உன்கைய தன்றே"

(*சிலப்பதிகாரம், வரந்தரு காதை, அடி. 64*)

ஆகிய இடங்களில் 'கரகம்' என்னும் சொல் நீர் தாங்கும் கமண்டலம் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

மேலும், புறநானூறு (1:12), ஆசாரக்கோவை (46:3) மற்றும் மணிமேகலை (பதிகம்12) ஆகிய நூற்களிலும் 'கரகம்' எனும் சொல் கமண்டலம் என்ற பொருளிலேயே வழங்கப்பெற்றுள்ளது.

குடக்கூத்து

இன்றைய 'கரக ஆட்டத்தின்' ஆதி வடிவம் குடக்கூத்தாகும். 1967-இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட "கையேடு", குடக்கூத்தை "ஒரு குடத்தையோ அல்லது ஒன்றின்மேல் ஒன்றாகப் பல குடங்களையோ தலையில் தாங்கி மேளத்திற்குத் தகுந்தபடி ஆடுவது குடக்கூத்து எனப்படும்" என்று விளக்குகிறது. இதனைக் கண்ணனே ஆடியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

"வரோஹோபநிஷத்" (2:82) எனும் வடமொழி நூலில் குடக் கூத்தைப் (குடும்ப ஆட்டம்) பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

கண்ணனும் குடக்கூத்தும்

கண்ணபிரானின் மகன் "பிரத்யும்நன்" என்பவனுக்கு, 'அநிருத்தன்' எனும் மகன் இருந்தான். அவன் 'சோனிதபுரம்' என்ற ஊரை அரசாண்ட 'வாணன்' என்ற அசுரனின் மகள் உழை (உஷாதேவி)யைக் காதலித்தான். இதையறிந்த அவ்வசுரன் அநிருத்தனைச் சிறைப்படுத்தினான். ஆகவே, தன் பேரன் அநிருத்தனை மீட்பதற்காகக் கண்ணன் குடங்கொண்டு ஆடினான். இதுவே 'குடக்கூத்து' எனப்படும். கண்ணன் குடக்கூத்தாடிய செய்தி தமிழிலக்கிய நூல்களில் விரவிக் கிடக்கிறது.

அ. "வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீள்நிலம் அளந்தோன் ஆடியகுடம்" (சிலப்பதிகாரம், கடலாடு காதை, 54,55)

ஆ. "இடவல குடவல கோவல காவல" (பரிபாடல், 3:83)

இ. "குடமாடு கூத்தன் கோவிந்தன்" (நாச்சியார் திருமொழி, 10:7)

ஈ. "குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே" (பெரியாழ்வார் திருமொழி, 2-ஆம் பத்து, 7-ஆம் திருமொழி, 7-ஆம் பாடல்)

உ. "... செங்கண்மால் என்றொருவன் பாரோர்கள் எல்லாம் மகிழப் பறைகறங்கச் சீரார் குடமிரண்டு ஏந்தி" (திருமங்கை யாழ்வார், சிறிய திருமடல், கண்ணி 11-12)

ஊ. "குடமாடி தடமார்வர்" (பெரிய திருமொழி, 5ஆம் பத்து, பத்தாந்திருமொழி)

எ. "மன்றாரக் குடமாடி வரையெடுத்து மழைதடுத்த குன்றாரும் திரள்தோளன் குரைகழலே அடைநெஞ்சே" (பெரிய திருமொழி, 6ஆம் பத்து, ஒன்பதாந்திருமொழி)

ஏ. "கூத்தர் குடமெடுத்தாடிற் கோவிந்தனாமெனவோடும்" (திருவாய்மொழி 4:4:6)

ஐ. "குடமாடு கூத்தன்" (திருவாய்மொழி, 10:1:11)

ஒ. "கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்" (முத்தொள் ளாயிரம், பாடல். 40)

ஓ. "வடமேந்து கொங்கையரோ மாவலியு மாயன் குடமேந்தி நின்றாடும் கூத்தா" (காளமேகப் புலவர், சித்திர மாடல், கண்ணி. 78)

குடக்கூத்து பற்றிய விவரங்கள் தமிழ் இலக்கியங்களில் பெரு வாரியாகக் காணப்படுகின்றன. மேலும், இளங்கோவடிகள், மாதவி ஆடியதாகப் பதினோராடல்களைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப் பிட்டுள்ளார்.

"அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்றாடல் ஆறு"
"துடிகடையம் பேடு மரக்காலே பாவை
மடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து"

இவற்றில் முதல் ஆறு ஆடல்களும் வீழ்ந்தாடுவன என்று அடியார்க்கு நல்லார் கூறுவர்.

கரக ஆட்டத்தின் தோற்றம்

மனிதன் தன் இன்பதுன்ப உணர்வுகளை உடலசைவுகளால் வெளிப்படுத்துகிறான். இந்நிலையைப் பிறர் அபிநயித்துக் காட்டுகிற போது ஆடல் பிறக்கிறது. ஆடலானது ஒரு கதையை அல்லது நிகழ்ச்சியை விவரிக்கும் போது 'கூத்து' என்று பெயர் பெறுகிறது. நம் முன்னோர்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களைக் கலையாகக் கண்டனர். 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்' என்பது கம்பர் வாக்கு. இவ்வறுபத்து நான்கு கலைகளுள் 'நிருத்தம்' என்பதும் ஒன்று. இது ஆடற்கலையைக் குறிக்கும்.

கூத்தியலை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. நிருத்தம்

பாவ, அபிநயச் சார்பின்றித் தாளத்தையே தழுவி இயல்வது இது.

2. நிருத்தியம் (அபிநயக்கூத்து)

பாவங்களைப் பொழிந்து சுவையுணர்வை ஊட்டுவது இது.

3. நாட்டியம்

பழங்கதைகளைத் தழுவியது இது.

இவற்றில் கரக ஆட்டக் கலையானது 'நிருத்த' வகையைச் சார்ந்தது. "நிருத்தம் தாள லயாஸ்ரயம்" தாளமும் இடைவெளியும் (லயமும்) உடையது நிருத்தம். எனவே, தாளத்தையே பெரிதும் தழுவி ஆடப்படுவதால் கரகமும் நிருத்தத்தின்பாற்படும்.

தெய்வ விருத்தி அல்லது தெய்வக்கூத்து

தெய்வங்கள் ஆடிய கூத்துகளும், தெய்வங்கள் ஆடிய கூத்துகளாக மானிடர் ஆடிய கூத்துகளும் தெய்வக்கூத்து எனப்படும்.

தெய்வங்கள் அவுணர்களுடன் போர் புரிந்து வென்று அவ்வெற்றியின் மகிழ்ச்சியினால் ஆடிய பழமையான பதினோராடல் களை மாதவி ஆடியதாகச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள்,

அ. கொடுகொட்டியாடல், பாண்டரங்கம் ஆகிய இரண்டு ஆடல்கள் சிவனாலும்

ஆ. அல்லியம், குடக்கூத்து, மல்லாடல், மரக்காலாடல் ஆகிய நான்கு ஆடல்கள் திருமாலாலும்

இ. குடையாடல், துடிக்கூத்து என்ற இரண்டு ஆடல்கள் முருகனாலும்

ஈ. பேடியாடல் காமனாலும்

உ. பாவைக்கூத்து திருமகளாலும்

ஊ. கடையக்கூத்து அயிராணி (இந்திராணி)யாலும் ஆடப்பட்டன.

மாதவி ஆடிய இவையனைத்தும் 'தெய்வ விருத்தி' என்னும் தெய்வக் கூத்துகளாகும். தெய்வக் கூத்திலிருந்து தோன்றிய பொதுக் கூத்துகளில் ஒன்றே இன்றைய கரக ஆட்டக்கலை எனலாம்.

கண்ணன் தன் பேரன் அநிருத்தனை, வாணனது சிறையிலிருந்து மீட்க ஆடிய குடக்கூத்து, காலப்போக்கில் மாரியம்மன் தொடர்பான வழிபாட்டோடு இணைந்த ஆட்டமாகக் 'கரக ஆட்டம்' அல்லது 'கும்ப ஆட்டம்' என்ற பெயரோடு உருப்பெற்று வளர்ச்சி பெறலாயிற்று.

"மக்கள் மழைத் தெய்வமாக மாரி அம்மனையும், ஆற்றுக் கடவுளர்களாக கங்கை மற்றும் காவிரி அம்மனையும் வழிபடத்

தொடங்கினர். இத்தெய்வங்களைப் போற்றக் கரகம் ஏற்பட்டது", என்று 'சோமலே', "தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்" (ப.196) என்ற தனது புத்தகத்தில் விவரிக்கிறார்.

'தென் இந்தியக் கிராமிய நடனங்கள்' என்ற நூல் "விழாக் காலங்களிலும், பஞ்சம் வந்தபோதும், கொள்ளை நோய்கள் வந்து கொட்டமடிக்கும்போதும் மக்கள் தங்கள் இதயங்களுக்கு மிக நெருங்கியதான இந்தக் கரக நடனத்தை ஆடி வழிபாடு நடத்துவார்கள்" என்று குறிப்பிடுகிறது.

பெரும்பாலும் ஐயனார், கங்கையம்மன், மாரியம்மன் முதலான கிராம தேவதைகளின் விழாக் காலங்களிலும் மழை பெய்வதற்காக வேண்டிக்கொள்ளும் போதும், தொற்று நோய்கள் வராமல் இருப்பதற்காகத் தேவதைகளை மகிழ்விக்கவும் இந்தக் கரக ஆட்டம் நடைபெறுகிறது.

கரக ஆட்டத்தின் வளர்ச்சி

கரக ஆட்டத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. சக்திக் கரகம் - இது தெய்வ வழிபாட்டுடன் இணைந்தது
2. ஆட்டக்கரகம் - இது தொழில் முறை ஆட்டமாகும்.

1. சக்திக் கரகம்

சக்தியாகிய மாரிக்கு எடுக்கப்படும் கரகம் சக்திக் கரகம் எனப்படும். மக்கள் மாரி என்ற சக்தியின் குறியீடாகக் கரகத்தை வழிபாடு செய்தனர். ஆதியில் சில கிராம தேவதைகளின் கோயில்களில் ஊர்வலத்தின்போது உற்சவ மூர்த்திக்குப் பதிலாக ஒரு மண்குடத்தில் நீர் நிறைத்து அதில் வேப்பிலைகளைச் செருகிப் பூக்களால் அலங்காரம் செய்து பூசாரியின் தலையில் வைத்து ஊர்வலம் வருவர். இப்பூங்கரகமே இன்று சக்திக் கரகமாக உருவெடுத்துள்ளது எனலாம்.

கோயில் திருவிழாவின் போது கொடியேற்றத்தன்று சக்திக்கரக மெடுப்பவர் அதிகாலையில் ஆற்றுக்குச் சென்று ஏழு ஊற்றுகள் தோண்டி; நீராடிப் பின் கோவிலுக்கு வந்து சிறப்பு வழிபாடு செய்வார். பின் அவருக்குக் காப்பு கட்டப்படும். பின்னர், அன்றிலிருந்து திருவிழா வரை கடுமையான விரதம் இருப்பார்.

திருவிழா தினத்தன்று, ஆற்றில் ஏழு ஊற்றுகள் தோண்டி, சக்திக் கரகச் செம்பின் முக்கால் பாகம் அந்த ஏழு ஊற்றுநீரை நிரப்புவார்கள்.

பின்னர், செம்பின் வாயை முற்றிய தேங்காய் வைத்து மூடிக்கட்டி, அரளிப்பூவைச் சுற்றிக்கட்டுவர். தேங்காயின் உச்சியில் எலுமிச்சம் பழத்தைச் செருகுவர். பின்பு, அதன்மீது காதோலையும் கருகமணியும் இட்டு தக்கையிலான கிளியைச் செருகி அலங்கரிப்பர். பின்னர், காப்புக் கயிறும் பரிவட்டமும் கட்டுவர்.

அம்மனை வழிபட்டுச் சக்திக் கரகமெடுப்பவருக்கு 'அருள்' வந்து அதன் பின்னர் பக்தர்கள் சூழ ஆற்றிலிருந்து கோயிலுக்கு செல்வர். இடையில் எங்கும் சக்திக் கரகத்தை இறக்கி வைக்காமல் கோவிலில் அம்மன் முன்புதான் இறக்கி வைப்பார். பெண்கள் சக்திக் கரகம் எடுக்க அனுமதியில்லை.

ஆட்டக்கரகம்

ஆட்டக் கரகத்தை இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை முறையே தோண்டிக் கரகம் மற்றும் செம்புக் கரகம் ஆகும். மண்குடத்தில் தேங்காய் வைத்து மூடி மலர்களால் அலங்கரித்து ஆட்டக்கரகம் ஆடப்படும். பின்னர், காலப்போக்கில், பித்தளை அல்லது தாமிரச் செம்புகள் நடைமுறைக்கு வந்தன. ஆட்டக் கரகத்தில் சில மரபுவழி ஆட்டங்கள் ஆடப்படும். அவற்றில் முக்கியமானவை 1. ஒண்ணாங்காலம், 2. இராஜபார்ட் ஆட்டம், 3. ஸ்ரீராமச்சந்திர ஆட்டம், 4. ஆரவல்லி ஆட்டம், 5. நையாண்டி ஆட்டம், 6. முளைகோட்டுக் கும்மியாட்டம், 7. ஒயிலாட்டம், 8. கட்டபொம்மன் ஆட்டம், 9. பவளக் கொடி ஆட்டம், 10. நொண்டிச்சிந்து, 11. சிலம்பாட்டம் முதலியன

கரக ஆட்டக்கலைஞர்கள்

கரக ஆட்டக்கலைஞர்களை இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். தொழில்முறை ஆட்டக்கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் என்று பிரிக்கலாம். தொழில்முறை ஆட்டக்கலைஞர்களில் மரபு வழி ஆட்டங்களை மதித்து ஆடியவர்களில் முக்கியமானவர்கள், எம்.எஸ். அங்குப்பிள்ளை, ஓம். பெரியசாமி, ஏ.வி. பெரியராமு, என்.கே. மகாலிங்கம், எஸ். பரமசிவம், எஸ். சாரங்கபாணி, வி. வேலு, எம். பிச்சை, ஆர். வி. பட்டி இராமானுஜம் மற்றும் பி. சுந்தரராஜு நாயுடு ஆவர். பெண் கலைஞர்களில், ஐயம்மாள், பாண்டியம்மாள், பார்வதி, எஸ்.கே. மாரியம்மாள், பஞ்சு, பஞ்சவர்ணம், லீலா, பிச்சையம்மாள், பத்மா மற்றும் சுலோச்சனா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

முடிவுரை

தொன்மையான அரிய இந்தக் கலை தக்க வகையில் காக்கப்பட வேண்டும். இப்பொழுது, இளைய சமுதாயத்தினரிடையே குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஓரளவு இக்கலையைப் பற்றிய விழிப்புணர்வு உள்ளது. இருப்பினும் இக்கலையை இன்னும் அதிகமாக மாணவர் களிடையே கொண்டு செல்ல, பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்கள் முன்வர வேண்டும். ஒருசில தொழில்முறைக் கலைஞர்கள் தவிர்த்து ஏனையோர் இன்றும் வறுமையில்தான் வாடுகிறார்கள். தற்பொழுது ஓய்வூதியத்திட்டம் போன்று ஒருசில பலன்கள் கிடைத் தாலும் அவையெல்லாம் யானைப் பசிக்குச் சோளப் பொரி போன்றது தான். மாநில மற்றும் நடுவண் அரசுகளும், நாட்டுப்புறக் கலைகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, ஆராய்ச்சி மையம் மற்றும் நாட்டியக்கலை வளர்ச்சி மையங்கள் அமைக்க வேண்டும். நாட்டுப்புறக் கலைக்களஞ்சியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். நாடு முழுவதும் நாட்டுப்புறக் கலைகளைப் பரிவர்த்தனை செய்யக் கலைவிழாக்கள் அரசுத் தரப்பால் நடத்தப்பட வேண்டும். சங்கமம் போன்ற விழாக்கள் ஓரளவிற்கு இக்கலைகளுக்கு அங்கீகாரம் அளித்தாலும், நாட்டுப்புறக் கலைகளுக்கான முக்கியத்துவம் இன்னமும் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கென தனி அமைச்சகம் உருவாக்கப் பட வேண்டும். மாணவர் களுக்குப் பள்ளி அளவிலேயே நாட்டுப்புறப் பயிற்சி முகாம்களும், பயிற்சிப் பட்டறைகளும் அளிக்கக் கட்டாயப் படுத்தப்பட வேண்டும். நாட்டுப்புறக் கலை பயின்ற மாணவர்களுக்குச் சிறப்பு மதிப்பெண்கள் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

வாழ்க நாட்டுப்புறக் கலைகள்! வளர்க அதன் புகழ் தரணியெங்கும்!!

◆

இயக்குநர்,
'கவின் கலைக்குழு',
9/4,5, ஆசாரித் தெரு,
முதலியார் சத்திரம்,
திருச்சி - *620 001.*

17

பெண்கள் கலையுணர்வியல் கும்மியாட்டம்

சா. இளையராஜா

முன்னுரை

நாட்டுப்புற மக்கள் பொழுதுபோக்கிற்காகவும், மனமகிழ்ச்சிக் காகவும் பல நிகழ்ச்சிகளை உருவாக்கி ஆடியும் பாடியும் பலரோடு கலந்து கொண்டாடி வருகின்றனர். இவ்வாறு, கொண்டாடி வரும் நாட்டுப்புற மக்களின் கலைகளில் 'கும்மி' பற்றிய கலையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தெய்வத் தொடர்புடைய நிகழ்ச்சிகள்

கிராமங்களில் இறைவனுக்கு விழா எடுக்கின்றபோது சுற்றுப் புறத்தில் இருக்கின்ற மக்கள் கலந்து கொள்வார்கள். அவ்வாறு கலந்து கொள்ளும்போது மக்களின் வேதனையையும் கவலையையும் மறப் பதற்குக் கலைநிகழ்ச்சிகளை நடத்துவர். அதில் ஆண்களும் பெண்களும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். அவற்றில் கும்மி, கோலாட்டம், கூத்து, தர்க்கப் பாட்டு, கதைப்பாட்டு போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

'கும்மி'

'கும்மி' என்பது ஒருவகை விளையாட்டு என்றும், இது குரவை யிலிருந்து வளர்ந்து நிலைபெற்றது என்றும் சொல்வர். அ.கி.பரந்தா

மனார், 'கும்மி' என்பது 'குழுமி' என்ற சொல்லிலிருந்து பிறந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். மேலும், 'குழுமி' ஆடுவதே 'கும்மி' என டாக்டர் சா. வளவன் கூறுகின்றார்.

கைகளைக் கொட்டுவதில் ஒழுங்கு முறையை ஏற்படுத்தி அதில் இசைத்தன்மையை உருவாக்கி, பெண்கள் வட்டமாக நின்று அவ்வொலிக்கு ஏற்ப ஆடிப்பாடும் பாடலே 'கும்மி' என டாக்டர். ஏ.என். பெருமாள் கூறுகின்றார்.

மனிதன் மகிழ்ச்சியின் காரணமாகக் கையைக்கொட்டி ஆடுவதால் கொம்மி கொட்டி என்பது 'கொம்மி' - கும்மி ஆயிற்று என்பர்.

சங்க இலக்கியங்களில் 'கும்மி' என்ற சொல்லாட்சி இல்லை என்று கூறியுள்ளனர். ஆனால், பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூற்றில் 'கொம்மை' என்பது கைகளைக் கொட்டுதலைக் கூறுகின்றது.

> 'நோற்ற பெருமை யுடையாரும் கூற்றம்
> புறங்கொம்மை கொட்டினார் இல்' [1]

என்பதன் மூலம் கொம்மை என்பது கும்மி ஆகியிருக்கலாம் எனவும் அறியமுடிகிறது.

கும்மியின் வகை

பெண்கள் ஆடுவது கும்மி என்றும், ஆண்கள் ஆடுவது ஒயில்கும்மி என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.

கும்மியின் நோக்கம்

முளைப்பாரி விழாவில் பெண்கள் இக்கும்மி ஆடுவதால், முளை தளிர்த்து வளர்ந்துவரும் என இம்மக்கள் நம்புகின்றனர். இக்கும்மிப் பாடல்களின் மூலம், மழையினால் பயிர்வளம் பெருக வேண்டும் என்ற நோக்கம் வெளிப்படுவதாக அறியமுடிகிறது.

கும்மி ஆடும் காலம்

"அம்மன் திருவிழாக்களின் போதும், மார்கழி நோன்புக் காலங்களின் போதும், பொங்கல், விழாக்களின் போதும், ஆடிப்பெருக்கின் போதும், பெண்களால் சிறப்பாக ஆடப்பெறும்"[2] என்று கூறப்பட்டுள்ளது. மேலும், பூப்படைந்த பெண்ணிற்கு மஞ்சள் நீராட்டின் போதும், வேலையில்லாத கோடை மாதங்களில் நிலா காய்கின்ற போதும் இது நடைபெறுவது வழக்கம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால்,

இந்த நிகழ்ச்சி தற்போது ஆடிப்பெருக்கு, அம்மன் திருவிழா, பொங்கலின்போது மட்டுமே ஆடப்பெறுகிறது.

பெண்கள் ஆடும் கும்மி

"கும்மி ஆடும் பெண்கள் கும்மிப் பாடல்களைப் பாடிக் கொண்டே களைத்துப் போகும்வரை கைக்கொட்டி வலக்காலை முன் வைத்துக் குனிந்து, இருகைகளையும் கொட்டிப் பின்னர் இடக்காலைப் பக்கவாட்டில் நகர்த்தி, வலக்காலைப் பின்இழுத்து நிமிர்ந்து கைகளை இயல்பு நிலைக்குக் கொணர்ந்து கும்மி ஆடு கின்றனர். பாடலோடு கைகொட்டும் ஒசை சேரும்போதுதான் கும்மிப் பாடல் முழுமை பெருகிறது"[3] என்பதன் மூலம் கும்மி ஆடும் முறையை அறியமுடிகிறது.

இவ்வாறு, ஆடிப்பாடும்போது பெண்களில் ஒருவர் கும்மிப் பாடலை முதலில் பாடுவார். அவரை முன்பாட்டாளர் என்றும் அவரைத் தொடர்ந்து பாடுபவர்களைப் பின்பாட்டாளர் என்றும் கூறுவர். அவ்வாறு பாடும்போது முன் பாடியவரின் பாடலில் பாதியை வாங்கியோ, தாமாக சிறிது சேர்த்தோ "இசையை மட்டும் தழுவியதாகப் புதிதாகச் சொற்களைச் சேர்த்தோ"[4] முன்பாட்டாளருக்குத் துணையாகப் பின்பாட்டாளர் பாடுவார்.

'பட்டுபாவாடை அணிந்து மலர்சூடி
பயபக்தியாய் கும்மியடிங்கடி'.

என்பதன் மூலம் இக்கலையை நிகழ்த்தும் பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொண்டு, பயபக்தியுடன் மாவிளக்கு ஏற்றி விரதம் இருந்து பாட்டுப்பாடி ஆடுவதாகக் கிடைத்துள்ள பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. மேலும், மேலதாளங்களுடனும் குரவை ஒலியுடனும் பாடுவதாகவும் கும்மிபாட்டுகள் அமைந்துள்ளன.

'கொட்டு முழக்கம் குலவையுமே கூடி
தாம்பூலத் தட்டும் மாவிளக்கும் ஏந்தி கும்மியடிங்கடி'

என்பதன் மூலம் இசைக்கருவி கொண்டு ஆடிப்பாடுவதை அறிய முடிகிறது.

தற்போது கும்மி ஆட்டம்

ஆடிப்பெருக்கின்போது, பொங்கல் பண்டிகையின்போது மட்டுமே ஆடப்படும் இவ்வாட்டத்தில் இறைக் கருத்துகளும், நம்பிக் கைக் கருத்துகளும் காணப்படுவதோடு, இசைக்கருவிகளும் பயன்படுத்தி

வருகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் 'ஏலேலோ' மெட்டைச் சேர்த்தும் ஆடிப்பாடி வருகின்றனர். இதனை,

'நீலப் பொட்டு வச்சீக்கிட்டு

ஏலேலோ கும்மி ஏலேலோ'.

என்பதன் மூலம் அறியலாம். மேலும், முன்பெல்லாம் விரதம் இருந்து பயபக்தியுடன் ஆடப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், தற்போது விரதம் இல்லாமல் பயபக்தியுடன் மட்டும் ஆடுவதைக் காணமுடிகிறது.

முடிவுரை

பெண்கள் ஆடும் பல வகையான ஆட்டக் கலைகளில் 'கும்மி' சிறப்பிடம் பெறுகிறது. அதோடு மட்டுமல்லாமல் நமது பண் பாட்டினை உலகெங்கும் எடுத்துக் கூறுவதாகவும் அமைகிறது.

சான்றெண் விளக்கம்

1) பழமொழி நானூறு பா. 291

2) புலவர் கருப்பூர் மு. அண்ணாமலை, நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், ப. 459

3) 'கும்மிப்பாடல் ஓர் ஆய்வு', நாட்டுப்புற இயல் ஆய்வுகள், ஆறு இராமநாதன், ப. 59

4) கும்மிப் பாடல்கள், ஏ.என். பெருமாள், ப.13.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம் - 608 002.

18

உறியடியும் இறை நம்பிக்கையும்

முனைவர் ச. ஈஸ்வரன்

முன்னுரை

நிகழ்த்துக் கலைகளுள் ஒன்று உறியடி. பண்டம் வைக்கும் பொருட்டுச் சிறிது உயரத்தில் தொங்கவிடுவது உறி எனப்படும். அவ் உறியை அடித்து / எடுத்து அதில் உள்ள பண்டத்தை / பொருளைச் சிறுவர் / சிறுமியர் (பெரியவர் அறியாதவாறு) உண்பர். ஸ்ரீ கிருஷ்ணன் தன் சிறுவயதில் கோகுலத்தில் தம் இடையர்குல நண்பர்களுடன் இணைந்து ஆயர்பாடியில் உள்ள இல்லங்கட்குச் சென்று நண்பர்களின் முதுகின் மீதேறி உறியின்மீது இருக்கும் வெண்ணெய்யையும், பண்டத்தையும் உண்பதாகப் புராணம் தெரிவிக்கும். (நவநீதம் - வெண்ணெய் - நவநீத கிருஷ்ணன்) அதனை நினைவு கூரும் பொருட்டு இந்த உறியடி நிகழ்ச்சி இன்றும் வைணவத் திருத்தலங்களில் நடைபெறுகிறது.

வரகூர்

தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டத்தைச் சார்ந்த ஓர் ஊர் வரகூர். (பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து 10கிலோ மீட்டர்) மூலவர் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர், உற்சவர் ஸ்ரீதேவி, ஸ்ரீ பூமிதேவியுடன் இணைந்து காட்சிதரும் ஸ்ரீவெங்கடேசப்பெருமாள். ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் பௌர்ணமிக்கு மறுதினம் காயத்ரி ஜபத்தன்று

தொடங்கி கோகுலாஷ்டமிக்கு மறுநாள்வரை 11 நாட்கள் விழா கொண்டாடப்படும். உறியடிக்கு மறுநாள் ஸ்ரீ ருக்மணி கல்யாணம் நிகழும். உறியடி 10ஆம் நாள் அன்று நிகழும்.

சென்ற ஆண்டு 24.08.08 ஞாயிறு அன்று இந்த உறியடி நிகழ்ச்சி இவ்வாலயத்தில் நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சியைக் காணக் கண்கோடி வேண்டும்.

நூல்

ஸ்ரீ நாராயண தீர்த்தர் என்னும் மகான் (கி.பி. 1580-1660) இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் குறித்து 'க்ருஷ்ணலீலா தரங்கிணி' எனும் பாடல் தொகுப்பு நூலை இயற்றியுள்ளார்.

விளையாட்டு

அந்நாளில் கோகுலத்தில் மாயக்கண்ணன் / கிருஷ்ணன் கோபியர்களின் வீட்டில் உறியில் வைத்திருந்த வெண்ணெய்த் தாழியை உடைத்த திருவிளையாடலை நினைவு கூர்கிறது இவ்வுறியடி.

உயர்ந்த வழுக்கு மரத்தின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் தின்பண்டங்களுடன் வெண்ணெய்யும் கொண்ட உறியையும் எடுப்பதற்குப் போட்டியிடும் பக்தர்களின் கூட்டம் ஒருபுறம். அந்த பக்தர்களின் மீது தண்ணீரை வீசியடித்து / திணறடிக்கும் மற்றொரு பக்தர்க் கூட்டம் மறுபுறம். மேலே கட்டப்பட்டிருக்கும் உறியில் உள்ள பொருள் எடுக்கப்படும்வரை இரவு தொடங்கி இவ்வுறியடி நிகழ்ச்சி மறுநாள் அதிகாலைவரை நடைபெறும்.

தத்துவம் / நம்பிக்கை

வழுக்கு மரத்தின் உச்சி அருகே உயரமான உறியில் உள்ள வஸ்துவே (தின்பண்டங்கள்) பரமாத்மா. அதை உடைத்து / எடுத்து - அடைய முற்படும் மக்கள் / பக்தர்கள் ஜீவாத்மாக்கள். அதை அடைய முயலும்போது ஏற்படும் தடங்கல்களே வீசி அடிக்கப்படும் தண்ணீர். பரமாத்மாவை அடைய முற்படும் யோகசாதனையின்போது நாம் பலமுறை ஏமாறலாம் / வழுக்குமரம்போல சறுக்க நேரிடலாம். இவ்வாறு ஏற்படும் இடையூறுகளுக்கு இடையே உச்சியில் இருக்கும் அந்த வஸ்துவையே இலட்சியமாகக் கொண்டு இறையருள் பெறலே மனித நோக்கம். இத்தத்துவத்தை எளிமையாகவும் / தெளிவாகவும் வெளிபடுத்துவதே இவ்வுறியடித் திருவிழா ஆகும்.

"உறியடியோ கோவிந்தொ!".
"உறியடியோ கோவிந்தொ!".

என்ற ஆன்மீக அன்பர்களின் பக்திக்குரல் ஒன்று மட்டுமே அப்போது வரகூரில் கேட்கும். இரவு பத்து மணிக்கு அபிஷேகம் முடிந்து சிறப்பு அலங்காரத்தில் நின்ற திருக்கோலத்தில், இடக்கையில் பெரிய வெள்ளிக்குடத்தை அணைத்திருக்கிறார் பாலகிருஷ்ணர். அக்குடத்தில் வெண்ணெய் ததும்புகிறது.

உறியடி அன்று வரகூரே கோகுலம். அங்குள்ள அந்தணர்களே கோபியர்கள். பெருமாள் கோபாலனாகத் தோற்றமளிக்கிறார்.

இறைவனுக்குப் பின்னால் பக்தர்களால் அங்கப்பிரதட்சணம் (படுத்து உருண்டு வருதல்) நடக்கிறது. இறைவன் உலாவின் முன்புறம் வேதங்களும், பஜனைகளும், பிரபந்தங்களும் பாடப்பெறுகின்றன. வரகூரில் உள்ள 'கடுங்கால்' எனும் வாய்க்காலில் குளித்து, நாமம் இட்டுக் கொண்டு உறியடி விளையாட்டில் பங்கேற்க ஆர்வமுடன் வருகின்றனர் பக்தர்கள்.

இறைவனின் லீலைகள்

உறியடியும் வழுக்கு மரமும் விளையாட்டுகள் மட்டுமல்ல. ஸ்ரீ கிருஷ்ண லீலைகளான இவைகட்குத் தத்துவங்கள் உண்டு. மோட்சம் / பேரானந்தநிலை அடைய (அறிவு பெற்றுப் பூரண ஞானம் பெற) உறியடி நிகழ்த்தப் பெறுகிறது. உறியடியில் இருக்கும் தின்பண்டங்கள் ஈடு இணையற்ற பிரசாதமாகும்.

முடிவுரை

"உறியடியோ கோவிந்தொ!". என்ற நல்வார்த்தை காதில் விழ வரகூர் திருத்தலம் செல்லல் நலமே பயக்கும். உறியின் மீது உள்ள ஒப்பற்ற பொருள் நமக்கும் கிட்டட்டும். நாமும் அனைத்து விதமான வளமும் நலமும் பெறுவோம். பிறரையும் பெற வைப்போம்.

பார்வை நூல்கள்

1. ஸ்ரீ நாராயண கவி. ஸ்ரீ கிருஷ்ணத் சிக்யோத்ஸவ பிரபந்தம் (ஸ்ரீ நாராயண தீர்த்தர் அறக்கட்டளை. சென்னை-28).
2. வரகூர் ஸ்ரீ வேங்கடசப்பெருமாள் கோயில் உத்ஸவங்கள் / விவரங்கள். 2008-2009. வரகூர் -613 101.

பிற

கட்டுரையாளர் உறியடி நிகழ்ச்சி நடந்த நாளில் (24.08.08) பங்கு பெற்றுக் கண்கூடாகக் கண்ட மறக்கவியலா / மெய்சிலிர்க்க வைக்கும் ஆன்மீகத் திருவிழா / நிகழ்ச்சியே இக்கட்டுரை.

◆

இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தேசியக்கல்லூரி,
திருச்சி-1

19

பாவைக்கூத்து - அன்றும் இன்றும்

ச. உமாமகேஷ்

கிராமியக் கலைகள் கிராமப்புற மக்களின் பொழுதுபோக்குக் கூறுகளுள் ஒன்றாகும். கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை, நையாண்டி மேளம் போன்ற பலவும் கிராமியக் கலைகளாக விளங்குகின்றன. நாகரிகத்தின் தொடக்கக் கலைகளாக விளங்குகின்றன. நாகரிகத்தின் தொடக்கக் கலையாக, பொழுதுபோக்குக் கலையாகத் தோற்றம் பெற்றவை ஆடலும் பாடலும்தான். ஆடல், பாடல்களின் அடுத்த நிலையில் தான் பிறகலைகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

கலைகளின் பாகுபாடு

கலைகளைத் தொன்மக்கலை (Primitive art) என்றும், நாட்டுப்புறக் கலை (Folk art) என்றும், திருந்திய கலை (Classical art) என்றும் அதனுடைய வளர்ச்சி நிலைகளைக்கொண்டு பாகுபடுத்தலாம்.

சங்க இலக்கியத்தில் பாவை விளையாட்டு

சங்ககால மகளிர் விளையாட்டுகளுள் மிகச்சிறந்த விளையாட்டு பாவை விளையாட்டாகும். இந்தப் பாவை விளையாட்டின்போது எம்பாவாய் என விளித்துப் பாடும் பாட்டு பாவைப் பாட்டாகும். நீரோரங்களில் படிந்த வண்டல் மணலில் பாவை செய்து விளையாடும்

விளையாட்டு இது. வண்டல்பாவை என அழைக்கப்படுகிறது. வண்டல் பாவையானது எளிதில் சிதையக் கூடியது என்பதனை,

"வண்டல் பாவை சிதைஇய வந்து"

(நற். 141: 6-7)

என்னும் அடிகள் சுட்டுகின்றன. மகளிர் மண்ணாலும், மரத்தாலும் செய்த பாவைகளை வைத்து ஆடினர் என்பதனை,

"தெற்றிப் பாவை திண்மணல் அயரும்மென்
தோள் மகளிர்"

(நற். 141: 6-7)

என நற்றிணை கூறுகின்றது. கடலின் அலைகளில் நுழைந்து விளையாடி மணற்பரப்பில் வண்டல்பாவை செய்தும் ஐம்பொறிகளால் விருப்பம் நீங்கப் பெறாதவர்களாய் பகற்பொழுதெல்லாம் விளையாடி மகிழ்ந்தனர் என்பதனை,

"பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல் விளையாடி"

(பட். பாலை. 102-103)

என்ற அடிகள் மூலம் அறிய முடிகின்றது. கடற்கரையில் அலை வந்து மோதுமிடத்தில் பாவை வைத்தாடினர். பெரும் அலைகள் வரும் போது பாவையை இழுத்துச் சென்றன. இப்பாவை மண்ணால் செய்யப்பட்டனவாதல் வேண்டும். கடல் பாவையினை இழுத்துச் சென்ற செய்தி,

"தெண்டிரை பாவை வௌவலின்"

(ஐங். 125-1)

எனக் கூறப்படுகின்றது. கடல் பாவையினை இழுத்துச் சென்றமையால் இளம் மகளிர் சினங்கொண்டனர். தம் தளிர்க் கரங்களால் மணலை வாரி எறிந்து கடலைத் தூர்க்க முயன்றனர் என்ற செய்தியினை,

"வண்டற் பாவை வௌவலின்
நுண்பொடி அளைக்கிக் கடல் தூர்ப்போளே"

(ஐங். 124: 1-2)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. பாவை விளையாட்டின் வளர்ச்சி நிலையாகவே பாவைக்கூத்துகளைக் காணுகிறோம். விளையாட்டிலிருந்து கூத்துகள் வளர்ந்தமைக்கு அடிப்படையாகப் பாவை விளையாடலைச் சான்றாக இவ்விடத்தில் கூறலாம்.

பாவைக்கூத்து

கதையாடலுக்கும் நாடக நிகழ்த்துதலுக்கும் பொருள்களைப் பயன்படுத்தும் பண்பாட்டு மரபுகளுள் மிகவும் பழமையானது பாவை

கூத்தாகும். மானுடக் கைகளால் உயிரற்ற பொருள்களை இயக்கி உயிர்பெற வைத்துக் கதை சொல்லும் மரபுக்குப் பாவைக்கூத்து சிறந்த சான்றாகும்.

பாவைக்கூத்து என்பது தனித்தன்மை வாய்ந்த ஒரு கருத்துப் புலப்படுத்த நிகழ்த்தும் கலையாகும். நிகழ்த்துனனும், பார்வையாளரும் ஓரிடத்தில் ஒரு காலப் பின்னணியில் ஒருங்கிணைந்திருக்கும்போதே நிகழ்த்துதல் நடைபெறும். திரைப்படக் காட்சி, தொலைக்காட்சி போன்றவற்றில் செய்தி வேறொரு ஊடகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. ஆனால், பாவைக்கூத்தில் நிகழ்த்துனனிடமிருந்து பார்வை யாளனுக்கு உடனடியாகவும் நேரடியாகவும் பாவைகளைக் கொண்டு கருத்து புலப்படுத்தப்படுகின்றது.

தோற்பாவைக் கூத்து

தோற்பாவைக் கூத்தே தமிழகத்தில் பெருவழக்காக உள்ளது. தோற்பாவைகளை ஆட்டி இயக்கி அவற்றின் நிழலைத் தரையில் விழச் செய்து, பாட்டாலும் உரைநடையாலும் கதை சொல்வதே தோற்பாவை நிழற்கூத்தாகும்.

நிகழ்த்துமுறை

மரப்பொம்மைகளைக் கொடிக் கம்பிகளில் இணைத்தும் துணிப் பொம்மைகளைக் கைகளில் மாட்டிக் கொண்டும் தோற்பாவைகளை இயக்கியும் பாவைக்கூத்துகள் நிகழ்த்தப்பெறும்.

நிகழ்த்தப்படும் கதைகள்

சீதா கல்யாணம், சீதை சிறையெடுப்பு, வாலிவதை, இலங்கா தகனம், இராமர் பட்டாபிஷேகம் போன்ற பகுதிகளையும், நல்லதங் காள், ஞானசவுந்தரி கதை போன்றவற்றையும் இவர்கள் பாவைக் கூத்தாக இயக்கிக் காட்டுகின்றனர்.

கலையின் கூறுகள்

தோற்பாவை நிழற்கூத்தில் 1. கடவுள் வாழ்த்து 2. கோமாளி தன்னறிமுகப் பாடல் 3. கூத்து அறிமுகம் 4. நகைச்சுவைக் காட்சி 5. கதை ஆரம்பப் பாடல் 6. கதை நிகழ்ச்சி 7. நகைச்சுவைக் காட்சி 8. கதை முடிவு என்ற எட்டு வகையான சிறுகூறுகளின் பிணைப்பைக் காணமுடிகின்றது.

கலைஞனின் திறமை

ஆந்திர நாட்டிலும், ஒரிசாவிலும், மராட்டியத்திலும், கர்நாடகத்திலும் பலர் பாவையை ஆட்டி இயக்குகின்றனர். ஆனால், தமிழகப் பாவையாட்டி, பொம்மையை இயக்குபவராகவும் பாத்திரத் திற்கேற்பக் குரலை மாற்றி உரையாடுபவராகவும், பாடகராகவும், மத்தளம் வாசிப்பவராகவும் காலில் கட்டையைக் கட்டிக்கொண்டு பாவைகள் சண்டை போடும்போது ஒலி எழுப்புகிறவராகவும் பல்திறம் வாய்ந்தவராகச் செயல்படுகிறார். மேடைக்கு வெளியே தோலின் நுணுக்கங்களை அறிந்தவராக, இயக்குநராக, ஓவியராக, நிர்வாகியாகச் செயல்படுகிறார்.

கேலிப் பாத்திரங்கள்

தமிழகத் தோல்பாவைக் கூத்தில் நகைச்சுவையூட்டுவதற்காகவே படைக்கப்பட்ட பாத்திரங்கள் உச்சிக்குடும்பன், உழுவைத்தலையன், மொட்டையன் என்பவை. இந்தப் பாத்திரங்களைக் கொண்டே சமூகத்தைக் கேலிசெய்து சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றனர்.

இந்தியாவின் தென்மாநிலங்களில் விழாக்களின்போதும், பொழுது போக்குக் கலைநிகழ்ச்சிகளாகவும் இக்கலை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் நாட்டுப்புறக் கலைகள் அழிந்து கொண்டும் மறைந்துகொண்டும் மாறிக்கொண்டும் வருகின்றன. அவற்றைப் பாதுகாத்துப் பேணி, அவற்றைப்பற்றி அறிவியல் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சான்றுகள்

1. தமிழர் கூத்துகள் - ஜான் ஆசீர்வாதம்.
2. தமிழக நாட்டுப்புறக் கலைகள் - ஏ.என். பெருமாள்.
3. வாழ்வியற் களஞ்சியம்: தொகுதி II, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
4. நாட்டுப்புறவியல்: தொகுதி II, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகத்தின் காலாண்டு இதழ், 1985.
5. நாட்டுப்புறவியல் ஆய்வு - சு. சக்திவேல்.
6. நாட்டார் வழக்காற்றியல் - தே. லூர்து.

◆

ஆய்வியல் நிறைஞர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

20

உறியடி

முனைவர் ச. உமாமகேஸ்வரி

முன்னுரை

கலைகள் ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டும் கண்ணாடி. குறிப்பாக, நாட்டுப்புறக் கலைகள் மக்களின் சமூக வாழ்வு, சமய நெறி முறைகள் ஆகியவற்றை விவரிக்கும் சிறந்ததோர் ஊடகமாகத் திகழ் கின்றன. நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றாகத் திகழும் உறியடி பற்றிய சில செய்திகள் இக்கட்டுரையில் தொகுத்து அளிக்கப் படுகின்றன.

நாட்டுப்புறக் கலைகளின் வகைப்பாடுகளில் உறியடி

நாட்டுப்புறக் கலைகளைப் பல்வேறு ஆய்வாளர்களும் பல வகையாகப் பகுத்துக் கூறியுள்ளனர். பொதுவாக நாட்டுப்புறக் கலைகள் சமூகம்சார் கலைகள், சமயம்சார் கலைகள், தொழிற்சார் கலைகள் என மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவை மேலும் தொழில் முறைக் கலைகள், தொழில்முறை அல்லாத கலைகள் என்ற பாகு பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. மேற்கண்ட வகைப்பாடுகளுள் உறியடி, சமயம் சார்ந்த கலைகள் என்ற பிரிவின் கீழ் அமைகிறது.

உறியடி - தோற்றம்

இறைவன் ஸ்ரீ கிருஷ்ணன் வெண்ணெய் திருடிச் செய்த லீலை களை நினைவு கூர்ந்து வழிபடும் வகையிலேயே வைணவத் திருத்தலங்

கள்தோறும் உறியடி உற்சவம் நிகழ்த்தப்படுகிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஸ்ரீ நாராயண தீர்த்தர் இயற்றி அருளிய 'ஸ்ரீ க்ருஷ்ண லீலா தரங்கிணி' என்ற நூலில் உறியடி பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்நூல் வடமொழியில் அமைந்துள்ளது. ஸ்ரீ கிருஷ்ணனின் பிறப்பு முதல் திருமணம் வரையிலான நிகழ்வுகள், பல செய்யுள்கள், பாடல்கள், உரைநடை ஆகியவற்றின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஸ்ரீ கிருஷ்ணர் செய்த சிறுவயது விளையாட்டுகளை விவரிக்கும் இடத்தில் 'உறியடி' பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"அயே ஸகி யசோதே... நந்தஸூனு:"

(ஸ்ரீ க்ருஷ்ண லீலா தரங்கிணி; த்விதிய சர்க்கம்; கத்யம் - 17)

மேற்கண்ட உரைநடைப் பத்தியில் உறியடி பற்றிய விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. "சில இடங்களில் மிக்க உயர்ந்த இடத்தில் உள்ள உறிகளில் உள்ள சட்டிகளைத் தளிர் போன்ற தன் கைகளில் உள்ள பிரம்பு முதலான கம்புகளால் துளையிட்டு அதிலிருந்து பெருகிவரும் பால், தயிர் இவைகளின் ஒழுக்குகளைத் தான் பானம் செய்தும், மற்றவர்களையும் குடிக்கும்படிச் செய்து கொண்டும், சட்டி, பானைகளை உடைப்பவனாகவும்..."

ஸ்ரீ நாராயண தீர்த்தர் வரகூரில் வாழ்ந்த காலத்திலேயே இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இவரே வரகூரில் முதன் முதலில் உறியடி உற்சவத்தை முறைப்படி (பஜனையுடன்) ஆரம்பித்து வைத்தவர் என்ற குறிப்பு கி.பி. 1983இல் வெளியிடப்பட்ட தமிழ்ப் பதவுரையுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி எனும் நூலில் காணப்படுகிறது. (பக். 133)

கி.பி. 1868 முதல் 1935 வரை வரகூரில் வாழ்ந்தவராகக் கருதப் படும் ஸ்ரீ நாராயணகவி என்பவர், வரகூரில் நடைபெற்று வந்த உறியடி உற்சவத்தை விவரிக்கும் வகையில், வடமொழியில் "ஸ்ரீ க்ருஷ்ண சிக்யோத்ஸவ ப்ரபந்தம்" எனும் நூலை இயற்றி உள்ளார். தமிழகத்தில் உறியடி உற்சவம் குறித்த முழுமையான, முதன்மையான நூல் இதுவே.

மேற்கண்ட குறிப்புகளால் தென்தமிழகத்தில் உறியடி உற்சவம் முதன்முதலில் வரகூரில் ஸ்ரீ நாராயண தீர்த்தரால் துவக்கப்பட்ட காலமே இதன் தோற்றமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

உறியடி

'உறி' என்பது சிறுசிறு மூங்கில் கம்புகளைக் கொண்டு பாய் போல் முடைந்து, அதைச் சுருட்டி, அதன் உள்ளே நடுவில் புதிய மண் சட்டியில் 'தின்பண்டங்களை' வைத்து நீண்ட மத்தளம்போல்

இறுகக் கட்டப்பட்டு குறுக்கு மூங்கிலின் ஒரு நுனியில் தொங்க விடப் பட்டிருக்கும். மூங்கிலின் மறு நுனியில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றைச் சூத்திரதாரன் கீழ்நோக்கி இழுக்கும்போது உறிமேல் நோக்கியும், அவன் கயிற்றைத் தளர்த்தும் பொழுது உறி கீழ்நோக்கியும் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். (ஸ்ரீ க்ருஷ்ண சிக்யோத்ஸவ ப்ரபந்தம், பக் *189 - 190)* இவ்வாறு அமைக்கப் பட்டிருக்கும் உறியை அடித்து, கலயத்தில் (மண்சட்டி) இருக்கும் பண்டங்களை எடுக்கும் நிகழ்வே உறியடி எனப்படுகிறது.

தற்காலத்தில் உறி அமைக்கும் விதமும், உறியில் கட்டப்படும் கலயத்தில் வைக்கப்படும் பொருட்களும் ஊருக்கு ஊர் வேறுபடுகிறது. உதாரணமாக, திருச்சிராப்பள்ளி நவநீத கிருஷ்ணன் கோயில் முன்பு அமைக்கப்படும் உறி, நான்கு வரிசைகளைக் கொண்டதாயும் வரிசைக்கு *4* கலயங்கள் வீதம் *16* கலயங்களைக் கொண்டதாயும் இருக்கும். இவ் வரிசைகளுக்கிடையே விதவிதமான பழங்களும் வரிசையாகக் கட்டப் பட்டிருக்கும். ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் உறியில் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கும் கலயத்தினுள் பால், தயிர், நீர் ஆகியவை நிரப்பப்பட்டிருக்கும்.

இரட்டை உறி

சில இடங்களில் நீண்டதோர் மூங்கில் கழியை நட்டுவைத்து அதன் மேற்புற நுனியில் இருந்து சற்று கீழே இருக்கும் வகையில் ஒரு பலகை பொருத்தப்பட்டு அதன் இரு நுனியிலும் உறி அடுக்குகளைத் தொங்கும் வகையில் அமைப்பர். இது இரட்டை உறி எனப்படுகிறது. உறி அடிப்பவர் ஒருவர் நடுவில் நின்றுகொண்டு இரண்டு உறி அடுக்கு களையும் அடிக்க முயற்சிப்பார். அச்சமயம் இரண்டு உறி அடுக்குகளின் கயிற்று நுனியை உறி இழுப்பவர் ஒருவரே இரு கைகளிலும் பிடித்தவாறு மாறிமாறிக் கீழேயும் மேலேயும் செல்லும் வகையில் இழுப்பார். அவ்வாறு செல்லும் உறிகளை, உறி அடிப்பவர் லாவகமாக அடிப்பது காண்போரை வியப்பில் ஆழ்த்தும். இரட்டை உறி அரிதாகச் சில இடங்களிலேயே கட்டப்படுகின்றது. குறிப்பாக, திருச்சிராப்பள்ளி நவநீத கிருஷ்ணன் கோயில் உறியடி உற்சவத்தின் போது கோயில் சுற்று வட்டாரத்தில் மூன்று இடங்களில் இரட்டை உறி கட்டப்படுகின்றன.

உறியடி - பொதுவான அம்சங்கள்

- உறியை இழுத்தல், அறுத்தல் ஆகிய பணிகளை வழிவழி வந்த குடும்பத்தாரே (பரம்பரை) மேற்கொள்வர்.

- உறி அடிப்பதில் பலர் பங்கு கொண்டாலும் முறைக்காரரே முதலில் உறி அடிக்கும் உரிமை கொண்டவர்.
- முன்பு இடையர் / தலைமை இடையருக்குக் கோயில் மரியாதை செய்த பின்பே உறியடி துவங்குகிறது.
- உறியை அடிப்பவர் எளிதில் அடிக்க இயலாதபடி, அவரைச் சூழ்ந்திருப்போர் தண்ணீரை அவர்மீது அடிக்கும் வழக்கம் காணப்படுகிறது.
- உறியடியைத் தொடர்ந்து வழுக்கு மரம் ஏறுதலும் பெரும்பாலான இடங்களில் காணப்படுகின்றன.

உறியடி - சமயம்சார் கலை

வைணவத் திருத்தலங்களில் கண்ணன் பிறப்பை (ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி) உற்சவமாகக் கொண்டாடுகின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரம் இறைவனுக்கு செய்யப்பட்டு, இரவு பஜனை செய்யப்படுகிறது. கிருஷ்ண ஜெயந்திக்கு மறுநாள் இரவு நாதஸ்வர இசையுடன் சுவாமி புறப்பாடு (வீதி உலா) செய்யப்படுகிறது. அப்போது கோயில் முன்பும், தெருக்களில் ஆங்காங்கும் உறியடி, நிகழ்த்தப்படுகிறது. உறியடி முடிந்தபின் சுவாமியைக் கோயிலுள் கொணர்ந்து தீபாராதனை செய்யப்படுகிறது. இவ்வாறு, சடங்கு முறையில் செய்யப்படும் உறியடி ஆங்காங்கு சிறிது மாறுபடுவதும் உண்டு.

உறியடி - வீர விளையாட்டு

சில இடங்களில் உறியடி, ஒரு வீர விளையாட்டாக நிகழ்த்தப்படுகிறது. உதாரணமாக மதுரை சௌராஷ்டிரா கிருஷ்ணன் கோயிலில் நடைபெறும் உறியடியைக் கூறலாம். இதில் உறியடிப்பவர் கிருஷ்ணர் வேடமிடுவதும் உண்டு. உறியடியின்போது இங்கு நையாண்டி மேளம் இசைக்கப்படுகின்றது.

கிருஷ்ண ஜெயந்தி திருநாள் மட்டுமின்றி சில கிராமங்களில் ஊர்த் திருவிழா நிறைவு நாளன்று உறியடி விளையாட்டு நிகழ்த்தப்படுவது தற்கால வழக்கமாக உள்ளது. உதாரணமாக, புதுக்கோட்டையில் வயலோகம் என்ற கிராமத்தில் வீற்றிருக்கும் இராஜ அம்பாள் கோயிலில் வைகாசி மாதத் திருவிழா 18 நாட்கள் நடைபெறுகிறது. நிறைவு நாளன்று 18 பட்டி மக்கள் அனைவரும் 2 குழுவினராகப் பிரிந்து உறியடி விளையாட்டில் கலந்து கொள்வர். இங்குக் கட்டப்படும் உறியில் தங்கம் அல்லது மதிப்பு மிக்க பொருள், பஞ்சாயத்தாரால்

பரிசாக வைக்கப்பட்டிருக்கும். உறிப் பானையை எளிதில் உடைக்க இயலாத வகையில் பானையைச் சுற்றிப் பல்வகைப் பழங்களால் சுற்றப் பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். உறி அடித்தபின் பரிசுப் பொருளைச் சிலர் இறைவனுக்கே காணிக்கையாகக் கொடுப்பதும் உண்டு.

உறியடியை அடிப்படையாகக் கொண்டே பானை உடைத்தல் போட்டி, பொங்கல் திருநாளை முன்னிட்டுப் பல ஊர்களில் நிகழ்த்தப்படுகின்றது. (உ-ம்) சிவபுரம் (கும்பகோணம்) - ஒரு சில இடங்களில் உறியடி தற்போது தொழில்முறைக் கலையாக மாறியுள்ளது என முனைவர் ஆறு. இராமநாதன் அவர்கள் "நாட்டுப்புறக் கலைகள்" என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார் (பக். 223).

உறியடியில் இசை

வைதீக முறைப்படிக் கோயில்களில் நிகழ்த்தப்படும் உறியடியில், உறியடிக்கென்று பாடல்களோ, இசையோ பயன்படுத்தபடுவதில்லை. உறியடி முடிந்தபின் அதன் சிறப்பைக் கூறும் பாடல்கள் அல்லது வேறு பாடல்களையே பஜனை கோஷ்டியினர் சன்னதியில் பாடுவர். உதாரணமாக, வரகூரில் "உறியடி கீதம்" பாடப்படுகிறது. ஆனால், உறியடியை வீர விளையாட்டாகச் செய்யும் சில இடங்களில் நையாண்டி மேளக் குழுவினர் பிரபலமான நாட்டுப்புற மெட்டுகளையே அச்சமயத்தில் இசைக்கின்றனர்.

முடிவுரை

நம் முன்னோர்களால் வகுத்தளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயலையும் ஆழ்ந்து சிந்தித்தால் மக்களுக்கான வாழ்வியல் சிந்தனைகள் மிளிர்வதைக் காணலாம். அவ்வகையில் உறியடி, வழுக்கு மரம் ஆகியவையும் மனிதன், பல சோதனைகளையும், இடையூறுகளையும் கடந்து அனுபவங்களால் அறிவு பெற்று இறுதியில் பேரானந்த நிலை எனும் பரிசைப் பெறவேண்டும் என்பதைக் குறிக்கவே ஏற்படுத்தப் பட்டுள்ளன.

துணை நூல்கள்

1. ஸ்ரீ க்ருஷ்ண லீலா தரங்கிணி (முதல் பாகம்), வெங்கடேசப்ரியா - தமிழ் உரையுடன் ஸ்ரீ நாராயண தீர்த்த கல்வி அறக்கட்டளை வெளியீடு.

2. ஸ்ரீ க்ருஷ்ண சிக்யோத்ஸவ ப்ரபந்தம், ஸ்ரீ நாராயணகவி (தமிழ் உரையுடன்)

3. நாட்டுப்புற இயல் ஓர் ஆய்வு, முனைவர் சக்திவேல்

4. நாட்டுப்புற கலைகள், முனைவர் ஆறு. இராமநாதன்

தகவலாளர்கள் (கள ஆய்வு)

1. திரு. வடவேங்கடக் கோனார், திருச்சிராப்பள்ளி
2. திரு. ஸ்ரீனிவாசன், திருச்சிராப்பள்ளி
3. வெங்கட்ராம பாகவதர், வரகூர்
4. மாதவ பட்டாச்சாரி, வரகூர்
5. திரு. மீனாட்சிசுந்தரம், மதுரை
6. சிவனேசன், புதுக்கோட்டை
7. ஸ்ரீ ராமக்ருஷ்ண பாகவதர், திருவிசலூர் (கும்பகோணம்)

◆

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

21
கோலாட்டம்

கோ. கண்மணி

முன்னுரை

மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அனைத்து நிகழ்ச்சிகளையும் கொண்டாட்டம் எனலாம். ஒவ்வொரு மனிதனும் அக்காலம் முதல் இக்காலம்வரை அவரவருக்கு ஏற்ற, கிடைத்த தொழில்களைச் செய்து வருகின்றனர். அவற்றில் வருமானமும் நிறைவும் கிடைக்குமே தவிர மகிழ்ச்சி கிடைக்கவில்லை. இதனால் மகிழ்ச்சிக்காக வருடத்திற்கு ஒருமுறையோ இருமுறையோ ஒவ்வொரு ஊர்களிலும் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர குடும்பத்தினரின் கொண்டாட்டங்களான காதணிவிழா, மஞ்சள் நீராட்டுவிழா, வளைகாப்பு விழா, மணவிழா போன்ற நிகழ்ச்சிகளின்போது கலைகள் நடத்தப்படுவது உண்டு.

சமயம் சார்ந்த விழாக்களில் பொதுமக்கள் கும்மி, கோலாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு ஆடிப்பாடுவர். தொழில்முறைக் கலைஞர் களையும் அமர்த்திக் கலைகளில் ஈடுபடுத்துவர். உடுக்கைப்பாட்டு, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து போன்ற நிகழ்ச்சிகளில் கதைத் தொடர்புப் பாடல்களையும் கதைத் தொடர்பில்லாப் பாடல்களையும் பாடுவர். இவற்றை நிகழ்த்துக் கலைகள் எனவும் அழைக்கின்றோம். இவற்றுள் கோலாட்டத்தைக் காண்போம்.

கோலாட்டம்

நளினத்தன்மை கொண்ட சிலம்ப அடிமுறைகள், மாறிமாறிப் போடப்படும் அளவான கால அடவுகள் ஆகியவற்றோடு கருவி இசை மற்றும் குரலிசை ஒருங்கிணைப்புப் பின்னணியில் முன்பாட்டு - பின்பாட்டு முறையைப் பயன்படுத்திக் குழுவினரால் நடத்தப்படும் ஒரு நிகழ்த்துக்கலை வடிவமே கோலாட்டம். முதன் முதலில் கிருஷ்ண பகவானுக்காக ஆடப்பட்ட ஆட்டம் கோலாட்டம். கோல்களைக் கையில் பிடித்து ஆண்களும் பெண்களும் தனித்தனியாகவோ ஒருங்கிணைந்தோ அடித்து ஆடும் ஆட்டம். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த ஆட்டம் காணப்படுகிறது.

ஒவ்வொரு பகுதியிலும் இந்த ஆட்டத்திற்கு வெவ்வேறு பெயர்கள் காணப்படுகின்றன.

கோலாட்டம் பொழுதுபோக்கினை நோக்கமாகக் கொண்ட ஆட்டமாகவே தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. குமரி மாவட்டத்தில் இந்துக்களின் கோயில் திருவிழாக்களில் கோலாட்டம் சிறப்பு நிகழ்ச்சியாக நிகழ்த்தப்படுகிறது.

1. குமரி மாவட்டம் - களியல், களியல் அடி, களியல் ஆட்டம்
2. தஞ்சை மாவட்டம் - கிட்டியடித்தல், கிட்டியாட்டம், கிட்டியடியல்
3. திருச்சி மாவட்டம் - வேந்தானை ஆட்டம்
4. ஈழத்தில் - வசந்தன், வசந்தன் கூத்து.

கோலாட்டம் நிகழ்த்தப்படும் இடங்கள்

திருவிழாக்கள், திருமணம், பூப்புனித நீராட்டு, கிரகப்பிரவேசம், வரவேற்பு விழாக்கள், வெற்றி விழாக்கள், பள்ளி, கல்லூரி ஆண்டு விழாக்கள், வயது முதிர்ந்தவர்களின் இறப்பு நிகழ்ச்சிகள் போன்ற சூழல்களில் நடத்தப்படுகின்றன. கிறித்தவர்கள் கிறிஸ்துமஸ் விழாக்களிலும் திருமணம் மற்றும் பிற விழாக்களிலும் இஸ்லாமியர் பெருநாட்கள், திருமண நிகழ்ச்சிகள், சுன்னத் கல்யாணம் முதலான நிகழ்ச்சிகளிலும் களியல் ஆட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்றனர். தற்காலத்திய அரசியல் - பண்பாட்டுப் புலவர்கள் இயற்றிய பாடல்கள், திரை இசைப் பாடல்கள் ஆகியவை கோலாட்டக் கலைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

கோலாட்டக் கலை நிகழ்த்துமுறை

கோலாட்டம் நிகழ்த்துவதற்கு மிக முக்கியமான பொருள் கோல் ஆகும். இது அளவாலும் உருவாக்கப்படும் முறையாலும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. தச்சு வேலைப்பாடு மிக்க வர்ணம் தீட்டி பித்தளைப் பூண்மாட்டி, மணிகள் கோர்த்து, அலங்கரிக்கப்பட்ட கம்புகளுடன் ஆடுகின்றனர். கோலாட்டக் குச்சிகள், அடிக்கம்பு, சலங்கைக்கம்பு என்று குறிப்பிடப்படும்.

கோலாட்டக் கலைஞர்களைக் கொண்ட குழுவுக்குக் "கோலாட்டச் செட்டு" என்று பெயர். ஒவ்வொரு குழுவிலும் எட்டு இணைகள் கொண்ட பதினாறு பேர் அல்லது ஆறு இணைகள் கொண்ட பன்னிரு ஆட்டக்கலைஞர்கள் இடம் பெறுவர். இரட்டைப் படையில் இருக்க வேண்டும். ஆட்டக்காரர்கள் அன்றி வேறு சிலரும் குழுவில் இடம் பெற்றிருப்பர். அவர்களுள் குழுவுக்குப் பயிற்சி கொடுத்துத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் "வாத்தியார்" என்ற குரு முக்கியமானவர். இவர் முன்பாட்டுப் பாடுவார். இவரைத் தொடர்ந்து பின்பாட்டுப் பாடும் மூவர் இடம் பெற்றிருப்பர். மற்றொருவர் பம்பை அடிப்பவர். ஆட்டக் கலைஞர்கள், மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய வண்ணங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்ட காற்சட்டை மற்றும் பனியன் உடுத்தி யிருப்பர். ஒவ்வொருவரும் சுமார் இரண்டடி நீளமுடைய இரண்டு கோல்களைப் பெற்றிருப்பர். கோல்களை ஒன்றோடொன்று மோதி எழுப்பும் ஒலிகளுக்கும் கால அடவுகள், பம்பை அடி ஆகியவற்றிற்கும் இடையே ஓர் ஒத்திசைவும் ஒருங்கிணைப்பும் இருக்கும். கோலாட்டம் தொடங்குவதற்கு முன்னால் அனைவரும் வட்ட வடிவமாக ஒருவரை ஒருவர் பார்த்து இணையாக நிற்பர். பின் பாட்டுக்காரரின் குரலிசை யோடு ஆட்டக்காரர்களும் பாடிக்கொண்டே பம்பையின் தாளத்திற் கேற்ப, கோல்களை மோதி துள்ளித் துள்ளி ஆடியவாறு எதிரெதிர்த் திசையில் வட்டமாக இடம்பெயர்ந்து வருவர். ஆட்டச் சுழற்சி விரைவாக நிகழும். ஒவ்வொருமுறை பாடி முடிக்கப் பட்டவுடன் சற்று இடைவெளிவிட்டு அடுத்த ஆட்டம் ஆடுவர்.

உதாரணம்

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் ஆடப்படும் குரவைக் கூத்தும் கோலாட்டம் எனப்படுகின்றது.

"குடமுதல் இடமுறையா குரல் துத்தம்
கைக்கிளை உழை இளி விளரி தாரம் என
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே"

அதன்படி "குரல்" என்று பெயரிடப்பட்டவள் "மாயவன்" என்று குறித்தாள். "இளி" வெற்றிமிகு பலதேவன் ஆனாள். "துத்தம்" என்று பெயரிடப்பட்டவள் நப்பின்னை ஆனாள். மற்றவர்களை மாயவனுடன் முன் இருந்த வரிசையில் நிற்கச் சொன்னாள்.

"அவர்தம் செந்நிலை மண்டிலத்தால் கற்கடகக் கைகோ ஒத்து"

"குரல் மந்தம் ஆக இளி சமன் ஆக
வரன் முறையே துத்தம் வலியா உரனிலா
மந்தம் விளரி பிடிப்பாள் அவள் நட்பின்
பின்றையப் பாட்டு எடுப்பாள்"

குரல் முதலாகத் தாரம் ஈறாகப் பெயரிடப்பட்ட பெண்கள் சமமாகவும், நண்டுபோல் கைகோர்த்தும், நின்றபடி ஆடுவதற்கு ஆயத்தமாகி அதற்கேற்ற தாள உறுப்புகளை ஆராய்ந்தனர். பின்னர், மாயவன் என்று பெயரிடப்பட்ட "குரல்" தனது கிளையாகிய "இளி" என்ற "பலதேவன்" என்று குறிக்கப்பட்ட பெண்ணைப் பார்த்து பரந்த கொல்லைப் புறத்தில் இருந்த குருந்த மரத்தினை உரலால் கட்டுண்ட போது முறித்த கண்ணனை இனிய முல்லைப் பண்ணால் பாடுவோம் என்று கூறி, குரல் மந்த சுரமாக, இளி நரம்பு சமமாக, அந்த வரிசையில் துத்தநரம்பு வலிய சுரமாக விளரியை வலிவற்ற மந்த சுரமாக, அதன் நட்பு நரம்பாகிய துத்தத்தில் நப்பின்னையாக குறிக்கப்பட்டவள் பாடத் தொடங்கினாள்.

கோலாட்டப் பாடல்கள்

1.சபை வந்தனம்

"வந்தனம்னா வந்தனம்
வந்தசனங்க குந்தணும் - நான்
வரும்பொழுது வாங்கி வந்தேன்
பூம்புகாரு சந்தனம்

சபைக்குள் வரும் பார்வையாளர்களை, விருந்தினர்களை அன்புடன் வரவேற்பது எங்கும் கடைப்பிடிக்கப்படும் மரபு.

2. காந்தியும் காமராசரும்

"காந்தி வளர்த்த காங்கிரசு கட்சிதானுங்க - நாட்டை
காமராசர் ஆள்வதற்கு முன்வந்திட்டாங்க" (காந்தி)

காந்தி காமராசர், காங்கிரசுக் கட்சிப் புகழ்பாடும் பாடல்.

3. திராவிடத்தை மறந்தாயே

"தென்னாட்டுத் திராவிடனே பாராய்
முன்னால் எழுந்தே நீ வாராய் - தமிழ்" (தென்)

நால்வகை வருண பேதங்கள், நாலாயிரம் சாதிப் பிரிவுகள் உண்டாக்கிய சூழ்ச்சியிலிருந்து எப்போது விடுபடுவாய் தமிழா?

முடிவுரை

கொண்டாட்டப் பாடல்களுள் ஒன்று கோலாட்டம். கோலாட்டம் பற்றியும் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன, எந்தெந்த இடங்களில் நிகழ்த்தப்படுகின்றன என்பதைப் பற்றியும் கோலாட்டப் பாடல்களைப் பற்றியும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூற்பட்டியல்

1. நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் - ஆ.தனஞ்செயன்
2. நாட்டுப்புறக் கலைகள் - ஆறு.இராமநாதன் (நிகழ்த்துக்கலை)
3. சிலப்பதிகாரம் (தெளிவுரை) - ஞா.மாணிக்கவாசகன்
4. நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் - ஆறு. இராமநாதன்

◆

இளநிலை ஆய்வாளர்,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

22
காவடியாட்டம்

ஆ. கணேசன்

'காவடி எடுத்தல்' என்பது முருகக் கடவுளுக்காகச் செய்யப்படும் ஒரு வழிபாட்டுச் சடங்கு நிகழ்ச்சியாகும். தொடக்க காலத்தில் மக்கள் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு இடம்பெயர்ந்தபோது தங்கள் உடைமைகளை ஒரு தண்டின் இருமுனைகளிலும் கட்டித் தொங்கவிட்டுச் சுமந்து சென்றதற்கான சான்றுகள் தொன்மைமிக்க சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் காணப்படுகிறது. ஒளவையார் தன் உடைமைகளை இதுபோன்ற தண்டில் கட்டித் தோளில் சுமந்து சென்றுள்ளார். புறநானூற்றின் 'கா அல்லது காவுதல்' என்னும் சொல், இருமுனைகளிலும் எடைகளைக் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு தண்டினைத் தோளில் வைத்துச் சுமத்தல் என்னும் பொருளில் வந்துள்ளது. காவுதண்டு, காவுதடி, காவடியின் தண்டு அல்லது காவடித் தண்டு என்றாகியிருக்கலாம் எனத் தமிழ்ப் பேரகராதி கூறுகிறது.

பக்திக் காவடி

முருகக் கடவுளின் கோயிலுக்கு நீண்ட தொலைவிலிருந்து செல்லும் பக்தர்கள் முருகனுக்குத் தாங்கள் படைக்க விரும்பும் காணிக்கைப் பொருள்களைத் தண்டுகளின் இருமுனைகளிலும் கட்டித் தோளில் சுமந்து செல்கின்றனர். பின்னர் இக்காவடித் தண்டின் இரு முனைகளையும் மூங்கில் குச்சிகள் மற்றும் பிரம்பினால் இணைத்து

இதன்மேல் அழகான மணிகள் பதிக்கப்பெற்ற பட்டுத் துணிகளைப் போர்த்து இருபக்க முனைகளிலும் மயிலிறகுக் கூட்டுகளைச் சேர்த்துக் கட்டுகின்றனர். காவடியைத் தோளில் சுமந்து ஆடிக்கொண்டே முருகனை வழிபடச் சிறந்த நாளாகிய பங்குனித் திருநாளில் முருகனின் கோயிலை அடைகின்ற செயல் காலப்போக்கில் உருவாயின. பின்னர், காவடி எடுத்தல் என்னும் இச்செயல் வேண்டுதல் நிறைவேற்றச் செயல்களில் ஒன்றாக மாறியுள்ளது. தாங்கள் வேண்டிக்கொண்ட செயல் நிறைவேறியவுடன் அந்த ஆண்டுப் பங்குனித் திருநாளில் முருகன் கோயிலுக்குக் காவடி எடுத்து வருகின்றனர். இவ்வாறு செய்வதை 'நேர்த்திக்கடன் செலுத்துதல்' என்று கூறுகின்றனர்.

பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, திருத் தணி, பழமுதிர்ச்சோலை என்னும் முருகனின் அறுபடை வீடுகளாகக் கருதப்படும் கோயில்களுக்குப் பங்குனி உத்திரத்தின்போது பல இலட்சக் கணக்கான பக்தர்கள் காவடி எடுத்துக் கொண்டு பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து கூட்டங்கூட்டமாக வருகின்றனர். இவ்வாறு, முருகன் கோயிலுக்குக் காவடி எடுத்துக்கொண்டு கூட்டமாக வரும்போது தொலைவை மறக்கவும் சுமையை மறக்கவும் பாடுவதற்கென்றே நூற்றுக் கணக்கான இசைப்பாடல்கள் தோன்றி யுள்ளன. இவை, காவடிச்சிந்துப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. அவற்றில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை யாகும். இப்பாடல்களைப் பாடிக்கொண்டு செல்லும் பக்தர்கள் அவ்வப் போது 'வேல் வேல்', 'அரோகரா' என்னும் ஒலிகளை எழுப்பிக் கொண்டே செல்வதைக் காணமுடிகிறது.

காவடிகளின் வகைகள்

முருக பக்தர்கள் அவர்களின் வேண்டுதலுக்கு ஏற்பப் பலவகை யான காவடிகளை முருகனுக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றார்கள். அவ்வகையில் பாற்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக் காவடி, பஞ்சா மிர்தக் காவடி, சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி, இளநீர்க் காவடி, மச்சக் காவடி, பிள்ளைக் காவடி, அன்னக் காவடி, சேவல் காவடி, செடில் காவடி, குத்துக் காவடி, பறவைக் காவடி, தூக்குக் காவடி, துலாக் காவடி, வேற்காவடி எனப் பலவகையான காவடிகளைப் பழனி முருகன் கோயிலின் திருவிழாக்களில் காணமுடிகிறது.

காவடி எடுத்துச் செல்லும்போது பாடும் பாடல்கள்

முருகன் கோயில் வழிபாட்டில் வாய்மொழி மரபுகள் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. திருவிழாக் காலங்களில் வரும்

நாட்டுப்புற மக்கள் கும்மிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், வேல் பாடல்கள், காவடிப் பாடல்கள் ஆகியவற்றைப் பாடிக்கொண்டு வருகின்றனர். காவடி சுமந்து செல்லும்போது 'முருகனுக்கு அரோகரா', 'வேலனுக்கு அரோகரா', 'கந்தனுக்கு அரோகரா', 'கடம்பனுக்கு அரோகரா' போன்ற பாடல்களையும், 'வேல் வேல் வெற்றிவேல்' என்ற முருக மந்திரங்களையும் எழுப்பிக்கொண்டே செல்கின்றார்கள். இன்றைய காலகட்டத்தில் முருகன் கோயில் திருவிழாக்களில் காவடிப் பாடல்கள் பெருவழக்கில் பாடப்பட்டு வருகின்றன.

குழுத் தாலாட்டு

தாலாட்டுப் பாடல்களின் கூறுகள் காவடிப் பாடல்களில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இவற்றை 'முருகன் தாலாட்டு' அல்லது 'சுப்பிரமணியர் தாலாட்டு' எனக் குறிப்பிடலாம். குழுத் தாலாட்டுப் பாட்டுவகை, முருகன் கோயிலோடு இணைந்து வாய்மொழியாக வழங்கி வருவது. தாய் குழந்தையை உறங்கவைக்கப் பாடும் தாலாட்டுப் பாடலானது, ஒருவர் பாடும் தனிநிலைத் தாலாட்டு ஆகும். ஆயின் முருகன்மீது பலர் சேர்ந்து பாடுவது 'குழுத் தாலாட்டு' ஆகும். தாலாட்டுப் பாடல்கள் மிகப் பழமையான நாட்டுப்புற இலக்கிய வகை ஆகும். அழும் குழந்தையைத் தாலாட்டுப்பாடி உறங்க வைப்பதே தாலாட்டின் நோக்கம். முருகனிடம் தங்களது குறைகளை எடுத்துச் சொல்லி, வேண்டிய வரத்தை அளிக்குமாறு வேண்டித் தாலாட்டு கின்றனர். பழனியாண்டவனின் அருள் பெறுவதே குழுத் தாலாட்டுப் பாடல்களின் முதன்மை நோக்கம் ஆகும். அரசனைத் தூங்க வைப்ப தற்குப் பாடிய நிலையினைக் 'கண்படை கண்ணிய கண்படை நிலையும்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதற்கு இளம்பூரணர் 'இறைவன் கண்படை நிலையைக் குறித்த கண்படை நிலையும்' என்று விளக்கம் தருகின்றார். எனவே, கண்படைநிலை இறைவனுக்கும் உரியதாகும். இறைவனை உறங்கச் செய்வதற்கும் வாய்மொழி மரபில் பாடல்கள் வழங்கி வந்தன என்பதற்குக் குழுத் தாலாட்டுப் பாடல்களைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

ஆட்டக்காவடி

முருகனின் வழிபாட்டுச் சடங்காகக் கருதப்பட்ட இக்காவடி எடுத்தல் என்னும் செயலிலிருந்து காவடியாட்டம் எனப்படும் ஒரு ஆட்டக் கலையே உருவாகிவிட்டது. ஒரு தண்டில் இரு பலகைகளைப் பொருத்தி அந்தப் பலகைகளின் மேற்புறத்தை மூங்கில் பட்டைகளால்

இணைத்து அதன்மேல் பட்டுத் துணியைப் போர்த்துக் கட்டுகின்றனர். இருமுனைகளிலும் பொருத்தப்பட்ட பலகைகளின் இருபக்கங்களிலும் மயிலிறகுகளைப் பொருத்தி இதனைத் தோளில் வைத்து ஆடுகின்றனர்.

இக்காவடி ஆட்டம் இன்று தமிழ்நாட்டில் வழங்கிவரும் தலைசிறந்த நாட்டுப்புற நடனங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு வழங்கி வருகிறது. காவடியாட்டம் கிராமங்களில் திருவிழாக் காலங்களிலும் மக்கள் வாழ்வின் அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளிலும் இடம்பெறும் நாட்டுப்புறக் கலைவடிவமாக மலர்ந்துள்ளது.

காவடியாட்டத்தில் இடம்பெறும் அடைவுகள்

நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்பவர்கள் காவடியாட்டத்தைப் பெரும்பாலும் தனி ஆட்ட நிகழ்ச்சியாக அமைப்பதில்லை. பொய்க்கால் குதிரை, கரகம், குறவன் குறத்தி ஆட்டம் போன்ற மற்ற கலைகள் ஒன்றிரண்டுடன் காவடி ஆட்டத் தையும் சேர்த்து ஏற்பாடு செய்வதுதான் நடைமுறையில் காணப்படு கிறது. கரக ஆட்டம் இடம்பெறும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளில் தவறாமல் காவடியும் இடம்பெற்று வருகிறது. கிராமப்புறங்களில் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்போதும் முதலில் கரகம், பொய்க்கால் குதிரை, அதன்பின் காவடி என்ற வரிசை முறையில் ஆட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெறுகின்றன.

காவடியாட்டக் கலைஞர் காவடியைத் தம் உடலின் தலை, நெற்றி, கண், முதுகு, கழுத்து, முன்புறக் கைகள், மேற்புறக் கைகள், கீழ்ப்புறக் கால்கள், மேற்புறக் கால்கள், வயிறு, நெஞ்சு, முழங்கை, உள்ளங்கை, புறங்கை எனப் பல்வேறு உறுப்புகளில் இருத்திக் காவடியை முன்னும் பின்னும் ஆட்டுகிறார்.

அ. காவடியை உடலின் உறுப்புகள் ஏதேனும் ஒன்றில் இருக்கச் செய்து கைகளால் பிடிக்காமல் மேலும் கீழும் ஆட்டுதல்.

ஆ. ஓர் உறுப்பின்மேல் வைக்கப்பட்ட காவடி கைகளால் பிடிக்கப்படாமல் மேலும் கீழும் அசையாமல் நேராக நிற்க வட்டத்தில் கால்களில் அடைவு போட்டு ஆடுதல்.

இ. காவடியைக் கை தவிர்த்த ஏனைய உறுப்புகள் பிடித்துக் கொண்டு ஆடுதல்.

ஈ. காவடியைக் கைகளால் பிடித்துக் கொண்டு ஆடுதல்.

உ. காவடியைத் தனியாக ஓரிடத்தில் வைத்துவிட்டு ஆடுதல்.

இவை யாவும் காவடி ஆட்டத்தில் இடம்பெறுகின்ற அசைவு களாக அமைந்துள்ளன.

காவடி ஆட்டமும், இசைக்கருவிகளும்

இரண்டு நாகசுரம், இரண்டு தவில், ஒரு ஒத்து, இரண்டு பம்பை, ஒரு கிடுகிட்டி, ஒரு உறுமி, ஒரு தமுக்கு போன்ற இசைக்கருவிகளின் இசைச் சேர்க்கையால் வாசிக்கப்படும் நையாண்டி மேள இசையே காவடியாட்டத்திற்குத் துணை இசையாக அமைந்துள்ளது. காவடிச் சிந்து, நொண்டிச்சிந்து, கிளிக்கண்ணி, மகுடி போன்ற பல மெட்டு களைக் கொண்ட பாடல்கள் காவடியாட்டத்திற்கு இசைக்கப்படு கின்றன.

காவடி ஆட்டத்திற்காக இசைக்கப்படும் நையாண்டி மேளப் பக்க இசைக்கேற்பக் காவடியாட்டக் கலைஞர் காலில் அடைவுகள் போட்டு ஆடுகிறார். காவடி ஆட்டத்திற்கு இசைக்கப்படும் துணை இசைக்கேற்ப ஆட்டக் கலைஞர் காலில் மேற்கொள்ளும் அடைவுகளும் காவடியின் அசைவுகளும் தாளத்திற்கேற்பவே அமைகின்றன. கால் அடைவுகள் மேற்கொள்ள இயலாத சில இடங்களில் பக்க இசைக்கேற்பக் காவடி யில் அசைவுகள் மட்டும் கொடுக்கப்படுகின்றன. உடலில் கழுத்து முதலான பல உறுப்புகளின்மேல் காவடி வைக்கப்பட்டு முன்னும் பின்னும் அசைக்கப்படுகிறது. காவடியின் இவ்வசைவும் தாளத்திற் கேற்பவே அமைந்துள்ளது. கால் வைப்பு முறைக்குக் கால அளவு (தாளம்) ஒரு விதத்திலும் காவடியின் அசைவிற்குக் கால அளவு வேறு விதத்திலும் அமைந்து காணப்படும் அடைவுகளும் இடம்பெற்றுள்ளன.

காவடி ஆட்டம் கரகாட்டத்தைப் போலவே வழிபாட்டுச் சடங்காக இருந்து, பின்னர் பொழுதுபோக்கிற்குரிய ஆட்டக்கலையாக மாறியுள்ளது. கோயிலோடு குறிப்பாக, முருகன் கோயிலோடு தொடர்புடைய இவ்வாட்டம் இன்று பரவலாக இடம்பெற்றுத் தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. சமய உணர்வில் முகிழ்த்த இக்கலை தொழில் முறையாலும் இன்று சிறப்பாக ஆடப்பட்டு வருகிறது.

துணைநூற்பட்டியல்

1. தென்னிந்தியக் கிராமிய நடனங்கள், சடகோபன், வி., சாம்ராஜ் பிரசுரம், சென்னை, *1960.*

2. இந்தியக் கிராமிய நடனங்கள், அப்பாஸ், எம்.ஏ., ஔவை நூலகம், சென்னை, *1959.*

3. Festivals of Tamilnadu, Arunachalam, M., Gandhi Vidyalayam, Tiruchitrambalam, 1980.
4. Traditions of Indian Folk Dance, Kapila Vatsyayan, Indian Book Co., New Delhi, 1977.
5. Tamil Lexicon, Vol.II, University of Madras, Madras, 1982.

◆

முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ் உயராய்வுத்துறை,
அருள்மிகு பழனியாண்டவர்
கலை பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

23
நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் தப்பாட்டக் கலை

முனைவர். அ. கலீல் ரெஹ்மான்

அறிமுகம்

மனிதன் இவ்வுலகில் தோன்றிய முதலே அவன் இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை வாழத் தொடங்கினான். அவன் உணவை ஒருபுறம் தேடியலைய மறுபுறம் இயற்கைச் சீற்றங்கள், விலங்குகள் போன்றவற்றால் பல்வேறு துன்பங்களைச் சந்தித்தான். அவற்றிலிருந்து விடுபட்டு நிலையான அமைதியான வாழ்க்கையினை மேற்கொண்ட போதுதான் கலைகள் பிறந்திருக்கின்றன. மனமகிழ்ச்சி ஒன்றே இக் கலைகளின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. எனவே, மனித உணர்வு வெள்ளத்திற்கு கலைகள்தான் வடிகாலாக அமைகின்றன.

ஒரு நாட்டின் பண்பாட்டினையும் நாகரிகத்தையும், பாரம் பரியத்தையும் வெளிக்கொணர்வது அந்நாட்டில் உள்ள கலைகளே. இக்கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று பிரிவாகப் பிரிப்பர். ஒன்று தொன்மைக் கலை. இரண்டு நாட்டுப்புறக் கலை. மூன்று செம்மைக் கலை. தொன்மைக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும், நாட்டுப் புறக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும், செம்மைக் கலையை உயர்குடி மக்களிடையேயும் காண முடிகின்றது. (முனைவர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப:169) முதன்முதலில்

காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் இயற்கையோடு ஒத்து அவனால் உருவாக்கப்பட்டதே நாட்டுப்புறக் கலைகள். எனவேதான், இன்றைய நிலையில் வளர்ச்சிப் பரிணாமத்தை அடைந்துள்ள பல்வேறு கலைகளின் பிறப்பிடமாக நாட்டுப்புறக் கலைகள் திகழ்கின்றன.

நாட்டுப்புறக் கலைகள்

மனிதன் விலங்குகளிடமிருந்துதான் கலைகளைக் கற்றுக் கொண்டான் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவர்களின் கருத்துக்களுக்கேற்ப நாட்டுப்புற நிகழ்த்து கலைகளான புலியாட்டம், காளையாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கலைகள் விலங்குகளின் செயல்களையே பிரதிபலிக்கும் விதமாக அமைகின்றன. விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் தனது ஓய்வு நேரங்களில் விலங்குகள் போன்ற செயல்களைச் செய்திருப்பதன் பிரதிபலிப்பே மேற்கூறிய நாட்டுப்புறக் கலைகள் பிறக்க முதற்காரணம் என நம்மால் ஊகிக்க முடிகிறது.

தப்பாட்டக் கலை

இன்றைய நிகழ்த்துக் கலைகளில் தப்பாட்டம் எனப்படும் பறையாட்டமும் முக்கிய இடம் வகிக்கின்றது. தமிழக கிராமப்புறங் களில் நிகழும் இசைக் கலைகளுள் தப்பாட்டமும் ஒன்று. பொதுவாக நிகழ்த்துக் கலைகளில் சில கலைகள் குறிப்பிட்ட சாதியினரால் மட்டுமே நிகழ்த்தப்படுகின்றன. சான்றாக தேவராட்டம், சேவையாட்டம் போன்ற ஆட்டக் கலைகள் கம்பளத்து நாயக்கர்களால் ஆடப்படுகின்றன. அறவணக் கொட்டு, மைலாஞ்சிப் பாட்டு, சீனா ஆடியாட்டம் போன்றவை குமரி மாவட்டத்தில் முஸ்லிம்களால் ஆடப்படுகின்றன. அந்த வகையில் தப்பாட்டம் எனப்படும் பறையாட்டம் ஆதி திராவிட இனத்தவரான பறையர்களால் பெரும்பான்மையாக நிகழ்த்தப் படுகின்றது. தற்போதைய சூழ்நிலைகளில் இக்கலையானது பிற நிகழ்த்துக் கலைகளான புலியாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம் போன்ற கலைகளைவிட உயரிய வளர்ச்சியை அடைந்துள்ளது எனலாம். ஏனெனில், விழாக்களில் பிற ஆட்டக்கலைகளைப் பயன்படுத்துவது மிகக் குறைவாகவே காண முடிகின்றது.

தப்பாட்டம் - விளக்கம்

பறையாட்டத்தினைப் பெரும்பாலும் தப்பாட்டம் என்றே அழைக்கின்றனர். இதனைப்பற்றிப் பட்டுக்கோட்டை வட்டத்தி

லமைந்த ஏனாதி கிராமத்திலுள்ள தப்பாட்டக் குழுவின் தலைவரான திரு சூரியமூர்த்தி என்பவரிடம் விளக்கம் கேட்டபோது அவர்,

தப்பாமல் ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்கிறார்.

தப்பா + ஆட்டம் = தப்பாட்டம்

என்று விளக்கம் அளிக்கிறார். அவர் கூறும் இவ்விளக்கம் மிகப் பொருத்தம் உடையதாகவே உள்ளது. தப்பாட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒன்பதுபேர் தேவைப்படுவர். அவர்கள் ஒவ்வொருவரும் இசை முழக்கத்தினையும், ஆட்டத்தின் அடியையும் பிறழாமல் அதாவது, தப்பாமல் ஆட வேண்டும்.

பறையிசைக் கருவிகள்

பண்டைய கால மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடி உண்டுவிட்டு அவற்றின் தோல்களை உலரவைத்து அதனை ஆடையாக அணிவதை வழக்கமாகக் கொண்டவர்கள். விலங்குகளின் தோல்களை உலர்த்துதலின் பொருட்டாக அவற்றின் நான்கு புறங்களிலும் துளையிட்டு மரக்கிளைகளில் இறுகக்கட்டி உலர வைத்தனர். உலர்ந்த தோலானது காற்றின் அசைவால் மரக்கிளைகளில் மோதும்போது எழுப்பிய வேறுபட்ட ஓசையைக் கேட்ட விலங்குகளும் பறவைகளும் மிரண்டு ஓடின. எனவே, ஆதிகால மனிதர்கள் இதனைக்கொண்டு தங்களைத் தாக்க வரும் விலங்குகளை விரட்டப் பயன்படுத்தி இருக்கலாம். பறை என்ற இசைக்கருவி தோன்றியதற்கு இதுவே காரணம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மனிதன் அறிவு வளர்ச்சிக்கேற்ப இத்தோல்களை மரக்கிளைகளில் கட்டி விழாக்களுக்கும் பிறவற்றிற்கும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். எனவே, மனிதனால் முதன்முதலாகக் கண்டறியப்பட்ட இசைக்கருவி இது என்பதால் பறை எனும் இக்கருவியினை இசைக்கருவிகளின் தாய் என்கின்றனர்.

தமிழர்களும் பறையிசைக் கருவிகளும்

பறை இசைக்கருவிக்கும் தமிழர்களுக்கும் உள்ள மிக நெருங்கிய தொடர்பினை தொல்காப்பியம், சங்ககால நூல்கள் போன்ற இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. இக்கருவியினை மங்கல நிகழ்ச்சிகளுக்கும், அரசு தொடர்பான செய்திகளை மக்களுக்கு அறிவிக்கவும், கலை நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர். தொல் காப்பியர் அகத்திணையியலில் ஐவகை நிலங்களில் வாழும் தமிழர்களின் பறை இசைக்கருவியினைப் பின்வருமாறு கூறுகின்றார்.

குறிஞ்சித்திணை - வெறியாட்டுப்பறையும்
தொண்டகப்பறையும்

முல்லைத்திணை - ஏறுகோட்பறை

மருதத்திணை - நெல்லரிப் பறை

நெய்தல் திணை - நாவாய்ப் பறை

பாலைத்திணை - ஆறலைப் பறையும்,
சூறைகொண்ட பறையும்

எனவே, இப்பறை இசைக்கருவியானது தமிழர்களின் வாழ்வோடு இயைந்து அவர்களின் பிறப்பு முதல் இறப்புவரை அனைத்து நிகழ்வுகளுக்கும் தொடர்ந்து வரும் தமிழ் மரபிசையாக உள்ளது. பறை இசைக்கருவிகள், நையாண்டி மேளம், பேண்டு வாத்தியம், நாயனம், சிஞ்சா போன்ற கருவிகள் இவ்வாட்டக் கலைக்குத் தேவையான இசைக்கருவிகளாகும்.

தப்பாட்டம் ஆடை அமைப்பு முறை

தப்பாட்டத்திற்குக் குறைந்த பட்சம் ஒன்பது பேர் சேர்ந்த குழுவினர் இடம் பெறுவர். அவர்களில் ஐந்துபேர் பறையடித்து ஆடுபவர்களாகவும், பேண்டு மற்றும் தவில் வாசிப்பதற்குத் தலா ஒருவரும் நாயனக்காரரர், சிஞ்சா வாசிப்போர் என இருவருமாக மொத்தம் ஒன்பதுபேர் இருப்பர். இவர்களில் பறை, பேண்டு, சிஞ்சா போன்ற கருவிகளை வாசிப்போர் சிவப்பு நிற முழுக்கால் சட்டையும், உடம்பில் அதே நிறமுடைய பட்டாலான பனியனும் தலையில் சிவப்பு நிற ரிப்பனையும் அணிந்திருப்பர். மேலும், இவர்கள் இளஞ்சிவப்பு நிறமுடைய அரிதாரத்தைப் பூசிக்கொண்டும், நெற்றியில் செந்நிறத்தில் நீள்வடிவப் பொட்டும் இடுவர். கால்களில் சலங்கையும் அணிவர். இவர்களில் நாயனம் வாசிப்போரும் தவில் வாசிப்போரும் காவி நிற வேட்டியும், வெள்ளைச் சட்டையும் அணிவர்.

ஆடும் முறை

மேளக்காரரர், நாயனக்காரரர், சிஞ்சா வாசிப்பவர் என மூன்று பேரையும் நடுவில் நிறுத்தி அவர்களைச் சுற்றிச் சுற்றிப் பறையடித்துக் கொண்டே ஆடுகின்றனர். மேலும், நீள வடிவில் வரிசையாக நின்றுக்கொண்டு பறையினை அடித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும் முன்னே வரிசையாகச் செல்வதும், குறிப்பிட்ட தூரம் சென்றதும் ஒரே

மூச்சில் திரும்ப ஆடிக்கொண்டும் வருகின்றனர். நாயனத்தின் ஓசைக்கேற்ப பறையினை முழக்குவதும், பறையின் ஓசைக்கேற்பப் பேண்டு மற்றும் நையாண்டி மேளம் போன்றவை வாசிப்பதும், அவர்களின் இசைக்கேற்ப சிஞ்சாவை இசைப்பதும் இவ்வாட்டத்தின் முறையாகும். மேற்கூறிய இசைக்கருவிகள் அனைத்தும் ஒருசேர இசைக்கும்போதும் அவற்றுக்கேற்ப ஆடும்போதும் அந்நிகழ்வைக் காண்போரைக் கவர்ந்திழுத்து அவர்களையும் ஆட வைப்பது இப்பறையாட்டம்.

தப்பாட்ட வித்தைகள்

தப்பாட்டத்தின்போது பறையை அடித்துக்கொண்டே குட்டிக்கரணம் போடுகின்றனர். மேலும், கண்ணால் காசு எடுத்தல், கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு பற்களால் சோடா உடைத்தல், ஊசி, நரம்பு, மணிகள் போன்றவற்றை வாய்க்குள் இட்டு அவற்றைக் கோர்த்து மாலையாக எடுத்தல் போன்ற வித்தைகளைச் செய்கின்றனர். இவ்வித்தைகள் பறையடிப்பவர் ஒருவரால் பறையினை முழக்கிக் கொண்டும் அல்லது பிறர் முழக்க ஒருவர் வித்தைகளைச் செய்தல் போன்ற விதங்களில் நிகழ்கின்றது.

தப்பாட்டங்கள் இன்று

இன்று தப்பாட்டங்கள் கோவில் திருவிழாக் காலங்களில் காப்புக் கட்டும் போதும், சாமி தூக்கும்போதும் பூந்தட்டு எடுக்கும்போதும் தேர் இழுக்கும்போதும் காவடி எடுக்கும்போதும் ஆடப்படுகின்றன. இன்றைய தப்பு என்ற பறைக்கருவி ஆட்டுத்தோலைப் பதப்படுத்தி வட்ட வடிவில் உள்ள மரக்கட்டைகளில் செய்யப்படுகிறது. பண்டைய தமிழர்கள் இக்கலையை மங்கல நிகழ்வு உட்பட எல்லா நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தினர் என்றாலும், தற்போதைய நிலைமையில் இக்கலை அதிக அளவில் இறப்பு நிகழ்ச்சிகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறைந்த அளவு திருவிழாக்களிலும் அரசியல் சம்பந்தப்பட்ட ஊர்வலங்களுக்கும் நிகழ்த்தப்படுகின்றன.

மனிதன் இறக்கும்போதும் இறந்தவர்களின் உறவினர்களான மாமன், மச்சான், சம்மந்திகள் புதுத்துணிமணி கோடி என்ற பெயரில் கொண்டுவரும்போது தப்பாட்டம் அடிக்கப்படுகிறது. இறந்தவர்களின் உடலைக் குளிப்பாட்ட தண்ணீர் எடுக்க போகும்போதும், வரும்போதும் தப்பு அடிக்கப்படுகின்றது. தற்காலத்தில் பிற சமூகத்தைச்

சார்ந்தவர்களும் பத்து பேருக்கு மிகாமல் குழுக்களாகக் கொண்ட பெண்களும், ஆடலுடன் பாட்டைப் பாடித் தப்பாட்டம் ஆடுகிறார்கள். இவர்கள் தப்பு அடிக்கச் சிறிய மூங்கில் குச்சி பயன்படுத்துகின்றார்கள். வலது, இடது கையில் உள்ள பெருவிரல், ஆட்காட்டி விரல், நடுவிரல்களால் தப்படிக்கவும் செய்வார்கள். அடிப்பதற்கு முன்பு வைக்கோல் மற்றும் தென்னை ஓலைகளைத் தீயிட்டுக் கொளுத்தித் தப்பைக் காய்ச்சுவார்கள். மாட்டுப் பொங்கலின் மறுநாள் மாடுகள் கட்டியிருக்கும் இடத்தில் மாடுகளை அவிழ்த்து விடும்போதும் மக்கள் ஆரவாரத்துடன் ஒலிகளை எழுப்பி மாடுகளைப் பிடிக்கத் தப்பாட்டம் பயன்படுத்தப்படுகிறது. தப்பாட்டம் நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகளைப் பொறுத்து மாறுபட்ட ஓசைகளைக் கையாள்வார்கள்.

பண்டைய தமிழர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த இந்தத் தப்பாட்டக்கலை காலம் செல்லச்செல்ல உருமாறியது மட்டுமின்றி ஒருசில நிகழ்ச்சிகளுக்கு மட்டும்தான் நடத்தும் கலையாக மாறிவிட்டது. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் மிக முக்கியக் கலையான இத்தப்பாட்டக் கலையினை ஊக்கப்படுத்தும் பொருட்டுச் சமீபத்தில் தென்னகப் பண்பாட்டு மையத்தினரால் தமிழக அளவில் தப்பாட்டக் குழுவினருக்கான போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பட்டுக்கோட்டை வட்டார ஏனாதியைச் சேர்ந்த தப்பாட்டக் குழுவினர் முதல் பரிசினைப் பெற்றுள்ளனர். மேலும், தஞ்சை மாவட்ட ஆட்சியாளரால் இக்குழுவினருக்கு ஊக்கத்தொகையும் தென்னகப் பண்பாட்டு மையத்தின் கலைக்குழுவிலும் இடமளிக்கப்பட்டு அரசாங்கத்தால் இக்கலை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தப்பாட்டங்களின் பெருமையையும் கலைச்சிறப்பையும் அறிந்து சீனா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற வெளிநாட்டவர்கள் இக்கலையைக் கற்றுக்கொள்ள ஆர்வமுடன் முன்வருகின்றனர் என்பதை இதழ்களின் வழியே அறிய முடிகின்றது. முற்றிலும் ஆண்களே பங்கேற்கும் இக்கலையில் தற்போது ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். சான்றாக, திண்டுக்கல், தஞ்சை, மதுரை, கோவை, வேலூர் போன்ற ஊர்களில் பெண்களே தப்பாட்டக் கலையை நிகழ்த்துகின்றனர். இவர்கள் திருவிழாக்களிலும் பிறவிழாக்களிலும் பங்கேற்கின்றனர்.

தகவலாளர் பட்டியல்

எண்	பெயர்	முகவரி	வயது	கல்வி	தொழில்	சாதி	சந்தித்த நாள்
1	இரா. சூரிய மூர்த்தி	த,பெ இராமன் ஏனாதி கிழக்கு, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	42	8-ம் வகுப்பு	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	12.2.09
2	மா. வெள்ளைச் சாமி	த,பெ. மாரி, மின்னடிக்கொல்லை காலனி, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	55	7-ம் வகுப்பு	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	17.2.09
3	ச. தம்பிக் கண்ணு	த,பெ. சடையன், ஏனாதி வடக்கு, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம். தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	27	3-ம் வகுப்பு	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	17.2.09
4	நா. மகாலிங்கம்	த,பெ. நாகமுத்து, வேப்பங்காடு, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	47	—	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	18.2.09
5	மா. சின்னத்தம்பி	த,பெ. மாரி, ஏனாதி கிழக்கு, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	46	4-ம் வகுப்பு	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	18.2.09
6	மா. பால்சாமி	த,பெ. மாரி, ஏனாதி கிழக்கு, ஏனாதி அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 615	40	3-ம் வகுப்பு	விவசாயக் கூலி, தப்பாட்டம்	பறையர்	19.2.09

இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
காதிர் முகைதீன் கல்லூரி,
அதிராம்பட்டினம் - 614 701.

24

குறவன் குறத்தி ஆட்டம்

ம. கற்பகம்

முன்னுரை

ஆடற்கலை என்பது தமிழக மக்களின் உணர்வுடன் கலந்த கலைத்துவத்தின் வெளிப்பாடு. சிவன் ஆடற்கலையில் வல்லவன். பாமரன் முதல் படித்தவர்வரை பொழுது போக்காகவும் உழைப்பின் களைப்பிலிருந்து புத்துணர்வு பெறவும் ஆடற்கலையினை அனைவரும் விரும்பிப் போற்றினார்கள்.

குறவஞ்சி விளக்கம்

குறவஞ்சி என்னுஞ் சொற்குக் குறப்பெண் என்பது பொருளாகும். மலைவாணர் குறவர் எனப்பட்டனர். தலைவன் (அல்லது) கடவுள் உலாவர அவரைக் கண்ட 7 வகைப் பெண்கள் காதல் கொள்ளுதல், பேரிளம்பெண், தெரிவை, அரிவை, மடந்தை,மங்கை,பெதும்பை, பேதை, காதலால் உந்தப்பட்டு வருந்தும் நிலையினளாகிய மங்கைக்குக் கைக்குறி கூறுவதாக அமைத்துக் கூறும் பகுதியே சிறத்ததாகும். நாட்டு மக்களின் உள்ளக்கருத்து, குணச்சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கைமுறை முதலியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

குறவஞ்சி நாடகம் மலைவாழ் குறவர்கள் குறி சொல்லுதல், பச்சைக் குத்துதல் போன்ற கலைகளை அறிந்திருந்தார்கள்.

'இறப்பு நிகழ்வெதி ரென்னும் முக்காலமும்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே'

என பன்னிரு பாட்டியல் விளக்குகிறது.

குறம், குறத்திப் பாட்டு போன்றவற்றைக் குறவஞ்சி நாடகத்தின் முன்னோடி எனலாம். குறமக்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் பறை, குரவை, அம்மானை, பந்து, கழங்காடல் போன்றவற்றினைக் காணலாம். குறி சொல்லும் பெண்களைக் 'கட்டுவிச்சி' என்றும், 'அகவன் மகள்' என்றும் குறி சொல்வோனை 'வேலன்' என்றும் குறிப்பிட்டனர்.

குறவன் - குறத்தி ஆடல் : பாடல் விளக்கம்

குறவஞ்சி இலக்கியங்களிலே மிகச் சிறந்தது குற்றாலக் குறவஞ்சி. நாட்டுப்புறப் பாடல் வகைமையில் அமைந்ததாகும். மலை வளத்தைப் பற்றிக் குறத்தி கூறுவதைக் காண்போம்.

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கல்
வருந்தக் காண்பது சூல் உடை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர் தென் ஆரியர் நாடே"

குறவன் குறத்தி ஆடை அணிகலன்களிலும் வேறுபடுகின்றனர். பாசிமணி, பவளமணி, கருகமணி, வெள்ளிமணி ஆகிய அணிகலன் களை அணிந்திருப்பார்கள். அனைவரையும் கவரும் வகைப் பேச்சினையும் பேசிக்கொண்டு ஆடுவார்கள். கைகளில் பழைய தகர டப்பாவினைக் கொண்டு பாடலுக்கு ஏற்ப ஒசையை எழுப்புவார்கள். குறவன் குறத்தியின் வாழ்க்கை நிலையை,

"கொழுகொடியின் விழுந்த வள்ளிக் கிழங்கு கல்லியெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம் பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும் வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும் இசைத்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்து கயற் கணிகாலில் விழுந்து வினை கெடுப்போம்
எங்கள் குறக்குடிக் கடுத்த இயல்பிது காண் அம்மே!"

என்பதன் வழி அவர்களின் இயல்பின் நிலைகளை உணருகிறோம்.

குறத்தி குறி சொல்வதற்குமுன் இறைவனை வணங்குதல்

"தரை மெழுகு கோல்மிடு முறைபெறவே கணபதியை
அம்மே! குடம்
தாங்காய் முப்பழம் படைப்பாய் தேங்காயும் உடைத்து
வைப்பாய் அம்மே!
அறுகுபுனல் விளக்கிடுவாயடைக்காய் வெள்ளிலை கொடுவா
அம்மே! வடை
அப்பமவல் வர்க்கவகை சர்க்கரையொடெட் பொரிவை
அம்மே!
நிறைநாழி அளந்துவைப்பாய் இறையோனைக் கரங்குவிப்பாய்
அம்மே! குறி
நிலவரத்தைத் தேர்ந்து கொள்வாய் குல தெய்வத்தை
நேர்ந்து கொள்வாய் அம்மே!''

குறி சொல்வதற்கு முன்னர் இறைவனுக்கு உகந்த பொருட்களைப் படைத்து வைத்து வழிபாடு செய்வதனை, அம்மே! தரையை மெழுகு கோலம் போடு, குறியை முறையாகப் பெறுவதற்கு (மஞ்சளில்) பிள்ளையார் உருவைப் பிடித்துவை, நிறைகுடம் எடுத்துவை, வாழை, மா, பலாப்பழங்களைப் பரப்பிவை, தேங்காயும் உடைத்து வைப்பாயாக அம்மே! அறுகம்புல்லும் தண்ணீரும் விளக்கும் கொண்டுவந்து வைப்பாயாக. பாக்கும் வெற்றிலையும் கொண்டு வைக்கவும், வடை, அப்பம், அவல், கடலை முதலியவற்றுடன் சர்க்கரை, எள்ளுருண்டை, பொரி இவற்றையும் வைப்பாயாக. கடவுளையும் கைகுவித்து வணங்குவாயாக அம்மா. இதன்பின் குறியின் தன்மைகளை அறிந்து கொள்வாய். குலதெய்வத்தையும் வேண்டிக்கொள்வாயாக. அம்மே! என்று குறி சொல்லுதல் பலிக்கும் வகையில் இறைவனை வணங்குதலை முதற் கடமையாகக் கொண்டு விளங்கினார்கள்.

குறவன் குறத்தி ஊடல்

குறவன் குறத்தியைக் காணாமற் தேடிச் செல்லுதல்,

'கிங்கிணியைக் காணேனே!
என் வங்கணச் சிங்கியைக் காணேனே!'

என்று பாடிக்கொண்டு செல்கின்றான். பலவகை உயர்ந்த அணிகலன் களை எல்லாம் சூடிக்கொண்டு எதிர்வரும் குறத்தியினை அவனால் அடையாளம் காணமுடியவில்லை. பின்னர்தான் குறத்தி என்றதை

அவள் கூற, அவள் உயர்வகை அணிகலன்களை எப்படி அணிந்தாள் என அவளை அடிக்க முயலும் பொழுது, பாடிப் பரிசு பெற்ற தன் திறத்தினை எடுத்துக் கூறவும், அவன் மகிழ்கிறான். கற்பு முறையிலும் தன் குல முறையின் வகையிலும் குறத்தி சிறப்பிடம் பெற்றாள். குறவன் முதலில் ஐயம் கொள்ளுதல், சினம் கொண்டு பேசுதல், பின்னர் தெளிவு பெறுதல், இன்பமாகக் கூடி வாழ்தல் அவர்களின் வாழ்வு நிலையில் சிறப்பிடம் பெறுகிறது.

நாடோடிகளாய் அலைந்து கொண்டிருக்கும் ஒருவகை இனத்தினையே தற்போது குறவர் இனம் என்றழைக்கின்றோம். சங்க இலக்கியம், இலக்கணங்களும் மலைவாழ் மக்களையே குறவர் என்று குறிப்பிடுகின்றன. அவர்கள் வாழும் நிலத்தையே குறிஞ்சி நிலம் எனவும் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி நிலத்தில் வாழக்கூடிய பெண்கள் அனைவரும் குறத்தியர்தாம்.

இக்காலக் குறவன் - குறத்தி வாழ்வியல் நிலை

இக்காலத்தில் ஊசி, மணி போன்றவற்றை விற்றுக்கொண்டு ஊர்ஊராய் அலைந்து கொண்டிருக்கும் நாடோடி ஆதிவாசி இனத்தவருக்கே இப்பெயர் சொந்தமாகி விட்டது. இவர்களுடைய நடையும், உடையும், தோற்றமும், மொழியும், நடனமும் நம்மவர்களை மிகவும் கவர்ந்திருக்கின்றன. எனவே, அவர்களைப் போலவே உடையணிந்து (வேடமிட்டு), மொழி பேசி, நடனம், நாடகம் போன்றவை கல்லூரி, பள்ளி விழாக்கள், போட்டிகளில் நடத்தப்படு கின்றன. இந்நடனம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றிலும் நல்லதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

குறவன் - குறத்தி நடனம் இல்லாத திருவிழாக்களையே நாட்டுப் புறங்களில் காண்பது அரிது. ஆண் குறவன் வேடமும், மற்றொருவன் பெண் வேடமும் போட்டு நடனமாடுதல் உண்டு. சிலவகை நடனங்களில் குறவன் ஆணாகவும், குறத்தி பெண்ணாகவுமே இருப்பதும் உண்டு. இவர்கள் உடலை நெளித்து நெளித்து ஆடுவதும் நடனத்திற் கிடையில் பேசிக்கொள்ளும் வார்த்தைகளும் காண்போருக்கு மனமகிழ்ச்சியினை ஏற்படுத்தும். பாடலைப் பாடிக்கொண்டே ஆடுவார்கள். அவர்களின் உடையும், ஆடை அணிகலன்களும் ஆட்டத்திற்கு ஏற்ப அழகு செய்யும். நையாண்டி மேளம், உருமி மேளம், போன்ற இசைக்கருவிகள் நடனத்தை மேலும் அழகூட்டும்.

முடிவுரை

இக்காலத்தில் பரதம் பயின்ற கலைஞர்களும், குறவன் குறத்தி நடனத்தை மேடைகளிலும், நாடகங்களிலும், பல்வேறு கலை விழாக்களிலும் ஆடுகிறார்கள். வேடம் இட்டு அவர்கள் மொழியில் பேசியும் மற்றவர்களைக் கவருகிறார்கள். திரைப்பாடல்களில்,

'நாங்க புதுசா கட்டிகிட்ட ஜோடிதானுங்க'

என்ற பாடல் அவர்களின் தனித்துவத்தினை அனைவரும் கண்டு மகிழுமாறு உள்ளது.

◆

விரிவுரையாளர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சென்னை - 24.

25

நாட்டுப்புறக் கலைகளில் வில்லுப்பாட்டு அன்றும் இன்றும்

கு. கஸ்தூரி

மனிதன் மிருக வாழ்க்கையிலிருந்து நாகரிகமாக வாழத் தொடங்கிய நாளிலிருந்து கலை பிறந்தது. ஒரு நாட்டின் இயற்கை யமைப்பு, தட்பவெப்பநிலை, சூழ்நிலை, நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் மனோபாவம், சமயக் கொள்கை முதலியவற்றிற்கு ஏற்றவாறு கலைகள் உருவடையத் தொடங்குகின்றன. மனிதனுடைய நல்வாழ் விற்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களும் பாரத நாட்டில் கலை எனப்பட்டது. நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாக வில்லுப்பாட்டினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கலையின் பிரிவுகள்

கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று படிகளாகப் பிரிக்கலாம்.

1. தொன்மக் கலை

2. நாட்டுப்புறக் கலை

3. திருந்திய கலை

இவற்றை முறையே பழங்குடி மக்கள், நாட்டுப்புற மக்கள், நாகரிக மக்கள் இவர்களின் கலை இயல்புகளைக் கொண்டு கலையின் வளர்ச்சி நிலைகளைத் தரப்படுத்தலாம்.

வில்லுப்பாட்டு

தமிழக நாட்டுப்புறக் கலைகளில் வில்லுப்பாட்டு மிகச் சிறந்த கலையாகும். இதனைப் பழந்தமிழ் இசைக்கலை என்று பெருமையாகக் கூறலாம். இது சங்க காலத்திலிருந்து பாடப்பட்டு வந்தது என்பதை “வில்யாழிசைக்கும் விரலெறிகுறிஞ்சி'' என்ற பெரும்பாணாற்றின் கூற்றிலிருந்து அறியலாம். வில்லுப்பாட்டு என்பதை விற்பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லடி பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் கூறுவர். வில்லுப் பாட்டின் தாயகமே குமரி, நெல்லை மாவட்டங்கள் ஆகும். ‘வில்லடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை’ என்ற பழமொழி வழங்குகின்றது. வில்லுப்பாட்டு இன்றிக் கொடையே கிடையாது.

வில்லுப்பாட்டின் தொன்மை

போர்வீரனின் முதற்கருவியான வில்லே இக்கலையில் பயன்படும் முதன்மையான இசைக்கருவியாக உள்ளது. வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய தெய்வமான கொற்றவை வில்லேந்தி நிற்கும் நிலையை நாம் இங்கே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

தென்பாண்டி நாட்டுப்பகுதியில் அன்றுள்ள வேடர்கள் வேட்டையாடிவிட்டுவந்து மரத்தடி நிழலில் அமர்ந்தபோது தோளிலிருந்த வில்லை மடியில் சாய்த்து, அம்பை அந்த நாணில் தட்டித் தட்டிப் பாட்டைத் துவக்கியிருக்கிறார்கள் என்று சோமலெ தனது கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

வில்லுப்பாட்டின் உறுப்புகள்

வில்லுப்பாட்டின் உறுப்புகளாக அமைந்த இசைக்கருவிகள் வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவையாகும். பம்பை, உறுமி, தக்கை, துந்துபி என்ற நான்கு கருவிகளையும் சேர்த்து எட்டு வகையான பக்கக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அமர்வு முறை

வில்லுப் பாட்டில் நடுநாயகமாக வீற்றிருப்பவர் புலவர் ஆவார். இடதுபுறம் குடத்துக்காரர்; இவர்களின் முன்பு குடத்தினில் உள்ள வில் இருக்கும். வீசுகோலைக் கொண்டு வில் நாணைத் தட்ட வசதியாக இருக்கும். புலவருக்குப் பின்னால் வரிசையாகப் பின்பாட்டுக்காரர், கட்டை, தாளம் ஆகியவற்றை இயக்குவோர் அமர்ந்திருப்பர்.

உடுக்குக்காரர் குடத்துக்காரரின் வலக்கையையடுத்து அமர்ந்திருப்பார். பின்பாட்டுக்கு ஒருவர் தனியாக அமர்த்தப்படுவதும் உண்டு.

பாடும் முறை

கதை துவங்கும் முன்பு காப்பு விருத்தம் பாடுவர். விநாயகர் வணக்கம் பாடப்படும்.

"தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட
வந்தருள்வாய் கணபதியே" என்று பாடுவர்.

அடுத்ததாகக் கலையைப் பயிற்றுவித்த ஆசானுக்கு வணக்கம் செலுத்துவர்.

"கணபதியும் என்குருவும்
கனவிலேயும் நான் மறவேன் - எனக்கும்
சொல்லி வைத்த வாத்தியாரைச்
சொப்பனத்தில் நான் மறவேன்"

என்று பாடுவர். இதையடுத்து சொற்குற்றம், பொருள் குற்றம் இருப்பின் பொறுத்தருள அவையோரை வேண்டிச் சொல்ல வந்த கதையினைப் பாட்டுடனும் உரைநடையோடும் வில்லடித்து மகிழ்விப்பார்கள்.

வில்லுப்பாட்டின் இறுதியாக அமைவது வழிபடுதல். எல்லாத் தெய்வங்களையும் அவையோர்களையும், கோயில் பொறுப்பாளர் களையும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோரையும், ஊர் பெரியவர் களையும் வாழ்த்திப்பாடி நிகழ்ச்சியை முடிப்பர்.

வில்லுப்பாட்டுக் குழுவினர் தங்களுக்குள் இரு பிரிவனராகி எதிர் எதிராகக் கேள்விகளைக் கேட்டு அவையோரை மகிழ்விப்பதும் உண்டு.

வில்லுப்பாட்டின் இன்றைய நிலை

சாத்தூர் பிச்சைக்குட்டி அவர்கள் புதிய உத்திகளைக் கையாண்டு வில்லுப்பாட்டை நவீனப்படுத்தினார். ஆர்மோனியம், டோலக் போன்ற பக்கக் கருவிகளைப் பயன்படுத்தினார். தோவாளம் சுந்தரம்பிள்ளை வில்லுப்பாட்டில் பல புதுமைகளைப் புகுத்தி உள்ளார்.

தற்போதைய வளர்ச்சிக்குக் காரணம்

வில்லுப்பாட்டுக் கலையை நாடறியச் செய்த பெருமை கலை வாணர் என்.எஸ். கிருஷ்ணனையே சாரும். வில்லுப்பாட்டுக் கலையின்

வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் நல்லாதரவு தந்தவர் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசங்கராச்சாரியார் சுவாமிகள் ஆவார். 1962ஆம் ஆண்டு இளையாத்தாங்குடி என்ற ஊரில் சுவாமிகள் நடத்திய சதஸ் எனும் கலை மாநாடு குறிப்பிடத்தக்கது.

அரசுத் தரப்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் நடைபெறும் பல்வேறு விழாக்களிலும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வில்லுப்பாட்டு இடம்பெறுதல் மகிழ்ச்சிக்குரியது. இன்றைய காலத்திலும் நெல்லை மாவட்டங்களில் கோயில் கொடை விழாக்களில் வில்லுப்பாட்டும் இடம்பெறுகின்றது.

தொகுப்புரை

நாட்டுப்புறக் கலையான வில்லுப்பாட்டு அன்று முதல் இன்று வரை புதிய நவீன முறையில் நிகழ்த்தப்படுகின்றது. வில்லுப் பாட்டினால் கதைப்பாடல் வளர்ச்சி பெறுகின்றது. வில்லுப்பாட்டு இன்றும் மக்களிடையே நிலைத்து நிற்பதின் மூலம் மக்களிடம் அதன் மீதான ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. சமூக நிலைப்பாட்டி னையும் வில்லுப்பாட்டுக் கலை மூலம் அரசியல் ஆர்வலர்கள் மக்களுக்குப் புலப்படுத்துகின்றார்கள்.

◆

இளநிலை ஆய்வாளர்,
அய்யநாடார் - ஜானகி அம்மாள்,
சிவகாசி.

26

ஒயிலாட்டம்

மு. கார்த்திகேயன்

முன்னுரை

தமிழக நாட்டுப்புறவியல் பற்றிய ஆய்வுகள் காலங்காலமாக நடைபெற்று வருகின்றன. நாட்டுப்புறவியல் ஆய்வுகள் பெரும்பாலும் நாட்டுப் பாடல்கள், கதைப்பாடல்கள், குலமரபுகள் போன்றவை பற்றியே அமைகின்றன. வெகுசில ஆய்வுகளே தமிழக நாட்டுப்புற நிகழ்கலைகள் பற்றியதாக அமையும். தமிழக நாட்டுப்புற நிகழ்கலை களில் ஒன்றான ஒயிலாட்டம் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. ஒயிலாட்டத்தின் உட்பெருளையும், ஆட்ட வகைகளையும் பற்றி ஆராய்வதோடு மட்டுமல்லாது அதற்குக் காரணமான பண்பாட்டுச் சூழலையும் கிராமப்புறச் சிறப்புகளையும் ஆழ்ந்த பொருளோடு எடுத்துரைக்க இக்கட்டுரை முனைகிறது.

ஆட்டம்

நாட்டுப்புறக் கலைகள் தனித்தன்மை கொண்டவை. அவற்றின் அமைப்பும், பொருளும் வேறுபட்டவை. அவை, நாம் வாழும் சமூகத்தின் ஒரு கூறாக அமைந்துள்ளன. ஆட்டம் மனிதனிடமிருந்து தோன்றியது அல்ல. இயற்கையிலிருந்து மனிதன் கற்றுக்கொண்டது. பறவைகள் தனித்தோ அல்லது ஒன்றுகூடியோ ஆடுகின்றன. இவ்வாட்டங்கள் ஒழுங்கும் அழகுமாக இருக்கும். இதிலிருந்தே மனித ஆட்டங்கள் உருவாயின.

ஆட்டத்தின் வகைப்பாடுகள்

ஆட்டங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று குழு நடனம். மற்றொன்று, ஆட்டக்காரர் - பார்வையாளர் சூழலைக் கொண்ட தனியாட்டம். ஆட்டங்கள் பிறப்பிலே அமைந்தவையாகவும் கற்றுக் கொள்ளப் படுபவையாகவும் அமைகின்றன. மனிதன் மட்டுமே ஆட்டத்தைக் கற்றுக் கொள்கிறான். மனிதக்குரங்கு ஆட்டத்தைப் பிறப்பிலிருந்தே கற்றுக் கொள்கிறது. மனித ஆட்டத்தை மற்ற உயிரினங்களின் ஆட்டத்திலிருந்து வெகுவாக வேறுபடுத்த முடியும். ஆட்டம் மனித மனச்செயல்பாடுகளினால் உருவாக்கப்படும் ஓர் அமைப்பினைக் கொண்டது. ஆட்டம் மொழியைப் போலவே செய்தியைச் செய்தியாகத் தெரிவிக்கும் அமைப்பு வகையினுள் அடங்குவதாகும்.

ஒயிலாட்டம்

எந்தவொரு ஆட்டமும் அது ஆடப்படும் பண்பாட்டின் பல கூறுகளுள் ஒன்று. எனினும் இது பெரும்பான்மையான பிற கூறுகளைப் போலிராமல், தனக்கென ஒரு தனித்தன்மை கொண்டுள்ளது. இந்தத் தனித்தன்மைக்கு ஏற்றவாறு ஆட்டத்தைப் பதிவு செய்வது இன்றியமையாதது ஆகும்.

ஒயிலாட்டம் ஆண்கள் குழுவாக இணைந்தாடும் ஓர் ஆட்டம். இது தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், இலங்கையிலும் ஆடப்படுகிறது. 'ஒயில்' என்ற சொல் அலங்காரம், ஒய்யாரம், அழகு, சாயல் என பலவாறு பொருள் கொள்ளப்படுகிறது. ஆகவே, ஒயிலாட்டம் என்பதன் பொருள் 'அழகுள்ள ஆட்டம்' என்றாகிறது. ஒயிலாட்டத்தோடு பாடப்படும் பாட்டை 'ஒயில் கும்மி' என்று அழைப்பர்.

ஒயிலாட்டத்தின் வாயில்கள்

ஆட்டம் பல வாயில்களால் செய்தியை வெளிப்படுத்துவனாக அமைந்துள்ளது. அவை:

1. முருகியக்கம் (Kinesthetic)
2. காட்சி (Visual)
3. ஒலி (Sound)
4. தொடு உணர்வு (Touch)
5. மணம் (Smelt)

1. ஒயிலாட்டத்தில் முருகியக்கம்

முருகியக்கம் என்பது மனித உடல் ஓரிடத்திலும் காலத்திலும் இயங்கும் இயக்கமாகும். ஒயிலாட்டத்தின் அடிப்படை அமைப்பு முருகியக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2. ஒயிலாட்டத்தில் காட்சி

ஒயிலாட்டத்தில் ஆடுவோரின் உடை, கையில் பிடித்திருக்கும் வண்ணக் கைக்குட்டை (அல்லது) விசிறிகள், ஆடுகின்ற இடத்தின் அமைப்பு முக்கியத்துவம், ஆடுவோர் நிற்கும் வரிசை போன்றவையும் காட்சியாக அமைகின்றன.

3. ஒயிலாட்டத்தில் ஒலி

ஒயிலாட்டத்தோடு இணைந்துவரும் ஒலிகள் மூன்று வகைப்படும் அவை:-

அ. கச்ச ஒலி, ஆ. தாள ஒலி, இ. பாட்டு ஒலி

அ. ஒயிலாட்டத்தில் கச்ச ஒலி

ஒயிலாட்டத்தோடு இணைந்துவரும் ஒலிகளுள் முக்கிய மானதும், சிறப்புக்குரியதுமான ஒலி ஆட்டக்காரரர்கள் காலில் கட்டியுள்ள கச்சத்தின் ஒலியே. கச்சத்தைச் சதங்கை எனவும் சலங்கை எனவும் கூறுவதுண்டு.

ஆ. ஒயிலாட்டத்தில் தாள ஒலி

ஒயிலாட்டத்திற்கு முற்காலத்தில் 'தப்பு' என்னும் தாளக் கருவி கொண்டு அடிக்கப்பட்டது. தோலைப் பானையின் வாயில் கட்டித் தப்பாக அடிக்கின்றனர். இது வெண்கலத்தில் அமைந்தால் மிகவும் சிறப்புக்குரியது.

இ. ஒயிலாட்டத்தில் பாட்டு ஒலி

ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஒவ்வொரு பாடல் உள்ளது. இது குரலின் இனிமையைப் பொருத்து அமையும். இதற்குச் 'சந்தம்' என்று பெயர். இப்பாடல்கள் மந்த கதியில் தொடங்கப் பெற்றுத் துரித கதியில் தொட்டு அதிதுரித கதியில் முடியும்.

4. ஒயிலாட்டத்தில் தொடு உணர்வு

தொடு உணர்வு ஆட்டத்தில் பயன்படுத்தப்படுவதே இல்லை. மாறாக, ஒருவரையொருவர் இடிக்காமல் இடம்விட்டு விலகிநின்று ஆடுவதே ஆட்டத்தின் அழகாகக் கருதப்படுகிறது.

5. ஒயிலாட்டத்தில் மணம்

ஒயிலாட்டம் சடங்கு நிலையில் நிகழ்த்தப் பெறும்போது ஆட்டக்காரர்கள் பூசிக்கொள்ளும் சந்தனம், திருநீறு, அவர்களுக்கு அணிவிக்கப்படும் மாலைகளும் மணம் பரப்பச் செய்யும். இந்த நிலையில் மணத்தினை ஆட்டத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

ஒயிலாட்டமும் ஆடுவோர் உடலும்

ஒயிலாட்ட இயக்கங்களின் தன்மைக்கு ஏற்றவாறு உடலினை இரு பெரும் கூறுகளாகப் பகுத்துக் கொள்ளலாம். இடுப்பையும், இடுப்புக்குக் கீழுள்ள பகுதியைக் கீழ்ப்பகுதி எனவும், இடுப்புக்கு மேலேயுள்ள பகுதியை மேற்பகுதி எனவும் அழைப்பர்.

கீழ்ப்பகுதி உறுப்புக்கள்	மேற்பகுதி உறுப்புக்கள்
இடுப்பு	மேலுடம்பு
கால்கள்	கைகள்
பாதங்கள்	தலை

இடுப்பு

இடுப்பிற்கென தனி இயக்கம் கிடையாது இடுப்பின் இயக்கம் காட்சியை உண்டு பண்ணுவதில் பங்கு பெறுகிறது. வலப்பக்க இடுப்பு, இடப்பக்க இடுப்பு முன்னும் பின்னுமாக இயங்குதல்.

கால்கள், பாதங்கள்

கால்களின் இயக்கங்களே ஒயிலாட்டத்தின் முக்கிய இயக்கங் களின் அடிப்படை. இதிலிருந்து மற்ற இயக்கங்கள் பிறக்கின்றன.

காலோடு கால் உரசாமல் ஆடுவது இன்றியமையாததாகும். நின்ற இடத்திலே ஆடுவது ஆட்டக்காரரின் திறமையைக் குறிக்கிறது. கால்கள், பாதங்களைக் கொண்டு சுமார் இருபதுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் உருவாகின்றன.

மேலுடம்பு

மேலுடம்பு என்பது இடுப்புக்கு மேலும் கழுத்துக்குக் கீழும் உள்ள பகுதியைக் குறிக்கும். உடலின் இப்பகுதி நேராக நிமிர்ந்து இருக்க வேண்டும். ஆடும்பொழுது குனிந்தாலும் இப்பகுதி வளைவதில்லை. இது ஆட்டத்தின் கம்பீரத்தையும் ஆண்மையையும் குறிக்கும் ஒரு

தோற்றத்தை உருவாக்குகிறது. மற்றபடி இதற்கென ஒரு இயக்கம் உருவாவதில்லை.

தலை

தலை இருவகைகளில் இயங்குகிறது. இடப்பக்கம் வலப்பக்கம் எனத் திருப்புவதும், கீழும் மேலுமாகக் குனிந்து நிமிர்வதும் தலையின் இயக்கங்களாகும்.

வலது கை

வலதுகையின் இயக்கத்தோடு கைக்குட்டையின் வீச்சு இணைவதால் இதன் இயக்கங்களைத் தனியே சுட்ட வேண்டியுள்ளது.

1. தலைக்கு மேல் தூக்குதல்
2. தலைக்கு மேல் தூக்கிச் சுழற்றுதல்
3. நெஞ்சுக்கு நேராகவும், சிறிது வலப்பக்கமாகவும் உயர்த்திக் காட்டுதல்
4. இடப்பக்க இடுப்பின் பக்கமாகக் கீழிறங்குதல்.

இடது கை

1. தலைக்கு மேல் தூக்குதல்
2. நெஞ்சுக்கு நேராக உயர்த்துதல்
3. இடப்பக்கமாகப் பின்னால் கொண்டு போதல்.

இருகைகள்

1. கும்மி கொட்டுதல்
2. இடுப்பளவில் விரித்தல்
3. கயிற்றினைப் பிடித்து முன்னும் பின்னும் இழுப்பதுபோலப் பாவித்தல்

ஆட்டமும் அதன் பொருளும்

ஆட்டத்தின் அமைப்பை அது வெளிப்படுத்தும் பொருளின் வாயிலாக அறியமுடியும். இப்பொருளின் வெளிப்பாடு ஆட்டத்திலும், ஆட்டத்தோடு இணைந்துவரும் பாட்டிலும் அமைந்துள்ளது. பாடலின் பொருள் என்பது பாடலின் மொத்தப் பொருளும், ஆட்டத்தின் மொத்தப் பொருளும் ஒன்றுபோல் அமையும். அதாவது பாட்டின் மையமாக அமையும் ஒரு செயலோ அல்லது உணர்ச்சியோதான் ஆட்டத்தின் மையமாக அமைகிறது.

ஒரு ஆட்டத்தின் மையக்கூறாக அமையும் ஓர் இயக்கத் தொகுதி இன்னொரு ஆட்டத்தில் துணைக்கூறாகவும் வரலாம். ஆனால், ஒரு சில இயக்கத் தொகுதிகள் துணைக்கூறுகளாகவே அமையும். எடுத்துக்காட்டு:- இழுவை. இது மையக் கூற்றையும், மற்ற துணைக் கூறுகளையும் இணைக்கப் பயன்படுகிறது.

ஒயிலாட்டப் பாடல்

ஆசை மன்னவரே மான் மீதிலே - நான்
எண்ண மிகுந்தாசை கொண்டேன்

அங்கமெலாந் தங்க நிறம் - அது
அமைந்திட்ட திரு உருவம்
தாவி விளையாடுவது பார் - அது
தாருகா வனம் ஓடுது பார் (ஆசை)

துள்ளி விளையாடுது பார் - வனச்
சோலைதனில் ஓடுது பார்
வாசலிலே கண்ட மானை - பிடித்து
ஆசை தீரத் தந்திடுவாய் (ஆசை)

முடிவுரை

ஒயிலாட்டத்தை மேற்கத்தியக் கலை அளவுகோல்களோடு வைத்துப் பார்த்தால் சற்றுப் பின்தங்கிய நிலையில் இருக்கும். இருப்பினும், அது ஆடப்படும் பண்பாட்டுப் பின்புலத்தில் வைத்துப் பார்த்தால்தான் அதன் அழகு தெளிவுறத் தென்படும். மற்ற எந்தவொரு ஆட்டத்திலும் இல்லாத அளவுக்கு உடல் அசைவுகளைக் கொண்டுள்ள ஆட்டம் ஒயிலாட்டமாகும். இன்றும் கிராமங்களிலும், நகர்ப்புறத் திருவிழாக்களிலும், தேசிய அளவிலான நிகழ்ச்சிகளிலும் ஒயிலாட்டம் இடம் பெறுவது கிராமியக் கலைகளுக்கு மட்டுமல்லாது, ஒயிலாட்டக் கலைஞர்களுக்கும் ஒரு புது உலகைப் படைத்துக் காட்டுகிறது.

◆

தமிழ் விரிவுரையாளர்,
மதர் தெரசா மகளிர் கல்வியியல் கல்லூரி,
மேட்டுச்சாலை, இலுப்பூர் (அஞ்சல்),
புதுக்கோட்டை (மாவட்டம்).

27

பழனி தைப்பூசத் திருவிழாவில் ஒயிலாட்டம்

முனைவர் சி. கார்த்திகேயன்

நாட்டுப்புற இலக்கியத்தில் இருந்து பிறந்தது ஒயிலாட்டம். கிராம மக்கள் விரும்பி ஆடலோடு, பாடலும் கலந்து ஆடக்கூடிய ஆட்டம் ஒயிலாட்டம். இவ்வொயிலாட்டம் கிராமத்தில் நடக்கும் திருவிழாவில் பெரும்பாலும் நடக்கக் கூடியது.

இதனை,

1. ஒயிலாட்டம் விளக்கம்

2. காவடி வைத்து ஆடிய ஒயிலாட்டம்

3. கைக்குட்டை வைத்து ஆடிய ஒயிலாட்டம்

4. கை தட்டி ஆடுவது

போன்ற பிரிவுகளில் பழனி தைப்பூசத் திருவிழாவிற்கு வந்த பக்தர்களிடத்தில் ஆடிய ஆட்டத்தை நேரில் கண்டு களப்பணியில் இருந்து கிடைத்த தகவல்களை கட்டுரையாக வடிவமைத்து எழுதுவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

1. ஒயிலாட்டம் விளக்கம்

"ஒயிலாட்டம் என்பது கதை தழுவிய தொடர் இசைப் பாடலோடு கூடிய ஒருவகைக் கூத்து. ஏதேனும் ஒரு பழக்கதையையோ, வரலாற்றையோ இசையுடன் பாடி ஆடப்பெறும் ஒரு வகை ஆட்டம்"

என்பர். பழங்காலத்தில் மனிதன் தன் மனதில் உள்ளதை வெளிப்படுத்தப் பாட்டை ஒரு கருவியாகப் பயன்படுத்தினான். பாட்டோடு, ஆட்டமும் இயல்பாகவே அமைந்து விடுவது இயல்பு. இதனையே ஒயிலாட்டம் எனலாம். "ஒயில்'' என்ற சொல் மனத்தைக் கவரும் அழகு என்று பொருள்படும். கதையின் உணர்ச்சிகேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற் கேற்ப ஆட்டத்தின் விசையும் மாறிக் காண்போர் கவனத்தையெல்லாம் ஈர்க்கும் இந்த உத்திக்கு ஒயிலாட்டம் என்று பெயர்.

உடையும் கருவியும்

ஒயிலாட்டம் ஆடுபவர்கள் இடுப்பில் ஒரேமாதியான நிறத்தில் சாயவேட்டியைக் கச்சைபோல் வரித்துக் கட்டிக் கொண்டு, தலையில் முண்டாசும், கழுத்தில் மாலையும் காலில் சலங்கையும் ஒரே விதமாக அணிந்திருப்பர். ஒயிலாட்டத்தின்போது கெட்டிமேளமும், நாதஸ்வரமும் இருந்தன. ஆனால், இப்போது தப்பு என்று சொல்லக் கூடிய கருவியையும், டங்கார் என்று சொல்லக்கூடிய கருவியையும் ஒயிலாட்டத்தின்போது பயன்படுத்துகின்றனர்.

2. காவடி வைத்து ஆடிய ஒயிலாட்டம்

ஈரோடு மாவட்டம், இடைப்பாடி என்ற ஊரில் இருந்து வரும் பக்தர்கள் தைப்பூசம் முடிந்தபின் மறுநாள் இவர்களுக்கு என்று தனி வழிபாடு முருகன் மலையில் உண்டு. இடைப்பாடி காவடிக் கூட்டத்தில் கவுண்டர், நாடார், நாயக்கர், மாதாரியார் போன்ற எல்லா சாதியினரும் ஒன்று கூடி ஒற்றுமையாக இறைவனைக் காண வருவது இதன் தனிச்சிறப்பு எனலாம்.

காவடி எடுத்து வருபவர்கள் முருகன் மீது பக்திப் பாடலை ஒருவர் பாட, பின்னால் வருபவர்கள் எல்லாம் ஒரே மாதியாக முருகன் பாடலைப் பாடினார்கள். பாடல் பின்வருமாறு:

"ஈசன் மைந்தன் முருகா சரணம்
பார்வதி புதல்வா முருகன் சரணம்
கஜமுகன் தம்பி முருகா சரணம்
உன்னை காண வருகிறோம் முருகா சரணம்''

என்று இப்பாடலைப் பாடி வருகின்றனர்.

முருகன் பாடலை ஒருவர் பாட இளைஞர் கூட்டம் இரு கோஷ்டியினர் பத்துப் பத்து பேர்கள் எதிர் நின்று தோளில் காவடிகளைச் சுமந்து நின்று தாளத்திற்கேற்பக் காலினை முன்னே எட்டி வைத்தும்,

பின்னே காலினை வைத்தும் ஆடினார்கள். பாட்டின் சந்தத்திற்கு ஏற்ப மத்தளம் கொட்டித் தாளம் இசைக்க ஆட்டத்தின் வேகமும் காவடிகள் சுற்றி வரும் அழகும் வேடிக்கைப் பார்ப்பவர்கள் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இருந்தன. காவடி வைத்து ஆடும் முறை காவடி ஒயிலாட்டம் எனப் பெயர் பெற்றது.

3. கைக் குட்டையை வைத்து ஆடும் முறை

இளைஞர்கள் கூட்டம் எதிர் எதிர் வரிசையாக நின்று காலில் சலங்கை அணிந்து இருப்பர். உடைகள் ஒரே மாதிரியாக அணிந்து இருந்தனர். தலையில் துண்டு ஒரே மாதிரியாக அணிந்து, கையில் கை குட்டை வைத்துத் தாளத்தின் அடிக்கு ஏற்ப வலது காலைத் தூக்கி முன்னால் மிதித்துக் குனிந்து கைக்குட்டையைக் கீழ்நோக்கி வெட்டுவது போல் வீசுவது, பின் மேல்நோக்கி வீசி ஆடினார்கள்.

இருவரிசையில் நின்று குதித்தல், குத்து வைத்த நிலையில் குதித்தும் ஆடினார்கள். இதே மாதிரி வலப்பக்கமும், இடப்பக்கமும் குதித்து குதித்து ஆடினார்கள். கையில் வைத்து இருக்கும் கைக்குட்டை ஒரே மாதிரி வீசும். ஆடும்போது பார்ப்பவர்கள் கண்ணைக் கவரும் வகையில் இந்த ஒயில் ஆட்டம் அமைந்து இருந்தது. இந்த ஆட்டத்தை இடைப்பாடி நாயக்கர் கூட்ட மக்கள் ஆடினார்கள். இவர்கள் ஆட்டத்திற்கு ஏற்பத் தாளம் இசைப்பவர்களும் சேர்ந்து ஆடுதல் ஒயிலாட்டம். ஆடுபவர்களின் உடல் அசைவின் வேகமும் ஒன்றுக்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு கைக்குட்டையும், கை அசைவும், காலின் அசைவும் ஒரே மாதிரியாக ஏற்ற இறக்கத்தோடு ஆடும் முறை மிக நின்றாகவும் அதிக நேரமும் இந்தக் கூத்தைப் பார்க்க வேண்டும் என பார்ப்பவர்களை ஈர்க்கும் வண்ணமும் அமைந்து இருந்தன.

4. கை தட்டி ஆடும் ஒயிலாட்டம்

ஒயிலாட்டத்தில் இளைஞர்கள் இரு கோஷ்டியாகப் பிரிந்து ஒரு வரிசைக்கு 15 நபர்கள் வீதம் இரண்டு வரிசை நின்று கொண்டனர். காலில் சலங்கை அணிந்து இருந்தனர். தப்பை முழங்க, டங்கார் முரசு ஒலிக்க ஒரு கோஷ்டியினர் ஆடத் துவங்கினார்கள். முதல் கோஷ்டியினர் வலது காலை முன்னால் ஒரடி எடுத்து வைத்துத் தன் இரு கைகளையும் தட்டி ஒலிக்கவும், பின் இடது காலை அதன் பக்கத்தில் முன் குத்தாகக் குத்தி மறுபடி வலது காலை மிதித்தும், பின்னர் அடுத்த பக்கம் நோக்கி திரும்புதல் பின் கை தட்டி ஒசை எழுப்பி ஆடினார்கள். இந்த ஆட்டம் கை தட்டி ஆடும் ஒயிலாட்டம் ஆகும். கோவை மாவட்டத்தைச்

சேர்ந்த கொடிக்க கவுண்டர்மார்கள் மற்றும் திருச்செங்கோடு மாவட்ட மக்களும் இந்த ஆடல்களை ஆடினார்கள்.

நாட்டுப்புறக்கலையான இந்த ஒயிலாட்டம் இசையோடு கூடியதாகும். இன்றைய இளைஞர் மத்தியில் இந்த ஒயிலாட்டம் குறைந்து காணப்படுகிறது. ஒயிலாட்டக் கலை வளர்ச்சி அடைய ஒயிலாட்டத்தை காத்து வளரும் கலைஞர்களை மதித்து வரும் சந்ததிக்கு அந்த நாட்டுப்புறக் கலையைக் கற்று வளர்க்க பாடுபட வேண்டும். இதுவே நம் நாட்டுக்கு செய்யும் கடமை ஆகும்.

களப்பணி

1. திருஆவினன்குடி திருக்கோயில், இடப்பாடி கூட்டம், காவடி எடுத்து ஒயிலாட்டம்.
2. பழனி திருக்கோயில் கிரிவீதி மயில் வாகனம் அருகில், திருச்செங்கோடு, கைக்குட்டை ஆட்டம்.
3. மலைக்கோயில் மேல், கோவை மாவட்ட மக்கள், கைத்தட்டி ஆடும் ஒயிலாட்டம்.

பயன்பட்ட நூல்

முனைவர் பா.சகுந்தலா (ஒயிலாட்டம்)

◆

தமிழ்த்துறை,
அருள்மிகு பழனியாண்டவர்
கலை பண்பாட்டுக்கல்லூரி,
பழனி.

28
தெருக்கூத்து

முனைவர் இரா. கலாவதி

மனித மனத்தில் இயல்பாகத் தோன்றும் உணர்வு கலையுணர்வு. மக்கள் மனத்திற்குக் களிப்பூட்டும் கலைகள் நாட்டுப்புறக் கலைகளாகும். இவை மக்கள் நடைமுறை வாழ்க்கையோடும் உணர்வோடும் ஒன்றியவை. உணர்வுகளின் வடிகால்களாக விளங்குபவை. பண்பாட்டு எச்சமாகவும், மண்ணின் மணம் பரப்புபவையாகவும் விளங்குகின்றன.

நாட்டுப்புறக் கலைகளின் பிரிவுகள்

நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்துக்கலை, நிகழ்த்தாக்கலை என்று இரு வகைகளாகப் பிரிப்பர். (நாட்டுப்புற அரங்கக் கலை அகராதி, காவ்யா சண்முகசுந்தரம், ப. 2)

நிகழ்த்துக்கலை

கரகம், காவடி, தேவராட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, அரங்கக் கலைகளில் ஒன்றாக தெருக்கூத்து இடம் பெற்றுள்ளது.

நிகழ்த்தாக்கலை

பச்சை மண், சுடுமண், மாவு, காகிதக் கூழ், உலோகம் முதலிய வற்றால் ஆன சிலைகள், பொம்மைகள், மரச்சிற்பங்கள், தென்னை

ஓலைத் தோரணங்கள், மற்றும் உருவங்கள், பனையோலைக் கலைப் பொருட்கள், நெட்டித் தக்கைகளால் செய்யப்படும் உருவங்கள், பொன் நகைகளில் உருவாக்கப்படும் கைவேலைப் பாடுகள், மணமக்கள் ஒப்பனை, மணவறை, கோயில் தேர், பல்லக்கு, சப்பரம், பாடைகளில் செய்யப்படும் ஒப்பனைகள் ஆகியவை.

தெருக்கூத்து விளக்கம்

நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்ததாகும். நாடக மேடையோ, காட்சித் திரைகளோ, இல்லாமல் எளிய முறையில் தெருவிலும், திறந்த வெளிகளிலும் இக்கூத்து பெரும்பாலும் மக்களுக்குத் தெரிந்த காப்பிய, இதிகாச அல்லது புராணக் கதையை அடிப்படையாக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிடுவதோடு எளிய முறையிலேயே எல்லாம் அமைந்திருக்கும். பொதுமக்களுக்குத் தெருக்கூத்து ஒரு நல்ல பொழுது போக்காக அமைந்திருப்பதோடு நீதி புகட்டும் வாயிலாகவும் உள்ளது எனவும் கலைக் களஞ்சியம் விளக்குகிறது. (கலைக்களஞ்சியம், தொகுதி *5*, பக். *131*)

தமிழகத்தின் மிகப் பழமையான கலைகளுள் ஒன்று தெருக்கூத்து. நாட்டுப்புறக் கலைகளான பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்களுக்கு முன்னோடியான தெருக்கூத்து மிக மிகக் காலத்தினால் பழமையானது என அ. அறிவுநம்பி கூறுகின்றார். (வேர்களைத் தேடி - தொகுதி *1*, *2004* அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,ப. *66*) தெருவில் நிகழ்த்தப் படும் கூத்து தெருக்கூத்து. மேடையும் திரையும் கிடையாது. மக்களின் நடுவிலே தெருக்களில் ஒப்பனையுடன் ஆடிப்பாடிச் சொல்வது என சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார். (நாட்டுப்புற வியல், ப. *119*)

தெருக்கூத்து தமிழ்நாட்டின் கிராமிய அரங்கக்கலை. உண்மையில் இதுதான் அரங்கக் கலையாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது என நா. முத்துசாமி விளக்குகிறார். (அன்று பூட்டிய வண்டி, ப. *78*)

தெருக்கூத்தின் வளர்ச்சியே நாடகமாகும். 'கூத்தாடி கிழக்கே பார்ப்பான், கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்' என்னும் பழமொழி இத்தெருக்கூத்து உழைத்துக் களைத்த மக்களின் பொழுதுபோக்காக இரவில் நடத்தப்பட்ட நிலையை விவரிக்கின்றது. இரவு 10 மணிக்குத் தொடங்கி விடிய விடிய நடைபெறும்.

எது தெருக்கூத்து?

தெருவில் நடைபெறும் நாடகங்கள், நடனங்கள் எல்லாம் தெருக்கூத்து என்று கூற இயலாது. 'கூத்து' என்பது ஆடலையும் குறிக்குமாதலால் தெருக்களில் ஆடப்படும் கோலாட்டம், கும்மி, கரகம்,

பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்றவற்றையும் தெருக்கூத்து என்பதோடு, குறவன் குறத்தி நாடகம், எரிந்த கட்சி, எரியாத கட்சி எனப் பிரிந்து ஆடும் இலாவணி, காமன் எரிப்பு, மேடையின்றித் தெருவில் ஆடும் அனைத்து நாடகத்தையும் தெருக்கூத்து என்றனர். இன்று நடைபெறும் வீதி நாடகங்களும் இதில் அடங்கும். பம்மல் சம்பந்தம் முதலியார் தெருக்கூத்து எது என்பதற்கு விளக்கம் தருகிறார்.

ஆண் வேடம் தரித்தவர்கள் காலுக்கு ஜல்லடம் போன்ற உடையை உள்ளே கட்டி, அதற்கு மேல் ஸ்திரிகள் அணியும் பாவாடை போன்றதைக் கட்டியிருந்தனர். இவைகளை மரத்தால் செய்து கண்ணாடிக் கற்களைப் புதைத்திருந்தனர் என்று விளக்குகிறார். *(ப. 75)* இதையெல்லாம் கருத்தில் கொண்டு,

தெருக்கூத்து என்ற கலைக்குக் கட்டை கட்டி, ஆடும் மரபு நாடகம் என்பது சரியான விளக்கமாக அமையாது என்றும் மரக்கட்டை அணிகலன்களைக் கட்டிக்கொண்டு திறந்தவெளியில் ஆடல் பாடல்களுடன் ஆடப்படுவதே தெருக்கூத்தாகும் என அ. அறிவுநம்பி விளக்குவது இவண் கருதத்தக்கது. *(தமிழரின் கூத்தியல், பக். 3-4).* கட்டையைக் கட்டிக்கொள்வதால் கட்டைக் கூத்து என்ற பெயரும் உண்டு என்று பா. இராசா குறிப்பிடுகின்றார். *(தமிழ் நாட்டிய மரபில் பரதநாட்டியம், ப. 153)*

கூத்தின் பொது அமைப்பு

தெருக்கூத்தின் கட்டமைப்பை மூன்று பகுதிகளாகப் பிரிப்பர். முதற் பகுதி, உடற்பகுதி அல்லது இடைப்பகுதி, இறுதிப் பகுதி என வகுத்துக் கொள்வர். முதற்பகுதியில் கதையோடு தொடர்பில்லாத கடவுள் வணக்கம், அவையடக்கம் போன்ற செய்திகளும் இறுதிப் பகுதியில் கண்டோர், கேட்டோர், வாழ்த்துக் கூறும் பகுதியும் அமையும். இடைப்பகுதியில்தான் கதை நிகழ்ச்சிகள் பாடல் வடிவில் கூறப்படும்.

கதைப்பொருள்

நாட்டுப்புறக் கூத்துகளாக அரவான் களப்பலி, ஆரவல்லி சூரவல்லி, மரகதவல்லி கல்யாணம், நாகக் கன்னி கல்யாணம், சுபத்திரை கல்யாணம் போன்ற 63 கதைகளை பா.ந. கிங்ஸ்டன், இரா. செல்வராஜ் பட்டியலிடுகின்றனர். *(வேர்களைத் தேடி - தொகுப்பு 1, பக். 341)* இத்தெருக்கூத்துகளில் பெரும்பாலும் பாரதக் கதைகளே இடம் பெறுகின்றன எனக் கூறும் அ. அறிவு நம்பி 55 பாரதக் கூத்துகளின் தலைப்புகளைத் தம் நூலில் விவரிக்கின்றார். *(தமிழரின் கூத்தியல், ப. 162)* அவற்றுள் சில,

அர்ச்சுனக் குறுவஞ்சி நாடகம்
அர்ச்சுனன் தபசு
அபிமன்னன் சண்டை
அரக்கு மாளிகை
அரிச்சந்திர நாடகம்

போன்றன. பாரதக் கதைகளைப் படிப்பதன் மூலம் தங்கள் பாவங்கள் தொலையும் என நம்பினர்.

"விராடப் பருவம் படித்தால் உடனே மழை பெய்யும்" என்று மக்கள் இன்றும் நம்புவதாக ஏ.என். பெருமாள் கூறுவது இவண் கருதத்தக்கது (தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, ப. 100). பாரதக் கதைகளுக்கு அடுத்த இடத்தை இராமாயணப் புராணக் கதைகள் இடம் பிடிக்கின்றன. சீதா கல்யாணம், இராமன் பாதுகா பட்டாபிஷேகம், வள்ளி திருமணம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

சங்ககாலத்தில் கூத்தால் பெயர்பெற்ற புலவர் பலரைத் தமிழிலக்கியம் குறிப்பிடுகின்றது. சேந்தன் கூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தன், உறையூர் முதுகூத்தன் போன்றோர். தொல்காப்பியர் 'கூத்தர்' என்பவரைக் குறிப்பிடுகின்றார். தமிழ் இலக்கிய வரலாற்றில் கூத்தின் வளர்ச்சி நிலையைப் பரக்கக் காணலாம். சங்க காலத்திலே கூத்தராற்றுப்படை என்னும் தனிநூல் இருந்ததும், இதன் சிறப்பை உணர்த்தும். தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இன்றும் இத்தெருக்கூத்து நடைபெற்று வருகின்றது.

இன்றைய கலைஞர்கள்

இன்று நம்மிடையே வாழும் தெருக்கூத்துக் கலைஞர்களாக நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டாரம் எலிமேடு, மகாலிங்கம் குழுவைச் சார்ந்த வடிவேலு, சண்முகம், சதாசிவம், துரைசாமி, மாதேஸ்வரன், துரை, சுப்ரமணியன், பரமசிவம்,செல்லமுத்து, சின்னமணி, நடராஜ் குஞ்சுகண்ணன், மாது என்பவர்களை பா.த. கிங்ஸ்டன், இரா. செல்வராஜ் சுட்டிக் கூறுகின்றனர். (மேலது, ப. 341)

புரிசை கண்ணப்பத் தம்பிரான்
கனவனூர் எம்.ஆர். கண்ணன் - ஓம் சக்திநாடக சபா
புதுப்பாக்கம் ஏ. நடராஜன் - புதுப்பாக்கம் நாடக சபா
தேவனாம்பட்டு ராஜகோபால்
ஆலத்தூர் சீனிவாசன், கல்லந்தல் துரைச்சாமி
தாராபுரம் வேலாயுதம், பத்தினி

புரிசை வீராசாமி தம்பிரான்மகன் இராகவத் தம்பிரான்
தம்பி கிருஷ்ண தம்பிரான், அவரது மகன் நடேசத் தம்பிரான்
தம்பிதுரைசாமி தம்பிரான் அவரது மகன் கண்ணப்ப தம்பிரான்

என்ற பட்டியலை காவ்யா சண்முகசுந்தரம் தருகின்றார். (அரங்கக் கலை அகராதி, ப. 43). இத்தெருக்கூத்து தொடர்பாக பல ஆய்வுகள் நடைபெற்றன. இது குறித்த விவரங்களை காவ்யா சண்முக சுந்தரம் குறிப்பது இக்கலை பற்றிய விழிப்புணர்வு ஆய்வுலகில் ஏற்பட்டுள்ளதை உறுதி செய்கின்றது (மேலது, ப. 42).

இன்றைய நிலை

பல மாவட்டங்களில் இக்கலை நடைபெற்றாலும் இத்தெய்வீகக் கலை இன்று செல்வாக்கை இழந்து வருகின்றது. மேடை நாடகங்களின் வளர்ச்சி, திரைப்படம், தொலைக்காட்சி போன்ற நவீன வடிவங்கள் இப்பாரம்பரியக் கலையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மனிதன் இயந்திரமாகக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் இன்றைய அவசர நிலையில் அலுப்பான கதைகள், உப்புசப்பற்ற பாடல்கள் நீண்ட நேரம் நடத்தல் போன்றவற்றில் ஈடுபாடு குறைந்தது. மேலும், இக்கலைஞர் களிடையே ஏற்பட்டுவிட்ட குடி, மாமிசம் உண்ணுதல் போன்ற தீய பழக்கங்கள் இக்கலையின் தரத்தைக் குறைப்பதாக அமைந்துவிட்டன. இக்கலையால் பற்று கொண்ட திரைப்படக் கலைஞர்கள் தங்கள் படங்களில் இவற்றை அறிமுகம் செய்கின்றனர். நவராத்திரி, முத்து போன்ற படங்களில் இடம்பெற்ற கூத்துகள் குறிப்பிடத்தக்கவை.

பயன்பட்ட நூல்கள்

அன்று பூட்டிய வண்டி, நா. முத்துசாமி
தமிழரின் கூத்தியல், அ. அறிவுநம்பி
தமிழ்நாடகம் ஓர் ஆய்வு, ஏ.என். பெருமாள்
தமிழ்நாட்டிய மரபில் பரதநாட்டியம், பா. இராசா
நாடகத்தமிழ் மரபில், பம்மல் சம்மந்த முதலியார்
நாட்டுப்புற இயல், சு. சண்முகசுந்தரம்
வேர்களைத் தேடி, தொகுதி, 2004 அண்ணாமலைப் பல்லைக்கழகம்
கலைக்களஞ்சியம்

◆

இணைப்பேராசிரியர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி,
சென்னை - 24.

29

கழங்காட்டம்

முனைவர் ர.கீதா

முன்னுரை

மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்துள்ளது. விளையாட்டு என்பது, மக்களின் மகிழ்ச்சி வெளிப்பாடேயாகும். வேலை செய்து முடித்தபின் ஓய்வு நேரங்களில் தங்களின் பொழுதை மகிழ்ச்சியோடும், பயனுள்ளதாகவும் போக்கப் பல விளையாடல்களை விளையாடினார்கள். உடல் நலம், மனநலம் பெறவும், குழந்தைகளின் இயல்புகள் வெளிப்படவும் விளையாட்டுகள் சிறந்தன.

விளையாட்டுகள் ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு எனத் திகழ்ந்தன. ஆடவர் விளையாட்டுகள் புறவிளையாட்டாகவும், உடல் திறன், அறிவுத்திறன் சார்ந்ததாகவும், மகளிர் விளையாட்டுகள் அகவிளையாட்டாகப் பொழுதுபோக்குச் சார்ந்ததாகவும் விளங்கின.

விளையாட்டின் மூலம் குழந்தைகளிடையே கட்டுப்பாடு, ஒற்றுமை, தலைமைப் பண்பு, பணிவு, பிறருக்கு உதவும் மனித நேயம் வளர்கின்றன.

தட்டாங்கல்

கல்லை மேலே தூக்கிப் போட்டு, அது கீழே வந்து விழுவதற்கு முன்பாகக் கையால் தரையில் தட்டிக் கல்லைப் பிடிக்கும் விளையாட்

டைத் தட்டாங்கல் விளையாட்டு என்பர். இலக்கியங்களில் காணப்படும் கழங்காடுதலுக்கும் தட்டாங்கல்லுக்கும் தொடர்பு உண்டு என்பர். ஆயினும் தட்டாங்கல்லைப் பற்றி விரிக்காமல் அதனுடன் தொடர்புடைய கழங்காடலைக் காணலாம்.

கழங்காடல்

கழங்கு என்ற சொல் மூவகைப் பொருளால் கையாளப்பட்டது.

1. மக்கள் - பொருட்களை எண்ணுவதற்குப் பயன்படும் கருவியாகவும்,
2. மகளிர் விளையாடப் பயன்படும் காயாகவும்,
3. வேலன் குறிகூறப் பயன்படும் கருவியாகவும் பயன்படுத்தினர்.

சங்க காலத்தில் கழங்காட்டப் பாடல் இல்லாவிடினும் கழங்காட்டத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கழங்காட்டத்தினை மகளிர் குழுவாகக் கூடி நின்று ஆடினர். கைகளால் கழங்கினைத் தூக்கிப் போட்டு ஆடியது 'கையாடு வட்டில்' என்று கூறப்பட்டது. கழங்குக் காயானது கழற்சி என்ற செடியில் உள்ள காயாகும். செல்வச் சிறுமிகள் யானைத் தந்தம், முத்து, பொன் போன்ற விலையுயர்ந்த பொருள்களில் கழற்சிக் காய்களைப் போன்ற உருவங்களைச் செய்து விளையாடிய குறிப்பினை இலக்கியங்களில் காணலாம். சான்று:

> **'கைம்மல ரில்பொலி கதிர்முத்து'**
> **'ஒல்ஒளி மரகதமும் முழுநீலமும்**
> **ஒள்தரளத் திரளும்**
> **ஒழுகு ஒளி பொங்க இழைத்திடும்'**
>
> (மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

சங்க கால இலக்கியங்களில் கழங்காட்டத்தினை,

> **'முத்தவார் மணல், பொற்கழங்காடும்' (பெரும். படை)**
> **'கோடுடை கழங்கின் அறைமிசைத்தாய்' (அகம்)**

என வரும் அடிகளால் அறியலாம்.

விளையாட்டு முறை

"கையிலுள்ள கற்களையெடுத்து மேலே தூக்கிப் போட்டுப் புறங்கையால் பிடிக்க வேண்டும். பின் தரையிலுள்ள கற்களில் ஒன்றினை எடுத்துப் புறங்கையிலுள்ள கற்களைக் கீழே ஒரு கல்லினை மேலே தூக்கிப் போட்டு அது கீழே விழுவதற்குள் இரண்டு கற்களை எடுத்து விட வேண்டும். நான்கு கற்களையும் எடுக்கலாம். இரண்டு கற்களை

எடுப்பது காய் என்றும் நான்கு காய்களை எடுப்பது பழம் என்றும் கருதப்படும். யார் மிகுந்த சக்கரங்களைப் பெறுகின்றனரோ அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்." (தமிழர் விளையாட்டுகள் - இரா. பாலசுப்பிரமணியன்)

பெண்கள் கழற்சிக் காய்களைக் கையில் கொண்டு மேலே எறிந்தும், அவை தரையை நோக்கி இறங்கும்போது கையில் ஏந்தியும், மீண்டும் எறிந்தும் ஆடினார்கள். இவ்வாட்டத்தை ஒரு பெண் தனித்து ஆடவில்லை. தன் ஆயத்தோடு சேர்ந்து ஆடினாள் என்னும் இக்குறிப்பினை அகநானூறு இயம்புகிறது.

உலா இலக்கியத்தில் ஏழுவகைப் பொருட்களாகிய ஏழு நிறமுடைய ஏழு கிழங்குகளைக் கொண்டு ஒன்று முதல் ஏழுவரையுள்ள எண்களை வரிசையாகக் கூறி, உலாத் தலைவனோடு தொடர்புடைய ஏழு பொருட்களையோ, ஏழு தலப்பெயர்களையோ, ஏழுதலச் செய்திகளையோ சொல்லிப் பாடினார்கள்.

அம்மானை

சங்க காலத்தில் அம்மானை என்ற விளையட்டானது "கழங் காட்டம்" என்ற பெயரினைப் பெற்று விளங்கியது. இன்றைய நிலையில் அம்மானை ஆட்டமானது "கழற்சி ஆட்டம்" என்ற சொல்லில் இருந்து அம்மானை, அம்மானை வரி, அம்மானை மடக்கு போன்றவை தோன்றிய மகளிர் ஆட்டங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. அம்மானை வரி என்பது அவ்வாட்டத்தில் பாடப்படும் பாடலைக் குறிக்கும். அம்மானை என்பது அவ்வாட்டத்தில் பயன்படும் காய்களைக் குறிக்கும். அம்மானை மடக்கு என்பது கலித்தாழிசையில் வினா விடையாக மகளிர் இருவர் பொருள்படப் பாடும் பாடலைக் குறிக்கும்.

சிலம்பில் 'அம்மானை வரி' என்ற பெயருடன் வரும் அம்மானைப் பாடல்களில் வினாவிடைப் பொதுக்கூற்று என்ற நிலையில் அமைந் துள்ளது. இப்பாடல்களில் இரண்டாம் நான்காம் அடிகள் 'மடக்குடன்' அமைந்துள்ளன.

'அம்மானை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையே லோர் அம்மானை'

திருவாசகம், திருக்கலம்பகம், தனிப்பாடல்களில் சில, பிள்ளைத் தமிழ் போன்ற இலக்கியங்களில் வினாவிடை நிலைமாறி தனிக்கூற்றாக அம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன. சான்றாகத் திருவாசகத்தில்,

'தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானை'

எனவரும் அடிகளால் தெரியலாம்.

கலம்பக உறுப்புகளில் ஒன்றாக அம்மானை திகழ்கின்றது. திருக்காவலூர்க் கலம்பகத்தில்,

'சீர்திருக் காவலூர்த் தேவணங்கு தாட்கமலம்
நீர்த்த திருத்திங்கள் மேல் நின்றன காண் அம்மானை
நீர்த்த திருத்திங்கள் மேல் நின்றன வென்றாயாகில்
ஆர்த்த திருவண்டுவப்ப ஆங்கலரா அம்மானை?
போர்த்த திருச்சோதி இன்பப் போதலரும் அம்மானை'

என்று கூறப்பட்டுள்ளது.

பெண்பாற் பிள்ளைத் தமிழின் ஒரு பருவமாக அம்மானை இடம் பெறுகிறது.

'அமுதப் பெருமா னொருவரும் பெண்
அமுதாடுக பொன்னம்மானையே'

(அகிலாண்ட நாயகிப் பிள்ளைத்தமிழ்)

அம்மானையின் இலக்கணம்

'இரண்டு நாலைந்தெனுமடி ஈற்றில்
தன்பெயர் குலவத்தக்க அம்மானை
ஐந்தடிக் கலிப்பா போலும் - அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே
கூறினார் பற்பலர் குவலயத் திடத்தே'

என்று கவிஞர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறியுள்ளார்.

முடிவுரை

'கிளியும் கழங்கும் பந்தும் வெய்யோள்' (அகம் 49).

என்ற வரிகளால் மகளிர் பெரிதும் மகிழ்ந்து விளையாடிய விளை யாட்டுகளில் கழங்காட்டம் என்பதும் ஒன்றாகும். கழங்காய் என்பது முத்துப்போல் விளங்குவது. இதனைக் குழிகளில் இட்டு ஆடுவது கழங்காடல் எனத் தெரிகிறது. இது இன்றைக்கும் ஆடப்படும் பல்லாங்குழி ஆட்டத்தோடு ஒத்துள்ளது. கழங்கிடும் குழிகள் அறைகள் என்றே குறிக்கப்பட்டன.

'இறைநாள் ஈங்கை உறைஒளி திரள்வீ
கூரை நன் மணல் குறுந்தொடி மகளிர்
மணல் ஆடும் கழங்கின் அறை' (நற்றிணை)

பிற்காலத்தில் பதினான்கு குழிகளில் முத்திட்டு ஆடுதல் என்ற நிலையில் கழங்காடல் "பல்லாங்குழி" என்ற பெயரில் வளர்ச்சி அடைந்தது. கழங்கு பார்த்தல் என்னும் குறி பார்க்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

வேகம் மிகுந்த இந்த விஞ்ஞான உலகில் பொழுதுபோக்கிற் காகவும், மனமகிழ்ச்சிக்காகவும், விளையாட நேரமில்லை. இருப்பினும் கல்வி ஆண்டின் இறுதி விடுமுறையில் இன்றும் கிராமங்களில் புளியங்கொட்டைகளையும், சிறு கூழாங்கற்களையும், கருங்கற்களையும் கொண்டு கழங்காட்டம் ஆடப்பெற்று வருகின்றது. புளியங்கொட்டை களைத் தரையில் பரப்பி, இருவர் அல்லது அதற்கு மேலும் உள்ள மகளிர்கள் சேர்ந்து விளையாடுவர். கற்களைக் கொண்டு கல்லாட்டம் என்ற கழங்காட்டம் பாடலுடன் ஆடப்படுகிறது.

இவ்விளையாட்டுகளை விளையாடுவதால் ஒரே நேரத்தில் கண்ணும், மனமும் ஒன்றுபடுகிறது. உடற்பயிற்சியாய்த் திகழ்கிறது. மதிய நேரத்தில் உறங்குவது தவிர்க்கப்படுகிறது. ஆயின் இன்று இவையெல்லாம் அருகி வருவது வருத்தத்திற்கு உரியது.

◆

தமிழ்த்துறைத் தலைவர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி - தன்னாட்சி,
சென்னை - 24

30
இலாவணிப் பாடல்கள் அன்றும் இன்றும்

டாக்டர் தி.த. கீதாராணி

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். இப்பாடல்கள் எளியவை; இனியவை. நாட்டுப்புறப் பாடல்கள் காற்றில் மிதந்து செவிகளில் தவழ்ந்து கருத்தில் நிலைப்பவை. இப்பாடல்கள் உணர்ச்சி மிக்கவை; ஓசைநயம் உடையவை. நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் வரலாற்றையும் நாட்டு நடப்பையும் உண்மையான முறையில் வெளிப்படுத்துகின்றன.

"பாட்டிடைக் கலத்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே" (தொல்.செய். 180)

தொல்காப்பியம் கூறும் பண்ணத்தி நாட்டுப்புறப் பாடல்களைக் குறித்ததாகும். நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற்பாடல்கள், சமுதாயப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், என வகைப்படுத்தினாலும் இலாவணிப் பாடல்கள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

இலாவணியின் தோற்றம்

இலாவணி மராட்டிய மாநிலத்தில் உருவாகித் தஞ்சை சரபோஜி மன்னர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் விரிவாக வளர்ச்சி பெற்றது. காமனைப் பற்றிய செய்திகள் தமிழர்களுக்குச் சங்ககாலந் தொட்டே அறிய வந்துள்ளன. கிரேக்கர்கள் இராஸை வணங்குவது போன்றும்

ரோமானியர் கூப்பிட்டை (Cupid) வணங்குவது போன்றும் தமிழர்கள் காமனை அழகின் தேவன் என்றும் காமக் கடவுள் என்றும் வணங்கி வந்தனர். (தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் சு. சண்முகசுந்தரம், ப.143) காமன் போருக்குரியவை மங்கையர் படையையும், தென்றல் தேரையும், மீன் கொடியையும், கிளிக் குதிரையையும், இருள் யானையையும், மல்லிகை மலர் காளாஞ்சியும், தாழை மடல் வாளையும், கரும்பு வில்லையும் நாணையும், தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்று ஐந்து மலர் அம்புகளையும், மலர்ப் பொழிலாகிய பாசறையையும், கொண்டு விளங்குபவன்.

காமன் விழா

வேதகாலக் கடவுளான காமன் மாயோனின் மகனாகக் கருதப்படுகிறான். உயிர்களுக்குக் காமத்தை உண்டாக்கும் தெய்வம் என்றும் புராணங்கள் சுட்டுகின்றன. இவனை காமவேள், மன்மதன், வேனிலான் எனவும் அழைப்பர். மகளிரே இவனை வழிபட்டு வேண்டுவர். சிறந்த கணவனைத் தரவேண்டும் என்றும் தன் கணவன் தம்மிடத்தே அன்புடன் பிரியமாயிருக்க வேண்டும் எனவும் காமனைப் பெண்கள் வேண்டி வழிபட்டு வருகின்றனர். (தமிழ்ப் பழக்கவழக்கங் களும் நம்பிக்கைகளும் க. காந்தி ப.78) வேனிலான் என அழைப்பது இளவேனிற் காலத்தில் இவனுக்கு விழா எடுப்பதால்தான். காமன் விழாவில் ஆடவரும் பெண்டிரும் இன்பமாகப் பொழுது போக்குவர். காமனைக் குறித்துக் கலித்தொகை,

“நாமில்லாப் புலம்பாயின் நடுக்கஞ்செய் பொழுதாயின்
காமவேள் விழாவாயிற் கலங்குவள் பெரிதென'' (கலி 27-23-24)

“உறலியாம் ஒளிவாட உயர்ந்தவள் விழாவினுள்
விறலிழை யவரோடு விளையாடுவான் மன்னோ'' (கலி 30-12-14)

“மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ'' (கலி. 35-13-14)

எனக் காமதேவன், உயர்ந்தவன், வில்லவன் எனக் குறிப்பிடு கின்றது. இவனுக்குரிய கோட்டத்தைச் சிலப்பதிகாரம்,

“சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரோடு
தாமின் புறுவருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப் பிறப்பார்''

(சிலம்பு 9-59-62)

என்று கூறுகிறது.

காமவேள் உருவிலாளன் (சிலம்பு 30-25), மகரவேல் கொடி மைந்தன் (சிலம்பு 4-83), மீன்திகழ் கொடியனை (மணி 20-91) என்றும் சுட்டப்பெறுகிறான்.

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்த முகத்திங்களோ காணீர்'' (சிலம்பு 11-11-12)

என்று இவன் செயல்களாகப் பிறரை வருத்துதலும், அழகிய பெண்களின் மாறுபட்ட போக்குக்காக வருந்துதலும் கூறப்பட்டுள்ளன. சுரமஞ்சரி காமக் கோட்டம் சென்று, சீவகனே கணவனாக வரவேண்டும் என்று வேண்டுகிறாள். சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகிய நூல்களில் காமவேள் விழவு என்றும் குறிப்பிடப்படுகின்றன.

இசைப்பாடல்

இலாவணி என்பது இசைப்பாடலாக நடைபெறும் விவாதமாகும். இலாவணி என்ற சொல்லுக்குத் தொடுதல், நடுதல் என்பது பொருள். நாற்று நட்டுப் பயிர் வளர்வதுபோலப் பாட்டு வளர்வது என்று பொருத்திப் பொருள் கொள்ளலாம். (தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள் சு.சண்முகசுந்தரம் ப. 238) சிற்றூர்களில் வசந்த காலங்களில் காமன் பண்டிகை கொண்டாடப்படும். அப்போது இலாவணி என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும். இதை சொற்போர் நிகழ்ச்சி எனக் கூறலாம். (நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், மு. அண்ணாமலை ப. 471)

இலாவணிப் பாடலை வினாவிடை அமைப்பில் இருவர் பாடுவர். இருவரும் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருக்கலாம். இருவராக அல்லாமல் இரு குழுவாகவும் நின்று இலாவணி பாடுவது உண்டு. ஒரு கட்சி தன் வாதம் முழுவதையும் பாடி முடித்த பின்னர் எதிர்க்கட்சி தன் வாதத்தை எடுத்துக் கூறிப் பாடுவர். இலாவணி பாடும்போது பெரும்பாலும் டேப் அடித்துக் கொண்டே பாடுவது பெருவழக்கு. மேலும் தப்பு, தம்பட்டம், துந்தினா, சப்ளாக்கட்டை போன்ற பக்க வாத்தியங்களில் ஒன்றோ சிலவோ இருப்பதுண்டு.

இலாவணியின் பாடுபொருள்

காமவேள் கதையே இலாவணியின் பாடுபொருள். தக்கனின் வேள்வியை அழித்த பின்னர் சிவபெருமான் இமயமலைச் சாரலில் தவமிருந்தார். தேவர்கள் அவருடைய தவத்தைக் கலைக்க மன்மதனை அனுப்பினர். மன்மதன் அவர்மேல் மலர்க் கணைகளை ஏவினான். அவர் நெற்றிக் கண்ணைத் திறந்தார். மன்மதன் எரிந்து போனான். இச்செய்தியைக் கேட்டு ரதி புலம்பினாள். இக்கதையை மையமாக வைத்து

மன்மதன் எரிந்தானா இல்லையா என்பது பற்றி வாதிடுவர். இதற்கு எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று பெயர்.

"மாசில்லா மதுரகவி ராஜசிங்கமே உமது
வாலை மடக்கியே வையும் அய்யா அய்யா
மங்கையொரு பங்குடைய சங்கரன் விழிநுதலால்
மன்மதன் எரிந்த கதை பொய்யா மெய்யா? (து.நா.பா.ப.24)

என்று இலாவணி மெட்டில் பாடுவர்.

மால்மகன், மலர்வேதன் மகன், பால்வண்ணன், தர்மன் மகன், கண்ணன் மகன், சங்கல்பன் மகன், இதில் வெந்தமகன் எந்த மகன் என வினவுவர். மன்மதனின் முகூர்த்த விபரம் பரமசிவன் தபசு புரிந்த காரணம், பரமனால், முக்தி பெற்ற பக்கதர்கள் விபரம், அவனது வெற்றிகள் விபரம், மதனால் முக்தி பெறாத நிலை, பிறப்புக்கும் இறப்புக்கும் மன்மதனால் பலனில்லை என்ற நிலை, காமன் எரிந்ததற்கு நூல்வழிச் சான்று ஆகியவற்றை எரிந்த கட்சியினர் கூறுவர்.

எந்த மகன் எரிந்தான் என்றும் எங்கே எரிந்தான் என்றும் மோகமில்லாமல் மூவர் உற்பத்தி இல்லை என்றும் சுரூபி மதனைச் சொரூபியான சிவன் சர்வ வல்ல மதனை எப்படி எரிக்க முடியும் என்றும் கோமளத்தில் காமன் இல்லை என்றும் எரிந்த கட்சி பாடி கெட்டழிந்தவர்களைப் பற்றியும் எரியாத கட்சியினர் பாடுவர். இவ்வாறு இரு கட்சியினரும் பாடி இறுதியில் முடிவுக்கு வருவர். இலாவணிப் பாட்டிற்கு இராகம் முக்கியம் என்பர்.

இலாவணி பாடும் முறை

காமன் விழாவன்று இலாவணி பாடுவது பெருவழுக்காகும். இவ்விழாவைக் காமன் பண்டிகை என்றும் காமாண்டி என்றும் அழைப்பர். மன்மதன் உற்சவத்தை வருடத்திற்கு ஒருமுறை மாசி மாதம் அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் வழக்கம்போல் மன்மத ஸ்தாபனம் செய்யும் இடத்தில் தண்ணீர் தெளித்து மாவிலைத் தோரணங்கள் கட்டிச் சுத்தமான இடத்திலிருக்கும் ஆமணக்குக் கொட்டை, தனி தர்ப்பை, மாவிலை, புட்பகந்தம் சாந்திப் புரோகிதரைக் கொண்டு மன்மத ஸ்தாபனம் செய்து மறுதினம் முதல் ஒவ்வொரு தினமும் அவர்களால் இயன்றவரையில் கனி வர்க்கம் முதலிய தூபதீபம் கொடுத்து அடுத்த பௌர்ணமி அன்றைய தினம்வரை காமன் கதை பாட வேண்டும். மூன்றாம் நாளில் லிங்க பூசைக்குப் பலவித பட்சணங் களும், பாயாசம், பானகம் நீர்மோர் முதலியவை வைத்து இந்தப்

புத்தகத்தை வாசித்து முடிவு செய்து மன்மதனை எழுப்பினதும் இந்த மன்மதன் சரித்திரத்தை முடித்து யாவரும் பேரானந்தம் அடைந்து சுகமாக வாழ்ந்திருப்பார்கள் என்று மன்மதன் விழா விவரிக்கப் படுகிறது. பங்குனி பௌர்ணமியில் கொண்டாடுவர். சித்திரை மாதத்திலும் இப்பண்டிகை நடைபெறுகிறது. இந்தியாவில் எல்லா இடங்களிலும் இவ்விழா ஏழு நாட்கள் நடைபெறும். (த.நா.பா.ப.239)

இலாவணிப் பாடல் அமைப்பு

எரிந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் புராணங்களில் நம்பிக்கை உடையவர். எரியாத கட்சியினர் தமிழ்நாட்டுப் பதினெண் சித்தர்கள் வழியைப் பின்பற்றுபவர்கள். இந்தச் சொற்போரில் சமயம், நன்னெறி முதலியவை பற்றிய பல கருத்துகளையும் விளக்கங்களையும் புராணங் கள், சாத்திரங்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்களையும் இரு கட்சியினரும் கொடுப்பார்கள். காப்பு, காமதகனை வணக்கம் கலைமகள் வகை வணக்கம், சபை, குரு, விநாயகர் ஐங்கரன் என்று வணக்கங்கள் பாடப்படும்.

"பங்கி உடனடித்துப் பந்துபோல பாய்ந்துவந்த
பயில்வானே! பதில் கூறு கூறு!
கட்சி எரியாத காரணம் கேட்டு இன்று
கில்லாடி சபையில் உட்காரு
ஆன்சர் பாரே கேட்ட கேள்விக்குத்
தடை இன்றிப் பதில் கூறே!
மன்மதன் மாய்ந்திடில் விண்முதல் பஞ்சபூதம்
வந்த விபரம் எது? ஈதென்னகூது?
இப்புவிமீது ஜீவராசிகள்
மண்ணில் உற்பத்தி ஏது?'' (தமிழிலக்கிய வகைமையியல் ப. 84)

இது போன்ற சுவைமிக்கப் பாடல்கள் பாடப்படுகின்றன.

இலாவணி மெட்டு, இலாவணி அடுக்கு மெட்டு, சுருள் மெட்டு, இலாவணி ஒற்றையடி மெட்டு, வட்டமிட்ட உலகில் என்ற மெட்டு, அந்தரங்கப் பல்டி மெட்டு, குறவஞ்சிமெட்டு, பார்க்க வடிவானந்தம் என்ற மெட்டு, நாதந்தி நாதந்தி என்றவண்ண மெட்டு, செந்தமிழ் உலகினில் என்ற மெட்டு, இந்துஸ்தான் மெட்டு, தோலாக்காதேனேகுல என்ற மெட்டு, மஞ்சுநின் குந்தளமின்னே என்ற மெட்டு போன்ற மெட்டுகள் உண்டு.

'சத்தியம் நீயே' என்ற மாட்டுக்காரவேலன் மெட்டு, 'பார்த்தால் பசுமரம்' என்ற சினிமா மெட்டு, 'பாரு பாரு நல்லா பாரு' என்ற மெட்டு,

'கல்யாண சாப்பாடு போடவா,' 'பாரப்பா பழனியப்பா,' 'இவ்வளவுதான் உலகம்' என்ற மெட்டு ஆகிய திரைப்பாடல் மெட்டுகள் இலாவணியில் இடம்பெறுகின்றன (த.நா.பா.ப.240). வெண்பா, விருத்தம், மூவடி வெண்செந்துறை முடுகு போன்ற பலவகைகள் உள்ளன. இலாவணிப் பாடல் அமைப்பில் 'ஆண்களில்லாத உலகத்தினாலே பெண்களினாலே என்ன பயன்,' 'கதை சொல்ல போறேன்,' விடுகதைக்குப் பதில் சொன்னா சொத்து எழுதித் தரேன் (பூவேலி), இலாவணிகள் புதிய பிறப்பெடுத்து இருக்கின்றன. 'நாடோடி நாடோடி ஓடவேண்டும் ஓடோடி' (அன்பே வா), அடடா இது என்ன கண்ணா இது இந்திரலோகத்துப் பெண்ணா, மாத்தாடு மாத்தாடு மல்லிகே, அப்பாவி ஆனாலும் அடிமேல அடிவாங்கும் அடித்தாலும் ஊர்கோடி ஆஹானு சொல்வது என்று பாடல்கள் அமைகின்றன. அடிமேல அடிவாங்கி அனைவரையும் சொக்கவைக்கும் மேளகாரன் கொண்டு வந்த மிருதங்கம் தான் அது. இன்றைய திரைப்படப் பாடல்கள் கஜல் இது போன்ற அமைப்புடையதாக உள்ளன.

இலாவணியின் சிறப்பு

இலாவணிப் பாடல்கள் வினாவும் - விடையுமாக இசையோடு பாடப்படுவதால் மனதில் நன்றாகப் பதிகின்றன. சித்திரை மாதத்தில் கோடை மழை வருவிக்க வசந்த விழாவில் இலாவணியானது தஞ்சை, திருச்சி, மதுரை, ஆகிய மாவட்டங்களில் பாடப்படுவதுண்டு. ஹோலிப் பண்டிகையில் இலாவணிப் பாடுவதுண்டு. குழந்தைப் பேறு நடந்த வீடுகளில் பேய் பிசாசு தொல்லை நீங்கும் என்று நம்பி தொடர்ந்து எட்டு நாட்கள் இலாவணிப் பாடுவர். இழவு வீட்டில் பதினாறாம் நாள் இலாவணிப் பாடினால் மோட்ச உலகம் அடைவர் என்னும் நம்பிக்கையில் பாடப்படுவதுண்டு. மாரியம்மன் திருவிழாக்களிலும் திருச்சி, வட, தென் ஆற்காடுகளில் இலாவணியை ஒரு நிகழ்ச்சி யாக்குவர். இன்று குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இலாவணிகளையும் (காமர் தொடர்பின்றி) சில வில்லுப்பாடல் நிகழ்ச்சிகளிலும் இலாவணிச் சாயலுடன் சிறிது நேரம் பாடுவர்.

சிறு சேமிப்பு, புதிய விவசாயத் திட்டமுறைகள் போன்றவை இலாவணி நிகழ்ச்சி மூலம் பாடப்பட்டு வருகின்றன. கன்னடக் கதைப் பாடலான இலாவணி பெரும்பாலும் உண்மை நிகழ்வுகளை, வீரச் செயல்களைப் பாடுவதாக அமைக்கின்றது. (திராவிட மொழி இலக்கியங்கள் ச.வே.சுப்பிரமணியன், ப.242. ப. 243) 'ரங்கு லாவணி' தனித் தன்மையுடையது. இத்தகு கதைப்பாடலைப் பாடுவதில்

போட்டிகள் நிகழும். எதிர்க்கட்சிகளாகத் 'துர' 'கல்கி' என்பன அமைந்த குறிப்பு உண்டு. இப்பாடலில் கடவுளரும் கேலிக்கும் கிண்டலுக்கும் உட்படுவர். விநாயகனின் பெருவயிறு பற்றி நகையாடுவர்.

முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்களில் இலாவணிப் பாடல் வழிபாட்டுப் பாடலாக, விழாவாக, போட்டிப் பாடலாக, சமுதாய விழிப்புணர்வுப் பாடல்களாகப் பாடப்படுகின்றன.

பார்வை நூல்கள்

இலக்கிய வகையும் வடிவமும் -

திராவிட மொழி இலக்கியங்கள் - ச.வே. சுப்பிரமணியன்

நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம் - மு. அண்ணாமலை

தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் - சு. சண்முகசுந்தரம்

◆

தமிழ் விரிவுரையாளர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)
சென்னை - 24.

31
புலியாட்டம்

லி. கி. கிறிஸ்து ராஜேஷ்

புலியாட்டம் ஒரு அங்க அசைவு ஆட்டம் ஆகும். ஆட்டம் என்பதுதான் வெளிப்படையான உண்மையான பெயர். ஆட்டத்தில் பலவகை நளினங்கள் இணைந்து நடனம், நாட்டியம் ஆயிற்று. பலர் இணைந்து ஆடும் போது கூத்தாயிற்று. பழந்தமிழர்களிடையே பல்வேறு கூத்துகள் புழக்கத்தில் இருந்தது என்பதைத் தொல்காப்பியம் நமக்கு உணர்த்துகின்றது. சங்க இலக்கியக் காலத்தில் மாங்குடி மருதனார், பெருங்குன்றூர் பெருங்கவுசிகனார், கோவூர்கிழார் போன்றவர்களின் பாடல்களின் மூலம் கூத்தர், விறலியர் இயல்பும் ஆட்டக் கலைக்கு அக்கால அரசர்கள் தங்கள் தலைநகர்களையே தரத் துணிந்திருந்த செய்தி களும் அறியக் கிடைக்கின்றன. ஆட்டக்கலையைக் கற்பிக்க அந்தக் காலத்திலேயே பல்வேறு நூற்கள் (பாரதம், அகத்தியம், முறுவல், இசை நுணுக்கம், இந்திர காளியம்) இருந்திருக்கின்றன என்று அறிகிறோம்.

இந்த ஆட்டக்கலைக்கு நல்ல அடிப்படை உண்டு என்பது தெளி வாகும். ஆட்டம் கூத்தாகி நாடகம் என்ற நுண்கலைகளில் இடம் பெற்றது. ஆனால், இவற்றிற்கெல்லாம் மூலமான ஆட்டக்கலை மட்டும் இன்றும் தன் நிறம் மாறாமல் நாட்டுப்புறக் கலையாகக் காட்சியளிக்கிறது.

பல்வேறு விதமான ஆட்டக்கலைகளை டாக்டர் சு. சக்திவேல், டாக்டர் ஆறு. இராமநாதன் ஆகியோர் கீழ்வரும் அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளனர்.

சாதி	:	கணியான் ஆட்டம், தேவர் ஆட்டம்
ஆடுமுறை அல்லது பண்பு	:	ஒயில் கும்மி
பாடுபவர்	:	கோணாங்கி ஆட்டம்
நேரம்	:	பகல்வேடம்
பொருள் அடிப்படை	:	மரப்பாவைக் கூத்து, தோற்வைக்கூத்து, பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், கோலாட்டம், கழைக்கூத்து.
இசைக்கருவி	:	வில்லுப்பாட்டு (இது ஆட்டமல்ல. நாட்டுப்புறக் கலையில் வருவதால் இடம்பெற்றது.)
வேடம்	:	புலியாட்டம், கரடியாட்டம், மயிலாட்டம், காளியாட்டம்.
இசைக்கருவி வேடம்	:	உறுமிக் கோலாட்டம்.
நிகழ்த்துமிடம்	:	தெருக்கூத்து.[1]

மேற்கூறிய ஆட்டக்கலைகளில் புலியாட்டம் பற்றி இக்கட்டுரை மதிப்பிடுகின்றது.

விலங்குகள் வழிபாடு

புலி, சிறுத்தை போன்ற விலங்குகளைத் தெய்வமாக மதித்து வாழ்ந்தனர் மக்கள். காரணம் அவ்விலங்குகளின் மேல் கொண்ட பயமேயாகும். இன்றும் பழங்குடி மக்களாகிய இகான்களும், காந்தளர்களும் புலியைத் தங்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவில் புலியை வேட்டையாடுதல் காணப்படுவதில்லை. மேலும், கடவுளரின் வாகனமாக அறியப் படுவதால் மக்கள் மனதில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டிலும், கேரளாவிலும், பாண்டிச்சேரியிலும் இவ்வாட்டம் கிராமப்புற விழாக்களில் பொழுதுபோக்குக் கலையாகக் காணப்படுகிறது. கிராமப்புறத் தெய்வங்களிடம் தங்கள் குறைகளைப் போக்கினால் அத்தெய்வங்களுக்காக எடுக்கப்படும் விழாக் காலத்தில் புலிவேடம் தரித்து ஆடிவருவதாகவும் இக்கலை விளங்கி வருகிறது. மேலும், அரசியல் சார்ந்த கூட்டங்களிலும் ஊர் விழாக்களிலும்

இவ்வாட்டம் நிகழ்த்தப்பெறுகின்றது. தமிழகத்தில் சேலம், திண்டுக்கல், மதுரை, கடலூர், செங்கற்பட்டு, செய்யாறு, சென்னை போன்ற இடங்களில் இக்கலை பெரும்பான்மையாக நிகழ்த்தப் பெறுகின்றது.

கேரளாவில் இவ்வேடம் ‘கடுவாக்களி’ அல்லது ‘புலிக்களி’ என்று வழங்கப்பெறுகிறது. கேரளாவில் தெய்யாட்டத்தில் இக்கலை நிகழ்த்தப்பெறுகிறது. தமிழகத்தில் சேலம் கோட்டைப் பகுதியில் முள்ளுவாடி என்ற இடத்தில் இவ்வாட்டத்தில் திறன்பெற்ற இசுலாமியக் கலைஞர்கள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலியாட்டம் விளக்கம்

புலியாட்டத்தில் கால், கை, முகம் மூன்று உறுப்புகளும் முதலிடம் பெறுகின்றன. கால்கள் பதுங்குதலையும், முகம் உறுமுதலையும் வெளிப்படுத்தும்போது கைகள் பல நடிப்புகளைக் காட்டும். கைநடிப்புகளில் ஒரு கையினால் நடித்துக் காட்டுதல் இருகைகளினால் நடித்துக் காட்டுதல், என்னும் பிரிவுகள் உண்டு. ஒரு கையினால் நடித்துக் காட்டும் நடிப்புகள் 33 வகைப்படும். அவை:- பதாகை, இளம்பிறை, விற்பிடி, குடங்கை, வலம்புரி எனத் தனிப் பெயர்கள் பெற்றுள்ளன. இந்த நடிப்புகளில் கைவிரல் மடங்குதல் நிமிர்தல், குனிதல், விரிதல், தொடுதல், விடுதல் போன்ற முறைகளில் இயக்கிக் காட்டப்படும்.[2]

மேலே குறிப்பிட்ட கை நடிப்பு முறை பரத நாட்டியத்திற்கும் பொருந்தும் வண்ணமாக உள்ளது என்பதை மறுக்கவியலாது.

அடவுகள்

புலிபோல் வேடமிட்டுக் கொண்டே புலிவேடக் கலைஞர் உண்மையான புலியின் அசைவுகள் நடை, பதுங்கல் பாய்ச்சல், பக்கவாட்டில் நடத்தல், எகிறியும் எம்பியும் குதித்தல், தனது நாக்கால் புலியைப் போன்று உடலின் பிறபகுதிகளை வருடுதல், பற்கள் தெரிய வாயைப் பிளந்து உறுமுதல் போன்ற செயல்களை உள்ளடக்கிய கால் அடவுகளைப் போட்டு ஆடுவார். கால் மற்றும் கைகளின் இயக்கம் விரைவானதாக அமைந்திருக்கும். கால்களில் அடவு போட்டு உடலை அரைவட்டம், முழுவட்டம் என உடலைக் கால் அடவுகளுடன் இணைத்துத் திரும்பியும் அடவுகள் போடுவர்.

ஆட்டக்கலைஞர் முதலில் மறைவிடத்திலிருந்து புலிபாய்ந்து வருவதுபோல் வலக்காலைத் தூக்கி நம் முன்பு ஊன்றி இடக்காலை முன் வைத்து உடலைக் குனியச்செய்து இருகைகளையும் கூப்பி, சபைக்கு வணக்கம் சொல்லிய பின்பு ஆடத் தொடங்குகிறார்.

கால்களைக் குறுக்கும் நெடுக்குமாக மாற்றிப் போட்டு ஆடுதல், காலைப் பின், முன்பாக சுழற்றுதல், கால்களை முன்பின் தட்டித் தூக்கியாடுதல், காலை முன்னால் வைத்து எம்பிக் குதித்துத் திரும்பி ஆடுதல், பின்னால் அரைவட்டத்தில் நடந்து ஆடுதல், இருகைகளையும் ஊன்றிக் குதிகாலில் அமர்ந்து திரும்பித் திரும்பி ஆடல், பக்கவாட்டில் ஒரு காலை மண்டியிட்டு ஆடுதல் போன்றவை இவ்வாட்டத்தின் முக்கிய அடவுகளாகும். காலசைவும் உடலசைவும் இவ்வாட்டத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன.[3]

உண்மையான புலியின் இயக்கங்களை அப்படியே தன்னுடைய அடவுகள் வாயிலாக நம் கண்முன் படைத்துக் காட்டுவதில் புலிக் கலைஞர் பெறுகின்ற வெற்றியைப் பொறுத்தே இவ்வாட்டக்கலையின் சிறப்புத்தன்மை கணிக்கப்படுகிறது.

பக்க இசை

புலிவேட்டை அடவுகளில் சில அடவுகள் முழுமை பெறுவதற் குள் சதுரநடை மத்திய காலத்திலும் துரித காலத்திலும் அடுத்தடுத்து இசைக்கப்படுகின்றன. இவ்விரண்டு தாளப்போக்கிற்கு ஏற்பவும் புலி வேடக் கலைஞர் அடவுகளைப் போட்டு இக்கலையை நிகழ்த்துகிறார்.

சிலம்பாட்டத்திற்குப் பக்க இசையாக அமையும் தாசா எனப்படும் இசைக்கருவியையே புலிவேடத்திற்கும் பக்க இசையாகப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கருவி பெருத்த வாய்ப்புறம்கொண்டு அரைச்சட்டி யின் வாய்ப்புறத்தில் எருமைக் கன்றின் தோல் போர்த்தப்பட்டு இழுத்து வாரால் கட்டப்பட்ட தமுக்கு அல்லது சிறுபறையின் மேல் இரு சிறிய குச்சிகள் அல்லது தடித்த இரு தோல்பட்டை வார்களால் தட்டி ஒலி ஒழுப்புவர். இக்கருவியை இடுப்பில் கட்டிக்கொண்டு, கைக்கு ஒன்றாக இரு கைவிரல்களில் இடுக்கில் வைக்கப்பட்ட குச்சிகள் அல்லது வார்ப்பட்டைகளைக் கொண்டு, இச்சிறு பறையின் மேல் மாற்றி மாற்றி ‘டகர’ ‘டகர’ என்று தொடர்ந்து ஒலி எழுப்பும்படி இசைப்பர். இந்த டகர டகர இசைப்பு காலடி வைப்புகளுக்கு ஏற்ப அடித் தெழுப்பப்படும். டகர, டகர தொடரும்போது கால் அடைவைத் தொடரும் ஆட்டக்காரரர் அவ்விடத்தின் முக்கியத் திருப்பு முறைகளில் ஒவ்வொரு முடிப்பொலி எழுப்பப்படும்போதும் சற்றுநிறுத்தி அடுத்த நிலைக்குச் செல்வார். இப்பக்க இசை வாசிப்பிற்கேற்பவே காலடிகள் போடப்படும். இச்சிறு பறையொலிக்குப் பதிலாகத் தப்பு, பேண்டு வாத்தியச் செட்டு முதலிய பக்க இசைக்கருவிகளின் இசையும் இப்புலிவேடத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.[4]

சிலம்பாட்டம், கத்திக்குத்து வரிசை போன்ற வீர விளையாட்டு களை உள்ளடக்கியதுதான் புலியாட்டம். கரகம், காவடி, பொய்க்கால் குதிரையாட்டம் போன்று தொழில் முறையில் இதுவரை இடம்பெறா மல் இருப்பதே இக்கலை நசிந்து போவதற்குக் காரணமாகத் தோன்று கிறது. திரைப்படங்களிலும் இவ்வாட்டம் மிக அரிதாகவே காண்பிக்கப்பெறுகின்றது. புலியாட்டத்தைப் போற்றிக் காப்பதன் மூலமே பிற கலைகள் புத்துயிர்பெறவும் வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே, நாட்டுப்புற ஆட்டக்கலைகளை வளர்த்தெடுக்க முன்வருவோமாக.

அடிக்குறிப்புகள்

1. புலியாட்டம், முனைவர் நா. வேலுசாமி, ப. 20, காவ்யா வெளியீடு.
2. தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகள், முனைவர் கு. முருகேசன், ப. 49.
3. மேலது, ப. 56.
4. தமிழக நாட்டுப்புற ஆட்டக்கலைகள், முனைவர் ஏ.என். பெருமாள், ப. 113.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சை - 10.

32

வீரபத்ரசாமி ஆட்டம் : குறும்பர் பலகை ஆட்டம்

பெரு. குப்பம்மாள்

வீரபத்ரசாமி

தலவிருட்சம்	-	எதுவுமில்லை
தெய்வம்	-	வீரபத்ர சாமி
கோவில்	-	ஓடு வேய்ந்த வீடு
இசைக்கருவிகள்	-	மத்தளம், தாளம், பறை, கொம்புக்கருவி (5-பிணிப்புகளாக -பித்தளையால் ஆனது. ஊதும் இசைக்கருவி)

குறும்பர் இன மக்களின் 12 உட்பிரிவுளுக்கும் குலதெய்வமாக வீரபத்ரசாமி ஒன்றே விளங்குகிறது. தொட்டயன், சிக்கயன், பொம்மன், உருபத்தி, சங்கில் பொம்மயன் என்று வீரபத்ரசாமிக்குச் சகோதரர்கள் ஐவர் ஆவர். ஒவ்வொரு தெய்வத்தின் இடப்புறம்-2, வலப்புறம்-2 காவலர்கள் துணை நிற்கின்றனர். வீரபத்ரசாமி குதிரை வாகனத்தில் ஊர்வலம் வந்து அருள் தருவதாக குறும்பர் இனமக்கள் நம்புகின்றனர். வீரபத்ரனின் கையில் 2 அடி நீளமுள்ள நீண்ட கத்தி உள்ளது. சாமிக்கு 'பொட்டி' உள்ளது. பொட்டியில் சாட்டை, பூசை மணி, முத்திரைத் தட்டு, (சூடம் காட்டும் தட்டு) ஆகியவை உள்ளே வைக்கப் பட்டிருக்கும்.

கோயிலின் அமைப்பு

வீரபத்ரசாமியின் கோவில், கட்டடக்கலை முறையில் சிறப்பு ஏதுமில்லை. பழங்கால மக்களால் பின்பற்றப்பட்டு வந்த வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் இன்னும் பின்பற்றிவருகின்றனர்.

ஐவருக்குத் தேவையான 5-அங்கண வீடே கோவில் ஆகும். கோவிலிற்கு மதிற்சுவரும் தாழ்வாரமும் உண்டு.

வீரபத்ரசாமி கோவிலின் முன்பு சுயம்புவாக உள்ளார். கோவிலின் உள்ளே ஐம்பொன் சிலை குறும்பர் பலகை மீது நின்ற நிலையில் உள்ளது.

பலகையில் சாமியின் பின்பகுதி காவடி வடிவத்தில் மூங்கிலால், நெடுக 5 குறுக்கே 7 என்ற வகையில் பந்தற்காவடி கட்டி உள்ளனர்.

விழா தொடக்கம்

குறும்பர் இன மக்கள் வீரபத்ரசாமிக்கு விழா எடுப்பது ஆடி மாதம் ஆகும். 18ம் நாளில் காவிரிக் கரையில் "ஜலகிரீடை" என்ற புனித நீராடல் செய்வது பரம்பரை வழக்கமாக பழங்கால முதலே உள்ளதாக அவ்வின மக்கள் கூறுகிறார்கள். "ஊர் கவுண்டரும், ஊர் மக்களும் பேசி ஊர்க் கங்கணம் கட்டப்படுகிறது. ஆண்கள் வலக்கையில் குறும்ப ஆடு ரோமத்தால் கங்கணம் கட்டுகின்றனர்"[1]. விழா முடியும்வரை சுபகாரியங்களும் செய்யக்கூடாது, தீட்டு ஏற்பட்டால் அந்த குடும்பத்தை விழா முடியும்வரை ஒதுக்கி வைப்பர்.

குறும்பர் பலகை ஆட்டம்

இவ்வாட்டம் ஆட 5+1 என்ற கணக்கில் நபர்கள் இருப்பர். இவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களோ, அல்லது பூசாரி இல்லையெனில் அவரது பங்காளிகள்எவரேனும் பலகை (சாமியை) தூக்கி ஆடுவர். கரகமும் உடன் செல்லும். முதலில் பாவாடை சாமி எனப்படும் "பொட்டிசாமி" பொட்டியைத் தலையில் வைத்து முன்னே செல்ல தலசாமி (பூசாரி) வீரபத்ரசாமியின் வளையாத நீண்ட கத்தியை ஒரு கையில் முன் ஏந்தியவாறு கோவிலை விட்டு வெளியே வருவார் "பூசாரி கத்தியை முன்னே நீட்டி 'ஓகோ' என்று உக்கரத்தோடு முன்னேறிச் செல்வார். உடனே பூசாரி மீது வீரபத்ரசாமி இற(ர)ங்கும்[2]".

பூசாரி:- ஓ..ஹோ ஓ.. ஹோ..

பாவடைசாமி :- வீரபத்ரன் வராரு, குதிரை மேலே வராரு
குதிரைமேல தொட்டய்யா ஆ..
ஏழு ஊரு ஜேத்ராய்யா ஆ..[3]

மக்கள் மகிமை தரும் பொம்மை ஆ...
மனம் குளிர வராரய்யா..
வீரபத்ரன் வராரய்யா...
விருட்டென்று வந்தாரய்யா

வீர பொம்மன் வருவாருன்னு
வரகரசி பொங்கிலிட்டேன் ஏ..ஏ..ஏ
செல்லியம்மா தங்கய பாக்க
சீக்கிரமா வராரு ஊ...[4]

செல்லியம்மன் கோவிலுக்கு வீரபத்ரன் செல்லல்

சன்னதியிலிருந்து வீரபத்ரசாமி புறப்படும்போது முதலில் பூ குண்டத்தில் (நெருப்பு) இறங்கும். பிறகு உக்கரித்த சாமி மிகுந்த வீரத்தோடும், வேகத்தோடும் செல்லியம்மன் கோவில் நோக்கிச் செல்லும். செல்லியம்மன் வந்தவுடன் ஐந்து சாமிகளையும் தலையில் இருந்து கீழிறக்கி வைப்பர். ஐவரும் தனது தங்கையை வணங்கி மகிழ்வோடு மண்டு விழாவிற்கு அழைப்பர். மீண்டும் பாடல் பாடியபடி சற்று வேகம் தணிந்து மண்டுக்குள் வீரபத்ரசாமி நுழையும். அங்கே உள்ள மண்டு பூக்குழியில் (நெருப்புக்குண்டம்)2-ஆம் முறையாக இறங்கியபின் முன்னதாக அமைக்கப்பட்டுள்ள "பச்சைப் பந்தலில்" வீரபத்ரன் சென்று அமர்வார். புங்கையிலை, வேப்பிலை, நொச்சியிலை, வாழைமரம் ஆகியவற்றைக் கொண்டு சாமி வீரபத்ரனுக்கு பச்சைப் பந்தல் அமைப்பர்.

வழிபாடும், சடங்குகளும்

தங்கள் குலதெய்வமான வீரபத்ரன் சாமிக்கு பலி தரும் வழக்கம் இல்லை. பழங்கள், மஞ்சள், குங்குமம், கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, எலுமிச்சை, வெற்றிலைப்பாக்கு கொண்டும் பால், பழம், சந்தனம், மஞ்சள் போன்றவைகளால் பலகை சாமிக்கு (வீரபத்ரன்) அபிஷேகம் செய்கின்றனர். பொட்டி சாமி மட்டும் மேல் அங்கியும் பாவாடையும் பாதம்வரை அணிந்திருப்பார். பலகை சாமிகள் இடுப்பில் துண்டும், மஞ்சள் (துணி) வேட்டி மட்டும் அணிந்து இருப்பர். விரதம் இருந்து பலகை தூக்குவர். 7 ஊர்கள் அல்லது 18 ஊர்களின் மாரியம்மன் தெய்வத்தை மண்டுக்கு வரவழைக்க, மண்டுவின் முதல்நாள் வீரபத்ரசாமியின் பலகை ஆட்டம் நடத்தப்படும் அன்று கோவில் பூசை முதல், மண்டு விழாவைக் கண்டு மாலை சன்னதி திரும்பும்வரை தன்னை "வணங்கும் மக்களுக்கு அருள் செய்யும்வரை கொம்பு வாத்தியம்,

மேளதாளம் ஒலித்திசைக்கும்". "மண்டு விழாவிற்கும், குலதெய்வ வழிபாட்டிற்கும் பலகை ஆட்டம் இருக்கும்"[5]. 15 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் குறும்பர் இன மக்கள் வீரபத்ரனுக்கு விழா எடுக்கின்றனர். மற்ற சமயங்களில் 18 ஊர்கள் சேர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யும் மண்டு விழாவில் பலகை ஆட்டம் பங்குபெறும். மண்டுவிழா வன்னியர் இன மக்களால் குறிப்பாக விளைச்சலை அதிகரிக்கும் நோக்கிலும், மழைபெறவும், செழிப்பிற்கு நன்றி கூறவுமே மண்டு விழா நடைபெறுவதில் குறும்பர் பலகை ஆட்டம் நடைபெறும்.

பஞ்ச உலோகத்தால் சாமி சிலைகள் செய்யப்படுகிறன. செல்லியம்மன் வணங்கும்போது தெய்வக்கூற்று ஏதேனும் சொல்வதும் உண்டு. இக்கூற்று "குறும்பர் இனச் சமுதாய பொதுமைக்கோ, அல்லது உலகில் நடக்கவிருக்கும் சம்பவங்களையோ சொல்வதுண்டு"6. தனி நபர்களுக்கு அருள்வாக்கு இல்லை. மண்டுக்கு பூ மிதிக்க சாமி புறப்பாடு முதல் குறும்பர் இன ஆண்கள் வழி நெடுக தலையில் தேங்காய் இடும் வழக்கம் உள்ளது. பெண்கள் தலையில் தேங்காய் இடும் வழக்கம் இல்லை. விழா முடிவில் கோவில் சன்னதியில் கெட்ட ஆவிகளை விரட்டியடிப்பதும் வழக்கமாக ஆண்கள் - பெண்களுக்கு சாட்டையடித்தல் முறை உள்ளது. சாட்டையடிபெற வயது வரம்பு இல்லை. சாட்டையடிப்பதற்கு முன் (மஞ்சள், திருநீறு, குங்குமம்) கலந்த "பண்டாரத்தூள்"[8]. நெற்றியில் வைக்கப்படுகின்றது.

மண்டுவில் வீரபத்ரன் செலக்கல் (நடுகல்) பூசை செய்யும் தீர்த்தம் வழங்கப்படுகிறது. இந்தப் புனித நீரை (தீர்த்தம்) கால்நடைகளுக்கும், நோய் குணமாகவும், தீய சக்திகளை விரட்டவும் மக்களும் நீர்த்தெளிப்பு செய்வர். நாகரை குலதெய்வ வழிபாடாகக் கொண்டுள்ளனர்.

வீரபத்ரனுக்கு தோப்புக்கரணம் போடப்படுகிறது. மண்டுவிழா வீரபத்ரசாமியால்தான் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஊர்களும் ரூ.750/- வீதம் வீரபத்ரசாமிக்கு காணிக்கையாகத் தரவேண்டும். குறும்பர் பலகை மண்டுவுக்குள் நுழைய 7 அல்லது 18 ஊர் மக்கள் தானியங்களைத் தானமாகக் கட்டாயம் வழங்க வேண்டும். இம்முறை பழங்காலம் முதல் தொடர்ந்து வழக்கத்தில் வருகிறது. இதற்கு "மேரை" என்று பெயர். மண்டுவிழாவின் 4-ஆம், 5-ஆம் நாளில் "மேரை"[7] பெறுவர். மேரை தானியங்கள் 1-படி முதல் 2-வல்லம்வரை தருவதும் பெறுவதும் சடங்காகவே வைத்துள்ளனர்.

"சக்தியே சாபத்தால் மாரியம்மனாக மண்ணுலகம் வந்து சேரியில் வாழ்க்கைப்பட்டதால் செல்லியம்மனாக மாறியதாகவும், இதனால்

மழையின்றி மக்களும், உணவின்றி அவளது பிள்ளைகள் இறந்ததாகவும்"[8] நாட்டார் வழக்கில் உலவும் புராணக் கதையே வீரபத்ரன் சாமி ஆட்டமாகும்.

அடிக்குறிப்புகள் : (கள ஆய்வின் போது பங்கு பெற்றோர்)

1. வீரபத்ரன்	-	கூத்தப்பாடி
2. சின்னகருப்பன்	-	கீழ் அக்ரஹாரம்
3. வீராயி	-	கூத்தப்பாடி
4. வீமன்	-	பூ செட்டிஅள்ளி
5,6. பிரமன்	-	ஆனைக்கல்லானூர்
7,8. சின்னபொம்மன்	-	கூத்தப்பாடி பூசாரி

◆

தமிழாசிரியர்,
அரசு மேல் நிலைப்பள்ளி,
பி. அக்ரஹாரம்,
தருமபுரி மாவட்டம்- 636 813.

33
கிராமிய ஆடல்களில் காவடியாட்டம்

மு. குமார்

மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்த ஆதி மாந்தன் தனக்கு ஒரு அரிய பொருள் கிடைத்தவுடன் மிகவும் மகிழ்ந்து துள்ளி, திரிந்து (அலைந்து) பல குரல்களில் சத்தங்களை எழுப்பிக் கூச்சல் போட்டுக் கையைத் தட்டிக் கூடிக் குதித்தான். அப்போதே ஆட்டங்களும் பாட்டு களும் ஆரம்பித்தன. இவை பல நூற்றாண்டுகளாகப் படிப்படியாய் வளர்ந்து அழகும், உணர்ச்சியும், மெய்ப்பாடும் உடையனவாக வளர்ந்தன. கட்டுப்பாடுகளும், வரைமுறையும் பெற்றுப் பலவகை ஆட்டங்களாக உருமாறின. அப்படித் தோன்றிய பலவகை யான கிராமிய ஆடல்களில் காவடியாட்டம் குறித்துக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் ஆடல்கள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் போர்க்காலத்தில் போர் வீரர்கள் ஆடிய பல ஆட்டங்களைப் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

"முன் தேர்க் குரவை, பின்தேர்க் குரவை, கழல் நிலை, வாடா வள்ளி, வெறியாடல் முதலிய ஆட்டங்களைக் குறிப்பிடுகின்றது"[1]

பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் ஆடல் வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில்,

சிவபெருமான் ஆடியது கொடுகொட்டி. இந்த ஆட்டமானது கடினமான தாளக் கொட்டுகளுக்கு ஆடியதால் இப்பெயர் பெற்றது. மேலும், சங்க இலக்கியங்களில் பல்வேறு வகையான ஆடல்கள் காணப்படுகின்றன. மல்லாடல், குரவைக் கூத்து வகைகள், பேய் நொடி, வெறியாடல், துணங்கை, வாடா வள்ளி, விறலியாடல், துடி தூங்கல், கயிறாடல், வள்ளை, பாலை ஆடல், அருவி ஆடல், கடல் ஆடல், உவகைக் கூத்து, துடி ஆடல், வெறிக்கூத்து, கோடியார் கூத்து போன்ற ஆட்டங்கள் காணப்பட்டன.

நாட்டுப்புற ஆடல் கலைகள்

பண்டைய காலத் தமிழ் மக்களையும், அவர்களின் வாழ்வியலையும், இன்ப துன்பங்களையும், போர் மரபுகளையும், வீரத்தினையும், காதலையும், பாரம்பரியத்தையும் பற்றிய செய்திகளும் இந்த அனைத்து நிகழ்வுகளிலும் ஒருங்கே காணப்படும். நாட்டுப்புறங் களுக்குச் (கிராமம்) சென்று அவர்களின் வாழ்க்கைப் பற்றிய செய்திகளை வெளிப்படுத்துவதே நாட்டுப்புறச் செய்திகள் ஆகும். "நாட்டுப்புற மக்களின் வாழ்வைப் பற்றி ஆராய்வோர் 'சமூக விஞ்ஞானி' என்று நாட்டுப்புற அறிஞர்களால் கூறப்படுகின்றனர்."[2]

ஆடலின் கூறுபாடுகள்

தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்ற மூன்றினுள் "நாட்டியம் என்பது புற நடத்தை"[3] தாண்டவம் என்பது வரலாற்று நிகழ்ச்சியை விளக்கியாடுவது, நாட்டியம் என்பது பாடல் கருத்தைப் பற்றி ஆடுவன. நடம் என்பதும் நட்டம் என்பதும் ஒன்று. நடனும் என்பனவும் நடம் என்பதும் ஒன்று, நடனம் என்பதும் நடம் என்பதும் ஒன்று. தாண்டவம் வன்மையுடன் ஆடுவது. நடன் என்பது மென்மையுடன் நடிப்பது. இந்த வேறுபாடுகள் காலச் சூழலுக்கு ஏற்ப மாறி, பின்னர் நீக்கப்பட்டன.

ஆடலில் உடல் அசைவுகளுக்கு ஏற்ப உடலுறுப்புகளின் இயக்கங்கள் பல்வகைக் கூறுபாடுகளையுடையன. பாத அமைப்பு முறை, வினைக்கையின் செயல்கள், உடல் நிலைகள், கால இயக்கங்கள், பலவகை நடைகள், தாவுதலாகிய தாண்டுதல் முதலியன உடல் உறுப்புகளின் அசைவுகளாகக் காணப்படுகின்றன. மெய்ப்பாடுகளைக் காட்டும் அசைவுகள் மிகச் சிறந்தவைகள். இவைகள், "ஆடல் கலையின் அகவுறுப்புகள், புற உறுப்புக்களாகப் பண், இசைக்கருவிகளும் தாள இசைக்கருவிகளும் விளங்குகின்றன. உடைகளும் அணிகலன்களும் திரையமைப்பு, மேடையமைப்பு முதலியவைகளும் ஆடலின்

புறவுறுப்புகளே. உள்ளத்தால் உடலில் தோன்றுவன அக உறுப்பின் தோற்றம்"[4] ஆகும்.

காவடி ஆட்டம்

காவடி ஆட்டம் பற்றிப் பார்ப்பதற்கு முன் அதிலேயே ஊன்றித் தன் உடலையும், தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு இருக்கும் "கலைமாமணி விருதையும், காவடிக் கலைஞர் என்ற பொற் பதக்கத்தையும் பெற்றுள்ள திரு.இ.விநாயகம் காவடியாட்டம் பற்றிக் கூறுவதைக் காணலாம்.

இவர் மூன்றாம் வகுப்பு வரையே படித்து உள்ளார். ஆனால், மனம் தளராமல் உடலையும், மனதையும் கைவிடாமல் கலைக்காக அர்ப்பணித்து இன்றைக்கும் ஒரு சிறந்த காவடி ஆட்டக் கலைஞராக வும், கிராமங்களிலும், வட்டங்களிலும், மாவட்டங்களிலும், நாடு போற்றும்படிக் கலைகளை நிகழ்த்துகின்றார்.

அவர் மட்டும் இந்தக் கலையில் ஈடுபட்டு உள்ளதைப் போன்று தன்னைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு வராமல் அவர்களைப் படிக்கவைத்து வேலைதேடிக் கொண்டிருக்கிறார். இருந்த போதிலும் அவர் தன் உடல் அழிந்தாலும், தன் கிராமியக் கலையும், கலை நுணுக்கங்களும், ஆடல் கலைகளும் அழியக்கூடாது என்று எண்ணி "மெட்ராஸ் குஜராத் மையம்" என்ற ஆடல் பள்ளியைத் தொடங்கி அங்குக் கரகாட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்ற ஆட்டங்களைப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவி களுக்குக் கற்றுத் தந்து, அவர்களை சிறந்த ஆடல் கலைஞராக மாற்றி வருகின்றார். இவரும் இவர் சார்ந்த குழு நண்பர்களும் செய்யுப் தொழிலை தெய்வமாகக் காத்து வருகின்றனர். இவரின் பாட்டன் (தாத்தா) சக்தி கரகம் எடுப்பதில் சிறந்தவர். மற்றும் இவர் மயில் ஆட்டம், மாடு ஆட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரை முதலியவற்றையும் நிகழ்த்தினார். இவரைத் தொடர்ந்து அவர் மகன் காவடியாட்டம் ஆடினார். பின் இதில் கல்வியறிவு இல்லாததால் தன்னையும் புகுத்திக் கொண்டு இந்தத் தொழிலைப் பரம்பரை பரம் பரையாகச் செய்து வருகின்றார். ஆனால், இப்பொழுது காலச்சூழ்நிலை கருதித் தன் வாரிசுகளைக் கல்வியில் புகுத்தி விட்டார். அவர், தான் தான் படிக்கவில்லை, தன் மகன்களாவது படிக்கட்டும் என்று கூறினார்.

பல கலைக்குழுவுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு 56 வயதாகியும் முடியவில்லை என்று கூறாமல் தன் கலையைக் கற்றுத் தந்து வருகின்றார்.

காவடியாட்டத்தின் தோற்றம்

ஒரு நீண்ட கம்பில் ஒரு பக்கம் பால் செம்பையும் மறுபக்கம் பொருட்களையும் வைத்துக் கட்டித் தோளில் சுமந்து சென்றனர். இப்படி இதனைத் தூக்கிச் செல்லும்போது வெயிலில் இருந்து தன்னையும், உடலையும் காத்துக் கொள்ளக் கம்பியின் இரு முனையிலும் இணைக்கும்படி குடை போன்று துணியால் கட்டி எடுத்தனர். இதனைத் தொடர்ந்து சற்று வாழை இலையைத் துணியின் மீது வைத்தும், தென்னை ஓலையால் காவடியை அலங்காரம் செய்தும் சுமந்து சென்றனர். இது முருகனுக்கு உரிய பொருள் என்று எண்ணி, முருகப்பெருமானுக்கு மட்டுமே எடுத்தனர். முருகனின் வாகனமாகக் கருதிய மயிலை காவடியில் அலங்காரம் செய்தும், அதன் இறகுகளைச் செருகியும் பின் நடைபாடையின் அலுப்பும், வெயிலின் கொடுமையும் எண்ணி, ஒரு மகிழ்ச்சியாக செல்ல வேண்டும் என்று இதனுடன் இன்பச் சுவைக்காக நையாண்டி அடித்துக் கொண்டும், காவடிப்பாட்டு பாடியும் முருகனைத் தேடிக் காவடியாக எடுத்துக் கொண்டு சென்றனர்.

காவடி செய்யப்படும் விதம்

ஆலம் விழுதில் 3 அடிக்கு வெட்டி எடுத்து நிழலில் காய வைத்து இயந்திரம் மூலம் அழகுறத் தண்டாகச் (தோளில் வைத்துக் கொள்ளும் கட்டை) செய்யப்படுகின்றது. பின் காவடியின் மேற்பகுதியைப் பொருத்தித் தேவைக்கேற்ப அலங்காரம் செய்து கொள்கின்றனர். காவடியின் இரு பக்கவாட்டில் ஒரு பக்கத்தில் சேவலும், மறுபக்கத்தில் மயிலும் ஆசாரியின் கைவண்ணத்தால் செதுக்கப்படுகின்றன.முன்பு காவடியை அப்படியே ஆட்டக்குழுக்கள் ஆடுமிடங்களுக்கும், செல்லும் இடங்களுக்கும் தூக்கிச் செல்லும் பழக்கம் இருந்தது. ஆனால், இப்போது காவடியினைத் தனித்தனிப் பாகங்களாகக் கழற்றி ஒரு சிறிய பெட்டியில் வைத்து எளிய முறையில் எடுத்துச் செல்லும் அளவிற்குத் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

காவடியாட்ட முறைகள்

ஆடல் கலைஞர் ஒருவர்க்கு முன் அழகர் வர்ணனை என்ற மேளவாத்தியம் அடிக்கப்படுகின்றது. அப்போது ஆடல் வல்லுநர் மேடையில் ஐந்து காவடியாட்டம் ஆடுவதற்கும் அது சிறந்து விளங்கு வதற்கும் உறுதுணையாக இருக்கும் இசைக்கருவிகள் அனைத்திற்கும் முதல் மரியாதை செலுத்துகின்றார். இதனைத் தொடர்ந்து சாமியடி அடிக்கப்படுகின்றது. அப்போது ஆடல் கலைஞர் வந்து காவடித்

தண்டைத் தோளில் எடுத்து வைத்துக்கொண்டு வட்டமாக, மெதுவாக முதல் சுற்றைச் சுற்றினார். பின் சுற்று அடி அடிக்கப்பட்டன. இந்நிலையில் வேகமாகத் தோளின்மீது காவடியைச் சுற்றுகின்றனர். அதற்கு அப்புறம் காவடியின் அசைவிற்கு ஏற்றாற்போல் காவடிச் சிந்து அடிக்கப் படுகின்றது. தோளிலிருந்து தண்டினைத் தலைக்கு மாற்றும்போது தெம்மாங்கு, நையாண்டி போன்ற முழக்கங்கள், முழக்கப்படுகின்றன. இந்நிலையைத் தொடர்ந்து பார்க்கும் போது காண்பவர்கள் இடையில் கலைந்துபோகும்நிலை ஏற்படும் போது "மகுடி" வாசிக்கப்படுகின்றது. அப்போது உடலினை பாம்பு போன்று வளைத்தும், நெளித்தும் அசைவு களை ஏற்படுத்தி அதற்கு ஏற்றாற் போல் காவடியையும் செயல்படச் செய்கின்றனர். பல்டி அடித்தல், வயிற்றில் காவடியை வைத்து இரு கைகளும் பிடிக்காமல் மூச்சுக் காற்றின் இயக்கத் திற்கேற்ப காவடியை ஆடச் செய்வது போன்றவை நிகழ்த்தப்படு கின்றன. கலைஞரின் திறமையை நிரூபிக்கும் விதமாக மேடையின் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களின் வரவேற்பைப் பெறும் விதமாகப், பல வேடிக்கை நிகழ்ச்சிகளை செய்கின்றனர். அவைகள்:

அ) ஒரு ஏணி மரத்தைச் செங்குத்தாக இரு பக்கங்களிலும் இரண்டு பேர் பிடித்து நிற்க காவடியை வைத்துக் கொண்டு வேகமாக மேலே ஏறி வயிற்றுப் பகுதியை ஏணியின் முனையில் வைத்துச் சுற்றுதல்.

ஆ) காவடியை ஆடச் செய்கின்றனர்.

இ) தலைமுடியில் தீயைக் கட்டிக் கொண்டு சுற்றப்படுகின்றது.

ஈ) பாம்பு போன்ற ஏணியில் ஒரு துவாரம் விட்டு மற்றொரு துவாரத்தில் நுழைந்து ஏணியின் கடைசிவரைச் சென்று மீண்டும் அதே போன்று கீழேயும் வருகின்றனர்.

உ) கண்ணைக் கட்டிக் கொண்டு எதிரே ஒருவரின் தலையில் தேங்காயை வைத்து கட்டையால் உடைத்தல்.

ஊ) பணத்தைத் தரையில் போட்டுக் கண்ணின் இமையால் எடுத்தல், மேசைமீது வைத்து எடுத்தல்.

எ) உருளையின் மேல் ஒரு நீண்ட சதுரப் பலகையை வைத்து அதன் மேல் நடனமாடுதல்.

ஏ) மிகவும் மெல்லிய துணி தைக்கும் ஊசியைக் கண் இமையால் கவ்வி எடுத்தல்.

ஐ) மண்ணெண்ணெயை வாயில் வைத்து வெளியே துப்பி தீ பரப்பிக் காட்டுதல்.

ஒ) தீ வளையத்தில் தாண்டுதல் போன்ற செயல்களைச் செய்து காட்டி மக்களை வியக்க வைக்கும்படித் தம் திறமையை காவடியாட்டத்தில் நிலை நாட்டுகின்றனர்.

முடிவுரை

மண் மணக்கும் கிராமிய ஆடல்களின் தோற்றம், வளர்ச்சி குறித்தும் ஆடலின் கூறுபாடுகளைப் பற்றியும், கிராமிய ஆடலில் சிறப்பான காவடியாட்டம் பற்றியும் அதனின் தோற்றத்தையும் காவடி செய்யப்படும் விதம், காவடியாட்ட முறைகள் குறித்தும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. மேற்சொன்ன காவடியாட்டம் நாட்டுப்புற நம்பிக்கை, கலை உணர்வோடு இன்றும் போற்றப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. இளம்பூரணர் - தொல், பொருள் (புறம். நூ 63, 72, 75 -பக். 295 - 303.
2. சு. சக்திவேல் - நாட்டுப்புறவியல், ப.20.
3. பஞ்சாங்கம் - சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ப.9
4. மேலது - பா 3 : 16.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
ஏனாதி இராஜப்பா கலை, அறிவியல் கல்லூரி,
பட்டுக்கோட்டை.

34
சாட்டையடி ஆட்டம்

முனைவர் பி. குருசந்தர்

தமிழ்நாட்டில் பல்வேறு கலைகள் தொன்று தொட்டு மரபு அழியாமல் தொடர்ந்து வருகின்றன. அவை மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாகவும் வரலாற்று ஆவணமாகவும் விளங்குகின்றன. தொல்காப்பியத்தில் நாட்டுப் பாடல்கள் 'பண்ணத்தி' என்று குறிப்பிடப் பட்டுள்ளன. சிலப்பதிகாரம் கிராமிய ஆடல் பாடல்களைப் பற்றிப் பல இடங்களில் கூறுகிறது. ஆனால், இலக்கியத்திலோ, வரலாற்றிலோ எந்தக் குறிப்புமில்லாத 'சாட்டையடி ஆட்டம்' என்பதைத் தற்காலத் தமிழகத்தில் சில பகுதிகளில் காண முடிகின்றது. அந்தக் குழுவினரின் சூழ்நிலையியலை நோக்குவ்தாக இக்கட்டுரை அமைகின்றது.

தற்போது சாட்டையடி ஆட்டம் ஆடி வருபவர்கள் தொடக்க காலத்தில் நாய் கொண்டு வேட்டையாடி வந்தனர். பிழைப்புக்காக ஊர் ஊராகச் சென்றுள்ளனர். நிலையாக ஓரிடத்தில் நிலைக்காமல், தங்கி வாழாமல் நாடோடியாக வாழ்ந்து வந்தனர்.

தொழில்

பிழைப்புக்காக ஊர் ஊராக அலைந்து திரிந்தவர்கள். 1991-ஆம் ஆண்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தேவராஜ் முயற்சியால் சக்கிமங்கலம் சிற்றூரில் சாட்டையடி காலனி ஏற்படுத்தப்பட்டு ஓரிடத்தில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் சாட்டையடி ஆட்டம் ஆடுதல், பூம்பூம் மாட்டை வைத்துப் பிழைத்தல், சோதிடம் பார்த்தல் என்று பல தொழில் செய்து வருகின்றனர்.

சாட்டையடி ஆட்டம் என்பது ஒருவன் கால்களில் சலங்கை, கையில் சாட்டை, வினோதமான உடை எனத் தோற்றம் அளிப்பார்கள். மக்கள் கூடும் இடமான சந்தை, பேருந்து நிலையம் போன்ற இடங்களில் தங்கள் மீதே அடித்துக் கொண்டுக் காசு கேட்பார்கள்.

அங்கு ஐந்து வயதுகூட நிரம்பாத ஒரு சிறுமி தரையில் படுத்திருப்பாள். பக்கத்தில் ஒரு பெண் உருமி அடித்தபடி இருப்பார். அவள் அந்தச் சாட்டையடி ஆட்டக்காரனின் உறவுக்காரியாக இருப்பாள்.

மக்கள் கூட்டம் அதிகமானாதும், சாட்டையைச் சுழற்றி 'பொளீர்' என்ற சத்தத்துடன் தன் உடல் மீது விளாசுவார். அந்த சாட்டை யடியால் தன் உடலில் கசியும் ரத்தத்தை கீழே படுத்திருக்கும் சிறுமி மீது சொட்ட வைப்பார்.

அக்காட்சி பார்ப்பவர்களுக்கு அச்சத்தையும் பரிதாபத்தையும் ஏற்படுத்தும். உருமி அடித்துக் கொண்டிருக்கும் பெண் தட்டேந்தி கூட்டத்தினரிடையே காசு கேட்பாள். மற்றொரு பக்கம் சாட்டையைத் தன்மீது அடித்துக் கொண்டவர் கையேந்தி காசு கேட்பார். அந்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். நிரந்தர வருமானம் கிடையாது. அதே நேரம் சாட்டையடி ஆட்டம் ஆடியே பிழைத்து வருகின்றனர்.

சாதியில்லாதவர்கள்

தொடக்க காலம் தொட்டே நாடோடியாக இடம் பெயர்ந்து நிலையில்லாமல் ஊர் ஊராகச் சென்று பிழைத்து வருவதால் எந்த வரலாற்று ஆவணப் பின்புலமும் சாதியும் இல்லமல் வாழ்ந்து வருகின்றனர். காற்று, தீ, விலங்குகள் ஆகியவற்றை வணங்கியுள்ளனர்.

சாதி தேவை

பிள்ளைகளைப் படிக்க வைக்கச் சாதி தேவைப்பட்டதால் தங்களின் குடியிருப்புக்கு அருகில் மாரியம்மன், காளியம்மன், மசூதி, தேவாலயம் கட்டி வழிபாடு நடத்தி வருகின்றனர். முன்னர் நாடோடிகளாக இருந்ததால் சொத்து எதுவுமில்லை. எனவே, எந்த ஆதாரத்தையும் காட்டிச் சாதிச் சான்றிதழ் பெறமுடியாத அவலத்தை,

"பழங்குடியினர் பட்டியலில் முப்பத்தாறு சாதிகள் இருக்கிறதாம் அதில் ஏதாவது ஒன்றில் எங்களைச் சேர்த்து விடுங்கள்."

"நாங்கள் எந்த சாதி என்பதே எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்கென்று ஒரு சாதி இல்லாததால் குழந்தைகளை அதிகம் படிக்க வைக்க முடியவில்லை. ஆகவே, ஏதாவது ஒருசாதியில் எங்களைச் சேர்த்து, சாதிச் சான்றிதழ் அளியுங்கள் என்று அரசிடம் வேண்டுகோள் வைத்துள்ளார் சாட்டையடி சமூகத்தின் தலைவர் எல்லப்பா.

திருமணம்

மிக எளிமையான வாழ்க்கை வாழ்பவர்கள், இயற்கையைக் குலதெய்வமாக வணங்குபவர்கள், எந்த இடத்திலும் திருமணம் செய்து கொள்வார்கள். திருமணத்தைச் செய்து வைக்கப் பூசாரி கிடையாது. மூத்தவர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொள்வார்கள். அதன் அடையாளமாகப் பெண் கருகமணி மாலையை அணிந்து கொள்வாள். திருமணச் செலவுகளை மணமகன் வீட்டார் செய்யவேண்டும். வரதட்சணை, சீதனம் எதுவும் கிடையாது.

தொழில் காரணமாகப் பல ஊர்களுக்குச் செல்வார்கள். போகும் இடங்களுக்கு மனைவியையும் உடன் அழைத்துச் செல்வர். தொடர்வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், திறந்த வெளிகள் மற்றும் மரத்தடியில் தங்கிக் கொள்வார்கள்.

மகப்பேறு

எந்த இடத்தில் தங்கியிருக்கும்போது குழந்தை பிறக்கின்றதோ அந்த இடத்தின் பெயரை அக்குழந்தைகளுக்கு வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். "எந்த இடத்தில் பிறக்கிறோமோ அந்த இடத்தின் பெயரை வைப்பது எங்கள் வழக்கம். நான் குளித்தலை பக்கம் ஐயர்மலை என்ற இடத்தில் பிறந்ததால் எனக்கு 'ஐயர்' என்று பெயர்" என்றார். அவர் சோதிடம், கைரேகை பார்ப்பதன் மூலம் தினமும் ஐம்பது ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று கூறினார்.

எந்த ஊரில் என்ன கிடைக்கிறதோ அதைக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்றனர். தினமும் ஒரு ஊர் என்று அலைவதால் கருவுற்ற பெண்ணுக்கு மகப்பேறு எந்த இடத்திலும் நடக்கும். மூத்தப் பெண்கள், மருத்துவச்சியாகச் செயல்படுவார்கள்.

பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பாலுடன் சேர்த்து ஓணான் ரத்தமோ அல்லது மூன்று சொட்டு கழுதை ரத்தமோ கொடுப்பார்கள்.

அதுவுமில்லையென்றால் தாய்ப்பாலுடன் கழுதைப்பால் கலந்து கொடுக்கும் பழக்கம் உள்ளதாம்.

மணமுறிவு

எந்தவிதக் காரணமும் இல்லாமல் கணவனோ / மனைவியோ நினைத்தால் திருமண உறவை முறித்துக் கொள்ளலாம். கணவன் திருமண முறிவு கோரினால் மனைவிக்கு நஷ்டஈடு தரவேண்டும். ஆனால், மனைவி திருமண முறிவு கோரினால் நஷ்டஈடு தரத் தேவையில்லை. அதேநேரம் திருமண முறிவு செய்து கொண்டவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம். திருமண முறிவு ஏற்பட்டதும் கணவனிடம் மனைவி கருகமணி மாலையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். குழந்தை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் தந்தையிடம் வந்துவிடும்.

முடிவுரை

சாட்டையடி ஆட்டக்காரர்களின் வாழ்க்கைமுறை பழங்குடியின மக்களின் வாழ்க்கையினும் கீழாக உள்ளது. சாதிச்சான்றிதழ் கிடைக்காத காரணத்தால் பள்ளிக்குப் போகாமல் சாட்டையடிக்குப் போகிறார்கள். சாட்டையடி ஆட்டம் பார்ப்பதற்கு அவலமாகவும் பரிதாபமாகவும் உள்ளது போலவே அவர்களின் வாழ்க்கையும் அமைந்துள்ளது. இந்நிலை வளரும் சமுதாயத்திற்குச் சரியானதல்ல.

ஆதாரம்

1. குமுதம் ரிப்போர்ட்டர் *22-1-09*, பக். *14-16*

2. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - சோமலெ

◆

முதுநிலை விரிவுரையாளர்,
சேலம் சௌடேசுவரி கல்லூரி,
சேலம் - 636 010.

35

தமிழர் கலை உலகில் கூத்தின் பரிணாமங்கள்

கோ. கௌதமன்

முன்னுரை

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ்க்குடி" - இக்குடிமக்கள் அனைவரும் முன்னொரு காலகட்டத்தில் நாடோடிகளாகவும், பாமரர்களாகவும், இனக்குழு மனிதர்களாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

"இச்சூழலில் ஆண், பெண் எனும் இருபேதம் கண்டு வாழ்ந்து வரும் சூழலில், தந்தை வழிச் சமூகம், தாய் வழிச் சமூகம் என மாறி, பின்னர் கூட்டுக் குடும்பம் என்ற சூழலில் வாழ்ந்திட்டனர். இவ்வாழ்வியல் சூழல் இன்பம், துன்பம் எனும் இரு முடிவு தாங்கி வந்துள்ளதையும் நன்கறிவர். இவ்வின்பச் சூழ்நிலை பின்னொரு நாளில் அனைவரும் மகிழும்படியான அல்லது அனைவரும் விரும்பும் நிலையில் விழாக்கோலம் கண்டு எச்சமூக வாழ்க்கை என்பதைவிட எச்சமூக மக்கள் ஆனந்தத்தின் பிடியில் இருந்து வாழ்ந்தனர் என்பதே இன்றியமையான செய்தியாகும். இச்செய்தி வாழ்வியல் செய்தியாகவும், உயிரோட்டம் நிரம்பியதாகவும் மாற நம் முன்னோர்களே மிகச் சிறந்த சான்றாதாரங்கள் ஆவர். அவர்களின் மகிழ்ச்சித் துள்ளல்தான் கூத்தின் ஆரம்பம் என்றும் கூறலாம்."[1]

தமிழும் கூத்தும்

தமிழர் தம் தமிழும், அதன் வாழ்வும் பழமையானது என்ற போதிலும், இங்கே தனித்துவம் மிக்க இயல், இசை, நாடகம் எனும் மூன்று தமிழும் ஒருங்கே வாழ்ந்தும், வளர்ந்தும் வந்திருக்கின்றன.

மூன்று தமிழின் முதன்மைத் தமிழில் உயிர் வடிவம் தாங்கிய உயர் தமிழ் இறைத்தமிழ் என்றே கூறலாம். இவ்விறைத் தமிழில் இறைவனே திருநடனம் ஆடிய காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. நம் பழமையான செய்திகள் அனைத்தும் இறைவனால் பாடியும், ஆடியும், அசைத்தும், இசைத்தும் கூறியவை உண்மைச் சான்றுகளே ஆகும். இத்தகைய இறையருளால் வளர்ந்த - வளர்ந்து விட்ட புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், இலக்கணங் கள் அனைத்தும் ஒரு சாராரின் ஆடல், பாடல் மற்றும் அவர்களின் அசைவுகளைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. காரணம், பண்டைய கால அரசர் தொட்டு இன்றைய பணக்காரர்கள்வரை அனைவரும் தேவமகளிரைச் சார்ந்தும், வாழ்ந்தும், வளர்ந்தும் வந்திருக்கின்றனர். பிற்காலச் சோழர்கள்தான் முதன் முதலில் தேவர்களுக்கான மகளிர் என இனம் கண்டு அவர்களை வலங்கை, இடங்கை என்று தனித்துப் பிரித்தனர். ஒரு சாரார் அரசர் அவையிலும், மற்றொரு சாரார் அந்தப்புரத்திலும் இடம் பெயர்ந்தனர். இவர்களின் இடப்பெயர்ப்பு என்பது மகிழ்ச்சியின் துவக்கம் என்றும் கூறிடலாம். இவ்வாறான பெண்கள் முதலில் இடம் பெற்றாலும் நாளடைவில் அவர்களின் சலிப்புத் தன்மை, ஆண்களுக்கும் இடம்தரும் வகையில் அமைந்திருந்தது.

உளவியல் பார்வையில் கூத்தின் நிகழ்வு

"மனமும் மனம் சார்ந்த வாழ்வும், இன்பத்தின் பாதையில் இறைவனையும், இறைவனின் பார்வையில் உலகத்தையும், உலகத்தின் பார்வையில் உயிரையும் இணைத்தே வாழ்விக்கின்றன. இவ்வாழ்வியல் சூழல் ஆண், பெண் கலி நடனங்களை உயர்த்திக் காட்டுகின்றன. பெண்களை மிஞ்சும் ஆணும், ஆண்களைப் பின்தள்ளிய அவர் களுடைய வனப்பும், வாஞ்சையும் எல்லாத் தமிழுலகமும் பேசும் வகையில் அமைந்து உள்ளன."[2]

"தனி மனித அசைவு உலகக் கண்களைக் காத்திருக்கச் செய்த காலம் இவ்வாழ்வியல் காலம் என்று கூறலாம். இத்தகைய பண்பாடு, நாகரிகம், மொழி, இவைகளைக் கடந்த ஒரு தனிமனித அரங்கேற்றம் தான் கூத்து எனக் கூறலாம்."[3]

"கைவண்ணம் இங்கே கண்டேன் கால்வண்ணம் அங்கே கண்டேன்'' எனும் மொழி நடைக்கேற்ப வாழ்வியல் கலை நிகழ்வுகளைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன.

கூத்தின் நிகழ்வும் நடையேற்பும்

கிராமப்புறங்களில் திறந்த வெளியில் நாட்டுப்புறக் கலைஞர்கள் வாயிலாக நிகழ்த்தப்படுவது கூத்து ஆகும். இக்கூத்தின் நிகழ்வுகள் யாவும் பழமைவாய்ந்த நினைவுகளைப் பண்பாட்டின் கலாச்சாரமாக நிகழ்த்துகின்றனர்.

"இத்தெருக்கூத்தின் வளர்ச்சி நிலையே நாடகம் எனினும், மிகையாகாது. காரணம் மக்களின் வாழ்வியல், அவர்களின் எண்ணம், செயல், பண்பாடு, வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டுவதே இக்கலை.

'கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்.'

இதிலிருக்கும் நடைமுறை ஒழுக்கங்கள் யாவும், பண்பாட்டு நாகரிகம் கருதியும், பயண்பாட்டு நிலை குறித்தும் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகிறது''.[4]

கூத்தின் நடையேற்புப் பரிணாமங்கள்

கூத்துக்கான தடயங்கள் அனைத்தும், பாமர மக்களின் பரிணாம வளர்ச்சியில் கிளர்ந்து எழுந்தனவே. இக்கூத்துகளை வகைப்படுத்தும் போது தெருக்கூத்து, கழைக்கூத்து, பாவைக்கூத்து என்றும் பிரித்தாளப் பட்டுள்ளது. ஆனால், இப்பாவைக்கூத்தில் மரப்பாவைக் கூத்து, தோற்பாவைக் கூத்து என்று பிரித்தாளப்பட்டிருக்கிறது.

கூத்தின் முடிவும் அதன் ஏற்புச் செயலும்

"கூத்து என்பது மக்களை மகிழ்விக்கவும், பாமரர்களின் எண்ணங் களை உயர்த்துவிக்கவும் வழிகாட்டும் செயல் என்றே குறிப்பிடலாம். மேலும், இக்கூத்து என்பது தனித்திறன், மற்றும் பொதுச்சிந்தனைகளை வரையறுத்துக் கூறும் கலை என்றே கூறலாம்.[5]

ஆய்வின் முடிவு

எங்கே செல்கிறது காலம் என்பதையும், எங்கே மக்கள் செல்கிறார்கள் என்பதை வரையறுத்துக் காட்டும் ஒரு கலை உலகம்

இன்னமும், இங்கே வாழ்ந்து கொண்டே இருக்கிறது. வாழ்க்கைப் பயனுற உலகக் கலையை அல்ல, தமிழர் கலையைப் போற்றுவோம்.

சான்றெண் விளக்கம்

1. நாட்டுப்புற இயல் ஆய்வு, பக். 36, டாக்டர். சக்திவேல்.
2. மேலது.
3. மக்களின் மரபும் பண்பாடும், ப. 61, டாக்டர் ஆத. முத்தையா.
4. நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 32, ஆறு. இராமநாதன்.
5. நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 92, டாக்டர். சக்திவேல்.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம் - 608 002.

36

"வீரபத்ரசாமி ஆட்டம்" (குறும்பர் பலகை ஆட்டம்)

முனைவர். பொ. சத்தியபாமா

"பாலில்படு நெய்யென உட்கலந்த திருவீரபத்திரா
ஒலியிசையில் நினது புகழைப் பாடவேண்டும்
சலிப்பு அடையா வண்ணம் எங்கணமே சென்று
கிலிநீக்கி அவையில் தோன்றிட அருள்வாய்!

முன்னுரை

இறைவழிபாட்டுக்கு உதவுமாறு பலவிதமான நாட்டுப்புற ஆட்டக்கலைகள் நடத்தப் பெறுகின்றன. அவை பெரும்பாலும் ஊர்த் தெய்வங்களுக்கு விழா நடத்தும்போது நடைபெறுகின்றன. குறிப்பிட்ட தெய்வங்களுக்குக் குறிப்பிட்ட ஆட்டக்கலைகள் என்று வகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அனைத்துச் சமயச் சார்பு ஆட்டக் கலைகளும் இறைவணக்கத்துக்காகவே நடைபெறுகின்றன. இத்தகைய ஆட்டக்கலைகள் விழாக் காலங்களில் கோயில் முன்னாடியும் அல்லது தெய்வங்கள் வீதி உலா வரும்போதும் நடத்தப்படுகின்றன. ஆலயங் களுக்குச் செல்லும் வழியிலும், ஊர்ச் சந்திகளிலும் இவ்வகை ஆட்டக் கலைகள் நடைபெறுவது உண்டு. வெவ்வேறு தெய்வங் களுக்கும், அவற்றிற்கு உரிய கதைகளுக்குத் தக்கவாறு ஆட்டங்கள் நடைபெறு கின்றன. எனவே, நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆடும் ஆட்டங்களுள்

ஒன்று 'பலகை ஆட்டம்' ஆகும். இவ்வாட்டத்தை வீரபத்ரசாமி விழாவில் குறும்பர்கள் ஆடுகின்றனர். இந்த ஆட்டம் பற்றி காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை வாய்மொழித் தரவுகளைக் கொண்டும் வேண்டிய இடங்களில் இலக்கிய சான்றுகள் கொண்டும் காட்டப்பட்டுள்ளன.

வீரபத்ரர் தோற்றம்

முழுமுதற் கடவுளாகிய சிவனின் பிள்ளைகளுள் ஒருவராகத் தோற்றமளித்தவர் வீரபத்ரசாமி ஆவார். இவருக்குப் பல இடங்களில் பல பெயர்கள் உண்டு. இவர் பல இன மக்களுக்குக் குலதெய்வமாகவும், சிலருக்குக் காவல் தெய்வமாகவும் விளங்குகிறார். சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றியவர் என்று 'திருவிளையாடல் புராணம்' கூறுகிறது. 'தக்கயாகப் பரணியில்'தக்கனை அழிக்க வீரனாகக் காட்சி தந்தார் என வருகிறது. 'கந்தபுராணத்தில்' 'வீரபத்ர படலம்' என்றே இடம்பெற்றுள்ளது.

குறும்பர்கள்- ஓர் அறிமுகம்

'குறும்பர்' இன மக்களுக்குக் குலதெய்வம் அகோர பத்திரர் ஆவார். தர்மத்தின் வழிநிற்கும் இந்திய மக்களுள் வடஆற்காடு, திருவண்ணாமலை, தர்மபுரி மாவட்டம், தற்பொழுது ஊட்டி போன்ற இடங்களில் வசிப்பவர்கள் ஆவார். இவர்கள் கன்னடம் கலந்த 'லிபி' இல்லாத தமிழ்மொழி பேசக்கூடியவர்கள். "குறும்பர்கள் எனப்படும் இவ்வின மக்கள் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பல்லவர்களின் வழித்தோன்றல்கள் என வரலாறு தெரிவிக்கிறது".[1] இவர்கள் மலைகளில் வாழமுற்பட்டாலும் இவர்களின் தொழில் ஆடு, மாடு மேய்த்தலும், கம்பளி நெய்வதும் ஆகும். குறும்பர் எனப்படும் இவ்வினப் பழங்குடி மக்கள் வளர்க்கும் ஆட்டினைக் 'குறும்பாடு' எனக் கூறுவதுண்டு. இன்றைய திரைப்படப் பாடல் ஒன்றில் 'குறும்பாடு' என்று குறிப்பிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதால் இவற்றைத் திருடாமல் இருப்பதற்காக தன் குலதெய்வமாகிய 'அகோர வீரபத்ரசாமியைக்' காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். காவல் தெய்வங்கள் பொது வாகக் கருணையாக இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தால் தப்பு செய்தவர்களைத் தண்டிக்க முடியாது. "முதன்முதலில் குடியப்பன் சம்புரியப்பன், தோராளியப்பன், கர்பீரப்பன் என்ற சகோதரர்கள் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தனர். அப்படி ஆடு மேய்த்துக்கொண்டி

ருந்தபோது, வீரபத்திரசாமி அவர்களுடைய ஆட்டு மந்தைக்குள் புகுந்து ஓர் ஆட்டின் தலையை வெட்டினார். தக்கன் தலை இல்லாமல் இருப்பதால் தக்கன் உடலில் ஆட்டின் தலையை வைத்தார். இச்செயலைக் கண்ட அச்சகோதரர்கள் பயந்துவிட்டார்கள். அவர்முன் தோன்றி நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்; நீங்கள் என்னை நினைக்கும்போது உங்கள் முன் தோன்றுவேன்"[2] என்றார். அன்றுமுதல் அவர்களுக்குக் காவல்தெய்வ மாக வீரபத்ரசாமி விளங்கினார். இக்கதையிலிருந்து நோக்குமிடத்து பழங்குடி மக்களாகிய "குறும்பர்கள்" என்பதும், இவர்கள் இக்கதையில் வரும் சகோதரர்களின் சந்ததியினர் என்பதும் தெளிவாகிறது.

பலகை ஆட்டம்

புதுக்கோட்டை, திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களில் சித்திரை, ஆடி, மாசி, புரட்டாசி மாதங்களில் வீரபத்திரவிழா நடை பெறும். அப்பொழுது ஆடும் ஆட்டமே பலகை ஆட்டம் எனப்படு கிறது. ஆனால், இந்த ஆட்டத்தைப் பற்றிக் களஆய்வு செய்யும்போது கிடைத்த தகவல்களின்படி குறும்பர்கள் ஆட்டம் என்றுதான் அன்று வழங்கப்பட்டு வந்துள்ளது. பின் ஆட்டத்தில் ஆடும் கருவிகளின் இயக்கத்தைக் கொண்டு ஆட்டங்களுக்குப் பெயர் வைத்து ஆடு கின்றனர். "வீரபத்ரசாமியைத் தலையில் வைத்து ஆடுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. இச்சிலை ஐம்பொன்னால் ஆன சாமியாகும். இச்சிலை குதிரையின் மீதோ, சக்தியுடன் இருப்பது போலவோ செய்யப்பட்டுப் பலகைபோல் இருத்தப்பட்டிருக்கும். 'வீரபத்திரசாமி பலகை ஆட்டம்' என்றும் குறும்பர்கள் ஆடுவதால் 'குறும்பலகை ஆட்டம்' என்றும் அழைக்கப்படும்"[3]. எனவே, குறும்பர் பலகையில் சாமியை வைத்து ஆடுவதால் குறும்பர் பலகை ஆட்டம் எனப் பெயர் வரலாயிற்று.

இது கர்நாடகத்திலிருந்து வந்த கலை என்கிறார்கள். "குறும்பர் களால் தர்மபுரி வட்டாரத்தில் மாரியம்மா, அல்லியம்மா, சக்கம்மா, ஒட்டரம்மா, அங்காளம்மா ஆகிய கோயில்களில் ஆடப்போகும்போது தங்கள் தெய்வங்களிடம் அனுமதி வாங்கியே ஆடுவர். ஆண்கள் மட்டுமே, இரவு முழுவதும் ஒப்பனை இன்றி ஆடுவர். பம்பை, மேளம், தோல், பறை போன்ற கருவிகள் இசையுடன் கால் சலங்கை ஒலிக்க ஏறக்குறைய 30 பேர் கலந்து கொண்டு வட்டமாக நின்று ஆடுவர். கோயில் கலையாக இருப்பதால் விரதம் இருப்பர்"[4]. எனவே, பலகை ஆட்டம் ஆடும் ஆட்டக் கலைஞர்கள் வீரமும், பக்தியும் நிறைந்தவர் களாக இருப்பர் என்பது தெரியவருகிறது.

அகோரவீரபத்ரசாமிதான் குறும்பர்களுக்குக் குலதெய்வம் என்று முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரை வணங்கும் குறும்பர்கள் முதலில் கருவறையில் மூலவர்க்கு அபிஷேகம் ஆராதனைகள் செய்யப் பட்ட பின்பு வீரபத்ரசாமியை வெற்றிலையாலும், வில்வ இலையாலும் அலங்கரிக்கின்றனர். பின்பு பல நிறப் பூக்களாலும் இறைவனுக்குச் சூட்டுகின்றனர். பின்பு, தன் மனைவி லிங்கம்மாளுடன் ஒரு போர் வீரனாகக் காட்சிதரும் கோலத்தில் அலங்கரித்துப் 'பலகை' அல்லது 'மனை' என்று வழங்கப்படும் மனைப்பலகைக் கோலத்தைத் தெருக்கள் தோறும் மக்கள்பார்வைக்கு எடுத்துச் செல்கின்றனர். அப்பொழுது இதற்கு என்று ஆடும் ஆட்டக்கலைஞர்களை வரவழைத்து ஆடச் சொல்கின்றனர். இவர்கள் ஆடும்போது பலகை வடிவத்தில் நின்று கொண்டு தாரை, தப்பட்டை, புல்லாங்குழல், ஊதுகொம்பு போன்ற கருவிகளைக்கொண்டு இசை எழுப்பி ஆட்டம் ஆடுகின்றனர். இதற்குத்தான் பலகை ஆட்டம் என்று சொல்லிக் கொள்கின்றனர். இந்த ஆட்டத்தில் 6 முதல் 9 வரை ஆண்களாகவே ஆடுவர் என்கின்றனர்.

இவர்கள் காவி வேட்டி, வெள்ளைச் சட்டை, மஞ்சள் வண்ணத் தலைப்பாகை, கழுத்தில் உத்திராட்சை மாலை அல்லது பூக்களால் ஆன மாலை போன்றவற்றை அணிந்துகொண்டு ஆடுவர். குறும்பர் இனமக்கள் தத்தம் கிராமங்களுக்கு இவ்வகை ஆட்டக்காரர்களை வரவழைத்து வீரபத்ரசாமியின் கதையைச் சொல்லி ஆடுகின்றனர். இவர்கள் எல்லா விழாக்களிலும் பொதுநிகழ்ச்சிகளிலும் ஆடுவது இல்லை. வீரபத்திரருடைய திருக்கரங்களில் கோமரம், பாலம், குவிசம், பலகை, வாள், வேல், வில், பிண்டி, தண்டி, வச்சிரம் போன்ற ஆயுதங்களின் காட்சிகளில் ஆடுகின்றனர். பலகை என்பதை ஒருவகை கருவியாகக் கருதுகின்றனர்.

'பலகை ஆட்டம்' என்று இன்றைய காலக்கட்டத்தில் பெயர் வந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. "சேர்வை என்ற இசைக் கருவியை அடித்து ஆடும் ஆட்டம் சேர்வை ஆட்டம் ஆகும். இது சிவ வழிபாட்டோடு உருவானது. மலைவாழ் மக்களான குறும்பர்கள் வீரபத்திரக் கடவுளை வழிபட ஆடுவர்" ... சேர்வை ஆட்டம் என்பது பலகை ஆட்டத்தோடு தொடர்புடையதாக இருக்கலாம். எனத் தோன்றுகிறது. இந்த ஆட்டம் ஒரு மணி அல்லது இரண்டு மணிநேரம் வரை நீடிக்கும். இந்த ஆட்டத்தைப் பகலிலும் ஆடுகின்றனர். பெரும்பாலும் இரவு நேரத்தில்தான் ஆடுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

மதுரையில் உள்ள ஒருவரிடம் (சண்முகராணி) இந்த ஆட்டத்தைப் பற்றிக் கேட்டபோது அவர் கூறிய கருத்து வீரபத்திரர் இருகால்களிலும் மரத்தாலான கால்கட்டை அணிந்து வருவதுபோல் குறும்பர்கள் என்று அழைக்கப்படும் மலைவாழ் மக்களும் அந்தப் பலகையால் செய்யப்பட்ட பாதக்கட்டையை அணிந்து வீர ஆவேசமாக ஆடுவர். வீரபத்ரர் வீரம் நிறைந்தவர் என்பதால் அவர் வீரம் ஆடும் கலைஞர்கள் உடலிலும் புகுந்து விடுகிறது என்கின்றனர். அதனால், அவர்கள் வீரபத்திரசாமியைப் பலகையில் வைக்கின்றனர். பலகையில் வைப்பதற்குக் காரணம் உண்டு. பொதுவாகப் பெரியோர்கள் வீட்டிற்கு வரும்போது அவர்களைப் பலகையில் அமருங்கள் என்கின்றனர். அந்தக் காலத்தில் "மனைப்பலகை எடுத்துப் போடு" என்று கூறுவர். வீரபத்ர சாமியும் தம்மைவிட உயர்ந்தவர், காவல் காப்பவர் என்பதால் பலகையில் அமர வைப்பதாகக் கூறுகின்றனர். பின் அந்தப் பலகை முன் நின்றுகொண்டு வீரபத்ரசாமியின் வரலாற்றைக் கூறி ஆடுகின்றனர். ஆனால், முன்பு கையில் பெரிய 'தடி'யை வைத்துக் கொண்டு ஆடுவர் என்பதால் தேவராட்டம் என்றனர். காலப்போக்கில் ஆடும் நிலை மாறுபடுவதால் பலகை ஆட்டமாக நிலைத்து விட்டது என்கின்றனர். இந்தக் கருத்தின் அடிப்படையில் 'தேவராட்டம்' பலகை ஆட்டத்தோடு தொடர்புடைய ஆட்டமாகக்கருத இடமுண்டு.

ஆட்டத்தின் நம்பிக்கை

சிவனின் மகனாகிய அருள்மிகு வீரபத்திர சாமியை வணங்கி ஆடி மகிழ்வித்தால் அவர்களின் அன்பும் ஆசியும் எல்லாவிதச் செல்வங்களும் பெற்று நல்ல மனிதர்களாக வாழலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

அறிவியல் கருத்து

அன்று இறைவழிபாட்டுக்காக ஆடிய ஆட்டம் இன்று அறிவியல் அடிப்படையில் பயன்தருகிறது எனலாம். எவ்வாறு எனில் ஆட்டத்தின்போது ஆடுபவர்களின் கைகளும், கால்களும் முழுமையாக இயங்குவதால் உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தருகிறது. இன்றைய காலக்கட்டத்தில் உடற்பயிற்சிக்கு அதிகம் செலவு செய்கிறோம். அன்று அப்பயிற்சியை இலவசமாகவே ஆட்டத்தின் மூலம் பெற்றனர். அத்துடன் நரம்புகளுக்குப் புத்துணர்வும் தரப்படுகிறது.

முடிவுரை

மேற்கூறிய செய்திகளிலிருந்து பார்க்கும்போது ‘குறும்பர்’ என்பவர்கள் பல்லவர்கள் வழித்தோன்றல்கள் என்பது பெறப்படுகிறது. இவர்கள் மலைவாழ் மக்களாகிய ‘லிபி’ அல்லாத தமிழ் பேசக்கூடியவர்கள் என்பதும் புலனாகிறது. இந்த இனமக்கள் பல இடங்களில் வாழ்வதாகத் தெரிகின்றது. அன்றைய காலக்கட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்றும், இவர்களது உணவு காய், கனி, கிழங்கு வகைகள் என்பதும் புலனாகிறது. இந்த உணவை வைத்து ஆட்டக்காரரர்களின் விரதத் தன்மை புலப்படுகிறது. அன்று ‘குறும்பாட்டம்’ என்று கூறிவந்த நிலைமாறி இன்று ‘குறும்பர்களின் பலகை ஆட்டம்’ என மாறியிருப்பதும் தெரிய வருகிறது. பலகை ஆட்டம் என்பது இன்று வளர்ந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சேர்வை ஆட்டம், சேவையாட்டம், தேவராட்டம் போன்ற ஆட்டங்களுடன் தொடர்புடைய ஆட்டமாகக் கருத இடமிருக்கிறது.

குறிப்பு

1. ச. சரவணன் - வீரபத்திரர் களஞ்சியம். ப.171
2. மேலது - ப. 168
3. காவ்யா சண்முகசுந்தரம் - நாட்டுப்புற அரங்க சபைகள், அலாதி, ப.38
4. மேலது - ப.63
5. மேலது - ப. 64

◆

முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
மீனாட்சி மகளிர் கல்லூரி,
சென்னை-24.

37

உடுக்கையடித்தல் அல்லது உடுக்கை நிகழ்ச்சி

பெ. சர்மிளா

முன்னுரை

மனிதனின் நம்பிக்கை அடிப்படையில் தோன்றியதே உடுக்கையடித்தல் நிகழ்ச்சியாகும். நம்பிக்கையென்பது ஒன்றின் உண்மையை அப்படியே ஏற்றுக்கொள்வதாகும். நம்பிக்கைகளின் அடிப்படை மனிதனின் அகமனம் என்பர். மூளைக்கு அகமனமானது காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும் போது நம்பிக்கையாகிறது என்பர் சு. சண்முகசுந்தரம். மிகப் பழங்காலந் தொட்டே தமிழக கிராமப்புற மக்களால் உடுக்கையடித்து குறிகேட்கும் நம்பிக்கை பின்பற்றப்பட்டு வருகிறது. அதனை இக்கட்டுரையில் காண்போம்.

உடுக்கையடித்தல் - பெயர்க்காரணம்

பூசாரி ஒருவர் 'உடுக்கை' என்னும் கருவியைக் கையில் வைத்துக் கொண்டு அதில் தன்னுடைய இரு கரங்களாலும் ஒலி எழுப்பி இறைவனைப் புகழ்ந்து, உருகிப் பாடல் பாடிக்கொண்டு, சிறு தெய்வங் களை அழைத்துக் குறி சொல்வதால் இதனை உடுக்கையடித்தல் என்பர்.

உடுக்கையடிப்பவர்

கோவிலில் உள்ள பூசாரிகளே பெரும்பாலான இடங்களில் உடுக்கையடித்துக் குறி சொல்கின்றனர். ஒரு சில இடங்களில் கோவில் பூசாரியல்லாத மற்றையோர் இதனை ஒரு தொழிலாக நடத்தி வருகின்றனர். கோவிலில் ஆண்களே அதிகமான இடங்களில் உடுக்கையடிக்கின்றனர். பிராமணர் அல்லாத பிற சாதியினரே பூசாரியாக அமைந்துள்ளனர்.

நிகழுமிடங்கள்

கோவில் வாசலையே உடுக்கையடிக்கும் இடமாகப் பயன்படுத்து கின்றனர். இல்லையெனில் கோவில் அருகே குடில் அமைத்துக் கொண்டு அதனை உடுக்கடி இடமாகப் பயன்படுத்துகின்றனர். கிராமப் புற மக்கள் ஏதேனும் அவர்களுக்குக் குறைகள் அல்லது துன்பங்கள் இருப்பின் பூசாரிகளை வீட்டிற்கு அழைத்து வந்தும் குறி கேட்பர்.

காணிக்கைகள்

உடுக்கையடிப்பவர்க்கு மக்களால் வெற்றிலைப் பாக்கு, எலுமிச்சைப்பழம், சூடம், பணம், கோழி ஆகியவை காணிக்கையாகக் கொடுக்கப்படுகின்றன.

உடுக்கையடிக்கும் முறைகள், காரணங்கள்

உடுக்கையடிக்கும் பூசாரிகள் பிறர் வீட்டில் உணவு அருந்த மாட்டார்கள். மேலும், சாமி அருள் மிக்கவராகவும், மிகவும் தூய தன்மையுடனும் இருப்பர். இருவகைக் காரணங்களுக்காகப் பூசாரிகள் உடுக்கையடித்து மக்களின் குறைகளை நிவர்த்தி செய்கின்றனர். அவை,

1. சாமி பார்த்தல்

2. பேயோட்டுதல், மேலும் காலை முதல் இரவு வரையிலும் உடுக்கையடிக்கப்படுகிறது.

சாமி பார்த்தல்

நாட்டுப்புற மக்கள் ஏதேனும் மங்கல நிகழ்ச்சிகள் வீட்டில் செய்ய வேண்டுமானாலும், தொடர்ந்து குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை ஏற்பட்டாலும் பூசாரிகளிடம் சென்று தங்கள் குல தெய்வத்தை அழைத்துக் குறி கேட்பர். அப்பூசாரிகளும், அக்குடும்பத்தில் நடக்கும் தற்கால மற்றும் எதிர்கால நிகழ்ச்சிகளை உள்ளபடியே கூறுவர்.

பேயோட்டுதல்

ஆயுள் முடியாமல் இறந்துபோனவர்களின் ஆன்மா சாந்தியடை யாமல் இவ்வுலகத்தில் அவர்கள் ஆயுள் முடியும்வரை ஆவியாக அலைந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளது. அவ்வாவிகள் தனக்கு ஏதேனும் குறைகளோ அல்லது தேவைகளோ ஏற்படின் பிறரின் உடலில் புகுந்து அவர்களை வருத்தும். உடனே பேய்பிடித்த மனிதரைப் பூசாரியிடம் அழைத்துச் சென்றோ, இல்லையெனில் அப்பூசாரியை வீட்டிற்கு வரவழைத்து உடுக்கை யடித்து அப்பேயினைப் பற்றிக் கேட்டறிந்து அதன் தேவைகளை நிறைவேற்றுவர். உடுக்கையொலி கேட்டாலே பேய் ஆடித் தனது தேவைகளைக் கூற ஆரம்பித்து விடுகிறது.

திருச்சி மாவட்ட உடுக்கை நிகழ்ச்சிகள்

ஓமாந்தூர்

மண்ணச்சநல்லூரிலிருந்து 15 கி.மீ. தெலைவிலுள்ளது ஓமாந்தூர். அவ்வூரிலுள்ள புகழ்வாய்ந்த காமாட்சியம்மன் கோவிலில் சிவராத்திரி தோறும் உடுக்கையடிப்பர். இக்கோவிலில் காமாட்சியம்மன், மாசி பெரியண்ணன் ஆகியோர் மக்களால் வழிபடப்படும் சிறு தெய்வக் கடவுளாக அமைந்துள்ளனர். மாசி பெரியண்ணசுவாமியின் முன் வேல் ஒன்று உள்ளது. இங்கு பேய் பிடித்திருப்பவர் சென்றவுடன் தன்னிலை அறியாமலேயே ஆட ஆரம்பித்து விடுகின்றார். பின் அங்குள்ள உடுக்கையடிப்பவர் காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டு உடுக்கை யடித்துப் பேயினை விரட்டுவார். பின் பேய் பிடித்தவரின் தலையில் இருந்து உச்சிமுடி ஒன்றைப் பிடுங்கி மரத்தில் அடித்து அப்பேயினைக் கட்டி வைப்பர். மேலும், உடுக்கையடித்துச் சாமியை வரவழைத்து அருள் வாக்கும் கூறுகின்றனர்.

இரட்டைமலை

வயலூர் செல்லும் வழியில் புதூர் இரட்டைமலை ஒண்டிக் கருப்பு கோயில் அமைந்துள்ளது. அக்கோவிலுள்ள பூசாரி பேய் பிடித்த வரை அமரவைத்து முதலில் குலதெய்வத்தையும் பின் ஒண்டிக்கருப்பு சாமியையும் பாடல் பாடி அழைத்துப் பேயின் விவரம் கேட்டறிவார். பின் அந்த ஆவி உடலில் புகுந்ததற்கான காரணங்களை அறிந்து அதனை நிறைவேற்றுவார். இங்கு அனைத்து நாட்களிலும் உடுக்கையடித்துக் குறி கூறப்படுகிறது. அது மட்டுமன்றி சாமி பார்த்து அருள்வாக்கும் வழங்கப்படுகிறது.

வீரப்பூர்

மணப்பாறை வட்டத்தில் வீரப்பூர் பொன்னர் - சங்கர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் மகாமுனி காவல் தெய்வமாகவும் மக்களின் குறைகளை நிறைவேற்றும் தெய்வமாகவும் உள்ளது. இம்மகாமுனியின் எல்லைக்குள் பேய் பிடித்திருப்பவர் சென்றாலே ஆட ஆரம்பித்துவிடுவார். மகாமுனியின் முன்பு மட்டும்தான் போயோட்டு கின்றனர். மற்ற இடங்களில் அருள்வாக்கு மட்டுமே கூறுகின்றனர். அக்கோவிலில் சிறுவயது முதல் பெரியவர் வரை நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் உடுக்கையடிக்கின்றனர். அமாவாசை, ஞாயிற்றுக் கிழமை, மாசிமாதம் அமாவாசை முடிந்து எட்டாம்நாள் நடைபெறும் திருவிழா ஆகிய நாட்களில் மட்டுமே உடுக்கையடித்து குறிசொல்லப் படுகிறது. பூசாரிகளே எலுமிச்சைப்பழம், திருநீறு பக்தர்களுக்கு கொடுத்துப் பத்து ரூபாய் காணிக்கையாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

வீரணம்பட்டி முருகன் கோவிலில் வெள்ளிக்கிழமையன்று ஒரு பெண் உடுக்கை அடித்துக் குறி கூறுகிறார். தோகைமலை, திருச்சி சத்திரம் பேருந்து நிலைய காளி கோவிலும் உடுக்கை அடித்தும் குறி சொல்லப்படுகிறது. பெரும்பாலும் ஆண்களே குறி கூறுகின்றனர்.

அரியலூர் மாவட்டம்

இலந்தைகூடம், விளாகம் இவ்விரண்டு ஊர்களுக்கு இடைப் பட்ட காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது பச்சையம்மன் கோவில். இங்கு சிவராத்திரி அன்று மட்டுமே கோவிலில் குறிசொல்லப்படுகிறது. மற்ற நாட்களில் மக்கள் விரும்பினால் மட்டும் பூசாரியை வீட்டிற்கு அழைத்து வந்து குறிகேட்பர். அங்கு வால்முனி என்றொரு சிறு தெய்வம் உள்ளது. அத்தெய்வத்தின் முன் அக்கோவிலில் படைக்கும் பூசாரியே பதினோரு ரூபாயும், வெற்றிலைப்பாக்கும் பெற்றுக் கொண்டு உடுக்கையடித்து அருள் வழங்குகின்றார். அக்கோவிலுக்கு ஏதேனும் நேர்ந்து கொண்டு நிறைவேற்றவில்லை என்றாலும்கூடக் கூறிவிடுகிறார். மேலும், ஆவி புகுந்த உடலிலிருந்து பேயும் விரட்டப்படுகிறது.

தஞ்சை மாவட்டம்

பெரம்பூரில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில் அமைந்துள்ளது. இங்கு மகாமுனியும் காளியம்மனும் வழிபடும் தெய்வமாக உள்ளன. இங்கு கோவிலுக்குச் செல்லும் வழியில் சிறுகுடில் அமைத்துக் கொண்டு பத்துக்கும் மேற்பட்டோர் உடுக்கை அடித்துக் குறி சொல்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் இவ்வுடுக்கை முறை உள்ளது. ஆனால், இங்கு உடுக்கை அடிப்பவர் ஒரு கோழியை காணிக்கையாகப் பெற்றுக்கொண்டு அதன் தலையை அறுத்துத் தூர எறிந்துவிடுகின்றார். பின் அதன் உடலைக் கொண்டு வந்தவரிடமே கொடுத்து விடுகின்றார்.

கேரள மாநிலத்திலும், உடுக்கையடித்துக் குறிசொல்லும் முறை உள்ளது. அம்மாநில மக்கள் இதனை விரும்புவதில்லை என்றும் அங்கு வரும் தமிழக பக்தர்களே குறிகேட்கின்றனர் என்றும் கூறுகின்றனர்.

முடிவுரை

உடுக்கை நிகழ்ச்சியில் மக்கள், கடவுள் மற்றும் ஆவிகளின் மேல் கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்படுகிறது. இந்நிகழ்ச்சி கிராமப்புற மக்களின் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்தினாலும் பல இடங்களில் உடுக்கை அடித்துக் குறி சொல்வதாகக் கூறிப் பணம் பறித்து ஏமாற்றியும் விடுகின்றனர்.

களப்பணி ஆய்வு

1. பால்ராஜ், வயது 42, ஆண், ஓமாந்தூர், 21.2.09.
2. தாயுமானவன், வயது 22, ஆண், திருச்சி-2, 21.02.09.
3. வேம்பு, வயது 38, பெண், புள்ளம்பாடி, 22.02.09.
4. தனலெட்சுமி, வயது 24, பெண், வீரப்பூர், 23.02.09.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி,
காட்டூர், திருச்சிராப்பள்ளி - 620 019.

38
காவடியாட்டம் - அன்றும் இன்றும்

இரா. சந்திரகலா

மனிதனின் இயற்கையான வாழ்வில் இயல்பாகத் தோன்றும் விதிமுறை வகுப்பின்றி எளிமையாக வளர்ந்து உண்மையான உணர்ச்சிகளின் உறைவிடமாகப் பாமர மக்களைக் கவர்ந்து களிப் படையச் செய்யும் இனிய கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனலாம். அக்கலைகளில் ஆடலும் பாடலும் சேர்ந்து காணப்படுகிறது. அந்த ஆடல் கலைகளுள் ஒன்றான காவடியாட்டம் பற்றி இங்கு காணலாம்.

கலைகளின் வளர்ச்சிப் படிநிலை

கலைகளின் வளர்ச்சியை 3 நிலைகளில் பகுக்கலாம். அவை,

1. தொன்மக் கலை
2. நாட்டுப்புறக் கலை
3. திருந்திய கலை

இதில் நாட்டுப்புறக் கலைகள் மூன்று பிரிவாக அமைந்துள்ளன.

நாட்டுப்புற கலைகள் படிநிலை

1. சமூக மற்றும் வீரக் கலைகள்
2. சமயம்சார் கலைகள்
3. தொழில்சார் கலைகள்

இதன் அடிப்படையில் நாட்டுப்புற கலைகள் வளர்ச்சி அடைந்துள்ளன.

காவடி

"ஆறு முகப்பிரான் அடிகள் போற்றுவாம்" எனவும், "அறுமுகன் அடிகள் ஏத்துவாம்" எனவும், "செவ்வேல் மலரடி போற்றி" எனவும், கந்தபுராணம் முருகர் திருவடியைப் போற்றுகிறது. தாமரை போன்ற திருவடிகளைக் குறிப்பிட்டு பெருந்தேவனார் பாடல் அமைந்துள்ளது. திருவடிகளை வழிபாடு செய்வது அடியவர்க்கு மிக்க விருப்பம் தருவது, என சிவபுராணம் முதலிய பாடல்களாலும் அறியலாம்.

காவடி தாங்கிச் செல்லுதல், திருவடி வணக்கமன்றி வேறில்லை. கா, அடி என்னும் சொற்களே, காவடி ஆகும். இது காக் கின்ற திருவடிகள் என்னும் பொருளை உடையது. தம் மனநிறைவுக்காக இறைவனின் திருவடிகள் எனப் பாவனை செய்து கொண்டு, காவடியைத் தோளில் சுமந்து செல்கின்றனர் அடியவர்கள். அதனால்தான், தாம் அதனைத் தோளில் ஏற்றது முதல் திருக்கோவிலில் சார்த்தும்வரை இடையில் வேறெங்கும் தரையில் வைப்பதில்லை. அவர்கள் நடந்து செல்லும் பொழுது நடைப்பயணத்திற்கு ஏற்ற மெட்டுகளில் இசைப்பாடல் பாடிச் செல்கின்றனர்.

காவடியாட்டம்

முருகன் வழிபாட்டு மரபில் தோன்றியதே காவடி ஆட்டம். முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. முருகனுக்கு ஆறுபடை வீடுகள் உண்டு. இடும்பன் சிவகிரி, சந்திரகிரி என்ற மலைகளைக் காவடிபோல் தூக்கி வந்தான். அதுபோலக் காவடி தூக்கி வரும் அடியார்க்கு அருள்புரிய வேண்டும் என இடும்பன் கேட்டுக் கொண்டான். காவடி குறுந்தடியால் செய்யப்பட்டு வளைந்த அமைப்பில் இருக்கும். காவடி இரு முனைகளிலும் பால் குடங்கள் இருக்கும். சில காவடிகளை வெட்டிவேராலும் வண்ணக் காகிதங் களாலும் அலங்கரித்திருப்பர்.

காவடி எடுப்போர் நாக்கிலும் உதடுகளிலும் வேலை அலகு குத்திக் கொள்வது உண்டு. சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி, சேவல் காவடி, மச்சக்காவடி, வேல் காவடி எனப் பலவகை உண்டு. காவடியைத் தொடர்ந்து வருபவர்கள் காவடிச் சிந்து இசைப்பாடல் பாடிக்கொண்டு வருவதுண்டு. அண்ணாமலை ரெட்டியார் 'காவடி சிந்து' புகழ்பெற்ற ஒன்றாகும்.

காவடியாட்டத்தின் வளர்ச்சி நிலைகள்

எளிதாகச் சுமக்க உதவிய காவடி இறைவழிபாட்டு முறைகளுடன் இணைந்து வழிபட உதவும் சாதனமாகிப் பின்னர், கலை முனைப்பால் தொழிற் கலைக்கு உதவும் பொருளாகி இன்று இருவிதக் கூறுகளுக்கும் துணையாகும் கலைக்கருவியாக விளங்குகிறது. இறையுணர்வும் கலையுணர்வும் காவடியாட்டத்தின் வளர்ச்சி நிலைக்குக் காரணமாக அமைகின்றன.

இக்கால இலக்கியத்தில் காவடிப் பாடல்கள்

"பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன் கௌமாரன் - ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்"

(மகாகவி பாரதியார்)

காவடிப் பாடல்களாக அருமையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அடியவர்கள், காவி ஆடைகளையே அணிந்து செல்வது கவனிக்கத்தக்கது. ஏழை - பணக்காரன், மேலோன் - கீழோன் என்னும் வேறுபாடுகள் இன்றி, இறைவன் முன்னிலையில் அனைவரும் சமமே என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

"தாமரை புரையும் காமர் சேவடி
பவழத் தன்ன மேனி திகழொளி
குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்
நெஞ்சு பகவெறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலம் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே"

- (பாரதம் பாடிய பெருந்தேவனார்)

தாமரை போன்ற திருவடிகள், பவளம் போன்ற திருமேனி, குன்றி மணியில் உள்ள செம்மையினுஞ் சிறந்த நிறத்தில் ஆடை, குன்றழித்து ஒளிரும் வேல், சேவல் கொடி இவற்றுடன் காட்சியளிப்பவன் முருகன். அத்தகைய கடவுளின் அடியவரும் செந்துவர் ஆடை புனைந்து பொதுமை தோன்றச் செல்வது பொருத்தமே என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

காவடியாட்டம் நாட்டுப்புறக் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களில் மற்ற கலைகளுடன் இணையாக நடத்தப்படும் கலையாகும். இதனைத் தனியாக ஆடுவதும் உண்டு. காவடியாட்ட நிகழ்ச்சிகள் நாடக மேடையில் நடைபெறும்போது அதைக் கலைக் காட்சியாகக் கருதாது பக்தி வழிபாடாக மதித்து 'அரோகரா' ஒலியுடன் கற்பூர

ஆராதனை செய்யும் வழக்கமும் மக்களிடையே காணப்படுகிறது. கலைக் காட்சிகள் உண்மையான உணர்வுடன் ஒன்றிக் கலந்து விடும் நாட்டுப்புற மக்களின் இயல்பை இது தெளிவாகக் காட்டுகிறது.

இவ்வாறு, நாட்டுப்புறக் கலைகள் சமயக் கலையில் முகிழ்த்து பின்னர், தொழில் கலையாக மாறிவிட்டது. தொழில்முறைக் காவடி ஆட்டத்தில் சுழன்றாடுதல், வளைந்தாடுதல், குனிந்தாடுதல், வில்லாடுதல், வரவேற்க ஆடுதல், கைவிரித்து ஆடுதல் என ஆறுவகை ஆட்டங்கள் இன்று வளர்ச்சியடைந்து வருகின்றன.

◆

இளநிலை ஆய்வாளர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள்,
கல்லூரி,
சிவகாசி.

39

கும்மி ஒரு திறனாய்வு

ந. சரவணன்

இசையும் பாட்டும் இரண்டறக் கலந்த வாழ்வைக் கொண்டவர்கள் நாட்டுப்புற மக்கள். மிகச் சிறந்த செய்தியைக்கூடப் பாட்டாக்கி இசையோடு வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்கள். மனிதன் மகிழ்ச்சிப் பெருக்கில் தன்னையும் மீறிச் சைகைகளால் வாழ்வுப் பயணத்தை மேற்கொண்ட மனித இனம் காலம் செல்லச் செல்லக் கைதட்டி, ஒலி எழுப்பி அதன் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்துதலில் தொடர்ந்தது. கைகளைத் தட்டிப் பிறரை அழைப்பதும், பிறரை இகழும்போது கைகளைக் கொட்டிச் சிரிப்பதும் இன்றளவும் இருந்து வரும் பழக்கமாகும்.

சான்றாக,

1. 'மழலைகளும் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தப் பேசவறியாப் பருவத்திலே இருகைகளையும் சேர்த்துக் கொட்டி ஒலி எழுப்புவதைக் காணலாம்.'

கைகளைக் கொட்டுவதிலே ஓர் ஒழுங்குமுறையை உருவாக்கி இசைத்தன்மையை மேலேற்றிப் பெண்கள் வட்டமாக நின்று அவ்வொலிக்கேட்ப பாடும் பாடலே கும்மியாகும்.

2. "பல பேதையரும் பெதும்பையரும் வட்டமாகச் சுற்றி வந்து பாடிக் கைகுவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்படும். கை குவித்தடிக்கும் விளையாட்டாதலால் இது கும்மி எனப்பட்டது."

கும்மி சொற்பொருள் விளக்கம்

சங்க இலக்கியங்களில் கும்மி என்னும் சொல்லாட்சி வழக்கில் இல்லை. கொம்மை என்னும் சொல் காணப்படுகிறது. சான்றாக,

3. "கொம்மை அம் பசுங்காய்க் குடுமி விளைத்த"

4. "கொம்மை வாடிய இயவுள் யானை"

5. "நாறைங் கூந்தல் கொம்மை வரிமுலை"

என்ற வரிகளில் கொம்மை என்னும் சொல்லாட்சியைக் காணலாம்.

6. "சிலப்பதிகாரத்தில் கொம்மை வரிமுலை எனும் சொற்றொடர் காணப்படுகிறது."

7. "சீவகசிந்தாமணியில் கொம்மை கொட்டுல, கொம்மைக் கொட்டி, கொம்மைதான் கொட்டலும்" எனவும்.

8. "நைடதத்தில் கூற்றோடு கொம்மை கொட்டிக் குளிக்கும்."

எனவும் வருமிடங்களில் மேற்குறிப்பிட்ட பொருளே விளக்கம் பெருகிறது.

9. "கும்மட்டி, கும்மாளம் என்ற சொற்கள் விளையாடுதலைக் குறிக்கின்றன. இவ்வாறு ஆடுவதால் கும்மி என்ற பெயர் பெற்றிருக்க லாம். கும்பு என்ற சொல் கூட்டம் என்ற பொருளையும் கும்முதல் என்ற சொல் கைகளைக் கொட்டுவது என்ற பொருளில் கொட்டி ஆடுவதைக் கும்மி என்று குறிப்பிட்டிருக்கலாம். குழுமி என்ற சொல்லிலிருந்து கும்மி என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும் என்பார் அ.கி. பரந்தாமனார்."

10. "பாட்டின் இசை கைகள் கூடுவதால் உண்டான ஒசை ஆகியவற்றால் காதுக்கும், ஆடுகின்ற பாணியும், கூடி நடந்து செல்லும் பாங்கும் கண்களுக்குக் கலை விருந்தாக அமையும். கும்மி நடனத்துக்கு ஏற்றவாறு கை கொட்டியும் பாட்டுப் பாடியும் நடனமாடுவது கொம்மாய் எனப்பெறும். இச்சொல்லிலிருந்தே கும்மி எனும் சொல் ஏற்பட்டது என்பார் சோமலெ."

கும்மி மரபுவழிப்பட்டதே

11. "சங்க காலத்தில் வள்ளிக்கூத்து குரவையாடுதல் எனும் ஆடவரும் பெண்டிரும் இணைந்து ஆடிய ஆட்டம் காணப்பட்டது. மலைவாழ் மக்கள் மான்தோற் சிறுபறையின் முழக்கோடு ஆடினர்." என்றும்,

12. "மூங்கிற் குழாயில் பெய்த முற்றிய கள்ளைக் குடித்துவிட்டு வேங்கை மற்றத்தில் ஆடினர்" என்றும்,

13. "நீலமணி போலும் கழிமுள்ளி மலர் நிரம்பிய மணல் குன்றுகள் நிறைந்த கடற்கானலில் பரதவ மகளிர் ஆடினர்" என்றும், குரவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

14. "குரவை ஆட்டம் வரிக்கூத்துகளில் ஒன்று. எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்து மண்புலமாக நின்று ஆடுவது. இது விரும்பியவரின் புகழ் பாடியாடுவதாகும்."

கும்மியில் கைகளைக் கொட்டி ஆடுவர். குரவையில் கைகளைக் கோர்த்து ஆடுவர். இவ்விரண்டிலும் கதைப் பாடல்களும் தனிப்பாடல் களும் இடம்பெறுகின்றன. குரவையிலிருந்து கும்மி தனிக் கலையாகக் கிளைத்து வளர்ந்து நிலைபெற்றது. குதித்தல் இரு கலைக்கும் பொதுவாக விளங்குகிறது. கைகளின் அசைவில் மட்டும் மாற்றம் பெற்றுள்ளது. குரவையில் கோர்த்திருந்த கைகள் கொட்டத் தொடங்கிய நாள் முதல் கும்மி தனிக் கலையாக விளங்கிற்று என்று கூறலாம். இந்நிலையில் மரபு வழிப்பட்ட பாட்டோடு கலந்த ஆட்டமாகப் பழம் பண்பாட்டின் அடையாளமாகக் கும்மி காணப்படு கிறது. கும்மிப் பாடல்கள் வழி கும்மியடிக்குமுன், கும்மியடிக்கும்போது காணப்படும் சிறப்புப் பண்பாட்டுக் கூறுகளைக் காணலாம்.

கும்மியடிக்கும்முன் பெண்கள் அலங்கரித்து வருதல்

கும்மியடிக்க வருகிற பெண்கள் அழகான உடை உடுத்தியும், பொட்டு வைத்தும், மலர் சூடியும் அழகாக வந்து மக்கள் மனம் மகிழப் பாடி ஆடுகின்றனர். கண்களுக்குக் கவர்ச்சியாகவும் செவிகளுக்கு இனிமையாகவும் தோற்றமும் பாட்டும் அமைகின்றன.

15. "தங்க நகை மேலே பூட்டி

பட்டு வகை சேலைகளை

பாங்குடனே மடிச்சுடுத்தி

பட்டு வகை பாவாடையை

பாங்குடனே எடுத்துடுத்தி

பொட்டுடனே மலருடனே

கோயிலிலே வந்திறங்கி''

எனும் பாடலில் கும்மியடிக்க வரும் பெண்கள் அலங்காரம் செய்து வருகிற வழக்கத்தைக் காணலாம்.

பயபக்தியாய் வருதல்

கும்மியடிக்க வரும் பெண்கள் ஆடை அலங்காரங்களுடன் மட்டும் வருவதில்லை. பயபக்தியோடும் வருகிற மரபு காணப்படுகிறது. பிறர் மனம் மகிழ்விக்க வரும்போது வேடிக்கையாகவோ கேளிக்கை யாகவோ வருதல் தடுக்கப்பட்ட நிலையைக் காணலாம். மனமகிழ் கலையிலும் முறையும் நெறியும் ஒழுக்கமும் காக்கின்ற பண்பாட்டை,

16. "பட்டுப் பாவாடை

அணிந்து மலர்சூடி

பய பக்தியாய்

கும்மி அடியுங்கடி''

எனும் பாடலில் காணலாம்.

கொட்டு முழக்கத்துடன் குலவை ஒலியுடன் வருதல்

கும்மியடிக்க வருவோர் கொட்டு முழக்கத்துடனும் குலவை ஒலியுடனும், தாம்பூலத் தட்டுடனும் மாவிளக்கைக் கையிலேந்தியும் வரும் வழக்கம் காணப்படுகிறது.

17. "கொட்டு முடிக்கும்

குலவையுமே கூடி

தாம்பூலத் தட்டும்

மாவிளக்கும் ஏந்தி''

எனும் பாடலில் இவ்வழக்கம் குறிப்பிடப்படுகிறது. கும்மியடிப் போரின் வருகையை மக்களுக்கு அறிவிக்கவே கொட்டு முழக்கமும் குலவை ஒலியும் கொடுத்து வருகின்றனர். கும்மிப் பாடல் கேட்க

வந்தோர்க்கு வெற்றிலை கொடுக்கிற வழக்கமும் காணப்படுகிறது. தெய்வ வழிபாட்டிற்காக மாவிளக்குக் கொண்டு வருகின்றனர்.

ஆணும் பெண்ணும் கும்மியடிக்க வருதல்

கும்மியடித்துப் பாடுவது பெரும்பாலும் பெண்களே பங்கு பெறும் கலையாகும். சில இடங்களில் ஆண்களும் பெண்களும் இணைந்து கும்மியடிக்கின்றனர்.

18. "பத்தரை மாத்துள்ள சத்தன மாரிக்கு

சித்திரை மாதம் கடைசி செவ்வாய்

இத்தரை மீதுவாழ் பெண்களும் ஆண்களும்

ஏத்திக் கும்மி யடியுங்கடி"

எனும் பாடலின் வழி ஆண்களும் கும்மியடிக்கிற வழக்கத்தைக் காணலாம்.

மாவிளக்கேற்றி விரதம் வைத்தல்

நாட்டுப்புறப் பெண்கள் மாவிளக்கேற்றி விரதம் வைக்கின்ற போது கும்மியடித்துப் பாடும் வழக்கம் காணப்படுகிறது.

19. "எஞ்சோட்டு பொண்ணுங்களே

எடுங்கடி மாவிளக்கை

மாவிளக்கைக் கண்டேனே

வந்திறங்கும் மாரியம்மன்"

மாவினால் விளக்குகள் செய்து அவற்றில் நெய்யை ஊற்றித் திரியேற்றி வழிபாடு செய்வர். இவ்வாறு மாவிளக்குக் கொளுத்தி விரதம் வைக்கும்போது கும்மிப்பாடல் பாடுவர்.

மாரியாயிடம் மழை வேண்டல்

நாட்டுப்புற மக்களின் வாழ்வுப் பயணம் அமைதியாகச் செல்ல மழை பெரிதும் தேவையாகிறது. கும்மியடித்துப் பாடுகிறபோதும் மழைக்கு வேண்டிப் பாடுகிற வழக்கம் காணப்படுகிறது. மழை பொழிய வரத்தினை மழைக்குரிய கடவுளாகிய வருணனிடம் வேண்டாமல் மாரியாயிடம் கேட்கிற பழக்கம் வெளிப்படுகிறது.

20. "தங்க நிறமுள்ள சந்தன மாரியை

வரம் தயவாகக் கேளுங்கடி

மங்குல் திரண்டு வரிசிக்கும் மாதமும்

மாரி வழங்க கும்மியடியுங்கடி"

எனும் பாடலில் மாதம் மும்மாரி மழைப்பெய்ய வேண்டுகிற மரபினைக் காணலாம்.

நகைச்சுவை

நாட்டுப்புற மக்கள் நகைச்சுவைக்கு உரிய இடத்தை வாழ்வில் கொடுத்துள்ளனர். வெள்ளை உள்ளங்களால் கொள்ளை கொள்ளும் அவர்களின் வாழ்வு மகிழ்ச்சிக்குரியதாக அமைந்துள்ளது. கும்மிப் பாடல்களில் நகைச்சுவை மலிந்து கிடக்கின்றது.

தாய்மாமனை முறைப் பெண்கள் கேலி பேசுவது இன்றும் காணப்படும் வழக்கமாகும். திருமணம் புரிந்து கொள்வதற்கு முன்பாக நையாண்டி தோன்றக் குறிப்பிடுவர்.

21. "நேத்து கட்டின மெத்தையிலே

சோத்து மூட்டை மாமாடி

அந்தா யிருக்கிறார் எங்க மாமா

இந்தா யிருக்கிறார் எங்க மாமா"

எனும் பாடலில் மாமனைச் சோத்து மூட்டை மாமாடி என்று கூறுவதன் மூலம் மாமனைச் சாப்பாட்டு ராமன் எனக்கேலி பேசி நகைப்பை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் கும்மி என்னும் சொல்லாட்சி காணப்பெறவில்லை. கொம்மை எனும் சொல்லாட்சியே காணப் படுகிறது. கும்மிக்கலை தொன்றுதொட்டு இருந்து வருவது குறிக்கப் பட்டது. கும்மியடிக்கும்முன் காணப்படும் பழக்க வழக்கங்களைப் பெண்கள் அலங்கரித்து வருதலும், பயபக்தியோடு வருதலும், கொட்டு முழக்கத்துடன் குலவை ஒலியுடனும் வருவதும், ஆணும் பெண்ணும் கலந்து கும்மியடிக்க வருதலும், மாரியாயிடம் மழை வேண்டுவதும், நகைச்சுவையும் கும்மியடிக்கும்போது குறிப்பிடத்தக்கப் பழக்க வழக்கங்களாகக் காணப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. கும்மிப்பாடல்கள், ஏ.என். பெருமாள், ப. 2
2. தமிழ்நாட்டு விளையாட்டுகள், ஞா. தேவநேயன், ப. 133.
3. அகம். படல் 15-3
4. மேற்படி, பாடல் 29-16
5. மேற்படி, பாடல் 65-75
6. சிலம்பு. பாடல் 28, 29
7. சீவக. பாடல் 2230, 1109, 1834
8. நைடதம்., பாடல் 27.
9. நாட்டுப்புறப் பாடல்கள், அ.கி. பரந்தாமனார், ப. 246.
10. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், சோமலெ, ப. 190.
11. பெரும்பாணாற்றுப்படை. பாடல் 370-371.
12. மலைபடு. பாடல் 320-322.
13. நற்றி, பாடல் 276-(8-10)
14. ம.கா. 96-97, புறம் 24 (3-6)
15. நாட்டுப்புறக் கும்மிப்பாடல்கள், ப. 93.
16. மேலது, ப. 95
17. மேலது, ப. 96
18. மேலது. ப. 97
19. மேலது, ப. 98
20. மேலது, ப. 99
21. மேலது, ப. 101

◆

பூண்டிபுட்பம் கல்லூரி,
பூண்டி,
தஞ்சாவூர்.

40

பொய்க்கால் குதிரையாட்டம்

நீ. சரவணன்

முன்னுரை

தமிழர் தம் வாழ்வைக் கலைகளோடு இணைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு நாட்டுப்புற வழக்காறுகளில் இன்றைக்கும் எண்ணற்ற சான்றுகள் நம்மிடையே உள்ளன. இக்கலைகள் காலப்போக்கில் கல்வியாளர்களால் இனம்பிரிக்கப்பட்டுப் பல்வேறு வகைகளாகப் பகுத்து வரையறுத்து அடுத்தடுத்து வரும் சந்ததிகளுக்குப் பழம்பெருமை வாய்ந்த கலைகளின் உன்னத நிலையினைத் தொடர்ந்து வளர்த்து வந்துள்ளார்கள். அவர்கள் காட்டி வகுத்த வழியில் இனிவரும் சந்ததிகள் நமது மரபுக்கலைகள் இன்னவை, இவற்றை இவ்வாறு நிகழ்த்த வேண்டும், பேணிக்காக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை உள்ளத்துள் ஏற்க வைக்கும் வகையில் அமைந்த கலைகளில் பொய்க்கால் குதிரை ஆட்டக்கலையும் ஒன்று. இந்த ஆட்டக்கலையின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் எடுத்து விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

தமிழர் கலை - தமிழர் ஏற்றுக்கொண்ட கலை

மண்ணுலகின் மூத்தகுடி தமிழ்க்குடி என்பதை உறுதிசெய்ய தமிழர்களின் கலைவடிவங்களே போதுமானவை. “எது தன்னை மறக்கச் செய்கிறதோ அது கலையாகிறது”[1] என்ற பாவேந்தர் பாரதிதாசன்

வாக்கின்படித் தமிழர்களின் கலைகள் வாழ்வியலோடு கலந்திருப்பவை. வாழ்வியல் கூறுகளில் இருந்தும் தனித்து நோக்கி வியக்கும் வகையில் இருப்பது தமிழர் கலைகள். உதாரணமாக, விருந்தோம்பல் தொடங்கி, விழாக்கள் நடத்திச் சுற்றம்சூழ இன்புற்று நெகிழும் வாழ்வியலில் அன்றாடம் செய்துவரும் பாரம்பரிய நடைமுறைச் செயல்களை வாழ்வியல் கலைகள் எனக் குறிப்பிடலாம். இந்த வாழ்வியலில் இருந்து தனித்துப் பார்க்கக்கூடிய செயல்பாடுகள், வாழ்வியலோடு தேவைப்படும் போது ஒட்டிவருபவை. கலை உருவம் கொண்டு விளங்குவது, ஆடல், பாடல், கொண்டாட்டம் குறித்ததாக அமைவது. அவ்வாறு, தமிழர் தம் வாழ்வில் புழங்கிக் கொண்டிருக்கும் கலைகள், எந்தவிதமான செயற்கைச் சூழல் செயல்பாடுகளும் கலவாமல், அதன் பாரம்பரியத் தன்மை மாறாமல் விளங்கிக் கொண்டிருப்பவை. நாட்டுப்புறம் என்று அழைக்கக்கூடிய கிராமப்புறங்களில் இன்றும் விளங்கி வருகின்றன. இந்தக் கலைகள் நாட்டுப்புறக் கலைகள் என்று குறிப்பிடப்பட்டாலும் இதன் நுகர்வோர் நகர்ப்புறங்களில் உள்ள மக்களும் அடங்குவர் எனலாம். இதனை நுகர்வதற்கும் அதன்மீது ஈர்ப்பு ஏற்படவும் உள்ளார்ந்த காரணம் என்று நோக்கினால் நகர்ப்புற மக்களும் ஒருநிலையில் கிராமப்புறங்களில் இருந்து வந்தவர்களே என்பதால் அதன்மீது தன்னைச் செலுத்திப் பார்த்துக் கொள்பவர்களும் நகர்ப்புறங்களில் உள்ளனர்.

இந்தக் கலைவடிவங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் சில மாற்றங்கள் பெற்றுத் தற்போது நாம் அனுபவிக்கும் நிலைக்கு வந்துள்ளன. இதில் சில குறிப்பிட்ட கலைவடிவங்கள் மக்கள் புலம் பெயர்ந்ததால், அந்தந்த இடங்களில் காணப்படுகின்ற கலைவடிவங்களைத் தன்னுள் வாங்கிக்கொண்டு, தனது வாழ்விடப் பகுதிகளில் நிகழ்த்தி, பாரம்பரியம் கொண்ட நிகழ்த்துக் கலைகளோடு அவற்றையும் இணைத்து நிகழ்த்தி வந்துகொண்டிருக்கிறார்கள். இதனையும் பாரம்பரியக் கலைகளை நுகர்ந்த சுவைஞர்கள் ஏற்றுக் கொண்டதால் தொடர்ந்து இணைத்து நிகழ்த்தக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலைகளில் உள்ள கலைகளைத் தமிழரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட கலைகள் என்று குறிப்பிடலாம். அவ்வாறு, மற்ற இடங்களில் வேறு கலைவடிவமாக நிகழ்த்தப்பட்ட குதிரை ஆட்டம் இங்கும் புகுத்தி நிகழ்த்த வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

“மராட்டிய மன்னர்கள் தமிழகத்திற்கு வந்த பிறகுதான் பொய்க் கால் குதிரையாட்டம் இங்கு நிகழ்த்தப்பட்டது”[2] இந்த அடிப்படையிலான இக்கலையை வளர்த்து எடுக்க ஆரம்ப காலங்களில் சில

இடர்ப்பாடுகள் இருந்திருக்க வேண்டும். பின்னர் வந்த கலைஞர்கள் இதனை ஒழுங்குபடுத்தி முறையான வடிவத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

பொய்க்கால் குதிரை உருவாக்கம்

மன்னர்கள் காலத்தில் மட்டுமல்லாது தற்காலத்திலும் குதிரைகளைப் பல்வேறு மனிதச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றோம். மலைப்பகுதிகளில், சமவெளிப்பகுதிகளில் மனிதர் களுக்குப் பயன்படும் விலங்குகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் குதிரை உள்ளது. அக்காலத்தில் இதனைப் பயன்படுத்தியவர் களில் பெரும்பான்மையானவர்கள் மன்னர்கள் ஆவர். அவர்களை அடுத்துப் படைவீரர்களும், பொதுமக்களும் எனப் பல்வேறு வகையான வரும் பயன்படுத்தும் விலங்காகக் குதிரை விளங்குகிறது.

மாடு, மயில், குரங்கு, கரடி பெரிய அளவிலான மனித உருவம் போன்றவற்றை உருவமாகச் செய்து அதனை முன்பு நிகழ்த்தி வந்த கலைகளின் ஊடே நிகழ்த்தி மகிழ்ந்து வந்த கலைஞர்கள் இதனுடன் சேர்த்து இந்தக் குதிரை மாதிரியையும் புகுத்திக் கலையாக நிகழ்த்தி வருகின்றனர். நான்கு கால்கள் கொண்ட விலங்கினமான குதிரைக்கு மாற்றாக இரண்டே கால்கள் கொண்ட குதிரையாகக் காட்டி, அதன்மீது ராசா, ராணி வேடம் கொண்டவர்கள் ஏறி அமர்ந்து வருவதுபோல் இந்த ஆட்டம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இந்த ஆட்டத்திற்குப் பொய்க்கால் குதிரை எனப்பெயர் கொள்ள இன்னுமொரு காரணமும் உண்டு. குதிரைமீது அமர்ந்துள்ளதாக ஒப்பனை செய்துள்ள ஆட்டக் கலைஞர்கள் தங்கள் உடலில் குதிரை உருவத்தை மாட்டித் தொங்க விட்டிருப்பார்கள். இதன் பாதி உடல்பகுதிக்குக்கீழ் பளபளக்கும் துணி கொண்டு மூடியிருப்பார்கள். மூடிய துணிக்குள் - ஆட்டக் கலைஞர் களின் இடுப்புக்குக் கீழ்ப்பகுதி மறைந்து இருப்பதாக அமைந்திருக்கும். ஆட்டக் கலைஞரின் கால் பகுதியில் தரையிலிருந்து ஒன்றரையடி நீளம் கொண்ட கட்டையில் பாதம் வைக்கும் அளவிலான பலகை தரையில்படும் அளவிலிருந்து அரை அடிமுதல் முக்கால் அடி உயரத்தில் பொருத்தப் பட்டிருக்கும். கட்டையில் பாதம் பதியும் பலகையை ஒட்டிய நிலையில் மீதமுள்ள சற்றுநீளமான பகுதியை ஆட்டக் கலைஞரின் கெண்டைக் கால் என்று சொல்லப்படும் முழங்கால் மூட்டுப் பகுதிக்குக் கீழ் வெளிப்புறத்தில் ஒட்டியதாகத் துணி அல்லது துணியால் ஆன நாடா கொண்டு ஆட்டக்கலைஞர்களின் கால்களோடு சேர்த்துக் கட்டியிருப்பார்கள், இது இரண்டு கால்களிலும்

ஒரேமாதிரியான அமைப்பாக இருக்கும். இதற்குக் கால்கட்டை என்றுபெயர். கால் கட்டையில் இடது வலது கால் களுக்குத் தகுந்தாற் போல் பாதம் பதியும் பலகை அமைக்கப்பட்டு இருக்கும். கட்டை தரையில்படும் இடத்தில் (இரும்புத் தகடு) பூண் என்று குறிப்பிடு வார்கள். அது பொருத்தப்பட்டிருக்கும். மேற்குறிப் பிட்ட வகையில் அமைத்து ஆட்டக்கலைஞர்கள் பொய்க் குதிரையைச் சுமந்து நடந்து வரும்பொழுது இலாடம் அடிக்கப்பட்ட குதிரைகள் நடந்துவரும் குளம்படிச் சத்தம்போல் இருக்கும். இதனாலேயும் இதற்குப் பொய்க்கால் குதிரை என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது.

மூங்கில், காகிதம், காகிதக் கூழ் போன்றவற்றால் செய்யப்பட்ட குதிரை மாதிரி உருவத்தில் பளபளக்கும் கண்ணாடிகள் பதிக்கப்பட்டுக் காண்போரைத் திகைக்க வைக்கும் அளவிலான ஒப்பனைகள் செய்யப் பட்ட உண்மைக்குதிரை போன்றே இருக்கும். குதிரை மாதிரியைச் செய்யும்பொழுதே தலைப்பகுதி, உடல்பகுதி என இரண்டு பகுதிகளாகச் செய்திருப்பார்கள். தலைப்பகுதியை நிகழ்ச்சி நிகழிடத்தில் வந்து பொருத்திக் கொள்ளலாம். குதிரையின் உடல் பகுதியை ஆட்டக் கலைஞர்கள் தோளில் மாட்டிக்கொள்ளும் விதமாகக் குதிரையின் முதுகுப் பகுதியில் ஆள் நுழையும் அளவிலான ஓட்டை வைத்திருப் பார்கள், அந்தப் பகுதியில் தோளில் மாட்டிக் கொள்ளும் நாடாக்களும் பொருத்தப்பட்டிருக்கும், ஆண் பெண், என இருபாலரும் நிகழ்த்தக் கூடியதாக இவ்வாட்டக்கலை உள்ளதால் ஒப்பனைகள் ராசா, ராணி போன்ற வேடங்களில் இருப்பார்கள். தலையில் கிரீடம் மாதிரி, உடலில் பளபளக்கும் மேலாடைகள் என காண்போரைக் கவர்வதாகவே ஒப்பனைகள் இருக்கும்.

பொய்க்கால் குதிரை ஆட்டமுறைகள்

பொய்க்கால்குதிரை ஆட்டக் கலையைத் தனி நிகழ்வாகப் பெரும் பாலும் நிகழ்த்துவதில்லை. கரக ஆட்ட நிகழ்ச்சியோடு இணைத்து அதற்குத் துணை ஆட்டமாக இது நிகழ்த்தப்பட்டு வருகிறது. எனவே, இதற்கான இசைக்கருவிகள் கரகாட்ட நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் மேளக்குழுவினர்களே இதற்கும் இசைப்பவர்களாக உள்ளனர். “இந்த ஆட்டத்திற்குக் குந்தளம் என்ற புறமுழவு இரண்டு பக்கமும் வாசிக்கக்கூடியது இசைக்கருவியாகப் பயன்படுத்தப்பட்டது”[3] ஆட்ட ஆரம்பத்தில் நையாண்டி மெட்டுகளின் இசை வாசிக்கப்படும். இரண்டு ஆட்டக் கலைஞர்களும் ஆட்ட அரங்கினை வட்டவடிவில் சுற்றி வருவார்கள். அப்போது குதிரையை முன்னும் பின்னும் ஆட்டி

நடப்பார்கள். இதுசபை வணக்கம் எனப்படும். பிறகு நேர்கோட்டில் இருவரும் வந்து கையைக் கோர்த்துக்கொண்டு இடது, வலது புறம் குதிரை குனிந்து நிமிர்த்தி ஆடுவது நேர்கோட்டு ஒருபக்க அடவு ஆகும். அடுத்து எதிர் எதிர் திசைகளில் குனிந்து நிமிர்த்தி ஆடுவது நேர்கோட்டு எதிர்பக்க ஆட்டம் ஆகும். அடுத்து இடைவெளியிட்ட பக்கவாட்டில் இருவரும் எதிர்ரெதிர்த் திசைகளில் செல்வது, பின்பு திரும்பி வந்து சேர்வது, அடுத்தது தன்னால் சுற்றும் ஆட்டம். இதில் குனிந்து நிமிர்ந்து தன்னால் சுற்றுவது, குனியாமல் தன்னால் சுற்றுவது என இரண்டுவகை உண்டு. மேற்கண்ட ஆட்டமுறையின் வரிசைப்படி பயன்படுத்த வேண்டிய கட்டாயம் என்பது இல்லை. அதே போல, ஆட்டங்களின் இசைச்சொற்கட்டுக்கு எண்ணிக்கை, கட்டுப்பாடுகள் என்பதில்லை. அரங்கின் நீளம் அகலம் இவற்றைப் பொறுத்து நீட்டித்துக் கொள்வதும் சுருக்கிக் கொள்வதுமாக ஆடப்பட்டு வந்துள்ளன. இவ்வாட்டக் கலை யின்போது துரித நடையிலான நையாண்டி மேளம் வாசிக்கப்படுகிறது. திரைஇசைப் பாடல்களில் வரும் குதிரை ஓட்டப் பின்புலப் பாடல் மெட்டுக்ள் நாதசுவரத்தில் வாசிக்கப்பட்டு நையாண்டிமேளம் இசைக்கப்படுகின்றன.

ஆட்டத்தைக் காண்போரைக் கவரும்விதமாகச் சிலவகை விளையாட்டுகளும் சேர்ப்பதுண்டு. அதாவது போருக்குச் செல்லுதல், வாள்வீச்சு, வாயிலிருந்து மந்திரக் காகிதம் எடுத்தல் போன்றவை செய்து காண்பிப்பார்கள். வாள்வீச்சு என்பதில் போர்நினைவு ஏற்படுத்தும் பாடல்கள் மேளக்குழுவினரால் இசைப்படும்போது வாள்சண்டை செய்வது போன்று நடத்திக் காட்டுவது. மந்திரக் காகிதம் என்பது பல்வேறு வண்ணங்கள் கொண்ட காகிதங்களை அறை அங்குலத்திற்கும் குறைவான அகலம் கொண்டதாக நீளவாக்கில் வெட்டி ஒட்டப்பட்டு அவை அனைத்தையும் ஒருசுருள்போல் ஏறுவரிசை கொண்டதாக சுருட்டிக் கொள்ளவேண்டும். அதாவது, வாய் கொள்ளும் அளவிலான சுருளாக முன்கூட்டியே தயார்செய்து வைத்திருப்பர் நிகழரங்கில் ஏற்கனவே ஒட்டிச் சுருட்டி வைக்கப்பட்டுள்ள வண்ணக் காகிதங்களைப் போல சில காகிதங்களைச் சக கலைஞரிடத்தில் கொடுத்து பல்வேறு துண்டுகளாகப் பார்வையாளர்கள் முன்னிலையில் கிழித்து அதனைக் கசக்கிச் சுருட்டி வாங்கி வாய்க்குள் போட்டுக்கொள்வார். போட்டுக் கொண்டு துரித நடை இசைவாசிப்பில் ஆடிவருவார். இப்படி ஆடிவரும் போதே ஆட்டத்தில் பார்வையாளர் கவனம் கொள்ளும் அதே நேரத்தில் ஏற்கனவே முறையாகச் சுருட்டி வைத்துள்ள காகிதச் சுருளை வாய்க்குள் வைத்துவிடுவார். கிழிக்கப்பட்ட காகிதத்தை கையோடு எடுத்தும்

விடுவார். பின்பு, நின்று நிதானமாக அனைவர் கவனமும் இவரை நோக்கித் திருப்பி வாய்க்குள் சுருட்டி வைத்துள்ள காகிதத்தின் ஒருமுனையினை எடுத்து சக ஆட்டக் கலைஞரிடத்தில் கொடுப்பார். அவர் அதனை ஆடிக்கொண்டே மெதுவாக இழுக்க, சுருட்டி வைக்கப்பட்டுள்ள காகிதம் பல வண்ணங்களில் வெளியே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அப்படி வருவது அறுந்து போனால் அதனையும் ஒரு வித்தையாகக் காட்டி மீண்டும் ஒருமுனையை எடுத்துக் கொடுப்பார். இந்த நிகழ்வு சுருட்டப்பட்ட காகிதம் வாயின் உற்புறம் இருக்கும்வரை நடைபெறும். இந்தநிகழ்ச்சி குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்து வெகுவாக மகிழவைக்கும்.

பொய்க்கால்குதிரை ஆட்டக் கலைஞர்கள்

கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற இடங்களில் தொழில் முறையாக நிகழ்த்தும் கலைஞர்கள் இருக்கிறார்கள். பெங்களூர் போன்ற நகரத்திலும் இவ்வாட்டக் கலைஞர்கள் இருக்கின்றார்கள்.

பொய்க்கால்குதிரை ஆட்டக் கலையின் இன்றைய நிலை

ஒரு கலைவடிவம் வளர்ந்தாலும், மாறினாலும், குன்றி அழிந்தாலும் இவையாவற்றிலும் இருவர் காரணமாக இருக்கமுடியும். ஒன்று நிகழ்த்தும் கலைஞர்கள்; இரண்டாவது அதனை விரும்பும் பார்வையாளர்கள். இந்த இரண்டு காரணங்களுமே சரியாக உள்ளவரை ஒரு கலைவடிவம் நிலைத்து நிற்கும். இந்த இருகாரணிகளில் ஒன்று விரும்பப்படாவிட்டால் அது எப்படிப்பட்ட கலைவடிவமானாலும் அழிவுநிலைக்குத்தான் செல்லும். திரிபடைவது என்பதும் ஒரு வகையில் பாரம்பரியத் தன்மையை இழக்கிறது என்பதாகத்தான் கொள்ள முடியும்.இந்த நிலை மற்ற நாட்டுப்புறக் கலைகளுக்கு ஏற்பட்டதைப் போல் இதற்குள்ளும் சிதைவுநிலை என்பது ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் முன்பு குறிப்பிட்டதுபோல் இதில் ஈடுபட்ட கலைஞர்களைத் தொடர்ந்து வாரிசுக் கலைஞர்களாக உருவாகாத நிலை; மற்றொன்று இந்த ஆட்டக் கலையில் பயன்படுத்தப்படும் குதிரை உருவாக்கம் மற்றும் பராமரிப்பு இடையூறுகள், நிகழிடத்திற்கு இவற்றைக் கொண்டு சென்று சேர்ப்பதில் உள்ள பயணச் சிக்கல்கள் போன்ற காரணிகளே இந்தக் கலையை தற்போது பெரும்பாலான இடங்களில் நிகழ்த்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், தற்போது **“பாரதிதாசன் பல்கலைக்கழகக் கலைவிழா”** வின் மூலமாகவும்

பாரதிதாசன் பல்கலைக்கழகக் கலைக்குழுவின் மூலமாகவும் பயிற்சி பெறும் மாணவ மாணவியர் பல கல்லூரிகளில் இந்தக் கலையை அரங்குகளில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றிலும் பல நேரங்களில் பயணச் சிக்கல் காரணமாகத் தவிர்க்கும்நிலை உள்ளது. **சென்னை சங்கமம்** போன்ற நிகழ்வுகளில் இந்த அரிய கலைகள் பெரும்பொருட்செலவில் நிகழ்த்தப்படுகின்றன.

முடிவுரை

நாட்டுப்புறக் கலைகள் என்பதே முந்தைய காலத்தில் வாழ்வியலோடு ஒட்டி வந்ததால் தொடர்ந்து நிகழ்த்திக் காட்டியும் கற்றுக் கொண்டு நிகழ்த்தி தொழில்முறையாக வருமானமும் பெறும்நிலை இருந்தது என்பது முடிவாகிறது. ஆனால், தற்போது இந்தக் கலைகள் அறிவியல் வளர்ச்சியால் பார்வையாளர்களின் பொழுதுபோக்குக் கூறுகள் என்பது அதிகமாகவும் மேலோட்டம் கொண்டதாகவும் அமைந்து விட்டதால் பொய்க்கால்குதிரை ஆட்டம் போன்ற சற்றுக் கடினமான அதாவது பயணம், பராமரிப்பு, வருவாய், செலவுகள் போன்றவைகளால் இடையூறுகள் ஏற்படுவதோடு நவீன மாற்றங்களுக்கு ஏற்ப இவற்றில் எந்த மாறுதல்களும் செய்ய இயலாத நிலையில் இக்கலை நலிவடைந்து வருகிறது என்பதும் முடிவாகிறது. இவற்றைப் பாதுகாக்கும் வகையிலான செயல்பாடுகளை வெளிப்படையாக அதிகப்படுத்த வேண்டும். நாட்டுப்புறக்கலைப் பொருட்களை நிகழிடத்திற்கு எடுத்துச் செல்வதற்குக் கட்டண விலக்கு அளிப்பதுடன் பேருந்து மற்றும் இரயில்களில் கட்டாயம் ஏற்றிச் செல்லவேண்டும் என்ற சலுகைகள் அரசின் மூலம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற கலைகளை அழிவிலிருந்து மீட்டு எடுக்க முடியும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளது.

பார்வை நூல்கள்

1. பாவேந்தர் பாரதிதாசன், சேரதாண்டவம் - நாடகம்
2. கரு. அழ. குணசேகரன், தமிழ் மண்ணின் மரபுக் கதைகள்.
3. மேலது.

◆

விரிவுரையாளர் (விருந்துநிலை),
நாட்டுப்புற நடனம், நிகழ்கலைத்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சி-24.

41
கரகாட்டம் அன்றும் இன்றும்

இரா. சாந்தலெட்சுமி

முன்னுரை

கரகாட்டம் என்பது ஒரு கலை. தற்போது அது ஒருதொழிலாக உள்ளது. கரகம் தெய்வீக ஆற்றலால்தான் தலையில் நிற்கிறது என்று நம்புகிறவர்கள் கரகக் கலைஞர்கள். கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடின்றி மக்கள் முன்பு இக்கலைச் சிந்தனையை நிறுத்தி இக்கலையை வளம் குன்றாமல் வளரச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலை வெளிப்பாடு

தமிழக நாட்டுப்புற ஆட்டங்களுள் ஒன்றாகிய 'கரகாட்டம்' மிகவும் சிறப்பிற்குரியதாகும். உணர்வுகள் உந்தப்படும்போது மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன. இம்மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர் எட்டு வகையாகக் கூறியுள்ளார். அவை,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"

உணர்வுகளின் வெளிப்பாடுகள் உடல் அசைவுகளில் நெறிப்படும் போது முறையான ஆட்டம் கிடைக்கின்றது.

கரகாட்டம்

"நூலே கரகம் முக்கோல் மனையே
ஆயுங் காலை அந்தணர்க்குரிய"

என்று தொல்காப்பிய இலக்கணத்திலும்,

"எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த 'கரகமும்' உரைசான்ற முக்கோலும்"

என்று கலித்தொகையிலும் 'கரகம்' என்ற சொல்லினைக் காண முடிகிறது. இந்தச் சொல்லானது தொல்காப்பியம் காலம் தொட்டே இருந்து வருகிறது. கரகம் என்பதற்குக் "குண்டிகை" என்றும் பொருள் கூறுவர்.

கரக வடிவமைப்பு

அடிப்பகுதியில் குழிவு இல்லாமல் அரைக்கோள வடிவமாகச் செம்பு இருக்கும். பயிற்சிக் கரகத்தின் அடிப்பகுதி தட்டையாக இருக்கும். இன்று ஆடக்கூடிய கலைஞர்களில் பெரும்பாலோர் அடிப்பகுதி குழித்து வைத்திருக்கும் கரகத்தினையே வைத்துள்ளனர். பொதுவாகக் 'கரகச்செம்பு' என்று சொல்லக்கூடியது 4 கிலோவிலிருந்து 10 கிலோ வரை எடையுள்ளதாக இருக்கும். கூம்பு வடிவத்தில் அது காட்சி தரும். செம்பின் வாயின் நடுவில் நீண்ட குச்சி ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். அக்குச்சியின் உச்சியை பொய்க்கிளி ஒன்று அழகு செய்யும்.

கரகாட்டம் ஆடும்போது அக்கிளியும் சுழன்றுகொண்டே இருக்கும். அப்போது பார்வையாளர்களுக்குக் கிளி பறந்து கொண்டிருப்பது போலத் தோன்றும். கரகச் செம்பில் நொய் மணலில் குச்சி செருகப்பட்டு இருப்பதால் பொய்க்கிளி சுழன்றாட ஏதுவாகிறது.

ஆட்டக்கூறுகள்

கரகாட்டமாடும் கலைஞர்கள் அனைவரும் தம் கால்களில் மணிக் கச்சங்கள் கட்டியிருப்பர். கரகாட்டம் ஆடிக் கொண்டிருக்கும் பொழுது அடி வைப்பு மாற்றி ஆடுவதுண்டு. இம்மாற்றத்தினையே 'களம்' என்கின்றனர். கரகாட்டத்தில் ஒன்பதுக்கும் மேற்பட்ட களக் கணக்குகள் உள்ளன.

கரகத்தின் நிலைகள்

கரகாட்டம் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய

இடங்களில் 'கரகச்செம்பு' ஆட்டம் என்றும், இராமநாதபுரம் மாவட்டத்திலும், திருநெல்வேலி மக்களிடத்திலும் 'கரகக்குடம்' என்றும், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 'கரகாட்டம்' என்றும், கன்னியாகுமரி, நாகர்கோயில் போன்ற இடங்களில் 'குட்டத்து ஆட்டம்' என்றும், 'கும்ப ஆட்டம்' என்றும் வழக்கில் இருக்கிறது. ஆனால், கரகாட்டம் ஆடக்கூடிய கலைஞர்கள் அனைவரும் 'கரகாட்டம்' என்றே அன்று முதல் இன்று வரை கூறி வருகின்றனர். தமிழக மக்களும் 'கரகாட்டம்' என்றே பொதுவாக அழைக்கின்றனர். தமிழகக் கிராமிய நடனங்களுள் 'கரகாட்டம்' என்ற சொல் பழமையான சிறப்புடையதாகும்.

இசைக்கருவிகள்

கரகாட்டத்திற்கு இசைக்கப்படும் தாளங்களிலும் இசைகளிலும் ஒரு தனித்துவத்தைக் காணலாம். வாத்தியங்களின் வாசிப்பினைக் கேட்டவுடன் நகையுணர்வு தோன்றும். இதனைக் கரகாட்டக் கலைஞர்கள் நையாண்டி இசை, நையாண்டி மேளம் என்று கிராமங்களில் அழைப்பதுண்டு. கரகாட்டத்திற்குச் சிறப்பூட்டும் வகையில் இக்கருவிகள் அமைந்துள்ளன. கரகாட்டத்தினையும் துணை நிலை ஆட்டங்களையும் முறைப்படுத்தவே இத்தாளக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தோலாலான பறை, தவில், பம்பை, உறுமி முதலியனவும், வெண்கலத்தாலான சிங்கியும், காலில் கட்டி ஆடும் சலங்கையும், தாளம் ஏற்படுத்தி ஆட்டத்தை முறையாகக் கொண்டு செல்கின்றன.

கலைஞர்கள் திறன்

கரகாட்டக் கலைஞர்களிடையே ஆட்டத் திறமையின் பேரில் போட்டிகள் எழுவதுண்டு. அந்த நேரம் கலைஞர்கள் "இந்த ஆசிரியரிடம் கற்றேன்; என்னை வெல்ல இயலாது" என்று அறைகூவல் இட்டு ஆடுவதுண்டு. இந்த ஊர் கரகாட்டக் கலைஞர் நல்ல திறமையுடையவர்கள் என்று கூறவைக்கும் அளவுக்கு தன்னுடைய கலைத்திறனை வளர்த்துக் கொள்வர்.

இராமநாதபுர மாவட்டத்தில் சிறப்பாக, சிவகங்கை வட்டாரத்தில்தான் கரகாட்டக் கலையினை வளர்த்தற்கான பெருமை உண்டு என்று கூறுவர். கரகாட்டக் கலைஞர்கள் தத்தம் பெயர்களோடு ஊர்ப் பெயர்களையும் இணைத்துக் கொள்கின்றனர்.

கரகாட்டக் கலைஞர்களின் பூர்வீகம் அவர்கள் இடையிடையே பாடும் பாடல்களாலும் பேச்சுக்களாலும் வெளிப்படுகின்றன.

“ஆளிலேயும் அழகந்தாண்டி – குட்டி
அரும்பு மீசைக் காரந்தாண்டி
சந்தைப்பேட்டை தாண்டி வாடி – குட்டி
ஓடிப்போவோம் கீரனூரு.
சாலை நல்லாக் கடந்து வாங்க – மச்சான்
சந்தைப்பேட்டை தாண்டி வாங்க
சேலை நல்லாக் கட்டி வாறேன் – மச்சான்
சாலைக் கிராமம் ஓடிப் போவோம்
சந்தனப் பொட்டுமே வச்சுக்கோ
சாந்துப் பொட்டு தங்கமே வச்சுக்கோ
குங்குமப் பொட்டுமே வச்சுக்கோ – வீராயி
சேந்து போவோம் புதுக்கோட்டைக்கு வீராயி”

என்று கலைஞன் பாடிக்கொண்டே தனது பூர்வீகத்தை நிலை நிறுத்திக் கூறுகின்றான்.

ஓரினத்தவர்க்கே கரகாட்டம் என்ற நிலை மாறி இன்று பல்வேறு இனத்தவர்களும் தங்கள் தொழிலாகக் கொண்டு வருகின்றனர். படித்துப் பட்டம் பெற்றுள்ளவர்களும் இன்று கரகாட்டம் ஆட முன் வருகின்றனர். இரவு நேரத்தில் மட்டும் ஆடப்பட்டு வந்த கரகாட்டக் கலை நிகழ்ச்சி இன்று பகல் நேரத்திலும் பல்வேறு விழாக்களுக்காக ஆடப்பட்டு வருகின்றது.

இன்றைய நிலை

கரகாட்டம் அன்று போல் இன்று இல்லையென்றாலும் அக் கலைஞர்கள் காலத்திற்கு ஏற்றவாறு தனது ஆட்டத்தையும் பாடல், ஆடை, நிகழ்வுகள் என்று எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டு இன்றைய வாழ்வில் வாழ்ந்து வருகின்றனர் கரகாட்டக் கலைஞர்கள். ஆனால், அவர்களது வாழ்வில் அன்று போல் இன்று மலர்ச்சி என்பதே இல்லை என்ற நிலையினை அடைந்து இருக்கின்றனர். கலைஞர்கள் எப்போது திருவிழாக் காலம் வருமென்று எதிர்பார்த்துக் காத்து இருக்கின்றனர். இதுதான் இன்றைய கரகாட்டக் கலைஞர்களின் நிலையாக உள்ளது.

முடிவுரை

நாட்டுப்புற நிகழ்ச்சிகளில் மிகவும் சிறப்பாகக் கருதப்படுவது கரகாட்டக் கலையாகும். ஆனால், இன்று நலிவடைந்து வருகிறது. இதனை மறுமலர்ச்சியாக்கச் செய்வது இக்கால இளைஞர்களின் ஆர்வத்தாலும் முயற்சியாலும் மட்டுமே முடியும். இதனை மீண்டும் பொலிவூட்ட நாமும் முயற்சி செய்வோம்.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
அ. வீரையா வாண்டையார் நினைவு,
திருபுட்பம் கல்லூரி (தன்னாட்சி),
பூண்டி, தஞ்சாவூர் - 613 503.

42

கரகாட்டம்

திருமதி எம். சாந்தி

முன்னுரை

தமிழகத்து நாட்டுப்புற நடனங்கள் மிகவும் போற்றத்தக்க வகையில் பெரும் புகழ்வாய்ந்தவை. தமிழகத்தின் அரும் பொக்கிஷங்கள் கிராமியக் கலைகள். இத்தகைய கலைகள் ஆண்டாண்டு காலமாக இந்த மண்ணிலே உரமாக வளர்ந்து வந்திருக்கின்றன. கிராமிய நடனங்கள் புராதன வழக்காக இன்னாரால் ஆக்கப்பட்டவை என்று உணர முடியாத வகையில் நமக்கு வந்துள்ளன. சிலர் தம் நாட்டுப்புற நடனங்களைக் கிராமிய நடனங்கள் என்றும் நாடோடி நடனங்கள் என்றும் அழைக்கின்றனர்.

இந்த நடன வகைகள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. "இந்தப் பண்டையப் பெருங்கலைகள் தமிழ்ப் பெருங்குடி மக்களின் வியப்பூட்டும் திறத்தினையும் வெளிப்படுத்தியுள்ளன. அறத்தையும், வீரத்தையும், அன்பையும், பண்பையும் நாட்டுப் பற்றையும் முறையான இல்லற வாழ்வின் மாண்பினையும் தேனோடு குழைத்துத் தரும் அருமருந்தினைப் போல் ஊட்டியுள்ளன. ஆயிரம் ஏடுகளும் பலநூறு மேடைகளும் செய்ய முடியாத சாதனையை இந்தப் பழம் பெரும் கலைகள் கோடானு கோடி கிராம மக்களிடையே ஆற்றியுள்ளன"[1]

என்று தாமரை இதழ் தலையங்கம் எழுதியுள்ளது. (தாமரை தலையங்கம், மார்ச் 59). இவற்றையெல்லாம் காணும்போது நாட்டுப்புறக் கலைகளின் ஆடல்களின் தரங்களையும் - திறங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

கரகாட்டம் விளக்கம்

"ஆய கலைகள் 64 என்பர். எனினும், சமண நூல்கள் மகளிர் கலைகள் 64. ஆடவர் கலைகள் 72 என்று கூறும். அறுபத்து நான்கு கலைகளை 1. பயன்கலை 2. மதிநுட்பம், 3. உடற்பயிற்சி, 4. விளையாட்டு, 5. பொழுதுபோக்கு, 6. இன்பக்கலை 7. அழகுக்கலை, எனப் பகுப்பர் (நாட்டுப்புற அரங்கக் கலைகள் அகராதி ப. 2) அழகுக் கலைகளில் இயல், இசை இரண்டும் கருத்துக்கலை (Intellectual). ஏனைய நாடகம், ஓவியம், சிற்பம், படிமம், கட்டடம் ஆகியவை காட்சிக் கலைகள். தற்போது செவ்வியல் கலை (Classical arts) நாட்டுப்புறக் கலை கரகாட்டத்தை நிகழ்த்தும் கலைகள் (Folk Performing arts) எனலாம். பிறருக்கு நிகழ்த்திக் காட்டப்படுவதை நிகழ்த்துதல் எனலாம். இவ்வாறு பிறருக்கு நிகழ்த்திக் காட்டி ஆடுவது கரகாட்டம்.

தலையில் உள்ள குடத்தினைத் தங்களின் கைகளினால் பிடிக்காமல் நெடுந்தொலைவு சென்று நீரெடுத்து வரும் பெண்களைப் பார்த்த பின்னரேதான் இவ்வகை அடிப்படையில் இக்கலை உருக்கொண்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்கலை தமிழகத்தின் மேன்மையினைப் பறைசாற்றக்கூடிய ஒன்றாகும். "தலையில் உள்ள குடத்தினைக் கீழே விழாதவாறு கழுத்து, முகம் போன்ற இடங்களில் நகர்த்திக்கொண்டு வருவதும், பின்னர் தலைக்கே கொண்டுசெல்வதும் இக்கரக ஆட்டத்தின் உச்சகட்ட நிகழ்ச்சிகளாகும்" (நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், ப. 463).

கலைஞர்கள் தொழிலாகவும் பக்தி எழுப்பலாகவும் ஆடப்படு கின்ற பல ஆட்டங்களில் கரகமும் ஒன்று. கரகம் என்றால் 'கமண்டலம்', பூக்குடம் என்று பொருள் கொள்வர். கரகம் 'பானை' வைத்து ஆடுகின்ற ஆட்டம் கரக ஆட்டம் ஆகும். இந்த கரகாட்டம் முன்னாளில் 'குடக்கூத்து' என்றும் 'கும்பக்கூத்து' என்றும் வழங்கப்பட்டு, இன்று கரகாட்டமாகியுள்ளது. இதில் 35 வகையான மரபுவழி ஆட்டங்கள் இணைக்கப்பட்டு இப்போது 10 வகை ஆட்டங்களே ஆடப்படுகின்றன. குமரி மாவட்டத்தில் 'குட்டத்து ஆட்டம்' என்றும் அழைக்கின்றனர். மண், செம்பு, பித்தளை முதலானவற்றால் ஆன கரகத்தைத் (பானை) தலையில் வைத்துக் கொண்டு கீழே விழுந்து விடாமல் இசைக்கேற்ப ஆடும் ஆட்டம் கரகாட்டமாகும்.

கரகாட்டத்தின் வகைகள்

கரகமானது சக்திக் கரகம் அல்லது அம்மன் கரகம் என்று வழிபாட்டு கரகாட்டம் அழைக்கப்படும். ஆட்டக்கரகம் அல்லது கரகாட்டம் பொழுதுபோக்கும் கலையம்சமும் உள்ள கரகாட்டம் என இதுஅழைக்கப்படும்.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 'குடக்கூத்து' பற்றிய தொன்மை யான குறிப்பு காணப்படுகிறது. கண்ணன் தனது பேரனான அநிருத் தனைப் பாணாசுரனின் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பினான். அதற் கான செய்திகள் புராணங்களில் உள்ளன. இதனை ஆராய்ந்து நா. வேலுச்சாமி அவர்கள் கரக ஆட்டக்கலை என்றும், டாக்டர் மா. நவநீத கிருட்டிணனும் கே.ஏ. குணசேகரனும் சேர்ந்து 'கரகாட்டம்' என்னும் நூலையும் எழுதியுள்ளனர்.

புனித நீர் வைக்கப்படும் கரகம் 'சக்திக் கரகம்' என்று அழைக்கப் பட்டது. கரகம் அம்மனின் அம்சமாகக் கருதப்படும். கரகத்தைப் பூவால் அலங்கரித்தால் பூங்கரகம் என்றும் வேப்பிலையால் அலங்கரிக்கப் பட்டால் 'வேப்பிலைக் கரகம்' என்றும் அழைக்கப்படும். கரகம் தவறி விழுந்தால் ஊருக்குத் தீமை வரும் என்பது பொதுவான நம்பிக்கை. எனவே, கரகத்தைக் கவனமாக எடுத்துச் செல்வர்.

கரகம்

ஆற்றில் ஏழு ஊற்றுகளைத் தோண்டியோ கிணறு அல்லது குளத்திலோ நீரெடுத்துக் கரகச் செம்பில் முக்கால் பகுதிக்கு நிரப்புவர். செம்பின் வாயைத் தேங்காயால் மூடிக் கட்டி அரளிப்பூவைக் கோபுரம் போல் கீழிருந்து மேல்நோக்கிச் சுற்றுவர். உச்சியில் எலுமிச்சம் பழத்தைச் செருகிக் காதோலையும் கருக மணியும் சூட்டுவர். அதன் மேலே தக்கைக் கிளியைச் செருகி அரளிப்பூவின் இடையிடையே தென்னங்குருத்தையும் செருகுவர். இன்று இயற்கைப் பொருட்கள் போய் வெறும் அலங்காரப் பொருட்கள் மட்டும் இடம் பெற்று வருகின்றன.

கரகம் பற்றிய நம்பிக்கைகளும் வாய்மொழிக் கதைகளும் பல திரௌபதியைச் சுற்றியே உள்ளன. அக்கினியிலிருந்து தோன்றியதாகக் கூறப்படும் வன்னிய குல சத்திரியர்கள் அக்கினியில் தோன்றிய பாஞ்சாலிக்குக் கரகம் எடுத்து ஆடி வருகின்றனர் என்பர். கரகநீர் மழைநீரின் குறியீடு; அதை வணங்கி ஆற்றில் விடுவதன் மூலம் ஆற்றில் நீர் பெருகும் என்பது நம்பிக்கை.

முளைப்பாரியை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போது கரகத்தையும் கொண்டு சென்று துணியால் திரையிட்டு மூடுவதுண்டு. கரகம் எடுப்பவரைக் 'கரகக்காரர்' என்றும் 'அம்மன் கொண்டாடி' என்றும் அழைக்கப்படுவர். கரகம் எடுப்பவர் விரதத்தைக் குறிப்பிட்ட நாட்கள் கடைப்பிடிப்பார். இவரை மேளதாளத்துடன் ஆற்றுக்கு அழைத்துச் செல்வர். குளித்து, மஞ்சள் நீரில் நனைத்த புது வேட்டியைக் கட்டி, உடம்பில் சந்தனம் பூசி, விபூதிப் பட்டை இட்டு, மலர்மாலை அணிந்து, கைகளில் மலர் சுற்றி அலங்காரம் செய்து கொள்வர்.

கோவில் சார்ந்த சடங்குக் கலைகளில் பெண்கள் தீட்டு உள்ளவர்களாக இருப்பதால் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கரகம் எடுத்த மறுநாள் கரகச் செம்பில் உள்ளவற்றை ஆற்றில் கரைத்துவிடுவர். இதனைக் 'கரகம் கரைத்தல்' என்பர். இலங்கையில் மாரியம்மன், கண்ணகி வழிபாடுகளில் கரகம் எடுக்கும் வழக்கமுண்டு. உடுக்கு இசைக்கு ஏற்ப அவர்கள் ஆடுவர். கரகத்தில் நீருடன் வெற்றிலை, பாக்கு, சந்தனக் குழம்பு ஆகியவற்றை இட்டு வேப்பிலை யால் அலங்காரம் செய்வர். மைசூரில் இதனைக் குன்னக் கண்ணாடி என்று அழைப்பர். இக்கரகத்தின் உச்சியில் கண்ணாடி வைத்திருப்பதால் இப்பெயர் வந்தது. பெங்களூரில் பாஞ்சாலிக்குத் திகளர்களால் (தமிழ் வன்னியர்) எடுக்கப்படும் கரகத்தைப் 'பச்சைக் கரகம்' என்பர்.

கரகாட்டத்தின் துணை ஆட்டங்கள்

கரடியாட்டம், டப்பாங்குத்து கரகாட்டத்தின் துணையாட்டம். நையாண்டி மேளமே இதன் பின்னணி இசையாகும். 'இராசாராணி ஆட்டம்' கரகாட்டத்தின் துணை ஆட்டமாக இது நிகழ்த்தப்படும். இது 'தஞ்சைப்' பகுதியில் பிரபலம். கரகாட்டப் பெண்களும் நையாண்டி மேளக் கலைஞர்களும் பங்கு கொள்வர். வண்ணான், வண்ணாத்தி தொடர்பானது 'கூத்து'. இது கரகாட்டத்தின் துணை ஆட்டமாகப் பாட்டு, உரையாடல், ஆட்டம், நடிப்பு என்று நிகழும். இதற்கு நையாண்டி மேளம் பின்னணியாக இருக்கும்.

வழியாட்டம்

வழிதந்து ஆடும் ஆட்டம் வழியாட்டம். கரகாட்டக் குழுவும், நையாண்டி மேளக்குழுவும் இரு அணிகளாகப் பிரிந்து போட்டியிட்டு ஆடுவர். ஒரு அணி இன்னொன்றுக்கு வழிதந்து ஆடுவதால் வழியாட்டம் என்ற பெயர் பெற்றது. இது கரகாட்டத்தின் துணையாட்டம். அனுமனைப் போன்று வேடமிட்டு ஆடும் ஆட்டம்

அனுமன் ஆட்டம் கரகாட்டத்தின் துணை ஆட்டமாகும். இது ஆண்களால் மட்டுமே ஆடப்படும். நையாண்டி மேளம் அல்லது பம்பைக்கு ஏற்ப ஆடுவர்.

கரகாட்டங்களோடு மயிலாட்டம், மாடாட்டம், கரடியாட்டம், குதிரையாட்டம், குறவன் - குறத்தியாட்டம், ராஜாராணியாட்டம், செட்டியார் செட்டிச்சியாட்டமும் இதில் சேர்ந்து கொள்ளும்.

கரக ஒப்பனை

கரகம் தோண்டிக் கரகம், செம்புக் கரகம், அடுக்குக் கரகம் என மூன்று வகைப்படும். தோண்டிக்கரகம் மண்ணால் செய்யப்படுவது. மற்றவை செம்பு போன்ற உலோகங்களால் ஆனவை.

தோண்டிக் கரகத்தில் தேவையான அளவு அரிசியை அல்லது மணலை நிரப்பி, செடி எனப்படும் காகிதப் பூச்சரங்களை வாயில் தொங்க விடுவர். கரகத்தின் உச்சியில் தக்கைக் கிளியைச் செருகுவர். தோண்டி முட்டை வடிவில் சிரமம் தருவதாக, விழுந்தால் உடைந்து விடுவதாக இருக்கும். பெரும் பயிற்சிக்குத் தேவைப்படுவதால் இக்கரகம் குறைந்து வருகிறது.

செம்பு, எவர்சில்வர் போன்றவற்றால் ஆன கரகத்தைத் தஞ்சாவூர் கரகம், மதுரைக் கரகம், திருநெல்வேலிக் கரகம், சேலம் கரகம் எனப் பகுப்பர். செம்பின் மேல் கண்ணாடிக் கூடு தனியாகச் சுற்றுவதுபோல் அமைக்கப்பட்டு 3½ கிலோ ‘டோப்பா’ எனப்படும் அலங்காரக் கூடையைச் செருகுவர். அடுக்குக் கரகத்தில் இரண்டு முதல் ஐந்து சொம்புகள் வரையும் அடிக்கலசத்தில் அரிசி நிரப்பப்பட்டு அடிப்பாகம் பள்ளமாக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு செம்பும் முக்கால் கிலோ முதல் மூன்று கிலோ எடையுள்ளதாக இருக்கும். ஈழத்தில் ஆட்டக் கரகத்தை ‘ஆதிகரகம்’ என்பர். கரகத்துக் கிளியை, அம்மன் கிளி என்பர். இது மலைநாட்டு மக்களிடம் இன்றும் நிகழ்த்தப்படுகிறது.

கரகக் கலைஞர்களின் ஒப்பனை

கரகக் கலைஞர்கள் தாங்களே சுயமாக ஒப்பனை செய்துகொள்வர். பெண்கள் முகப்பூச்சுடன் மைதீட்டி, புருவம் எழுதி, அதன் மேல் வண்ணப் புள்ளிகளிட்டு, பொட்டிட்டு, உதட்டுச் சாயம் பூசி, தலையில் இரட்டைச் சடைபோட்டு, கொண்டைப் போட்டு, கனகாம்பரம், மல்லிகை போன்ற சரங்களைச் சூட்டிக் கொள்வர். வெண்ணிற இறகுகளை கொண்டையின் பின்புறம் அரை வட்டமாகச் சூட்டுவர்.

ஆண்கள் முகப்பூச்சுடன் நெற்றியில் திருநீறு பூச்சும் நடுவில் சந்தனப் பொட்டோ, சாந்துப் பொட்டோ வைப்பர்.

ஆடை

பெண்கள் பைஜாமா ஜாக்கெட், வாஸ்கோட் அணிவர். சிலர் இறுக்கமான உள்கால் சட்டை, அல்லது முழு நீளமான பனியன் அணிந்து அதன்மேல் அரைப்பாவாடை கட்டிக்கொள்வர். மேலே கவர்ச்சியான ஜாக்கெட் அணிவர். பாவாடை, தாவணி, சரிகைப் புடவைகளைப் பின் கொசுவம் வைத்து ஜாக்கெட் அணிந்து ஆடுகின்றனர். இது வசதி, சூழல், தனித்தன்மை, நோக்கம் ஆகியவற்றிற்கு ஏற்ப வேறுபடும்.

கரகாட்டத்திற்கான இசை

நையாண்டி மேளமே கரகாட்டத்திற்கான இசையாக அமைந்துள்ளது. நாதசுரம், தவில், பம்பை, தமுக்கு ஆகிய கருவிகள் இதனுடன் சேரும். ஆடும்போதே பாடுவது வழக்கமில்லை. கரகத்தை இறக்கி வைத்துவிட்டுப் பாடி ஆடுவது உண்டு. இதனைப் 'டப்பாங்கூத்து' என்றும் அழைப்பர். இக்கூத்தில் பெரும்பாலும் தெம்மாங்குப் பாடல்களே இடம்பெறும்.

கரகப்பாடல்கள்

கரகமாடிப் பாடுதல் தமிழ் மக்களின் பெருவழக்கமாக உள்ளது. அவ்வாறு பாடும் ஒரு பாடல்.

"ஒன்றாங் கரகமடி - கன்னி
ஓகோ - என்தாயே
ஓடியாந்து பூசைவாங்கு இப்போ - தாயே
ரெண்டாங் கரகமடி - கன்னி
ஓகோ - என்தாயே
ரணகரகம் பொன்னாலே இப்போ - தாயே
மூன்றாங் கரகமடி - கன்னி
ஓகோ - என்தாயே
முத்தாலே பொன்கரகம் இப்போ - தாயே
நாலாங் கரகமடி - கன்னி
ஓகோ - என்தாயே
நாடி வரும் பூங்கரகம் இப்போ - தாயே

அஞ்சாங் கரகமடி – கன்னி

ஓகோ – என்தாயே

அசைந்தாடும் பொன்கரகம் இப்போ – தாயே!

(காற்றில் வந்தக் கவிதை, ப. 70) இதேபோல,

"ஒண்ணாங் கரகமடி எங்க முத்துமாரி!!

ஒசந்த கரகமடி எங்க முத்துமாரி!!"

(நாட்டுப்புறவியல் - சு. சண்முகசுந்தரம், ப. 96)

மாரியம்மனுக்குக் கரகமாடும் பக்தர்கள் ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்களில் பாடும்போது அவற்றுக்குத் தக்கவாறு ஓகர, ரகர, மூகார ஒலியுடைய சொற்களை அமைத்துப் பாடுவதையும் அதன் இனிமையையும் இரசிக்கலாம். பொதுவாக இவ்வாட்டம் ஆண களுக்கே உரியதாக இருந்தாலும் தற்போது அதிகமான பெண்களும் பங்கு கொள்கின்றனர். நிலக்கோட்டை, பள்ளப்பட்டி சிற்றூரைச் சேர்ந்த ஓம். பெரியசாமி என்னும் கலைஞரே கரக ஆட்டத்தில் நிபுணராக விளங்கியவர் எனலாம். இன்று அவர் இல்லாதது தமிழகத்துக்குப் பேரிழப்பாகும்.

கிராம தேவைகளுக்கு நடக்கும் திருவிழாக்களில் குறிப்பாக மாரியம்மன் திருவிழாக்களில் பக்தர்கள் கரகமெடுத்து ஆடினர். இக்கரகத்தைத் தொழிலாகக் கொண்டு கலைஞர்கள் ஆடிவருகின்றனர். திருவிழாக்களில் ஆடினாலும், தொழிலாக ஆடினாலும் பொழுது போக்காக ஆடினாலும் இன்றும் என்றும் இரசிக்கக்கூடியதாகவும் தொழிலாகப் பரம்பரையாக ஆடும் மக்களை வாழவைக்கக் கூடிய கலை யாகவும் இக்கரகாட்டம் அமைந்துள்ளது. இன்று ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகம் ஆடுகின்றனர்.

◆

விரிவுரையாளர்,
மீனாட்சி மகளிர் கல்லூரி,
சென்னை - 600 024.

43
நாட்டுப்புற நிகழ்கலைகளில் தெருக்கூத்து

செ. சாமுண்டீஸ்வரி

முன்னுரை

நகர்ப்புற நாகரிகத்திலிருந்து ஒதுங்கி நின்று முறையாக எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகக் கிராமப்புறங்களில் வாழ்ந்து வரும் மக்களே நாட்டுப்புற மக்களாவர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஆடப்பட்டு வரும் நடனங்களே நாட்டுப்புற நடனங்கள் ஆகும். இவை ஒரு கலைஞராலோ, ஆசிரியரராலோ முறையாகக் கற்றுக்கொடுத்து வழங்கி வரும் கலைகளல்ல. மக்களின் மனநிலைக்கு ஏற்ற செய்தியை அவர்களுக்குத் தருவதாக இக்கலைகள் உள்ளன. இக்கட்டுரையில் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான தெருக்கூத்தைப் பற்றிக் காணலாம்.

நாட்டுப்புற நடனங்களின் சிறப்புக் கூறுகள்

முரட்டுத்தனம், உணர்ச்சிகளை மறைக்காமல் அப்படியே வெளியிடுதல் என்னும் பண்புகளை நாட்டுப்புற நடனங்களின் சிறப்புக் கூறுகளாகக் கூறலாம்.

நாட்டுப்புறக் கலைகள் ஒரு நாட்டின் தொன்மைக் கலைகளி லிருந்து தோன்றி வளர்ந்தவைகளே ஆகும். நாட்டுப்புற நடனங்களி லிருந்து வெளிப்படும் உணர்ச்சிகள் உண்மையனவைகளாகவும் இயல் பானவைகளாகவும் விளங்குகின்றன. நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகளில் ஆட்டக் கலைஞர்களையும், பார்வையாளர்களையும் தனித்தனியாகப்

பிரித்தறிய இயலாதவாறு இருவகையினரும் இணைந்து செயல்படு கின்றவர்களாக விளங்குகின்றனர். ஒரு நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ள உதவும் முக்கியக் கூறுகளில் ஒன்றாக அந்நாட்டில் உள்ள கலைகள் இடம்பெற்றுள்ளன.

தெருக்கூத்து

தொன்மைக் கூத்துக் கலைகளின் எச்சங்களில் ஒன்றாகத் தமிழகத்தில் விளங்கி வருவது தெருக்கூத்து. தெருக்கூத்து எனும் கலை வடிவமானது செவ்வியல் கலை வடிவங்களில் வாழ்ந்து கொண்டிருக் கின்றது. அபிநயங்கள், முத்திரைகள் ஆகியன நீங்க, உணர்ச்சிகளின் குறியீடுகளாக மட்டுமே அமைந்துள்ளன. அசைவுகளைக் கொண்டு திறந்த வெளியையே ஆடுகளமாக்கி வசனம், பாடல், ஆட்டம், மெய்ப் பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை நிகழ்த்துதலின் வெளிப் பாடாக்கிக் கோயில் சடங்கின் ஒரு கூறாய் விளங்கும் நாட்டுப்புற இசைக்குழு நாடகம் என்று சொல்லப்படும். தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்தவெளி அரங்கிலும் இரவு முழுவதும் நடைபெறும் கூத்து தெருக்கூத்து.

மழையை வேண்டி விராட பருவத்தையும், திருமணம் வேண்டுவோர் மீனாட்சி கல்யாணத்தையும், பிள்ளைப் பேற்றை விரும்புவோர் சத்தியவான் சாவித்திரியையும் நடத்துவர். கூத்திலும் பல மரபுகள் பின்பற்றப்படுகின்றன. துதி, கட்டியங்காரன் வரவு, கதாபாத்திரங்கள் திரைக்குள்ளிருந்து பாடல், திரைக்கு வெளியே பாடல், அறிமுகப்படுத்திக் கொள்ளல், கதை கூறல், மங்களம் பாடுதல் என ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. இதிகாசங்கள், புராணங்கள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் கருப்பொருள் களாகின்றன.

புதுவையில் நிகழ்த்தப்படும் கூத்துகள்

1. மகாபாரதக் கதைகள் (சின்ன அர்ச்சுனன் சண்டை, கீசகன் வதம், அல்லி அர்ஜுனா)

2. இராமாயணக் கதைகள் (லவகுசா, இராமன் பாதுகா பட்டா பிஷேகம்)

மக்கள் வளவாழ்வு வாழ்ந்த அக்காலத்தில் கலைகள் பல சிறந் தோங்கின. இசைபட வாழ்ந்த தமிழர் இசை, கூத்து முதலிய கலைகளில் பெரிதும் நாட்டங் கொண்டு வாழ்ந்தனர். கூத்துக்கலை மக்களால் பெரிதும் விரும்பி இரவு வேளைகளில்கூட விளக்கொளியில் நிகழ்ந்தன.

விழாக்களில் - கூத்து

நகர்ப்புறங்களிலும், கிராமங்களிலும் ஏற்படும் விழாக்கள் பெரும்பாலும் சமயத் தொடர்புடையவை. இன்னல் தீருவதற்கும் நோய் அண்டாமலிருக்கவும், தீவினை முதலிய தீய குற்றங்கள் தீண்டாதிருக்கவும் மக்கள் தெய்வத்திடம் வேண்டுதல் செய்வது மரபாகும். வேண்டிக் கொண்டதற்கு இணங்க மக்கள் பக்தியைக் காட்டலாயினர். இந்த உணர்ச்சிப் பெருக்கின் விளைவால் கூத்து முதலிய நிகழ்ச்சிகள் தோன்றின.

விழாவால் கலை முதலான நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கப் பண்பாடும் ஒரு காரணமாயிற்று. விழா இல்லாமல் கூத்தில்லை; கூத்தில்லாமல் விழா இல்லை என்னுமளவிற்கு இரண்டும் இணைந்து செயல்பட்டன. நம்பிக்கை மட்டுமன்றி மக்கள் கலைகளை வளர்த்துக் கொள்வதற்கும் மனம் மகிழ்ந்து பயன்பாட்டை உயர்த்திக் கொள்வதற்கும் விழாவும் கலைகளும் துணை செய்தன.

கூத்து எனவும், கிராமிய நாடகம் எனவும், நாட்டார் நாடகம் எனவும் தெருக்கூத்து வழங்கப்படுகிறது. நடிகர் வேடமிட்டுக் கொள்ளும் இடத்தில் விளக்கு ஏற்றி வைப்பர். சிறு பூசை செய்து தீபங்காட்டிய பின்னரே தாளத்தைத் தட்டி வேடம் தரிப்பது வழக்கம். கூத்தில் நடிப்பைவிடப் பாடலுக்கே சிறப்புக் கொடுத்தனர். உச்சக் குரலில் பாடும் பாடகர்களே நாடகமேடை ஏறமுடியும். கூத்தில் “இரவல் குரல்” என்ற பேச்சுக்கே இடமில்லை. எனினும் கூத்துப் பாத்திரங்களோடு பண்பாட்டுப் பாடகர்கள் சேர்ந்து பாடுவர். (ரவீந்திரன், செ. தெருக்கூத்து ஓர் அறிமுகம், ப. 48.)

நாகரிகம் தோன்றாச் சூழ்நிலையில் மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளை ஆடியும் பாடியும் வெளிப்படுத்தினான். தன் உள்ளுணர்வு களையும் பிற மகிழ்ச்சியையும் துன்பத்தையும் வெளிக்காட்டு வதற்கு ஆடியும் நடித்தும் காட்டிய முதல் மனிதனின் படிப்படியான வளர்ச்சி யானது நாட்டுப்புறக் கலையில் பல்வேறு மாற்றங்கள் பெறக் காரணங் களாயின. கலையின் உண்மையான இயல்பை நாட்டுப்புறக் கலைகளி லிருந்தே அறிய இயலும். (சக்திவேல், சு. முனைவர். நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.162).

உடை ஒப்பனை

உடை ஒப்பனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. மேலும், பாத்திர வேறுபாடுகளைத் துல்லியமாக ஆடை அணிகலன்களால்

வேறுபடுத்திக் காட்டுவர். பெண்களாயின் முன்கொசுவம் இடம்பெறும். பெண்கள் கொசுவம் வைத்துச் சேலை கட்டியிருப்பர். பெண் பாத்திரங்களை ஆண்களே ஏற்று நடித்தனர்.

தெருக்கூத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் உடை ஒப்பனையில் வண்ணங்கள்

பாவாடைராயன் முகம் முழுவதும் சிவப்பு வண்ணமும் இரண்டு பக்கக் கன்னங்களிலும் முகவாயக்கட்டிலும் (வாய் பகுதியின் கீழ்) மஞ்சள் நிறத்தில் சிறு சிறு புள்ளிகள் வட்ட வடிவத்தில் தீட்டப்பட்டிருக்கும். கண்களைச் சுற்றிக் கருப்பு மையும் மற்றும் புருவத்தின் மேல் பகுதியில் கருப்பு மற்றும் வெள்ளைப் புள்ளிகளும், நெற்றி முழுவதும் வெள்ளைப் பட்டையும், அதன் மையப் பகுதியில் சிவப்பு நிறத்தில் ஒரு பொட்டும் வைக்கப்பட்டிருக்கும். முகம் முழுவதும் மினுக்கிப் பவுடர் பூசப்படும். இது அகோரவீரபத்திர பாத்திரத்திற்கும் பொருந்தும். ஆனால், முகத்தில் பூசப்படும் சிவப்பு வண்ணத்துடன் வெள்ளைப் பொடி சேர்த்துப் பூசுவதால் அகோரத் தன்மை சிறிதளவு குறையும்.

வல்லாளகண்டன் முகம் முழுவதும் சிவப்பு வண்ணமும் புருவத்தின் மேல் பகுதியிலும் கண்களுக்கு கீழ்ப்பகுதியிலும் கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் சிறுசிறு புள்ளிகள் தீட்டப்பட்டிருக்கும். மூக்கிலிருந்து இருபக்கக் கண்கள்வரை மஞ்சள்நிறக் கோடுகளும் இக் கோடுகளுக்கு மேல் கருப்புப் புள்ளிகளும் தீட்டப்பட்டிருக்கும். மீசைக்குக் கீழ்ப்பகுதியில் கோரைப் பற்களும் மற்றும் தாடி கறுப்பு மையிலும் வரையப்பட்டிருக்கும். இவ்வாறு தெருக்கூத்தில் அனைத்தும் நுட்பமாக செய்யப்படும். ஒருவரின் தோற்றத்தை வைத்தே அவரின் கதாபாத்திரத்தைப் பார்வையாளர் அறியலாம்.

முடிவுரை

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் முக்கியச் சான்றாதாரங்களில் ஒன்றாக அந்நாட்டின் கலைகள் விளங்குகின்றன. தெருக்கூத்து நடத்துவதற்கு என்று ஆடம்பரமான இடம் தேவைப்படுவதில்லை. இதனால், அனைத்துத் தர மக்களும் ஒன்றாக இணைந்தே இதனைக் காண்பர். இதனால், இந்த இடங்களில் சாதிகள் மறைகின்றன.இன்றும் இம்முறைகள் கிராமங்களில் உள்ளன. எனவே, தெருக்கூத்து நாட்டுப்புறக் கலைகளில் முக்கியமானதாகக் கருதப் படுகிறது.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

44
மயானக் கொள்ளை

தி. சாமுண்டீஸ்வரி

முன்னுரை

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்தி விடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாறுதான் மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இதனால்தான், 'கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியே தமிழகத்தில் வழங்குகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும், தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். அச்சுறுத்தும் தெய்வங்களுக்குப் படையலாக, மகிழ்ச்சி கொள்ளும் தெய்வங்களுக்கு விழாவாக, குலதெய்வங்களுக்கு முப்பூசையாகப் பல்வேறு நிலைகளில் மரபுகள் நிலைத்து நின்றிருக் கின்றன. அவ்வாறாக நிலைத்து நின்ற மரபுகளுள் 'மயானக் கொள்ளை' என்ற தெய்வ வழிபாட்டு முறையும் தமிழகத்தில் பல்வேறு இடங்களில்

கொண்டாடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக நடைபெறும் இவ்விழாவினை ஆராய்வது இக்கட்டுரையின் சிறப்பாகும்.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டம் கன்னங்குறிச்சி, செவ்வாய்ப்பேட்டை, ஜான்சன்பேட்டை, வீரகனூர், ரெட்டிபட்டி, சின்னம்மாபாளையம், பெரியம்மாபாளையம், அயோத்திபட்டணம், மரவனேரி, தம்மம்பட்டி, கீரிப்பட்டி போன்ற பல்வேறு பகுதிகளில் மிக சிறப்பாக இவ்விழா கொண்டாடப்படுகிறது.

மயானக் கொள்ளை திருவிழா

பெரும்பாலும் இக்கோவில்கள் சுடுகாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவில்களில் பெரியாண்டிச்சி அம்மன் அல்லது அங்காளம்மன் என்னும் சிறு தெய்வத்தை வழிபடுகின்றனர். மண்ணால் செய்யப்பட்டு படுத்த நிலையில் இருக்கும் பெரியாண்டிச்சி அம்மன் மிக பிரம்மாண்டமாக காட்சியளிக்கிறது. மயானக் கொள்ளை திருவிழாவானது மாசி மாதம் மகா சிவராத்திரி விழாவின் தொடர்ச்சியாக அமாவாசையன்று நடைபெறுகிறது.

விழா தொடக்கம்

மாசிமாதம் தொடக்க நாளான முதல் தேதியில் 'கம்பம் கட்டுதல்' என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஊரின் உள்ளே 'கோவில் வீடு' என்னும் இடத்தில் உள்ள அங்காளம்மன் கோவிலில் இவ்விழாவினைத் தொடங்குகின்றனர். அன்றிலிருந்து 30 நாட்கள் வரை கடும் விரதமிருந்து மயானக் கொள்ளை விழாவினைச் சிறப்புடன் நடத்துகின்றனர். விரதம் இருப்பவர்கள் மட்டுமே வேடங்களை அணிந்து கொள்கின்றனர். விரதத்தின் சக்தியின் காரணமாகத்தான் ஆடு, கோழிகளை உயிருடன் கடிக்குமளவு பலம் ஏற்படுகிறது என்று நம்புகின்றனர்.

முதல் நாள் சிவராத்திரி அன்று இரவு 12 மணியளவில் மயானத்தில் 'காடு கட்டுதல்' என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. காடுகட்டுதல் நிகழ்ச்சியின்போது போடும் வேடத்திற்கு 'மோட்டுக் கொப்பரை' என்று பெயர். மயானத்தில் சடலங்களை எரிக்கும் பகுதியில் உயிருடன் உள்ள ஆட்டினைக் கடித்து குடலை உருவி அதனை மாலையாகத் தங்கள் கழுத்துகளில் இட்டு ஆவேசமாக ஆடிக்

கொண்டே வீதி வழியாக ஊர்வலமாக வருகின்றனர். அவர்களிடம் பக்தர்கள் காலில் விழுந்து ஆசிபெறுகின்றனர். அங்காளம்மன் மயானத்தில் வசிப்பதால் அவளது உணவு சடலங்களின் சதையும், எலும்பும்தான். அவற்றைப் படைக்க இயலாத காரணத்தால் ஆடு, கோழிகளை உயிருடன் படைக்கின்றனர் என்ற கருத்தினைக் தெரிவிக்கின்றனர்.

விழா நிகழ்ச்சி

அடுத்த நாள் காலை அமாவாசையன்று பெரும்பாலான கோயில்களில் சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன. பக்தர்கள் அம்மனுக்குத் தங்களது நேர்த்திக் கடனை செலுத்தும் விதத்தில் சக்திக் கரகம், அலகு குத்துதல், ஆகியவற்றுடன் ஊர்வலமாகச் சென்று மீண்டும் கோயிலை வந்தடைகின்றனர். அங்கு சிறப்பு பூசைகள் மற்றும் அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. கோயிலிருந்து வேடமணிந்து சென்ற பக்தர்கள் கையில் கொண்டு சென்ற நவதானியங்களைச் சுடுகாட்டில் உள்ள மண்ணில் கலந்து சாப்பிடுவர். அப்போது சுடுகாட்டு மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்வர். ஒரு சிலர் சடலத்தின் சாம்பலைச் சேகரிப்பர். ஒரு சிலர் மண்டை ஓடுகளை எடுத்துச் செல்வர். திரும்பும் வேளையில் சுடுகாட்டுச் சாம்பலை எடுத்து வந்து வழிநெடுகிலும் உள்ள மற்ற பக்தர்களுக்கு விபூதியாகப் பூசுவர்.

சில இடங்களில் கோவில் வீட்டிலிருந்து முறத்தில் அம்மனின் சிலையை மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். பூசாரி மயானத்தில் பூசை செய்து ஆடு, கோழிகளைப் பலியிட்டு அதன் இரத்தத்தைப் பொங்கல் சோற்றில் கலந்து தூக்கிவீசுகிறார். அதனைக் குழந்தைப் பாக்கியம் இல்லாதப் பெண்கள் தங்கள் மடியினை ஏந்தி பிரசாதமாகச் சாப்பிடுவர். இதற்குக் 'காவுச் சோறு' என்று பெயர். இதனால், குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்று நம்புகின்றனர். அடுத்த வருடம் குழந்தை பாக்கியம் கிடைத்தால் அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து சாமியின் முன்பு ஒருவருக்கொருவர் தூக்கிப்போட்டு பிடித்து நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். இதற்குச் 'சூரையாடல்' என்று பெயர்.

ஊர்வல நிகழ்ச்சி

அம்மனின் பல்வேறு அவதாரங்களை வேடமிட்டபடிப் பக்தர்கள் மயானத்தில் இருந்து ஊர்வலமாகச் செல்கின்றனர். இவ் வேடங்களில் சிறப்பானதாகக் காளியம்மன் வேடம் போடப்படுகிறது.

இத்திருவுருவை இக்கோவிலில் படமாக வரைந்து வைத்துள்ளனர். அம்மனின் காவல் தெய்வங்களாகப் பாவாடைராயன், காட்டேரி என்ற வேடத்தினை இருவர் மட்டும் போடுகின்றனர். மற்ற அனைவருமே அம்மனின் அவதாரங்களான பெரியாண்டிச்சி அம்மன், பத்ரகாளி, பார்வதி ஆகிய வேடங்களையே தரிக்கின்றனர். வேடமிட்டுப் பக்தர் உயிருடன் இருக்கும் ஆட்டுக்குட்டியைக் கழுத்தில் தூக்கிப் போட்டபடி வருகின்றார். ஆவேசமாகச் சாமியாடியபடி ஆட்டின் குரல்வளையைப் பல்லால் கடித்து இரத்தம் குடித்துக் காண்போரைக் கதிகலங்க வைக்கும். சில பக்தர்கள் கோழியை வாயில் கவ்வியப்படி அதன் இரத்தத்தை ருசித்துச் சாப்பிட்ட வண்ணம் வருவர். இவர்களின் உடல் முழுவதும் ஆடு, கோழியின் இரத்தம் வடிந்த வண்ணம் இருக்கும். இன்னும் சில பக்தர்கள் சுடுகாட்டின் புதைகுழியில் மக்கிக் கிடக்கும் மனிதனின் மண்டை ஓட்டை கவ்வியபடியும் வருவர். ஊர்வலத்தின் உறுமி மேளம் முழங்க அம்மனை மனமுருக பாடியபடி வருவர். காட்டேரி வேடமணிந்து செல்பவரிடம் பக்தர்கள் தங்கள் கையில் உயிருடன் உள்ள கோழியைக் கொடுப்பர். பக்தர்கள், வேடமணிந்தவர்களின் கால்களில் நீரை ஊற்றிக் காலில் விழுந்து வணங்கி ஆசி பெறுவர்.

நேர்த்திக் கடன்

பேய், பிசாசு பிடிக்காமல் இருக்கவும், நோய்நொடி வராமல் இருக்கவும் வேண்டிக்கொண்ட பக்தர்கள் அம்மன் வேடமணிந்தவர் களின் முன் தரையில் படுத்துக்கொண்டு நேர்த்திக் கடன் செலுத்துவர். அவர்களை அம்மன் வேடமணிந்தவர்கள் தாண்டிச் செல்வர். காளி வேடமணிந்த பூசாரியின்முன் ஈரத் துணிகளுடன் பெண்கள் மண்டியிட்டு அமர்வர். அவர்களைப் பூசாரி முறத்தால் அடிப்பார். அவ்வாறு அவரிடம் அடிவாங்கினால் பேய், நோய்நொடிகள் அண்டாது என்பது ஐதீகம்.

விழாமுடிவு

அந்தந்தப் பகுதியில் உள்ள கோவில்களுக்குச் செல்வர். அங்கு சுடுகாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்களை வைத்துச் சிறப்புப் பூசை செய்வர். அதன் பிறகு அவற்றைக் குழந்தையில்லாத வர்கள் மற்றும் திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்கள், கடன் தொல்லை, நோய்வாய்ப்படுவோர் என்று பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிரசாதமாகக் கொடுப்பர். அவர்கள் அதனை உண்பர். இவற்றைச்

சாப்பிடுவதன் மூலம் அவர்களின் துன்பங்கள் உடனே தீர்ந்து போகும் என்பது ஐதீகம். விழா முடிவாக மீண்டும் கோவில் வீட்டிற்குத் தெய்வத்தை எடுத்துச் சென்று வைப்பர். அங்கு அனைவரும் விழா முடிவின் வருத்தமாகத் தெய்வத்தைப் பிரிவதாக எண்ணி அழுவர். அப்பொழுது முறையாகப் பாடல் ஒன்று காலாகாலமாகப் பாடப்பட்டுவருகிறது.

மயானக் கொள்ளை வேறுபடும் விதம்

சேலம் மாநகரில் பரவராகக் கொண்டாடப்படும் மயானக் கொள்ளை மற்ற விழாக்களிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. பெரும்பான்மையாக மயானப் பூசையின்போது பக்தர்கள் ஆடு, கோழிகளை உயிரோடு கடித்தபடி வருவது புதுமையாக அமைந்துள்ள நிகழ்ச்சியாகும்.

தொகுப்புரை

- ஆண்டிற்கு ஒருமுறை கொண்டாப்படும் மாசி மாதத் திருவிழா வானது கிராமத்து மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் விழாவாக அமைகிறது.
- கம்பம் கட்டுதல், மொட்டுக்கொப்பரை, அம்மன் வேடம், காவல் தெய்வ வேடம், காவுச்சோறு, சூரையாடல், ஊர்வலம், கோவில் வீடு திரும்பிச் செல்லல் என்பன விழா நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன.
- அம்மனின் அவதாரங்களையும் காவல் தெய்வத்தின் உருவ அமைப்பினையும் வேடமாக அணிந்து சுடுகாட்டிற்கு செல்கின்றனர்.
- திருவிழா கோவில்களில் நடைபெறுவது இயல்பு. ஆனால், இங்கு மயானத்தில் நடைபெறுகிறது.
- உயிருடன் ஆடு, கோழிகளையும் கடித்தப்படி ஆவேசமாகச் சாமி ஆடியபடி ஊர்வலமாக வருகின்றனர்.
- நவதானியங்களையும், ஆடு, கோழிகளின் இரத்தத்தையும் கலந்து காவுச்சோற்றைப் பிரசாதமாகச் சாப்பிடுகின்றனர்.
- பேய், பிசாசு பிடிக்காமல் இருக்கவும், நோய்நொடி வராமல் இருக்கவும். குழந்தைப்பேறு கிட்டவும், கன்னிப்பெண்களுக்குத் திருமணமாகவும், கடன் தொல்லை போகவும் இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

➢ பெரும்பான்மையாகச் சேலம் மாவட்டத்தில் கொண்டாடப் படும் நாட்டுப்புற விழாவாகத் திகழ்கிறது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்கின்றனர்.

முடிவுரை

நாட்டுப்புறங்களில் நம்பிக்கையூட்டும் சிறு தெய்வ வழிபாடு மக்களின் வாழ்வியலோடு ஒன்றி உள்ளதை இவ்வாறான திருவிழாக்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறையை நோக்கும்பொழுது மயானக் கொள்ளை தனித்து விளங்கி நிற்பதை இவ்விழாவின் முடிவாகக் கருதப்படுகிறது.

தகவலாளர்கள்

1. திருமதி.அங்காம்மாள் - வயது 60 - மயான அங்கம்மாள் கோவில் பூசாரி, கன்னங்குறிச்சி, சேலம்-636 008.
2. திரு.பாலா - வயது 20 - மயான அங்கம்மாள் கோவில் பூசாரி. கன்னங்குறிச்சி, சேலம்-636 008.
3. திருமதி.கௌரி சங்கர் - வயது 26 - மயான அங்கம்மாள் கோவில் பக்தர்,மோட்டாங்குறிச்சி, கன்னங்குறிச்சி, சேலம்-636 008.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்.
தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-1.

45

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் கும்மிப் பாடல்கள் : அன்றும் இன்றும்

இரா. சுகன்யாதேவி

முன்னுரை

அழகுக் கலைகளுள் ஒன்றான ஆடற்கலை ஓர் அரிய கலை. தில்லையிலே நடராசரின் திருநடனம்; யமுனை நதியில் கண்ண பிரானின் காளிங்க களிநடனம். எனவே, ஆடற்கலை ஓர் அவதாரக்கலை. மேகத்தைக் கண்டதும் மயில்கள் தோகை விரித்துத் துள்ளியாடுகின்றன. தென்றலைக் கண்டதும் தேன்மலர்கள் கொடியில் கூத்தாடுகின்றன. எனவே, ஆடற்கலை ஓர் இயற்கைக் கலை. இவ்வாறு இசையும் இயற்கையும் இக்கலைக்குள் அடங்குமெனில் மனிதன் மனத்தைக் கேட்கவா வேண்டும். கிராமப்புறங்களில்தான் மனிதரின் முழுவடிவைக் காண முடியும். புனைவு, பொய்ம்மை, போலி போன்றவற்றைத் தவிர்த்து விட்ட மெய்ம்மைகள். நாட்டுப்புற ஆடல்களுள் 'கும்மியும்' இத்தகைய மெய்ம்மைகளுள் ஒன்றே.

கொண்டாட்டப் பாடல்கள்

மனிதன் தன் மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் பலரோடு சேர்ந்து கொண்டாடுகிறான். மனிதன் கடின உழைப்பிற்குப்பின் நேரத்தை இயன்பமாகக் கழிக்க விரும்புகிறான். பலர் இணைந்து ஆடும் கும்மி,

கோலாட்டம் போன்றவைகளும் பெரும்பாலும் குடும்ப உறவினரே பங்கு கொள்ளும் திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்களும் கொண்டாட்டப்பாடல்கள் எனப்படும். முன்னதைப் புறப்பாடல் என்றும் பின்னதை அகப்பாடல் என்றும் சுட்டுவர். அகப்பாடல் குடும்பத்தைப் பற்றியதாகவும் புறப்பாடல் குழுவாக இயங்கும் சமூகத்தைப் பற்றியதாகவும் இருக்கும்.

கும்மி - சொற்பொருள் விளக்கம்

'கும்மாளம்' என்ற சொல்லுக்குக் குதித்தாடு என்று பொருள். கும்மாளமிட்டு ஆடுவதனைக் கும்மி என்று குறிப்பிட வேண்டும். 'குழுமி' என்ற சொல்லினின்றும் 'கும்மி' என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும் என்பது அ.கி. பரந்தாமனார் கருத்து.

கும்மியைக் குறிக்கும் பிற சொற்கள்

'கொம்மை' என்று சீவசிந்தாமணி குறிப்பிடுவது கும்மியையே. அகநானூறு 'கொப்பி' என்று கும்மியைக் குறிப்பிடுகின்றது. 'கொம்மி' என்று குறிப்பிடும் வழக்கத்தினைச் சண்முகர் கொம்மை, நடேசர் கொம்மி போன்ற நூற்பெயர்களால் அறியலாம்.

கும்மியின் தோற்றம்

சங்க இலக்கியத்தில் 'கும்மி' என்ற சொல்லாட்சியைக் காண முடியவில்லை. அகநானூறு குறிப்பிடும் கொப்பி என்பது கும்மி அல்லது கும்மியைப் போன்ற ஓர் ஆடலைக் குறிக்கும். எனவே, சங்க காலமே கும்மியின் தோற்றக் காலம் எனலாம். குரவையாடலும் கும்மியை ஒத்தது என்ற கருத்தும் ஒப்பு நோக்கத்தக்கது.

கும்மி கொட்டும் முறை

பெண்கள் வட்டமாக நின்று கும்மி கொட்டிக் காட்டுவர். குத்துவிளக்கு, கிருஷ்ணன் சிலை, மலர்க்கூடை, பலகாரக்கூடை போன்றவற்றை வைத்துச் சுற்றி நின்று ஆடுவர். வளைந்தும் வணங்கியும் குதித்தும் ஆடுவர். கைகளைத் தட்டும்பொழுது விரல் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு போன்றவை உள்ளன. இவற்றின் முறைகளைப் பின்பற்றியே கும்மி கொட்டப்படுகிறது.

கும்மி கொட்டும் பொழுதுகள்

சங்கராந்திப் பொங்கலன்று பெண்கள் ஆறு, குளம், ஏரி போன்ற இடங்களுக்குச் செல்லும் போதும், பருவமுற்ற பெண்களுக்குச் சடங்கு

நிகழ்த்தும் போதும், மாவிளக்கேற்றி விரதம் இருக்கும்போதும், அம்மன் தெய்வங்களுக்கு முளைப்பாரியிட்டு வழிபாடு செய்யும்போதும் கும்மிகொட்டப் பெறுகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் கும்மியைப் பற்றிய விளக்கம்

கும்மிப் பாடல்கள் அல்லாத பிற பாடல்களும் கும்மியின் தன்மைகளை விளக்கியுரைக்கின்றன.

"கூந்தலழகுக் காரியெல்லாம் - காலைக்
குதித்துக் கும்மியடி யுங்கடி
விஸ்திரமாக நின்று கொண்டு
வீசிக் கும்மி யடியுங்கடி
கும்மி யென்ன கூடமென்ன - கண்மணியே
குனிந்து நிமிர்ந்து குத்திக் கும்மியடியுங்கடி''

எனப் பலவாறு பாடுவதன் மூலம் கும்மியாடலானது ஆடிப்பாடப்படும் என அறிந்து கொள்ளலாம்.

"கும்மி யடிக்கிற பக்கத்திலே
கூட்டமென்னடி ஆண்பிள்ளைக்கு''

என்று பாடுவதால் கும்மிப் பாடலானது பெண்களுக்கே உரியது என்றும், ஆண்களுக்கு அதில் பங்கில்லை என்றும் அறிந்து கொள்கின்றோம்.

கும்மிப் பாடலின் இலக்கணம்

கும்மிப் பாடலுக்கு அ.கி. பரந்தாமனார் அவர்கள் கூறும் இலக்கணமாவது, பெண்டிர் கை கொட்டி ஆடும்பொழுது பயன்படுத்தும் பாட்டாகும். குழுமி என்ற சொல்லே கும்மி என்று மருவிற்று என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றார்.

கும்மிப் பாடல் பாடும் முறை

தன்னன னாதினம் தன்னானே - தனம்
தன்னன னாதினம் தன்னானே''

என்ற மெட்டினைக் கும்மிப் பாடலில் பயன்படுத்துகின்றனர். இப்பாடல் துள்ளல் ஓசையில் அமைந்திருக்கும். இப்பாடலுக்குக் கையொலியே இயற்கையான தாளமாக அமைந்திருக்கும்.

கும்மியின் வகைகள்

கும்மியை இருவகையாகப் பகுத்துக் கொள்ளலாம். பெண்கள் கொட்டுவதனைக் கும்மி என்றும், ஆண்கள் கொட்டுவதனை ஒயில் கும்மி என்றும் அழைப்பர். பாடலின் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு சமயக் கருத்துகள், புராணக் கருத்துகள், வரலாற்றுச் செய்திகள், வாழ்வியல் நிகழ்வுகள் என்று நால்வகையாகப் பகுக்கலாம். வள்ளியம்மைக் கும்மி, ஞானக்கும்மி, ஞானப்பெண் கும்மி போன்றவை சமயக் கும்மிப் பாடல்களாகவும், அரிச்சந்திரக் கும்மி, நளன் கும்மி போன்றவை புராணக் கும்மிப் பாடல்களாகவும், அகத்தியர் வைத்தியக்கும்மி போன்றவை வாழ்வியல் கும்மிப் பாடல்களாகவும், கட்டபொம்மன் கும்மி, சிவகங்கைச் சரித்திரக் கும்மி போன்றவை வரலாற்றுக் கும்மிப் பாடல்களாகவும் விளக்குகின்றன.

கிருஷ்ண பகவானின் வரலாற்றுச் சிறப்பினை விளக்கும் வகையில் புராணக் கதையைப் புனைந்து,

> "உரியிலே வெண்ணெய் இருக்கோ - கிருஷ்ணன்
> உறிஞ்சிக் குடிச்சாரு
> சாடியிலே வெண்ணெய் இருக்கோ - கிருஷ்ணன்
> சாய்த்து குடிச்சாரு''

என்று பாடிக் கும்மியடிக்கின்றனர்.

பிற இடங்களில் கும்மி

தமிழகத்தைத் தவிர பிற இடங்களிலும் கும்மியாட்டம் பரவியுள்ளது. தமிழகத்திலுள்ள பழங்குடி மக்களின் ஒரு பிரிவினரான குன்னுவர்களிடம் கும்மி என்ற பெயர் வழக்கத்திலுள்ளது. மேலும், கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களிலும் கும்மியின் சாயலுள்ள ஆடல்கள் நடைபெறுவதனைக் காணமுடிகின்றது.

கேரளத்தில் 'கைகொட்டிக் களி' என்று அழைக்கப்படும் ஆடல் தமிழகத்துக் கும்மியுடன் ஒப்பிடுவதற்குரியது'. ஆந்திர நாட்டிலுள்ள 'கொப்பி' கொட்டுதல் என்னும் ஆடல் கும்மியைப் போன்றது. இம்மக்கள் தனுர் மாதத்தில் ஒவ்வொரு நாள் மாலையிலும் கொப்பி கொட்டுவர். தெலுங்கானா நாட்டில் 'படகம்மலாட்ட' என்பது தமிழகத்திலுள்ள கும்மியை நிகர்த்த ஆடலாகும். தசரா விழாவினை ஒட்டிய ஒன்பது நாட்களில் இவ்வாடல் நடைபெறும். இராஜஸ்தானில் 'கர்பா' என்ற ஆடல் நமக்குத் தமிழகத்துக் கும்மியாடலை

நினைவூட்டும். நவராத்திரி அன்று விளக்கினை நடுவில் வைத்து அமர்ந்தும் எழுந்தும் ஆடி மகிழ்வர்.

இன்றைய நிலைமை (கும்மியில்)

தற்காலத்தில் கிராமங்களில் கும்மி கொட்டும் வழக்கம் குறைந்து வருகின்றது. கூச்சமும், நாகரிகம் என்று எண்ணும் எண்ணமும் மக்களை கும்மியாட்டத்தினை மறக்கச் செய்து வருகின்றது. தாமாகவே கிளர்ந்து எழுந்து ஆடும் நிலை மாறி, பிறரது ஆடலைச் சுவைக்கும் பிற்போக்கு நிலை வளர்ந்து விட்டது. எனவே, மற்ற விழாக்களில் கும்மியாட்டம் குறைந்தாலும் பொங்கல் விழாக்களில் இவ்வாடல் அருகிக் காணப்படுகின்றது.

"வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கொட்டி முழக்குமந்த கூட்டமுதப் பாட்டான கும்மியில் நெஞ்சைப் பறிகொடுத்த" பாரதியார் பெண்கள் விடுதலைக் கும்மிப் பாடலை இயற்றினார். பிற புலவர்களும் நாலு மந்திரிக்கும்மி, மானிடக்கும்மி, நளநாடகக் கும்மி, முத்து வீராயக்கும்மி போன்ற பல கும்மிகளைப் பாடினார்கள்.

முடிவுரை

நாட்டுப்புற இலக்கியத்தை முழுமையும் வ்கைப்படுத்திய நிறைவை எய்த இயலாது. எனினும், நாட்டுப்புற இலக்கியத்தை முழுமையும் பாடல், ஆடல், கதைகள், கதைப்பாடல்கள், கும்மிப் பாடல்கள், கூத்துகள், விடுகதைகள், பழமொழிகள் என்ற பிரிவுகளில் பெரும்பான்மையானவற்றை அடக்கி விடலாம். இப்பிரிவுகள் அனைத்தும் ஆடல், பாடல் என்ற இருபெரும் பிரிவுக்குள் அடங்கும்.

◆

நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

46

குரவைக் கூத்திலிருந்து மருவிய குலவைப்பாடல்

முனைவர் ச. சுந்தரம்பாள்

முன்னுரை

நாட்டுப்புற மக்களின் அழகியல் உணர்வுகளின் வெளிப்பாடாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன. எண்ணற்ற கலைகளில் கூத்துக்கலையும் ஒன்று. இந்த வகையில் அன்று குரவைக் கூத்தாக இருந்தது இன்று குலவைப்பாடலாக மாற்றம் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

கலை

ஆரம்ப காலத்தில் மக்கள் வேட்டையாடிக் கொணர்ந்த மிருகங் களின் இறைச்சியையும், கனிந்த கனிகளையும், காய்களையும் உணவாக உண்டனர். காலம் செல்லச் செல்ல மண் பண்படுத்தப்பட்டு, நீர் தேக்கப் பட்டு மாடுகள் பழக்கப்பட்டு உழவுத் தொழிலைச் செம்மையாகச் செய்தனர். சில திங்கள் உழைத்து ஆண்டுக்கு வேண்டிய நெல் முதலிய தானியங்களை உண்டாக்கிச் சேமித்து வாழ்ந்தனர். அதனால் மருதநில மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகம் இருந்தது. நல்லனவற்றைக் காணவும், நல்லனவற்றைப் பேசவும், நல்லனவற்றை எண்ணவும், அனைத்தும் படைத்தளித்த இயற்கைக்கு நன்றி காட்டவும் எண்ணினர்.

கலை மக்கள் வாழ்க்கையில் தனிப்பட்ட ஒரு பண்பு. அனுபவத்தின் திறனால் இன்ப உணர்ச்சியில் ஈடுபடுகிறான். அதனில் அவனது ஆன்மசக்தி தொடர்கிறது. அந்த இன்ப எண்ணத்திற்கு அவன் ஓர் உருக்கொடுக்கிறான். அது மிகப் பெரிய கலையாக மாறுகிறது.

கூத்துக்கலை

அக்காலத்து கூத்தர்களுக்கு அறுபத்து நான்கு கலைகளும் பற்றிய அறிவு தேவைப்பட்டது. கூத்துகளை இரண்டாகப் பிரித்தனர். மன்னர்க்கு மட்டும் உரியது 'வேத்தியல்' என்றும் பொது மக்களுக்கு உரியவை 'பொதுவியல்' என்றும் அறியப்பட்டன. ஐந்தாண்டு முதல் பன்னிரண்டாண்டுகள்வரை ஏழாண்டுகள் நடனப் பயிற்சி அளிக்கப்பட்டு நடனம், மன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டது. பொன்னும் மணியும் 'தலைக்கோல்' என்னும் பட்டமும் கூத்தர்களுக்கு அளிக்கப்பட்டன. இவ்வகை கூத்துக்கலைகளில் ஒன்று குரவைக்கூத்து.

குரவை

குரவை என்பது கைகோர்த்தாடல், பெருஞ்சத்தம் செய்தல் மகளிர் மகிழ்வொலி ஆகியனவாகும். குரவைக்கூத்து, எழுவரேனும் ஒன்பதின்மரேனும், கைகோர்த்தாடுவது குரவையாடுதல், கூப்பிடுதல், சத்தம் செய்தல், மங்கல ஒலி செய்தல், குரவை என்று கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி குறிப்பிடுகிறது.

குலவை

மாதர்கள் வாயினால் செய்யும் ஒருவித மங்கள ஒலி, சிறப்புக்குரிய காலங்களில் மகளிர் நாவால் குழறிடும் 'குலகுல' என்னும் மகிழ்ச்சியொலியே 'குலவை' என்று கதிரைவேற்பிள்ளை அகராதி குறிப்பிடுகிறது.

இதனை சு. சண்முகசுந்தரம் 'குரவை என்பதன் திரிந்த வடிவம் குலவை என்பார்.

குரவையும் குலவையும்

இவை இரண்டுமே மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கவும் வாழ்வு சார்ந்த தொழில்கள் செழிப்படைய வேண்டும் என்பதும் அச்சத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் இறைவனை வேண்டுதலே இவ்விரு குரவை, குலவைப் பாடல்களின் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இதனை இலக்கியச் சான்றுகள் துணைகொண்டு அறியலாம்.

மலைசார்ந்த குரவை

பெரும்பாலும் குரவைக்கூத்து மலையில் வாழும் குறவர்களின் ஆடற்கலையாக இருந்துள்ளது. இம்மக்கள் விரும்பி ஆடியது குரவைக் கூத்து. மலையுச்சியில் குன்ற வாணர்கள் மான்தோல் சிறுபறையின் முழக்கோடு ஆடினர்.

"நறவுநாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு
மான் தோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான் தோய் மீமிசை அயரும் குரவை"

(*மலைபடுகடாம் 320-322*)

என்கிறது மலைபடுகடாம் பாடல்.

இதனை ஒத்த குலவைப் பாடலும், தங்களின் தொழில் உழவு சிறக்க வேண்டுமென்று அதற்கு காரணமான மழையை இறக்கி விடவேண்டும் என்று முனியய்யாவிடம் முறையிட்டுப் பெண்கள் குலவையிடுகின்றனர்.

"கூடைக் கொண்டு எரு பொறுக்கி
குளத்துத் தண்ணீ வயல் பாச்சி
மாடு உழுக சேறாக வருத்தி
நட்ட செந்நெல்லே (குலவை)
காடையிட்டக் கருங்குருவி
கருத வந்து கொய்யுதுனு
மாலையிட்ட முனியய்யா
மழையை இறக்கி விடு" (குலவை)

(தங்கம் - முள்ளூர்)

என்பர்.

மலையுச்சியிலே வேங்கை மரத்தில் மது அருந்திவிட்டு குரவையாடியதாக நற்றிணையும்,

"வாங்கமைப் பகுதிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையும் கண்டே"

(நற் *276: 8-10*)

என்று குறிப்பிடுகிறது.

வேங்கைமரம் மலைசார்ந்த மரம். இதை ஒத்த சந்தனமரமும் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த மரம் என்பதைக் குலவைப் பாடலும்,

"சந்தன மரமசைய
சதுரக் கள்ளி பூ உதிர

வடுகப் பெண்கள் வளையல் போட
வந்திறங்கும் பிள்ளையாரே (குலவை)

என்று சுட்டுகிறது.

குறுகிய இருப்பினையுடைய குடிசையில் வாழும் குறவர் இங்ஙனம் மூங்கிற் குழாயில் விளைந்த கள்ளையுண்டு குரவை பாடியதை புறநானூறும் கூறும்,

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்' (புறம் 129: 1)

இதை ஒத்த குலவையில் தகவலாளிகளின் கூற்றுப்படி 'மதுக்குடம்' இருபொருள் தருவது என்று, ஒன்று முளைப்பாரி என்றும், மற்றொன்று பலவகைத் தானியங்களைச் சேகரித்து மண்பானையில் ஊறவைத்து விழாக்களில் மக்களுக்கு மதுபோன்ற கள்ளைக் கொடுப்பார்கள் என்று கூறுவது, மகிழ்ச்சிக் காலங்களில் மது அருந்துவது மரபு என்பதை காட்டுகிறது.

"மதுவே மதுக்குடத்தே
மதுக்கேத்த சும்மாட்டே
மதுவே இறக்கிவச்சு
மனம் கொள்ளுவா மாரியம்மா'' (குலவை)

தகவலாளி சின்னாத்தாள் - நத்தம்பண்ணை

மலர்கள்

குறவர் மட்டுமன்றிப் பரதவர்களும் குரவையாடினர். நீலமண் போலும் கழிமுள்ளி மலர் நிரம்பிய மணல் குன்றுகள் நிறைந்த கடற் கானலில் பரதவ மகளிர் ஆடிய குரவையைப் பற்றி மதுரைக்காஞ்சியும் குறிக்கிறது.

"மணிப்பூ முண்டகத்து மணல் மலிகானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப'

(மதுரைக்காஞ்சி - 96)

பண்டைத் தமிழர் மலரொடு கலந்த மென்மையான வாழ்க்கை உடையவர்கள் என்பதைக் காட்டக் குலவையும் தவறவில்லை.

"என்னடி பொண்டுகளா
தலைமேல என்னடி

தலைமேல தாழம்பூ
மடிமேல மல்லியப்பூ'' (குலவை)

(செல்லம்மாள், கல்லுக்காரன்பட்டி)

என்றும், மேலும்,

"தவளை குலவையிட
தாமரை பூமலர
தவளைக்குரல் கேட்டவுடனே நொண்டியய்யா
தவழ்ந்து நடை போட்டாகளே'' (குலவை)

இவ்வாறு, மலர்கள் மீது நாட்டுப்புற மக்களுக்கு உள்ள ஈடு பாட்டை எடுத்துக்காட்டுவதாக இவ்வகைப் பாடல்கள் உள்ளன. இது பண்டைத் தமிழ் மரபின் தொடர்ச்சியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட்டமாக ஆடுதல்

திமிலையுடைய பரதவர்கள் வெப்புடைய மதுவுண்டு தாளத்தோடு ஆடியதனைப் புறநானூறும்,

"தெண் கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தன் குரவைச் சீர் தூங்குந்து'' (புறம் 24:3-6)

என்கிறது. இக்குரவை, வரிக்கூத்துள் ஒன்றாகும். எழுவரேனும் எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோர்த்தும் மண்டிலமாக நின்றும் ஆடுவது இது. விரும்பியவரின் புகழ் பாடியாடுவது. இதே போன்று,

"மதுவே மதுக்குடத்தே
மதுக்கேத்த சும்மாட்டே
மதுவே இறக்கி வச்சி
மனம் குளிருவா மாரியம்மா'' (குலவை)

என்று முளைப்பாரிகளை மாரியம்மன் வாசலில் இறக்கி வைத்து அதனைச் சுற்றிப் பெண்கள் கும்மியடித்தும் குலவைப் பாடல்கள் பாடியும் மாரியம்மன் மனம் குளிர வேண்டுவது.

முடிவுரை

இவ்வாறு, குரவைக்கூத்து என்ற இலக்கிய வகையிலிருந்து மருவியதே இக்குலவைப் பாடல்கள். மண்ணும் மக்களும்

செழிப்படைந்து மங்களம் உண்டாகுவதே இப்பாடல்களின் முதன்மைச் சான்றுகளாகும். மனிதன் தன் உணர்வுகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஆராவரம் கலந்த மகிழ்ச்சியே இவ்வகை இலக்கியம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி,
புதுக்கோட்டை.

47

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் சேவையாட்டம் அன்றும் இன்றும்

சு. சுதா

முன்னுரை

நாட்டுப்புற ஆட்டக் கலைகள் பற்றிய ஆய்வுகளும் சேகரிப்பு களும் தமிழியல் ஆய்வில் மிகுந்த செல்வாக்கு பெற்று வருகின்றன. நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளுடன் தொடர்புடையனவாக விளங்கும் நாட்டுப்புற ஆட்டக் கலைகள் பற்றிய ஆய்வுகள் அவர்களுடைய பண்பாட்டு நிலைகளை அறிந்து கொள்வதற்கான வாயில்களாக விளங்குகின்றன.

இவ்வகையில் கம்பளத்தாருக்கு மட்டுமே உரிய ஆட்டக் கலைகளில் ஒன்றான சேவையாட்டம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாட்டமானது கம்பளத்து நாயக்கரின் வழிபாட்டுச் சடங்குகளோடு தொடர்பு உடையதாக அமைகின்றது. சேவையாட்டமானது பெருந்தெய்வ வழிபாட்டோடு தொடர்பு டையதாக உள்ளது. இவ்வினமக்கள் பெருந்தெய்வமாகத் திருமாலை வழிபடுகின்றனர். சேவையாட்டத்தில் திருமால் பற்றிய பாடல்கள் உள்ளன. சேவையாட்டப் பெயர்க்காரணம், ஆட்ட அமைப்பு முறை, ஆடப்படும் சூழல், வழிபாட்டுத் தொடர்பு, சேவையாட்ட பாடல்கள் ஆகியவை இங்கு விளக்கப்படுகின்றன.

பெயர்க்காரணம்

சேவையாட்டம் என்ற பெயர் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், சேவை என்ற சொல் இறைவனுக்கு சேவை செய்வதை குறிப்பதாகும். மகாவிஷ்ணு (திருமால்) சிவபெருமானின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்குவதற்காக ஆடிய ஆட்டம் சேவையாட்டம் என்று அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. திருமால் ஆடிய ஆட்டத்தைத் தற்போது தாங்கள் ஆடுவதாகக் கூறுகின்றனர்.

சேவையாட்டத்தினைச் சில பகுதிகளில் தாதராட்டம் என்று அழைக்கின்றனர். இந்த தாதர் ஆட்டமானது நாயக்கர் வழிபாட்டின் போது ஆடப்படுகின்றன. தாதர் என்ற சொல்லுக்கு அடியவர், தாசர் என்று பொருள் ஆகும். திருமாலின் அடியவராகிய தாசர்கள் (அ) தாதர்கள் திருமாலைப் போற்றிப்பாடும் ஆட்டமுறைக்குத் தாதராட்டம் என்ற பெயரினைச் சூட்டியுள்ளனர். இதனைப் பக்தியுணர்வுடன் ஆடுவர் என அரு.மருததுரை குறிப்பிடுகின்றார். தாதராட்டத்திற்கும் சேவையாட்டத்திற்கும் ஒப்பனையும் இசைக்கருவியும் பாடல்களும் ஒற்றுமையுடன் காணப்படுவதால் சேவையாட்டமே தாதராட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது.

சேர்வைகட்டி ஆடுதல் என்றும் குறிப்பிடுகின்றனர். சேர்வை கட்டி ஆடுதல் இதில் உடை வகைகள் கவர்ச்சியாக இருக்கும். தலையில் ஜரிகைத் தலைப்பாகை இருக்கும். பாகையின் பின்புறம் வால் தொங்கும். இடுப்பில் பாவாடை கட்டிக் கொள்வார். ஜாக்கெட்டும் போட்டுக் கொள்வார். காலில் சதங்கை மணி உண்டு. கையில் ஜால்ரா (அ) கஞ்சிரா (அ) சேர்வை வைத்துக் கொண்டு பாடிக்கொண்டே ஆடுவார். பாட்டுகள் தெலுங்கிலேயே இருக்கும் என்று சேர்வை கட்டி ஆடுதல் பற்றி செ.அன்னகாமு குறிப்பிடுகின்றார். சேர்வை கட்டி ஆடுதல், சேவையாட்டம் இவை இரண்டுமே ஒன்றினையே குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

சேவையாட்டம் அமைப்பு மற்றும் ஆடப்படும் முறை

சேவையாட்டம் மற்ற ஆட்டக் கலையைப் போலவே தனக்கென உரிய ஒரு வடிவத்தைக் கொண்டதாக இருக்கின்றது.

சேவையாட்டத்தில் எட்டுப்பேர் ஆடுகின்றனர். இவ்வாட்டமானது அரைவட்டத்தில் வட்டமாகச் சுற்றிச்சுற்றி ஆடப்படுகின்றது. எட்டு நபர்களில் தலைமையிடமாக இருப்பவர் கோமாளி (தொப்பைக் கூத்தாடி) வேடம் புனைந்து நடுவில் நின்று பாடல் பாடுகின்றார்.

மற்ற ஏழு பேரும் வட்ட வடிவில் கோமாளியைச் சுற்றி ஆடுகின்றார்கள். இவர்கள் அனைவரும் ஒன்று போல் ஆகின்றார்கள். இவர்கள் அனைவரும் சேவையாட்டத்தினைத் தொடங்குவதற்கு முன் தெய்வவழிபாடு சேவையாட்ட களத்திலேயே நடைபெறுகின்றது.

சேவையாட்டம் ஆடுகின்ற சேவைக்காரர்களைத் தேவரடியார்களாக நினைத்து தெய்வத்திற்குச் செய்யக்கூடிய வழிபாட்டுச் சடங்கை அவர்களுக்குச் செய்கிறார்கள். இந்த நேரத்தில் தேவதந்துமி இசைக்க சேவைக்காரர்கள் நிதானமாக உடலசைத்து ஆடுகின்றார்கள். இவ்வாட்டத்தை ஜீவகோல ஆட்டம் என்று அழைக்கின்றார்கள்.

ஒப்பனை

சேவையாட்டத்தில் ஆடுவோர் அதிகமாக ஒப்பனை செய்து கொள்கின்றனர். தேவதுந்துமி இசைப்பவர் ஒப்பனை செய்து கொள்வதில்லை. தேவதுந்துமி இசைப்பவர் சாதாரண சட்டையும் வேட்டியும் அணிந்திருப்பர். சேவையாட்டம் ஆடுபவர்களில் ஏழுபேர் ஒரேமாதியாக ஒப்பனை செய்திருப்பர். இவர்கள் இடுப்புக்குக் கீழே கரண்டைக்கால்வரை பாவாடை அணிந்திருப்பர். இடுப்புக்கு மேலே ஆண்கள் அணியும் சட்டை அணிந்திருப்பர்.

முகத்தில் இளஞ்சிவப்பில் அரிதாரம் பூசியிருப்பர். நெற்றியில் தென்கலை நாமம் இட்டிருப்பர். தலையில் வெண்மை நிறத்திலான உருமால் கட்டியிருப்பர். இவ்வுருமாலின் முன்பகுதியில் நாமம் போன்ற வடிவம் தோன்றுமாறு கண்டை என்று அழைக்கப்படுகின்ற துணிப் பட்டையினால் சுற்றியிருப்பர். இருதோள்களையும் இணைந்திருக்கின்ற முறையில் மாலை போன்று சிவப்பு (அ) மஞ்சள் நிறத்திலான துணிப் பட்டையை அணிந்திருப்பர். தப்பு என்ற இசைக் கருவியையும் கையில் பிடித்திருப்பர். இந்த ஏழுபேரில் இருந்து கோமாளி ஒப்பனையில் வேறுபட்டிருப்பார். இத்தகைய ஒப்பனை முறைகள் சேவையாட்டத்தில் காணப்படுகின்றன.

தாளக்கருவிகள்

சேவையாட்டம் ஆடப்படும்போது தாளக்கருவிகள் இசைக்கப் படுகின்றன. இந்த இசைக்கருவிகள் பாடலுக்கேற்ப இசைக்கப்படு கின்றன. சேவையாட்டத்தில் தேவதுந்துமி தலையாய தாளக் கருவியாக உள்ளது. தப்பு என்ற சேவைப் பலகை, சேகண்டி ஆகிய இசைக்கருவி களும் பயன்படுத்தப்படுகின்றன. தேவதுந்துமியின் இசைப்பு முறை களுக்கேற்பவே மற்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.

கம்பளத்தார் வழிபாட்டில் சேவையாட்டம்

கம்பளத்தாருக்கே உரிய ஆட்டங்களாகத் தேவராட்டம், சேவையாட்டம் ஆகிய இரண்டு ஆட்டங்கள் காணப்படுகின்றன. இவை இரண்டும் சடங்குகளோடு தொடர்புடையனவாக அமைகின்றன. தேவராட்டம் வாழ்க்கைச் சடங்குகளோடு தொடர்புடையது. சேவை யாட்டம் வழிபாட்டுச் சடங்குகளோடு தொடர்புடையது. மதுரை மாவட்டத்தில் உத்தமபாளைய வட்டாரத்தில் அடங்கியுள்ளது. தம்பிநாயக்கன்பட்டி, குலப்புரம், கரட்டுப்பட்டி, குண்டலநாயக்கன் பட்டி, இராசக்காபுரம், போடிநாயக்கனூர், எரசக்கநாயக்கனூர், புதுக்கோட்டை, உப்புக்கோட்டை ஆகிய ஊர்களில் சேவையாட்டம் ஆடப்படுகின்றது. இவ்வூர்களில் வழிபாட்டின்போது சேவையாட்டம் ஆடப்படுகின்றது. சேவையாட்டம் பெருந்தெய்வத்தோடு தொடர்புடையது. ஆண்டுதோறும் மாசி மாதம் மகாசிவராத்திரியன்று அரங்கநாதசாமி கோவில் திருவிழாவின்போது சேவையாட்டம் ஆடப்படுகின்றது. அரங்கநாதர் சுவாமி ஊர்வலம் வருவதற்கு முன்பு கோவிலுக்கு முன்பாக இவ்வாட்டம் ஆடப்படுகின்றது. ஊர்வலத்தின் போது சாமி செல்கின்ற பல்லக்கின் முன்பு சேவையாட்டம் ஆடிக் கொண்டு செல்வர். எனவே, சேவையாட்டம் என்பது வழிபாட்டுச் சடங்குகளோடு தொடர்புடையது. சேவையாட்டத்தில் தேவாரம் ஜமீன்தார் கம்பளத்தாரால் கடவுளுக்குச் சமமானவராக மதிக்கப்படு கின்றார். எனவே, அவரைப் புகழ்ந்து பாட்டுப் பாடுகின்றார். இந்த சேவையாட்டமானது திருமால் ஆட்டம் என்பதால் இந்த ஆட்டத்தினைப் புனிதமாகக் கருதுகிறார்கள். சென்றாயப்பெருமாள் வழிபாட்டின்போதும் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது.

சேவையாட்டப் பாடல்கள்

சேவையாட்டத்தில் பாடல்கள் பாடப்படுகின்றன. வழிபாட்டோடு தொடர்புடைய ஆட்டம் என்பதினால் பெரும்பாலும் கடவுளைப் பற்றிய பாடல்களே பாடப்படுகின்றன. உதாரணமாக அரங்கநாதர் சேவைப்பாட்டு குறித்து இங்கு காண்போம்:

அரங்கநாதர் சேவைப்பாட்டு

"திருவருளும் அயோத்தி தசரத ராமனே
சார்பாதம் தெண்டனிட்டார்
கார்முகில் விண்ணனே ஜானகி மணாளனே
காத்தருள வேண்டுமிப்போ

ஏது பிழையிருந்தாலும் எளியோனை இரட்சிக்க
ஏழைகளைக் காக்கவே வரவேண்டும் கஜா!
அண்டம் துயரம் தீர அயோத்தி நகரம் சென்று
தண்ட காருண்யம் சென்று சமுத்திரத்து மீது அணையாகக்கட்டி
கொண்டல் இராவணனை மாட்டிரும் கோதண்டம் கையில்தான்
கையிலேந்தி புஸ்பரி கண்ணா இராமா!
பொன்னடி கமலா போற்றி! போற்றி!!

இவ்வகையில் இறைவனை வாழ்த்திப்பாடும் சேவைப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

சேவையாட்டத்தின் இன்றைய நிலை

சேவையாட்டம் வழிபாட்டோடு தொடர்புடைய ஆட்டம் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. இவ்வாட்டம் கம்பளத்து நாயக்கர் மட்டுமே ஆடக்கூடியது. ஆனால், இன்றைய நிலையில் எல்லா இன மக்களுக்கும் கற்றுக் கொடுக்கக் கூடிய அளவில் பொதுமைப்படுத்தப் பட்டு வருகிறது. எனினும் தேவராட்டம் வளர்ச்சி பெற்ற அளவிற்கு சேவையாட்டமானது வளர்ச்சி பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். வழிபாட்டோடு தொடர்புடையதாக இருந்துவந்த இக்கலையானது தற்போது திருமணங்களிலும் மேடைகளிலும் ஒரு பொழுதுபோக்குக் கலையாக ஆடப்படுகின்றது. ஒப்பனை முறையிலும் பழைய ஒப்பனையிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆடைகள் எல்லாம் நாகரிகத்திற்கு ஏற்றவாறு மாறுபட்டு வருகின்றன. இந்த ஆட்டக்கலை யானது பொழுதுபோக்குக் கலையாக மாறிவருகின்றது. சேவையாட்ட மானது தற்போது பல கலைகளின் தாக்கத்தினால் ஆட்ட முறைகளில் வேறுபாடுகள் தோன்றிவருகின்றது. இவ்வாட்டமானது காலப்போக் கில் மறைந்துபோகும் அளவிற்கு ஈடுபாடு குறைந்து கொண்டே வருகின்றது. மற்ற ஆட்டக்கலைஞர்களுக்கு உள்ள மதிப்பும் மரியாதை யும் சேவையாட்டக் கலைஞர்களுக்கு இல்லை என்பதனால் இவ்வாட் டமானது ஆடப்படுவது குறைந்து கொண்டு வருகின்றது. இன்றைய நிலையில் சேவையாட்டம் ஒரு பொதுக்கலையாக மாறி வருகின்றது.

முடிவுரை

சேவையாட்டம் கம்பளத்தாருக்கு மட்டுமே உரிய ஒரு கலையாகும். இந்த ஆட்டக்கலையானது வழிபாட்டுச் சடங்குகளோடு தொடர்புடையதாக இருக்கின்றது. பெருந்தெய்வ வழிபாட்டின்போது இந்த சேவையாட்டம் ஆடப்படுகின்றது. சேவையாட்டம் பல

பகுதிகளில் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. தாதராட்டம் என்று சேவையாட்டத்தை அழைக்கின்றனர். சேவையாட்டம் திருமால் ஆடிய ஆட்டம் என்பதால் வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. திருமால் அணிந்த வேடம் கோமாளி வேடம். ஒப்பனையிலும் கோமாளி மற்றவர்களிடமிருந்து வேறுபட்டுள்ளார். இன்றைய நிலையில் சேவையாட்டம் நாகரிகத்தின் உந்துதலால் ஆட்டமுறைகள் வேறுபட்டு மாறி வருகின்றது.

◆

நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்தி கிராமம்,
திண்டுக்கல் - *624 302.*

48

பேய் பிடித்தலும் பேய் ஓட்டுதலும்

ம. செந்தாமரை

நாகரிகம் வளர்ச்சியடையாத காலங்களில் மனிதன் அறிவியல், தொழில் நுட்பம், இவற்றின் வளர்ச்சியைக் கண்டறிந்தான் இல்லை. இயற்கையைச் சார்ந்து வாழ்ந்தான். எல்லாவகையான நிகழ்வுகளுக்கும் இயற்கையையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. இயற்கையோடு மக்கள் வாழ்ந்த காலங்களில் சமயக் கருத்துகளும் சமயச் சார்புடைய வாழ்க்கை முறைகளும்கூட அவர்களுக்குப் பண்பாடும் நாகரிகமும் கொண்ட செம்மையான - முழுமையான வாழ்க்கைக்கு வழி வகுக்கவில்லை எனலாம்.

இயற்கையைச் சார்ந்து வாழ்ந்ததால் இயற்கை நிகழ்ச்சிகள் நன்மை பயப்பின் அவற்றை வரவேற்றனர். தீமைபயப்பின் அவற்றைக் கண்டு அஞ்சினர். தீமை பயக்கக்கூடிய செயல்களைக் கண்டு அஞ்சியவர்கள் அவை தங்கள் ஆற்றலுக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி இருப்பதாகக் கண்டு வியந்தனர்.

கடுமழை, வெள்ளம், பூகம்பம், பூமியதிர்ச்சி, இடி, மின்னல் இவை போன்ற அழிவைத்தரும் இயற்கை நிகழ்ச்சிகளும், மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடிய கொடிய நோய்களாகிய கொள்ளைநோய், அம்மை, பேதி, மனநோய் போன்றவை மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமை இருந்ததைக் கண்டு அஞ்சினான். எனவே, தீமை பயக்கும்

சக்திகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தான். அதன் விளைவாக அவற்றிற்குப் பரிகாரம் செய்து அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணினான். இயற்கையை வழிபடும்பொருட்டு பூசைகள் செய்து அவற்றிற்கு மிருகங்களையும் மனிதர்களையும் பலிகொடுத்தான்.

பேய் நம்பிக்கை

ஆவிகள், பேய்கள், எலும்புக்கூடுகள், ஏவல் பேய்கள் முதலிய வற்றைத் தங்களுக்குத் தீமை பயக்கும் சக்திகளாகக் கருதினர். இவ்வகை சக்திகளைக் கொண்டு நன்மை பயக்கவும், தீமை நேரவும் செய்தனர். இதன் காரணமாகப் பில்லி, சூனியம், ஏவல், மந்திரம் முதலிய மனிதர் களை அச்சப்படுத்தும் வித்தைகளும் தோன்றின. இவ்வித்தைகளைச் செய்பவர்களைச் சூனியக்காரன், சூனியக்காரி, பேயோட்டி, மந்திரவாதி போன்ற பெயர்களால் அழைத்தனர். அறிவியல் வளர்ச்சியுறாத காலத்தில் வாழ்ந்த மக்கள் இப்படிப்பட்ட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு எல்லாவிதமான பிணிகளும், நோய்களும் மனச்சீர்கேடுகளும் இயல்பிறந்த நிலைகளும் பேய்களாலும், ஆவிகளாலும், ஆவிகளை ஏவி விடுவதினாலும், சூனியக்காரிகளாலும், மந்திரவாதிகளாலும், ஏற்படுகின்றன என்று நம்பிவந்தனர். அறிவியல் வளர்ச்சியடைந்த இன்றைய காலத்திலும் மந்திர தந்திரச் செயல்களில் மக்களின் நம்பிக்கை சற்றும் குறைந்தபாடில்லை என்பதே கண்கூடு.

பேய்பிடித்தல்

இயற்கையோடு ஒன்றிய மக்கள் இயற்கையின் அச்சுறுத்தலைப் பேய்பிடித்தல் என நம்பினர். நன்மைதரும் இயற்கை நிகழ்ச்சிகள் நல்ல பேய்களாலும், தீமைதரும் இயற்கை சார்ந்த நிகழ்ச்சிகள் தீய பேய்களாலும் ஏற்படுகின்றன என்று நம்பினர். பேய் பிடித்த ஒருவரிடமிருந்து நல்ல செயல்கள் தென்பட்டால், அவை நல்லபேய் என்றும், தீமை செய்யக்கூடிய அல்லது இழி (மாறான) செயல்களைச் செய்யக் கூடியவையாக இருந்தால் தீமை தரும் பேய் என்றும் நம்பினர்.

நாகரிக வளர்ச்சியில் பேய் பிடித்தல் என்ற ஒரு செயல் இல்லா விட்டாலும், பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்களின் மிகை நம்பிக்கைகள் இன்றளவும் மக்கள் மத்தியில் மாறாமல் இருந்து வருகின்றன. எவ்வளவுதான் அறிவியல் வளர்ச்சியடைந்து இருந்தாலும் இன்றைக்கும் பேயோட்டிகளும், பேயோட்டுதலும் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன.

பேய்பிடித்தல்பற்றி ஒவ்வொரு பண்பாட்டிலும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. இந்தியாவில் இக்கருத்து நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றது. அறிவியலின் வளர்ச்சி மருத்துவத் துறையில் எத்தகைய மாற்றங்களைச் செய்தாலும் பேய் பிடித்தல் பற்றிய நம்பிக்கை இன்றும் குறைந்தபாடில்லை. பேய்பிடித்த லாகிய நம்பிக்கையும், பேய் பிடித்தலும் ஆண்களைவிடப் பெண் களுக்கே அதிகம் காணப்படுகின்றது. ஆண்களைப் பேய்பிடித்தவன் என்றோ பேய் என்றோ கூறுவது கிடையாது. மாறாகப் பெண்களைப் பேய் பிடித்தலும், பெண்களை பேய், முனி, கொள்ளிவாய் பிசாசு என்றும் அவர்களின் செயல்பாடுகளை வைத்துக் கூறுகின்ற மரபு காணப்படுகின்றது.

பேய்பிடித்தவர்களின் செயல்

பேய் பிடித்தவர்களின் செயல்பாடுகளைக் கொண்டு அவர்களிடம் இருப்பது, பேய், பிசாசு, முனி, சாமி, தெய்வம் என்றெல்லாம் கூறுகின்றனர். பேய் பிடித்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பதை வைத்து அவர்களிடம் இருப்பது நல்ல பேய் அதாவது, தெய்வம் உதித்துள்ளது என்றும் அது நன்மை செய்யக்கூடியது என்றும் தெய்வம், சாமி, காளி, கருப்பன், நொண்டிமுனி அல்லது தன்முன்னோர்கள் தெய்வமாக வந்துள்ளனர் என்றும் நம்புகின்றனர். பேய்பிடித்தவர்களின் இயல்பான செயலுக்கு மாறுபட்டு நடந்து கொண்டால் அவர்களிடம் இருப்பது பேய், பிசாசு, அது உயிரை எடுத்துவிடும் என்று எண்ணி அவற்றை அவர்களிடமிருந்து விரட்டி அடிக்க முயற்சி செய்கின்றனர்.

நன்மை செய்யும் பேய் என்றும், சாமி என்றும் கூறப்படுபவர்கள், மருளாடி, சாமியாடி என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒருவரின் கடந்த காலம், எதிர்காலம் சமயங்கள் தொடர்பான செய்திகளையும், இறையியலையும்பற்றி அவர்கள் பேசுவதால் அவர்கள் கூறுவது தெய்வ வாக்கு, சாமி வாக்கு, அருள் வாக்கு என்று கூறுகின்றனர். அவ்வாறு அருள்வாக்குக் கூறும்போது நடைபெறும் நிகழ்வுகள் யாவையும் அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். சில இடங்களில் பெண்களும் அருள்வாக்கு கூறுகின்றனர்.

பேயோட்டுதல்

பேயோட்டுதல் பண்பு அனைத்துச் சமயங்களிலும் காணப்பெறு கின்றன. ஆரம்ப காலங்களில் சமயக் குருமார்களே சமயம் சார்ந்த

மந்திரங்களைச் சொல்லி பேயோட்டியுள்ளனர். இன்றைய காலங்களிலும் பேயோட்டுதலாகிய நம்பிக்கை மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது.

உடல்நலக்குறைவு ஏற்படுகின்றபோது மருத்துவம் சார்ந்த அனைத்து நிலைகளிலும் நோய் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்ட பின்னர் ஒருவருக்கு உடல் சீராகவில்லை என்றால் அடுத்த மருத்துவம் பேயோட்டுதல்தான். அறிவியல் மருத்துவம் குணமடையச் செய்யமுடியாத நோய்க்கு மருந்தாக பூசாரிகளும், மந்திரவாதிகளும், பேயோட்டிகளும் திகழ்கின்றனர்.

பேய் பிடித்தல் என்பதை உளவியல் சார்ந்து அணுகும்போது பேய் பிடித்திருக்கும் பெண்ணின் மன அழுத்தமே அவ்வாறு வெளிப்படுவதாகக் கூறுவர். ஆதிக்கச் சமூகத்தால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளே மன அழுத்தம் ஏற்படுத்துவனவாக உள்ளன. நாட்டுப்புற மக்களோ இப்பிரச்சினையைப் பின்தள்ளிவிட்டு 'பேய்' தான் இதற்குக் காரணம் என்கின்றனர்.

பேய் பிடித்திருக்கும் பெண்ணைப் பல்வேறு கொடுமைகள் செய்துதான் பேயோட்டி அவளிடம் இருக்கும் பேயை ஓட்டி வருகின்றார். செருப்பால் அடித்தல், விளக்குமாற்றால் அடித்தல், சாணித் தண்ணீரைக் கரைத்துக் கொடுத்தல் என்பதாகப் பல்வேறு வகையாகப் பேய் ஓட்டப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக ஒரு பெண்ணிடம் பேயாக வந்திருப்பவன் என்ன கேட்கிறானோ அதைக் கொடுத்துப் பேயை விரட்டிவிடும் பழக்கமே மாறாமல் உள்ளது. இதனை உற்றுக் கவனிக்கும் பொழுது பெண்களின் மனதில் ஒளிந்து கிடக்கும் நிராசைகளின் / சொல்ல முடியா உணர்வுகளின் வெளிப்பாடே பேயாக அவர்களை ஆட்கொள்கிறது எனலாம். ஆனால், சமூகத்தில் காணப்படும் மூட நம்பிக்கைகளும் எண்ணங்களும் ஒழியும்வரை பேய்பிடிப்பதும் பேய் ஓட்டுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 24.

49

சாமியாட்டம்

முனைவர் ஆ. செந்தாமரைக்கன்னி

திருக்கோயில்கள் ஒரு வழிபாட்டுக் கூடமாக மட்டுமல்ல, அவை சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும், கலைகள் வளரும் இடங்களாகவும் திகழ்ந்திருக்கின்றன. கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் கடவுளின் மேல் நம்பிக்கை இருப்பது போலவே அங்குள்ள பூசாரிமீதும் நம்பிக்கை உள்ளது. எனவேதான், அவர்கள் அருள் வந்து ஆடும்போது கூறும் செய்திகள் நமக்கு நன்மை தருவதாக, உண்மை உடையதாக இறைவனே மாற்றுரு கொண்டு வந்து ஆடுவதாக எண்ணி வணங்கி வாழ்ந்து வந்தனர்; வருகின்றனர் என்றால் அதுமிகையாகாது. அந்த வகையில் அவர்கள் ஆடும் சாமியாட்டம் பற்றி ஈண்டு காண்போம்.

சாமியாடுதல்

"சாமியாட்டம்" அல்லது "சாமியாடுதல்" என்பது பூசாரிகளும் சாமியாடிகளும் தெய்வமேறிய நிலையில் குலதெய்வ வழிபாட்டின் போதோ பொதுத் தெய்வ வழிபாட்டின்போதோ சாமி ஆடுவர். ஆயின் குலதெய்வ வழிபாட்டின்போது ஆடும் சாமியாடலே சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

பண்டைக் காலத்தில் முருக வழிபாட்டில் நாட்டுப்புற இசையுடன்கூடிய சாமியாட்டம் இடம் பெற்றதை வெறியாடல் பற்றி

திருமுருகாற்றுப்படையும், வேட்டுவர்களின் தெய்வ வழிபாட்டின் போது சாலினி தெய்வமேறியாடிக் குறிசொன்னது பற்றிச் சிலம்பும் குறிப்பிடுகின்றன.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் "வெறியாட்டினை இக்கால சாமியாட்டத்துடன் ஒப்பிடலாம். வெறியாடல் என்பது முருகக் கடவுள் பொருட்டு பலியிட்டு அக்கடவுள் ஆவேசிக்க ஆடும் கூத்தாகும்.

தலைவி தலைவன் மீது மையல் கொண்டு உடல் வேறுபாடு அடைந்ததை உணராத அவளது தாய் அச்சமுற்று வேலனை (பூசாரி) அழைத்து வெறியாட்டுச் சடங்குக்கு ஏற்பாடு செய்வாள். வேலன் மீது ஏறிய தெய்வம் மகளின் உடல் வேறுபாட்டுக்கான காரணத்தைச் சொல்லிவிடும் என்று தாய் நம்புவாள். இதற்குச் சான்றாக அகநானூற்றில்,

"படியோர் தேய்த்த பல்புகழ்த் தடத்தை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற
களநன் கிளைத்துக் கண்ணி கூட்டி
வனநகர் சிலம்பப் பாடிப்பலி கொடுத்த
துருவிச் செந்தினை குருதியோடு தூஉய்
முருகாற்றுப்படுத்த...." (அகநானூறு)

தலைவியின் உடல் வேறுபாடு கண்டு வருந்திய தாயின் நிலமை யினைத் தோழி,

"விறல்இழை நிகழ்த்த வீவருங் கடுநோய்
அகளொ் ஆங்கண் அரியுநர் விரையும்
பரவியும் தொழுதும் விரவுமலர் தூவும்
வேறுபல் உருவின் கடவுட் பேணி
நறையும் விறையும்ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதீ"

(குறிஞ்சிப்பாட்டு 3-8)

வேலன் நடத்திய வெறியாட்டுச் சடங்கைப்போல இன்று பேயோட்டலில் கோடாங்கிகள் நிகழ்த்துகின்றனர். இதேபோன்று தெய்வத்திற்குச் செய்யும் வெறி என்னும் வழிபாட்டினை அறிந்த வேலனென்பான் தன் வேந்தனுக்கு வெற்றி வேண்டித் தெய்வத்தைப் பரவி நிற்பான். இதனை,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெளியாட் டயர்ந்த காந்தளும்''

(தொல் - புறத்திணை)

என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு, சாமியாடுதல் பற்றிய நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன.

சாமியாடற்குரியோர்

ஆண், பெண் இருபாலரும் சாமியாட்டத்தில் கலந்து கொள்கின்றனர். குலதெய்வ வழிபாட்டின்போதும் பொதுதெய்வ வழிபாட்டின்போதும் பூசாரியுடன் சேர்ந்து 21 பேர் சாமியாடுகின்றனர். பூசாரி முதன்மை தெய்வத்தின் அருள் பெற்றவராகக் கருதப்படுகிறார். ஏனையோர் துணைதெய்வம் மற்றும் காவல் தெய்வங்களின் அருள் பெற்றவர்களாகவும் சாமியாடுகின்றனர். குலதெய்வ வழிபாடுகளில் சாமியாடுவதற்கான உரிமை பெற்றவர்கள் மட்டுமே சாமியாட முடியும். அம்மன் போன்ற பொதுதெய்வ வழிபாடுகளில் அனைவரும் சாமியாடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். சாமியாடுவதற்கு மக்கள் மத்தியில் அதிக அளவு நம்பிக்கையும் மதிப்பும் காணப்படுகிறது. இதனால் அம்மன் வழிபாட்டில் பெண்களே அதிகம் சாமியாடுகின்றனர்.

அம்மன் வழிபாட்டுச் சடங்கில் பூசாரி அம்மனின் அருள் பெற்றுக் காவல் தெய்வங்களின் அருளும் பெற, ஒன்று அல்லது இருவர் ஆடுகின்றனர். இவ்வழிபாட்டில் ஆடுகின்ற பெண்கள் அனைவர் மீதும் அம்மன் குடிவந்துள்ளார் என மக்கள் நம்புகின்றனர். சாமியாடுவதற்கு அனைவரும் அனுமதிக்கப்பட்டாலும் பூசாரி கேட்கும் கேள்விகளுக்குப் புதிதாக அருள் வந்து ஆடுபவர்கள் பதில் உரைக்க வேண்டும். அவ்வாறு சரியான பதில் உரைத்து விட்டால், அவர்களை அம்மனின் அருள் பெற்று ஆட அனுமதிப்பது பொதுமரபாக உள்ளது.

குல தெய்வ வழிபாடுகளில் சாமியாடும் உரிமைகள் மரபு வழியாக வளர்ந்து தந்தை, மகன், பேரன் என்றவாறு தொடர்கிறது. பூசாரி குடும்பத்தில் உள்ள மூத்த ஆண்மகன் அல்லது குடும்பத்தில் வாரிசு இல்லாத சூழலில் பூசாரியின் உடன் பிறந்தோர் யாராவது ஒருவர் சாமியாடல் அல்லது பூசாரியின் உரிமையினைப் பெறுபவராக இருக்கின்றார்.

சாமியாடுவோரின் ஆடை, அணிகலன்கள், கருவிகள்

சாமியாடுவோருக்கான ஆடைகள் பல்வேறு வண்ணங்களில் அமைந்துள்ளன. தலைப்பாகை மற்றும் இடுப்பில் அணியும் கச்சை

ஆகியனவும் உள்ளன. பெண் சாமியாடிகளுக்கென சேலைகள் மற்றும் “சாமிசேலை” என்ற பெயரில் ஆண்டுதோறும் வழிபாட்டினர் எடுத்துக் கொடுக்கின்றனர். அணிகலன்களாக வெள்ளி, தங்கம், இரும்புக் காப்புகளும், மணிகள், சலங்கைககளும் அமைகின்றன. கருவிகளாக பிரம்பு, சாட்டை, மரத்தாலான தடிகள், அரிவாள், பெரிய வாள்கள், சிறிய வாள்கள் போன்றவை உள்ளன.

சாமியாடுவோர் வகை

தெய்வத்திற்குரிய ஆயுதங்களைக் கைகளில் வைத்துக் கொண்டு ஆடுவோர்.

பெட்டியினைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடுவோர்.

உடுக்கை அடித்துக் கொண்டு ஆடுவோர்.

அரிவாள் மீது நின்றுஆடுவோர்.

ஆணிச் செருப்பை அணிந்து கொண்டு ஆடுவோர்.

இராக்காச்சி, பேச்சியம்மன் என்ற பெண் தெய்வங்களுக்காக தலையை விரித்துப் போட்டு கொண்டு ஆடுவோர்.

கொட்டு, மத்தளம், உருமி, பம்பை, தப்பு போன்ற இசைக்கருவி களால் எழும் இசைக்கு ஏற்ப ஆடுவோர்.

திருவிழாக்கூட்டத்தில் ஏற்படும் ஆரவாரத்தினாலும் மனதில் ஏற்படும் கிளர்ச்சியினாலும் ஆடுவோர் என வகைப்படுத்தலாம்.

சாமியாட்ட நிகழ்வுகள்

சாமி இறங்குதல், வாக்கு சொல்லுதல், சாமிகொட்டு, பூக்குழி இறங்குதல், என்ற வகையில் சாமியாட்ட நிகழ்வுகளைக் காண்போம்.

சாமி இறங்குதல்

சாமியாடுதல் சடங்கில் துவக்கத்தினை சாமி இறங்குதல் என்கின்றனர். பூசாரி சாமியாடுவோர்களுக்கு திருநீறு அணிவித்து, அவர்களின்மேல் அவர்கள் வழிபடும் தெய்வங்கள் வருமாறு செய்து ஆடவைத்தலைச் “சாமி இறங்குதல்” என்பர். இவர்கள்மேலே சாமி புகுந்து ஆடுவதால் இந்த சாமியாடிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் கடவுளாக எண்ணப்படுகின்றனர்.

வாக்குச் சொல்லுதல்

சாமியாட்டம் நடைபெறுகையில் அவர்கள் காலில் மக்கள் விழுந்து, தங்கள் குறைகளைக் கூறி அதை நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகின்றனர். அதற்கு சாமியாடிகள் கூறும் பதிலே வாக்கு சொல்லுதலாக மலர்ந்தது. இதை வாக்குக் கொடுப்பது என்றனர். மேலும், ஆவேசமுற்று ஆடும் சாமிகளை பூசாரி திருநீறு அணிவித்து கட்டுப்படுத்துகின்றார். இதன்பின் மக்கள் இச்சாமியாடிகளின் காலில் விழுந்து அருள்வாக்கு கேட்கின்றனர். பேய் பிடித்தவர்களுக்கும், சாமியாடிப் பேயினை ஓட்டிவிடுகின்றனர்.

சாமிகொட்டு

சாமியாட்டத்துக்கென இசைக்கப்படும் இசையினையே சாமிக்கொட்டு என்பர். இதில் உறுமி, கொட்டு, மத்தளம் போன்றவை சிறப்பிடம் பெறுகின்றன. மேலும், பம்பையும், தப்பும் பயன்படுத்தப் படுகின்றது. ஆரவாரமான சூழலில் மனம் தூண்டப்பட்டவர்களும் திருவிழாக்களைக் காணவந்தோர்களும் இந்த இசையினைக் கேட்டு அருள் வந்ததுபோல ஆடுவர். இதே போன்று திருவிழாவில் மட்டுமின்றி வழிபாட்டுச் சடங்குகளிலும் இவ்விசை கேட்டு ஆடுகின்றனர்.

பூக்குழி இறங்குதல்

நெருப்புக் குண்டத்தைப் "பூக்குழி" என்பர். எனவேதான், தீயினை மிதிக்கும் வழிபாட்டினை பூக்குழி இறங்குதல் என்கின்றனர். பூக்குழி இறங்குவதற்குமுன் நேர்த்திக்கடன் செய்தவர்கள் விரதம் இருந்து இறைவனை வணங்குவர். பின் பூக்குழியில் அதாவது, தீ மிதித்தலுக்குத் தயாரான நெருப்பில் உப்பு, சாம்பிராணி, ஆகியவை தூவித் தயாராக உள்ள நெருப்பில் இறங்குவர். இறங்குவதற்கு முன் தீ மிதித்தலுக்குத் தயாரான ஆண், பெண் அனைவர் தலையிலும் மஞ்சள் தண்ணீர் ஊற்றி பெண்கள் குலவையிட்டுப் பாட அருள்வந்து அனைவரும் பூக்குழியில் இறங்கி நடக்க ஆரம்பித்துவிடுவர்.

இந்த தீமிதி வழிபாட்டினை அறிஞர்கள் தூய்மைப் படுத்தும் சடங்காக எண்ணி மகிழ்கின்றனர். நெருப்பைத் தூய்மையின் அடையாளமாகப் பழந்தமிழ் மக்கள் எண்ணினர். தூய்மை அடைய தீ மிதிக்க வேண்டும் என்பது சமுதாயக் கோட்பாடாக இருந்துள்ளது என்று கூறுவாரும் உளர். இந்த தீமிதி சடங்கினை ஆராய்ந்த ஜெர்மன் விஞ்ஞானியான பிரித்பர்கார்கர் பௌதிக விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்று கூறியுள்ளார்.

முடிவுரை

சாமியாடுதல் சடங்கு என்பது இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வரும் ஒரு சடங்கு. இச்சடங்கிற்குரியவர்களை மக்கள் மதிப்பதும் சமூகத்தவர்களை இதுபோன்ற வழிபாட்டுக் காலங்களில் ஒன்று சேரவைத்து ஒற்றுமை ஏற்பட இது வழிவகுக்கின்றது. பல்வேறு சூழலில் பலவிதமான காரணங்களால் கருத்து வேறுபட்டவர்களும் ஒன்று கூடி ஒருமித்து மனவேறுபாடுகளை மறப்பது என்பது மகிழ்ச்சிக்குரியது. இருப்பினும், போலித்தன்மையோடு சாமியாடுவர்கள் இதை ஒரு தொழிலாகக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர். இதை மறைமுக மாகவும் வெளிப்படையாகவும் ஊடகங்களும் சில சான்றோர்களும் உணர்த்துகின்றனர். அதை உணர்ந்து நாம் அனைவரும் கருத்து ஒருமித்து விழிப்புடன் செயல்படுவோமாக!

◆

விரிவுரையாளர்,
ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி,
புதுக்கோட்டை.

50

கும்மி : அன்றும் இன்றும்

க. செந்தில்குமார்

முன்னுரை

"கலை என்பது இயல்பாகத் தோன்றிய பொருளை இயற்கை யாகவும் மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளைக் கலையாகவும் அல்லது கலைப்படைப்பாகவும் கருதலாம்."[1]

கலையில் நிகழ்த்துக்கலை, நிகழ்த்தாக்கலை என்ற இரு பகுதிகள் உள்ளன. நிகழ்த்துக் கலையின் ஒரு பிரிவான கும்மி என்பதைப் பற்றியும் கும்மி அடிக்கும் முறை பற்றியும், கும்மியின் வரலாறு பற்றியும் மங்கல்ரேவு என்னும் கிராமத்தில் குறிப்பிட்ட இனத்தவர் மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது அடிக்கும் 'கும்மி' அன்றிலிருந்து இன்று எப்படி மாறிவந்துள்ளது என்பதைக் களஆய்வின் அடிப்படையில் இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது.

கும்மி விளக்கம்

இந்த ஆட்டத்தைச் சுட்டுவதற்கு 'கும்மி' (கும்மி கொட்டுதல்) என்ற சொல் 'கை கொட்டுதல்' என்று பொருள்படும். கற்றவர் களிடையே பரவலாகக் காணப்படுகிறது. கும்முதல் என்ற சொல்லோடு தொடர்புடையது இது. 'கொம்மி கொட்டுதல்' என்ற சொல் கும்மி இலக்கியங்களில் பயன்படுத்தப்படுகிறது.

பெண்கள் வயது வேறுபாடில்லாமல் ஒருங்கிணைந்து ஒருவர் பாட ஏனையோர் பின்பாடக் கைகுவித்தடித்துக் கொண்டே வட்டமாகச் சுற்றிவந்து ஆடும் ஆட்டத்தினைக் கும்மி என்று சுட்டுகின்றனர். கும்மிப்பாடல் பற்றிப் பாரதி,

"வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டு"[2]

என்று கும்மியாட்டத்தைக் குறிப்பிடுகின்றார்.

கும்மி என்பது வட்டமாக நடந்துகொண்டு கையைத் தட்டிக் கொண்டு ஆடப்படுகிறது.

பிற கலைகளுடன் தொடர்பு

'கொம்மாய்' என்ற சொல்லிருந்து கும்மி தோன்றியிருக்க வேண்டும். இவ்வாட்டத்தைக் குஜராத் 'கர்பா' நடனத்துடனும் இராஜஸ்தான் 'கும்மார்' ஆடலுடனும் கேரள 'கைகொட்டிக்களி யுடனும்' தொடர்பு படுத்துவர்.[3] இதன் மூலம் கும்மிக்குப் பிற கலை களுடன் தொடர்பு இருப்பது புலப்படுகிறது.

கும்மியடிக்கும் முறை பற்றி வி. அசோக்குமார் குறிப்பிடுகையில்,

"மெல்ல நடந்து நடந்து அடித்தல்
நடந்து நின்று அடித்தல்
குனிந்து நிமிந்து அடித்தல்
குதித்துக் குதித்து அடித்தல்
தன் கையைக் கொட்டி அடித்தல்
எதிரில் உள்ளவர்கள் கைகளுடன் கொட்டியடித்தல்.[4]

ஆகிய ஆறு நிலைகளில் கும்மியடிக்கப்படுகிறது என்கிறார்.

கும்மியைக் குனிந்து நிமிந்து வட்டமாக நடந்துசென்று அடித்துப் பாடுகின்றனர்.

வரலாற்றுக் குறிப்புகள்

கும்மி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'குரவை' ஆட்டம் கும்மியோடு தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் 'கொம்மை' என்ற சொல் 'திரட்சி' அல்லது 'பருத்த' என்னும் பொருளில் வருகிறது.[5]

பழமொழி

"நோற்ற பெருமையுடையாருங் கூற்றம்
புறங் கொம்மை கொட்டினார் இல்.[6]

என்று வருமிடத்தில் 'கொம்மை' என்ற சொல் கைகளைக் குவித்துக் கொட்டுதல் என்ற பொருளைத் தருகிறது.

சீவக சிந்தாமணியில்

குஞ்சரம் கூற்றொடு கொம்மை கொட்டுவர்[7] என்று கூறும் இடத்திலும் முன்னர் குறிப்பிட்ட பொருளிலேயே கும்மி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

கால மாற்றத்தில் கும்மி

கால மாற்றத்தால் கும்மி பல்வேறு மாற்றங்கொண்டே இங்கு வந்துள்ளது. வைகாசியில் கொண்டாடப்படும் மாரியம்மன் திருவிழாவின்போது முளைப்பாரி எடுத்துக் கும்மியடிக்கின்றனர்.

முளைப்பாரி வளர்க்கும் வீட்டின்முன் ஆறு நாளும் கோவிலில் ஒருநாளும் கும்மியடித்து ஆடப்படுகிறது. இந்தக் கும்மியாட்டத்தில் பல்வேறு கருத்துகளைப் பற்றிய பாடலைப் பாடிக் கும்மியடித்து ஆடுகின்றனர்.

விநாயகருடன் துவங்குதல்

எந்த ஒரு மங்கல நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தாலும் விநாயகரை வணங்கியே மக்கள் அந்நிகழ்ச்சியை ஆரம்பிக்கின்றனர். அதுபோலக் கும்மி அடிக்க ஆரம்பிக்கும் பொழுது முதலில் விநாயகரை வணங்கியே ஆரம்பிக்கின்றனர்.

"முந்தி முந்தி விநாயகரே
முருகா நல்ல சரஸ்வதியே
பாட்டில் உள்ள சரஸ்வதியே
என் நாவில் வந்து உதிக்க வேணும்"

என்று விநாயகரை வணங்கி ஆரம்பித்துத் தொடர்ந்து முளைப்பாரியின் படிநிலைகளைப் பாடுகின்றனர்.

"வண்ணக் கொட்டான் சின்னக் கொட்டான்
வகை வகையா நாருக் கொட்டான்
நாருக் கொட்டான் கையிலெடுத்து வாங்க"

என்றும்,

"ஆட்டாந் தொழுத் திறந்து ஆட்டெருவு ரெண்டெடுத்து
மாட்டாந் தொழுத் திறந்து மாட்டெருவு ரெண்டெடுத்து
வட்ட வட்ட ஓடுடச்சு திட்டமுள்ள முளைப் பருவி"

என்றும் முளைப்பாரி பருவி வளர்ப்பது வரையில் வளர்ந்து கொண்டே செல்கிறது.

காந்தி மகான்

அகிம்சையையும் அன்பையும் போதித்த காந்தி பற்றிய பாடலும் இக்கும்மிப்பாட்டிலே ஆடுகின்றனர்.

"உலகம் தந்தையார் உத்தம காந்திக்கு
உண்ம சிசியர் வினவாசி
தங்கமயமான சோதியடி
அவர் பங்கமில்லாத மன நீதியடி"

என்ற இப்பாடலில் காந்தியைப் புகழ்ந்து பாடுவது வெளிப்படு கிறது.

ஊர்வலம்

கும்மியின் இறுதியில் ஊரைப் பாடுவது மட்டுமல்லாமல் பாடியோருக்கு மாரியம்மன் பரிசு கொடுப்பதாகவும் பாடி முடிப்பார்கள்.

"ஆன வந்தெரங்கவே ஆயிரங்கல் நட்டவ
சேன வந்தெரங்கவே மங்கல்ரேவ் செல்வம் பொழியவே"

என்றும்,

"ஆறா சுழி பாஞ்சு வருகுதாம் காவிரி
ஆராறு அடச்சாலும் அடைபடா காவிரி
பள்ளமே பள்ளன் தெய்வேந்திரன் குடும்பம்
கொட்டுட்டு மண்ணெடுத்து கொளக்கரையின் போட்டா
தாம் போயி வெள்ளம் தனியே அடைபட்டுச்சாம்"

என்று கும்மியில் தம் இனத்தைப் புகழ்ந்து பாடவும் தவற வில்லை. "இத்தனையும் படிச்சவளுக்கு என்னா தருவமென்று எண்ணினா மாரியம்மா உடையாத தேங்காயும் ஒரு மாலையும் கழுத்தில் போட்டாள்" என்கிறார்கள்.

சதுரகிரி மகாலிங்கம்

மும்முதற் கடவுளருள் முதற் கடவுளாகத் திகழும் மகாலிங்கம் வீற்றிருக்கும் சதுரகிரி மலையின் வளத்தைப் பற்றியும் பாடுகின்றனர்.

சதுரகிரி' மலையில்தான் ஔவையாருக்கு அதியமான் கொடுத்த நெல்லிகனி பறித்ததாகவும் நாட்டுப்புறப் பாடல்களில் கூறப்படுகிறது.

"அம்சவள்ளி கனகவள்ளி அம்மா வேதவள்ளி
ஆனந்த வள்ளியிடம் அமந்திருக்கும் ஐயா
ஆவலுடன் அடிபணிவோம் அருள்புவாய் மெய்யா
சதுரகிரி போவமடி தங்கநிறப் பெண்ணே
சங்கரனார் பாதமலர் தாள்பணிவோம் மானே''

என்று பாடியது மட்டுமல்லாமல்,

"சிய்யாங்கடி பூரான் கடி செழித்தபாம்பு விசத்தால்
சென்றுவோடும் சமத்தா
தீத்து வைப்பார் மகாலிங்கம் சஞ்சீவியார் சடைத்தா
வகுத்தவலி கொன்னிரும்ம வந்தவலியெல்லாம்
சில வாந்தி பேதியெல்லாம்
மலையிலுள்ள மூலிகையால் மனப்பிணிகளும் தீரும்''

என்று சதுரகிரி மலையையும் அதிலுள்ள மூலிகையின் குணாதிசயத்தினையும் பாடுகின்றனர்.

கும்மி இன்று

நம் மக்களிடையே இன்று கும்மியடிக்கும் வழக்கம் குறைந்து வருகிறது. விநாயகரைப் பாடுவதுடன் துவங்கி விதை வாங்குவது முதல் முளை பருவி கலக்குதல்வரை பாடலாகப் பாடப்படுகிறது. முளைப்பாரி வளர்ப்பவரின் வீட்டின்முன் பாடுதல் தற்போது இல்லை. முளைபாரியைக் கரகத்துடன் கோயிலிற்குக் கொண்டு சென்று கோயிலில் பாடுகின்றனர்.

"சதுரகி மலை வளங்கள் சாற்றுகின்றேன் நானே
தினம் சரணம் புரிவேனே''

என்று சிறுகுறிப்புபோலப் பாடுகின்றனர். அம்மன் அருளால் கிடைக்காதது எல்லாம் கிடைக்கும் என்றும் பாடுகின்றனர்.

"கன்னி வந்து நீர் தெளிப்பாள்
கல்யாணம் கூடுமென்று
மலடி வந்து நீர் தெளிப்பாள்
மைந்தனைப் பெற்றெடுப்பாள்
இறுகி வந்து நீர் தெளிப்பாள்
இந்திரனைப் பெற்றெடுப்பாள்''

என்று பெண்கள் தெய்வ பக்தியால் பெறக்கூடிய பெறும் பேற்றினை மேற்கூறிய பாடல் எடுத்துரைக்கிறது.

முடிவு

நாட்டுபுறக் கலைகளில் ஒன்றான 'கும்மி' மங்கல்ரேவு கிராமத்தில் எப்படி அன்றிலிருந்து இன்றுவரை மாறி வந்துள்ளது என்பதைப் பற்றி இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது. அன்று பாடிய சதுரகிரி மகாலிங்கம் பற்றியும் காந்திமகான் பற்றியும் சாதி பற்றியும் இன்று மாறியும் குறைந்தும் வந்துள்ளதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

சான்றெண் விளக்கம்

1. *வாழ்வியற்களஞ்சியம், பக் - 861.*
2. *முனைவர் ஆறு. இராமநாதன், பக் - 168*
3. *டாக்டர் சு. சக்திவேல், பக் -174*
4. *முனைவர் ஆறு. இராமநாதன், பக் - 173*
5. *மேலது, பக் -174*
6. *மேலது, பக் -174*
7. *மேலது, பக் -174*

◆

நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
கிராமியப்பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

51
நாட்டுப்புற கலைகளில் தெருக்கூத்து

முனைவர் த. செந்தில் ஜோதி

தமிழகத்தில் காணப்படும் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று தெருக்கூத்து. தெருக்கூத்து விழாக்காலங்களில் நடைபெறுவதாகும். எந்த ஒரு விழாவும் கூத்து இல்லாமல் முழுமை அடைந்தது இல்லை. இந்தத் தெருக்கூத்து பெரும்பாலும் படிப்பறிவு இல்லாத பாமரர் களிடம் பிரசித்திப்பெற்றுள்ளது. தெருக்கூத்து கோவில் சார்புடைய ஒருகலையாகும். அம்மன்கோவில் திருவிழ்ாவினையொட்டியே தெருக்கூத்து பெரும்பாலும் நடத்தப்படுகிறது. "தெருக்கூத்துத் தெருவில் ஆடப்பட்டக்கூத்து என்பதனால் தெருக்கூத்து என்றாயிற்று"[1] இதைப் பொழுதுபோக்காகப் பழங்கால மக்கள் கொண்டிருந்தனர். தெருக்களில் மட்டுமே ஆடப்பட்டு வந்த கூத்து பின்னர் ஊர்ப் பொது இடத்தில் நடத்தப்பட்டது. எனினும் நடிக்கப்படும் இடம் காரணமாக தெருக்கூத்து என்று அழைக்கப்படுகிறது. கிராமியக் கூத்து என்றும் கிராமிய நாடகம் என்றும் நாட்டார் நாடகம் என்றும் தெருக்கூத்து அழைக்கப்படுகிறது.

தெருக்கூத்து நடக்கும் இடம்

கிராமங்களில் திறந்த வெளியில் நாட்டுபுறக் கலைஞர்களால் நடத்தப்படுகிறது. அரைவட்ட வடிவில் கூத்துப் பார்ப்போர் அமர்ந்து கொண்டிருக்க, இடையிலுள்ள வெற்றிடம்தான் கூத்தாடும் இடமாகும்.

ஒரு வீச்சுப்பலகை போடப்பட்டு அதில் சுருதிப் பெட்டிக்காரர், மத்தளக்காரர் உட்கார்ந்திருப்பர். நின்ற நிலையில் பின்பாட்டுக்காரனும், தாளக்காரனும் இருப்பர். மர உரல் ஒன்று இருக்கைக்காகப் போடப்பட்டிருக்கும் அரசன் அதில் உட்கார்ந்து காட்டுவளம், நகர்வளம் கேட்பதாக இருக்கும். ஊரின் நடுவிலுள்ள முக்கூடல் அல்லது நாற்கூடலில் இரண்டு மரக்கொம்புகளை நடுவார்கள் அவற்றிக்கிடையே நீண்ட மூங்கிலை இணைத்துக்கட்டி அதன் இரு கோடியிலும் இரண்டு பேர் நின்று 'தீவர்த்தி' காட்டிக் கொண்டிருப்பர். "அம்மன் கோயிலை ஓட்டியே கூத்து மேடையானது அமைக்கப் படுகிறது"[2].

தெருக்கூத்தாடும் காலம்

கிராம மக்கள் அறுவடை முடிந்த பின்னர் கிடைக்கும் ஓய்வு நாட்களில் கூத்துகளை நடத்தினார்கள். தை முடிந்து அடுத்த ஆறு மாதங்களுக்குக் கூத்து நடக்கும். இது மாலை நேரத்தில் ஆரம்பித்து விடியும்வரை நடைபெறும்.

"கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்"[3]

என்ற பழமொழியிலிருந்து கூத்தானது விடியும்வரை நடைபெறும் என அறியலாம்.

தெருக்கூத்துக் கலைஞர்கள்

தெருக்கூத்தில் பெரும்பாலும் ஆண்கள்தான் நடிக்கிறார்கள். பெண் கதாபாத்திரத்திற்குப் பதிலாக ஆண்களே பெண் வேடம் தரித்து நடிப்பர். அதிகமான அளவில் ஒப்பனை தெருக்கூத்திற்குத் தேவை யில்லை. தெருக்கூத்தில் நடிப்பதைவிடப் பாடலுக்கு முக்கியத்துவம் அளித்தனர். வசனங்கள் எல்லாம் பாடல் கலந்து இருக்கும். உச்சக் குரலில் பாடும் பாடகர்களே மேடையேற முடியும். மிகைப்படுத்தப் பட்ட புராணப் பாத்திரங்களுக்கு ஏற்ற வகையில் மிகைப்படுத்தப்பட்ட வசனம் அமைந்திருக்கும். தெருக்கூத்தில் சூத்திரதாரி அல்லது கட்டியங்காரன் என்னும் பாத்திரம் தவறாமல் இடம்பெறும். இந்தப் பாத்திரத்தின் வேலை அவைவணக்கம், இறைவணக்கம் பாடி நடிக்கப்படவிருக்கும் நாடகத்தின் பெயரை அறிவித்து வேடிக்கைக் காட்டுவதாகும். இந்தப் பாத்திரம் தெருக்கூத்தின் வெற்றிக்குத் துணை செய்யும். தெருக்கூத்தில் உதிரிப் பாடல்கள் பெரும்பாலும் இவராலேயே பாடப்படும். மேலும் கோமாளி, பபூன், காமெடியன் என்ற பாத்திரங்

களும் உண்டு. கூத்துக் கலைஞர்கள் கூத்து நிகழ்ச்சிகளைத் தெய்வத் தொடர்புடையதாகக் கருதியே நடத்துகின்றனர்.

தெருக்கூத்தின் வகைகள்

கூத்தின் தன்மை இடத்திற்கு இடம் வேறுபடும். கூத்தில் வரும் ஒரே பாட்டானது வெவ்வேறு மாவட்டங்களில் தனித்தனி பாணியாகப் பாடப்படுகிறது. தென்ஆற்காடு மாவட்டத்தில் தெற்கத்தி நாடகம், வடகத்தி நாடகம் என இரண்டு வகையாக நடத்தப்படுகிறது.

தெற்கத்தி நாடகம்

இராமாயணம் தொடர்பான நாடகங்களும், அரிச்சந்திர நாடகமும், கோவலன் நாடகமும் இதில் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. தெருக்கூத்தின் தன்மைகளான பாடல்கள் நிறைந்து வசனங்கள் குறைந்து வருதலும், கட்டியங்காரன் வருதலும், பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்தி கொள்ளுதலும் இதில் உண்டு.

வடக்கத்தி நாடகம்

இதில் மகாபாரதத் தொடர்பான கதைகளே அதிகம். கட்டை கட்டி ஆடுதல், கட்டை கட்டாமல் ஆடுதல் என்று வேடம் புனைந்து கொள்ளும் முறையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கலாம். கட்டை என்று கூறப்படுவது மரக்கட்டையாலான சில அணிகலன்களேயாகும். இவை கல்யாணமுருங்கை என்ற ஒருவகைக் கனமில்லாத மரத்தால் செய்யப்படுகின்றன.

பாடுபொருள்

பெரும்பாலும் புராணக் கதைகளையே கூத்தாக நடிப்பார்கள். பாரதம், இராமாயணம், பிரகலாதன், அர்ச்சுனன் தபசு, அரிச்சந்திரன் கதை, நல்லதங்காள் கதை போன்றவற்றை பாடுப்பொருளாகக் கொண்டு தெருக்கூத்து நடைபெறும்.

மக்கள் கோயிலுக்கு வேண்டிக்கொண்டு பக்தர்கள் அதற்காகச் செலுத்தும் காணிக்கையில் கூத்து நடத்துவர். குருவாயூரில் கிருஷ்ணனாட்டம் இவ்வாறுதான் நடைபெறுகிறது. திருமணத்திற்கு வேண்டிக் கொள்வோர் மீனாட்சிக் கல்யாணத்தையும், பிள்ளைப்பேறு வேண்டுவோர் விராட பருவத்தையும் கூத்தாக்கி நடிப்பார்கள்.

இலக்கியத்தில் தெருக்கூத்து

சங்க இலக்கியத்தில் எந்த இடத்திலும் தெருக்கூத்து என்கிற பதிவு காணப்படவில்லை. பட்டினப்பாலையில்,

“தெருவில் முதுவாய்க் கோடியர் முடிவோடு
புணர்ந்த திரிபுரி நரம்பின் தீந்தொடை
ஓர்க்கும் பெருவிழாக் கழிந்த”[4]

என்று கோடியர் தெருவில் முழவு இசைத்த நிகழ்வு சுட்டப் பெற்றிருக்கிறதேயொழியே “தெரு” என்ற சொல் அமைந்து வரவில்லை.

புறநானூற்றில்,

“கூத்தர் ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே” [5]

என்று கூத்தர் பற்றிய பதிவு உள்ளதேயொழிய கூத்தர் ஆடிய நிகழ்வின் பெயராக ‘இன்ன கூத்து’ என்பதாகச் சுட்டப்பெறவில்லை.

‘கூத்து’ என்கிற சொல் கலித்தொகை மற்றும் பின்வந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மற்றும் சிலம்பு, மணிமேகலை அதைத் தொடர்ந்து வரும் இலக்கியங்களில் காணப்படுகிறது.

திருக்குறளில்,

“கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று” [6]

என்று இத்திருக்குறளால் கூத்து நடைபெற்றதையும் கூத்தாடுவதற்கென தனி அவை ஒன்று இருந்ததையும் அறிகிறோம்.

சிலப்பதிகாரம்

கோவலன் கதை தெருக்கூத்தாக நடைபெறுவதற்கு இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் என்னும் ஏட்டிலக்கியம் பயன் பட்டுள்ளது. நாமக்கல் கவிஞருக்கும் கவிதை உணர்வைத் தூண்டியதே கோவலன் தெருக்கூத்துதான் என்று தனது நூலில் எழுதியுள்ளார்.

தெருக்கூத்தில்,

“ஆத்திநாரும் கோவணமாய் அலையவிட்டாள் மாதவியாள்
கூத்தியாரை நம்பினோர்கள் குடியழிந்து போவதைப் பார்”

என்று பாடியதைக்கேட்ட கவிஞர் தம் வீட்டிற்கு வந்தவுடன்,

“நாத்தனாரும் நாத்தியுமாய் நடு வீட்டில் சண்டையிட்டாள்
சோற்றுக்காக வந்தேனம்மா சோறுங் காணோம் நீருங் காணோம்”[7]

என்று பாடினார். இது கோவலன் தெருக்கூத்துப் பற்றிய செய்தியை விளக்குகிறது.

இராமாயணம்

இராமாயணம் நாடகமாக நடிக்கப்படுகிறது. அதனால் கல்லாதவர்களும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்புண்டு. இதில் இராமனும் சீதையும் இடம் பெறுகின்றனர்.

மகாபாரதம்

பாரதத்தில் கிளைக்கதைகளே பெரிதும் இடம் பெறுகின்றன. தருமர் அஸ்வமேதயாகம், பஞ்ச பாண்டவர் வனவாசம், அல்லிஅரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்தரன் தூது, கிருஷ்ணன் தூது, கர்ண மகாராஜன் சண்டை, பொன்னருவி மசக்கை, ஆரவல்லி சூரவல்லி கதை போன்ற கதைப்பாடல்களே தெருக்கூத்தாக நடத்தப்படுகின்றன.

திருவிளையாடற்புராணம்

திருவிளையாடற்புராணத்தில் வரும் சொக்கர் கதை, மீனாட்சியம்மை குறம் முதலியவைகளும் பெரியபுராணத்தில் வரும் சிறுத் தொண்டன் கதை போன்றவையும் தெருகூத்தாக நடிக்கப்படுகின்றன.

கந்தபுராணம்

கந்தபுராணத்தில் பாட்டுடைத் தலைவனான முருகப்பெருமானின் கதை பல கிளைக் கதைகளுடன் தெருக்கூத்தாக நடத்தப்படுகிறது.

அரிச்சந்திரபுராணம்

சந்திரமதியின் புலம்பல் இன்றும் அரிச்சந்திரன் கதைத் தெருக்கூத்துகளில் தவறாமல் இடம் பெறுகிறது. இதுபோன்று இலக்கியக் கதைகள் பல தெருக்கூத்தாக நடத்தப்படுகின்றன.

முடிவுரை

கிராமத்தில் கொண்டாடிவரும் அம்மன் திருவிழாவையொட்டி முறையாகச் செய்யப்படுகின்ற தெருக்கூத்து, உழைக்கும் மக்கள் பொழுதுபோக்கிற்காகவும், படிக்காத பாமர மக்களுக்குப் பாரதச் சொற்பொழிவு கேட்டு அறிந்துகொள்ளத்தக்க வகையிலும் இடம்பெறுகிறது.

அடிக்குறிப்புகள்

1. அ.அறிவுநம்பி, தமிழகத்தில் தெருகூத்து, அமுதன் நூலகம், காரைக்குடி, 1986.

2. மு.இராமசாமி, தெருகூத்து நடிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை, 1994.

3. டாக்டர் மைதிலி வளவன், நாட்டுப்புற இலக்கியம், பக். 143.

4. பட்டினபாலை, பக். 252-255

5. புறம். 29.

6. திருக்குறள். 332.

7. நாட்டுப்புறவியல், சென்னைப் பல்கலைக்கழகம், பக் 21.

◆

112, சி லட்சுமி நகர்,
திண்டல்,
ஈரோடு.

52

பானை இசைக்கலைஞர் அரிகிருஷ்ணனின் நிகழ்த்துக் கலை - ஓர் அறிமுகம்

த. செபுலோன் பிரபுதுரை

முன்னுரை

தமிழக நாட்டுப்புறக் கலைகளில் நிகழ்த்துக் கலைகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருந்தன. ஆனால், இன்றோ அப்படி இல்லை. இத்தகைய சூழலில் பானை இசைக்கருவியைக் கொண்டு கலைநிகழ்ச்சியின் வாயிலாகச் சித்த மருந்துகளை விற்றுவருகிறார் அரிகிருஷ்ணன். பானையின் வாய்ப்பகுதியிலும், துளையிடப்பட்ட கீழ்ப்பகுதியிலும் தோல்களைப் போர்த்தி இசைக்கும் கருவியைக்கொண்டு தமிழகம் முழுவதும் பயணம்செய்து பானை இசை நிகழ்ச்சியை நிகழ்த்திவரும் இவரது கலைநிகழ்ச்சியின் தன்மைகளை விரிவாகக் காண்போம்.

அரிகிருஷ்ணன் அறிமுகம்

நாட்டுப்புறக் கலைஞரும், பாடகரும், சித்த மருத்துவருமான திரு. என்.ஆர்.ராதாமணிக்கும், திருமதி என்.ஆர். சரோஜா அவர்களுக்கும் 1963ஆம் ஆண்டு சித்திரை மாதம் 4ஆம் தேதி சென்னை எழும்பூர் பொது மருத்துவமனையில் அரிகிருஷ்ணன் முதல் மகனாகப் பிறந்தார். திரை இசைப் பாடல்களைப் பாடி அதைக் கேட்கக் கூடும் மக்களிடம் சித்த மருந்துகளை விற்கும் பணியை அரிகிருஷ்ணன்

பெற்றோர் செய்து வந்தனர். மூன்றாம் வகுப்புக்கு மேலே படிக்கச் செல்லாத அரிகிருஷ்ணன் தன் பெற்றோரோருடனேயே இருந்து கலையைக் கற்றார். இச்சூழலில் சென்னை முழுக்கப் பாடல்களைப் பாடி மக்கள் நடுவே நல்ல பெயர் பெற்ற இவர்களைத் தி.க.விலிருந்து வெறியேறிய தி.மு.க.வினர் தம் கொள்கைகளைப் பரப்ப இவர்களை அழைத்தனர். அப்பொழுதுதான் பாடலாசிரியர் மதுரை டி.டி.பச்சையப்பனும், பானை இசையாளர் புதுச்சேரி சிவஞானமும் இவர்களுக்கு அறிமுகமாயினர்.

இசைக்குழு

இம்மூவரும் இணைந்து திமுகவிற்காகக் கொள்கைப் பரப்பும் செயலைச் செய்தனர். அப்போது அவர்களுடனேயே இருந்த அரிகிருஷ்ணன் பாடல் எழுதும் கலையை மதுரை டி.வி. பச்சையப்பனிடமும், பாடும் கலையைத் தம் பெற்றோரிடமும், பானை இசைக்கருவியை இசைக்கப் புதுச்சேரி சிவஞானத்திடமும் கற்றுக்கொண்டே வளர்ந்தார். இப்பானை இசைக்கருவியை உருவாக்கி இயக்கவும், பயிற்சி அளித்தவர் புதுவை சிவஞானம் ஆவார்.

பாடல் எழுதவும், பாடவும், இசைக்கவும் சித்த மருத்துவத்தையும் தம் பெற்றோர் மூலம் பயின்ற அரிகிருஷ்ணன் திருமணத்திற்குப் பிறகு இசைநிகழ்ச்சி மூலமும், மக்களிடையே மருந்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு தம் இல்லறத்தை தாம்பரத்தில் தொடங்கினார்.

பானை இசைக்கருவி

பானையை வைத்து இசையை உருவாக்கும் முறையைத் தமிழகத்தில் நாம் கருநாடக இசைக் கச்சேரிகளில் காணமுடியும். அதில் கடம் (குடம்) என்னும் கருவி பயன்படுத்தப்படுகிறது. அந்தக் கடம் என்பது மண்ணால் உருவாக்கப்பட்ட திட்பமான மண் பானையாகும். அதில் மண்ணைத்தவிர வேறுஎதையும் இணைக்க மாட்டார்கள். ஆனால், அரிகிருஷ்ணன் இசைக்கும் பானை இசைக்கருவி என்பது பானையின் வாய்ப்பகுதியிலும், பின்பகுதியிலும் துளையிட்டும் தோல் போர்த்தப் பட்டும் இசைக்கப்படுகிறது.

தமிழகத்தில் பானையின் வாய்ப்பகுதியில் தோல் போர்த்தப்பட்டு இசைக்கும் முறை இருந்தது. அவை குடமுழா, ஒருமுகவாய், மும்முகவாய், பஞ்சமுக வாத்தியம் என்பவைகளே. இவற்றில் பஞ்சமுக வாத்தியம் மட்டும் 'திருவாரூர்' கோயிலிலும், திருத்துறைப்பூண்டி

'பிறவிமந்தீர்' கோயிலிலும் சோழர் காலத்தவையாக போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் பானையின் வாய்ப்பகுதியில் மட்டும் தோல்போர்த்தி இசைக்கப்பட்டன.

அரிகிருஷ்ணனின் பானை இசைக்கருவி

இசைக்கலைஞர் அரிகிருஷ்ணன் இசைக்கப் பயன்படுத்தும் பானையின் அளவுகளைக் காண்போம். பானையின் நடுப்பகுதி 90 செ.மீ., அகலம் 178செ.மீ., வாய்ப்பகுதி சுற்றளவு 59 செ.மீ., வாய்ப்பகுதி விட்டம் 19 செ.மீ., கழுத்துப்பகுதி சுற்றளவு 54 செ.மீ., பின்பக்கத் துளையின் விட்டம் 10 செ.மீ., துளையின் சுற்றளவு 30 செ.மீ., பானையின் வாய்ப்பகுதிக்கு மாட்டுத்தோலும், பின்பகுதிக்கு ஆட்டுத்தோலும் பயன்படுத்தப்படுகிறது.

செய்முறை

இசைக்கருவியை உருவாக்க வலிமையான திட்பமான பானைகள் தேர்வு செய்யப்படுகின்றன. இத்தகைய பானைகள் தஞ்சை மற்றும் மதுரை மாவட்டங்களில் கிடைக்கின்றன. பானையின் வாய்ப்பகுதிக் கான மாட்டுத்தோலைப் புதியதாகப் பயன்படுத்த வேண்டுமெனில் மயிர்கள் உள்ள பகுதியைச் சுண்ணாம்பு தடவி அகற்ற வேண்டும். இல்லையேல் மிகக்குறைந்த அளவே தோல் தேவைப்படுவதால் பறை இசைக்கலைஞரிடமும் பெற்றுக் கொள்கின்றனர். பதப்படுத்தப்பட்ட தோல் தேவையான அளவு வெட்டி எடுக்கப்பட்டபின் பானையின் கழுத்துப்பகுதி சூடான நிலையில் உள்ள சோறும், இட்லியும் சேர்த்து பிசையப்பட்ட பசையால் இறுக்கமாக ஒட்டப்படுகிறது. மேலும், ஒட்டிய பிறகு இறுக்கமாக இருக்கச் சணல் கயிறுகளால் தோலோடு சேர்த்துக் கழுத்துப்பகுதி கட்டப்படுகிறது.

பானையின் பின்புறத்தில் அளவு குறிக்கப்பட்ட இடத்தில் கூர்மையான ஆணியினைக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சுரண்டியும், அகழ்ந்தும் அறுத்தெடுக்கப்படுகிறது. பின்னர், முன் போலவே பசையுடன் தோல் பின்பக்கம் ஒட்டப்படுகிறது. பின்பகுதி மட்டும் உறுதியாகப் பிடித்துக் கொள்ளும்வரை கைகளால் அழுந்தப் பிடிக்கப்படுகிறது. பின்னர், கழுத்துப் பகுதியின் கீழே ஒரு ஆணி செல்லும் அளவுக்கு ஓட்டை இடப்படுகிறது. இது இசைக்கும்போது ஏற்படும் காற்றழுத்தத்தைச் சரி செய்யப் பயன்படுகிறது. இல்லையேல் தோல் கிழிய வாய்ப்பிருக்கிறது.

இவ்வாறு, தோல் ஒட்டப்பட்ட பானை இரண்டு நாட்கள் குளிரும், வெம்மையும் இல்லாத பகுதியில் வைக்கப்பட்ட பின்னரே, பானை இசைக்கருவி இசைக்கத் தயாராகிறது.

இசைக்கும் முறை

இக்கருவியை இசைக்கும்போது மிருதங்கத்தைப் போலவே கிடை மட்டமாக வைத்து வலக்கால் கருவியின் கீழேயும், இடக்கால் கருவியின் மேலேயும் மடக்கிய நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதனால், வலக்கை கருவியின் வாய்ப்பகுதியிலேயும், இடக்கை கருவியின் கீழ்ப்பகுதியான பின்பகுதியிலும் ஆளப்படுகிறது. மேலும், இடக்கையின் கட்டை விரலில் அணிந்துள்ள மோதிரம்போன்ற இரும்பு அணி அணிப்படுகிறது. இது சிறப்பு ஒலியெழுப்பப் பயன்படுகிறது.

இக்கருவியை இசைக்கும்போது பல்வேறு இசைக்கருவிகளின் இசை ஒலியைக் கேட்கமுடிகிறது. அவ்வொலிகள் துல்லியமாக இல்லாவிட்டாலும் அவற்றை நினைவுப்படுத்தும் ஒலிகளை ஏற்படுத்துகிறது. அவையாவன பறை, பம்பை, தண்டோரா, தவில், உடுக்கை, உறுமி, மிருதங்கம், சாப்பறை போன்றவைகளோடு தபேலா, பேங்கூஸ், டிரிபிள் கேங்கோ மற்றும் டிரம்ஸ் ஒலிகளைக் கேட்க முடிகிறது.

நிகழ்த்துமிடம்

இவர் இக்கலை நிகழ்வைத் தமிழகம் முழுவதும் பயணம்செய்து நிகழ்த்துகிறார். இவர் சென்னைவாசி என்பதால் சென்னை முதல் திருச்சி வரையான பேச்சுத்தமிழ் சிக்கலின்றியும், அதற்குப் பின்னேயுள்ள மாவட்டங்களின் பேச்சுத்தமிழ் தொடக்கத்தில் சிக்கலாகவே இருந்ததாகவும், பின்னர் பழகப் பழக சரியானது என்றும், வட மாவட்டங்களில் கிடைக்கும் வரவேற்பு தென்மாவட்டங்களில் கிடைப்பதில்லை என்றும் கூறுகிறார். இனி நிகழ்த்தும் காலங்கள் உள்ளன.

வருடம் ஒருமுறை

நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, நாகூர் தர்கா, சின்னமலை தேர்த்திருவிழா, மயிலம் பங்குனித் திருவிழா போன்றவை ஆண்டுக்கொரு முறை 3 நாள் நிகழ்ச்சிகளாக மாலை 6 முதல் காலை 6 மணிவரை நிகழ்த்தப்படுகிறது.

மாதம் ஒருமுறை

செஞ்சி மலையனூரில் (அங்காளம்மன் கோயில்) அமாவாசை நாட்களிலும், செங்கற்பட்டு அனுமந்தபுரத்தில் (வீரபத்திரன் கோயில்)

முழுநிலவு நாட்களிலும் நிகழ்த்தப்படுகிறது. நிகழ்ச்சி இரவு 8 மணி முதல் காலை 7 மணிவரையிலும் நிகழ்த்தப்படுகிறது.

வாரம் ஒருமுறை

சென்னை பல்லாவரம் பேருந்து நிலையத்திற்குப் பின்புறம் உள்ள சந்தையில் வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமை சந்தை கூடும்போது நிகழ்த்துகிறார். இந்நிகழ்வு காலை 10 முதல் மாலை 4 வரை நிகழ்த்தப் படுகிறது. இந்நிகழ்வு மட்டுமே வாரந்தோறும் நிகழ்வதால் பார்வை யாளர்களும், வாடிக்கையாளர்களும் பெரிய அளவில் வருகின்றனர்.

சிறப்பு நிகழ்வுகள்

இத்தகைய வழக்க நிகழ்ச்சிகள் மட்டுமில்லாமல் திருமணம், மரணம் ஆகியவற்றிலும் இசைநிகழ்ச்சி நிகழ்த்தப்படுகிறது. 1990 முதல் 2000 வரையிலுள்ள பத்து ஆண்டுகளில் செங்கை மாவட்டம் முழுக்க 1000க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளைச் செய்துள்ளார். ஆனால், தற்போது தொலைக்காட்சி ஊடகத்தினால் இக்கலைநிகழ்ச்சிகளை மக்கள் அதிகம் விரும்புவதில்லை என்று கூறுகிறார்.திருமண வீடுகளில் வள்ளித் திருமணமும், இறப்பு வீடுகளில் 'கர்ண மோட்சம்' போன்ற கதைப்பாடல்களையும் நிகழ்த்துகிறார். இந்த இரண்டு நிகழ்விற்கு மட்டும் துணைக்கு இருவரை அழைத்துச் செல்கிறார்.

நிகழ்ச்சிக்குத் தயாராதல்

அரிகிருஷ்ணனின் கலைநிகழ்ச்சி மருத்துவப்பணி செய்யவே. எனவே, முதலில் தலைவலி தீர்க்கும் தைலகுப்பிகள், வயிற்றைத் தூய்மை செய்யும் பேதி மாத்திரைகள், பல்வலி போக்கும் மூலிகைப் பொடிகள் போன்ற மூன்று பொருட்களையும் எடுத்துக் கொள்கிறார். இவைகள் இவரது சொந்தத் தயாரிப்புகள். இவைதவிர வேறெந்த மருந்தும் இவரிடம் இல்லை.

தன்னுடைய நிகழ்ச்சிக்கான கருவிகளான பானை இசைக்கருவி, டிகிரிகட்டை, செரட்டை போன்றவைகளை ஒருபையில் எடுத்துக் கொள்கிறார். உணவு உண்டுவிட்டு குப்பியில் தண்ணிரோடு சில வாழைப்பழங்களையும் எடுத்துக் கொள்கிறார். வாரம் ஒருமுறை, மாதம் ஒருமுறை செல்லும் இடங்களில் இவருக்கான இடம் உள்ளது. வருடம் ஒருமுறை செல்லும் இடங்களில் இடம் தேட வேண்டியிருக்கிறது. எங்கு சென்றாலும் ஒரு வெள்ளைத் துணியில் மருந்துகளைப் பரப்பி வைத்துவிட்டு நிகழ்ச்சிக்குத் தயாராகிறார்.

கதைப்பாடல்கள்

இவரது நிகழ்ச்சியில் கதைப்பாடல் தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழ்த்தப்படும். பாலாம்பாள் படுகொலை என்னும் இக்கதைப்பாடல், சேலத்தை மையமாகக் கொண்டது. சந்தேகத்தின் காரணமாக ஒரே குடும்பத்தில் நிகழ்ந்த மூன்று கொலைகளைக்கூறி அறிவுரையோடு நிகழ்த்தப்படுகிறது இக்கதைப்பாடல். தவிர கர்ணமோட்சம், வள்ளித் திருமணம் போன்ற கதைப்பாடல்களும் நிகழ்த்தப்படுகின்றன. கிராமப்புற மக்கள் நாட்டுப்புறப் பாடல்களையும், நகர் சார்ந்த மக்கள் கானாப் பாடல்களையும் விரும்பிக் கேட்கின்றனர்.

பக்திப் பாடல்கள்

கலைநிகழ்ச்சிகளில் நேயர்களின் விருப்பத்திற்கு ஏற்ப பக்திப் பாடல்கள் பாடப்படுகின்றன. குறிப்பாக, கோயில் திருவிழாக்களில் பக்திப்பாடல்கள் பாடப்படுகின்றன.

"என்முகம் பாராயோ சண்முகனே
அன்பின் இனியவனே எங்கும் நிறைந்தவனே குகனே"

இரங்கற் பாடல்கள்

கலைநிகழ்ச்சியின்போது பார்வையாளர்களில் சிலர் தங்களது உறவினர்கள் அல்லது நண்பர்கள் இறந்ததைக் கூறி அவர் பெயரில் பாடச்சொல்ல அரிகிருஷ்ணன் பாடுகிறார். இந்தப் பாடல் அன்பு என்பவருக்காகப் பாடப்பட்டது.

"அம்மா ஒரு சேதி கேட்டு நா ஓடி வந்தேனே
உங்க அன்பு மகனப் பத்திப் பாட வந்தேனே"

திரைஇசைப் பாடல்கள்

பல இடங்களில் மக்கள் திரைஇசைப் பாடல்களை அதிகம் விரும்பிக் கேட்கின்றனர். பாகவதர் காலத்து "மன்மத லீலையை" முதல் இன்றைய "அட்ரா அட்ரா நாக்க முக்கா" வரை பாடுகிறார். கிராமப்புற மக்கள் நாட்டுப்புறப் பாடல்களையும், நகர் சார்ந்த மக்கள் கானாப் பாடல்களையும் விரும்பிக் கேட்கின்றனர்.

கதை நிகழ்த்தும் முறை

கதை சொல்லும் நிகழ்ச்சியில் பெரும்பாலும் நகைச்சுவைக் கதைகளே சொல்லப்படுகின்றன. இந்நிகழ்வு மக்களோடு இணைந் துள்ளது. கதையில் வரும் பாத்திரங்களை எதிரே இருப்பவர்களோடு ஒப்பிட்டுச் சொல்வதால் கதை சிறப்பு பெறுகிறது.

விடுகதை நிகழ்த்தும் முறை

கலை நிகழ்ச்சியில் மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளும் சூழல் நிகழ்கிறது. விடுகதை கேட்டுப் பின்பு பதில்சொல்ல ஐந்து நிமிடம் எடுத்துக்கொள்வார். இதுபோன்ற நேரங்களில் தற்காலிக ஓய்வு எடுத்துக்கொள்கிறார். பதில் சொல்வோருக்கு மருந்துகள் பரிசளிக்கப் படுகின்றன.

பிற உத்திகள்

மேற்கண்ட நிகழ்வுகள் மட்டுமல்லாமல் மக்களை வியக்கவைக்க அடுக்கு மொழிகள், தத்துவங்கள், திரைப்பட வசனங்கள், கூத்துப் பாடல்கள், பிற உத்திகள் வழியாகவும் நிகழ்ச்சி நடத்துகிறார்.

நிகழ்ச்சி முடிக்கும் சூழல்

இவரது கலைநிகழ்ச்சியின் அடிப்படைக் காரணமே மருந்து களை விற்பது. எனவே, மருந்துகள் விற்றுத் தீர்ந்ததும் நிகழ்ச்சியை முடித்துக் கொள்கிறார். மேலும் மழை, கட்சிக் கூட்டம், காவல்துறையினர் தொல்லை, குடிகாரர்களின் சண்டை போன்ற காரணங்களாலும் நிகழ்ச்சியை முடித்துக்கொள்ள வேண்டியுள்ளது. இக்காரணங்களால் நலிந்துபோன கலைகள் மேலும் நசுக்கப்படுகின்றன.

முடிவுரை

நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகவும் ஒரு குடும்பத் தலைவ ராகவும் திறம்பட இயங்கும் பானை இசைக்கலைஞர் அரிகிருஷ்ணன் தன்னோடு இக்கலை முடியட்டும். என் பிள்ளைகளுக்கு இது வேண்டாம். எனது ஒருமாத உழைப்பு சிலநூறு ரூபாய் வருமானமும், சில ஆயிரம் கடனும்தான். ஏற்றுமதி நிறுவனத்தில் பணிபுரியும் என் மகன் 7000 வாங்குகிறான். இன்னொன்று தொலைக்காட்சி ஊடகம் வந்த பின்பு எங்களைப் போன்றே எங்களது கலைகளும் நசிந்து விட்டன என்று வருந்துகிறார்.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம்.

53
நாட்டுப்புறக்கலை - ஓயிலாட்டம்

ஆ.தங்கராஜ்

ஒரு நாட்டின் இலக்கிய வளம், கலாச்சாரம், பாரம்பரியத்தின் விதைப் பண்ணையாக விளங்குவன, அந்நாட்டில் வழங்கப்பெறும் நாட்டுப்புறக் கலைகளும், நாட்டுப்புற இலக்கியங்களுமே ஆகும். பல்வேறு இலக்கிய வடிவங்களும் நாட்டுப்புறக் கலை தந்த சிறந்த செல்வங்களே. மொழியின் வளர்ச்சிக்கும், சமுதாய மாற்றங்களுக்கும் ஏற்ப பல்வேறு துறைகளும், புத்தம்புதிய கலைகளும் அதிகமாகவே தோன்றிடினும் அனைத்திற்கும் தாயாகிய நாட்டுப்புறக் கலைகள் எப்பொழுதும் இளமையும், பொலிவும்பெற்று விளங்குவது பெருமைக் குரியதாகும். இக்கிராமியக் கலையானது அர்த்தமற்ற ஆடம்பர வாழ்வின் கறைபடியாத எளிய கிராம மக்களின் அமைதியான வாழ்வில் இடம் பெற்றிருப்பதோடல்லாமல் கற்றோராலும், கலைஞர்களாலும் கூட விரும்பப்படுவதாக இருப்பதே இக்கலையின் தனிச்சிறப்பு. நாட்டுப் புறக் கலைகளில் ஒயிலாட்டம்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கலை

மனிதனுடைய நல்வாழ்விற்குரிய எல்லாத் துறைகளையும் அல்லது மொழிகளையும் கலைகள் எனலாம் என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி. உழவு, நெசவு, வாணிபம், மருத்துவம், சிற்பம், ஓவியம்,

இசை, நடனம் அல்லது கூத்து, நாடகம், காவியம் ஆகிய யாவும் கலைகளே. சங்க காலத்திற்கு முன்பிருந்தே நம் நாட்டில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்பதை மணிமேகலை போன்ற காப்பியங்கள் கூறுகின்றன. பழங்காலத்திலேயே அறுபத்து நான்கு கலைகள் இருந்தன எனில் பல்வேறு துறைகளிலும் நாகரிகம் பெருகியிருக்கும் இக்காலத்தில் கலைகளின் எண்ணிக்கை மிகமிகப் பெருகியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

ஆடற்கலை

இசைக்கலையுடன் தொடர்புடையது ஆடற்கலை என்னும் கூத்துக் கலையே. பண்டைக் காலத்தில் பதினோரு வகையான ஆடல் கலைகளை ஆடிவந்தனர். இவ்வாடல்களைக் கூத்து எனவும் கூறுவதுண்டு. "மனிதர் ஆடிய இந்த ஆடல்களை ஆதிகாலத்தில் தெய்வங்கள் ஆடியதாகக் கருதப்பட்டமையால் இந்த ஆடல்கள் தெய்வவிருத்தி எனப் பெயர் பெற்றன.[1] (நுண்கலைகள், மயிலை. சீனி. வேங்கடாசாமி ப-40)) தெய்வங்கள் அவுணர்களுடன் போர்செய்து, வென்று அவ்வெற்றியின் மகிழ்ச்சியினால் ஆடியவையே ஆகும். அவை: 1. அல்லியம், 2.கொடுகொட்டி, 3. குடை, 4. குடம், 5.பாண்டரங்கம், 6.மல், 7.துடி, 8.கடையம், 9.பேடு, 10.மரக்கால், 11. பாவைக்கூத்து"[2] என்பனவாகும். கடவுளர்களால் ஆடப்பட்ட ஆட்டக்கலை மக்களிடமும் இடம்பெறத் தொடங்கி, கிராமக் கோயில்களில் பெரும்பாலும் பங்குனி மாதம் தொடங்கி ஆடிமாதம் வரையில் மிகுதியாக நிகழும். இதன் மூலம் மழைவளம் அருகி விவசாயம் குறைந்த காலங்களில் பொழுதுபோக்கிற்காக ஆடற்கலை பயன்பட்டது என்பர் முன்னோர் (நுண்கலைகள், மயிலை. சீனி. வேங்கடசாமி. ப.40).

நாட்டுப்புறக் கலை வகைகள்

காவடி, அம்மானை, வில்லுப்பாட்டு, தாலாட்டு, ஒப்பாரி, விடுகதை, நாட்டுப்புற நம்பிக்கைகள், கைவினைப் பொருட்கள், லாவணி, ஒயிலாட்டம், தேவராட்டம் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன. தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அப்பகுதியில் வாழும் ஒருசில சமூகத்தினரால் ஆடப்பட்டு வருகின்றன. "ஒயிலாட்டம்" போன்ற கலைகளைப் போற்றி வருதல் அருகியே காணப்படுகின்றது. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இக்கலை உயிர் பெற்று வளர்ந்து வந்தாலும் அழியும் நிலையிலேயே இருப்பதாக நாட்டுப்புற இயலார் கருதுகின்றனர்.

ஒயிலாட்டம்

ஒயில் என்ற சொல்லுக்கு மனதைக் கவரும் அழகு எனப் பொருள்படும். ஒயிலாட்டம் என்பது கதை தழுவிய தொடர். அதாவது, இசைப்பாடலோடு கூடிய ஒருவகைக் கூத்தேயாகும். இக்கலையானது ஏதேனும் ஒரு பழங்கதையையோ வரலாற்றையோ இசையுடன் பாடி ஆடப்பெறும் ஒருவகை ஆட்டமே. இக்கலையில் பெருமளவு வழக்குச் சொற்களே விரவி வரும். தொல்காப்பியர் வனப்பு எட்டினுள் புலன் எனும் வனப்பைச் சுட்டுகிறார்.

அதாவது,

'சேரி மொழியாற் சொவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் எனமொழிப் புலனுணர்ந் தோரே.'[3]

(ஒயிலாட்டம், டாக்டர் பா.சௌந்தரா, ப-196)

என தொல்காப்பியர், கூத்துக் கலைக்குரிய செய்தியை எடுத்தியம்புகிறார். பாமர மக்களின் சொற்களால் ஆக்கப்பட்டு, அவர்களால் ஆடியும், பாடியும் வரும் நாடக நீர்மையுள்ள பாக்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

ஆதிமனிதன் தன் உணர்ச்சிகளைப் பாடலாகவே வெளியிட்டான் என்பர் மொழியியல் அறிஞர்கள். பாட்டின் உணர்ச்சிகளுக்கேற்ப ஆட்டமும் இயல்பாகவே அமைந்து விடுகிறது எனலாம். சாதாரணப் பாடல் ஆட்டத்துடன் கலந்து விரிவடைந்து பழகப்பழக முறையான அங்க அசைவுகளும் தாளக்கட்டுமாக பண்படுத்தப்பட்டது. ஒயிலாட்டமும் அத்தகைய ஒன்றேயாகும். இக்கலையை ஒயிலாட்டம் எனவும் ஒயிற்கும்மி எனவும் கூறுவர். ஒயிற்கும்மி என்பது ஆட்டத்தின் போது பாடப்பெறும் பாடலை மட்டுமே குறிக்கும் எனவும் கூறுவர். பொதுவாகக் கும்மி என்பது பெண்கள் கைகொட்டி ஆடுவதாகும். "வட்டமிட்டுப் பெண்கள் வளைகரங்கள் தாமொலிக்க கொட்டி இசைத்திடுமோர் கூட்ட முதப்பாட்டு" எனப் பாரதியும் குறிப்பிடுகின்றார். ஆனால், ஒயிற்கும்மி அல்லது ஒயிலாட்டம் என்பது ஆண்களும், பெண்களும் சேர்ந்தாடுவது எனவும், பெரும்பாலும் ஆண்களாலேயே ஆடப்படுவது எனவும் கூறுவர்.

இடமும் காலமும்

தைப்பொங்கல், புதுவருடப் பிறப்பு, முருக வழிபாட்டில் தைப்பூசம், பங்குனி உத்திரம் மற்றும் கிராமியக் கோயில் விழாக்கள்

போன்ற பல்வேறு விழாக் காலங்களில் ஊர்ப் பொதுவிலும் திறந்த வெளியிலும் முன்னிரவு தொடங்கி இரவு முழுவதும் ஆடுவர். எப்படி ஆயினும் விழிகளுக்கு என்றும் விருந்து படைக்கும் பெருமை சான்றது ஒயிலாட்டம்.

ஒப்பனை

ஒயிலாட்டம் ஆடும் இளைஞர்கள் இடுப்பில் சாயவேட்டியை கச்சைபோல் வரிந்து கட்டிக்கொண்டும், தலையில் முண்டாசும், கழுத்தில் பூமாலையும் காலில் சலங்கையும் கையில் துண்டையோ, கைக்குட்டையையோ ஒரே விதமாக அணிந்திருப்பர்.[4] (களப்பணி)

துணைக்கருவிகள்

"ஆட்டத்தின்போது மத்தளமும் தாளமும் துணைக் கருவிகளாக இடம் பெற்று ஆட்டத்திற்கேற்ப இசையை ஒலித்துக் கொண்டிருக்கும். தற்பொழுது தப்பு, நகார், டிரம்செட் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன."[5] (களப்பணி)

ஆடும்முறை

ஒயிலாட்டத்திற்கு மேலைநாட்டு இசைக் குழுக்களைப் போன்றே ஒரு (Conductor) நடத்துனர் உண்டு. அவரே ஆசிரியராவார். ஆசிரியர் அடி எடுத்துக் கொடுக்க இளைஞர்கள் தொடர்ந்து பாடி ஆடுவர். அவ்விளைஞர்கள் கையில் கைக்குட்டையோ விசிறி போன்ற மடிப்போ கொண்டு அதனை விசிறியும் உயர்த்தியும் ஆடுவர்."[6] (களப்பணி). வரிசையாக நின்றும் வட்டமாக நின்றும் வளைந்தும் மீண்டும் வரிசையாகப் பின்வாங்கியும் ஆடுவர். இரு அணிகள் எதிரெதிராக தாளத்திற்கு ஏற்பக் காலை முன்னே எட்டி வைத்தும், பின்வாங்கியும் ஆடுவதுண்டு. இச்செய்தியை,

'ஆளோடே ஆளுஉரசாமல் - நீங்கள்
ஆணில் ஒரு முழம் தள்ளி நில்லும்
காலோடே காலும் உரசாமல் - உங்க
காலடி கச்சம் கழறாமல்
மேலோடே மேலும் உரசாமல் - உங்க
வேருவைத் தண்ணி சிதறாமல்
உல்லாச மாகவே சல்லாப மாகவே
உச்சித மாய்க் கச்சம் கையிலெடு
கையில் எடுத்ததைத்

தூம்புவிட்டு - வலது
கால்தனில் பூட்டுங்கள் எல்லோரும்'[7]

(ஒயிலாட்டம், டாக்டர் பா. செளந்தரா, ப. - 201)

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன.

இக்கதையின் உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற் கேற்ப ஆட்டத்தின் விசையும் மாறி, காண்போர் கவனத்தை ஈர்க்கும் இக்கலைக்கு ஒயிலாட்டம் என்ற பெயர் பொருத்தமே. ஒயிலாட்ட மானது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆடப்படுகின்றது.

ஒயிலாட்டப் பாடல்கள் அச்சேறியுள்ளன என்றாலும் பாமர மக்களைப் பொறுத்தவரை இன்றளவும் இக்கலை "வாய்மொழி இலக்கியமாகவே" இருந்து வருகின்றது எனலாம்.

இனம்

"கோவை மாவட்டத்தில் கொடிக்கால் கவுண்டர் இனத்தாரி டமும் ஒருசில பகுதிகளில் தேவர், மறவர், கம்பளத்து நாயக்கர் போன்ற இனத்தாரிடமும் ஓரளவு வாழ்ந்து கொண்டிருக்கிறது"[8] (களப்பணி) எனலாம்.

முடிவுரை

ஒயிலாட்டத்தைப் பயிற்றுவிக்கும் முதிய தலைமுறையினர் அழிந்து வருதலும், இன்றைய சமுதாயத்தாரிடமும் ஏற்பட்டுள்ள ஆர்வக் குறைவும், நாகரிக அறிவியல் முன்னேற்றமும், அவ்வரிய கலையை அழித்து வருகின்றன எனலாம். நாட்டினிலும், காட்டினிலும் நாளெல்லாம் சிறப்பாக ஆடப்படும் ஆடற்கலையில் நெஞ்சை பறிகொடுக்கும் நிலைமாறி, கலையைப் பறிகொடுக்கும் நிலை வளர்ந்து வருகிறது. இக்கலையைப் படிப்பறிவுள்ள இன்றைய சமுதாயமும், தமிழக அரசும் உயர்த்திப் பிடிக்க உதவ வேண்டும். இல்லையெனில் நாட்டுப்புறக் கலையே இல்லை என்ற நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை.

துணை நின்ற நூல்கள்

1. நுண்கலைகள், மயிலை, சீனி, வேங்கடசாமி, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை - 5, மூன்றாம்பதிப்பு நவம்பர் - 2006
2. ஒயிலாட்டம், டாக்டர் பா.செளந்தரா, திருமகள் வெளியீடு, தூத்துக்குடி - மறுபதிப்பு - 1981 (ஜீன்)

தகவலாளர்கள்

1. அர்ச்சுனன், சாம்பான், வயது 38, 15.02.09, பெரியகரட்டுப்பட்டி.
2. சின்னச்சாமி, கம்பளத்து நாயக்கர், வயது 50, 20.02.09, பெரியகரட்டுப்பட்டி
3. கே. பெருமாள்சாமி, கம்பளத்து நாயக்கர், வயது 45, 15.02.09, பெரியகரட்டுப்பட்டி,
4. முத்துராஜ், மறவர், வயது 35, 20.02.09, மடத்துத்தோட்டம்.

◆

ஆசிரிய உதவியாளர்,
அருள்மிகு பழனியாண்டவர்
கலைப் பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

54

நாட்டுப்புற விளையாட்டுகள் : அன்றும் இன்றும்

ஜெ. தமிழ்ச்செல்வி

நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும், நம்பிக்கைகளையும் குறித்து அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும். நாட்டுப்புறம் என்பது கற்காத கிராமியப் பகுதிகளையே குறிக்கும். ஆங்கிலத்தில் நாட்டுப்புற இயலை Folklore என்று அழைக்கின்றனர். இச்சொல்லை *1846*இல்தான் வில்லியம் தாமசு என்பவர் முதன் முதலில் பயன்படுத்தினார். அதற்கு முன்னர் இதற்குப் பதிலாக Popular antiquites அல்லது Popular Literature என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொற்களில் நாட்டுப்புற இயலைப் பற்றிய முழுமையான பொருள் விளக்கம் இல்லை. எனவேதான், இச்சொற்கள் கைவிடப்பட்டு Folklore என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.[1]

நாட்டுப்புறங்களில் விளையாட்டு என்பது செயற்பாட்டினைப் பொறுத்தது அன்று. ஈடுபடுவோரின் மனநிலையைப் பொறுத்தது. அம்மனநிலை செயற்பாட்டிலேயே ஆறுதல் பெறுவதாகும்.

விளையாட்டுகளின் வகை

விளையாட்டுகளை அவற்றின் நிலைகளைக்கொண்டு வீர விளையாட்டுகள், பொழுதுபோக்கு விளையாட்டுகள் என்று இருவகை யாகப் பகுக்கலாம்.

1. விற்போர், மற்போர், சிலம்பம், சடுகுடு, மஞ்சுவிரட்டு, சேவல் சண்டை போன்றவை வீர விளையாட்டுகளாகும்.

2. சொக்கட்டான், பந்து, அம்மானை, பொம்மை, சீட்டு போன்றவை பொழுதுபோக்கு விளையாட்டுகளாகும். மஞ்சுவிரட்டு கோழிச்சண்டை, பன்றிச்சண்டை, ஆட்டுச்சண்டை போன்றவை சில விழாச் சடங்குகளில் நடைபெறுவதால் இவற்றைச் சடங்குக்குரிய வைகளாகக் கருதலாம்.

வீர விளையாட்டுகளில் உடலுக்கு வேலை இருப்பது போன்று பொழுதுபோக்கு விளையாடல்களில் அறிவுக்கு வேலை உண்டு. எனவே, இவற்றை இயக்க விளையாடல் என்றும் அறிவு வகை விளையாடல் என்றும் அழைக்கலாம் என்பர்.

விளையாட்டுகளைப் பொதுவாக அகவிளையாட்டுகள் (Indoor games) என்றும், புறவிளையாட்டுகள் (Outdoor games) என்றும் பகுத்துக் கொள்ளலாம்.

தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், மஞ்சள் நீர் தெளித்தல் போன்ற மகளிர் விளையாட்டுகளும், தென்னை மரத்து விளையாட்டு, பருப்புக் கடைதல், அத்தளி புத்தளி, கில்லாப்பாண்டி, உச்சரிப்பு விளையாட்டு, தட்டலங்கா புட்டலங்கா, ஐயன் கொம்பு, வினாவிடை, சங்கிலி சீப்பு விக்கிது போன்ற குழந்தை விளையாட்டுகளும் அக விளையாட்டுகள் ஆகும்.

ஜல்லிக்கட்டு, பரி வேட்டை, சிலம்பம், சடுகுடு, இளவட்டடல், ஓட்டம், உரிமரம் ஏறுதல், இரட்டை மாட்டுப் பந்தயம், மோடி விளையாட்டு, கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி, நட்சத்திர விளை யாட்டு, பொம்மைச் சீட்டு, மூணுகட்டை, சூதுதாயம், பானை உடைத் தல், உறிப்பானை விளையாட்டு போன்ற ஆடவர் விளையாட்டுகளும், குரங்கு, தொட்டு உயிரெழுப்பி உயிர் கொடுத்து, கண்ணாமூச்சி, கோட்டான் கோட்டான், பூப்பறிக்க வருகிறோம், மெல்ல வந்து மெல்லப் போ, உருண்டை உருண்டை, எண் விளை யாட்டு, நொண்டி, கோழிக்கால், நான்கு மூலைக்கால், எலியும் சோளக் கதிரும், சிறுவீடு, பூப்பூ புளியம்பூ, குலைகுலையாய் முந்திரிக்கா, கொம் பரைக் கொம்பரை, ஈசல் பிடித்தல், காயா பழமா போன்ற சிறுவர், சிறுமியர் விளையாட்டுகள் புறவிளையாட்டுகள் என்று கூறுவர்.[2]

இதில் சில மட்டும் அன்றும் இன்றும் எவ்வாறு விளையாடு கின்றனர் என்று இக்கட்டுரையில் கூறப்படுகின்றன.

மஞ்சு விரட்டு

இதனைச் ஜல்லிக்கட்டு, மாடுபிடி, காளைப்போர், மஞ்சு வெருட்டு என்று பலவாறு அழைப்பர். பழந்தமிழர் ஏறு தழுவல் என்றனர்.

பொங்கல் விழாவில் இவ்விளையாட்டு நடைபெறும். சல்லி என்பது காளையின் கழுத்தில் கட்டப்படும் வளையமாகும். காளையை அடக்கிச் சல்லியைப் பறிப்பவரே வென்றவர் ஆவார்.

வெற்றி வீரனுக்குப் பரிசு அளிக்கப்படும். தென் மாவட்டங் களில் குறிப்பாக, அலங்காநல்லூர் சல்லிக்கட்டு இன்றும் சிறப்பாக நடைபெறுகிறது.

சல்லிக்கட்டு என்பதற்கு சல்லி என்ற பெயருடைய யாதவ வீரன் ஒருவனே காரணம் என்று கலைக்களஞ்சியம் கூறும்.[3] சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையம் என்றும் கூறுவர்.

கலித்தொகை இதனை ஏறு தழுவுதல் எனக்கூறும்.

"பொரு முரண் முன்பின் புகல் ஏறு பல பெய்து
அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்
பெருமழை ஆகும் வரையகம் போலும்
தொழுவினுள் புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு"

இதனால், பெண்ணுக்கு மணமகனைத் தேர்ந்தெடுக்கவே நிகழ்த்தினர் என்று பார்க்கலாம். மேலும், முல்லைக்கலிப் பாடல்களில் 101லிருந்து 105 வரை ஏறு தழுவும் காட்சியைத் தோழி தலைவிக்குக் காட்டி மகிழும் பொருட்டே இடம் பெற்றிருக்கும்.

பந்து விளையாட்டு

கயிறு, துணி, இரப்பர் போன்றவற்றால் செய்யப்பட்ட பந்து களை எறிந்தும் உதைத்தும், போட்டுப் பிடித்தும் விளையாடுகின்றனர். இவற்றை அன்றே பெண்களும் விளையாடி இருக்கின்றனர்.

"பன்மாண்
வரிபு பந்தோடு வைஇய செல்வோள்
இவைகாண் தோறும் நோவர் மாதோ.[4]

என்று நற்றிணைப் பாலைத்திணைப் பாடலில் கூறப்படுகிறது.

உடன்போக்கு சென்ற தலைவி தன் கால் சிலம்பைத் தன் வரிபுனை பந்தோடு சேர ஓரிடத்தில் வைக்கச் செல்கிறாள். அதனைத்

தன் தோழியர் காணும்பொழுது வருந்துவர் என வருந்தினாள் எனக் கூறப்படுகிறது.

தில்லித் தில்லிப் பொம்மை

இவ்விளையாட்டை மணல் நிறைந்துள்ள பகுதிகளில் சிறுமியர் விளையாடி வருவர். இதனை விளையாடுவதற்கு இருவர் வேண்டும். சிறிய ஓடு அல்லது கல் ஆடுகருவிப் பொருளாகப் பயன்படுத்துவர்.

ஆடும் சிறுமி மணற்குவியலில் வேகவேமாகக் கையை வைத்து வைத்து எடுப்பாள். ஏதேனும் ஒருமுறை அக்கல்லைப் புதைத்து வைத்து விடுவாள். கல்லைப் புதைக்கும் சிறுமி கீழ்க்கண்ட பாடலைப் பாடிக் கொண்டே விளையாடுவாள்.

தில்லித்தில்லிப் பொம்மை
தில்லாலங்கடிப் பொம்மை
காசுகண்டேன் பொம்மை
கடையில் போட்டேன் பொம்மை
மூடிக்கோ மறைஞ்சுக்கோ

எனப் பாடுவாள்.

பாட்டு முடிந்தவுடன் அடுத்த சிறுமி தன் இருகைகளையும் ஒன்றாகக் கோர்த்து குறிப்பிட்ட இடத்தில் மணல் பரப்பை மறைத்துக் கொள்வாள். மணல்பரப்பின்மேல் கையை வைத்து அமிழ்த்துவதற்கு வெட்டுதல் என்று பெயர். சிறுமி வெட்டியவுடன் "ஆகைக்குப் கொஞ்சம் வழிகொடு" என்பாள். கல்லை மண்ணோடு சேர்த்து வெட்டிய சிறுமி தன் கையை மணலுடன் சேர்த்து முன்பக்கம் சிறிது தூரம் நகர்த்துவாள். ஆடிய சிறுமி வெட்டிய சிறுமியின் கைக்குத் தன் கையை நுழைத்துக் கல்லைத் தேடுவாள். கல் கிடைக்காது போனால் "பூனைக்குக் கொஞ்சம் வழி கொடு" என்பாள். அப்பொழுது வெட்டிய சிறுமி பின்பக்கமாகச் சிறிது நகர்த்துவாள்.

கல்லைத் தேடுகின்ற சிறுமிக்குக் கல் கிடைக்காது போனால் வெட்டிய சிறுமியின் கையைச்சுற்றி ஒரு கோடு வரைவாள். அது "எல்லைக் கோடு" எனப்படும். ஆடிய சிறுமி எல்லைக் கோட்டுக்கு வெளியே மீண்டும் கல்லைத் தேடுவாள். கல் கிடைத்து விட்டால் அச் சிறுமி வென்றவள் ஆவாள். கிடைக்காது போனால் வெட்டிய சிறுமி வென்றவள் ஆவாள். வென்ற சிறுமி மீண்டும் ஆட்டத்தைத் தொடங்குவாள். இவ்விளையாட்டு சங்க காலத்திலும் விளையாடப் பட்டுள்ளதைக் காணலாம்.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே."[5]

என்ற நற்றிணைப் பாடலில் தலைவி புன்னை மரக்காயை ஆடுகருவியாகப் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம்.

நீச்சல் விளையாட்டு

தண்ணீரில் நீந்தி விளையாடுதல் நீச்சல் விளையாட்டு எனப்படும். இந்த நீச்சல் இன்று பந்தயம் வைத்து வெற்றி விளையாட்டாக விளையாடப்படுகிறது. அன்றைய காலங்களில் போக்குவரத்து வசதியில்லாமையால் ஓர் ஊரைக் கடந்துசெல்ல வேண்டுமென்றால் ஆறு, கண்மாய் ஆகியவைகளைக் கடக்க வேண்டியது இருந்தது. இதனாலேயே இப்போட்டி மிக முக்கியமான விளையாட்டாகச் சிறுவர், பெரியவர் அனைவரும் கலந்துகொண்டு விளையாடினர் என்று கூறலாம். சான்றாகச் சங்ககாலப் பாடலில்,

"மலிபுனல் திகழ்தரும் தீம்நீர் விழாவின்"[6]

"அறம் தூவற் பெண்டிர்
மணி அணிந்தே தம் உரிமை மைந்தரோடு ஆடித்
தனிலின்று வையைப் புனல்"[7]

"ஈங்கா கின்றால் தோழி பகுவாய்ப்
பினவுப் புலி வழங்கும் அணங்கருங் கவலை
அவிரறல் ஒழுகும் விரை செயற் கான்யாற்றுக்
கரையருங் குட்டந் தமியர் நீந்தி
விரவுமலர் பொறித்த தோளர்
இரவில் வருதல் அறியா தேற்கே"[8]

மேற்கண்ட சங்க இலக்கியப் பாடல் வரிகளின் மூலம் நீச்சல் விளையாட்டு தமிழருக்குப் பழமையானது என்பதையும் தலைவனுக்கு இந்த நீச்சல் தெரிந்ததால்தான் இரவில்கூட தன் தலைவியைச் சந்திக்க நீந்தி வருகிறான் என்பதையும் அறியலாம்.

கழங்காடுதல்

இதனைத் தட்டாங்கல் விளையாடுதல் என்பர். கற்களை மேலே தூக்கிப்போட்டு அவை கீழே விழுவதற்குள் தரையைத் தட்டிப் பிடிக்கும்

முறை தட்டாங்கல் என அழைத்திருப்பர்[9] என்பார். சு.சண்முகசுந்தரம். இதனைச் சங்கப் பாடலில் கழங்காடுதல் என்பர். கழங்கு என்பது ஒருவகைக் காய். அதனைத் தூக்கிப் போட்டுப் பெண்கள் விளையாடியுள்ளனர் என்பதை பிள்ளைத்தமிழ்ப் பத்துப் பருவத்தில் ஒருவகைப் பருவமாகக் கூறுவர். மேலும்,

"முத்தவர் மணல் பொற்கழங்காடும் பெரும்
கோடுடை கழங்கின் அறை மிசைத்தாம்"[10]

- அகம்

என்ற சங்க இலக்கிய வரிகள் கழங்காடுதலைக் கூறுகின்றன. சங்க காலத்தில் கழங்கு என்று வழங்கப்பட்ட ஆட்டமே இன்றைய அம்மானை ஆட்டம் என்பார்"[11] த.இராசாராம்.

தாயம்

தாயம் மகளிரால் விளையாடப்படுகின்றது. பெண்களுக்குத் "தாய்மார்கள்" என்ற பெயரும் உண்டு. அதனால் இவ்விளையாட்டைத் தாயம் என்று அழைத்திருக்கலாம்.

தாயம் என்ற சொல்லை தொல்காப்பியர் உரிமை என்ற பொருளில் பயன்பத்தியுள்ளார் என்பதைத் "தாயத்தில் அடையா"[12] என்ற வரியால் அறிய முடிகிறது.

சங்க காலத்தில் தாய விளையாட்டை "வல்லாட்டம்" என்ற பெயரில் ஆடியுள்ளனர். தொல்காப்பியம் கூறும் வல்லாட்டமும் குறள் கூறும் வல்லாட்டமும் தொடர்புடையன.

"..மன்றத்து
நுரைமுதாளர் அதிலர்தலை யிறக்கி
இவை மனத் திருத்தும் வல்லு"[13]

-அகம்

"... பொதியில்
நரைமூதாள் நாயிடக் குமிழ்ந்த
வல்லுவின் நல்லுலகம்"[14]

-புறம்

இச்சங்க இலக்கியப் பாடல்களில் வல்லாட்டம் ஆடவர்களால் ஆடப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

தாயம், பகடை, அஷ்டாபதம், சதுரங்கம், செஸ் இவை ஏறக்குறைய ஒத்த தன்மையன.

நான்கு கட்டத் தாயம், எட்டுக் கட்டத் தாயம், பத்துக் கட்டத் தாயம் என்று பல்வேறு கட்டங்கள் கட்டி ஆடுவது உண்டு.

முடிவுரை

நாட்டுப்புற விளையாட்டுகள் சங்க காலம் தொட்டே இருந்து வந்த விளையாட்டுகள், சிறு மாற்றங்களுடன் இன்று இருந்து வருகின்றன என்பதை நாம் அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. Alan Dundes, A Study of Folklore-Page-1
2. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியம், தமிழர் நாட்டு விளையாட்டுகள்
3. கலைக்களஞ்சியம், ப.4 - 517
4. நற்றிணை., பா.12
5. நற்றிணை., பா.72
6. பதிற்றுப்பத்து, பா.48
7. பரிபாடல், பா. 48 - 50
8. நற்றிணைப் பா. 144
9. க.சண்முக சுந்தரம், தன்னானே - ப.25
10. அகநானூறு, பா.7 - 135
11. த.இராசாராம், தமிழில் அம்மானைப் பாடல்கள், ப.175
12. தொல்காப்பியம், ப.27
13. அகநானூறு, பா.377
14. புறநானூறு, பா.32

◆

தமிழ்த்துறை,
அருள்மிகு பழனியாண்டவர்
கலை பண்பாட்டுக்கல்லூரி, பழனி.

55

கலித்துள்ளல்

யோ. தர்மராஜ்

இந்தியாவில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனத்தவர்களிடமும் அவர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் வழக்காறுகளும், கலைகளும், கலை நுட்பங்களும் காணப்படுகின்றன. இந்தியப் பழங்குடி மக்களில், தமிழகத்தின் தென்பகுதியில் வாழும் காணிக்காரப் பழங்குடி இனத்தவர்களிடம் பிற இனத்தவர்களிடம் இல்லாத வழக்காறுகளும் கலைகளும் பெருமளவில் உள்ளன. தென்னிந்தியப் பழங்குடி மக்களில் காணிக்காரர்கள் பற்றிய ஆய்வுகள்தான் அதிக அளவில் நடைப்பெற்றுள் ளன. இவர்களைப்பற்றி இலக்கியம், வரலாறு, அறிவியல், மருத்துவம், பொறியியல் என்று பல்வேறு துறைகளில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இப்பழங்குடி மக்களிடம் காணப்படும் ஆட்ட வகைகளில் 'கலித்துள்ளல்' குறிப்பிடத்தக்கதாகும்.

கலைகள்

பழங்குடி மக்களிடம் காணப்படும் கலைகளில் சில வீரத்தை மையமாகக் கொண்டும் சில புனிதத் தன்மையை அடிப்படையாகக் கொண்டும் தோன்றியவையாகும். ஆரம்ப காலத்தில் கெட்ட ஆவிகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தெய்வங்களை வேண்டி அவைகளுக்குப் பலியும் படையலும் இட்டு வழிபட்டனர். இதிலிருந்து

தான் தெய்வம் பற்றிய கலைகள் தோன்றியதாகத் தெரிகிறது (சக்திவேல், ப. 167). அவர் குறிப்பிடுவதைப் போன்று இப்பழங்குடியினரிடம் காணப்படும் கலைகளுக்கும் தொடர்பிருப்பதை அறியமுடிகிறது. பழங்குடி இனத்தவர்கள் தங்களின் தொழில் மேம்படுவதற்கு வேட்டை வேளாண்மைச் சடங்குகளை அதிக அளவில் நடத்துகின்றனர். அத்தகைய சடங்குகளில் அவை தொடர்பான கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறுவது உண்டு. வேட்டைச் சமுதாயத்தில் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் பலரும் கொடிய விலங்குகளால் தாக்குண்டு இறந்தனர். புலி, யானை, கரடி போன்ற விலங்குகளால் தாக்குண்டு இறந்தவர்களின் ஆவிகள் புலிச்சாவு, யானைச்சாவு என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய ஆவிகளுக்குக் கொடுதி (கொடை) விழாக்களில் பலியும் படையலும் படைத்து வழிபடுகின்றனர். இத்தகைய ஆவிகளுடன் தொடர்புடையதாகத் துள்ளல்கள் காணப்படுகின்றன.

துள்ளல் (ஆடல்)

நாட்டுப்புற மக்களிடையே பல்வேறு ஆட்டங்கள் காணப்படுகின்றன. ஆடல் என்பதை வேடம், துள்ளல் என்னும் சொற்களாலும் வழங்குகின்றனர். காணிக்காரர்களிடம் காணப்படும் ஆடல்கள் துள்ளல்கள் என்று வழங்கப்படுகின்றன. நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் ஆடல்கள் பொழுதுபோக்கிற்காகவும், தெய்வபக்தி, நல்லொழுக்கம் போன்றவற்றிற்காகவும் நடத்தப்பெறுகின்றன. இவை மக்களுக்கு அறிவையும் சமய நம்பிக்கையையும் ஊட்டுகின்றன. இவர்களிடம் தும்பி துள்ளல், சோனன் துள்ளல், பேரையன் துள்ளல், கலித்துள்ளல், ஓங்கான் துள்ளல் போன்ற ஏராளமான துள்ளல்கள் காணப்படுகின்றன. இத்துள்ளல்கள் அனைத்தும் தெய்வங்களை வரவழைத்து நடத்தப்படுகின்றமையால் அவை பகல் நேரங்களில் நடைபெறுவதில்லை. இரவு நேரங்களில் மட்டுமே நடைபெறுகின்றன. கலித்துள்ளல் நடத்துகின்றவர்கள் விரதம் மேற்கொண்டு இத்துள்ளலைச் செய்கின்றனர்.

அடவுகள்

ஒவ்வொரு கலைக்கும் அந்தந்த கலைக்குரிய மாந்திரீகத் தன்மை உண்டு. மாந்திரீகத் தன்மையென்றால் செப்பிடுவித்தை என்பது பொருளன்று. ஒவ்வொரு கலைகளுக்கும் மறைந்திருக்கும் அடவுகள், சைகைகள், உடல்நிலைகள் போன்ற பல்வேறு பண்புகளைக்

குறிப்பதாகும். இவை நம்முடைய அறிவாற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையில் அமைந்து பார்ப்பவரை ஈர்ப்பதாக அமைவதாகும். ஆட்டங்கள் விலங்குகளுடனும் ஆவிகளுடனும் தொடர்புடையதாக அமைவதை அடவுகளை வைத்துக் கண்டுகொள்ள இயலும். நடை, குதி, துள்ளல், பதுங்கல், பாய்ச்சல், ஒலி எழுப்புதல் போன்றவை அனைவருக்கும் அச்சத்தையும், ஆர்வத்தையும் ஊட்டுகின்றன. கலித்துள்ளலில் ஆவி வெளிப்படுகின்றவர்கள் அவர்களது உடலில் வெளிப்படும் ஆவியின் செயல்பாட்டைப் பொறுத்து அடவுமுறை களைக் கொண்டு விளங்குகின்றன.

கலித்துள்ளல்

காணிக்காரப் பழங்குடி இனத்தவர்களிடம் காணப்படுகின்ற பேரயன்துள்ளல், சோனன்துள்ளல் போன்றவற்றிலிருந்து நீண்டகதைப் பாடலுடன் கூடிய நிகழ்த்துக்கலை கலித்துள்ளல் ஆகும். இதனைக் கலிப்பாட்டு என்றும் வழங்குகின்றனர்.

கலித்துள்ளல் நிகழ்ச்சி மாலையில் தொடங்கி மறுநாள் காலை வரையிலும் தொடர்ந்து நடைபெறும். கலிப்பாடலில் தெய்வம் யுத்திரர்கள், வேலன்மார் (காணிக்காரர்கள்) உலகின் படைப்பு, குடியிருப்பு, தொழில், விவசாயம், புதுக்காடு வெட்டுதல், காட்டிற்குத் தீ வைத்தல், மழை, விதை போன்றவைக் குறித்த பல்வேறு செய்திகள் இடம்பெறுகின்றன. இவர்களிடம் காணப்படும் மழைக்கோடான் பாடலில் இவ்வினத்தவர்கள் விதைகளைப் பெறுவதற்கு மழைக்கோடன் தெய்வத்தினுடைய இருப்பிடத்திற்குச் செல்வதாகப் பாடல் அமைகிறது. கலிப்பாடலில் இவர்கள் விதைகளைப் பெறுவதற்கு 'எரி எரியெனும் தம்புரானிடம்' செல்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாடலின் இரண்டாவது பகுதியில், அவர்கள் தாங்கள் பயிர் செய்துள்ள வாழைக்குலைகளும் தானியங்களும் முற்றியுள்ளன. அவை களைச் சேகரிக்கும் முன் 'கலித்துள்ளல்' நடத்தப் போகிறோம். அதற்குக் கலிகளை அனுப்பி வைக்கும்படி வேண்டுவதாக உள்ளது. இதனை,

"அப்பொழுதுமா கேட்கிறது எரிஎரியெனும் பகவான் தம்புரான்
எந்தினுடே வந்த நீங்க ஏதினுடே வந்த நீங்க
அப்பொழுது பறயினது ஏழாங்காலு வேலம்மாரு
நாங்க கூண்டி நட்ட குலகளெல்லாம் விளஞ்சு கிடக்கினது
நாங்க நட்ட வித்துகளு விளஞ்சு கிடக்கினது
விளயாடித் தின்ன கலிகளொக்க விட்டுத் தரணுமே"

எனவரும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

கலிகள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன என்பதையும் கலிப்பாடல் சுட்டுகிறது. தேவர்களும், அதிரைகளும் (அரக்கர்களும்) தனித்தனியாக வெவ்வேறு உலகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு இறக்கின்றனர். அவர்களுடைய யானைகளும் குதிரைகளும் அவ்வாறே இறக்கின்றன. இதன்பின் அவைகளின் ஆவிகள் தம்புரானிடம் (இறைவன்) சென்று வரம்பெற்று கலிகளாகத் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இதனை,

"பொன்னுநல்லா பூவுலவு மண்ணு நல்லா சோலையிலே
ஏழாங்காலு வேலம்மாரு பலவ பதிச்சு விடினது
சரக்குற்றி நிறுத்தினிடே சரபாஞ்சி
காணியோடு பூமியுமா மணித்தரையில் இருக்கினது
மண்ணுமல குப்பப்பாட்டில் ஏழுகூட்டம் வேலம்மாரு
சங்கும் பற வச்சி கலிவேண்டி விளக்கினது''

எனும் பாடலால் அறியமுடிகிறது.

வேலன்மார் வேண்டுகோளை ஏற்று இறைவன் கலிகளைப் பூமிக்கு அனுப்பி வைக்கிறார். கலிகள் பூமிக்கு வரும்போது அவை களால் மக்களுக்குத் துன்பம் ஏற்படாமல் இருப்பதற்குக் கட்டளை யிடுகிறார். இதனை,

"ஏழாங்காலு வேலம்மாரு பலவ பதிச்சி விட்டபோலும்
வெட்டோடு விளவோடு பலவ பதிச்சி விட்டபோலும்
ஏழாங்காலு வேலம்மாரு கலிச்சரமா கட்டினது
கலிமுண்டு கட்டினது கலியிரங்கி விளிச்சினது
வாவா இளங்கலியே வாவா பெருங்கலியே
விளையாடித் தின்ன குலகளுண்டு
ஏத்தங்குல மூங்கிக்குல உண்டுமிடே
சந்திரன் என்னும் இளங்கலியே
சூரியன் என்னும் இளங்கலியே
கலிச்சாரம் கலிமுண்டு உடுத்துவாயே
சாங்கிச்சி நோக்காதிரு நாணிச்சி நோக்காதிரு
இளங்கலியே வாவா''

என வரும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

பாடல்

நாட்டுப்புற மக்கள் தாங்கள் நடத்தும் கலைநிகழ்ச்சிகளில் முதலில் பாடுகின்றவர்களை முன்பாட்டுக்காரர் என்றும் அவரைத்

தொடர்ந்து பாடுகின்றவர்களைப் பின்பாட்டுக்காரர் என்றும் அழைக்கின்றனர். முன்பாட்டுக்காரராக ஒருவர் அல்லது இருவர் இருப்பர். பின்பாட்டுக்காரராகப் பலர் இருப்பர். சில விழாக்களில் பார்வையாளர் அனைவருமே பின்பாட்டுக்காரராக மாறிவிடுகின்றனர். முன்பாட்டுக்காரர் பாடலின் வரியை முடித்தபின் அல்லது அவர் பாடலின் பாதிவரியை முடித்ததும் பின்பாட்டுக்காரர்கள் தொடர்ந்து பாடுகின்றனர். பாடல்கள் ஆடலுக்குத் துணை நிற்பதால் ஒவ்வொரு இனத்தவர்களும் ஏதாவது ஓசை அமைப்புச் சொற்களைத் தங்கள் பாடல்களுடன் இணைத்துப் பாடுவது மரபு. கசவர்கள் 'ஒவ் ஒவ் ஒவ்' எனவும் தோடர்கள் 'ஹோ ஹோ ஹோ ஹோய்' எனவும் பளியர்கள் 'ஏ ஹோ ஆஹோ' எனவும் காணிக்காரர்கள் 'தொய் தொய் தொய்தாம்' எனவும் வரும் ஓசையை எழுப்பிப் பாடுகின்றனர். தெய்வம் தொடர் பான ஆடல்களில் இத்தகைய ஓசைதரும் சொற்களைப் பலமுறை பாடுவதைக் காணமுடிகிறது. அப்பொழுது துள்ளல்காரர் எழுந்து ஆடுகின்றார்.

இசைக்கருவிகள்

மக்கள் பயன்படுத்தி வரும் இசைக்கருவிகளில் குழலிசைக் கருவி, தோலிசைக் கருவி, நரம்பிசைக் கருவி, கஞ்சக் கருவி ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். பழங்குடி மக்களில் பெரும்பான்மையோர் காடுகளில் கிடைக்கும் மூங்கில், வேட்டையாடுகின்ற விலங்கினங்களின் தோல், தாங்கள் வளர்க்கும் கால்நடைகளின் தோல் முதலியவற்றைப் பயன்படுத்தியும் இசைக்கருவிகளைச் செய்தும் பயன்படுத்துகின்றனர். கோத்தர்கள் தாங்கள் வளர்க்கும் எருமைகள் மற்றும் காட்டெருமைகள் போன்றவற்றின் தோலைப் பதனிட்டு இசைக்கருவிகள் செய்கின்றனர் (பாலகிருஷ்ணன், ப. 32). முதுவர்கள் ஈற்றையால் செய்த புல்லாங்குழல் (அறம்) மூங்கிலால் செய்த ஊத்து (உறுமி) ஆகியவற்றை அதிகமாக உபயோகப்படுத்துகின்றனர் (இராஜேந்திரன், ப. 246). பளியர்கள் தாங்கள் ஆடிய ஆட்டங்களில் மண்பானையின் வாயை மிருகத்தின் தோலால் மூடி ஓசை எழுப்பியும் செண்டை, மத்தளம், உடுக்கு ஆகிய இசைக்கருவிகளை வாசித்தும் நடத்துகின்றனர் (வேலாயுதன், ப. 69). காணிக்காரர்களிடம் மூங்கில், தோல், இரும்பு போன்றவற்றால் செய்த இசைக்கருவிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையான இசைக்கருவியையும் தெய்வத்தை வரவழைப்பதற்கும் துள்ளல் கலைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். சாற்றுப் பாடல் பாடுவதற்குக் கொக்கரையும், தோற்றப் பாடல் பாடுவதற்கு வெண்கலத்தாலான

இசைக்கருவியும், சாஸ்தா வழிபாட்டில் கொம்பு, வேந்தாளம் ஆகிய இசைக்கருவிகளையும் பயன்படுத்துகின்றனர். பானை, வெங்கலப் பாத்திரங்கள் போன்றவற்றை இசைக்கருவிகளாகப் பயன்படுத்து வதையும் காணமுடிகின்றன. கலித்துள்ளலுக்குரிய இசைக்கருவிகளில் சங்கும் பறையும் முதன்மை பெறுகின்றன. சில குடியிருப்புகளில் இவைகளுக்குப் பதில் களிமண், செம்பு போன்றவற்றால் செய்த பாத்திரங்களை இசைக்கருவிகளாக உபயோகப்படுத்துவதையும் களப்பணியின்போது காணமுடிந்தது.

ஆட்ட வகைகள்

ஆதிமனிதன் தான் வேட்டையாடிய மிருகத்தின் தோலுக்குள் புகுந்து தான் அதுவாக மாறிய மனநிலையில் ஆடிய ஆட்டம் ஆதிஆட்டம் அல்லது ஆதிச் சடங்கு என்றழைக்கப்பட்டது. வேடம் புனைந்து ஆடும் ஆட்டம் பொதுவாக அனைத்துப் பழங்குடியினரி டமும் காணப்படுகிறது. விலங்குகள், பறவைகள் போன்று வேடமிட்டும் குரல் எழுப்பியும் ஆடுவர் (இராஜேந்திரன், ப. 248). காணிக்காரர்கள் நடத்தும் ஓங்கான் துள்ளல், ஓங்கான் என்னும் பறவையைப் போன்று வேடமிட்டுத் துள்ளுவதைக் குறிக்கும். கலிவரப் பெற்றவர் ஆடும் ஆட்டம் கலிதுள்ளல் என்றழைக்கப்படுகிறது.

ஆட்ட வடிவங்களை வட்ட வடிவமுறை ஆட்டம், நேர்க்கோட்டு முறை ஆட்டம், இவை இரண்டும் இணைந்த நிலையில் விளங்கும் கூத்து வடிவம் என்று பகுத்துக் கூறுகின்றனர். (கே.ஏ.குண சேகரன், ப. 22). இதில் வட்ட வடிவ ஆட்டமுறையே காலத்தால் முந்தியது என்பர். பழங்குடி மக்களின் ஆட்ட முறைகள் வட்டவடிவம் சார்ந்ததாக உள்ளது. இப்பழங்குடி மக்களிடம் காணப்படும் கலித் துள்ளல்களும் வட்டவடிவ முறையில்தான் நடைபெறுகின்றன.

ஆடுவோர் பாடுவோர் பங்கு

நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் நடனங்களில் பங்குபெறு கின்றவர்களை ஆடுவோர், பங்குபெறுவோர் என்று வகைப்படுத்துவர். பழங்குடி இனத்தவர்களிடம் காணப்படும் ஆட்டங்களில் பங்கு பெறுகின்றவர்களைத் தனித்தனியாக வகைப்படுத்துவது அரிது. நடனங்களில் பங்குபெறுவோரின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் போது பங்குபெறுகின்றவர்களே ஆடுவோராகவும் பங்குபெறு வோராகவும் மாறிவிடுகின்றனர். ஆட்டங்களை ஆண்கள் மட்டும் ஆடும் ஆட்டம், பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டம், ஆண்களும்

பெண்களும் சேர்ந்து ஆடும் ஆட்டம் என்றும் வகைப்படுத்துகின்றனர். ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் ஆடும் ஆட்டங்கள்தான் அதிக அளவில் காணப்படு கின்றன. கலித் துள்ளலில் ஆண்களும் பெண்களும் பங்கு பெறுகின்றனர். ஆண்களின் உடலில்தான் கலி வெளிப்படுவதைக் காணமுடிந்தது.

ஆடுகளம்

மலையின மக்கள் ஆட்டங்கள் ஆடுவதற்கென்று தனியாக அரங்குகளை அமைப்பதில்லை. வீடுகளின் முன்புறம், ஊர்ப்பொது இடம், தெய்வ வழிபாட்டிடங்கள் போன்ற ஆடுவதற்கு வசதியாக அமைந்த இடங்களை ஆடுகளமாக அமைக்கின்றனர். காணிக்காரர்கள் பாட்டப்புரை, கொடுத்திக் களம் போன்ற இடங்களை ஆடுகளமாகக் கொண்டுள்ளனர். கலித்துள்ளல் கொடுதிக் களத்தில் அல்லது ஊர்ப் பொதுவிடத்தில் வைத்து நடைபெறுகிறது. இத்துள்ளல் நடைபெறும் காலங்களில் களத்தைச் சுத்தம் செய்து பயன்படுத்துகின்றனர்.

ஒப்பனை

பழங்குடி மக்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய வர்கள். அவர்கள் விழா நாட்களில் தங்களை அழகுபடுத்திக் கொள்வதற்கென்று விலை குறைந்த வளையல்கள், பாசி மாலைகள் போன்றவற்றைதான் பயன்படுத்துவர். ஒவ்வொரு ஆட்டத்திற்கும் தனித்தனியே ஒப்பனைகளும் அதற்குரிய ஆடைகளும் உள்ளன. கலித்துள்ளலில் ஈடுபடுகின்றவர்கள் கலி முண்டு அல்லது கலி வேஷ்டியால் தங்களை ஒப்பனை செய்து கொள்கின்றனர்.

முடிவுரை

ஒவ்வொரு பழங்குடி இனத்தவரிடமும் அவர்களுக்கே உரித்தான ஆட்டக்கலைகள் காணப்படுகின்றன. இந்த ஆட்டக்கலைகள் அவர்களின் சமய நம்பிக்கையையும் கலையுணர்வையும் வெளிப்படுத்து கின்றன. இவர்களிடம் காணப்படும் துள்ளல்கள் அனைத்தும் இவர்களின் பண்பாட்டை அடையாளப்படுத்துகின்றன. இவர்கள் குழலிசை, தோலிசை போன்ற இசைக்கருவிகளைத்தான் பெரும்பாலான ஆட்டங்களிலும் பயன்படுத்துகின்றனர். சோனம் துள்ளலில் இத்தகைய இசைக்கருவிகளுக்குப் பதில் வெண்கலத்தாலான பாத்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். இசைக்கருவியின் ஓசைக்கு ஏற்ப பாடலும் துள்ளலும் அமைகின்றன. இவர்களிடம் காணப்படும் அனைத்து

வகையான துள்ளல்களும் மேலும் விரிவாக ஆய்வதற்குரியவையாகும்.

துணைநூற் பட்டியல்

1. சு. இராஜேந்திரன், முதுவர் இனப் பழங்குடியினர், சேகர் பதிப்பகம், 66, மரியார் தெரு, சென்னை-78, 2008.

2. சு. வேலாயுதன், மேற்கு மலைத்தொடர் பனியர்களின் வாழ்வியல், செந்தில் பதிப்பகம், உடையப்பன் குடியிருப்பு, நாகர்கோவில்

3. கே.ஏ. குணசேகரன், நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள், தமிழ்ப் பலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

4. இரா. பாலகிருஷ்ணன், நீலகிரி மொழிகள், அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1984.

5. பி. ராமராஜு, தமிழில் செந்தீ, நடராசன், ஆந்திர நாட்டார் வழக்காற்றியல், இளங்கோ நூலகம், கள்ளக்குறிச்சி, 2006.

6. யோ. தர்மராஜ், காணிக்காரப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல், தென்னிந்திய வரலாற்று ஆவணப் பதிப்பகம், நாகர்கோவில், 2004.

7. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

◆

விரிவுரையாளர்,
அரசுக் கலைக்கல்லூரி,
உதகமண்டலம்.

56

சக்திக் கரகாட்டம்

தி. தர்மலிங்கம்

கரகாட்டம் என்பது தமிழக நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று. கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம், தோற்பாவை கூத்து, தெருக்கூத்து, ஒயிலாட்டம் முதலியன தமிழக நாட்டுப்புறக் கலைகளாகும். கரகம் என்பது செம்பு அல்லது பித்தளையினால் ஆகிய செம்பை அலங்கரித்துத் தலையில் வைத்துக்கொண்டு அச்செம்பு கீழே விழாதவாறு நையாண்டி மேளத்தின் துணையோடு தாளத்திற்கேற்ப ஆடப்பெறுவதாகும்.

நாட்டுப்புறங்களில் மண்குடத்தை (தோண்டி) அலங்கரித்துத் தலையில் வைத்து ஆடுவார்கள். இதனை, தோண்டிக் கரகம் என்பர்.

கலைகளில் முழுமை பெற்றது ஆடற்கலை. மனிதன் இன்பத்தின் மிகுதியால் கைகால்களை அசைக்கின்றான், தாவுகிறான், குதிக்கிறான். துன்பத்தின் மிகுதியாலும், கைகால்களை அசைக்கிறான். இவ்வாறு மனிதன் தன் இன்ப - துன்ப உணர்ச்சிகளை உடலசைவுகளால் வெளிப் படுத்துகிறான். இந்த நிலையைப் பிறர் அபிநயத்துக் காட்டுகின்றபோது ஆடல் பிறக்கின்றது. ஆடல் ஒரு கதையை அல்லது நிகழ்ச்சியை விவரித்துக் கூறுகின்றது.

கரகம் என்பது தமிழக நாட்டுப்புறக் கலைகளின் ஒரு பொதுவான சிறந்த கலையாகும். கண்ணன் தன் பேரன் அநிருத்தனை, வாணனது சிறையிலிருந்து மீட்பதற்காக ஆடிய குடக்கூத்து காலப்போக்கில்

மாரியம்மன் தொடர்பான வழிபாட்டோடு இணைந்த ஆட்டமாகவும் கரக ஆட்டம் என்ற பெயரோடும் உருப்பெற்று வளர்ச்சி பெற்றது. கரகம் என்ற சொல் முதலில் கமண்டலத்தையும் பின்னர் புனிதநீர் தாங்கிய குடத்தையும் சொம்பையும் குறித்தது. 'புண்ணியச் செயலுக்காக புனிதநீர் வைக்கப்பட்ட குடம் ஆகும்' என்று சோமலெ விளக்கம் தருகிறார்.

கிராம தேவதைகளின் விழாக் காலங்களில், தேவதையின் ஊர்வலம் நடைபெறும்போது அதன் முன்னால் பலவித ஆட்டங்கள் நடைபெறும். அவற்றுள் ஒன்று கரகம் ஆடுதல். நாட்டுப்புற மக்களிடையே பரவலாக விளங்கும் கரகம், இசையும் நடனமும் கலந்த ஓர் அழகிய கலை ஆகும். தமிழகத்தில் மட்டுமல்லாமல் மலையாளம், மைசூர், ஆந்திரம், முதலிய பகுதிகளிலும் கரகாட்டம் உள்ளது.

மழைநீரின் பயனை நன்குணர்ந்தவர்கள் தமிழர்கள். அவர்கள் மழையின் தெய்வமாக மாரியம்மனை வழிபடுகிறார்கள். மழை வறண்ட பகுதியிலுள்ள சிற்றூர்களிலேயே பெரும்பாலும் மாரியம்மன் வழிபாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சோமலெ அவர்கள் மழைத் தெய்வமாக மாரியம்மனையும் ஆற்றுக் கடவுளாகக் கங்கை அம்மனையும் கூறுகின்றார். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களில் தமிழ்நாட்டில் வெப்பம் மிகுந்து காணப்படும். இம்மாதங்களில் வெப்பத்தின் மிகுதியால் பித்தம் மிகுந்து கொப்புளங்கள் வெடிக்கும்படியான வெப்புநோய் பரவும். இவ்வெப்பு நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு மாரியம்மனை வழிபடுவார்கள். அவ்வாறு வழிபடும்போது மக்கள் கரகம் எடுத்து விழாக் கொண்டாடுவார்கள்.

கரகம் இருவகைப்படும். அவை 1. சக்திக் கரகம், 2. ஆட்டக் கரகம். முன்னையது தெய்வ வழிபாட்டுடன் இணைந்தது; அம்மனுக்குரியது. பின்னையது தொழிலாக நடத்தப்படுவது.

சக்திக் கரகம்

ஒவ்வொரு சிற்றூரிலும் பயத்தோடும் பக்திச் சிரத்தையோடும் மாரியம்மனை வழிப்படுவது வழக்கம். அம்மை நோய், மாமாரி, பஞ்சம் ஆகியவற்றுக்கு ஒரு புறமும் அதே சமயம் பயிர்ச் செழிப்புக்கு ஒரு புறமும் காரணமாக ஊரம்மனை மக்கள் நம்பினர். அத்தோடு அம்மை முதலிய தொற்று நோய்கள் பரவுங்காலத்தில் அவை பரவாமல் தடுக்கவும், ஒடுக்கவும், அந்நோய்களை நீக்குவதற்குரிய தெய்வமாக

மாரியம்மனை வழிபடுவர். அவ்வாறு வழிபாடு நிகழ்த்துகையில் சக்திக் கரகமெடுத்து வழிபடுவார்கள்.

சக்தியாகிய மாரிக்கு எடுக்கப்படும் கரகம் சக்திக் கரகம் எனப்படும். மாரி என்ற சக்தியின் குறியீடாகக் கரகத்தை வழிபாடு செய்தனர். சில கிராம தேவதைக் கோயில்களில் நிலையான சிலைக்குப் பதிலாகக் குடத்தில் நீர் நிறைத்து வேப்பிலைகளைச் செருகி அதையே தேவதையாக வைத்து வணங்குவர். இவ்வாறு, புனிதநீர் வைக்கப்பட்டுள்ள குடத்திற்குக் கரகம் என்று பெயர். இன்றைய நாளில் அம்மன் தெய்வ வழிபாடுகளில் சக்திக் கரகம் எடுப்பதனை அறியலாம்.

கொடியேற்றமும் காப்புக் கட்டுதலும்

கோயில் திருவிழாவுக்கு எட்டு நாட்களுக்கு முன்பேனும் பதினைந்து நாட்களுக்கு முன்பேனும் கோயில் வாசலில் கொடியேற்றம் நடைபெறும். மதுரை மகாளியம்மன் கோவிலானது 254 ஆண்டுகளாக தொடர்ந்து விழா கொண்டாடி வருகின்றது. இக்கோயிலில் ஆண்டு தோறும் மாசி பௌர்ணமியை ஒட்டிய வெள்ளிக்கிழமையில் விழா ஏற்பாடு செய்து அதற்கு முந்தைய அமாவாசையை ஒட்டிய வெள்ளியில் கொடியேற்றம் நடைபெறும்.

கொடியேற்றத்தன்று கோயில் பீடத்தின் முன்பாக சிறு குழியில், வேப்பங்கொம்பை நட்டு, அதில் காதோலையும், கருகமணியும் மஞ்சளும் எலுமிச்சம் பழமும் கட்டுவர். பீடத்தில் நிறைநீர்க் கரகத்தில் வேப்பங்குழையை செருகி, அதிலும் காதோலை, கருகமணி, மஞ்சள் எலுமிச்சம் பழம், கோர்த்துக் கட்டுவர். வழிபாடு செய்தபின் மணிக்கொச்ச கயிற்றில் இடம்விட்டு வேப்பிலையைக் கோர்த்துக் கட்டிய வேப்பிலைத் தோரணத்தைத் தெருவின் முக்கிய சந்திப்புகளில் கட்டுவார்கள்.

சக்திக் கரகக்காரரின் செயல்கள்

கொடியேற்றத்தன்று சக்திக் கரகம் எடுப்பவர் அதிகாலையில் வைகை ஆற்றுக்குச் சென்று ஆற்றில் ஏழு ஊற்றுகள் தோண்டி நீராடிவிட்டு அருகம்புல் முகர்ந்த பின்பு, அதனைத் தமக்கு பின்புறம் வீசி எறிந்துவிட்டு வீட்டிற்கு வருவார். வீட்டு வாசலில் தயாராக வைத்திருக்கும் பசும்பாலையும் கோமியத்தையும் தலையில் தெளித்துக் கொண்டபின் வீட்டிற்குள் சென்று வழிபாடு செய்வார். அன்றைய மாலையில் மேளத்துடன் கோயில் நிர்வாகிகள் சக்திக் கரகக்காரர் வீட்டிற்கு வந்து கோவில் மரியாதையோடு கோவிலுக்கு அழைத்து செல்வர். கோயிலில் சக்திக்கரகம் எடுப்பவருக்குக் காப்புக் கட்டுவர்.

(மஞ்சள் கட்டிய கயிறு) கெட்ட ஆவிகளாகிய பேய் பிசாசுகளிடமிருந்து சக்திக் கரகக்காரரை இக்காப்புக் கயிறு காப்பாற்றும் என்பது ஒரு நம்பிக்கையாக இருந்து வருகின்றது. அதன்பிறகு தெருவிலுள்ள வீடுதோறும் சென்று விபூதி கொடுத்து, கோயில் வரி வசூலைத் தொடங்குவர். அன்றுமுதல் சக்திக் கரகக்காரர் விரதம் இருப்பார்கள்.

விரதமிருக்கும் சக்திக் கரகக்காரர் ஒரு நாளில் ஒருவேளை இரவு உணவாகப் பாலும் பழமும் உண்பார். தாமே துணிகளைத் துவைத்துக் கொள்வார். பாயில் படுக்கமாட்டார். பீடி முதலியவற்றையும், இறைச்சியும் இவ்விரத நாளில் உண்ணமாட்டார். இரவில் கரகமெடுத்து வரும்போது புளியும் கருப்பட்டியும் கரைத்த பானகம் மட்டும் பருகுவர்.

அம்மன் விழாவும் சக்திக் கரகமும்

கொடியேற்றிய எட்டாம் நாள் விழாவன்று மாலை 7 மணியளவில் கோயிலிருந்து மேளதாளங்களுடன் புறப்பட்டு வைகை ஆற்றுக்குச் செல்வார்கள். ஆற்றில் குளிப்பதற்காகத் தோண்டிய நீருற்று அல்லது ஓடுகாலின் கரையில் வாழையிலை விரித்து அதன் மீது பூசை செய்து கரகத்தை அதன்மீது வைத்து அலங்கரிப்பார்கள். கரகச் செம்பின் முக்கால் பகுதி நீர் நிரப்புவார்கள். அதன் வாயை முற்றிய தேங்காயை வைத்து மூடியபின் அரளிப்பூவைக் கோபுரம்போல் கீழிலிருந்து மேல்நோக்கிச் சுற்றிக் கட்டுவர். செம்பில் சுற்றிய அரளிப்பூவின் மீது இடையிடையே தென்னங்குருத்தைச் செருகி வைப்பர். சொம்பின் விளிம்பில் காப்புக் கயிறும் பரிவட்டமும் கட்டி கரகம் அலங்கரிப்பர். சக்திக் கரகத்துடன் துணைக் கரகம் ஒன்றும் செய்து அலங்காரம் செய்வர். துணைக்கரகம் ஆண் தெய்வத்தைக் குறிக்கும்.

சாமியை வருவித்தல்

அலங்கார வேலைகள் முடிந்தும், சக்திக் கரகக்காரரை படைப்பின் முன்னால் கிழக்கு நோக்கிப் பார்த்த வண்ணம் நிற்க வைத்து மேளங்களை முழக்கியும், குரவையிட்டும், பாடல் பாடியும் அவர்கள் மீது சாமி வருவிப்பர். அவர் வந்து இறங்கி, சக்திக் கரகக்காரர் ஆடுவார். அதன் பின்னர் பக்தர்கள் சூடம் பொருத்தி வழிபாடு செய்து சக்திக் கரகத்தையும், துணைக்கரகத்தையும் எடுத்துக்கொண்டு ஆற்றிலிருந்து கோயிலுக்குப் புறப்பட்டுச் செல்வர்.

பூசை

திருக்கோயிலில் கரகம் வைத்துப் பூசை செய்து சக்திக் கரக மெடுத்தும் தெருக்களில் பவனி வருவர். அவ்வாறு வரும்போது அம்மன்

பாடலை பாடிக் கொண்டு கரகம் எடுத்துச் செல்பவர் கால்களை முன்னும் பின்னும் எடுத்துவைத்து அம்மன் பாடலுக்கு ஏற்றவாறு நடனம் ஆடுவர். சக்திக் கரகம் வருவதை அறிந்த கிராம மகளிர் குடத்துநீரை தெருக்களில் ஊற்றிக் கரகத்தை வீட்டிற்கு வரவேற்பார்கள். கரகத்தில் அம்மன் இருப்பதாகவும், நம்புவர். சூடம் ஏற்றி வழிபாடு செய்வர். சக்திக் கரகக்காரரிடம் குறி கேட்பார்கள். அம்மனின் அருளால் குறி சொல்வதாகவும் நம்புவர்.

விழாவின் (முடிந்த) மூன்றாம் நாளில் வைகறையில் கொட்டு முழக்கத்தோடு வைகையாற்றுக்குச் செல்வர். இக்கரகக்காரருக்கு முன் ஆட்டக் கரகக்காரரும் ஆடிசெல்வது உண்டு. கரகத்திற்கு எடுத்த நீரை அலங்காரப் பொருட்களுடன் வைகை ஆற்று நீரில் இட்டுக் கரகத்தைக் கரைப்பர். தமது கையில் கட்டியுள்ள காப்பு நாணைக் களைந்துவிட்டு, அம்மனை மலையேற்றிவிட்டு வீடு திரும்புவர். தம்மீது இறங்கியிருக்கும் அம்மனைக் காப்பு நாண் களைதல் மூலம் கரகக்காரர் விலக்கிக் கொள்கிறார்.

பிற செய்திகள்

சக்திக் கரகமே மாரியம்மன் விழாவோடு மிகவும் இணைந்து விளங்குவதாகும். ஆட்டக் கரகம் இல்லாமலும் சக்திக் கரகமெடுத்தல் உண்டு. ஆனால், சக்திக் கரகம் இல்லாமல் கோயில் விழாக்களில் ஆட்டக்கரகம் மட்டும் தனித்து நிகழ்வதில்லை. தற்போது பொது நிகழ்ச்சியில் சக்திக் கரகம் இல்லாமல் ஆட்டக் கரகம் மட்டும் ஆடப்பட்டு வருகிறது. சக்திக் கரகக்காரர் அம்மனின் அருள்வந்து ஆடுவதன்றி மேளக்காரரின் வாசிப்புகளுக்கு ஏற்றவாறு, ஆட்டக் கரகக் காரரைப் போல் தமது கலைத்திறன் பலப்படுமாறு ஆடுவதில்லை.

தலையில் ஏற்றி வைத்த கரகத்தைக் கோயில் வாசலில் மட்டும் இறக்கி வைப்பர். கரகம் கீழே இறக்கி வைப்பதோ அல்லது அதுவாகவோ தவறிக் கீழே விழுவதோ ஊராருக்கு நல்லதல்ல என்பது ஐதீகம். பெண்கள் தீட்டு உடையவர்கள். ஆதலால், பெண்கள் சக்திக் கரகம் எடுப்பதில்லை. ஆடவர் மட்டுமே சக்திக் கரகம் எடுப்பர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 605 014.

57

நாட்டுப்புற நடனக் கலை - ஓர் கண்ணோட்டம்

Dr. பி. தனஞ்செயன்

நாட்டுப்புற மக்களின் இலக்கியங்கள், கலைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், விளையாட்டுகள், மருத்துவமுறை முதலான பல்வேறு நாட்டுப்புற வழக்காறுகளைப் (Folklore) பற்றி ஆராயும் சமூக அறிவியல் துறையை நாட்டுப்புறவியல் (Folkloristics) துறை என்கின்றோம். நாட்டுப்புறவியல் அதாவது "Folklore" என்ற தொடர் Folkt+lore என்ற இரு சொற்சேர்க்கைதான். இதற்குப் புதிய ஆங்கில அகராதி பொருள் கூறும்போது 'மரபு வழிப்பட்ட நம்பிக்கைகளையும், புராணங்களையும், பழக்க வழக்கங்களையும், பொதுமக்களிடம் இருந்து அறிந்து கொள்வதும் அத்துடன் பண்டைக் காலப் பழக்கவழக்கங்கள் அல்லது மக்கள் இலக்கியங்களையும் பற்றிக் கூறுவதும் நாட்டுப்புற வியலாகும் என விளக்கம் தருகின்றது. இந்த அடிப்படையில் குடும்ப நல்லுறவுக்கான, சமூக நல்லிணைப்பிற்கான அரவணைக்கும் குரலையும் கேட்கலாம்; சமூகத்தை நேர் செய்வதற்கான அறநெறிகளைக் காட்டிக் கட்டுப்படுத்தும் கட்டளைக் குரலையும் கேட்கலாம்; அச்சத்தாலும், ஆசையாலும் வேட்கையாலும் எழும் வழிபாட்டு ஒலியையும் கேட்கலாம்.[1] இங்ஙனம் நாட்டுப் புறங்களில் ஆடலும் பாடலும் இன்ப உள்ளத்தின் எதிரொலியாக அமைகின்றன. இதற்கு அகில உலகமும் தொன்று தொட்டே அடிமையாக இருந்து வருகிறது. இனியும் இருக்கத் தான் செய்யும் எனும் நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டுதான் வருகிறது.

கிராமிய ஆடல் பாடல் இரண்டிலும் தற்காலத்தில் புதுமைகள் பல தோன்றினாலும் பழமை என்றும் நிலைத்து வருவதனைக் காணலாம். அதிலும் தொன்மையான பழங்கலைகளான கிராமியக் கலைகள் நாட்டுக்கு நாடு - இனத்திற்கு இனம் மொழிக்கு மொழி மாறுபட்டிருந் தாலும் அதில் நிலவிவரும் சொற்சுவையும் பொருட்சுவையும் மாறாமல் இயற்கைத் தன்மையோடு விளங்குவதனை உணரலாம். அந்த வகையில் நம் பாரதத் திருநாட்டின் இசை, நடனம் இரண்டுமே தொன்றுதொட்டு இயற்கைத் தன்மை மாறாமல் இருந்து வருவதனையும் குறிப்பாக, நம் தமிழ் மொழியில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இவ்விலக்கியம் இருந்தமைக்கும் சான்றுகள் காணப்படுகின்றன.

"பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல் பண்ணதிய்யே" (தொல். செய். 173)

இங்கு பண்ணத்தி என்று குறிப்பிடப்படுவது நாட்டுப்புறப் பாடலைக் குறிக்கும் என்பர். இவ்வாறே சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கும் காணப்படுகின்றது. குறிஞ்சி நில மக்கள் தினைப்புலத்தில் கிளிகளை விரட்டப் பாடி ஆடிய ஆடல்களும், குரவைக் கூத்தும் வேலன் வெறியாட்டமும் முதலானவை நாட்டுப்புற நடனங்களே.[2]

நாட்டுப்புற நடனங்களின் வகை

அனைத்து நாடுகளிலுமே நாட்டுப்புறக் கலைகள் உண்டு. நாட்டுப்புற நடனங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், பண்பாடுகள், கைவினைப் பொருட்கள் ஆகியவைதாம் அந்தந்த நாட்டின் பாரம் பரியப் பண்பாட்டை நிலைநிறுத்தி வருகின்றன. நம் இந்தியர் களிடையே பாரம்பரியப் பண்பாட்டுக் கலைகள் மிகுதியாக உள்ளன. இந்திய நாட்டுப்புறக் கலைதான் உலகில் மிகப் பழமை வாய்ந்தது, எண்ணிக்கையிலும் கூடியது எனலாம்.

மயிலாட்டம் - ஒயிலாட்டம் - கோலாட்டம் - கும்மி - ஆடுபுலி ஆட்டம் - சிங்க நடனம் - பொய்க்கால் குதிரை ஆட்டம் - பொம்ம லாட்டம் - நிழலாட்டம் - சிலம்பாட்டம் - கரகாட்டம் - காவடி ஆட்டம் - அறுவடை நடனம் - தீப நடனம் - பூச்சொறி யாட்டம் - சதிராட்டம் - மஞ்சள் நீராட்டம் - நலங்கிடுதல் - மணவிழாக் கூத்து - வளைகாப்பு - தாலாட்டு - நீர்க்குட நடனம் - தெருக்கூத்து - வில்லுப்பாட்டு - கதாகாலட்சேபம். இதனோடு இன்னும் எத்தனையோ நடனங்கள் - பாடல்கள் பண்டைய சமுதாயத்தில் நிலவி வந்துள்ளன. பண்டைய மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்து ஆடல்

பாடலோடு ஏற்றங் கண்டதாக அமைகிறது. வாழ்வில் ஏற்றத்தாழ்வு எதுவானாலும் அங்கே இசையும் கூத்தும் இருக்கவே செய்யும் என்பது புலனாவதோடு, வாழ்வின் எந்தப் பக்கத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே கலையழகு மிக்கதாகவே பண்டையத் தமிழர் தம் வாழ்க்கை அமைந்தள்ளது.

கலைக்கே முதல்வன்

சைவப் பெரியோர்களான நாயன்மார்கள் சிவபெருமானைப் போற்றும்போது "அம்பலத்தே ஆடும் திருத்தாண்டவர்" என்றும், "கயிலையில் ஆடும் கனக சபேசர்" என்றும் இறைவனையே கூத்தாட வைத்துக் கண்டுகளித்து, கூத்துக் கலைக்கே முதல்வன் சிவபெருமான் என்று வருணனை செய்துள்ளனர்.[3] எனவே, இறை நம்பிக்கையில் தொடங்கிய இசை - நடனம் என்பது உடலோடு ஒட்டிய ஒன்றாகி விட்டது. இங்ஙனமே ஆழ்வார் பாடல்களில் கண்ணனைப் போற்றி இசையோடு ஆடுதலையும் காணலாம். இதற்குச் சான்றாக திருவில்லிப் புத்தூரில் மார்கழி மாதத்தில் திருப்பாவை நோன்பும், திரவரங்கத்தில் அரையர் சேவையும் விளங்கும்.[4]

தமிழர்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு மூலை முடுக்கெல்லாம் பரத நடனங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால், பண்டைய பல கலைகளைக் கற்பிக்கவோ - செய்து காட்டவோ நம்மிடையே முறையான பயிற்றுவிப்பாளர்கள் குறைந்து வருவது வருந்தத் தக்காக அமைகிறது. எனினும், மொழிக்கு மூலமே தமிழ்தான் என்று சொல்வது போல, கலைக்கு மூலமும் தமிழகமே என்று சொல்லும்போது நாம் பெருமைப்படுகின்றோம்.

மயிலாட்டம்

மயிலாட்டம் மேற்கொள்கின்றவர்கள், மயில் போலவே தங்களை ஒப்பனை செய்துகொண்டு - முதுகின் பின்புறம் கட்டியுள்ள தோகையைக் கைகளால் விரித்தும் அசைத்தும் ஆடுவர். ஆடுபவர்களின் நளினம் மேகமூட்ட வானத்தைக்கண்டு மயில் தன் தோகையை விரித்தாடுவதைப்போல இருக்கும்.

ஒயிலாட்டம்

திருவிழாக் காலங்களில் குறிப்பாக, கோயில் திருவிழாக் காலங் களில் தேர் ஓட்டத்தின் முன்னும், இறைவனின் வெவ்வேறு கோலங்கள் பூண்ட வாகனங்களின் முன்பும், ஆணும் பெண்ணும் ஒயிலாக ஆடிப்

பாடுவது. மேலும், விவசாயிகள் விளைவித்த பொருள்களின் அறுவடைக் காலங்களிலும் ஒயிலாக ஆடிப் பாடுவதுண்டு.[5]

கோலாட்டம்

சிறுவர் முதலாகப் பெரியவர்வரை இரண்டு கோல்கள் கையில் பிடித்துக்கொண்டு ஆடுவது கோலாட்டம். ''கோலாட்டம் அடிப்போமே... கோவிந்தனுக்குக் கோலாட்டம் அடிப்போமே கோலா கலமாகக் கோபியர் கூடி'' என்று இரு கழிகளைக் கொண்டு தட்டி ஓசை எழுப்பி ஆடிப் பாடுவது. வண்ணம் பூசிய கழிகளின் கோலாட்டம் இன்னும் சிறப்பாக இருக்கும். இது கோயில் திருவிழாக் காலங்களிலும், தனிப்பட்ட குடும்ப விழாக்களிலும் நிகழ்த்தப்படுகிறது.

கும்மி

பெண்கள் பலர் ஒன்றாகக் கூடிக் கைகளைக் கோர்த்தும் பின்பு தட்டியும் ஓசை எழுப்பிப் பாடல்களைப் பாடி ஆடுவது கும்மியடித்தல் என்பர். ''கும்மியடிப் பெண்ணே கும்மியடி... குனிந்து குனிந்து கும்மியடி''; என்று கும்மியே முதலடியாக வரப் பலர் பாடல் புனைந்துள்ளனர். இக்கும்மிப் பாடல்களில் ஒரு குறிப்பிட்ட கருத்தை மையப்படுத்தி அதனை ஒன்றின்பின் ஒன்றாகப் பாடி விளக்குவர். இதோடு உறவு முறையில் முறையானவர்களைக் கண்டு கேளிக்கைப் பாடல்கள் பாடுவதும் உண்டு.

ஆடு புலி ஆட்டம்

ஆடு போன்றும் புலியை போன்றும் வேடம் போட்டுக் கொண்டு கத்திக் கொண்டும் உறுமிக் கொண்டும் ஆட்டின்மேல் புலி பாய்வது போல் பாய்ந்து ஆடுவது. இதில் புலியைப் போன்ற வீரத்தன்மையும், ஆட்டின் பயந்த தன்மையும் உள்ளது உள்ளவாறே நடத்திக் காட்டுவது சிறப்புமிக்க அம்சமாகும்.[6]

சிங்க நடனம்

சிங்கத்தைப் போன்று வேடமணிந்து வீரத்தோடு சிங்கம் போன்று உருமிக் கொண்டு மெல்ல நடனம் செய்வது. இவ்வேடம் போடுபவரின் தோற்றப் பொலிவு கம்பீரமாக இருக்கும்.[7]

பொய்க்கால் குதிரை ஆட்டம்

குதிரையின் வடிவம் போலவே அழகாக அலங்காரத்துடன் அமைத்துக்கொண்டு, அதைத் தக்கவாறு ஆண்களும் பெண்களும் உடலில் மாட்டிக் கொண்டு குதிரைபோல் முன்னுக்கும் பின்னுக்கும்

அசைந்து ஆடுவது. இதில் இராஜா, இராணி கதைகளை மையப்படுத்தி ஆட்டத்தினை ஆடுவர். இவ்வாட்டத்தில் இனிய இசையோடு கூடிய பாடல்களும் இடம்பெறும். சிறுவர்களும் பெரியோர்களும் இவ்வாட்டத்தினைக் கண்டு இன்புறுவர்.

பொம்மலாட்டம்

விதவிதமான பொம்மைகளைத் தயாரித்து அப்பொம்மைகளில் பாத்திரங்கள் படைக்கப்பட்டு அபிநயத்திற்கேற்பப் பொம்மையின் கை கால்களையும் உடலையும் தலையையும் ஆட்டுவித்தல். மறைந்திருந்து ஆட்டுவிக்கின்றவன் ஒவ்வொரு பொம்மைக்கும் ஏற்பக் குரலை மாற்றிப் பேசுவது, பார்ப்பவர்க்கு வியப்பையும் நகைச்சுவையையும் ஏற்படுத்து வதாக அமையும். இன்று இக்கலையை மேலை நாட்டவர்களும் விரும்பிப் பார்த்து வருகின்றனர்.[8]

சிலம்பாட்டம்

இது ஒரு தற்காப்புக் கலை. இதனை ஏற்று ஆடுபவரின் இரு கைகளிலும் ஒலியெழுப்பக்கூடிய சிலம்புகள் இருக்கும். கைகளைத் தகுந்தபடி அசைத்து ஒலியெழுப்பி ஆடுவார். இது கோயில் திருவிழாக்களிலும், பெரிய வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் நடிப்பு முறையில் அழகாகச் செய்து காட்டப்படுகின்றது.

கரகாட்டம்

கரகம் என்பது இறைவனுக்கு நேர்த்திக் கடன் செலுத்துவதற்குப் பூசைப் பொருட்களைத் தலையில் சுமந்து செல்வது. அந்த அடிப் படையில் அலங்கரிக்கப்பட்ட ஒரு பாத்திரத்தைத் தலையில் வைத்துக் கொண்டு அசைந்து அசைந்து விதவிதமாக ஆடுவர். எந்த நிலையிலும் அது தவறிவிடுவதில்லை. கலை நுணுக்கத்தோடு வெவ்வேறு வகையாக ஆடிக் காண்போரை மகிழ்விப்பர்.

காவடி ஆட்டம்

தமிழ்க் கடவுள் முருகனுக்கு நேர்த்திக் கடன் செலுத்த ஆறுபடை வீடுகளிலும் பக்தர்கள் இக்காவடி ஆட்டத்தினை ஆடி முருகப் பெருமானின் அருளுக்குப் பாத்திரர்களாவர். இந்த ஆட்டம் நடனமாக ஆடும்போது அற்புதமாக இருக்கும். காவடியைத் தோளில் சுமந்தபடி ஆடுவர். சில நேரங்களில் தோளில் இருந்து முதுகு வழியாக இடுப்பு வரை காவடியை இறக்கி மறுபடியும் மேலுக்கு நகர்த்தும் வண்ணம்

நடனம் நடத்துவர். இது பார்ப்பவர்க்கு வியப்பாகவும் கண்கொள்ளாக் காட்சியாகவும் விளங்கும்.[9]

தீப நடனம்

பலதரப்பட்ட வண்ணக் கண்ணாடிக் குவளையில் ஒளி விளக்கேற்றித் தீபம் அணையாமல் ஒய்யலாக ஆடுவது. இதில் ஒருவர் அல்லது இருவர் மட்டுமன்றி ஒரு குழுவாக இணைந்து அனைவரும் ஆடுவர். இந்த நடனத்தினால் ஒற்றுமையுணர்வு ஏற்படும்.[10]

பூச்சொறி ஆட்டம்

இவ்வாட்டம் குறிப்பாக அம்மன் ஆலயங்களில் நடைபெறு கின்றது. பருவம் அடைந்த பெண்ணைப் 'பூப்பெய்தி விட்டாள் என்று கூறுவது தமிழ்ப் பண்பாடு. அவ்வேளையில் அப்பெண்ணை நன்னீராட்டிப் புத்தாடை அணிவித்து, மணமான பெண்கள் மலர் தூவி வாழ்த்தி அறிவுரை கூறும் நடனம்.

சதிராட்டம்

தப்பை - பம்பை - உடுக்கு - மத்தளம் போன்ற இசைக் கருவிகளை இசைத்து மிக்க மகிழ்ச்சியோடு ஆடும் நடனம். கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குலதெய்வம் இருக்கும். இக்குல தெய்வ வழிபாட்டின்போது பொங்கலிடுவதற்குக் குடும்பத்தில் இருந்து புறப்படும்போது இவ்விசைக்கருவிகளைக் கொண்டு இசைத்து மகிழ்ச்சியோடு செல்வர். பொங்கலிட்டு அம்மனை வழிபட்ட பிறகு மறுபடியும் வீட்டிற்கு வரும்வரை இவ்விசையை இசைப்பர்.

மஞ்சள் நீராடல்

ஆலயத் திருவிழா முடிந்த பின்னர், அம்மகிழ்ச்சியைக் கொண் டாடுவதற்கு இந்த நீராடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதாவது, மஞ்சள் கலந்த நீரை ஒருவர் மீது ஒருவர் ஊற்றிக் கொண்டு மகிழ்வது. இதில், முறைப்பெண்கள், முறை மாப்பிள்ளைகள் அதிகப்படியாகக் கலந்து மகிழ்வார்கள்.

நலங்கிடுதல்

திருமணம் ஆகவிருக்கும் ஆண் / பெண் இருவருக்கும் திருமணத் திற்குச் சற்று முன்பும், திருமணம் நடந்த பிறகும் நலங்கிடுவர். மாப்பிள்ளைக்கும், மணப்பெண்ணுக்கும் உறவு அடிப்படையில்

பாடல்களைப் பாடி நலங்கிடுவர். பெண்ணுக்கு முறையானவர்கள் பெண்ணைக் கேலிபேசி ஆடுவதும், மாப்பிள்ளைக்கு முறையானவர்கள் மாப்பிள்ளையைக் கேலிபேசி ஆடுவதும் நகைச்சுவைக்கு வழிவகுப்ப தாக அமையும். சந்தனம், எண்ணெய், சீயக்காய், பன்னீர், பூக்கள் இவற்றைக்கொண்டு ஆரத்தி எடுப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மணவிழாக் கூத்து

திருமணம் முடிந்தவுடன் மணமக்களை ஊர்வலம் வரச்செய்வர். ஊர்வலத்தின்போது ஒவ்வொரு கலைஞனுக்கும் தெரிந்த ஆட்டத்தை யும், வித்தையையும் காட்டுவது மணவிழாக் கூத்தாகும். ஒவ்வொரு குடும்பத்திடமும் புதிய தம்பதியருக்கு ஆரத்தி எடுப்பதும் சிறு விருந்து அளிப்பதும் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

வளைகாப்பு

சூல் கொண்ட பெண்ணிற்கு ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் தங்க வளையல்களோடு கண்ணாடி வளையல்கள் அணி வித்துத் தாய்மையின் மகத்துவத்தை எடுத்துக்கூறி ஆடிப் பாடுவது. இதில் சூல்கொண்ட பெண்ணின் தாய் வீட்டாரின் பங்கு அதிகமாக இருக்கும். வளைகாப்பு நடந்தவுடன் பிரசவத்திற்காகத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

தாலாட்டு

குழந்தை பிறந்த முப்பது நாட்களுக்குள் 'பெயர் சூட்டல்' விழா நடைபெறுகிறது. வையகத்தில் வாழவந்த பிஞ்சுகளுக்குக் காப்பணி வித்துப் பிஞ்சு விரல்களில் மோதிரம் அணிவித்துக் கழுத்தில் தங்கச் சங்கிலியிட்டுப் புத்தாடை அணிவித்துத் தொட்டிலிட்டு ஆராரோ பாடி மகிழ்வது.[11]

நீர்க்குட நடனம்

தண்ணீர்க் குடங்களைத் தலை, தோள் இடுப்புப் போன்ற இடங்களில் வைத்துக்கொண்டு ஆடுவர். மேலும், இரண்டு கைகளில் இரண்டு இடங்களைத் தாங்கியும் பல்லால் ஒரு குடத்தைக் கடித்துப் பிடித்தும் ஆடுவது வியப்பாகவும் ரசிக்கக் கூடியதாக இருக்கும்.

தெருக்கூத்து

ஒரு குறிப்பிட்ட பழைய இதிகாச, புராண, இராமாயண, மகா பாரதக் கதாபாத்திரங்களை எடுத்துக்கொண்டு நடித்துக் காட்டுவது.

இந்நடிப்பினை ஊர் முழுக்க இருக்கும் மக்கள் இரவு முடியப் பார்த்து இன்புறுவர்.

வில்லுப்பாட்டு

வில் போன்ற உருவ அமைப்பில் மணிகள் கோர்க்கப்பட்டுள்ள கருவி மூலம் இசைத்துப் பாடல் பாடி நகைச்சுவையோடும், நயத்தோடும் நளினத்தோடும் நடத்திக் காட்டுவது வில்லுப்பாட்டாகும்.[12]

கதாகாலட்சேபம்

காலட்சேபம் என்றால் நேரத்தை நல்ல முறையில் போக்குவது. அதாவது, இரண்டு மூன்று பேர் புடைசூழ ஒருவர் தலைமை ஏற்று இசையோடும் பக்க வாத்தியங்களுடனும் பாடிக் கதைசொல்லி விளக்குவது. இக்கதைகளின் வழி அறக்கருத்துகளை வெளிப்படுத்திச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தல்.[13]

இவ்வாறு, கிராமியக் கலைகள் மக்களின் மகிழ்ச்சிக்கும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதற்கும், விழிப்புணர்வுச் சிந்தனைக்கும் ஊன்றுகோலாக இருந்திருக்கின்றன. மொழி, பண்பாடு, கலை, பாரம்பரிய உடை இவை இக்கலைகளின் வழி நம் முன்னோர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வழிவகுக்கின்றன. எனவே, இக்கலைகளை நாம் காப்பது நாளை எழ இருக்கும் மாளிகைக்கு அடிக்கல்லாக அமையும்.

சான்றெண் விளக்கம்

1. முனைவர் சு. சுப்பிரமணியன், நாட்டுப்புறப் பாடல்கள் கருத்தமைப்பும் மக்கள் பங்கேற்பும், ப.15
2. புலியூர்க்கேசிகன், அகநானூறு, மணிமிடைப்பவளம், பா. 199.
3. ப. அருணாச்சலம், பக்தி இலக்கியம், ப.82
4. சு. வேங்கடராமன் அரையர் சேவை, ப.32
5. முதல் உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், ப. 179
6. திரு பட்டு பலராமன், வளர்புரம் (தெலுங்கு நகர்), கிராமம் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், நேர்முக பேட்டி நாள்: 28.12.2008
7. முதல் உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், ப. 178
8. முனைவர் ஜா. மனுவேல், சித்தூர் மாவட்ட நாட்டுப்புற விழாக்கள், ப.63

9. திரு. வையாபுரி, கிராமியக் கலை நிகழ்த்துபவர், அடவிக் கொடியம் பேடு, பிச்சாட்டூர் மண்டலம், சித்தூர் மாவட்டம், நேர்முகப் பேட்டி நாள். 18.02.2009

10. முதல் உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், ப.179

11. திருமதி பட்ட புவனேஸ்வரி திருப்பதி, நேர்முகப் பேட்டி நாள் 20.02.2009

12. திரு.வையாபுரி, கிராமியக் கலை நிகழ்த்துபவர், அடவிக் கொடியம்பேடு, பிச்சாட்டூர் மண்டலம், சித்தூர் மாவட்டம், நேர்முகப் பேட்டி நாள் 18.02.2009

13. மா.வரதராஜன் (பணி நிறைவு) பத்மாவதிபுரம் திருச்சானூர் ரோடு, திருப்பதி, நேர்முக பேட்டி நாள்: 10.2.08.

◆

விரிவுரையாளர் (பகுதி-நேரம்),
தமிழ்த் துறை,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்,
திருப்பதி - 517 502.

58

கரகாட்டம்

வெ. தனராசு

இசையும், நடனமும் மிகப் பழங்காலத்திலிருந்து மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக விளங்கி வந்தன. இசைக்கு முந்தியது நடனம் என்று கூறுகிறார்கள். அனைவரும் பாடும்பொழுதும், ஆடும்பொழுதும் தங்களது நெஞ்சையழுத்தும் உணர்ச்சிப் பாரத் திலிருந்து விடுதலை பெறுகின்றார்கள். ஊர் விழாக்கள், திருமணங்கள், தேர்தல் வெற்றி விழாக்கள், பொங்கல் விழாக்கள் எதுவாக இருந்தாலும் அதற்கேற்றதான பாட்டும், ஆட்டமும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

“தொடக்க காலத்தில் தொழில் முறையான ஆட்டக்காரர்கள் இருந்தது இல்லை. எல்லாமே “சமூக நடனம்” என்ற அளவில்தான் இருந்தன.”[1]

“நாட்டுப்புற நடனம் நாட்டுப்புற மக்களால் காலம் காலமாக வளர்க்கப்பட்டு வருகிறது. நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு நாட்டுப்புற நடனமும் இசையும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருக்கிறது.”[2]

நாட்டுப்புற நடனத்தில் மிகப்பழமையான நடனங்களில் ஒன்று கரகாட்டம். சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்ற “குடக்கூத்திலிருந்து இன்றைய “கரகம்” தோன்றியிருக்க வேண்டும். கிருஷ்ண பகவான்

ஒருமுறை மண்ணாலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட குடந்தைத் தலையில் வைத்துக் கொண்டு நடனமாடியதாகப் புராணக் கதைகள் எடுத்துரைக்கின்றன. 'கரகம்' என்ற ஆட்டத்திற்கு ஈடாகத் திருநெல்வேலி "அம்மன் கொண்டாடி" இன்றும் வழக்கில் உள்ளது."[3]

கிராமப்புறங்களில் காளியம்மன், மாரியம்மன் முதலிய நாட்டுப்புறத் தெய்வ விழாக்களின்போது ஆற்றங்கரைகளிலிருந்தோ, நதி தீரங்களிலிருந்தோ அல்லது 'கரகக்கிணறு' ஊரின் ஒதுக்குப் புறத்திலிருக்கும் கிணற்றிலிருந்தோ, சக்திக்கரகத்தை மலர்களால் அலங்கரித்துக் கொண்டு வருவர். "சக்திக்கரகம்" எடுத்து வருபவர் சாமி யாட்டம் ஆடிக்கொண்டு அருளோடு வருவார். தொடக்கக் காலத்தில் "கரகம்" வழிபாட்டோடும் சடங்கோடும் தொடர்புடையதாக இருந்தது.

காலப்போக்கில் "கரகம்" சடங்கு நிலையிலிருந்து விடுபட்டுச் சமுக நடனமாக, தொழில்முறை ஆட்டமாக மாற்றம் பெற்றது எனலாம். (இன்னும் இது போன்ற ஒரு சடங்கு "முளைப்பாரி" என்ற பயிர் வளர்த்து அம்மனை வணங்குவது சடங்காகவே இருத்தலைக் காணலாம்.) ஏனைய கிராமியக் கலைகளைப் போலவே நாட்டுப்புற மக்கள் தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தவும், தொழில்முறையாகவும், பொழுது போக்கிற்காகவும் கரகாட்டத்தை ஆடிவருகின்றனர் எனலாம்.

கரகாட்ட அமைப்ப முறை

பெரும்பாலான நாட்டுப்புற ஆட்டங்கள் வட்ட வடிவ அமைப்பு முறையிலேயே நிகழ்த்தப்பெறுகின்றன. அதைப் போலவே கரகாட்டமும் வட்டவடிவ அமைப்பு முறையிலேயே நிகழ்த்தப் பெறுகின்றது. கோவில் வளாகங்களிலும், திறந்தவெளி அரங்கங்களிலும் ஊர்வலம் செல்லும்போதும் மேளதாளத்தோடும் சாலைகளிலும், இக்கலை நிகழ்த்தப்படுகிறது. பார்வையாளர்கள் இக்கலைஞர்களை சூழ்ந்து கொண்டு கரகாட்டத்தைக் கண்டுகளிக்கின்றனர்.

கரகாட்டத்தில் நையாண்டி மேளம் முக்கிய இடம் வகிக்கின்றது. நையாண்டி மேளம் இசையைத் தொலைதூரத்தில் கேட்டாலே அங்கு கரகாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

கரகாட்டத்திற்குப் பல துணை ஆட்டங்களும் சேர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கரகம், குறவன் - குறத்தி, பபூன் (கோமாளி) காவடியாட்டம், மயிலாட்டம், மாடாட்டம் என்று சேர்ந்த முறையில் கரகாட்டம் கிராமப்புறங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

"கலைகளைப் பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் ஆய்வு செய்த அறிஞர் குவின்ட்டிலியான் என்பார், படித்தவர்கள் கலையின் காரணத்தைப் புரிந்து கொள்கிறார்கள், படிக்காதவர்கள் கலையின் இன்பதை மட்டுமே அனுபவிக்கிறார்கள் என்பார்"[4]

கரகாட்ட உடை

கரகாட்டம் ஆடத் தொடங்குவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்னர் கரகாட்டக் கலைஞர்கள் ஒப்பனை செய்து கொள்கிறார்கள். வண்ண வண்ண உடைகளை ஆட்டத்தின்போது அணிந்து கொள்கிறார்கள். கரகாட்டம் ஆடுவதற்கென்றே இவர்கள் தனி உடையைத் தைத்துவைத்துக் கொள்கிறார்கள்.

செம்பு அலங்காரம்

கரகச்செம்பை வண்ண வண்ணக் காகிதங்களால் அலங்கரித்துக் கொள்கிறார்கள். செம்பின் உச்சியில் கிளிபொம்மையை வைத்து அழகு படுத்துகிறார்கள். சில நேரங்களில் கரகச்செம்பில் வேப்பிலைக் கொத்து வைத்தும் கரகாட்டம் ஆடுகிறார்கள். தொடக்கக் காலத்தில் மண்கர கங்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. மண்கரகங்களுக்குப் பதிலாகப் பித்தளைச் செம்பைத் தற்போது கரகமாகப் பயன்படுத்து கின்றனர்.

கரகாட்டக் குழுவினர் ஆடத் தொடங்குவதற்கு முன்னர் நையாண்டி மேளத்தைத் தொட்டுக் கும்பிட்ட பிறகே கரகாட்டம் ஆடத் தொடங்குகின்றனர். முதலில் இருபெண்கள் கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு கரகாட்டம் ஆடுகின்றனர். சுமார் ஒரு மணிநேரம் ஆகிய பிறகு குறவன் - குறத்தி, பபூன் அல்லது கோமாளி ஆட்டமும் இந்நிகழ்ச்சியோடு சேர்ந்தே கிராம விழாக்களில் நடைபெறுகிறது.

கரகாட்டத்தின் முடிவில் "கரகம்" ஆடும் கலைஞர்களுடன் குறவன் - குறத்தி, பபூன் முதலிய அனைவரும் சேர்ந்து கையில் வண்ணக் கைக்குட்டையை வைத்துக் கொண்டு ஒயிலாட்டம் போல ஒரு நடனம் ஆடுகின்றனர். கரகாட்டத்தில் பல துணை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

கரகாட்டத்தில் பல சாகசம்

வாழைக்காய் வெட்டுதல்

கரகம் ஆடிக்கொண்டிருக்கும்போது ஒருவரைப் படுக்க வைத்து அவரது நெஞ்சில் வாழைக்காயை வைத்து விடுகின்றனர். கரகாட்டம்

ஆடுபவர் கண்ணைக் கட்டிக்கொண்டும் கரக ஆட்டம் ஆடிக் கொண்டும் கரகம் கீழே விழாமல் கத்தியால் வாழைக்காயை வெட்டு கிறார். இதனைப் பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கண்டு களிக்கின்றனர்.

சேலை கட்டுதல்

கரகச்செம்பைத் தலையில் வைத்துக் கொண்டும், ஆடிக் கொண்டும் தரையில் விரித்திருக்கும் ஒரு முழுநீளச் சேலையை ஒரு முந்தானையை முதலில் இடுப்பின் ஒரு பகுதியில் செருகி, பின் சேலையில் உருண்டு, உருண்டு செம்பு கீழே விழாமல் கொசுவம் வைத்து சேலையை இடுப்பில் கட்டி மறு முந்தானையை மாராப்பு போட்டு முடித்தவுடன் கரகம் ஆடுபவர், செம்பு கீழே விழாமல் எழுந்து ஆடுவார். பார்வையாளர்கள் பரவசத்தில் கைதட்டி ரசித்து கலைஞர்களை உற்சாகப்படுத்துவர்.

இமையால் ஊசி எடுத்தல்

தரையில் மண் குவித்து அதில் ஒரு ஊசியை நட்டு வைத்திருப்பர். கரகாட்டம் ஆடுபவர், ஆட்டம் ஆடிக்கொண்டே தரையில் இருக்கும் கரகம் கீழே விழாமல், கண் இமைகளால் ஊசியின் முனையைக் கவ்வி எடுத்து எழுவார். இதைப் பார்த்துப் பார்வையாளர்கள் உற்சாகமடைந்து கை தட்டி ஆரவாரம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்து கின்றார்கள்.

தீப்பந்த விளையாட்டு

கரகாட்டக்காரர்கள் வட்டமான தீப்பந்தத்திற்குள் நுழைந்து வெளியே வருகின்றனர். இது ஆபத்தான விளையாட்டாகும். கரகாட்டக்காரர்கள் சிறு ஏணிமீது ஏறி தீப்பந்த விளையாட்டு செய்து காட்டுவதும் உண்டு.

பித்தளைத் தட்டு ஆட்டம்

கரகாட்டம் ஆடுபவர் அகன்ற பித்தளைத் தட்டுமீது இருகால் களையும் வைத்துத் தட்டை நகர்த்திக் கொண்டே கரகாட்டம் ஆடுகின்றார்.

சைக்கிள் ஓட்டுவது

மதுரையைச் சார்ந்த கரகாட்டக் கலைஞர் லட்சுமி சைக்கிள் பெடல் மீது நின்று கொண்டு சைக்கிள் ஓட்டிக் கொண்டே கரகாட்டம் ஆடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இவ்வாறு, கரகாட்டக் கலைஞர்கள் கரகாட்டத்தில் பல சாகசச் செயல்களை நிகழ்த்திக் காட்டிக் கரகம் ஆடி வருகின்றார்கள். மேலும், இக்கரக ஆட்டத்தைக் கற்ற கல்லூரி மாணவர்களும் கல்லூரி ஆண்டு விழாவிலும், இளைஞர் நலத்துறை விழாக்களிலும் மேற்கூறிய சாகசச் செயல்களை நிகழ்த்திக் காட்டி, மாணவர் மத்தியில் கிராமியக் கலைக்கு இருக்கும் சிறப்பையும் பெருமையையும் ஆடும் மாணவக் கலைஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

பார்வையாளர்கள்

கரகாட்டம் இரவு எட்டு மணிக்குத் தொடங்கி அதிகாலை ஆறு மணிவரை நடைபெறுகின்றது. விடிய விடிய கரகாட்டத்தை நடத்துகின்றனர். கிராம மக்கள் அனைவரும் திரளாக வந்து கூடி விடியவிடியக் கரகாட்டம் பார்க்கின்றனர். "கிராமப்புற மக்கள் கரகாட்டத்திற்கு பேராதரவு தந்து வருகின்றனர். கிராமப்புற மக்களால்தான் நையாண்டி மேளமும் கரகாட்டமும் வளர்ந்து கொண்டு வருகின்றது, என்று கரகாட்டக் கலைஞர் பேட்டியின்போது தெரிவித்தார்.[5]

கரகாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யாரும் எழுந்து செல்வதில்லை. கரகாட்டக் கலைஞர்களுக்குப் பார்வை யாளர்கள், ரூபாய் நோட்டு மாலைபோடுதல், ரூபாய் நோட்டுகளை அவர்கள் தோள்களில் குத்திவிடுவது, பொட்டலமாக நிறைய காகிதங்களால் சுற்றிப் பரிசுப்பொருள் தருதல் போன்ற சன்மானங்களை வழங்குகின்றனர். இது நேரடியாக களஆய்வில் கட்டுரையாளர் கண்ட காட்சியும் கருத்தும் ஆகும். (இரண்டெல்லைப்பாறையின் காளியம்மன் கோவில் திருவிழாவின்போது கண்டது 24.04.2008.)

இன்றைய சூழலில் கிராம விழாக்களில் மட்டும் ஆடிவந்த கரகாட்டம் வளர்ச்சியுற்று தேர்தல் விழாவிலும், அரசியல் கட்சிகளின் மாநாட்டு விழாக்களிலும், பொங்கல் விழாக்களிலும் ஆடப்படுகிறது. திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவ்வாட்டம் இடம்பெறும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

"கலையின் நோக்கம் அடிப்படையில் இன்பம் ஊட்டுவது. இந்த இன்பம் வெறும் புலன் இன்பமாக மட்டும் நின்று விடுவதில்லை. வாழ்க்கையைப் பற்றிய நுண்ணுணர்வை மனிதனிடம் ஏற்படுத்த கலைகள் பயன்படுகின்றன என்ற எழுத்தாளர் பி.சி. கணேசன் அவர்களின் கருத்து ஒப்புநோக்கத்தக்கது."[6]

குறிப்புகள்

1. வி.வி. சடகோபன் (இ.அ) தென் இந்திய கிராமிய நடனங்கள், ப. 9
2. மேலது, ப. 9
3. மேலது, ப. 10
4. பி.சி. கணேசன், கலை வாழ்க்கைக்கு அவசியம் தானா?, ப. 5
5. அ. தேரடியான் (ககாட்டக் கலைஞர் - தோட்டவித்துக் கிராமம் திண்டுக்கல் பேட்டி நாள், 22.02.2009.
6. பி.சி. கணேசன், கலை வாழ்க்கைக்கு அவசியம் தானா?, ப. 29

◆

தமிழ்த்துறை,
அருள்மிகு பழனியாண்டவர்
கலைப் பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

59
தெருக்கூத்து

வ. திருஞான பழனியம்மாள்

முன்னுரை

நாட்டார் கலைகளின் அழகியல் கூறுகளையும் வழிபாட்டுக் கூறுகளையம் ஒரே நேரத்தில் தக்கவைத்துக் கொண்டும், மரபின் உறவை முழுதுமாக அறுத்துக் கொள்ளாமலும், பிறகலை மரபுகளில் முழுதுமாக நனைந்து தன் இயல்பை விட்டுக் கழன்று விடாமலும் ஜீவனோடு போராடி வரும் கலை தெருக்கூத்து ஆகும். பண்டைப் புராணக்கதை சார்ந்த ஒரு குறிப்பிட்ட கலையைக் குறிப்பது தெருக்கூத்தாகும். தெருக்கூத்து பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

தெருக்கூத்து நிகழும் இடம்

தெருக்கூத்து வட, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலும் சேலம், செங்கல்பட்டு, சென்னை போன்ற பகுதிகளிலும் நிகழ்கிறது. நாட்டார் தெய்வக்கோயில் வழபாட்டுக் கூறுகளுள் ஒன்றாகக் கருதப்படும் இக்கலை நாட்டார் தெய்வ விழாக்களில் நிகழ்கிறது. பெரும்பாலும் பங்குனி முதல் ஆடி வரையுள்ள நாள்களில் அம்மன் கோவில் விழாக்களில் இது நிகழ்கிறது.

தெருக்கூத்து நிகழும் காலம்

கூத்து நிகழும் நேரம் கோவிலின் நிதியைப் பொறுத்து அமையும். இரவு பத்து மணிக்குத் தொடங்கி விடியவிடியக் கூத்து நிகழ்வதுண்டு.

இக்கலை அம்மன் கோவில்களில் ஆடப்படும் வழிபாட்டுக்கலை எனினும் கோவிலில் நேர்ச்சைக்காகவும், இறந்தவர் வீட்டில் ஆன்மாவின் நிம்மதிக்காகவும், பிற நிலைகளிலும் இது நிகழ்கிறது. இது மிக அபூர்வமாகவே நடக்கும்.

தெருக்கூத்து நிகழும் ஆடுகளம்

தெருக்கூத்துப் பாடலும் உரையாடலும் கலந்த ஒருவகை நாடகம். இதிகாசம், புராணம் ஆகியவற்றின் கதை நிகழ்ச்சிகளைப் பாடுபொருளாகக் கொண்டது. பெரும்பாலும் கோவில் விழாக்களில் கோவிலை அடுத்த பகுதிகளில் நிகழ்வது. மரபு வழியே இக்கலையைப் பேணுவோரும் அல்லது கூத்து நிகழும் கோவிலைச் சார்ந்தோரும் இக்கலையை நிகழ்த்துகின்றனர். குறிப்பிட்ட சாதிக்கு உரிய கலை அன்று இது.

தெருக்கூத்து கோவிலை அடுத்த முச்சந்தியிலோ, மேடான திறந்த வெளி அரங்கிலோ நிகழ்கிறது. கூத்து நிகழ்வதைப் பொறுத்து இது கிடக்கை நிலையிலோ செங்குத்து நிலையிலோ அமைந்திருக்கும். பார்வையாளர் அமர்ந்திருக்கும் இடங்களில் வந்து நடிகர் ஆடவும் செய்வார். அது நிகழும் கதையின் தன்மையைப் பொறுத்தது. இன்றைய நவீன நாடங்களில் காணப்படும் அரங்கக்கலை உத்தி, தெருக்கூத்தில் யதார்த்தத்துடனும் உணர்வுடனும் முழுப் பரிமாணத்துடனும் செயல்படுகிறது.

தெருக்கூத்துப் பார்வையாளர்கள் வெட்டவெளியில் கூத்து நடப்பதையே விரும்புகின்றனர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தெருக்கூத்து நிகழ்ந்த ஆடுகளமும், அரங்கமும் இன்று நிகழ்கின்ற நிலையில் இருந்து வித்தியாசமாகவே இருந்தன. ஆடுகளத்தை ஒட்டிய இடத்தில் ஒப்பனை அறை அமைந்திருக்கும். ஒப்பனை அறையின் முன்னே திரைச்சீலை தொங்கிக் கொண்டிருக்கும்.

ஒப்பனை அறையின் இடப்புறத்தில் பக்க வாத்தியக்.ரர்கள் அமர்ந்திருப்பர். கூத்து நிகழும் இடத்திற்கும் பார்வையாளர்களுக்கும் இடைப்பட்ட இடத்தில் பெட்ரோமாக்ஸ் விளக்கு அல்லது காஸ் விளக்குகள் தொங்கும். மின்விளக்கைப் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை. பார்வையாளர் மின்விளக்கை விரும்புவதும் இல்லை. ஒலி-பெருக்கியைப் பயன்படுத்துவது மிகவும் அரிதாக உள்ளது. பார்வையாளர்கள் கூத்தை மூன்று பக்கங்களிலிருந்தும் பார்க்கின்றனர்.

தெருக்கூத்துக் கலையின் பாடுபொருள்

தெருக்கூத்துக்குப் பாடுபொருளாக இருப்பவை இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசக் கதைகளும் பிற புராணக் கதைகளும்தாம். புராணக் கதைகளில் திருவிளையாடல் கதை, மன்மதன் கதை, திருத்தொண்டர் புராணக் கதை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். புராணங்களுடன் நேரடியாக அன்றிப் புராணங்களைச் சார்ந்து நிற்கும் கதைகளும் பாடுபொருளாய் உள்ளன. (எ.டு. சங்கையம்மன் கதை). இவை தவிரக் கட்டபொம்மன் வரலாறு, தேசிங்குராசன் கதை ஆகிய கதைகளும் கூத்துப் பொருளாய் உள்ளன.

குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும் சில புராணக் கதைகள் கூத்தாக நடத்தப்படுகின்றன. மழைக்காக பாரதக் கதையின் ஒரு பகுதியான விராட பருவம் நிகழ்த்துதல், இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காகக் கர்ணமோட்சம் நிகழ்த்துதல் ஆகியன இன்றும் நடைமுறையில் உள்ளன. தீண்டாமை ஒழிப்பு, குடிப்பழக்கத்தின் தீமை, சிறுசேமிப்பின் சிறப்பு ஆகியன கூத்தினிடையே பிரச்சாரம் செய்யப்படும் போக்கை இன்று பரவலாகக் காணமுடிகிறது.

தெருக்கூத்து ஒரு வழிபாட்டுக் கலை

தமிழக நாட்டார் கலைகளை நிகழும் இடங்களின் அடிப்படையில் கோவில் அல்லது வழிபாடு சார்ந்தவை, கோவில் சாராதவை என இருவகையில் பகுக்கலாம். கோவில் அல்லது வழிபாடு சார்ந்த கலைகள் தொடர்ந்து வாழ்ந்து வருவதையும் தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்வதையும் இன்று காணமுடிகிறது. கணியான் ஆட்டம், களம் எழுத்தும் பாட்டும், வில்லிசை போன்றன இதற்கு எடுத்துக்காட்டுகள். தெருக்கூத்தும் இவ்வரிசையில் அடங்கும்.

தெருக்கூத்து கோவிலும், வழிபாடும் சார்ந்த கலை. இதற்கும் வழிபாட்டுக் கூறுகளுக்கும் உள்ள தொடர்பு இதை உறுதிப்படுத்தும்.

1. இக்கலை பாஞ்சாலி அம்மன், மாரி அம்மன், காளி அம்மன், கங்கை அம்மன், வட்டபுரி அம்மன் போன்ற அம்மன் கோவில்களில் கட்டாயம் நிகழ்வது.
2. கோவிலின் கருவறையின் முன்திடலில் கருவறைத் தெய்வத்தைப் பார்த்துக் கூத்து நடைபெறுவது.
3. பிற கோவில் சார்ந்த நாட்டார் கலைகளைப்போன்று கூத்து ஆரம்பிக்கும் முன்னர் பூசை நிகழ்த்துவது; அதில் கூத்துக்காரர் களும் கலந்து கொள்வர்.

4. கூத்து நிகழ்ச்சிகளில் ஒன்றான அர்ஜுனன் தபசு நிகழ்ச்சியின் போது வழிபாடு செய்வது; இதைப் பார்வையாளர் கலைக் கண்ணோட்டமின்றி வழிபாட்டின் கூறாகக் கருதி வழிபடுவது.
5. திரௌபதி துகில் உரியும் காட்சியில் கற்பூரம் பொருத்திப் பாஞ்சாலித் தாயிடம் மன்னிப்பு வேண்டுவது.
6. கூத்தை நிகழ்த்தும் கலைஞர் கூத்து நிகழ்த்துகிறோம் என்று கருதுவதை விட, வழிபாட்டின் கூறுகளைச் செய்கிறோம் என்று நினைப்பது.
7. துரியோதனின் கொடும்பாவியை எரித்தல்; அந்த நெருப்பை மிதித்துச் செல்லும் தீமிதி நிகழ்ச்சி கூத்தின் பகுதியாக இருப்பது.

தெருக்கூத்து கலையில் ஒப்பனை பெறும் இடம்

தெருக்கூத்து இதிகாசம், புராணம் தொடர்பான கதைகளைப் பாடுபொருளாகக் கொண்டிருப்பதால் பாத்திரங்களுக்கேற்ப ஒப்பனை செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒப்பனைப் பொருள்களில் கிரீடம், புஜகீர்த்தி, வைக்கோல் பாவாடையும் முக்கியமானவை ஒப்பனைப் பொருள்களும் ஆடைகளும் வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம், கருப்பு, காவி ஆகிய வண்ணங்களில் அமைந்திருக்கும். அணிகள் மரக்கட்டை அல்லது தாளால் செய்யப்பட்டிருக்கும். அதன்மேல் கண்ணாடி, பாசி போன்றன பதிக்கப்பட்டிருக்கும். தெருக்கூத்து ஒப்பனைப் பொருள்கள் செய்யப்படும் மரம் மிக இலேசாக இருக்கும். இவை புன்னை, அத்தி, கல்யாண முருங்கை ஆகிய மரங்களால் செய்யப் படும். பாத்திரங்களின் தகுதிக்கேற்ப அவர்களது ஆடை அணிகள் அமைந்திருக்கும்.

கட்டியங்காரனுடைய ஒப்பனையில் வரையறை கிடையாது. பேண்ட், சட்டை அணிந்துகொண்டும்கூடக் கட்டியங்காரன் வருகிறான். தெருக்கூத்தில் பெண்கள் நடிப்பதில்லை. ஆண்களே பெண்வேடம் புனைகின்றனர். புராண ஆண் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஆடை, கிரீடம், வைக்கோல் பாவாடை ஆகியன அணிந்து வருகின்றனர். ஆனால், பெண் வேடத்திற்கு இன்று நடைமுறையில் உள்ள ஒப்பனையே செய்யப்படுகிறது. திரௌபதியாக வரும் பெண் சேலையுடுத்திச் சாதாரணமாகவே வருகிறாள்.

தெருக்கூத்து ஒப்பனையுடன் கர்நாடக யட்சகானம், கேரள கதகளி ஆகிய கலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொதுவான ஒற்றுமையைக் காண முடிகிறது.

தெருக்கூத்துக் கலையில் பரதக் கூறுகள்

நாட்டார் நாடகத்தன்மை கொண்ட தெருக்கூத்து உரை யாடலும் இசைப்பாடலும் கலந்தது. நடனக் கூறுகளைக் கொண்டது. தெருக்கூத்துப் பாடல்கள் நாட்டார் பாடல்களின் சந்தத்தை அடக்கியது. ஒரு வகையில் இதைச் சிந்து எனக் கூறுவர்.

தெருக்கூத்தின் ஆட்டத்தில் அபிநயம் என்று ஒன்று இல்லை. இதன் அபிநயம் நடிப்பு என்ற மொத்தப் பொருளில் உள்ளது. கதகளியின் அபிநயம் நுணுக்கப் பொருளாக ஹஸ்தங்கள் என்ற முத்திரையில் அமைந்தது போன்று தெருக்கூத்தில் இல்லை என்பார் ந. முத்துச்சாமி. “கூத்தின் அசைவுகள் சதிர் என்ற நாட்டியக் கூறுகளில் இருந்து பெறப்பட்டன. இது பரதநாட்டியத்துடன் தொடர்புடையது தான்” என்கிறார் டாக்டர் பத்மா சுப்பிரமணியம்.

தெருக்கூத்தில் கட்டியங்காரனின் பங்கு

வடமொழி நாடகங்களில் வரும் விதூஷகன் அல்லது சூத்திர தாரியைப் போன்றவன் கட்டியங்காரன். ஆனால், அதில் இருந்து வேறுபட்டவன். தோல்பாவைக் கூத்தில் வரும் உச்சிக்குடும்பன், உழுவத்தலையன் போன்ற பாத்திரங்களைப் போன்றவன். இவன் தெருக்கூத்தின் நிகழ்ச்சித் தொடக்கத்தில் தோன்றுவான். நாடகம் பற்றி வந்து விளக்கம் அளிப்பவன்; நாடகத் தலைவனுக்குச் சேவகனாக வருபவன்; கதாபாத்திரங்களின் பாடல்களுக்கு விளக்கம் அளிப்பவன் என்ற பல நிலைகளில் இவன் வருகிறான்.

கதாபாத்திரங்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே உள்ள உணர்வைச் சமநிலைக்குக் கொண்டு வருபவனும் இவன்தான். கதாபாத்திரங்களுக்கு உரிய வாள், கதை போன்ற உபகரணங்களைக் கொடுப்பவனும் கட்டியங்காரனே. சமகால நிகழ்ச்சிகளைக் கதையி னூடே சொல்லுவதும், கதைப்போக்கின் இறுக்கத்தைத் தளர்த்துவதும் இவன்தான். திரௌபதி துகிலுரிதல் காட்சியில் துரியோதனின் ஆவேச ஆட்டத்தை மட்டுப்படுத்துவதும், திரௌபதி துகிலை விட்டுக் கொடுக்கும்போது அவள் மயக்கத்தைப் போக்குவதும் இப்படிப் பல நிலைகளில் கட்டியங்காரன் தெருக்கூத்தில் பங்கேற்கிறான்.

தெருக்கூத்துக் கலைஞர்கள்

பொதுவாக நாட்டார் கலைகளை நிகழ்த்தும் கலைஞர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

1. முழுநேரக் கலைஞராகக் கலையை நம்பி வாழ்கின்றவர்.
2. கலையைப் பகுதி நேரத் தொழிலாகக் கொண்டவர்.
3. தங்களுக்குத் தொடர்புடைய கோவில்களிலோ ஊர்களிலோ மட்டும் நடத்துபவர்.

என மூன்று வகையினர். தெருக்கூத்துக்கும் இது பொருந்தும்.

அரிஜனம் முதல் அந்தணர்வரை எல்லாச் சமூகத்தினரும் இக்கலையை நிகழ்த்துகின்றனர். கணியானாட்டம், தேவராட்டம் போன்று குறிப்பிட்ட சாதிக்கு மட்டும் உரிய கலையன்று இது. எல்லாச் சமூகத்தினருக்கும் இது பொதுவானது.

கலைஞர்கள் கலைநிகழ்ச்சி இல்லாத காலங்களில் பெரும்பாலும் விவசாயத் தொழில்களைச் செய்கின்றனர். இந்த நாள்களில் இளங்கலைஞர் மூத்த கலைஞர்களிடம் கலை பயில்கின்றனர். ஆரம்பத்தில் சிறிய பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர். பின் பெரிய பாத்திரங்களுக்குரிய பாடல்களையும் உரையாடல்களையும் மனப்பாடம் பண்ணிய பிறகு, நடிப்பதற்கும் ஆட்டத்திற்கும் உரிய தயாரிப்பைச் செய்கின்றனர்.

தெருக்கூத்துக் கலைஞர்கள் நடிக்கும்போது தாம் ஏற்கும் பாத்திரமாகவே மாறி விடுவர். பார்வையாளர்களும் மெய்மறந்து அது பாத்திரமல்ல, உண்மை என்ற உணர்வை எய்துவர்.

முடிவுரை

தெருக்கூத்து நிகழும் இடம், காலம், ஆடுகளம் முதலியன பற்றி இக்கட்டுரையில் ஆராய்ந்தோம். தெருக்கூத்துக் கலையின் பாடுபொருள் பற்றி நன்கு விளக்கப்பட்டுள்ளது. தெருக்கூத்து ஒரு வழிபாட்டுக் கலை என்பதை உறுதிப்படுத்துகின்றன. தெருக்கூத்துக் கலையில் ஒப்பனை பெறும் இடத்தையும் தெருக்கூத்துக் கலையில் பரதக் கூறுகள் பற்றியும் அறிந்தோம். தெருக்கூத்தில் கட்டியாரங்காரனின் பங்கு பற்றியும் தெருக்கூத்துக் கலைஞர்கள் பற்றியும் ஆராய்ந்தோம்.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
காளியம்மாள் கல்வியியல் கல்லூரி,
திருமாநிலையூர், கரூர்-3.

60

தெருக்கூத்து

R. திலகம்

முகவுரை

தமிழர் போற்றி வளர்த்த கலைகளில் கூத்தும் ஒன்று. இசைக் கலையோடு இணைந்து வளர்ந்த கலை இது. இக்கலை ஆடவர் பெண்டிர் இருசாரருக்கும் பொதுவானதாகக் கருதப்படுகின்றது. விழாக்களின்போது கூத்தர்கள் மக்களைத் தம் ஆடல் பாடல்களில் மகிழ்வித்தனர். இவர்களுக்கு கூத்தர், பொருநர், விறலியர், கோடியர் எனப் பலபெயர்கள் உண்டு. தமிழில் கூத்துக் கலையின் இலக்கணங்களை உணர்த்தும் நூல்கள் பல உண்டு. இங்கு தெருகூத்தின் பெருமையைப் பற்றி காண்போம்.

கூத்து

கூத்து பழமையின் சின்னமாக, பண்பாட்டின் எச்சமாக விளங்கு கின்றது. தெருகூத்தின் வளர்ச்சிதான் நாடகமெனில் மிகையாகாது. கிராமங்களில் திறந்த வெளிகளில் நடைபெறும் இக்கூத்து மக்களுக்காக நிகழ்த்தப்படுவதாகும். நாட்டுப்புறக் கலைஞர்களே இக்கூத்துகளை நிகழ்த்துகிறார்கள். இதைக் கிராமிய நாடகங்களாகவும் கருதுவதுண்டு என்பதை,

"கிராமிய நாடகத்திற்குத் தேசிய முக்கியத்துவம்
உண்டு. அது நாட்டின் கலாச்சார, பாரம்பரியத்தின்
முக்கிய அம்சம்; நாட்டுமக்களின்
உள்ளக் கருத்து; குணச்சிறப்பு; கலை,
பண்பாடு, வாழ்க்கை முறை முதவியவற்றை
எடுத்து விளக்குவது அக்கலை."[1]

என்று திரு. சு. வித்தியானந்தன், நாட்டுப்புற நாடகத் தன்மைகளைப் பற்றி விரித்துரைக்கிறார்.

கூத்துகளை நிகழ்த்துகின்றவர்களைக் கூத்தாடிகள் என்று கூறுவர். கூத்தானது விடியும்வரை நடைபெறும் என்பதை,

"கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்"[2]

என்னும் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

கூத்துகளின் வகைகள்

சங்க காலத்தில் குரவைக் கூத்து பெரும்பாலும் இருந்தது என்றும் இதன் கிளையாக ஆய்ச்சியர் குரைவை, குன்றக்குரவை, போன்றவை திகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. "சிலப்பதிகாரம் பதினோருவகைக் கூத்துகளைக்" கூறுகின்றது. பாவைக்கூத்து, மரப்பாவைக் கூத்து, தோற்பாவைக் கூத்து, கழைக்கூத்து, தெருக்கூத்து போன்றவையும் கூத்துகளின் வகைகளாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

"பழங்காலத்தில் வெறிக்குரவை, துணங்கை,
வெளிக்கூத்து, வானமலை, துடிக்கூத்து,
கழல் நிலை போன்ற போர்க்கூத்துகளும்,
குரவை, துணங்கை, வெறியாட்டு,
கொடுகொட்டி, பாண்டுரங்கம், கபாலம்,
வள்ளிக்கூத்து, பாவைக்கூத்து போன்ற
சமயம் தழுவிய கூத்துகளும், துணங்கை,
ஆரியக்கூத்து, உராக் கூத்து
போன்ற பொழுதுபோக்குக் கூத்துகளும்
இருந்திருக்கின்றன"[3]

என்கிறார் ஜான் ஆசீர்வாதம்.

கூத்து நூல்கள்

சங்க இலக்கியத்தில் கூத்து நூல்கள் பற்றிய குறிப்பேதும் இல்லை. என்றும், பழைய கூத்து நூல்கள் பல இருந்து அழிந்து விட்டன என்றும்

உரையாசிரியர்கள் கூறுகின்றனர். மாதவி "நாடக நன்னூல்" நன்கு கடைப்பிடித்து ஆடினாள் என்பதிலிருந்து நாடக - கூத்து நூல் இருந்ததை அறிய முடிகின்றது. "யாப்பருங்கல உரையின் வழிச் செயிற்றியம், சயந்தம், பொய்கையார் நூல் போன்றவையும் "விளக்கத்தார் கூத்து" என்ற ஒன்றும் இருந்துள்ளது தெரிய வருகிறது. இன்னும் 'செய்ன முறை', 'மதிவாணனார் நாடகத்தமிழ்' என்னும் நூல்களும் கூத்து நூல்களாகக் கருதப்பட்டன.

சிலம்பும் கூத்தும்

சிலப்பதிகாரம் கூத்துக்கலையின் பெருமையைக் கூறுகின்றது. அக்காலத்தில் கூத்துக்கு அறுபத்து நான்கு கலைகள் பற்றிய அறிவும் தேவைப்பட்டதாம்.

> "மன்னர்க்கு மட்டும் உரிய கூத்துக்கள் வேத்தியல்
> என்றும், மற்றவர்க்கு உரியவை பொதுவியல்
> என்றும் அறியப்பட்டதைக் கூறுகின்றது"[4]

ஆடல், ஆசானின் தன்மையைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

> "இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
> பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துக்
> பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும்
> மதிமான் கொள்கையின் பிளங்க அறிந்து"[5]
>
> அரங்கேற்று காதை வரி (12-15)

என குறிப்பிடுகின்றார்.

ஆடலாசான் அகக்கூத்து, புறக்கூத்து, என இருவகைக் கூத்தின் இலக்கணமும் நன்றாக அறிந்தவன் ஆவான். அவற்றின் பல்வகைப் பகுதிகளான, கூத்துகளையும் விளங்கு உறுப்புகளுடன் இணைத்துப் பதினோரு வகையான ஆடல்களும், அவற்றிற்கு இசைந்த பாடல் களையும், விதிக்கப்பட்ட பழைய மரபுகளின்படி விளக்கமாக அறிந்தவனாகவும், அவன் இருந்தான் என்கிறார்.

தெருக்கூத்து

தமிழகத்தில் அன்றாடம் காலை முதல் மாலை வரை, உழைக்கும் மக்களுக்கு உள்ளத்தில் ஏற்படும் சோர்வையும், உடலில் ஏற்படும் வலியையும் போக்குவதற்காக மக்களால் நடத்தப்படுவது தெருக்கூத்து ஆகும். இதனால், மனதிற்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிப்

பதற்காக நான்கு தெருக்கள் கூடும் இடமாக முச்சந்தில் நடைப் பெறுவதால் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக அமர்ந்து பார்க்கும் நோக்கில் நடத்தப்படுவது தெருக்கூத்தாகும்.

“தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்தாகும்.
தெருக்களில் ஒப்பனையுடன் ஆடிப் பாடி செல்வதுண்டு.''
தெருக்கூத்து என்பது நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்தது.
நாடக மேடையோ காட்டுத் திரைகளோ இல்லாமல்
எளிய முறையில் தெருவில் திறந்த வெளிகளிலும்
இக்கூத்துப் பெரும்பாலும் இரவு நேரங்களில் நடைபெறும்”[6]

என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

தெருக்கூத்து நடைபெறுவதற்கான காரணங்கள்

தமிழகத்தில் கிராமங்களில் இன்றும் மக்கள் தங்களின் நலனுக் காகவும் ஊரின் தேவைகளுக்காகவும், கூத்து நடத்துகின்றனர். மழையை வேண்டுவோர் விராட பருவத்தையும், பிள்ளைப் பேற்றை விரும்புவோர் சத்தியவான் சாவித்திரியையும் நடத்துவர். இதன் மூலம் தங்களின் தேவைகளும் விருப்பங்களும் நிறைவேறுவதாக மக்கள் கருதுகின்றனர். தெருக்கூத்தில் சில மரபுகள் பின்பற்றப்படுகின்றன. துதி, கட்டியக் காரன் வரவு, கதாபாத்திரங்கள் திரைக்குள்ளிருந்து பாடுவது, திரைக்கு வெளியே பாடுவது, அறிமுகப்படுத்திக் கொள்வது, கதை கூறுவது, மங்களம் பாடுவது போன்ற மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

தெருக்கூத்தின் முக்கிய அம்சங்கள்

தெருக்கூத்தின் கருக்களைக் கலைஞர்கள் புராண இதிகாசங்களில் இருந்து பெற்றுக் கொள்கிறார்கள். பாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், வள்ளியம்மாள் கதை ஆகியவை இக்கலைஞர்களால் நடிக்கப் படும். ஆடலும், பாடலும் கூத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதப்படு கின்றன. இவர்களின் கதைகள் இதிகாசம், பக்தி, வரலாறு, இனச்சார்பு, நவீனம் என அமைவது தெருக்கூத்தின் முக்கிய அம்சங்களாகும்.

சங்க காலத்தில் எல்லாத்துறைகளிலும் ஆடலும், பாடலும் அதிகமாகப் பரவியிருந்தன. பண்டையோர் ஆடிய ஆடல்களில் வள்ளிக் கூத்து என்பது ஒன்று. நாட்டுக்கு வளமும், வெற்றியும் தந்த வள்ளியின் பெருமைகளைப்பாடி ஆடினர். தொல்காப்பியர் இதனை “வாடா வள்ளி” என்பார். வாடா வள்ளியினால் வளம்பல தரும் நாடுகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை,

"வாடா வள்ளியின் வளம் பல தருஉம்
நாடுபல கழிந்த பின்றை"[7]
- பெரும்பாண் (370-371)

என்கிறது.

இக்கூத்தை ஆடவரும், பெண்டிரும் ஆடுவர். இஃது இழிந்தோர் காணும் கூத்தாக கூறப்பட்டது என்பர்.

"கட்டை கட்டியாடும் கூத்து என்ற
பெயரில் இன்றும் கட்டைகளாகிய
அணிகலன்களுடன் ஆடியும் பாடியும்
நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து"[8]

என்கிறார் டாக்டர் அ.அறிவுநம்பி.

தெருக்கூத்து நடைபெறும் இடங்கள்

பொதுவாகத் தமிழகத்தின் வடமாநிலங்களில் தெருக்கூத்து நடைபெறுகின்றது. கிராமக் கோயில்களில் பங்குனி மாதம் தொடங்கி ஆடி மாதம் வரை நடைபெறும். குறிப்பாகப் பாரதக் கூத்தானது திரௌபதை அம்மன் கோவிலருகில், திறந்த வெளிகளில் நிகழும். கொஞ்சம் மேட்டுப் பகுதியில் கம்பங்களை நட்டு, விளக்குகளைக் கட்டிக் களரியை உருவாக்குவர். ஒரு பெஞ்சின்மீது இசைக் கலைஞர்கள் அமர்ந்திருப்பர். மூன்று பக்கங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருப் பர். களரிக்கட்டி, கட்டியங்காரன் அறிமுகம் செய்ய இரவு பத்துமணி வாக்கில் தொடங்கும் தெருக்கூத்து விடிய விடிய நடைபெறும்.

"தெருக்கூத்து தமிழ்நாட்டின் கிராமிய
அரங்கக்கலை. உண்மையில் இதுதான்
தமிழ் அரங்கக் கலையாக இருந்திருக்க
வேண்டுமென்று தோன்றுகிறது. கண்
முன்னே பிரமாதமான வடிவில் கூத்து
இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில்
பல திசைகளில் உத்வேகம் அளிக்கக் கூடிய
சக்தியைக் கொண்டுள்ளது கூத்து"[9]

என்கிறார் ந.முத்துசாமி.

விடுதலைப் போராட்டத்தில் தெருக்கூத்து

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாடகங்கள் தெருக்கூத்துப் பாணியில் நடைபெற்று வந்தன. இந்நாடகக் கூத்துகள் சிற்றூர் தோறும்

விடுதலை வேட்கையை மக்களிடையே தோற்றின. தமிழ்நாட்டில் தெருக்கோடியில் வெள்ளயரை எதிர்த்து வீர முழக்கம் செய்து தூக்கு மேடை ஏறிய கட்டபொம்மனை அறியாதவர் யார்?

பாமர மக்களுக்குப் புரியும் வண்ணம் மிகவும் எளிய நடையில் அமைந்த பாடல்கள் தெருவெல்லாம் முழங்கியதை,

"வாராண்டா வாராண்டா வெள்ளைக்காரன்
வரட்டும் பார்க்கிறேன் தொப்பிக்காரன்
போராண்ட மன்னர் பிறந்த மண்ணில்-அவன்
பொட்டை அதிகாரம் பண்ண வாரான்
வெள்ளைக்காரன் போட்ட வெள்ளிப்பணம் - இங்கே
வேடிக்கைக் காட்டுதாம் நொள்ளைப் பணம் - அந்த
வெள்ளைப் பணத்திற்கு ஆசைப்பட்டு - நீ
வேசங் குலையாதே ஆண்டியப்பா"[10]

என்று கூறும் வரிகளின் மூலம் வெள்ளைக்காரனின் பணத்துக்கு ஆசைப்பட்டு எவ்வளவு காலம் அடிமையாகக் கிடப்பது! கிளர்ந்து எழுவீர்! என்னும் விடுதலை வேட்கையை இப்பாடல் உணர்த்துவதாக அமைந்துள்ளது. மேலும்,

விடுதலைப் போராட்டத்தின்போது தெருக்கூத்து நாடக மேடையில் வீரக்கனல் தெறிக்கும் பாடல் மூலம் மக்களின் மனதில் உணர்ச்சிப் பிழப்பை ஊட்டியது என்பதை,

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்ட வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்
யாரோ ஒழைச்சி பாடுபட்டால் - இவன்
யாரு வந்து வரி கேக்குறது - இங்கே
நேரா வரட்டும் பார்த்துக்கிறேன்
சங்கை நெறிச்சி உசிரே மாய்ச்சிடுவேன்"[11]

என்ற வரிகளின் மூலம் நாடகக் கலைஞர்கள் மேடைகளில் உணர்ச்சிப் பெருக்குடன் பாடி நடித்து, நாட்டு மக்களிடையே விடுதலை வேட்கையைத் தூண்டினர் என்பதை உணரமுடிகின்றது.

முடிவுரை

தெருக்கூத்து இன்று திரைப்படத்தால் தேய்ந்து வருகிறது. மேடை நாடகத்தின் மவுசும் குன்றி வருகிறது. ஆனால், ஒரு காலத்தில்

மக்களுக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும் பொழுது போக்குப் பொக்கிஷமாகவும், மக்களின் உள்ளத்தில் அந்நியரிடம் பட்ட அடிமையை நீக்குவதற்கான உணவுர்களுக்கும், விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கைக்கும், காரணமாக இருந்ததை இக்கட்டுரையின் மூலம் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சு.சண்முகசுந்தரம்., நாட்டுப்புறவியல் - ப.102
2. சு.சக்திவேல்., நாட்டுப்புறவியல் ஆய்வு - ப.182
3. சு.சண்முகசுந்தரம்., நாட்டுப்புறவியல் - ப.103
4. ஆ. தட்சிணாமூர்த்தி., தமிழர் நாகரிகமும் பண்பாடும் - ப.354
5. சு.சண்முக சுந்தரம்., நாட்டுப்புறவியல் - ப.104
6. ஆ. தட்சிணாமூர்த்தி., தமிழர் நாகரிகமும் பண்பாடும் - ப.349
7. மேலது - ப.349
8. சு. சண்முகசுந்தரம்., நாட்டுப்புறவியல் - ப.104
9. மேலது - ப.104
10. ஜெ.ஸ்ரீசந்திரன்., தமிழ் இலக்கிய வரலாறு ப.405
11. மேலது - ப.406

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
உருமு தனலெட்சுமி கல்லூரி,
காட்டூர்,
திருச்சி - 620 019.

61

தெரியரயர் கூத்து

அ. தும்மாபிரான்சிஸ்

நாட்டார் கலைகள் அழகியல் மற்றும் சமூக அக்கறை கொண்டவை. நிகழ்த்துக் கலைகள் அல்லது ஆட்டக்கலைகள் பெரும்பாலும் ஏதோவொரு சமூக நிகழ்வை வெளிப்படுத்துவதாகவே உள்ளன. தமிழ் நாட்டிற்கென பொதுவான அல்லது பொதுமைப் படுத்தப்பட்ட நிகழ்த்துக் கலை ஒன்றை இதுவரை அடையாளப்படுத்த வில்லை. மாறாக, நிலவியல் சமூகப் பண்பாட்டைச் சார்ந்து தமிழர் நிலப்பரப்பு நெடுகிலும் நிகழ்த்துக் கலைகள் பல நிகழ்த்தப்படுகின்றன. அவற்றுள் தமிழ்நாட்டின் பண்பாடு, கலை மரபுகளுடன் நிகழ்த்தப்படும் நிகழ்த்துக் கலையாகத் தெருக்கூத்து திகழ்கிறது. திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களிலும், புதுவை மாநிலத்திலும் தெருக்கூத்து பரவலாக இன்றுவரை நிகழ்த்தப்பட்டு வருகிறது.

தெருக்கூத்து "தொழிற்குழுவினராலும் (Professionals), பயில்நிலைக் குழுவினராலும் (Amateur) வளர்ந்து வருகிறது" (தே. லூர்து : 2000-290) என்று தே. லூர்து குறிப்பிடுகிறார்.

கிறித்தவர் தெருக்கூத்து

மேலைநாட்டுக் கிறித்தவர்கள் ஆனாலும், உள்நாட்டுக் கிறித்த வர்கள் ஆனாலும் தங்களது சமயப் போதனைகளை அல்லது சமயக் கோட்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்ல எந்த அளவிற்குத் தமிழ்

இலக்கியங்களைப் பயன்படுத்தினரோ, அதே அளவிற்குக் கலைகளையும் பயன்படுத்தினர். அதனால் சமயக் கோட்பாடுகள் மக்களிடம் போய்ச் சேர்ந்தன. தமிழ் மொழிக்குப் புதிய இலக்கியங்கள் வந்துசேர்ந்தன. தமிழ்நாட்டுத் திருவிழாக்களில் வில்வளைப்பு அல்லது திரௌபதி கல்யாணம், சுபத்திரா கல்யாணம், திரௌபதி துகில், அர்ஜுனன் தூது, வள்ளித் திருமணம் போன்ற கதைகள் தெருக்கூத்து களாக இன்றுவரை நிகழ்த்தப்படுகின்றன.

இவைபோன்றே தைரியராயர், புனித அந்தோணியார் தெருக் கூத்துகள் கிறித்தவக் கிராமங்களில் நிகழ்த்தப்படுகின்றன. கிறித்தவக் கூத்து என்றால் இவற்றின் உள்ளடக்கம் மட்டுமே வேறுபட்ட தேயொழிய ஒப்பனை, நிகழ்த்துமிடம், கட்டியங்காரன் என்று தமிழகத் தெருக்கூத்து மரபைப் பின்பற்றியே கிறித்தவக் கூத்துகளும் நிகழ்த்தப் படுகின்றன. தைரியராயர் கூத்து பல இடங்களில் நிகழ்த்தப்பட்டாலும் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தைச் சார்ந்த தி. அத்திப்பாக்கம் கிராமத்தில் நிகழ்த்தப்படும் கூத்தைப்பற்றிக் காண்போம்.

தைரியராயர் - கதைச்சுருக்கம்

தைரியராயர் என்னும் மன்னன் மதம்மாறி இயேசு கிறித்துவை ஏற்றுக் கொள்கின்றான். அனைத்து மக்களும் இயேசுவை வணங்கவும் சிலுவையைப் புனிதச் சின்னமாக ஏற்கவும் கட்டளையிடுகிறான். மக்கள் பலர் இயேசுவை ஏற்கின்றனர்.

இந்நிலையில் பிசாசுகளின் தலைவன் மற்றும் கூட்டம் இம்மன்னனை உடல் வியாதி (தொழுநோய்) தந்து துன்புறுத்தத் திட்டமிட்டு அதை நிறைவேற்றும் நிலையில் அரசன் அல்லலுறுகிறான்.

அமைச்சர்கள், அமைச்சரவைப் பண்டிதர், மருத்துவர், சோதிடர் போன்றோர் பலவகையில் முயன்றும் ஒரு பலனும் கிட்டவில்லை. அரசனின் தொழுநோய் சுகமாகவில்லை.

இறுதியில், இயேசு கிறித்துவின் திருத்தொண்டரின் இறை வேண்டலுடன் கூடிய இறையாசியால் மன்னனின் தொழுநோய் நீங்குகிறது. மன்னனும் மக்களும் பேருவகை அடைகின்றனர்.

தைரியராயர் கூத்து அன்றும் - இன்றும்

தி. அத்திப்பாக்கம் கிராமத்தில் அனைவராலும் “வாத்தியார்” என்று அறியப்பட்டு, அழைக்கப்படும் திரு. மரியண்ணன் அவர்களின் முயற்சியால் தைரியராயர் கூத்து இக்கிராமத்தில் தொடர்ந்து

ஆண்டுக்கொருமுறை நிகழ்த்தப்பட்டு வந்தது. தைரியராயர் கதாபாத்திரத்தை இவரே ஏற்று நடித்தார். மற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் இவரே பயிற்சியும் அளித்தார் என்பதனாலேயே இவருக்கு வாத்தியார் என்ற பெயர் நிலைத்துவிட்டது. இவரது மறைவிற்குப் பிறகு சிலர் இக்கூத்தினை நடத்த முற்பட்டாலும் தைரியராயர் என்ற கதாபாத்திரத்திற்கு ஏற்ற நடிகர் அமையாததால் மரியண்ணனுக்குப் பிறகு இக்கூத்து முறையாக நிகழ்த்தப்படாமல் இருந்தது. 1960ஆம் ஆண்டுக்குப் பிறகு மரியண்ணனின் மகன் திரு. பிரான்சிஸ் அவர்கள் இக்குழுவிற்குப் பொறுப்பேற்று தைரியராயர் கதாபாத்திரத்தைத் தானே ஏற்று நடித்தார். அதன்பின் திரு. பிரான்சிஸ் மறையும்வரை அவரே இக்கதாபாத்திரத்தில் ஏற்கக்குறைய நாற்பது ஆண்டுகள் நடித்தார்.

ஒலிப்பெருக்கி இன்றிப் பாடி, உரையாடல்கள் நிகழ்த்துவதில் இவர் தனித்தன்மைகளைக் கடைப்பிடித்தார். இவரது தந்தைக்கு வாத்தியார் என்று அடைமொழி இட்டு அழைத்த இக்கிராம மக்கள் இவரை நாதர் என்று அழைத்திருப்பதன் மூலம் இவரது நடிப்பின் திறனை அறியமுடிகிறது. தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் தைரியராயர் கதாபாத்திரத்தில் இவரே நடித்திருந்தாலும் மற்ற பாத்திரங்களுக்கு நடிகர்கள் தொடர்ந்து மாற்றப்பட்டு இருந்தனர்.

2007 செப்டம்பர் திங்கள் இவர் மறைவிற்குப் பிற்பாடு இன்றுவரை எந்தக் கூத்தும் இக்கிராமத்தில் நடத்தப்படாமலே இருக்கிறது. திரு. மரியண்ணனின் காலத்திலும், பின் பிரான்சிஸ் அவர்களின் ஆரம்பக் காலத்திலும் தைரியராயர் கூத்து உட்பட இவர்கள் நிகழ்த்தும் அனைத்துக் கூத்துகளும், தெருக்கூத்தின் இலக்கண மரபோடு நிகழ்த்தப்பட்டு வந்தன.

இது கிறித்தவக் கூத்து என்பதால் கதை, உரையாடல்கள் அனைத்தும் பக்தியை மையப்படுத்தியே வந்தன. ஆனால், தொலைக்காட்சி போன்ற நவீன பொழுதுபோக்கு ஊடகங்களின் தாக்கத்தால் மக்களின் வருகை பெருமளவு குறைந்துவிட்டது. இதன் காரணமாகக் கூத்தில் இடம்பெறும் கட்டியங்காரன் மற்றும் பெண் கதாபாத்திரங்கள் பக்திநெறியை விட்டுப் பாலியல் சார்ந்த நகைச் சுவைகள், உடல் அசைவுகள் இடம்பெற வேண்டியதாயிற்று. பக்தி நெறியைத் தவறி வெறும் பார்வையாளர்களை ஈர்ப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு கூத்தினை நிகழ்த்த பிரான்சிஸ் அவர்கள் விரும்ப வில்லை. அதனால், இடையில் நடிப்பதை நிறுத்திக் கொண் டாலும், அனைவரது வற்புறுத்தலை ஏற்று மீண்டும் நடிக்க முற்பட்டார்.

பிற்காலத்தில் அவரது உடல்நிலை நடிப்புக்கு ஒத்துழைப்பு கொடுக்காவிட்டாலும் ஒப்பனை செய்து கொண்டு ஒரே இடத்தில் நின்றும் அல்லது பலநேரங்களில் அமர்ந்துகொண்டும் தனது கதா பாத்திரத்தில் நடித்தார். தன்னால் இயன்றவரை மற்ற கதாபாத்திரங் களைப் பக்திநெறி வழுவாமல் பார்த்துக் கொண்டார். பிரான்சிஸ் அவர்களின் மறைவிற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தைரியராயர் கூத்து நிகழ்த்தப்படவில்லை. திரு. பிரான்சிஸ் அவர்களின் தலைமை யிலான குழு தைரியராயர், அந்தோணியார் ஆகிய இரண்டு கூத்துகளை நடத்தி வந்தது.

பெரும்பாலும், இவ்விரண்டு கூத்துகளும் கிராமக்களின் செலவிலேயே நிகழ்த்தப்பட்டன. கிராம மக்கள் தேவையான அளவிற்கு மழை பெய்யவும், கிராமத்திற்கு எந்தத் தீங்கும் ஏற்படாமல் இருக்கவே இறைவனுக்குச் செலுத்தும் வேண்டுதலாகவே இக்கூத்துகள் ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்த்த ஏற்பாடு செய்தனர்.

முன் தயாரிப்பு

கூத்து நிகழ்த்தும் ஒரு வாரத்திற்கு முன்பு கூத்து நடைபெற விருக்கும் இடத்தில் அதிகாலையில் நல்லநேரம் பார்த்துக் கத்தோலிக்கக் கிறித்துவ ஜெபங்கள் சொல்லி சிலுவையை நடுவர். சிலுவை நட்ட நாளில் இருந்து அனைத்து நடிகர்களும் ஒரு பொழுது மட்டுமே உணவு உண்டு, இல்லறத்தில் ஈடுபடாமல், எந்தப் போதைப் பொருளையும் உட்கொள்ளாமல் மாலை நேரத்தில் ஒன்றுகூடிக் கூத்தினை ஒத்திகை பார்ப்பர். சிலுவை நட்டநாளில் இருந்து தினமும் காலையில் ஆடாதோடா இலையை உட்கொண்டு குரல் வளத்தை மேம்படுத்துவர்.

கூத்திற்கு முன்தினம் அனைத்து நடிகர்களும் தங்களது ஆசிரியரிடம் (பிரான்சிஸ்) ஆசிபெறுவர். ஒப்பனைக்கு இயன்றவரை தங்களது ஆடைகளைப் பயன்படுத்துவர். முக ஒப்பனைக்கு மட்டும் சூழலுக்கு ஏற்ப மற்ற ஊர்களில் இருந்து ஒப்பனைக்காரர்களை வரவழைத்துப் பயன்படுத்துவர். பிற கூத்துகளுக்கும், கிறித்தவ கூத்துகளுக்கும் உள்ளடக்கம் தவிர மற்ற அனைத்தும் ஒன்றாகவே உள்ளன. திரு. பிரான்சிஸ் தலைமையிலான இக்குழு தைரியராயர், புனித அந்தோணியார் கூத்துகளை நடத்தினர். இன்று மக்கள் தைரியராயர் கூத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை இரண்டு கூத்துகளும் ஊர் மக்கள் பணத்திலேயே நடத்தப்பட்டன. ஆனால், இப்பொழுது தனிநபர்கள் தங்களது வேண்டுதல்கள் நிறைவேற கூத்துகளை நடத்துகின்றனர். புனித

அந்தோணியார் கத்தோலிக்க கிறித்தவர்களிடம் புனிதராகவும், வேண்டுதல்களை நிறைவேற்றுபவராகவும் இருப்பதால் புனித அந்தோணியார் கூத்திற்குப் பணம் கொடுத்து, தங்களது வேண்டுதல்கள் நிறைவேற புனித அந்தோணியார் கூத்தினை நிகழ்த்திக் கொள்கின்றனர்.

தைரியராயர் மேலைநாட்டு மன்னர், மனம்மாறி திருமுழுக்குப் பெற்று கிறித்தவ மதத்திற்கு மாறினார் என்பதே தைரியநாதர் கூத்தின் உள்ளடக்கம் ஆகும். தைரியநாதரிடம் பக்தி இல்லாததால் வேண்டு தலுக்காகக்கூட இக்கூத்தினை நிகழ்த்த எவரும் முன்வருவதில்லை. அதனால் பல ஆண்டுகளாக இக்கூத்து நிகழ்த்தப்பட வேயில்லை. தி. அத்திப்பாக்கம் கிராமத்தில் இக்கூத்துக் கலையை நாடகம் என்றே அழைக்கின்றனர். இக்கிராம மக்கள் பெரும்பான்மையானோர் தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். கூத்து நிகழ்த்தும் கலைஞர்களும் இச்சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். ஆதலால், உயர்வு கருதி கூத்தினை நாடகம் என்று அழைத்து வருகின்றனர்.

தொலைக்காட்சி, திரைப்படங்கள் வருவதற்கு முன்புவரை மக்களின் பெரிய பொழுதுபோக்காகவும், கலையார்வத்தை நிறைவு செய்வதாகவும் இக்கூத்துகள் திகழ்ந்தன. கிராம மக்களின் பணத்தில் இக்கூத்துகள் நிகழ்த்தும்வரை ஆண்டுக்கொரு முறை மே மாதங்களில் நிகழ்த்தப்பட்டன. தைரியராயர் என்னும் பாத்திரம் வெறும் கதாபாத்திரம் என்பதால் மக்களுக்கு அவர்மீது பக்தி ஏற்படவில்லை. அதனால் இக்கூத்து வேண்டுதல் என்னும் பெயரில்கூட நிகழ்த்தப் படுவதில்லை.

இக்கிராமத்தில் இறப்பு ஏற்படும்போது இறந்தவரின் உடல் இரவு தங்கினால் இக்கூத்துக் குழுவினரை அழைப்பர். ஒரு இடத்தில் வட்டமாக அமர்ந்து கொண்டு, கூத்தில் இடம்பெறும் பாடல்களை மட்டும் இசைக்கருவிகளுடன் விடியவிடிய பாடுவர். இன்று இக்குழு வில் உள்ளோர் குறைந்தபட்சம் பள்ளிக் கல்வியைக்கூட முழுமையாகப் பெறாத, வேலை இல்லா இளைஞர்கள். இவர்கள் இழவு வீட்டில் வழங்கப்படும் மதுவிற்கும் சில நூறு ரூபாய்களுக்கும் தங்களது கலையை நிகழ்த்துகன்றனர் என்பதே புகழ்மிக்க தைரியராயர் கூத்தின் இன்றைய நிலையாகும்.

◆

விரிவுரையாளர்,
தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குரோம்பேட்டை, சென்னை - 44.

62
ஸ்ரீ கோலாட்ட கங்கா - கௌரி அம்மன் வழிபாடு

மு. தேவகி

ஒரு சமுதாயத்தின் எழுதப்பெறாத சட்டங்களே மரபுகள். அவை கலை, இலக்கியம், சாதி, சமய, மொழி இனத்திற்கேற்ப பலவகையாகப் பரவி உள்ளன. காலத்திற்கேற்பப் பயன்தரா மரபுகள் சில தாமே மறைந்து விடுகின்றன; அல்லது மறக்கப்படுகின்றன. அப்படிப் பயன் தருவன சில காக்கப் பெற்று, போற்றப்பெற்று வளர்க்கப்படுகின்றன. இவ்வடிப்படையில் "ஸ்ரீ கோலாட்ட கங்கா-கௌரி அம்மன் வழிபாடு" எனும் தலைப்பிலான இக்கட்டுரை கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

கலை

பயிற்சியின் மூலமே கலைப் படைப்புகள் சிறப்பாக வெளிப்படுகின்றன எனும் குறிப்புப் பொருளை,

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"[1]

எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

கண், செவி முதலியவற்றின் வாயிலாகப் பெறும் அறிவைக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவு பெறுதல் எனும் திறன் உடைய மக்களே சிறந்த கலைப் படைப்பாளர்களாக விளங்கமுடியும் என்ற உண்மையைத் தொல்காப்பிய நூற்பா நமக்கு எடுத்துரைக்கிறது.

"கருத்தின் உறைவிடம்
ஆழகின் பிறப்பிடம்
இன்பம் பயப்பது.
வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுவது"[2]

என்று கலையின் இயல்புகளை நான்கு வகைகளாகக் கூறுவர்.

வழிபாடு

வழிபாடு என்னுஞ்சொல் வழிபடு என்ற ஏவற் பகுதியினின்றும் பிறந்தது. வழிபடு என்பதில் அமைந்த படு என்னும் துணை வினை பாடு என முதனிலை நீண்டமைந்து வழிபாடு என ஆயிற்று.

வழி - இறைப்பேற்றுக்கு வழி.

பாடு - இறை நெறியிற் படுதல், பொருந்துதல்.

எனவே, இறைப்பேற்றுக்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல் முறைகளே வழிபாடு எனப்பெறும்.[3]

"பாடியோ, நடித்தோ, பேசியோ கடவுளுக்கு மனிதகுலம் கொடுக்கும் மரியாதையே வழிபாடு"[4] என்று என்சைக்ளோபீடியா அமெரிக்கானா கூறுகிறது. "நம்பிக்கை தியாகம் இவற்றின் உயர்ந்த வெளிப்பாட்டு வடிவமே வணக்கம். புகழ்ந்து பாடுதலே இங்கு முக்கியம்"[5] என்ற கருத்து, புதிய ஆங்கில அகராதியில் காணக்கிடக் கிறது. இதனடிப்படையில் "கோலாட்டம்" என்பது கோல் கொண்டு அடித்து அம்மனைப் புகழ்ந்துபாடி வழிபடுவதாம்.

ஸ்ரீ கோலாட்ட கங்கா-கௌரி அம்மன் வழிபாடு

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டைத் தாலுகாவில் அமைந்திருப்பது "ஸ்ரீ கோலாட்ட கங்கா-கௌரி அம்மன்" கோவில் ஆகும். இங்குப் பல்வேறு சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிரா எனும் பகுதியில் இருந்து குடிபெயர்ந்தவர்களே சௌராஷ்டிரர் எனும் மக்கள் ஆவர். இவர்களின் வழிபாடுகளில் ஒன்றுதான் "கோலாட்டம்" ஆகும்.

"நாட்டார் தெய்வங்களுள் சிறுதெய்வங்கள் குறிப்பிடத்தக்கன. சிறு தெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் பெரிதும் வழிப்படப் படுவனவாகும். நாட்டுப்புற மக்களிடம் சிறுதெய்வ வழிபாட்டுடன் பெருந்தெய்வ வழிபாடும் காணப்படுகின்றது"[6] என்று சு.சக்திவேல் குறிப்பிடுவார். இதனடிப்படையில் ஸ்ரீ கோலாட்ட கங்கா-கௌளரி அம்மன் சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாகும்.

சிறிய வண்ணக் கோல்களை அடித்து ஆடுவது கோலாட்டம். பெண்களால் சிறப்பாக ஆடப்படும் ஆட்ட வகைகளில் ஒன்றாகும். கோலாட்டத்தில் தனிப்பாடல்களும், பகவான் கதை முதலான கதைப் பாடல்களும் இணைத்து ஆட்ப்படுவதுண்டு.

"தை பிறந்தால் வழிபிறக்கும்" எனும் பழமொழிக்கேற்ப "ஸ்ரீ கோலாட்ட கங்கா கௌளரி அம்மன் வழிபாடு" என்பது தை மாதத்தில் கொண்டாடப்படும் விழாக்களில் "கோலாட்டம்" என்பது சிறப்பான ஆட்டக் கலையாகும். அம்மனை உற்சாகப்படுத்துவதற்குக் கைகளில் வர்ணக் கோல்கள் கொண்டு குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை பாடல்கள் பாடி வழிபடுவர். கோலாட்டம் அடிக்கக் குறைந்தது ஆறு பேராவது வேண்டும், இரட்டைப் படை அடிப்படையில் ஒன்றாகக் கூடி கோலடிப்பர்.

திருமணமாகாத கன்னிப் பெண்கள் தங்களுக்குத் திருமணம் விரைவில் நடைபெற வேண்டுதல், பெரியோர் தனது குடும்பம் சிறப்பாக இருக்க வேண்டுதல், ஆயுளுடன் இருக்கவும், திருமணமான வர்கள் தாலி பாக்கியம் வேண்டியும் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வேண்டுதல்களை மனதில் எண்ணிக்கொண்டு, அம்மனிடம் தனது குறைகளை எடுத்துக்கூறி விரைவில் நிறைவேற்றும் படி வேண்டிக் கொள்வார்.

கோலாட்டம் அடிக்கும்போது எல்லா சாமிப் பாடல்களும் பாடி கோல் அடிக்கின்றனர்.

மாரியம்மன் பாடல்

அம்மனை நினைத்துப் பெண்கள் தங்கள் வளைக்கரங்களால் வர்ணக் கோல்களைக் கொண்டு வணங்கி வாழ்த்தைப் பெறுகின்றனர்.

"ஒன்னாங் கரகமடி எங்க முத்து மாரி
ஆதிபரஞ்சோதி அழகு முத்துமாரி
என்ன வளர்த்த தாயே
ஆதிபரஞ்சோதி அழகு முத்துமாரி"

என்று பத்துக் கரகங்கள் வரை எண்ணிக்கை அடிப்படையில் பாடல்கள் பாடிக் கோல் தட்டி வழிபடுகின்றனர்.

கண்ணன் பாட்டு

கண்ணனின் லீலைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கூறி அவன் பெண்களுக்குக் கொடுக்கும் ஆனந்தத் தொல்லைகள் அனைத்ததையும் பாடலாகப் பாடிக் கோல்தட்டி ஆடுகின்றனர். கண்ணனின் லீலைகளைக் கூறுவதும் கேட்பதும் இன்பமான ஒன்றாகும். கன்னிப் பெண்கள் இப்பாடலை விரும்பி ஆனந்தமாகப் பாடிக்கொண்டு ஆடுவார்கள்.

பாடல்

"யசோதா உன்னுடைய பாலன்
துஷ்ட சரித்திரத்தை – ஏனென்று
நாங்கள் சொல்லுவோமம்மா!
துஷ்ட சரித்திரத்தை – ஏனென்று
நாங்கள் சொல்லுவோமம்மா!
சிறு பெண்கள் குளிக்கையில் – சாமி
சேலை எடுத்துக்கொண்டு – சாமி
மரத்தின்மேல் ஏறலாமோ!
பால் களையங்கொண்டு எங்கள் பெண்கள்
பால் என்று கூவயிலே – கிருஷ்ணன்
விரட்டி அடித்தானம்மா!
வெண்ணெய் களையங்கொண்டு
எங்கள் பெண்கள்
வெண்ணெய் என்று கூவயிலே – கிருஷ்ணன்
விரட்டி அடித்தானடி!
மோர் களையங்கொண்டு எங்கள் பெண்கள்
மோர் என்று கூவயிலே – கிருஷ்ணன்
விரட்டி அடித்தானம்மா!
யசோதா உன்னுடைய பாலன்
துஷ்ட சரித்திரத்தை ஏனென்று
நாங்கள் சொல்லுவோமம்மா!''

என்று கிருஷ்ணப் பெருமானின் குறும்புத்தனத்தை யசோதை யிடம் எடுத்துக் கூறி, அவனை கண்டிக்கச் சொல்லிப் பாடலாகப் பாடிக் கோல் அடித்து ஆடுவார்கள். மற்றொரு பாடலில் கண்ணன் பெண்கள் விளையாடும் இடம், குளிக்கும் இடம் என அவர்கள் இருக்கும் இடங்

களிலெல்லாம் சென்று செய்யும் குறும்புத்தனத்தைப் பாடல்களாகப் பாடிக் கோல் அடித்து ஆடுவார்கள்.

புகைவண்டி

புகைவண்டி எனத் தொடங்கும் பாடல் அடிகள் அம்மனுக் குரிய வண்ணங்களை எடுத்துக்கூறிக் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டின் அடிப்படையில் பாடப்படும் பாடலாகும்.

பாடல்

“போகுதுபார் போகுதுபார் ரயில்வண்டி
பூலோகம் சுற்றிவரும் ரயில் இதுதான்
புகைவண்டி வேகத்துடன் போவதைப்பார்
மஞ்சள் கொடியைக் காட்டி போகுதுபார்
மயிலாப்பூர் ஸ்டேசன் வந்து நிக்குதுபார்
செவப்புக் கொடியைக் காட்டி போகுதுபார்
சின்னமனூர் ஸ்டேசன் வந்து நிக்குது பார்
கருப்பு கொடியைக் காட்டி போகுதுபார்
காரைக்குடி ஸ்டேசன் வந்து நிக்குதுபார்
வெள்ளைக் கொடியைக் காட்டி போகுதுபார்
வெள்ளோடு ஸ்டேசன் வந்து நிக்குதுபார்
போகுதுபார் போகுதுபார் ரயில்வண்டி
புகைவண்டி வேகத்துடன் போவதைப்பார்.”

25 வருடங்களாக ஐப்பசி, தை, மாதங்களில் அம்மன் உருவம் செய்து விழாக்கள் நடத்திக் கொண்டாடி வருகின்றனர். ஐப்பசி மாத்தில் பெண்கள் அம்மனுக்கு நோன்பு எடுத்து வழிபடுகின்றனர். தைமாதத்தில் அம்மனை உற்சாகப்படுத்துவதற்கு விழா எடுத்து வழிபடுகின்றனர். குஜராத் மாநிலத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்தாலும் தங்களது மரபுகள் அழியக்கூடாது என்பதற்காக ஆரம்பத்தில் சிறிய அளவில் கொண்டாடப்பட்டு வந்த இத்திருவிழா இன்றைய நிலையில் பெரிய விழாவாக அனைத்து இனமக்களும் கலந்துகொண்டு கொண்டாடப் படும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இறுதியாக

- “ஸ்ரீ கோலாட்ட கங்கா-கௌரி அம்மன்” ஆலயம் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டைத் தாலுகாவில் அமைந்துள்ளது.
- குஜராத் மாநிலம் சௌராஷ்டிரா எனும் பகுதியில் இருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் இவர்கள் என்பது அறியப்பட்டது.

- "சௌராஷ்டிரர்" எனும் இனத்தினர் அம்மனை வழிப்பட்டு வருகின்றனர்.
- ஐப்பசி, தை மாதத்தில் அம்மனை உருவம் செய்து வழிபடு கின்றனர். தை மாதத்தில் நடைபெறும் 21 நாட்களிலும் அம்மனை உற்சாகப்படுத்துவதற்குக் குழந்தைகள், கன்னிப் பெண்கள், பெரியோர்கள் அனைவரும் ஒன்றுகூடி எல்லா சாமிப் பாடல்களையும் பாடி வர்ணக்கோல் கொண்டு அடித்து அம்மனை உற்சாகப்படுத்துகின்றனர்.
- கோல் அடிப்பது ஒரு கலையாகவும், அம்மனுக்கு அடித்துத் தனது குறைகளைக் கூறுவதன் மூலம் விரைவில் நல்லது நடைபெறுகிறது என்ற தகவல் அறியப்பட்டது.
- குஜராத் மாநிலம் சௌராஷ்டிரா பகுதியில் இருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் என்றாலும் இன்றும் தங்களது வழிபாடு கள், கலைகள் மறையக்கூடாது என்பதற்காக தொடர்ந்து வழிபாடு களை நடத்தி வருகின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

தகவலாளர்

கோ. விஜயலட்சுமி, வயது 64, நிலக்கோட்டை.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், நூற்பா. 27
2. நன்னன். மா. பெரியாரியல், கலை, தொகுதி - 4 ஞாயிறு பதிப்பகம், சைதாப்பேட்டை, சென்னை-108, பக் 9-10.
3. தமிழகராதி, ப. 308
4. Encyclopeadia Americana, Vol.29, P. 536.
5. A New English, Dictionary, Vol. X, P. 230.
6. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.14.

◆

முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
கிராமியப்பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

63

தந்தனத்தோம்

முனைவர் ஜெ. தேவி

தமிழ்நாட்டுப் பாமர மக்களிடையே நெடுங்காலமாகவே பலவகையான பழங்கலைகள் நிலவி வருகின்றன. அவையாவும் நாட்டுப்புறக் கலைகள் எனப் பொதுவாகப் பெயர் பெறுகின்றன. பழங்கலைகளில் பலவும், போற்றுவார் இல்லாமையால் அழிந்தன. இன்றைய நிலையிலும் 'தற்கால' நாகரிகத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல், பலகலைகள் அழிந்து மறைந்து வரும் நிலையில் உள்ளன. மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிக் கலந்து, இன்றுவரை நிலவும் தமிழ்க் கலைகளுள் ஒன்றே விலலுப்பாட்டு.

தமிழகத்தின் தென்பகுதியில், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளிலும் சிறு தெய்வங்களுக்கு வழிபாடு நிகழும் 'கொடை' விழாக் காலங்களில், தெய்வ வரலாறுகளையும், தெய்வநிலை பெற்ற வீரர் வரலாறுகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்படும் இவ்வில்லுப்பாட்டு, ஓர் பழந்தமிழ் இசைக் கலை. இக்கலை தன் எளிமையாலும் இனிமையாலும் யாவரையும் தன்பால் இழுக்கும் இயல்புடையது. இப்பாட்டின் கதைகளை இரவில் பலமணிநேரம் கேட்டு மகிழ்வர் மக்கள். அத்தகைய முறையில் அலுப்புச் சலிப்புக்கு இடமின்றி ஆரவாரத்துடன் அமைவது வில்லுப்பாட்டு.

போர் வீரரின் முதற்கருவியான வில் இக்கலையில் பயன்படும் முதன்மையான இசைக்கருவியாக அமைந்துள்ளது. இதற்குத் துணை யாகப் பயன்படும் உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் மிகப் பழங்காலம் முதல், தமிழ் மக்களிடையே வழங்கிவரும் எளிய இனிய இசைக் கருவிகள். இவைகளின் கூட்டு ஒலியுடன், இந்த இசைக் குழுவின் முதல்வராக அமர்ந்து கதைபாடும் 'புலவரின்' பாட்டு ஒலியும், கேட்பவரைக் கிறுகிறுக்க வைக்கும்.

கலையின் சிறப்பு

வில்லுப்பாட்டுக் கலையின் நல்லியல்புகளிலும் இசை இன்பத் திலும் மக்கள் உள்ளத்தைப் பறிகொடுத்தனர். எளிமையும், யாவரையும் ஈர்க்கும் இனிமையும் கொண்ட சீரிய நாட்டுப்புற இசைக் கலைகளில் தமிழ்க் கலைச்செல்வத்தின் அழியாத சின்னமாகத் திகழ்வது வில்லுப் பாட்டு எனக் கூறுவர். இதில் பாடப்பெறும் கதைகள் பொழுது போக்கு நோக்கத்தில் மட்டும் அமையாமல் "பொதுமக்களிடையே பக்தி, பரோபகாரம், காதல், வீரம் முதலிய பெருங்குணங்களை வளர்க்கப் பயன்படுகின்றன.'' 'வில்லுப்பாட்டு' என்பதனை வில், வில்பாட்டு, வில்லு வில்லடி, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் பலவாறாக அழைப்பதும் உண்டு. இசை அமைதியும், இசைக்கும் கருவியும் என வில்லுப்பாட்டுப் பாடல்கள் பெயர்பெறும் எனவும், 'வில்' என்னும் கருவியை முதன்மையாகக் கொண்டு 'வில்லுப்பாட்டு' என்னும் பெயர் அமைவதால் இது இசைக்கும் கருவியால் பெயர் பெற்றது எனவும் கருதுவர்.

வில் அமைப்பின் சிறப்பு

'வில்லுப்பாட்டு' - வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய உறுப்புகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வமைப்பின் முதன்மைக் கருவியாகிய வில்லும், அதற்குத் துணையாகும் பிற கருவிகளை இயக்குவதற்கான அடிப்படை ஒலிமுறையினை அமைத்துத் தரும் உடுக்கையும், மிகவும் தொன்மையான சிறப்புடையவை. வீரர்க்கு உதவிய வில்லின் நாண் அதிர்வினால் விளைந்த ஒலியே, பின்னாளில் படிப்படியாக வளர்ச்சி பெற்றுச் சிறந்த யாழ் வகைகள் அனைத்திற்கும் மூலகாரணமாக அமைந்தது எனலாம். போர் வெற்றிக்குரிய கொற்றவைத் தெய்வம் தாங்கி நிற்பது வில்லேயாகும். மூவேந்தருள் சேரருக்கு இலச்சினையாகும் சிறப்பினைப் பெறுவதும் வில்லே. வீர மறவரை வில்லேருழவர் எனப் பெருமைப்படுத்துவர்.

வில்லின் வடிவமே கொண்ட யாழ்வகையில் இசை எழுப்பிப் பாடும் ஓர் கலையைப் பெரும்பாணாற்றுப்படையில் காண்கிறோம்.

"புழற்கோட்டுத் தொகுத்த மரற்புரி நரம்பின்
வில் யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி''

எனவரும் அடிகள், குமிழ மரத்தின் கொம்பினை வளைத்து, மரல் நாரினால் ஆன நாண்கொண்டு இழுத்துக்கட்டி, விரலால் தெறித்துக் குறிஞ்சிப்பண் பாடிய செய்தியைத் தெரிவிக்கின்றன. கல்லாடம், ஒரே நரம்பினை உடைய யாழ் ஒன்றை மருத்துவப் பெயர் பெறும் வானக் கருவி என்று சிறப்பித்துக் கூறுகிறது.

'பாணர் கைவழி' எனப்படும் யாழ்நூலில் கள்ளிக்கோட்டைக்கு அருகே, பெருந்தல் மன்னா என்னும் சிற்றூரை அடுத்து உள்ள காட்டில், மாடுகளை மேய்த்துக் கொண்டும், பிச்சை எடுத்துக்கொண்டும் வாழும் 'புள்ளுவர்' என்போர் தம் கையிலுள்ள ஒருவகை வில்யாழை இசைத்துக் கொண்டு, தம் மிடற்றாலும் பாடுகிறார்கள் என்றும், இப்பாட்டு 'வில்பாட்டு' என்று அழைக்கப்படுவதாகவும், இப்பாட்டின் மொழிகளில் எழுபது விழுக்காடு தமிழ்ச் சொற்களாகவே இருப்பன என்றும் கூறப்படும் செய்திகள் குறிப்பிடத்தக்கன.

வில்லுப்பாட்டில் அமைந்துள்ள வில்லைத் திருச்செந்தூரில் வாழ்ந்த ஈஸ்வர பாகவதர் என்பார் ஒற்றைத்தந்தி யாழ் என்று குறிப்பிடுவார் என்ற செய்தியினைத் திருநெல்வேலி வில்லிசைப் பெரும் புலவர் ஐயம்பிள்ளை தெரிவித்தது இங்கே நினைவுகூரத் தக்கதாக உள்ளது.

வில்லினை அடுத்துள்ள சிறப்புடைய கருவியாகிய 'உடுக்கு' பழங்காலத்தில் பாணர் பயன்படுத்திய துடியே ஆகும். இதன் வகையே ஆநிரை வரும் காலத்தில் ஒலிக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். சாத்தனாரின் 'கூத்த நூல்' உடுக்கை பற்றி மிகவும் சிறப்பித்துக் கூறுகிறது.

"மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே''

என்னும் அடிகள், அநாதி முதல்வனும் முன்னோனான ஆண்டவன் ஆடும் கூத்தில், அவனது வலக்கையில் உள்ள 'உடுக்கை'யில் தான் ஓசை பிறந்து சுழல்கிறது என்றும், இவ்வாறு சுழலும் ஓசை வட்டத் திடையில் உயிர்த்தெழுவதுதான் இசை என்றும் குறிப்பிடுகின்றன. மேலும்,

"உடுக்கையில் பிறந்தது ஓம் எனும் ஒலியே
ஓம் என்னும் ஒலியே நாட்டியத்து ஒலியாம்"

எனவும் கூறி அந்நூல் உடுக்கையினைச் சிறப்பிக்கிறது. அடியார்க்கு நல்லார், தண்ணுமைக் கருவிகளைத் தொகுத்தளிக்கும் மேற்கோள் ஒன்று குறிப்பிடுகிறார். அதன் முதல் அடியில் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை என உடுக்கை பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

வில்

வில்லுப்பாட்டின் முதன்மைக் கருவியாகிய வில்லினை உருவாக்கத் தேவையானவை வில்கதிர், முனைக்குப்பிகள், வடம், மணிகள், மணிகளைக் கோர்த்திடத் தேவையான வளையங்கள், கம்பிகள், கடாறுகள் முதலியனவாகும். வில்கதிர் ஏறத்தாழ ஆறு முழ நீளத்தில் அமையும். இது பொதுவாகக் கூந்தற்பனையின் வைரம் பாய்ந்த அடிமரத் துண்டினின்றும் செதுக்கி எடுக்கப்படுவது. நாண் ஏற்றிக் கதிரின் இரு முனைகளும் வடத்தில் இழுத்துக் கட்டப்படுவதற்கேற்றவாறு உறுதிபட வளைந்து கொடுக்கும் வகையில் இருக்க இக்கதிரானது கயிற்றால் வரிந்து சுற்றப்பெற்றிருக்கும். இத்தகைய வரிவில்லின் மேல் துணிகள் ஒட்டப்பெற்று அதன்மேல் தாள்களும் ஒட்டப்பெற்றிருக்கும். விருப்பத்திற்கேற்றவாறு தங்கத்தாள், பூந்தாள் ஆகியவை ஒட்டப்பெற்று அழகுபடுத்தி வைப்பதும் உண்டு. மணிகளைக் கோர்க்கத் தேவைப்படும் வளையங்கள் உரிய இடைவெளி விட்டுக் கதிரில் பொருத்தப் பெற்றிருக்கும். கதிர் பார்வைக்கு அழகு தரும்வகையில் பட்டுத் துணியாலாகிய சுற்று உறையும் போடுவதுண்டு. கதிரின் பருமன் இரு முனைகளையும் நோக்கிக் குறைந்து செல்லும். பனைமரத்தினின்றும் செதுக்கி எடுக்கப்படுவதற்குப் பதிலாக இக்கதிர் மூங்கில் கழியாலும் தடித்த பிரம்பினாலும், உலோகத் தண்டினாலும்கூட அமைத்துக் கொள்வதுண்டு. பாட்டுக்காரர்கள் அவரவர் வசத்திக்கேற்றவாறு இவ்வாறு அமைத்துக் கொண்டாலும் பனைமரக் கதிரே பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கதிரின் நடுப்பாகம் குடத்தின் கழுத்துடன் சேர்த்துக் கட்டப் படுவதால் அதற்கேற்றவாறு சிறிது பருமனாக அமைக்கப்பட்டிருக்கும். குடம் மண்குடமாதலால் கதிரின் நடுப்பகுதியில் மெத்தென்று இருக்குமாறு துணிஅமைப்புச் செய்துகொள்வதும் உண்டு. வில் குடத்துடன் கட்டியிருக்கும் நிலையில் நாண்வடம் மேலாகவும் கதிர்ப்பகுதி கீழாகவும் அமைந்திருக்கும்.

இவ்வாறு, தமிழகத்தில் வில்லுப்பாட்டு வில்லுச்சந்த அமைப்பிலே அமைந்த காப்புப் பாடலும், விருத்தம் பாடுதலுக்குப் பதிலாக பாடப்பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது. அப்பாடல் வருமாறு,

'தந்தனத்தோம் என்று சொல்லியே - வில்லினில் பாட
வந்தருள்வாய் கணபதியே'

புலவர் பிச்சைக்குட்டி இப்பாடலைக் காப்பாகப் பாடிவந்த போது, இரண்டாம் அடியை 'வந்தருள் சந்தான தெய்வமே' என்று மாற்றிப் பாடினார்.

இவ்வாறாக, வில்லுப்பாட்டு என்பது பல தமிழகக் கலைகள் பெருங்குடி மக்களுக்கென்றே போற்றிப் பாதுகாக்கப் பெற்றுத் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. ஆயின், பொதுமக்கள் கலையாக விளங்கியவை தக்க பாதுகாப்பின்றித் தோன்றிய வண்ணமே கால வெள்ளத்தில் கரைந்துவிட்டன. எனினும், காலம் என்பது பொதுமக்கள் கையிலே அகப்பட்டவுடன் அது தன் வடிவை அவர்களுக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்கிறது. அம்மாற்றமே இன்றைய நாளில் பொதுமக்களின் கலையும் இலக்கியமும் துளிர்விடத் தொடங்கும் வைகறைக் காட்சியாகப் பல இடங்களில் காண்கிறோம். அதன் முதல் குரலின் நல்லிசையாக வில்லிசைப் பாடல்கள் நிறைய வெளிவரவேண்டும் என்பதே தமிழகக் கலைஞர்களின் கனவாக உள்ளது.

அடிக்குறிப்புகள்

1. K.P.S. Hameed - 'Bow Song' A Folk From South Travancore. Article the 'Tamil Culture' Madras, Vol. V. No. 3 (July 1956) Page : 275.
2. கு. அருணாசலக் கவுண்டர் - வில்லுப்பாட்டு (கட்டுரை), கலைக்களஞ்சியம் -9ஆம் தொகுதி, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை (1968), ப. 362.
3. மு. சண்முகம் பிள்ளை - முன்னுரை 'ஈணமுத்துப் பாண்டியன் கதை' தமிழாய்வு, தொகுதி. 3.
4. கடியலூர் உருத்திரங்கண்ணனார் - பெரும்பாணாற்றுப்படை, வரி : 180-182, கழக வெளியீடு, பக்கம் - 6
5. கல்லாடர் - கல்லாடம், பாடல் எண். 85, வரி : 28, ராஜாராம் வெளியீடு, சென்னை - 1.

◆

விரிவுரையாளர்,
தமிழாய்வுத்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி,
திருச்சி - 19.

64

கரகாட்டம் ஒரு பார்வை

நா. நாராயணன்

முன்னுரை

மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றி விட்டன. உலகத்திலுள்ள அனைத்து இனங்களிலும் வாய்மொழி இலக்கியங்களைக் காணலாம். உலகில் மொழியும் பின்னர் வாய்மொழி இலக்கியங்களும் தோன்றின. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிபாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். இவைகள் ஏட்டில் வராவிடினும் எழுத்தில் வராவிடினும் பாட்டில் இடம் பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதல் தன் மனமகிழ்ச்சியை ஆடியும் பாடியும் வெளிப்படுத்தினான். இயற்கையாகத் தோன்றிய உணர்ச்சியை உடல் அசைவுகளால் காட்டத் தொடங்கியதன் விளை வாக நாட்டியக்கலை பிறந்தது. நாட்டியம் ஆடப் பாடல் பாடியதன் விளைவாக இசைக்கலை தோன்றியது. இதனைத் தொடர்ந்து தாளக் கலை, சிற்பக்கலை, கவிதைக்கலை முதலியன தோன்றியன.

நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புறங்களில் தங்கள் ஓய்வுநேரப் பொழுதுபோக்காக ஆடியும் பாடியும் மக்கள் பின்பற்றிவரும் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனக் கூறுவர். அவை இருவகைப்படும்.

i) நிகழ்த்தாக் கலை ii) நிகழ்த்துக் கலை

நிகழ்த்தாக் கலை

சிற்பங்கள் செதுக்குதல், பொம்மைகள் செய்தல், ஓலைப் பொருட்கள் பின்னுதல், சுவர் ஓவியம் வரைதல், கோலமிடுதல் முதலியன.

நிகழ்த்துக் கலை

கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், தெருக் கூத்து, நாட்டியம், நாடகம் முதலியன நிகழ்த்துக் கலைகள் ஆகும்.

இந்நிகழ்த்துக் கலைகளுள் ஒன்றான கரகாட்டத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கரகாட்டம்

கரகாட்டம் தமிழ்நாட்டின் தலைச்சிறந்த நாட்டுப்புற நடனங் களில் ஒன்றாக வழங்கி வருகிறது. மண், செம்பு, பித்தளை போன்றவை களால் வாய்ப்புறம் குவிந்தும் அடிப்புறம் பெருத்தும் காணப்படும் குடம் “கரகம்” எனப்படும். நீர், அரிசி, மணல் போன்றவை களால் நிரப்பப்பட்டு வாய்ப்புறத்தை மூடி அலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல் ஆடும் ஆட்டம் “கரகாட்டம்” எனப்படும்.

கரகம்

“நூலே கரகம் முக்கோல் மனையே”

(தொல். பொருள். இளம்.625)

இதில் இடம்பெறும் கரகம் என்னும் சொல் அந்தணர்கள் வைத் திருக்கும் நான்கு பொருள்களில் ஒன்றாகிய கமண்டலத்தைக் குறிக்கும்.

“நீரற வறியாக் கரகத்து”

(புறம்-1)

இதில் வரும் கரகம் என்னும் சொல்லுக்குக் குண்டிகை என உரையாசிரியர் பொருள் எழுதி உள்ளார். இதுவும் வாய்ப்புறம் குவிந்த ஒரு பாத்திரத்தையே குறிக்கும்.

கரகம் என்னும் சொல் ''சிலப்பதிகாரம்'', ''கலித்தொகை'' ''மணிமேகலை'', ''பிங்கல நிகண்டு'' போன்ற நூல்களிலும் நீர் கொள்ளும் கமண்டலம் அல்லது சிறு குடத்தைக் குறிப்பதாகவே வந்துள்ளது.

குடக் கூத்து

பண்டைக் காலத்தில் ''குடக்கூத்து'' என்னும் பெயரில் கரகாட்டத்தினை வழங்கினர்.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோரு வகை ஆடல்களில் குடக்கூத்து என்னும் ஒருவகை ஆடலும் இடம் பெறுகிறது.

கண்ணன் வாணன் நகரத்தில் அநிருத்தனைக் காப்பாற்றுவதற் காகத் தலையில் குடங்கொண்டு ஆடினான். இதுவே பின்னர் குடக் கூத்து எனப்பட்டது. இதனைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகிறது.

''வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீள்நிலம் அளந்தோன் ஆடிய குடம்''

கரகமெடுத்தல்

தூய்மையான மண்கலத்தில் ''மஞ்சள் நீர், பால், அரிசி'' போன்ற பொருள்களை நிரப்பி அதன்மேல் வேப்பிலை, மாவிலை முதலிய தண்ணிய தழைகளைச் செருகி அதன் வாய்ப்பகுதியில் ஒரு தேங்காயைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்து இக்குடத்தைத் தலையில் சுமந்து சென்று அம்மனை வழிபடுவர். கரகக் குடத்தில் நிரப்பப்படும் பொருள்கள் அவரவர்களின் வேண்டுதலையொட்டி அமையும்.

புனிதப் பொருட்கள் நிரப்புதல் என்ற செயலால் அம்மனே குடத்தில் வந்து பொருந்தி இருப்பதாகப் பாவித்துக் கொண்டு அதனைத் தலையில் சுமந்து சென்று வழிபடுதல் என்னும் தெய்வச் சடங்கே கரகமெடுத்தல் என்று அழைக்கப்படுகிறது.

கரகாட்டத்தில் பங்கேற்போர்

முதலில் ஆண்கள் மிகுதியாக ஆடிய இக்கரகாட்டத்தில் தற்பொழுது பெண்கள் மிகுதியாகப் பங்கேற்று ஆடுகிறார்கள். வீரம் மிக்கதும் மிகுந்த சக்தியைப் பயன்படுத்தி ஆடக் கூடியதுமான இந்தக் கரகாட்டம் பெண்களைவிட ஆண்களுக்கே பொருத்தமான ஆட்டமாக விளங்குகிறது. வெறுந்தலையில் கரகத்தை வைத்து ஆடும் திறன் வாய்ந்த வகையில் உடல், கை, கால்களில் இயக்கங்களைக் கொடுத்து தலையிலுள்ள கரகம் கீழே விழுந்து விடாமல் சமநிலைப் படுத்தி ஆடப்படும் ஒரு கலையாக இது விளங்குகிறது.

தலையில் கரகத்தின் நிலை

தலையில் படியும் கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி ஆடுபவரின் தலை இப்பள்ளத்தில் நன்கு படியும்படிச் செய்கின்றனர். தலையில் செம்பு நிற்கும் அளவிற்கு எடையைக் கரகச் செம்பில் ஏற்றுதற்கு அரிசி அல்லது மணலைக் கரகச் செம்பில் நிரப்புகின்றனர். இதன்பின் கரகச் செம்பின் வாய்ப் பகுதியைக் கெட்டியாக மூடிக் கொள்ளவும், மேற்புறம் தேங்காயின் மேற்புறம்போல் குவிந்து இருக்கும் படியான ஒரு கட்டையைச் செதுக்கிக் கரகத்தின் வாய்பாகத்தில் வைத்துப் பொருத்தி, இக்கட்டையையும் செம்பையும் கயிற்றால் இணைத்துக் கட்டிவிடுகின்றனர். கரகச் செம்பின்மேல் பொருத்தப் பட்ட கிளி வேகமாகச் சுழன்று ஆடும்படிச் செய்துகொள்கின்றனர்.

பக்க இசை

கரகாட்டத்திற்கு "நையாண்டி மேள இசையே பக்க இசையாக" வாசிக்கப்படுகிறது. நையாண்டி மேளத்தில் "இரு தவில்களும் இரு நாதசுரங்களும்" முதன்மையான இசைக்கருவிகளாகப் பயன்படுகின்றன. இவற்றுடன் "பம்பை, உறுமி, கிடுகட்டி, கோந்தளம்" போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இப்பக்க இசையில் தெம்மாங்கு, ஆரவல்லா, கள்ளப்பார்ட்டு நடராசன், கட்ட பொம்மு போன்ற பல பழமையான மெட்டுக்களும் திரைப்படப் பாடல்களும் வாசிக்கப்படுகின்றன.

பக்க இசை பெரும்பாலும் திசிர நடையிலும் சதுசுர நடையிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. இவை விளம்பரம், மத்திமம், துரிதம் என்ற மூன்று காலங்களிலும் வாசிக்கப்பெற்று அதற்கேற்ப ஆட்டக் கலைஞர்கள் ஆடச் செய்கின்றனர்.

முடிவுரை

பொழுது போக்கிற்காகவும், பக்திக்காகவும் ஆடிய ஆட்டங்கள் பல இன்று வியாபார நோக்கில் ஆடப்படுகின்றன. அதனால் அதன் அழகிய அம்சமானது குறைகிறது. இருப்பினும் இன்றும் கிராமங்களில் கரகாட்டம் போன்ற பல ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. எனவே, கலைகளையும் கலைஞர்களையும் அழியாமல் பாதுகாப்பது நமது கடமையாகும்.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக்கழகம்.

65
வில்லிசைக் கலை

முனைவர் தா. நீலகண்டபிள்ளை

பழந்தமிழர்கள் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் உழைப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். காட்டை அழித்து வளமிகு நாடாக்கினர். பகல் பொழுதில் கடின உழைப்பினைச் செய்த மக்கள் இராப் பொழுதினைப் போக்கப் பல கலைகளைக் கண்டறிந்தனர். அவையே ஆடல், பாடல், நடனம், நாட்டியம் மற்றும் போலச் செய்தல் போன்ற கலைகள். அவ்வாறு பழந்தமிழர்கள் மேற்கொண்ட கலைகளுள் ஒன்றே வில்லுப்பாட்டு என்னும் வில்லிசைக்கலை.

தமிழகத்தின் தென் மாவட்டங்களான நெல்லை, கன்னியாகுமரி (இன்று நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி என்று பிரிந்துள்ளன) மாவட்டங்களில் இக்கலை தோன்றியது. பின்னர் இது தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் பரவியது. இன்று தமிழகம், கேரளம், கர்நாடகாம், ஆந்திரம் முதலிய பகுதிகளிலும் பரவியுள்ளது. இதனை எல்லா இடங்களிலும் பரப்பிய பெருமை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களையே சேரும். இது ஒருவகையான நாட்டுப்புறப் பாடல் வகையாகும். பெரிய வில் மற்றும் எளிய பக்கவாத்தியக் கருவிகளைக் கொண்டு பாடகர் பாட்டின் பகுதிகளைப் பாட அதனை மற்றவர்கள் மீண்டும் சொல்லக் கதை வடிவில் பாடுவது மரபு. தென் மாவட்டங்களில் சிறுதெய்வ கொடை விழாக்களின்போது இறைத்தன்மை உடைய புராணக் கதைகளை வில்லுப்பாடல்கள் வழிப்

பாடுவர். டாக்டர் மு.வ. இதனை பழந்தமிழரின் வீரவழிபாட்டு மரபினை அடிநிலையாகக் கொண்டது என்பார். புராண மரபுநிலை மட்டுமன்றி வீரர்கள், வரலாற்றுக் கதைகள், தெய்வ நிலை உற்றோர் மீதும் பாடல்கள் இயற்றப்பட்டுக் கதையாடுவதும் காணப்படுகிறது. உடுக்கு, குடம், தாளம், கட்டை, வில்மணிகள், சுருதிப்பெட்டி, தக்கை, துந்துபி போன்ற கருவிகள் வில்லிசையில் பக்கவாத்தியக் கருவிகளாக அமைந்துள்ளன. இன்று பல வகையான புதிய கருவிகள் சேர்க்கப் பட்டுள்ளன.

வாய்மொழி மரபு

வில்லுப்பாட்டுக் கதைகள் பரம்பரை பரம்பரையாகப் படிக்கப் பட்டு வந்தனவாகும். இப்பாடல் வடிவமைப்பு குறுகிய இரண்டு இரண்டு அடிகளாக அமைக்கப் பெற்றுள்ளன. இது பாடவும் கேட்கவும் எளிமையானதாக அமைவது. கிராம மக்களுக்குப் புரியும்படியாக அவர்கள் அறிந்த கதைகளைக் கூறுவது வழக்கம். இக்கதைகள் வாயிலாக நீதி உரைப்பதும் காணப்படுகின்றது. பழங்காலத்தில் சிற்றூர்களில் வில்லுப்பாடல் நடைபெறாத கோயில்களே இல்லை எனலாம். கோவில் கொடை விழாவிற்குக் கட்டாயம் புராண, இதிகாசம் தொடர் பான வில்லுப்பாட்டு அமையும். எனவே, இதனைத் தெய்வ வழிபாட் டுடன் தொடர்புடைய கலை எனலாம். ஆயின், தற்காலத்தில் அரசியல் மேடைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டங்களிலும் அவரவர் வெளிப்படுத்தும் பொருளுக்கேற்பக் கதையமைத்து வில்லுப்பாடல்கள் நடத்தப்படுகின்றன. காந்திமகான் குறித்துப் பாடப்பட்ட வில்லுப் பாடல் இன்று பாமரத் தனத்தோடு மக்களை மகிழச் செய்கின்றது.

பாடும் முறை

நிகழ்வுகள் மக்களுக்காக நடத்தப்படுவன. மக்களை ஈர்க்கும் விதத்தில் செயல்பாடுகளை அன்றுமுதல் இன்றுவரை அமைத்துள்ளனர். வில்லுப்பாடல்களை அன்று நடத்துகின்ற அண்ணாவிகளே (தலைமை ஆசிரியர்) எழுதினர். இன்று பாட்டு எழுதிக் கொடுக்கத் தனியாகப் புலவர்கள் உள்ளனர். வில்லுப்பாடல்கள் எளிய சொற்களை, எளிய சந்தங்களைக் கொண்டு அமைவன. மக்கள் அறிந்த, மக்களிடம் பழக்கமான மெட்டுகளிலேயே (சந்தம்) பாடலை அமைத்துக்கொள்வர். நாட்டுப்பாடல் வடிவ பா அமைப்பில் பாடுவர். உணர்ச்சி ஊட்டும் வண்ணம் பாடல்களை அமைத்துக் கொள்வர். பல்வேறு நகைச்சுவை களை இணைத்துக் கதையை நடத்திச் செல்வர். இயற்கை இகந்த

நிகழ்வுகளையும் சேர்ப்பது இயல்பு. இன்று சினிமா மற்றும் அரசியல் சார்ந்த கதைகளை, கருத்துகளை, பாத்திரங்களை, நிகழ்வுகளை இணைத்துச் சொல்லும் பாங்கு காணப்படுகின்றது.

வில்லுப்பாட்டின் காப்புப் பாடல், குருவடி வணக்கம், அவை யடக்கம், கதையை வரிசையாக விளக்குதல், வாழி பாடுதல் என்ற கட்டமைப்பு முறையில் மாற்றம் இல்லை. ஆயின் கதை சொல்லும் பாங்கில் நையாண்டியும் கிண்டலும், இருபொருள்படச் சொல்லுதலும் அதிகரித்துள்ளன. வில்லுப்பாட்டுக் கலையை முன்பு தனிமனிதனைப் புகழ, வாழ்த்த பயன்படுத்தினர் இன்று நேர் எதிர் நிலையாக அது அமைந்துள்ளது.

சமூகப் பண்பாடு

இலக்கியம் சமூகக் கருத்துகளைத் தெரிவிப்பதுபோல நாட்டுப் புறக் கதைப்பாடலான வில்லிசைப் பாடல்களிலும் சமூகக்கூறுகள் காணப்படுவது இயல்பு. மனிதன் அறவழியில் நடத்தல் வேண்டும், அறச்செயல்களைச் செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தி நின்றன. அறச் செயல்களைச் செய்தால் தம் குறைகள் நீங்கும் எனச் செயல்பட் டனர். அதனால், இறைவழிச் சிந்தனைகள் அதிகரித்தன. கோவில் அமைத்தல், குளம் வெட்டுதல், நந்தவனம் அமைத்தல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் போன்ற அறப்பணிகள் வளர்ந்தன. வடலூர் வள்ள லார் வில்லுப்பாடலில் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மணிமேகலை வரியைப் பயன்படுத்திப் பசித்த வனுக்கு உணவளிக்கும் செயலை சிறப்பித்துள்ளனர். சிறுத்தொண்டர் கதையில் அன்னக் கொடி நாட்டி அறுசுவை உணவு கொடுக்கப்பட்ட அறச் செயல் கூறப்படுகின்றது. தன்னுயிர்க்கே ஊறு நேர்வதாயினும் கவலைப்படாது அறவினை செய்துள்ள நிகழ்வுகள் காணப்படுகின்றன.

இன்றைய வில்லுப்பாடல்களில் கோவில்களில் நடைபெறுவன வற்றுள் அறம் சிறப்பிக்கப்படுகின்றது. ஆயின் பிற சமூக நிகழ்வு வில்லுப் பாடல்களிலும், அரசியல் சார்ந்த வில்லுப்பாடல்களிலும் இவை பெரும் பாலும் இல்லை எனலாம். குறிப்பாக, தேர்தல் நேரத்தில் நடத்தப்படும் அரசியல் வில்லுப்பாடல்களில் அறத்திற்கு மாறான மறம் பேசப்படுகின்றது.

புத்தாக்க நிலை

பழைய மரபுக்கதைகள், பழைய அமைப்பு முறைகள், பழைய கருவிகள் என்பன மாற்றம்பெற்று இன்று புதுமுறையில் வில்லுப்பாட்டுக் கதைகள் உருவாக்கம் பெற்று உள்ளன. கதை அமைப்பு முறைகளிலும்

மாற்றம் பெற்றுள்ளன. புதிய கருவிகளான ஆர்மோனியம், டோலக், பம்பை, கிளாரினெட், மொராக்கோஸ், புல்புல்தாரங், மோர்சிங் போன்ற கருவிகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. தனி மனித துதி பாடும் பாடல்கள் வில்லுப்பாடல்களில் அமைந்துள்ளன. பழங்கால மக்கள் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டிய நிலை நீங்கி இன்று நகைச் சுவைத் தன்மையுடன் பாடல்களும் வசனங்களும் அமைந்துள்ளன.

பழைமை வாதத்துடன் இறை நம்பிக்கை ஊட்டிய வில்லுப் பாடல்கள் இன்று புதிய சிந்தனையையும் பகுத்தறிவுக் கருத்துக்களையும் கொண்டு திகழ்கின்றன.

விஞ்ஞான வளர்ச்சியிலும், இன்ப உணர்வுகளிலும் சிக்குண்ட மனிதர்கள் இதுபோன்ற கலைகளில் ஆர்வம் செலுத்துவதில்லை. கால மாற்றத்தில் இக்கலைகள் அழிந்து கொண்டு இருக்கின்றன. இக்கலைஞர்களும் தங்கள் வாழ்க்கைக்காகப் பிற தொழிலுக்கு மாறிச் சென்றனர். புதியவர்கள் இக்கலையைப் பாட, கேட்கத் தயாராக இல்லை. இதனால் இனி வருங்காலத்தில் இது ஒரு வரலாற்றுச் செய்தியாகவே அமையும். வில்லுப்பாட்டு மட்டுமல்ல, எல்லாக் கலைகளும் அழியும் நிலைக்கு, மறக்கும் நிலைக்கு மாறியுள்ளன.

அரசு, அரசு விழாக்களுக்கு பழங்கலைகளை நிகழ்த்தச் செய்தல் வேண்டும். நாட்டுப்புறக் கலைகள், பழங்கலைகளில் வல்லாரை ஊக்குவித்து அவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் வாழ்வாதார நிதி வழங்குதல் வேண்டும். கலைப்பொருட்கள் எளிதில் கிடைத்திடச் செய்தல் வேண்டும்.

மரபுசார்ந்த வில்லிசைக் கலை வீரத்துடன் சமயம், புராணம், வரலாறு, சிறப்புச் செய்திகளை உள்ளிட்டுப் பாடப்பட்டு வந்தன. இருபதாம் நூற்றாண்டில் அது சமூக உணர்வை, விடுதலை உணர்வை வளர்க்கப் பயன்பட்டது. பிற்காலத்தில் அது ஏசலுக்கும், நையாண்டிக்கும் பயன்படுத்தப்பட்டது. அதன் உண்மை நோக்கம் மறக்கப்பட்டு இன்று அது கட்டுப்பாடு இழந்து நிற்கிறது. கட்டுப்பாடு இல்லாமையால் அது அழிந்து கொண்டிருக்கின்றது.

◆

தமிழ் இணைப் பேராசிரியர்,
தெ.தி. இந்துக் கல்லூரி,
நாகர்கோவில் - 629 002.

66

கரகாட்டம்

மு.நிர்மலா ராணி

முன்னுரை

தமிழக நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுள் கரகாட்டமும் ஒன்றாகும். தமிழகத்தில் அன்றுமுதல் இன்றுவரை கரகாட்டம் என்ற கலை, மக்களிடையே காணப்படுகின்றது. இந்த கரகாட்டம் தொழில் ரீதியாகவும், தெய்வம் காரணமாகவும் நிகழ்த்தப்படுகிறது. இனி கரகாட்டத்தைப் பற்றியும், அவற்றின் வகைகளைப் பற்றியும் மக்கள் மத்தியில் எவ்வளவு வரவேற்பு பெற்றுக் காணப்படுகின்றது என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

கரகாட்டம்

தமிழ்நாட்டின் தலைசிறந்த நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றாக விளங்கி வருவது கரகாட்டக் கலையாகும். கரகம் என்பது வாய்ப்புறம் குவிந்து காணப்படும் ஒரு மட்கலம் அல்லது உலோகத்தால் ஆன ஒரு செம்புப் பாத்திரத்தைக் குறிக்கும்.

"நூலே கரகம் முக்கோல் மணையே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெறும் 'கரகம்' என்னும் சொல் அந்தணர்கள் வைத்திருக்கும் நான்கு பொருள்களில் ஒன்றாகிய கமண்டலத்தைக் குறிக்கிறது. புறநானூற்றில் இடம்பெறும்,

"நீரற வறியாக் கரகத்து"

என்னுமிடத்தில் இடம்பெறும் கரகம் என்னும் சொல்லுக்குக் 'குண்டிகை' என்று உரையாசிரியர் பொருள் எழுதியுள்ளார்"[1]

சங்க இலக்கியங்களில் கரகாட்டம் குடக்கூத்து என்று குறிப்பிடப் பட்டுள்ளது. பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தலையில் வைத்தபடிச் சமநிலை பேணிக் கரகாட்டம் ஆடப்படும். உபநிடதத்திலும் கரக ஆட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரகாட்ட வகைகள்

கரகாட்டம் இரண்டு வகைப்படும்.

1. ஆட்டக் கரகம்
2. சக்திக் கரகம்

ஆட்டக்கரகம்

வழிபாட்டுச் சடங்கையொட்டிய மற்றும் பொதுவான ஊர்வலங்களிலும் மேடைகளிலும் பொழுதுபோக்குக்காக ஆடப்படும் கரகாட்டம். இது ஆட்டக்கரகம் எனப்படும்.[2]

ஆட்டக்கரகத்தில் நையாண்டி மேளம் இடம்பெறுவதுண்டு. ஆட்டக்கரகத்தின் அடிப்பாகம் குழியாக இருக்கும். உச்சியில் பொம்மை இருக்கும். குடத்தில் அரிசி நிரப்பப்பட்டிருக்கும். பரத நாட்டியத்தின் நளினத்தையும் ஹஸ்த முத்திரையையும் இதில் காணலாம்.[3]

சக்திக் கரகத்தில் இருந்து வேறு பிரித்துக் காட்டுவதற்காகவே இச்சொல் உருவாகி வழக்கத்திற்கு வந்திருக்கலாம். ஆயினும், ஆட்டக் கரகத்தைக் குறிப்பிடக் கரகாட்டம் என்ற சொல்லே மக்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

சக்திக் கரகம் (அ) அம்மன் கரகம்

வழிபாட்டுச் சடங்கின் ஒரு அங்கமாகத் திகழும் கரகாட்டம். இது 'சக்திக் கரகம்' அல்லது 'அம்மன் கரகம்' எனப்படும்.[4]

விழாக்காலத்து எடுக்கும் கரகத்தைச் 'சக்திக் கரகம்' என்று கூறுவர். பக்தர்கள் எடுத்துச் செல்வது சக்திக் கரகமாகும். சக்திக் கரகத்தில் மேளமும் தப்பும் பிற தாளக் கருவிகளும் இடம் பெறுதலுண்டு. சக்திக் கரகத்தில் கும்பத்தில் தண்ணீர் இருக்கும். விரதமிருப்பவர்கள்

கும்பத்தைச் சுமந்து வருவர். கும்பத்தைக் கோயிலில் வைத்தவுடன் விரதம் முடிந்து விடும்.

சக்திக் கரகம் எடுத்தலை இன்றளவும் ஊர்த் திருவிழாவின்போது பக்திகரமாக மக்கள் கொண்டாடி வருகின்றனர் என்பதை அனைவரும் அறிவர்.

கரகாட்ட ஒப்பனைகள்

கரகாட்டத்தில் செய்யப்படும் ஒப்பனைகளை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது கரகத்திற்குச் செய்யப்படும் ஒப்பனை. இரண்டாவது கரகக் கலைஞர்கள் செய்துகொள்ளும் ஒப்பனை.

கரகத்தை அதன் செய்பொருள், அமைப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோண்டிக்கரகம், செம்புக்கரகம், அடுக்குக்கரகம் என்று மூன்றாகப் பிரித்துக் கொள்ளலாம். இவற்றுள், 'தோண்டிக்கரகம்' மண்ணால் செய்யப்பட்டது. ஏனையவை செம்பு, உலோகத்தால் செய்யப்பட்டவை. இவை, மூன்றிற்கும் ஒப்பனையில் வேறுபாடுகள் உள்ளன.[6]

கரகாட்டத்தில் பண்ணும், தாளமும்

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோரு வகை வரிக் கூத்துகளில் கரகாட்டத்தைக் குடக்கூத்து என்று அழைக்கின்றனர். தெய்வ வழிப்பாட்டைச் சார்ந்த ஒரு நடனமாக ஆடப்பட்டு வருகின்றது. தலைமீது வைக்கப்பெறும் குடம் அல்லது செம்பு கரகம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாட்டத்தில் இசையும், தாளமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அரிகாம்போதி, கரகப்பிரியா, சங்கரா பரணம் ஆகிய மூன்று விதமான இராகங்களில் உள்ள பாடல்களால் கரகாட்டம் ஆடப்படுகின்றது.[7]

கரகத்தின் வகைகள்

மண்கரகங்களும், பித்தளைக் கரகங்களும், செம்புக் கரகங்களும் உள்ளன. இப்பாத்திரங்களின் மேல் அலங்காரம் செய்யப்பட்டு அனைத்துக்கும் மேலே ஒரு கிளிப்பொம்மை இருக்கும். ஆடுகின்ற வர்கள் தங்களை அழகுசெய்து கொள்வார்கள். வண்ண உடைகளும் வனப்பான தோற்றமும் அனைவரையும் கவர்வன. கலைஞர்கள் வெறுமனே ஆடாமல் நையாண்டி மேளத்தின் இசைக்கேற்ப ஆடுவர். அந்த நாத வெள்ளத்தில் நனைந்துகொண்டு ஒரு மயிலாக - மானாகத்

துள்ளிச் சுழன்று ஆடும்போது பார்ப்பவர் மனங்களோடு மேனியும் ஆடுகின்றது.

கரகக் கலைஞர்கள் கரகம் இல்லாமலும் ஆடுவர். ஆடாமல் பலவிதமான வேடிக்கைப் பாடல்களையும், தெம்மாங்குப் பாடல்களையும் பாடுவர். சிலர் 'டப்பாங் கூத்து' நிகழ்ச்சிகளையும் சர்க்கஸ் வேலைகளையும் நடத்துவர்.

மாரியம்மனுக்குக் கரகமாடும் பக்தர்கள்,

"ஒண்ணாங் கரகமடி எங்க முத்துமாரி
ஒசந்த கரகமடி எங்க முத்துமாரி"[8]

என்று பாடிப் பரவசம் கொள்வார்கள்.

முடிவுரை

இவ்வாறு நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் ஒன்றான கரகாட்டம் என்பது அன்று முதல் இன்றளவும் மக்கள் மத்தியில் அதிக வரவேற்புப் பெற்றுக் காணப்படுகின்றது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. முனைவர்.க.முருகேசன், 'கரகாட்டம்', ப - 40
2. டாக்டர்.ஆறு.இராமநாதன், 'நாட்டுப்புறக் கலைகள்', ப - 243
3. டாக்டர்.சு.சக்திவேல். 'நாட்டுப்புற இயல் ஆய்வு', ப - 173
4. டாக்டர்.ஆறு. இராமநாதன் 'நாட்டுப்புறக் கலைகள்', ப - 243
5. மேலது, ப. - 62
6. முனைவர்.துரை.பட்டாபிராமன், 'வாழ்வியல் பெட்டகம்', ப - 176
7. டாக்டர்.சு.சண்முக சுந்தரம், 'நாட்டுப்புற இயல்', ப - 97

◆

நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
காந்தி கிராமக் கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்தி கிராமம்,
திண்டுக்கல்.

67
வில்லிசை அன்றும் இன்றும்

ச. பசுபதி

முன்னுரை

நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்துக் கலைகள் என்றும் கைவினைக் கலைகள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு கலைஞனும் தன் திறமைக்கு ஏற்ப படைப்புத்திறன் கொண்டவன். மரபுக்கும் கட்டுப்பட்டவன். மரபுக்குக் கட்டுப்பட்டவன் என்றாலும் புதியவைகளைப் படைப்பவன். நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுள் தனிமனித நிகழ்த்துதல்களும், கூட்டு நிகழ்த்துதல்களும் அடங்கும்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் நாட்டுப்புற தெய்வ வழிபாட்டுக் கோயில் கொடை விழாக்களில் வில்லுப்பாடல்கள் நிகழ்த்தப்படும். மேலும், வில்லுப் பாட்டுப் பனுவல்கள் ஏடுகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

வில்லுப்பாட்டு, வில்லடி, வில்லடிச்சான் பாட்டு என்று பலவாறாகக் குறிப்பிடப்படும். வில்லுப்பாடலைப் பற்றிய குறிப்புகள் 'வில்லடிப்பாட்டு' என்றும் 'வில்' என்றும் முக்கூடற்பள்ளுவில் சுட்டப்பட்டுள்ளன. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று இந்நூல் குறிப்பிடப்படுவதால் அதற்கு முன்னரும் இக்கலை பெருவழக்கில் இருந்ததெனக் கருதலாம்.

வில், குடம், உடுக்கு, தாளம், கட்டை போன்ற இசைக்கருவிகள் பல பயன்படுத்தப்பட்டாலும் வில்லுப்பாட்டு என்றே இக்கலை பெயர் பெற்றுள்ளது.

இலக்கியச் சான்றுகளில் வில்லுப்பாட்டு

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட 'முக்கூடற்பள்ளு' என்னும் நூலில், மூத்தபள்ளி என்பாள், தன் கணவன் குடும்பன் தன் வருவாயையெல்லாம் சேமித்து வைக்காமல் செலவழித்து விடுகிறான் என்று பண்ணையாரிடம் முறையிடுங்கால்,

"வரத்தினை மீறுஞ் - செலவுக்குத்
தரித்திரம் ஏறும் - பேய்க்கொடை
மட்டுக்கட் டில்லான் - கூத்துக்கும்
கொட்டுக்கும் நல்லான்

உரத்திடுங் காளை - சுழியன்
நரைத்தலை மோழை - புதியவன்
ஊட்டுக்குக் குறித்தான் - வில்லடிப்
பாட்டுக்குப் பொறித்தான்
ஆருக்கும் பணியான் - சீவலப்
பேரிக்கும் பணியான் - வில்லென்னும்
அரிப்பிட்டுப் போட்டான் - பள்வரி
தெரிப்பிட்டுக் கேட்டான்"

எனக் கூறுவதாக வருகின்றது.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முக்கூடற்பள்ளு என்னும் இந்நூலுள் வில்லுப்பாட்டு குறிக்கப் பெறுகின்றதென்றால் அஃது அதற்கும் பல்லாண்டுகளுக்கு முன்னேயே பாடப்பெற்று வந்திருத்தல் வேண்டும்.

மேற்காணும் பாக்கள் வேறு ஓர் உண்மையினையும் உணர்த்துகின்றன. 'ஊட்டு' என்பது, சிறறூர்ச் சிறுதெய்வ வழிபாட்டில் கொடுக்கப் பெறுகின்ற பேய்க்கொடையைக் குறிப்பதாகும். இப் 'பேய்க்கொடை' என்னுஞ் சொற்றொடர் திருநெல்வேலியைச் சுற்றியுள்ள ஊர்களில் இன்றும் பெருவழக்காகப் பேசப்பெறுகின்ற சொற்றொடர் ஆகும். இப்பேய்க்கொடை கொடுக்கப் பெறுகின்ற சிற்றூர்க் கோவில்களிலேயே வில்லுப்பாட்டு காலங்காலமாகப் பாடப்பெற்று வருகின்றது.

தற்போது வில்லுப்பாடல்களைப் பெண்களும் பாடுகின்றனர். வில்லுப்பாட்டு மரபில் இருபுலங்கள் உள்ளன. ஒன்று கதையாடல், மற்றொன்று சடங்கு. கதையாடல்களில் பிறந்த கதை, இறந்த கதை என்று இருவகையாகப் பிரிப்பர். ஆண், பெண் தெய்வங்களின் வரலாற்றைச் சொல்லும் கதைகளைத் தெய்வப்பிறவி அல்லது தெய்வாம்சம் என்பர். இறப்பு பற்றிய கதையாடல்களுக்குரியோரை வெட்டுப்பட்ட வாதைகள் அல்லது இறந்துபட்ட வாதைகள் அல்லது பேய்ப்படைகள் என்று மக்கள் குறிப்பிடுவர்.

இவ்வாறு புராணக் கதைகளும், தெய்வக் கதைகளும் பாடுபொருளாகக் கொண்ட வில்லிசை நிகழ்ச்சி இந்திய சுதந்திரக் காலகட்டங்களில் சுதந்திரக் கருத்துக்களைப் பரப்பப் பயன்படுத்தப் பட்டது. சுதந்தர காலகட்டத்திற்குப் பிறகு திரு. சாத்தூர் பிச்சைகுட்டி, வி.கே. துரையரசு, லட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன், கலைமாமணி முத்துக்கூத்தன் ஆகியோரைப் போன்று பலர் இந்திய நாட்டு விடுதலைக் கருத்துகளையும், தமிழ் இலக்கியக் கதைகளையும் வில்லிசை மூலம் மக்களிடம் கொண்டு சென்றனர்.

'மூடநம்பிக்கையால், பழமை எண்ணங்களால் கொண்டிருக்கின்ற நம்பத் தகாதவற்றை மக்கள் மனத்திலிருந்து துண்டித்து, இலக்கிய உணர்வுக்கு வழிவகுத்துப் புதுமையை நாடச் செய்து உணர்வு கொண் டெழப் பாடுவதே என் இலட்சியம்' என்று கூறியவர் பிச்சைக்குட்டி. அவ்வகையிலேயே தம் நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்குப் புதியபுதிய செய்திகளை வழங்கினார். நாட்டுக்காகத் தியாகம் செய்த தியாகிகள் பற்றியும் மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பாடமுடியும் எனப்பாடி வில்லிசைக்குப் புதிய திசை வழியைக் காட்டினார். வில்லுப்பாட்டில் காணப்படும் பண்கள் கருநாடக இசைத்தன்மையில் அமைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பியவர். அப்பொழுதுதான் இக்கலை மிகச் சிறப்பான நிலைத்தன்மை பெறும் எனவும் எண்ணினார்.

'கவி பாரதியார் கதை' வில்லுப்பாட்டில் பாரதியின் மறைவைக் குறித்து அவர் பாடிய பாடல் அவலச் சுவையை மிகுவிக்கும் பாடலாகும்.

"கவிகளுக்குச் சக்கரவர்த்தி
கண்ணைமூடி மௌனியானார்
தமிழன்னையின் செல்ல மகன்
தரையதிலே சாய்ந்துவிட்டார்
காணிநிலம் கேட்ட வள்ளல்
கால்பரத்திச் சாய்ந்துவிட்டார்

முத்துமுத்தாய்க் கவிசொன்ன வாய்
மூடிவிட்டார் தமிழ்க்கவிஞர்
சிறகடித்த மனப்பறவை
இறகொடிந்து அடங்கியதே"

வில்லிசை அன்றும் இன்றும்

புதிய நாகரிகங்களின் வளர்ச்சி மக்களிடம் பரவுவதற்கு முன் வில்லிசை போன்ற நாட்டுப்புற மேடைக் கலைகள் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. கட்டணம் செலுத்தியும் மக்கள் இக்கலையைக் காணவந்தனர். பொழுதுபோக்கிற்காகவும் சிந்தனை களைப் பெறவும் மக்கள் இக்கலைஞர்களை நாடிச் சென்றனர். ஆதலால், பல குழுக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தனர். இக்கலைகளை வளர்த்தும் வந்தனர்.

இன்றைய தொழில்நுட்ப உலகத்தில் தொலைக்காட்சி வாயிலாக இக்கலை மக்களிடம் போய்ச் சேர்கிறது. திருவிழாக்களில் இக்கால கட்டத்தில் மெல்லிசை என்ற கலை வடிவம் வெகுவாகப் பரவியிருப்ப தாலும், மெல்லிசை பல்வேறுபட்ட ஓசைகளை வெளிப்படுத்துவதாலும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதனால், வில்லிசை போன்ற மேடைக் கலைகள் தங்களது மேடையை இழந்து வருகின்றன. தொலைக்காட்சிகளின் மூலம் வில்லிசை உலமெல்லாம் பரவினாலும், அதனை நிகழ்த்துகின்ற குழுக்கள் குறைந்து வருகின்றன. புதிய கண்டு பிடிப்புகள் நாட்டுப்புறக் கலைகளை உலகமக்களுக்கு அறிமுகப் படுத்தினாலும் அதனை நம்பிப் பிழைப்பு நடத்துவோரின் வாழ்க்கை நிலை மிகமோசமான நிலையை அடைகிறது.

முடிவுரை

இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பொழுதுபோக்குச் சாதனங்களின் வருகையினால் மக்கள் கலைகள் அனைத்தும் நலிந்து போய்ச் சவலைப் பிள்ளையாக மாறிவிட்டன. ஒரு காலகட்டத்தில் செல்வம் படைத்தோரின் கலையாக கருதப்பட்ட வில்லிசையும் கலைஞர்களும் இன்று வறுமைக்கு ஆட்பட்டு வேறு தொழில்களுக்குச் செல்லும் அவலநிலை உண்டாகியுள்ளது.

◆

விரிவுரையாளர்,
தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குரோம்பேட்டை,
சென்னை - 44.

68

கரக ஆட்டம்

மு. பஞ்சவர்ணம்

நாட்டுப்புற ஆட்டக்கலைகளுள் ஒன்றான கரக ஆட்டத்தைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புறக் கலைகள் அனைத்தையும் நிகழ்த்துக் கலைகள், நிகழ்த்தாக் கலைகள் என இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். நாட்டுப்புறக் கலை "வழிப்பாட்டுச் சடங்குகளின் ஒரு பகுதியாகவோ அழகுணச்சியின் வெளிப்பாடாகவோ பொழுதுபோக்குக்காகவோ மக்கட் குழுக்களால் உருவாக்கப்படும் (அ) நிகழ்த்தப்படும் செவ்வியல் கலைகள் தவித்த ஏனைய மரபுவழிக் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனலாம்."

கரக ஆட்டம்

'கரகம்' என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி, கங்கை, பூங்குடம் ஆகிய பொருள்களைத் தருகிறது. மலர்களைக் கொண்டு அழகாக ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்து ஆடும் ஆடலுக்குக் கரக ஆட்டம் என்று பெயர். இதைத் தென் மாவட்டங்களில் 'கும்பாட்டம்' என்றும் கூறுகின்றனர்.

நெல்லை குமரி, மதுரை இராமநாதபுரம் தஞ்சை ஆகிய மாவட்டங்களில் கரக ஆட்டக் கலைஞர்கள் பலர் உள்ளன. இந்த ஆட்டத்தைத்

தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விரும்பிப் பாக்கின்றனர். மாரியம்மன் கொடை விழாக்களில் மிகப் பரவலாக இந்த ஆட்டம் நடத்தப்படுகிறது. இறைவழிபாட்டு நிகழ்ச்சியுடன் இவ்வாடல் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. இதனைத் சக்திக் கரகம், ஆட்டக்கரகம் என இருவகையில் பிரிக்கலாம்.

கரக அலங்கரிப்பு

கரக ஆட்டமும் கலையழகு சிறக்கத் தொழில் முறையாகப் பல இடங்களில் நடைபெறுகிறது. வழிபாட்டுக் கரகத்திற்கும் கலைத் தன்மைக் கரகத்திற்கும் சில வேறுபாடுகள் உள்ளன. முன்னது தண்ணீரால் நிரம்பி இருக்க, பின்னது அரிசியால் நிரப்பப்பட்டிருக்கும். மலராலும் வண்ணக் காகிதத்தாலும் ஒப்பனை செய்திருப்பர். கரகத்தின் உச்சியில் ஒரு பொம்மைக்கிளி பொருத்தப்பட்டிருக்கும். பெண்கள் மிகப் பெரும்பாலாக ஆடுவார்கள். ஆண்களும் சில இடங்களில் ஆடுவதைக் காணலாம். இருபாலரும் இணைந்து ஆடுவதும் உண்டு.

ஆடும் முறை

கரகத்தைக் கையால் பிடிப்பது இல்லை. தலையில் அதைச் சமனப்படுத்தி மிக வேகமாகக் குதித்தும் சுழன்றும் ஆடுவர். பெரும்பாலும் தொழில்முறைக் கலைஞர்கள் வெண்கலக் குடத்தையே வைத்து ஆடுவார்கள். காலில் சதங்கை கட்டி இருப்பர். ஆடையை இறுக்கமாக அணிந்து கொள்வர். நையாண்டி மேளத்தின் இசை கரக ஆட்டத்திற்கு மிகவும் பொருத்தமாக அமையும். இசைக்கும் தாளத்துக்கும் தக்கவாறு ஆட்டம் நடக்கும். படிப்படியாக உயர்ந்து உச்சக் கட்டத்தை அடைந்து பின் திடீரென்று நிறுத்தப்படும். அவ்வாறே ஆட்டமும் வேகம் பெற்று விறுவிறுப்படைந்து திடீரென நிற்கும். பேரொலியின் திடீர் நிறுத்தமும் ஆட்ட முடிவும் ஒரு வியப்பான அமைதியை ஏற்படுத்தி மக்களின் ஆரவாரக் கைத்தட்டலைப் பெறும். சில சமயம் ஒன்றிய உணர்வில் ஒலியற்ற அமைதியுடன் வெளியிடத்தில் நடக்கும். அம்மன் வீதியுலா வரும்போது தெருவைச் சுற்றியும் நடைபெறும். ஊர் மக்கள் தங்கள் கையிருப்புக்குத் தக்கவாறு ஆடுபவருக்குப் பணமும் பரிசும் கொடுப்பது வழக்கம்.

வளமைச் சடங்காகக் கரகம்

கரகம் நீரால் நிரப்பப் பெற்றிருக்கும். இந்த நீர் மாரியையும் ஏழு புண்ணிய நதிகளையும் குறிப்பிடுவதாக மக்கள் நம்புகின்றனர். இறைவழிபாட்டுடன் நடத்தப்படும் கரக ஆட்டக் குடங்கள்

பூக்களாலும் வேப்பிலையாலும் அழகு செய்யப்பட்டிருக்கும். மாரி சொரிந்து நாட்டில் வளம் கொழிக்க வேண்டும் என்ற கருத்தில் அம்மன் கொண்டாடிகள் குடமெடுத்து ஆடுவார்கள். ஒரு கைப்பிரம்பு கொண்டு அதைத் தட்டியவாறு ஆடுவர். ஊர் சுற்றி வருவர். மக்கள் பற்றுடன் அவர்களை வரவேற்று மஞ்சள் அரைத்துப் பூசி அவர்களுடைய காலில் நிறைகுடத்து நீர் ஊற்றி வணங்கி நிற்பர். மழை வேண்டும் கடப்பாடாக இந்த ஆட்டம் நடைபெறுகிறது.

வித்தைகள் நிறைந்த கரக ஆட்டம்

சில சமயம் ஆட்டத்துக்கு நடுவில் பலவிதமான தந்திர வித்தைகள் கரக ஆட்டக் கலைஞகளால் காட்டப்படும். தரையில் வீசப்படும் பணத்தைக் கைகொண்டு எடுக்கும்போது தலையிலிருக்கும் கரகம் இருப்பு நழுவாது தாங்கப்படுவது வியப்பாகத் தோன்றும். குடத்துக்கு மேல் குடமாகப் பல குடங்களை அடுக்கி ஆடுவதும் உண்டு. தலையில் ஓர் உலக்கையை நிலையாக நிறுத்தி அதன் உச்சியில் தீச்சட்டி வைத்தும் ஆடுவர். தலைமுடியில் தீப்பந்தங்களைக் கட்டிச் சுழன்று ஆடும் காட்சி கண்ணுக்கு இனிய விருந்தாகும். அது அச்சமூட்டு வதாகத் தோன்றும். வேகமே அதன் வெற்றிக்குக் காரணமாக அமையும்.

கரகம் தலையிலிருக்கும்போது இரண்டு ஏணிகளைத் தரையில் நிறுத்தி அவற்றில் கால்களை ஊன்றிச் சமன்படுத்தியவாறு மேலேறிக் கீழிறங்குவதும் உண்டு. கரகமின்றி நிறுத்தப்பட்டுள்ள ஏணியின் ஊடே நுழைந்து மேலும் கீழும் வருவதையும் காணலாம். தரையில் ஒரு குடத்தைக் கவிழ்த்து வைத்து அதன் மேலேறிக் கரகமாடுவதும் களிப்புறு காட்சியாகும். இத்தகைய வித்தைக் காட்சிகள் மக்களை வியப்பில் ஆழ்த்தி மகிழச் செய்வதற்கும் தங்களுடைய தனித்திறமை யைப் புலப்படுத்துவதற்கும் கலை மாந்தர்களால் செய்யப்படுவதாகும்.

கரகப்பாடல் அமைப்பு

கரகமெடுத்து ஆடுவோர் சில பாடல்களைப் பாடுவதைக் கேட்கலாம். பாடல்கள் நாட்டுப்புறப் பாடலிசை அமைப்பில் இருக்கும். ஒன்று முதல் பத்து வரை எண்கள் அமைந்த பாடல் ஒன்றைப் பார்க்கலாம். முத்துமாரி அம்மனை அழைத்தே பாடப் படுகிறது.

"ஒண்ணாம் கரகமடி எங்க முத்துமாரி
ஒசந்த கரகமடி எங்க முத்துமாரி
ரெண்டாம் கரகமடி எங்க முத்துமாரி
ரத்தின கரகமடி எங்க முத்துமாரி

இவ்வாறு பத்துவரை எண்களைக் குறிப்பிட்டும் பாடுவர். பாட்டின் மொழி, பொருள், இசை எல்லாம் இனிமையாகவும் எளிமையாகவும் இருக்கும். ஆனால், சுவை மிகுதியாகக் காணப்படும். அது நாட்டுப்புற மக்களைக் கவரக்கூடியது.

கரகத்தின் தொடக்கம்

இன்று தெய்வ வழிபாடாகவும் கலை வெளிப்பாடாகவும் கரக ஆட்டம் நடக்கிறது. இதன் தொடக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதைச் சிந்திக்கலாம். முற்காலத்தில் குடிதண்ணீர் எடுக்க வேண்டுமானால் பெண்கள் தூர இடத்து ஆற்றுக்கோ(அ) குளத்துக்கோ சென்றிருக்க வேண்டும். நீர் நிறைந்த குடங்களைத் தலையில் வைத்து நடந்திருப்பர். பழக்கத்தின் காரணமாகக் கையைக் கொண்டு குடத்தைப் பிடிக்காமல் நடந்திருப்பர். அந்த நடையில் ஓர் அழகு மின்னலிட்டி ருக்கும். அதைக் கலையாக மனிதன் கண்டு களித்திருக்கலாம். அதை விளக்கம் பெறச்செய்து கரக ஆட்டக்கலை சீர்பட்டு வளர்ந்து இருக்கலாம். மனிதனின் இயல்பான தேவை அவனைச் செயல்பட வைத்து அதன் மூலம் முகிழ்த்த கலைத்தன்மை சீர்பட்டுக் கலைகளில் சில தோன்றி இருக்கலாம். அத்தகைய கலைகளில் ஒன்றாகக் கரக ஆட்டத்தைக் கருதலாம். இயல்பான மனிதச் செயலில் தொடங்கி இறையுணவில் வளர்ந்து கலையாகக் கரக ஆட்டம் வாழ்கிறது.

தொன்மைக் கலை

கரக ஆட்டத்தின் கூறுகள் சிலப்பதிகாரக் காலத்தில் இருந்ததாகக் கூறலாம். மாதவி ஆடிய 11 ஆடல்களில் ஒன்று 'குடக்கூத்து என்று கூறப்பட்டுள்ளது. அது கண்ணன் ஆடிய கூத்தாகும். பாணாசுரன் கண்ணனின் பேரனான அநிருத்தனைச் சிறைசெய்து விடுகிறான். அவனை விடுவிப்பதற்காக மண்ணாலும் வெண்கலத்தாலும் செய்த குடங்களைத் தலையில் வைத்து நகர வீதியல் கண்ணன் ஆடினான். விநோதக் கூத்துகளில் ஒன்றாகக் 'குடம் குறிப்பிடப் பெற்றுள்ளது. நாட்டுப்புறத்துச் சாமியாடிகள் இன்றும் மண்குடங்களைத் தலையில் வைத்து ஆடுவதைப் பார்க்கலாம்.

கரக ஆட்டத்தின் தற்போதைய நிலை

தற்காலத்தில் கரக ஆட்டம் ஒரு தொழிலாக மட்டுமே வளந்து வருகிறது. அதன் கலையம்சம் மறைந்து வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமே இரசிக்கப்படும் கலையாக நலிந்து வருகிறது. ஆட்டத்தின்

நடுவில் வித்தைக் காட்சிகளைக் காட்டுவது கரக ஆட்டத்தின் கலைத் தன்மையைக் குன்றச் செய்வதாக உள்ளது. கலையுடன் மக்களுக்கு ஏற்பட்ட ஒன்றிப்பு உணர்வு தற்காலத்தில் குன்றி விட்டதாகத் தோன்றுகிறது. அவற்றை நடுவில் காட்டாமல் இறுதியில் காட்டினால் அதன் கலையுணர்வும் கெடாது திறமையும் மறையாது.

முடிவுரை

இக்கட்டுரையின் வாயிலாக நாட்டுப்புறக் கலையாக அமைந்த கரக ஆட்டத்தினையும் கரக ஆட்டத்தின் சிறப்பையும் ஆடும் முறையை யும் கரக ஆட்டம் தோன்றி வளர்ந்த முறையையும் அறிந்து கொள்ள முடிகிறது.

◆

இளநிலை ஆய்வாளர்,
அய்யநாடர் ஜானகி அம்மாள்
கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி - *626 124.*

69
ஒயிலாட்டம் என்றும் தனியாட்டம்

பேரா. ச. பட்டாபிராமன்

நாட்டுப்புறங்களில் ஒயில்கும்மி என்று சொல்லுவதைத்தான் ஒயிலாட்டம் என்று கூறுகிறார்கள். பெண்கள் ஆடுவது கும்மி; ஆண்கள் ஆடுவது ஆட்டம். ஆனால், இன்று மரபு மாற்றிக் கூறுகிறார்கள். ஆண்கள் ஆட்டமாகிய கரகாட்டத்தைப் பெண்கள் ஆடுகின்ற நிலையில் கரகாட்டம் என்றுதான் கூறுகிறார்கள். ஆனால், ஒயில் ஆட்டம் முன்காலத்தில் பெண்கள் ஆடாத நிலையில் ஒயில்கும்மி என்று பெயர்பெறக் காரணம் என்ன? ஒன்றாகச் சேர்ந்து வட்டமாகவோ, நேர் வரிசையிலோ நின்று இணைந்து ஆடுவதைக் கொண்டு ஒயில் ஆட்டத்தை ஒயில் கும்மி என்று சொல்லி வருகிறார்கள். மேலும், ஆட்டங்களுக்குப் பாட்டுகளோ கதைப் பிடிப்போ முன்பு இருந்ததில்லை. இப்போது பெண்கள் கும்மியில் இருப்பதைப்போல, பாட்டுகள் இருப்பதைக்கொண்டு இதைக் கும்மி என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, இன்று எல்லா மாவட்டங் களிலும் ஒயிலாட்டத்தைக் கும்மி என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே, இன்று எல்லா மாவட்டங்களிலும் ஒயிலாட்டத்தைக் கும்மி என்றே சொல்லும் பழக்கம் இருந்து வருகிறது.

ஒயிலாக-கம்பீரமாக-அழகாக ஆடி வருவதைக் கொண்டு இதை ஒயிலாட்டம் என்று கூறுகிறார்கள். ஒரு காலத்தில் எல்லா மாவட்டங்

களிலும் எல்லா ஊர்களிலும் ஆடிவந்த ஒயிலாட்டம் இன்று காலப்போக்கில் அதன் மவுசு குறைந்து ஒருசில கிராமங்களில் மட்டும் ஆடப்பட்டு வரும் நிலையையும் காண முடிகிறது.

ஒயிலாட்டத்தின் வரலாறு

மனிதன் போர்க்குணம் கொண்டவன்; தன் வல்லமையை எல்லா நிலைகளிலும் காட்ட வேண்டும் என்ற பேரவா கொண்டவன். இந்த தனியாத வேட்கையால் தன் போர்ப்பயிற்சியைக் காட்டுவதற்காகப் பலவித விளையாட்டுகளை - சண்டை விளையாட்டுகளைப் பயிலத் தொடங்குகிறான். அதன் முன்னோடிதான் சிலம்பப் பயிற்சி. சிலம்பாட்டத்தைக் கற்கத் தொடங்குமுன், அத்தகைய பயிற்சிக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ள வேண்டும்; தன் உடல் அங்கங்களை ஆட்டிப் பழக்கிக்கொள்ள வேண்டும்; இலகுவாகக் கைகால்களை விரும்பிய திசைகளில்மேல் வாட்டத்திலோ, பக்கவாட்டத்திலோ அசைக்க ஏதுவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒயிலாட்டத்தில், நிலையில் நிற்பவர்களையும், சிலம்பாட்டத்தில் நிலையில் நிற்பவர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். வித்தியாசம் இம்மியளவுதான். ஒயிலாட்டம் ஆடுபவன் நிலையில் இருக்கும்போது இடது காலை முன்னே வைத்துப் பாதத்தை நன்கு ஊன்றி வலது காலைப் பின்னே வைத்துக் குதியைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பான். வலது காலில் தொய்வைக் காணலாம். இடது கையை முன்னே தூக்கி, வலது கையைச் சற்று பின்னோக்கி இழுத்த நிலையில் கைக்குட்டையைப் பிடித்துக் கொண்டிருப்பான்.

ஆனால், சிலம்பாட்டத்தில் நிலையில் நிற்பவன், இடது காலை முன்னுக்கு வைத்து நன்றாக ஊன்றி, வலது காலைப் பின்னுக்குத் தள்ளி வைத்துப் பாதம் நிலத்தில் நன்கு ஊன்றி இருக்குமாறு விறைப்பாக நிற்பான். இடது கையை முன்னே நீட்டி, வலது கையைப் பின்னுக்குத் தள்ளி வைத்துத் தடியை விறைப்பாகப் பிடித்து நிற்பான்.

ஒயிலாட்டத்தில் வலதுகால் குதி தூக்கியிருப்பதுதான் இரண்டிற்குமுள்ள வேறுபாடு.

ஒயிலாட்டத்தில் ஆடுபவனின் இரண்டு கைகளும் கைக்குட்டைகளைப் பிடித்தவாறே மேல்நோக்கியும் பக்கங்களிலும் அசைவதைப் போன்றே சிலம்பாட்டத்திலும் கைககள் செயல்படும். மேலும், சிலம்பத்தில் தடியைப் பிடிப்பதற்கு ஏதுவாகக் கைக்குட்டையைப் பிடித்த கைகள் பயிற்சி பெறுகின்றன.

ஆகவே, சிலம்பாட்டத்தைக் கற்றுக்கொள்ளும் முன்னோடி ஆட்டமாக ஒயிலாட்டத்தை கற்றுக்கொண்டு பழகி வந்திருக்கிறார்கள். வெறுமனே ஆடும்போது ஆட்டத்தில் குறையைச் சுட்டிக்காட்டித் தெளிவாக்கிக் கொள்வதற்காகத்தான் தாளத்தோடு தோல் கருவியின் ஒலியோடு ஆடப் பழக்கிக் கொண்டார்கள். ஆகவே தான், இவ்விரண்டு ஆட்டத்திற்கும் பாட்டு தேவைப்படாதிருந்தது; மிருதங்கமும் உறுமியும் தேவைப்பட்டது. மிருதங்கத்திற்குப் பதில் பானையின் வாய்ப்பகுதியில் தோலைக்கட்டி முழக்கிடும் இசைக்கருவியைத்தான் சமீப காலம் வரையில் பயன்படுத்தி வந்தார்கள். இப்போதுதான் மிருதங்கம் பயன்படுத்தப்படுகிறது.

எதையும் வெறுமனே பழகினால் ஈடுபாடு ஏற்படாது என்பதற் காகத்தான் விழாக் காலங்களுக்காகப் பழக ஆரம்பித்தார்கள்; திருமணத்தின் ஊர்வலச் சமயத்தில் ஆடுவதற்காகப் பழகினார்கள்; அரசர்கள் வருகைக்காக ஆடப் பழகினார்கள்; அதையே நாள்போக்கில் இறந்து தெய்வமான தம் முன்னோர்களை வழிபடும் நாளிலும் ஆடப் பழகினார்கள். இவ்வாறே ஒயிலாட்டம் வழக்கில் பழக்கத்திற்கு வந்தது. அதன்பின் தொடர்ச்சியாக ஆடும்போது பார்ப்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படாது இருப்பதற்காகப் பாட்டை-கதைப்பாட்டை இணைத்துக் கொண்டார்கள். ஆனால், பாட்டிற்கும் ஒயிலாட்டத்திற்கும் தொடர்பில்லை. ஒயிலாட்டத்தில் பாட்டுப் பாடுபவர்கள் பக்கப் பாட்டுக்காரர்களேயாவர். இல்லையென்றால் வாத்தியார் பாடுவார். பாடிக்கொண்டும் ஆடுவதும் உண்டு. ஆனால், அவ்வாறு ஆடும்போது ஆட்டத்தில் விறுவிறுப்பு இருப்பது இல்லை. இதற்காக ஆட்டக்காரர் கள் பாடுவதில்லை. ஆனால், இராமாயணம் போன்ற கதையைப் பாடும் ஒயிலாட்டத்தில் மட்டும் ஆட்டக்காரர்கள் பாடுகிறார்கள்.

இவ்வாறெல்லாம் பாடி ஆடுவது மகிழ்ச்சிக்காகவே. இந்த நோக்கிலேயே தெய்வத்தின் முன் ஆடினார்கள். அப்போது பலவிதமாகப் பாட்டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். பின் காலப்போக்கில் செய்தியைக் கூறவேண்டும்-புகட்டவேண்டும் என்பதற்காக ஒயிலாட்டம் என்ற ஊடகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால், ஒயிலாட்டத்தின் முக்கிய நோக்கம் சிலம்பப் பயிற்சிக்குத் தயார் ஆக்கிக் கொள்வதேயாகும்.

இந்த நோக்கில்தான், ஆட்டக் கலைகளாகிய கரகாட்டம், காவடி ஆட்டங்களும் இருக்கின்றன. ஆகவே, அவற்றிற்கும் பாட்டு முக்கிய மாக இருப்பதில்லை. கரகாட்டத்திற்குப் பாட்டு கிடையாது. காவடிக்கு

ஆட்டத்தோடு சேராமல் சமயச் சார்பான பாட்டுகள் பாடப்படுகின்றன.

ஒயிலாட்டத்தின் நடைமுறை

ஒயிலாட்டத்திற்கு வயது தடையாவது இல்லை. எந்த வயதினரும் ஆடலாம். குறைந்தபட்சம் இத்தனை பேர்தான் என்ற வரையறையும் இல்லை. ஆனால், ஆட்கள் எட்டு பேராவது இருந்தால்தான் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும். ஒவ்வொரு ஆட்டக் குழுவுக்கும் வாத்தியார் ஒருவர் இருப்பார். அவர்தான் முதலில் ஆட்டத்தைத் தொடங்கி வைப்பார்; பாடடையும் அவரே பாடுவார். பின்பாட்டைப் பின்பாட்டுக்காரரர்களும் பாடுவார்கள்; அல்லது ஆட்டக்காரரர்களும் பாடுவர். எல்லா ஆட்டக்காரரர்களும் ஒரே மாதிரியான உடை அணிந்திருப்பார்கள். பெரும்பாலும் பனியனும், அரைக்கால் சட்டையும் அணிந்திருப்பார்கள். கையில் வண்ணக் கைக் குட்டையை வைத்திருப்பார்கள். சில குழுக்களில் இரண்டு கைகளிலும் இரண்டு கைக்குட்டைகளை வைத்திருப்பார்கள். கால்களில், சலங்கை யைக் கட்டியிருப்பார்கள். இவற்றைக் கச்சம் என்று சொல்லுகிறார்கள். இந்த கச்சம் 4 அறுப்பு மணிகளாகவும் இருக்கும்; ஆறு அறுப்பு மணிகளாகவும் இருக்கும். ஆறு அறுப்பு மணிகளைச் சேலம் கச்சம் என்று சொல்லுகிறார்கள். ஒரே அறுப்புள்ள தவளை போன்ற வாய்ப்பகுதியைக் கொண்ட சலங்கையையும் அணிகிறார்கள். இதைத் தவளை மணி என்கிறார்கள்.

பக்கவாத்தியமாக மிருதங்கம், ஆர்மோனியம், சால்ரா வைத்துக் கொள்கிறார்கள். பின்பாட்டுப்பாட இருவர் இருப்பர்.

ஆட்டம் தொடங்கும்போது வரிசையாக நின்று கொள்வார்கள். முன்பாக வாத்தியார் இருப்பார். நிலையிலிருந்து ஆட்டம் தொடங்குவதை அதாவது, மெதுவாக ஆடுவதை மந்தநிலை என்றும், சற்று விரைவாக ஆடுவதை மத்திமம் என்றும் மிக விரைவாக ஆடுவதைத் துரிதநிலை என்றும் கூறுவார்கள். எல்லா ஆட்டமும் முக்காலமும் ஆடி, நிலையில் நிறுத்தப்படும்.

ஆட்டங்கள் 10லிருந்து வேறுபட்டு 24 ஆகவோ, 32 ஆகவோ 38 ஆகவோ இருக்கும். இது அந்தந்த வாத்தியார் தன்னுடைய திறமையைக் காட்டுவதற்காக போட்டுக் கொள்ளும் ஆட்டங்களாகும். செண்டிப்பு ஒவ்வொரு ஆட்டத்திலும் இருக்கும். சறுக்கு, 4 வீடு கட்டி விளையாடுதல் ஆகிய ஆட்டங்கள் சிரமமான ஆட்டங்கள்.

ஒயிலாட்டத்தின் ஒவ்வொரு குழுவுக்கும் வாத்தியார் போக ஒரு தலைவர் ஆட்டக்காரரர்களுக்குள் இருப்பார். இவரைச் சட்டாம் பிள்ளை

என்று கூறுவார்கள். வாத்தியார் இல்லையென்றால் இவரே குழுவை நடத்திச் செல்வார்.

ஒயிலாட்டத்தின் பிரிவுகள்

ஒயிலாட்டம், பட்டாளக் கும்மி என்றும் ஒயில் கும்மி என்றும் இரண்டு வகையாகக் குறிப்பிடப்படுகிறது. இராமாயணம் போன்ற கதையைப் பாடும் பொருளாக வைத்து ஆடும் கும்மியை ஒயில் கும்மி என்றும், வெறுமனே தனிப்பட்ட பாட்டுக்களை வைத்துக்கொண்டு அதற்குத் தக ஆடும் கும்மியைப் பட்டாளக் கும்மி என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வாறு வழங்கப்படும் ஒயிலாட்டம் தற்போது நாட்டுப்புற கலைகளில் இருந்து அதன்நிலை சின்னத்திரை மற்றும் பிற பொழுதுபோக்கு அம்சங்களால் குறைந்துகொண்டே வந்தாலும் பல இடங்களில் அதன் நிலை இன்றும் புகழின் உச்சியில் உள்ளது. ஆகவே, ஒயிலாட்டம் என்றும் தனியாட்டம்.

◆

தமிழ்த்துறைத் தலைவர்,
மனோ கல்லூரி,
புளியங்குடி,
சிவகிரி, திருநெல்வேலி.

70
கும்மியாட்டம் : அன்றும் இன்றும்

ப. பரணி

நாட்டுப்புறக் கலைகள் மனிதனின் உள்ளத்தில் ஊன்றி எழும் உண்மையான உணர்ச்சிகளின் வடிகால்களாக அமைந்துள்ளன. சுருங்கக் கூறின் இக்கலைகள் மக்களுடைய உணர்ச்சிகளின் உயிரோட்டமான மாற்று உருவுகள் ஆகும். உண்மையான உணர்ச்சியின் வெளியீடாக நாட்டுப்புறக் கலைகள் அமைவதினால் அவை மக்களால் இன்றளவும் போற்றப் பெறுகின்றன.

கும்மியாட்டம்

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் மிக முக்கியமானது. 'கொம்மாய்' என்ற சொல்லிலிருந்து கும்மி தோன்றியிருக்க வேண்டும். இவ்வாட்டத்தைக் குஜராத் 'கர்பா' நடனத்துடனும், இராஜஸ்தான் 'கும்மா' ஆடலுடனும், ஆந்திர நாட்டுக் கொப்பியுடனும், கேரள நாட்டுக் கைகொட்டிகளியுடனும் தொடர்புபடுத்துவர். பெண்கள் விளக்கைச் சுற்றிக் கும்மியடிப்பர். கால்களின் ஜதிகளை மாற்றிக் கொண்டு ஒரே அளவான தாளகதி அமையுமாறு கையொலி எழுப்பிக் கொண்டு வட்டமாக அடிப்பர். கைதட்டுகளிலும் விரல்களின் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு எனப் பலவகை உண்டு. ஜதிகளில் முழுப்பாதம் தரையில் படும் அடி, கட்டைவிரல் மட்டும் படியும் அடி, முன்னங்கால் மட்டுமே படியும் அடி, குதித்தல் எனப் பல வகையுண்டு.

கும்மியாட்டம் - நூல்கள்

கும்மியாட்டம் காலப்போக்கில் இலக்கியத்தில் தனிப்பிரிவாக வளரத் தலைப்பட்டது. அரிச்சந்திரன் கும்மி, வள்ளியம்மை கும்மி, சிறுத்தொண்ட நாயனர் கும்மி, நபியுல்லாக் கும்மி, ஞான உபதேசப் பேரின்பக் கும்மி போன்ற நூல்கள் தோன்றியுள்ளன.

பாடும் நிலை

கும்மியடிக்கும்போது பாட்டின் முதலடியைத் தலைவி பாடுவாள். மற்றவர்கள் அவளைத் தொடர்ந்து கூடியாடிப் பாடுவர். சில சமயம் எதிர்ப்பாட்டும் பாடுவது உண்டு. மனிதனுக்கு முனைப்பு மிஞ்சி எதிர்ப் பாற்றல் எழுவது இயற்கை என்பதற்குச் சான்றாகவே இத்தகைய எதிர்ப் பாடல்கள் எழுகின்றன. அடுத்தவரை மிஞ்சித் தான் தலை நிமிர வேண்டும் என்று கருதுவது மனிதனின் இயல்பு உணர்ச்சியாகவே உள்ளது.

ஆடும் முறை

ஆடும்போது வட்டமாகச் சுற்றி நின்று கைகளைக் கொட்டிப் பாடுவர். கால்களில் சதங்கை கட்டித் தாளவொலி காட்டுவர். தாளங் களைக் கட்டத்துக்குக் கட்டம் மாற்றிச் சுவையைப் பெருக்குவர். ஆடும் போது மேலும் கீழும், இடமும் வலமும், இடையுமாகக் கையை நீட்டியும் சுருக்கியும் கும்மியடிப்பர். அவர்கள் குனிந்தும், நிமிந்தும், வளைந்தும், திரும்பியும், ஆடுவது பாப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். சில சமயம் குதிக்கவும் துள்ளவும் செய்வர்.

திருவிழாக்களில் கும்மியாட்டத்தின் முக்கியத்துவம்

மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் முதலிய பெண் தெய்வங்களின் கொடை விழாக்கள் நடைபெறும்பொழுது பத்து நாட்கள் தொடர்ந்து கும்மி பெண்களால் நடத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் பல ஊர்களில் இது நடைபெறுகிறது. பூப்பெய்திய பெண்கள் வீட்டிலும் சில நாட்கள் நடக்கும். பொங்கலுக்கு மறுநாளைக் காட்டுப் பொங்கலாகவும், காணும் பொங்கலாகவும் மக்கள் கொண்டாடு கின்றனர். அன்று கும்மியடித்து மகிழும் வழக்கம் பல ஊர்களில் உள்ளது. நெல்லை மாவட்டத்திலுள்ள மாவடியில் ஆண்டுதோறும் காட்டுப் பொங்கல் ஊர் மக்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. அன்று ஊர் மக்கள் குடும்பம், குடும்பமாகப் பக்கத்திலிருக்கும் மலைப்பகுதிகளான நம்பிக்கோவில் மலை, தண்ணீர் தொண்டு, நெல்லித் தோப்பு, பனங்கால் உருளி ஆகிய இடங்களுக்குச் செல்வர்.

அங்குப் பொங்கலும் விருந்தும் மிகச் சிறப்பாக நடக்கும். பெண்கள் ஒன்றுகூடிக் கும்மியடித்துப் பாடுவது வழக்கம். கலைநயம் கவிழக் கும்மியடித்து அனைவரையும் மகிழ்விப்பார்கள். அவர்கள் பாடும் பாடல்கள் மிகுதியும் இறை வாழ்த்தாகவே இருக்கும். சில சமயம் நகைச்சுவைப் பாடல்களைப் பாடுவதும் உண்டு. இன்பக் களிப்பாக நடைபெறும் கும்மி ஊர் மக்களை உவகையில் ஆழ்த்தும்.

முளைப்பாரியில் கும்மி

அம்மன் கோயில் திருவிழாக்களில் 'முளைப்பாரி' என்ற ஒரு சிறப்பு நிகச்சி நடத்தப்படும். மக்கள் 18 வகைத் தானியங்களை முளையிடச் செய்வர். அது பத்து நாள் பருவம் அடைந்ததும் கோயிலுக்கு எடுத்து வருவர். புனிதமாகக் கருதி விழா நடக்கும் இடத்தில் ஒரு வெளியிடத்தில் முளைப்பாரி வைக்கப்படும். முதல் 9 நாட்கள் அதைச் சுற்றிப் பெண்கள் கும்மியடித்துப் பாடுவார்கள். அவர்களுடைய பாடல் இனிமையாகவும் பொருள் சிறப்புடையதாகவும் இருக்கும்.

ஒண்ணாகிழமை யன்னிக்கு ஓரிலையாம் - முளைப்பாரி
இரண்டா கிழமை யன்னிக்கு இரண்டிலையாம் - முளைப்பாரி
மூன்றாம் கிழமை யன்னிக்கு மூன்றிலையாம் - முளைப்பாரி
நாலாகிழமை யன்னிக்கு நான்கிலையாம் - முளைப்பாரி

என்றவாறு ஒன்பது நாளைக்கும் பாடுவர்.

இறுதியாக 'பத்தாங் கிழமை 'ஈனிக்குப் பதமே யடைந்திடுமே'

என்று பாடி முடிப்பார். பாடல் மெட்டு தானானே தானானே என்ற அமைப்பில் இருக்கும். பத்தாம் நாள் விழா நடந்தேறும்போது அனைவரும் முளைப்பாரியை எடுத்து ஆற்றில் அல்லது குளத்தில் விட்டுவிடுவர்.

சண்டைக்கும்மி

சண்டைக்கும்மி என்ற ஒருவகைக் கும்மியும் உள்ளது. இது இன்பத்தைத் தருவதுடன் பெண்களுக்கு உடற்பயிற்சி முறைகளையும் விளக்கிக் காட்டும் பாடலாகும்.

அன்றாட வாழ்வில் கும்மி

அன்றாட வாழ்க்கையில் நிகழும் நீரிறைத்தல், பாத்திரம் துலக்குதல், சோறு சமைத்தல், அரிசி அரைத்தல் முதலியவற்றையும் பாடலாகவும் ஆடலாகவும் விளக்கிக் காட்டுகின்றன. கோலமிட்டுக்

களிக்கும் பெண்களும் கும்மிப் பாடலைப் பாடுவதாகக் குறிப்பு கிடைக்கிறது.

"கும்மி யடிப்போம் கும்மி யடிப்போம்
கோலத்தைச் சுற்றிக் கும்மி யடிப்போம்
அழகிய கோலத்தைப் போலவே நாமும்
ஒன்றாகச் சேர்ந்து கும்மி யடிப்போம்''

பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகளை மக்கள் ஈடுபாட்டுடன் சுவைத்து மகிழ்வதினால் மாறும் காலத்தாலும் மயக்கும் நாகரிகத் தினாலும் அவற்றை மங்கச் செய்யவோ மறைத்துவிடவோ முடிய வில்லை. கும்மியாட்டமானது இன்றளவும் நம்மிடையே காணப்படு கின்றது. கோயில் கொடை, பொங்கல் திருநாள் பொன்ற திருவிழாக் களின்போது இக்கலை நிகழ்த்தப்படுகின்றது.

இறை நம்பிக்கையின் காரணமாகத் தொன்று தொட்டுப் பாரம்பரியக் கலையாக இன்றும் நடைபெறுகின்றது.

சான்றாதாரர்கள்

1) தமிழக நாட்டுப்புறக் கலைகள் - முனைவர் ஏ.என். பெருமாள்

2) தமிழக நாட்டுப்புறக் கலைகள் - ஆறு. ராமநாதன்

3) நாட்டுப்புற இயல் ஆய்வு - டாக்டா சு. சக்திவேல்

4) நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் - தே. லூர்து

◆

இளநிலை ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626 124.

71
கோணங்கி ஆட்டம் - ஓர் ஆய்வு

சீ. பரந்தாமன்

நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான கோணங்கி ஆட்டம் வைணவச் சமயம் சார்ந்ததாகும். இக்கலை முற்றிலும் அழிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ளது என்றே கூறலாம். கடலூர் மாவட்டத்தில் கோணங்கி ஆட்டம் ஆடுபவர்கள் மிகக்குறைந்த, விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இன்று காணப்படுகின்றனர். கடலூர் மாவட்டக் கிராமங்களில் களஆய்விற்காக நேரில் சென்று திரட்டிய தகவல்களின் அடிப்படையில் அழிந்துபோகும் நிலையில் உள்ள இந்த ஆட்டக் கலையைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலையுணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகளை நாட்டுப் புறக் கலைகள் (Folk Arts) எனலாம். நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இக்கலைகள் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்க வேண்டும். பின்னர், சமய அடிப்படையில் கலைகள் வளர்ச்சி பெற்றன. புனிதத்தையும், பேராற்றலையும் அடிப் படையாகக் கொண்டு பல நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன. ஆரம்ப காலத்தில் கெட்ட ஆவியினின்று காப்பாற்ற, தெய்வங்களை

வேண்டப் பல கலைகள் தோன்றியிருக்க வேண்டும். எனவேதான், இக்கலைகளைச் சமூகச் சார்புக் கலைகள், சமயச் சார்பு கலைகள் எனப் பிரிக்கின்றனர்''[1] என்கிறார் டாக்டர் சு. சக்திவேல்.

வைணவ சமயம் சார்ந்த நாட்டுப்புறக் கலையாகக் காணப்படும் கோணங்கி ஆட்டம். வழிபாடு, நேர்த்திக்கடன், புராணங்களை எடுத்தியம்புதல் ஆகிய மூன்று கூறுகளையும் உள்ளடக்கிய கலையாகவே காணப்படுகிறது.

கோணங்கி ஆடுபவர்கள்

“வள்ளுவர் இனமக்களில் திருமாலை வழிபடுபவர்கள் ஆழ்வார்கள் என்றழைக்கப்படுகின்றனர். ஆழ்வார் என்பதற்கு விட்டுணுவின் வாகனமாகிய கருடனுக்குரிய பெயர் என்றும், ஆழ்வார் தாசரி வள்ளுவர் சாதியில் ஓர் உட்பிரிவு என்றும் எட்கர் தர்ஸ்டன் கூறுகிறார். தாசரிகள் வைணவ சமயஞ் சார்ந்த இரந்துண்ணும் சாதியராவர். பலிசர், சணப்பர், பள்ளி, வள்ளுவன், கதேதுலர், கொல்லதாசரி என்ற பிரிவுகள் உள்ளன. இவர்கள் அனைவரும் தென்கலைப் பிரிவினர் என்று எச். ஏ. ஸ்குவர்ட் கூறுகின்றார். இதில் வள்ளுவதாசரி என்பது வள்ளுவர் இனத்தின் உள்ளினப் பிரிவாகும். பிற அட்டவணை இன மக்கள் இவர்களை ஐயர் என்றழைக்கின்றனர். உயரின மக்கள் இவர்களைத் தாசரி அல்லது தாதன் என்றே அழைக்கின்றனர்.''[2]

“ஆண்டியைக் கண்டால் லிங்கன்
தாதனைக் கண்டால் ரங்கன்''

என்ற பழமொழி தாசரிகள் வைணவச் சமயம் சார்ந்தவர்கள் என்பதனை உறுதி செய்கிறது.

கோணங்கி என்பதன் பொருள்

கோணங்கி - விஷ்ணுவின் கூத்து, கோணங்கி தாசரி - கோணங் கித் தாதன் (கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழியகராதி, ப. 545), கோணங்கி - உடற்கோணியாடுவோன் (தமிழ்ச்சொல்லகராதி இரண் டாம்பாகம், ப. 962), கோணங்கி - கோமாளி, கோணங்கிக் கூத்து - ஒழுங்கற்ற நடையுடைகள், கோணங்கித் தாசரி - தாசரி சாதியிலுள்ள கோணங்கி (தமிழ் லெக்சிகன், தொகுதி இரண்டு, ப. 1181), கோணங்கி - திருமால் கூத்து (சமயச் சொல்லகராதி, ப. 120), எனப் பல்வேறு தமிழகராதிகள் கோணங்கி என்பதற்குப் பொருள் தருகின்றன.

கோணங்கி ஆடும் முறை

கடலூர் மாவட்டக் கிராங்களில் வள்ளுவதாசரிகள் கோணங்கி ஆட்டத்தைத் தொன்றுதொட்டு ஆடிவந்துள்ளனர். இந்த ஆட்டக்கலை அழிவின் கடைசியில் உள்ளது. கொங்கம்பட்டு குமாரபுரம், தோட்டப்பட்டு, அழகிய நத்தம், திருவந்திபுரம் எனச் சில கிரமங்களில் மட்டுமே இன்றைய நிலையில் ஆடி வருகின்றனர். கோணங்கி ஆட்டம் ஆடும் வள்ளுவ தாசரிகள் நாற்பத்தெட்டு நாட்கள் விரதமிருந்தே ஆடுகின்றனர். மஞ்சள் ஆடை உடுத்திக்கொண்டு (மேலே சட்டை அணிவதில்லை), பூமாலை, துளசி மாலை அணிந்து கொண்டு, நெற்றி, மார்பு, முதுகு, இருகரங்கள் ஆகியனவற்றில் பட்டை பட்டையாகத் திருநாமம் போட்டுக் கொள்கின்றனர். இரும்பினால் செய்யப்பட்ட கருட கம்பத்தில் நெய்விட்டு தீபம் ஏற்றிப் பின் பெருமாள் கோவிலில் கற்பூரம் ஏற்றி,

"ஓம் பூரணனே பதினாறு திங்கள் சேரும்
பொருந்தி அருகன் பதினெட்டுஞ் சேரும்
காரணனே கருமுகில் வண்ணஞ் சேரும்
கருணை பெரும் அட்டாட்சரம் கலந்து வாமும்"
...
"முப்புரத்தை எரித்தவனே இப்போ வாவா
மூன்றில் நின்ற ஜெகன் நாதா முன்னே வாவா
எப்பொழுதும் துதிப்பவர்கள் பங்கில் வாவா
ஏழைப் பங்கில் இருப்பவனே இறங்கி வாவா
ஒப்பில்லா மணிவிளக்கே ஒளிபோல் வாவா
ஓம் நமோ நாராயணா உகந்து வாவா
அப்பனே ரகுராமா கருடன் மீது
அன்புடனே ஏறிவந்து அருட்செய்வாயே!"

ஆகிய கருடப்பத்துப் பாடல்களைப் பாடித் திருமாலை வணங்கிய பின்னரே கோணங்கி ஆடத் தொடங்குகின்றனர்.

கோணங்கி ஆடும்போது சாட்டை வைத்துக் கொண்டும், நெய்பந்தம் சுற்றிக் கொண்டும், வாயில் துளசியை மென்று கொண்டும், தன்னை மறந்த நிலையில் மிகுந்த வேகத்துடன் கைகால், முகம் இவைகளைக் கோணிக்கோணி ஆடுகின்றனர். ஆடுபவர் மீது கோணங்கிப் பெருமாள் வந்துவிட்டதாக மக்கள் நம்புகின்றனர். தப்பு, சேமக்கலம் ஆகிய இசைக்கருவிகள் இருவரால் இசைத்துக் கொண்டே திருமால் பற்றிய பாடல்கள் பாடப்படும். மற்றும் சிலர் பின்பாட்டுப்

பாடுவார்கள். இந்த இசைக்கருவிகள் திருமாலுக்கு உரியவைகளாகக் கருதப்படுகின்றன. இவற்றினை வள்ளுவ தாசரிகளைத் தவிர்த்து வேறுயாரும் இசைப்பதில்லை. பிற இன மக்கள் தொடுவதற்கே பயப்படுகின்றனர். இசையுடன் கூடிய பாடலைப் பாடப்பாட கோணங்கி மிகுந்த வேகத்துடன் ஆடப்படுகிறது.

“அவர் எங்கே இருந்தாலும்
உன்னுடைய எத்தேசம் தன்னிலே வாழ்ந்தாலும்
இங்கே உனை மறவே!
திருப்பதி ஐயனார் தூயகம் பத்தாழ்வாரே!
வந்தாரய்யா பெருமாள் வந்தாரய்யா
கோணங்கிப் பெருமாள் வந்தாரய்யா
வந்தாரய்யா பெருமாள் வந்தாரய்யா
வடக்க இருந்து வந்தாரய்யா!
வந்த வந்த பணத்தை வாங்கியே கொள்ளுவார்
வராத பணத்தையெல்லாம் வட்டிபோட்டு வாங்குவார் – இவர்
காட்டு துளசியைப் பிடுங்குவாராம்
கருணை கருணையாய் ஆடுவாராம்
கோட்டி கழுத்திலே போடச் சொல்லி
கோதண்டம் போடச் சொல்லி கொள்ளுவாராம்
ஸ்ரீரங்க நாயகரே! கோணங்கி ராயரே!
வந்தாரய்யா பெருமாள் வந்தாரய்யா
கோணங்கிப் பெருமாள் வந்தாரய்யா”

என்ற கோணங்கிப் பாடலுடன், இராம நாடகம், கருடபத்து, திருமால் பெருமைகள் ஆகிய பாடல்களும் பாடப்படுகின்றன.

கோணங்கி ஆடுபவர் தாவுதல், குதித்தல், குட்டிக்கரணம் போடுதல் முகத்தைக் கோணலாகக் காட்டுதல் போன்ற ஆஞ்சநேயருக் கான சேட்டைகளுடன் ஆடுகின்றனர். இதனால், கோணங்கிப் பெருமாள் என்பது ஆஞ்சநேயரைக் குறிக்கும் சொல்லாகவே கருதப் படுகின்றது. தினமும் காலையில் திருநாமம் இட்டுக்கொண்டு திருமாலை வழிபடும் வள்ளுவ தாசரிகள் நெற்றியில் திருநாமம் இடும்போது கோண லாகிவிட்டால் அதனைக் களைத்துவிட்டு மீண்டும் போடுவதில்லை. அதனைக் கோணங்கிப் பெருமாள் நாமம் என்றுக்கருதி அப்படியே விட்டு விடுகின்றனர்.

கோணங்கி ஆட்டம் மூன்றே முக்கால் நாழிகை அதாவது, ஒன்றரை மணிநேரம் ஆடப்படுகிறது. மக்கள் கோணங்கி ஆடுபவரை

வணங்கி, கருட கம்பத்தில் காசுபோட்டு, நெய் ஊற்றித் தாங்கள் நினைத்த காரியம் நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றனர். கடலூர் மாவட்டக் கிராமங்களில் புரட்டாசி மாதம் மூன்றாம் சனிக்கிழமையன்று பெருமாள் கோவில்களில் மாலை ஆறு மணிக்குமேல் கோணங்கி ஆட்டம் ஆடப்படுகின்றது. சித்திரை மாதம் பௌர்ணமி அன்று திருவந்திபுரம் தேரின்போதும் ஆடப்படுகிறது. இவையல்லாமல் திருவரங்கம், திருக்கோவிலூர், திருப்பதி ஆகிய வைணவத் தலங்களில் விழாவின்போதும் வள்ளுவ தாசரிகள் ஆடுகின்றனர். இவர்கள் அதிக அளவில் திருப்பதியில் ஆடிவருவதால்,

"தாதர் ஆட்டம் திருப்பதியில்"

என்னும் பழமொழி காணப்படுகிறது.

கடலூர் மாவட்டக் கிராமங்களில் கோணங்கி ஆடும் வள்ளுவ தாசரிக்கும், தப்பு சேமக்கலம் இசைத்துக் கொண்டு பாடல்கள் பாடும் தாசரிக்கும் பெருமாள் கோவில் நிர்வாகத்தினரால் பெரிய தாம்பாளத் தட்டில் பழங்கள், வெற்றிலைப் பாக்கு, பணம், புத்தாடை வைத்து வழங்கப்படுகின்றது. இதனை இவர்கள் காணிக்கையாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

தொகுப்புரை

கோணங்கி ஆட்டம் வைணவ சமயஞ் சார்ந்த நாட்டுப்புறக் கலையாகும். இது வள்ளுவ தாசரிகளால் மட்டுமே ஆடப்படுகிறது. திருமாலுக்குரிய இசைக்கருவிகளான தப்பு, சேமக்கலம் ஆகியன வற்றையும் இவர்கள் மட்டுமே இசைக்கின்றனர். சோதிடம், புரோகிதம், நாட்டு மருத்துவம் வள்ளுவ தாசரிகளின் குலத்தொழில் களாக உள்ளன. கோணங்கிப் பெருமாளை ஆஞ்சநேயரின் அம்சமாகவே கருதுகின்றனர். கருட கம்பத்தில் காசு போடுதல், நெய் ஊற்றுதல் போன்றவற்றால் நினைத்த காரியம் நடக்கும் என்ற நாட்டுப்புற நம்பிக்கை நிலவுகின்றது. கருட கம்பத்தின் மீது செய்யும் சத்தியத்தை மிகமிக உயர்ந்ததாக வள்ளுவ தாசரிகள் கருதுகின்றனர். கோணங்கி ஆடுவதைத் திருமாலுக்குச் செய்யும் சேவையாக எண்ணுகின்றனர்.

சான்றெண் விளக்கம்

1. *டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஓர் ஆய்வு, பக். 166, 167.*
2. *சி. மைக்கேல் சரோஜினிபாய், தொகுப்பாசிரியர், வளர்தமிழ் ஆய்வு, தொகுதி 2, ப. 641.*

தகவலாளிகள்

1. சி. அப்பாவு, ஆண், வயது 78, வள்ளுவதாசரி, அழகியநத்தம், கடலூர் மாவட்டம்.
2. வி. நித்தியக்கல்யாணி இராமானுஜதாசர், ஆண், வயது 52, வள்ளுவதாசரி, மடுகரை, புதுச்சேரி.
3. ச. இராமச்சந்திரன், ஆண், வயது 60, வள்ளுவ தாசரி, களையூர், கடலூர் மாவட்டம்.
4. சி. அம்பிகா, வயது 55, பெண், வள்ளுவதாசரி, சேமக்கோட்டை, கடலூர் மாவட்டம்.
5. இரா. கெஜேந்திரன் சோதிடர், ஆண், 47, வள்ளுவதாசரி, திருமங்கலம் விழுப்புரம் மாவட்டம்.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார்,
தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 605 014.

72
மயானக்கொள்ளை

மு. பழனிச்சாமி

முன்னுரை

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன், அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப் படையில் இயற்கை வழிபாடுகளும், விழாக்களும், தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வசப்படுத்தி விடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும், கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் இயற்கைக்கு, உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினான்.

பழங்கால மனிதன், இடி, மழை, மின்னலைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென எண்ணினான். அவ்வாவிகளை வழிபட ஆரம்பித்தான்.

உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு இயற்கையிடமும் மரணத்திற்குப்பின் வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே, வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார்.

ஆவியுலக வழிபாடு

ஆவியுலக வழிபாட்டைப் பற்றி டைலர், கூறும்போது, சமயத்தின் தொடக்கம், ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து

தோன்றியது என்கிறார். ஆதிமனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபட ஆரம்பித்தான். ஆவிகள் அவனது செயலைக் கட்டுப்படுத்துவதாக நம்பினான்.

தமிழ்நாட்டில் கதைப்பாடல்களிலும், கதைத் தலைவர்கள் உயிர்பெற்று தெய்வமாவதைக் காண்கிறோம். கொடூரமாகச் சமூக அநீதியால் கொல்லப்பட்ட தலைவர்களது, ஆவியின் சினத்தைத் தணிக்கப் பூசையிட்டு வழிபடுவது குறிப்பிடத்தக்கது.

மயானம்

மனிதனின் இறப்பிற்குப்பின் அவனது, உடலைத் தகனம் செய்யும் இடம், ஊரின் வடக்குப் பகுதியில் பெரும்பாலும் அமைந்திருக்கும். சாதிய முறைகளைப் பொறுத்து சிலர் உடலைப் புதைப்பார்கள். சிலர் தீயிட்டு எரித்து விடுவர்.

மயானத்தின் தெய்வம்

பைரவர், இவரை மயானத்தின் காவல் தெய்வம் என்று சொல்லு கின்றனர். இவர் சிவனைவிடப் பலம் பொருந்தியவர் என்கின்றனர்.

மயானக் காவல்

இரவு 10 மணிக்குமேல் இறந்த பிணங்களை மயானத்தில் அடக்கம் செய்ய மாட்டார்கள். 10 மணிக்கு மேல் மயானம் பைரவனின் காவலுக்கு வந்து விடுகிறது. இரவு 10 மணிக்குமேல் பிணத்தைப் புதைத்தால், அதற்கு மோட்சம் கிடைக்காது எனவும், இறந்தவர்களின் குடும்பங்களில் பல சிக்கல்களும், துயரங்களும் உருவாகும் எனவும் கிராமப்புற மக்கள் நம்புகின்றனர்.

மயான பூசைகள்

இரவு 10 மணிக்குமேல் மயானத்தில், போயன் சமுதாய மக்கள் அங்காளம்மன் என்னும் பெண் தெய்வத்தை மண்ணைக் கொண்டு உருவம் செய்கிறார்கள். இதற்கு உருவாரம் என்று பெயர். பூக்களைக் கொண்டு அலங்காரம் செய்து நள்ளிரவு 12 மணிக்குக் கறுப்புக்கோழி அல்லது கர்ப்பமான ஆட்டைப் பலியாகக் கொடுக்கின்றனர். பின்னர், ஆட்டுக்கறியைச் சமைத்து அங்கேயே சாப்பிட்டுவிட்டு மீதமுள்ள வற்றைக் குழியைத் தோண்டிப் புதைத்து விடுவார்கள். இந்தப் பூசையில் ஆண்களைத் தவிரப் பெண்கள் கலந்து கொள்வதில்லை.

கருப்பு தெய்வம் கும்பிடுதல்

கவுண்டர் சமுதாய மக்களில் ஒரு பிரிவினர் கருப்பு தெய்வம் கும்பிடுதல் என்ற நிகழ்ச்சியைச் செய்கின்றனர். இளம் கணவன் மனைவி, இருவரும், பிறக்கும் முதல் குழந்தை (தலைச்சான்பிள்ளை) இறக்காமல் பிறக்க வேண்டும் என்பதற்காக இரவு 12 மணிக்கு மயானத்திற்குச் சென்று, சூல் நிறைந்த கருப்பு ஆட்டை (வெள்ளாடு) அறுத்து அதன் வயிற்றில் உள்ள குட்டியை (சூலை) எடுத்து மனைவி கையில் கணவன் கொடுத்து 'உன் கருவைக் கொடுத்து என் கருவை வாங்கு' என்று கணவன் கூறுவான். பின்னர், மயானத்தில் பச்சைப் பந்தல் போட்டு, அங்கே பூசைகள் செய்து, ஆட்டை அறுத்துச் சாப்பிட்டு மீதமுள்ளதை குழிதோண்டிப் புதைத்து விடுவார்கள். இதற்குக் கருப்பு தெய்வம் கும்பிடுதல் என்று பெயர்.

சாந்து வாங்குதல் (ஊர்சுற்றிச் சோறு எறிதல்)

கிராமங்களில் காத்து, கருப்பு வராமல் இருக்கவும், கொடிய நோய்கள் வராமல் இருக்கவும், ஊர் சுற்றிச் சோறு எறிவர். நள்ளிரவு 12 மணிக்கு ஆட்டை அறுத்து இரத்தத்தைப் பிடித்து ஒரு பெரிய பானையில் (மொடா) சோற்றைப் போட்டு அதில் இரத்தத்தைக் கலக்கி ஊர்ப்பண்டாரம், பூசைசெய்த பின்பு பண்டாரத்தைச் சங்கிலியால் பிடித்துக் கொண்டு, ஊரின் நான்கு மூலைகளிலும் சென்று சோற்றை மேலே வீசுவார்கள். ஆண்கள், தடி, அருவாள் போன்ற ஆயுதங்களுடன் சத்தமிட்டுக் கொண்டு பின்னால் செல்வார்கள். இதற்குச் சாந்து வாங்குதல் என்று பெயர்.

மயானக் கொள்ளை (மயானம் பார்த்தல் அல்லது காடு சுற்றிப் பார்த்தல்)

கோயில் பூசாரிகள் கச்சா, குள்ளா அணிந்து கொண்டு கழுத்தில் மாலை, வலது கையில் வீச்சருவா, இடது கை இடையில் காளப் பந்தம், சோற்றுப் பொட்டலம், காலில் கழல், கழுத்தில் மாலை போன்ற வற்றுடன் சுடலைமாடன் கோயிலில் இருந்து சுடுகாடு செல்லும் வழியில் சிறிது தூரம் சென்று வருவர். அப்போது கூட்டம் வழிவிட்டு ஒதுங்கி நிற்கும். இது மயானக் கொள்ளை ஆகும்.

வேட்டைக்குச் செல்லும்முன் கோயிலில் இருக்கும் தெய்வங் களுக்கு முன்பு, இசையுடன் கூடிய ஆட்டம் ஆடுவார்கள். தாய்த் தெய்வம் வேடம் அணிந்து ஆடும் நபர் வேட்டைக்குச் செல்லும் நபரின் நெற்றியில் விபூதி பூசிய பின்பே, வேட்டைக்குச் செல்லுவார்.

இத்தகைய நிகழ்ச்சி தாய், மகன், உறவினர் என்ற முறையில் வழி அனுப்பி வைக்கும் முறையில் இங்கு நிகழ்த்தப்படுகிறது.

வேட்டைக்குச் சுடலை மாடசாமி புறப்பட்டுச் செல்லும்போது கூட்டத்தின் முடிவில் தன்னுடைய கையில் இருக்கும் அருவாளில் ஒரு கோடு கிழித்துவிட்டுச் செல்லும். அந்தக் கோட்டைத் தாண்டி மக்கள் செல்லக் கூடாது. வேட்டைக்குப் போகும்பொழுது எதிரில் வரக்கூடாது என்றும், அப்படி வந்தால் எட்டாம் பொங்கல் வரும் முன் உயிர் போய்விடும் என்றும் நம்புகின்றனர்.

மயானம் செல்லும்போது முட்டை கொண்டுசென்று காவு கொடுப்பார் பூசாரி. வேட்டைக்குச் செல்லும் வழியில் தீய ஆவிகள் தங்களை நெருங்காமலிருக்கக் காவு கொடுப்பதாகச் சொல்கின்றனர்.

நரபலி

மனித உடலுறுப்புகளான நாக்கு, கைகள், போன்றவற்றைப் பலியிடும் வழக்கம் காணப்படுகிறது. சில சுடலை மாடசாமி கோயில்களில் கைவெட்டுச் சடங்கு நரபலிக்கு நிகரானதாக மக்கள் கருதுகின்றனர்.

அருள் வாக்கிடல் (அ) குறிசொல்லுதல்

பூசாரிகள் உதிரம் குடித்தவுடன் கச்சா, இடுப்புச் சலங்கை அணிந்து கையில் தீபந்தம் வைத்துக் கொண்டு அருள்வாக்கு கூறுகிறார்கள்.

ஊர்ப் பொதுமக்கள் தரும் உயிர்ப்பலி

சுடலை மாடசாமி விழாவின்போது, கருங்கிடாய், கரும்பன்றி போன்ற பலிகளையும் சமைத்துப் படைத்தல் உண்டு. ஊர்ப் பொதுவில் கொடுக்கப்படும் கிடாய், பன்றிதான் முதலில் சுடலை மாடனுக்குப் பலியிடப்படும்.

முடிவுரை

அச்சம், போராட்டம், நன்றியுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றது. இறந்தவர்களின் ஆவிகள், பேய், பிசாசு போன்றவற்றை நாட்டுப்புற மக்கள் சிறு தெய்வங்களாக வழிபடுகின்றனர். தங்கள் வாழ்க்கைக்குத் தீங்கு நேராமல் இருக்க நாட்டுப்புற மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பல வழிபாடுகள் செய்கின்றனர்.

பயன்பட்ட நூல்கள்

1. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.எண். 223.
2. மேலது, ப.எண். 224.

தகவலாளிகள் பட்டியல்

1. கேசவன், முத்துநாயக்கன்பட்டி, கவுண்டர், வயது 65.
2. தாமோதரன், மிடாப்பாடி, கவுண்டர், வயது 60.
3. பழனிச்சாமி, வயலூர், கவுண்டர், வயது 70.
4. சுப்பிரமணி, வயலூர், கவுண்டர், வயது 62.
5. வீரன், மிடாப்பாடி, போயன், வயது 78.
6. ரங்கன், மிடாப்பாடி, போயன், வயது 75.

◆

ஆசிரிய உதவியாளர்,
அருள்மிகு பழனியாண்டவர் கலை
மற்றும் பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

73
நாட்டுப்புறக்கலைகளுள் வில்லுப்பாட்டு

முனைவர் துரை.பன்னீர்ச்செல்வம்

உலக இலக்கியங்களுள் உயர்ந்த இலக்கியமாகத் திகழ்வது நம் தமிழ் இலக்கியமே. இவ்விலக்கிய வடிவம் காலப்போக்கில் பல மாற்றங்கள் பெற்று வளர்ச்சி நிலையை எட்டினாலும், தொடக்கத்தில் வாய்மொழி இலக்கியமாகவே திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளத்து உணர்வுகளை இயல்பாக உள்ளபடியே வெளிப்படுத்திக்காட்ட முடியும் என்பதையும் இவ்விலக்கியம் புலப்படுத்திக் காட்டியுள்ளது.

நாகரிக வளர்ச்சி அடைவதற்குமுன் கிராமத்து உழைக்கும் மக்கள் தங்கள் உழைப்பின் களைப்பைப் போக்கிக் கொள்ளவும், உழைப்பு தொடர்ந்து நடக்கவும் மேற்கொள்ளும் முயற்சியின் வெளிப்பாடாகவே இவ்வாய்மொழி இலக்கியம் அமைந்துள்ளது. இவ்வாய்மொழி இலக்கியத்தையே பின்னாளில் நாட்டுப்புறவியல் என்றும், நாட்டுப்புற இலக்கியம் என்றும் அழைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறவியல்

இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்வில், பாமரமக்களின் அதாவது, உழைக்கும் மக்களின் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் காட்டுவதாக நாட்டுப்புறவியல் அமைந்துள்ளது. 'நாட்டுப் புறவியல்' என்ற சொல்லுக்கு 'Folklore' என்னும் ஆங்கிலச் சொல் வழங்கப்படு

கிறது. இச்சொல் 1846இல் வில்லியம் ஜான்தாமஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. இச்சொல் பற்றிக் குறிப்பிடுகையில்,

பேராசிரியர் நா.வானமாமலை, பேராசிரியர் லூர்து ஆகியோர் நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். முனைவர் ப.கிருஷ்ணசாமி 'ஊரகவியல்' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். எனினும், பெரும்பான்மை 'நாட்டுப்புறவியல்' என்ற சொல்லே இன்று பொருத்தமான சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.[1]

என்று மருதநாயகம் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அறிஞர் பெருமக்கள் ஒவ்வொருவரும் ஒரு மாதிரியான கருத்துகளை எடுத்துரைத்தாலும் 'நாட்டுப்புறவியல்' என்ற சொல்லே வெகுசன வெளிப்பாடாக அமைந்துள்ளதையும் காணமுடிகிறது. நாட்டுப்புற வியல் குறித்த கருத்துகளை விளக்குமிடத்து

> எழுதப்பெற்ற இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புறவிலக்கியம் சமுதாயத்தை காட்டும் கண்ணாடி எனலாம். நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமன்றி அவர்களது உணர்வுகளையும் பிரதிபலித்து நிற்கிறது[2]

என்று சங்கர் சென்குப்தா கூறுகிறார்.

> வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியமே நாட்டுப்புறவியல்[3]

என்று பிரான்சில் லீ உட்லி என்பவர் விளக்கமளிக்கிறார். நாட்டுப்புறவியலை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்திக் கூறும்போது,

நாட்டுப்புற இலக்கியம்
நாட்டுப்புறக் கலைகள்
நாட்டுப்புறப் பண்பாடு[4]

எனலாம். ஏட்டிலக்கியமாக உருப்பெறாத நிலையில் வாய்மொழியாகவே பழங்கதைகளும், கதைபற்றிய நிகழ்வுகளும், கலைகளும் பயன்பாட்டில் இருந்து வந்ததையும் காணமுடிகிறது. இத்தகைய நாட்டுப்புறக்கலைகளுள் பல்வேறு ஆட்டங்களும் பாடல்களும் அடங்கியுள்ளன. அவ்வாட்டங்களாவன:-

சிலம்பாட்டம்
காவடியாட்டம்
கரகாட்டம்
கோலாட்டம்
கும்மியாட்டம்
பொய்க்கால் குதிரையாட்டம்

மயிலாட்டம்
ஓயிலாட்டம்
தேவராட்டம்
சக்கையாட்டம்
தப்பாட்டம்
கணியான் ஆட்டம்
கரடி ஆட்டம்
புலியாட்டம்
பேய் ஆட்டம்
வில்லுப்பாட்டு

போன்ற இன்னபிற கலைகளும் இருக்கின்றன. இவ்வாட்டங்கள் இன்றும் தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதும் உண்மையே. கிராமத்துக் கோயில் விழாக்களிலும், பண்டிகைக் காலங்களிலும் இத்தகைய ஆட்டங்கள் நிகழ்த்தப்பட்டு வரவேற்கப் படுகின்றது. ஆட்டங்கள் பலவாயினும் அவற்றுள் வில்லுப்பாட்டு தனித்தன்மையுடன் விளங்கி வருவதைக் காணமுடிகிறது. வில்லுப் பாட்டின் சிறப்புகளைப் பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

வில்லுப்பாட்டு

தமிழகத்து நாட்டுப்புறக் கலைகளுள் மிகவும் சிறப்பு வாய்ந்த தாகவும் பார்ப்பவரையும் கேட்பவரையும் அதிக மகிழ்ச்சியில் இருக்கச் செய்வதும், எழுச்சிமிக்க ஆட்டத்தை மனத்துள்ளே ஏற்படுத்தச் செய்வதும் வில்லுப்பாட்டு. இவ்வில்லுப்பாட்டு தொடக்கத்தில் இறைவனை நினைத்து வணங்கிப் பாடத்தொடங்கி, கற்றுக்கொடுத்த ஆசானுக்கும் வணக்கம் செய்து பிறகு நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருக்கும் கூட்டத்தினரையும் சிறப்பு விருந்தினரையும் வணக்கம் சொல்லிப் பாடுவதாக அமைந்திருக்கும்.

நாட்டுப்புறக்கலையிலே மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது வில்லுப்பாட்டாகும். வில்பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் கூறுவர். வில்லுப்பாட்டின் தாயகமே குமரி, நெல்லை மாவட்டங்கள் எனக் கூறலாம். 'வில்லடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை' என்ற பழமொழி வழங்குகிறது. வில்லுப்பாட்டு இன்றிக் கொடையே கிடையாது.[5]

என்று சு.சக்திவேல் தமது நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் நூலில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். வில்லுப்பாட்டு தமிழகத்தின்

தென்பகுதியில் தோன்றியதையும் சுட்டிக்காட்டி, வில்லுப்பாட்டுக் கேயுரிய பழமொழி ஒன்றையும் நினைவுபடுத்தப் பட்டுள்ளதையும் மேற்கண்ட கருத்து எடுத்துரைக்கின்றது.

வில்லுப்பாட்டின் தோற்றம் குறித்து, அக்கலையை தமிழக மெங்கும் நடத்தி வரும் வில்லுப்பாட்டு வேந்தர் என்று அழைக்கக்கூடிய சுப்பு ஆறுமுகம் அவர்கள் இவ்வில்லுப்பாட்டு எவ்வாறு தோன்றியது என்பதை,

தென்பாண்டி நாட்டுப்பகுதியில் அன்றுள்ள வேடர்கள் வேட்டையாடிவிட்டு வந்து மரத்தடி நிழலில் அமர்ந்தபோது தோளிலிருந்து வில்லை மடியில் சாய்த்து, அம்பை அந்த நாணில் தட்டி தட்டிப் பாட்டைத் துவக்கியிருக்கிறார்கள். பாவத்தின் கரையில் புண்ணியம்; ஆடலின் முடிவில் பாடல்; விளையாட்டின் ஓய்வில் வில்லுப்பாட்டு[6]

என்று கூறுகிறார். தொடக்கத்தில் வேட்டையாடிய வீரர்கள். தங்கள் களைப்பைப் போக்கிக்கொள்ள ஒய்வெடுக்கும் வேளையில் தங்களது வேட்டைக்குப் பயன்படும் கருவியாகிய வில்லையே இசைக் கருவியாகப் பாடியுள்ளனர். பின்னாளில் அவ்வில்லில் சலங்கைகள், மணிகள் கோர்க்கப்பட்டு கயிற்றில் குச்சியால் அடிக்கின்றபோது அழகான ஓசை தோன்றியதாலும், அதற்கேற்பப் பாடவும் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சோமலெ என்ற அறிஞர் பதினான்காம் நூற்றாண்டில் அரசப்புலவர் என்னும் ஒருவரால் வில்லுப்பாட்டு தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுகிறார். தெய்வச்சிலையாரின் விறலி விடு தூது என்னும் நூலில் வில்லுப்பாட்டு பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

வில்லுப்பாட்டின் உறுப்புகள்

காண்பவரைக் கவரும் வண்ணம் நல்லதொரு இசையுடன் வில்லிலிருந்து வீறிட்டு எழும் இசைக்கும், அதற்கு ஏற்ற பாடலுக்கும் பக்கபலமாகச் சில உறுப்புகள் இருக்கின்றன. இவ்வுறுப்புகளே வில்லுப் பாட்டை மேலும் சிறக்கச் செய்கின்றன. இவ்விசை உறுப்புகள் பற்றி சு.சக்திவேல் தமது நூலுள்,

வில்லுப்பாட்டின் உறுப்புகளாக அமைந்த இசைக் கருவிகள் வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவையாகும். பம்பை, உறுமி, தக்கை, தந்துபி என்ற நான்கு கருவிகளும் சேர்ந்து எட்டு வகையான பக்கக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன[7]

என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார். வில்லுப்பாட்டு சிறக்க வேண்டுமென்றால் அதற்குப் பக்கபலமாக இருக்கும் இசைக்கருவிகளின் தேவை இன்றியமையாததாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லுப்பாட்டு நிகழ்வு

வில்லுப்பாட்டு எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது, நிகழ்த்தப்படுகின்ற இடம், சூழல், நிகழ்த்துகின்ற கலைஞர்கள் எத்தகையோர் என்பதைப் பற்றியும், இக்கலையை வெளிப்படுத்தத் தேவையான இசைக்கருவிகள், வில்லை எவ்வாறு நிறுத்திவைத்து இசையை எழுப்புவது என்பது பற்றி குறிப்பிடுகையில்,

புலவர் நடுநாயகமாக வீற்றிருப்பார். இடது புறம் குடத்துக் காரர். இவர்களின் முன்பு குடத்தினில் உள்ள வில் இருக்கும். வீசுகோலைக் கொண்டு வில்நாணைத் தட்ட வசதியாக இருக்கும். புலவருக்குப் பின்னால் வரிசையாகப் பின்பாட்டுக்காரர், சட்டை, தாளம் ஆகியவற்றை இயக்குவோர் அமர்ந்திருப்பார். உடுக்குக்காரர் குடத்துக்காரரின் வலக்கையையடுத்து அமர்ந்திருப்பார். பின்பாட்டுக்கு ஒருவர் தனியாக அமர்த்தப்படுவதும் உண்டு.[8]

என்று சு.சக்திவேல் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். தொடக்கக் காலத்தில் வில்லுப்பாட்டுப் பாடும்போது புலவர் நடுநாயகமாக அமர்ந்து பாடியதையும். அவருக்கு பின்பாகவும், பக்கவாட்டாகவும் இசைக்கருவிகளும், பின்பாட்டுக்காரர்களும் இருந்ததையும், இதுவே நடைமுறையாக இன்றும் இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

காலப்போக்கில் வில்லுப்பாட்டுக்கு என்ற கருவிகள் மட்டு மில்லாது வேறு பல இசைக்கருவிகளையும் பின்னாளில் வந்தவர்கள் பயன்படுத்தலானார்கள். பிற்காலச் சூழலுக்கு ஏற்ப புதிய உத்திகளைக் கையாண்டு நவீனச் சூழலுக்கான இசையை, குறிப்பாக ஆர்மோனியம், டோலக் போன்ற இசைக்கருவிகளையும் பயன்படுத்தலானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் கோயில் விழாக்களில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த இக்கலையானது, காலப்போக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்பட்டுவந்தது என்பதை,

கோயில் விழாக்களில் முழங்கிவந்த கலை, இன்று அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இக்கலையை நாடறியச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனையே சாரும்[9]

என்று சக்திவேல் கூறுகிறார். வில்லுப்பாட்டுத் தோன்றிய காலத்தில் ஒரு வட்டத்துக்குள் இருந்து வந்த நிலைமாறி, இன்று

அரசியல் கூட்டங்கள். ஆன்மீகக் கூட்டங்கள், தலைவர்கள் பிறந்த நாள் கூட்டங்கள், கல்லூரி, பள்ளி விழாக்கள், கலைவிழாக்கள், தேர்தல் விளம்பரங்கள் என இப்படி பல்வேறு நிலைகளில் இவ்வில்லுப்பாட்டு இன்றும் நிகழ்ந்து வருகின்றது என்பதையே மேற்கண்ட கருத்து விளக்கிக் கூறுகிறது.

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு இன்றும் நடைமுறையில் பல்வேறு விழாக்களிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு கலைஞர்கள் இவ்வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நாடெங்கும் சென்று நிகழ்த்தி வந்தாலும், கவிஞர் சுப்பு ஆறுமுகம் இக்கலையின் வாயிலாக பெரும் புகழ் ஈட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரி கலைவிழாக் களிலும் மாணவர்கள் இவ்வில்லுப்பாட்டுக் கலையை நிகழ்த்தி வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. காலத்தால் பழமையான கலையாகவும், மக்கள் மனத்திலே தனித்ததோர் இடமும் பிடித்துள்ள இவ்வில்லுப்பாட்டுக் கலையைப் பாதுகாப்பது தமிழர்களாகிய நம் தலையாயக் கடமை.

பயன்பட்ட நூல்கள்

1. மருதநாயகம், நாட்டுப்புறவியல் வரலாறும் வளர்ச்சியும், ப.2.
2. மேலது, ப.2.
3. மேலது, ப.3.
4. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.181.
5. மேலது., ப.181.
6. மேலது., ப.181.
7. மேலது., ப.181.
8. மேலது., ப.181.
9. மேலது., ப.182.

◆

இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தமிழவேள் உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

74
நல்லிசையில் விளைந்த வில்லிசைப் பாடல்

ஆ. பாடாலிங்கம்

முகவுரை

முத்தமிழ்க் கலைகளில் மூத்த கலை முத்தமிழும் இணையும் கூட்டுக்கலை, பாட்டுக்கலை, நாட்டுக்கலை வடிவமானதுதான் வில்லலுப்பாட்டு. நாட்டுப்புறக் கலை வடிவங்கள் பல இன்றைய கால கட்டத்தில் அழிந்து வரும் நிலையில்கூட மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிக் கலந்து, இன்று வரையில் நின்று நிலவும் தமிழக் கலைகளுள் ஒன்றுதான் வில்லுப்பாட்டு.

வில் பிறந்த கதை

தென்பாண்டி நாட்டில் ஒரு குறுநில மன்னன் தனது போர் படைகளுடன் விலங்கினங்களை வேட்டையாட வனப் பகுதிக்குச் சென்றான். பல்வேறுபட்ட விலங்கினங்களைத் தம் ஆசைதீரக் கொன்று குவித்தான். அதன் பின்பு மாலை வேளையில் அவ்வனப் பகுதியில் இளைப்பாறினான். அச்சமயம் குற்றுயிரான விலங்குகளின் அவல ஒலிகேட்டு மன்னன் மனம் மாறினான். தாம் செய்த தவறை எண்ணி வருந்தியதோடு மட்டுமின்றி அவற்றுக்குப் பரிகாரமும் தேடினான்.

இதன் விளைவாகக் கொலைக் கருவியான வில், கலைக்கருவியானது. தோளில் கிடந்த வில்லை மடியில் கிடத்திக் காட்டுத்தேன் கொண்டு போவதற்காக வைத்து இருந்த மண்குடத்தை வில்லோடு இணைத்துக்கட்டி அம்பினால் நாணில் தட்டித்தட்டி தமிழ் மறைகளையெல்லாம் பாடினான். மேலும், அவனுடன் வந்திருந்த போர் வீரர்களும் ஆமா! ஆமா! என ஆமோதித்தனர் இதன் பொருட்டு வில்லிசைக் கலை உருவாயிற்று.

வில்லின் எல்கை

தமிழகத்தின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியில் காணப்படும் நாட்டார் தெய்வக் கோவில்களில் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. இவை தவிர தமிழகத்தின் பிற பகுதிகளில் கோவில் சாராத மேடைகளிலும், பொது நிகழ்வுகளிலும் நிகழ்த்தப்படுவதுண்டு. மேலும், கேரளாவில் திருவனந்தபுரம், களக்கூட்டம், நெடுமாங்காடு, கொல்லம் ஆகிய இடங்களில் உள்ள நாட்டார் தெய்வீகக் கோவில்களிலும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

வில்லிசைக் கருவிகள்

வில்லுப்பாட்டில் நரம்புக் கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படினும். போர்வீரரின் முதற்கருவியாகிய வில்லே இக்கலையில் பயன்படும் முதன்மையான இசைக் கருவியாகும். இதனோடு இனிமை சேர்க்கும் வகையில் உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகளும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழ் மக்களிடையே வில்லிசையில் வில்லோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகும்.

வில்

வில்லின் வடிவமுள்ள ஒருவகை யாழைக் கொண்டு பாணன் ஒருவன் இசை எழுப்பிப் பாடினான் என்று பெரும் பாணாற்றுப்படை எனும் பத்துப்பாட்டு நூலில் கூறப்பட்டுள்ளது.

"குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மாற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி''

(பெரும் பாண்:180-82)

அதாவது, குமிழ மரத்தின் கொம்பினை வளைத்து மரல் (கற்றாழை வகை) நாரினால் ஆன நாண் கொண்டு இழுத்துக்கட்டி

விரலால் நெறித்துக் குறிஞ்சிப்பண் பாடினான் என்பது இப்பாடல் உணர்த்தும் செய்தியாகும்.

வில்லினை உருவாக்க விற்கதிர் முனைக்குப்பிகள், வடம், மணிகள் மணிகளைக் கோர்த்திடத் தேவையான வளையங்கள், கம்பிகள் முதலியன தேவைப்படுகின்றன. விற்கதிரின் நீளம் ஆறு முழம். இது கூந்தற்பனையின் வைரம் பாய்ந்த அடிமரத்துண்டிலிருந்து செதுக்கி எடுக்கப்படுகிறது. இதைக் கயிற்றால் வரிந்து சுற்றியிருப்பர். இந்த வரி வில்லின்மேல் துணிகள் ஒட்டப்பட்டு அவற்றின் மேல் தங்கத்தாள் பூந்தாள் ஆகியவையும் ஒட்டப்பட்டு வளையங்கள் உரிய இடை வெளிவிட்டுக்கதிரில் பொருத்தப்பட்டிருக்கும். கதிர் மூங்கில், பிரம்பு அல்லது உலோகத்தண்டினாலும் அமைவதுண்டு. கதிரின் இருமுனை களிலும் வெண்கலம் அல்லது பித்தளையாலான குப்பிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

மாட்டுத்தோல் முறுக்கலான வடம் நாணாகப் பயன்படுத்தப் படுகிறது. இவை விற்கதிரின் இருமுனைகளோடும் இழுத்துக் கட்டப்படும் வளையங்களினூடே கதிரின் இருபக்கங்களிலும் கம்பிகளைச் செருகி அதில் மணிகளைத் தொங்க விடுவர். மணிகள் உருண்டை வடிவில் வெண்கல வார்ப்பால் ஆனவையாகும். ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று என்ற முறையில் மணிகள் ஒற்றைப் படையிலேயே தொங்க விடப்பட்டிருக்கும். கதிரின் நடுப்பகுதியில் ஒரு மண்குடம் சேர்த்துக் கட்டப்படும்.

கதைபாடும் புலவர் கைக்கு ஒன்றாய் இரு கோல்களை வைத்திருப்பார். இவை 'வீசு கோல்கள்' எனப்படும். இந்த வீசு கோல்களைக் கொண்டு வில், நாண் மீது புலவர் தாளத்துக்கேற்றவாறு தட்டும் போது கோலின் கிண்கிணி ஒலியும் வில் மணிகளின் ஒலியும் சேர்ந்து இனிய வில் ஒலி உண்டாகும்.

உடுக்கு

வில்லுப்பாட்டில் தெய்வக் கதைகளும் வீர உணர்ச்சிக் கதைகளும் இடம் பெறுவதால் உணர்ச்சிகளை ஆவேசத்துடனும் வெறியுடனும் வெளிப் படுத்திக்காட்ட உடுக்கிலிருந்து உண்டாகும் ஒலியே பெரிதும் பயன்படுகிறது.

குடம்

வில்லிசைக் கருவிகளில் வில்லுக்கடுத்தபடியாக குடம் முக்கியமானதோர் கருவியாகும்.

கழுத்துப் பகுதி மிக உறுதியாகவும் வாய்விளிம்பு வளைவின்றியும் காணப்படும். இதற்கு வில்லுக்குடம் என்று பெயர். வைக்கோல் புரிமனை மீது குடம் வைக்கப்படும். இதற்குப் பந்தாடை என்று பெயர். பனை மட்டையின் அடிப்பாகத்தில் செதுக்கி அமைக்கப்படும் பத்தியைக் குடம் அடிக்கப் பயன்படுத்துவர். டேபிள் டென்னிஸ் மட்டை போன்று அமைந்திருக்கும். தோற்பத்தி குடத்தின் வாய்ப் புறத்தைவிடச் சிறிது அகன்ற வட்ட வடிவுடனும் கைப்பிடியுடனும் அமையப் பெற்றிருக்கும்.

பத்தியை வலக்கையில் பிடித்துக்கொண்டு குடத்தின் வாய்ப்புறத்தைத் தாளத்துக்கேற்பத் தட்டுவர். அதே சமயத்தில் சிறு மரத்துண்டாலான சொட்டிக் கட்டையை இடக்கை விரல் இடுக்கில் வைத்துக்கொண்டு குடத்தின் கழுத்துக்குக் கீழ் உள்ள பகுதியில் தட்டுவார்கள்.

தாளம்

இரும்பு அல்லது பித்தளையாலான 'சல்' என்ற ஓசையையுடைய இணைக் கருவி 'தாளம்' ஆகும். இதனைச் 'சாலா' என்றும் அழைப்பர். வட்ட வடிவின் நடுவில் குழிவுற்று இருக்கும். குழிவின் நடுவேயுள்ள துளை வழியே சிறு துண்டு நூல் கயிற்றை அமைத்துக்கொண்டு கையில் பிடித்துக்கொண்டு குழிவு பெற்ற வாய்ப்புறங்களை ஒன்றோடொன்று பொருந்துமாறு தட்டுவர்.

கட்டை

கருங்காலி மரத்துண்டுகளில் உறுதியானவற்றை இணையாய் நீண்ட சதுர வடிவில் கையடக்கமாய் அமைத்துக் கொண்டு தாளமிடப் பயன்படுத்துவார்கள். கட்டை, கட்டைத்தாளம், தாளக்கட்டை எனப் பல பெயர்கள் இவற்றிற்கு வழங்கப் பெறுகின்றன.

இந்தக் கருவிகளுடன் பம்பை, உறுமி, தக்கை, துந்துபி ஆகிய தோற்கருவிகளும் கால மாற்றத்திற்கேற்ப தற்காலங்களில் ஆர்மோனியம் டோலக், பம்பை, கிளாரினெட், மொராக்கோஸ், புல்புல் தராங், மோரிசிங், டேப் போன்ற இசைக் கருவிகளையும் தம் விருப்பம் போல் இணைத்துக் கொள்கின்றனர்.

குடம் 'தன்தன்' எனவும் வீசுகோல் 'தனத்தனத்' எனவும் உடுக்கை 'ஓம்ஓம்' எனவும் ஒலிக்கும். இம் மூன்று ஒலிகளும் சேர்ந்து இசை வடிவம் பெறுவதுதான் 'தந்தனத்தோம்' எனும் வில்லிசையாகும்.

வில்லிசை நாயகர்கள்

வில்லுப்பாட்டில் பாடுபவரைப் புலவர், மூத்த புலவனார், மூத்த பாட்டாளி என்றும், இவரே இக்குழுவின் தலைவராக, இருப்பது மட்டுமல்லாமல் வில்லிசையின்போது நடுநாயகமாகவும் வீற்றிருப்பார். இடப்பக்கத்தில் குடம் அடிப்பவர் குடத்தை இயக்க வசதியாக உயரமான இருக்கையில் இருப்பார். புலவருக்குப் பின்னால் வரிசையாகப் பின்பாட்டுக்காரரர், கட்டை இயக்குபவர், தாளம் இயக்குபவர் ஆகியோர் அமர்ந்திருக்கும், அதே வரிசையில் உடுக்கடிப்பவர், குடமடிப்பவரின் வலக்கையை அடுத்து அமருவார். வலப்புறம் இருப்போர் வலத்த பாடுவோர், இடப்புறம் இருப்போர் இடத்த பாடுவோர் என்றும், பயிற்றுவிப்பவர் அண்ணாவியர் என்றும் மரியாதையாக அழைக்கப்படு கின்றனர். வில்லிசைக்குழுவில் ஏழு அல்லது எட்டுபேர் என்றடிப்படை யிலும் குறைந்த பட்சம் ஐந்து பேர் என்றடிப்படையிலும் இடம் பெறுவர்.

வில்லிசையில் மலரும் சொல்லிசைகள்

வில்லிசையில் இடம்பெறும் பாடல்களும், உரையும் வாய்மொழி இலக்கியங்களே. கதைகள் யாவும் பாடுபுலவர் பெருமக்களால் வழிவழியாக வழங்கி வருவன. இப்பாடல்கள் எப்போது யாரால் எழுதப்பட்டன என்பதை அறியமுடியவில்லை. காலந்தோறும் பல மாறுதல்களைப் பெற்று எளிய இசையமைப்பில் பாமர மக்களின் மொழியில் அமையப்பெற்றனவாகும். பிற்காலத்தில் சில கதைகள் ஏட்டில் எழுதி வைக்கப்பட்டன. தற்போது சில கையெழுத்துப் பிரதிகளாகவும் அச்சுப் பிரதிகளாகவும் இருக்கின்றன. எண்ணற்ற பாடல்களும், உரைகளும் வாய்மொழி இலக்கியங்களாகவே மலர்ந்து பின்னர் மறைந்து விட்டன.

வில் சொல்லும் கதைகள்

கதைப்பொருளின் அடிப்படையில் வில்லுப் பாட்டுகளைப் புராணம் தொடர்பான தெய்வக் கதைகள், இதிகாசம் தழுவிய கதைகள், கொடுந்தெய்வக் கதைகள், சமுதாயப் பாங்கான கதைகள், வரலாற்று வீரர் கதைகள் எனப் பல்வகைப்படுத்தலாம்.

நிகழ்காலத்தை இலக்கியத்தில் காட்ட வில்லுப்பாடல் வழி காட்டியது. புதியபுதிய உள்ளடக்கங்களைத் தனது உருவத்தில் ஏற்றுக்கொண்டது. தங்களுக்கு வீரச் செயல் புரிகிற, தியாகம் செய்கிற,

தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கிற, தாங்கள் முன்னேறப் பணிபுரிகின்ற நிகழ்கால மனிதர்களைக் கதை மாந்தர்களாகவும் அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கதை மூலங்களாகவும் கொள்ளுகிற இரண்டு உள்ளடக்கப் போக்குகள் வில்லுப்பாட்டுகளால் தோன்றின. ஒன்று இலக்கியத்தில் நிகழ்கால உணர்வு. இரண்டாவது தன்னுணர்வைக் குழு உணர்வோடு இணைக்கும் சமூக உணர்வு. இவை இரண்டும் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சி பெற்றன.

மொத்தத்தில் வில்லுப்பாட்டு இலக்கியத்திற்கு அளித்த நல் வரங்கள்: 1. நிகழ்காலப் பிரச்சினை உணர்வு 2. சமுதாய உணர்வு. 3. நாட்டுமக்கள் வாழ்க்கையைக் கலைப்படைப்பின் உள்ளடக்கமாக ஆக்குவது. 4. சாதாரண மக்கள் இலக்கிய உலகில் கதை மாந்தரானது. 5. நமது மக்களுக்கு இலக்கிய ரசனைப் பயிற்சியளித்து - கதை, உரைநடை, கதைப்பாடல் தோன்றத் தமிழ் இலக்கிய நிலத்தைப் பண் படுத்தியது என்றவாறு பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு வில்லுப்பாட்டு மிக அவசியமான பாலமாயிருந்தது.

கலைஞர்களின் வகைப்பாடு

கலை நிகழ்த்தும் முறையைக் கொண்டு கலைஞர்களைத் தொழில்முறைக் கலைஞர்கள், தொழில்முறை அல்லாத கலைஞர்கள் என இருவகையினராகப் பகுக்கப்படுகின்றனர். வில்லிசையைத் தொழிலாகக்கொண்ட தொழில்முறைக் கலைஞர்கள், கோவில் மேடைகளில் அதிக அளவில் பாடுகின்றனர். இக்கலைஞர்கள் பாடும் போது தாங்களே கதைகளைத் தயாரித்துக்கொள்வது உண்டு. எடுத்துக் காட்டாக, சிலப்பதிகாரம், பாஞ்சாலி சபதம், மகாத்மா காந்தி, பாரதி, வ.உ.சி. போன்ற இலக்கியம் சார்ந்த, தலைவர்கள் சார்ந்த கதைகள் இதில் அடங்கும்.

தொழில் முறை அல்லாத கலைஞர்களையும் குறிப்பிட்ட கோவில் களில் மட்டும் பாடுபவர் கோவில் அல்லாத மேடைகளில் பாடுபவர் என்று இருநிலைகளில் பகுக்கலாம். குறிப்பிட்ட கோவில்களில் மட்டும் பாடுபவர்கள் ஊர்க்கோவில் தனியார் கோவில் ஆகிய கோவில்களில் பாடுகின்றனர்.

வில்லிசைக்கலை மரபு வழி வருவது என்று கூற முடியவில்லை. ஏனெனில் வில்லிசைக்கலை தந்தைவழி, குருவழி, வில்லிசை நிகழ்ச்சியைக் கவனித்துத் தானாகக் கற்றல் என்ற மூன்று நிலைகளில் பயிலப்படுகிறது.

வில்லுப்பாட்டின் தற்கால வளர்ச்சி

காலத்துக்கொவ்வாத சில அம்சங்களை நீக்கிவிட்டு வில்லுப் பாட்டை ஒருகலைக் கருவியாய் மாற்றிய பெருமை காலஞ்சென்ற சாத்தூர் பிச்சைக்குட்டி ஐயாவையே சாரும். அவரது நன் முயற்சியால் குக்கிராமங்களிலும் கோவில் கொடைவிழாக்களிலும் மட்டுமே பாடப்பெற்று வந்த வில்லுப்பாட்டு பொது மேடைகளில் இலக்கியம் தொடர்பான கதைகளும் விழிப்புணர்வுக்கதைகளையும் வரலாற்று நிகழ்வுக் கதைகளையும் பாடும்நிலை ஏற்பட்டது. பாமரமக்களால் மட்டுமே போற்றப்பட்டு வந்த இக்கலை வடிவம் கல்லாதார்க்கும் கற்றவர்க்கும் களிப்பினைத்தரும் நல்லதொரு கலையாய் உருவாயிற்று.

இதன் பொருட்டு வில்லுப்பாட்டு இன்று அனைவராலும் விரும்பப்படும் கலையாகியிற்று. பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் கூட மாணவ மாணவியர்கள் மனமுவந்து வில்லிசை நிகழ்வினை இனிமையாக நிகழ்த்துகின்றனர்.

மேலும் இன்றைய காலகட்டத்தில் வானொலியிலும் தொலைக் காட்சிகளிலும் அரசின் நலத்திட்டங்களை நயம்பட உரைப்பதற்கும் தேசத்தலைவர்களின் நினைவுகளை நினைவுபடுத்தவும் கருத்துள்ள செய்திகளை தருவிப்பதற்கும் நல்லதொரு சாதனமாய் வில்லுப்பாட்டு அமையப்பெறுகிறது.

வில்லுப்பாட்டின் இன்றைய நிலை

கோவில் கொடை விழாக்கள் பொதுநிகழ்வுகள் என்பனவற்றில் நிகழ்த்தப்பட்டு வந்த வில்லிசைக் கலை நிகழ்விற்கு மாறாக பாட்டுக்கச்சேரி, ஆடலும் பாடலும் திரைநட்சத்திரங்கள் பங்கேற்கும் பொழுது கழிக்கும் நிகழ்ச்சிகள் என இவை உருமாறியிருக்கின்றன.

பெரும்பாலும் இக்கலை மாற்று வடிவம் நிகழ்ந்த போதிலும் இன்னும் சில பல இடங்களில் வில்லுப்பாட்டு நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருப்பின் அவைகளெல்லாம் சமய சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்காகவுமே நிகழ்தப்படுகின்றன. இவ்வாறான சூழலில் இக்கலையைச் சார்ந்த வாழ்வியற் கலைஞர்கள் தத்தம் வாழ்க்கையை வறுமையிலிருந்து வளப்படுத்திக்கொள்ளும்வகையில் மாற்றுத் தொழிலைத் தேடிக்கொள்கின்றனர். மாற்றுத்தொழிலுக்கு வழியில்லாத வர்கள் இக்கலைகளிலேயே பாவையாளர்களின் ரசனைக்கேற்ப தற்காலத் திரைப்படப் பாடல்களை இணைத்துக்கொண்டு பாடுகின்றனர். இதன்

மூலம் சிலபல வாய்ப்புகளைப் பெற்று தம் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர்.

முடிவுரை

மேற்கத்திய நாகரிக வளர்ச்சியின் இன்றைய காலக்கட்டத்தில் இக்கலையும் கலைஞர்களின் வாழ்வும் அமையப்பெற்றுள்ளது. எனவே அழிந்து வரும் இக்கலை வடிவத்தை அழியாது பாதுகாப்பது நம் பண்பாட்டை, மரபான நம் மண்ணின் கலையை காப்பதாகும். மாறிவரும் நம் பண்பாட்டை மாற்றத்தின் பிடியிலிருந்து ஏற்றம் பெற நம் மண்ணின் மரபான மக்களின் கலைவடிவங்களைப் பாதுகாப்போம் பறைசாற்றுவோம்.

துணைநூற் பட்டியல்

1. இராமநாதன் ஆறு திசம்பர் 2001 'நாட்டுப்புறக் கலைகள்' (நிகழ்த்து கலைகள்)
2. இராமச்சந்திரன்.நா பிச்சைக்காலன் கதை
3. தனஞ்செயன். ஆ நிகழ்த்துதலும் நிகழ்த்துதல் கோட்பாடுகளும் (கட்டுரை)
4. வானமாமலை .ந திசம்பர் 2001 நாட்டுப்புறக் கலையியல்
5. மறைமலை ராமசாமி எம்.ஏ.1995 'நாட்டுப்புறக் கலைகள்'
6. பெருமாள் அ.கா. இராமச்சந்திரன். நா மாச் 2001 தமிழக நாட்டார் 'நிகழ்த்துக் கலைகள்' களஞ்சியம்.
7. வின்சென்ட் பெ.வில்சன்மே 2003 'பண்பாட்டு ஆய்வு ஒரு அடித்தட்டுப் பார்வை'
8. Blackbrrn strart, 1988 'The Bow Song as Oral Tradition'
9. Clars, Peter J. Framk J.Korom, 1991 'Fol Kloristics and Indian Folk-lore'.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை.

75
கும்மியாட்டம்

ச. பார்வதி

முன்னுரை

நம் வாழ்க்கையில் நிகழ்வுகளின் அடிப்படையில் கலை அமைவது இயல்பு. வாழ்க்கைத்தரம் உயர்ந்தவர்களிடம் செவ்வியல் கலையும் (Classical Arts), வாழ்க்கைத்தரம் குறைந்தவர்களிடம் (Folk Arts), நாட்டுப் புறக்கலையும் விளங்குகின்றது. தமிழகத்தின் அரும் பெரும் பொக்கிஷங்கள் கிராமியக் கலைகளாகும். கரகம், காவடி யாட்டம், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், கும்மி, கோலாட்டம் என்று பல வகையான கலைகள் உள்ளன. அவற்றுள் கும்மி ஆட்டக்கலையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வகைகள்

"ஆண்கள் மட்டும் ஆடும் நடனங்கள், பெண்கள் மட்டும் ஆடும் நடனங்கள், இருபாலரும் சேர்ந்து ஆடும் நடனங்கள் என்னும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்."[1]

பெண்கள் ஆடும் ஆட்டங்கள்

வயது முதிர்ந்தோர், நடுத்தர வயதுப் பெண்கள், சிறுமிகள் என வயது வித்தியாசமின்றி ஆடும். ஆட்டத்தில் முதல் இடம் பெறுவது கும்மியாட்டம். கோலாட்டம் போன்ற ஆட்டத்தையும் ஆடுவார்கள்.

கும்மியாட்டம்

கும்மி என்பது கையைத் தட்டுதல். "கொம்மாய் என்ற சொல்லிலிருந்து கும்மி தோன்றியிருக்க வேண்டும்."[2] பெண்கள் சேர்ந்து கைகளைக் கொட்டி ஆடும் ஆட்டமே கும்மியாட்டம். தங்களுடைய இருகைகளை ஓசைபட அடித்துக் கொண்டே ஆடுவது கும்மியாட்டம் ஆகும்.

ஆடும் முறைகள்

பெண்கள் வட்டமிட்டு நின்று கொண்டு தான் வளையல் ஒலியெழுப்ப இருகைகளைக் கொட்டி ஆடுவார்கள். பெண்கள் தம்முடைய உடல் களைத்துப் போகும்வரை கை கொட்டி ஆடுவார்கள். வலக்காலை முன்வைத்துக் குனிந்து, இரு கைகளையும் கொட்டிப் பின்னர் இடக்காலைப் பக்கவாட்டில் நகர்த்தி, வலக்காலைப் பின் இழுத்து நிமிர்ந்தும் கைகளை இயல்பு நிலைக்குக் கொணர்ந்தும் கும்மி ஆடுகின்றனர்.[3] இவர்கள் ஆடும்போது மக்களை ஈர்க்கும் விதமாகவும், அவர்களையும் கலந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவார்கள். ஒருவரை ஒருவர் இடித்துக் கொள்ளாமல் ஆடுவர்.

கைக்கொட்டும் முறைகள்

உள்ளங்கையை மட்டும் இணைத்துக் கொட்டுவதும், இட உள்ளங்கையில் வலக்கையின் நான்கு விரல்கள் மட்டும் பொருந்தக் கொட்டுவதும், இரு கைகளாலும் கும்பிடுமாறு குவியக் கொட்டுவது மான கைக்கொட்டுதல்கள் கும்மி ஆட்டத்தில் காணப்படுகின்றன.[4]

கைக்கொட்டும் முறைகளில் அவரவர் விருப்பம் போலக் கைக் கொட்டும் முறையைப் பின்பற்றுகின்றனர். கைக்கொட்டும்போது இடமும் வலமும் என்ற நிலையில் பக்கவாட்டில் கைக்கொட்டுதல்கள் செய்து கொள்கின்றனர்.[5]

பாடல்கள்

கைக்கொட்டும்போது பாடல்கள் பாடப்படுகின்றன. பாடல்கள் சேர்ந்தால்தான் கும்மி முழுமை பெறுகின்றது. கும்மியாட்டப் பாடல், மெட்டு அதாவது சந்த அமைப்பானது, பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருக்கும்.

கும்மியின் வகைகள்

பூந்தட்டிக் கும்மி, தீக் கும்மி, குலவைக் கும்மி, கதிர்க் கும்மி, முளைப்பாரிக் கும்மி எனச் சூழலைக் கொண்டும் கும்மிகள் பல வகைப்படும்.

நடைபெறும் இடங்கள்

அம்மன் கோவில் விழாக்களில் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். பூப்படைந்த பெண்களின் விடுகளிலும், பொங்கல் விழாக்களிலும் கும்மி ஆட்டம் இடம்பெறும். இவ்வாறு, சமுதாயச் சடங்குகளிலும், சமயச் சடங்குகளிலும் நடைபெறுவதுண்டு.

வேறு பெயர்கள்

ஆந்திராவில் கொப்பி என்றும், மலையாளத்தில் கைக்கொட்டிக் களி என்றும், குஜராத்தில் கர்பா என்றும், ராஜஸ்தானில் கும்மார் என்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் வேறு வேறு பெயர்களில் கூறுகின்றனர்.

நிகழ்த்தும் இடம்

நிகழ்த்துவதற்கு என்று தனிமேடை கிடையாது. ஊர்ப்பொது மக்கள் அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் ஊர் நடுவில் நிகழ்த்துவர். அவர்கள் எந்தவிதமான ஒப்பனையுமின்றி இயல்பாக இருப்பார்கள்.

நம்பிக்கைகள்

முளைப்பாரி வைத்துக் கும்மி கொட்டும்போது மழை வரும் என்றும், உடல் நோய்கள் தீரும் என்றும் நம்பப்படுகிறது.

சிவகங்கை மாவட்டக் கும்மி

சிவகங்கை மாவட்டம் செம்பனூர், வெற்றியூர் கிராமத்தில் புரட்டாசி மாதம், கிராம தேவதையாகிய அன்னப்பூரணி அம்மனுக்குக் காப்பு கட்டுவார்கள். காப்பு கட்டியவுடன் கிராம நலனும், மக்கள் நலனும் வேண்டி மக்கள் தங்கள் வீடுகளில் புதிய மண் சட்டியில் நவதானியங்கள் போட்டு இருட்டில் அல்லது கூடையை கவிழ்த்தி அதைத் தண்ணீர்விட்டு வளர்ப்பார்கள். காப்புக் கட்டித் தொடர்ந்து ஒன்பது நாட்கள் விழா நடைபெறும். அந்த ஒன்பது நாள்களும் இரவு 7 மணி அளவில் கிராமப் பொது இடமாகிய முளப்பட்டுத் திண்ணையில் வந்து கும்மி அடித்துப் பாடுவர். ஒன்பதாம் நாள் அன்று அவரவர் வீட்டில் உள்ள முளைப்பாரியைக் கொண்டு வந்து

முளைப்பட்டுத் திண்ணையில் வைத்துக் கும்மி அடித்து, பிறகு மேளதாள வாத்தியங்களுடன் ஊர்வலமாகக் கோயிலுக்குக் கொண்டு சென்று முளைப்பாரியை குளத்தில் விட்டு விடுவார்கள்.

கும்மியாட்டத்தின்போது பாடப்படும் பாடல்கள்

தன்னானே தன்னானே தன்னானே
தன்னானே சொல்லுங்களே
உங்கள் நாவுக்கர சரஸ்வதி மங்காமா
அன்னப்பூரணி பெயரைச் சொல்லுங்களே
இங்கீதம் குறையாமல் இளவட்டங்களே
தன்னானே தன்னானே தன்னானே
கொத்தோட கொத்தோட வாழைப்பழம்
நல்ல கோதண்ட சக்கரை எள் உருண்ட
தன்னானே தன்னானே தன்னானே

கோட்டையிலே இரு வேப்பமரம்
குலுங்கி ஆயிரம் பூப்பூக்கும்
கொண்ட பெருத்த அன்னப்பூரணி
கோதி முடிக்கும்போதும் பூப்பூக்கும்
தன்னானே தன்னானே தன்னானே
வெள்ளி பிரம்புல பாம்படிச்சு
சிங்காரத் தோப்புல வேட்டையாடி
வென்று வெற்றியூர் நாட்டாரு வாராரு
வெள்ளி குஞ்சம்கட்டி வீசுங்கடி
தன்னானே தன்னானே தன்னானே[6]

முடிவுரை

நாட்டுப்புற ஆட்டக் கலைகள் மக்களுக்குப் பொழுதுபோக்காகவும், நம்பிக்கையாகவும் இருந்து வருகிறது. இக்கலைகளில் கும்மியாட்டம் கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறையோடு ஒன்றிய கலை எனக் கூறுமளவிற்குக் கோவில் திருவிழாக்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. இக்கலை கிராமப்புறங்கள் இருக்கும் வரையில் அழியாது. கிராமங்கள் மெல்ல மெல்ல நகரங்களாக மறிவரும் வேளையில் இக்கலை இனி மெல்லச் சாகும் என்று கூறினாலும் தவறில்லை. இந்நிலை மாற இனிவரும் சந்ததியினருக்கு இக்கலையின் மகத்துவத்தைப் பள்ளிகளின் மூலம் எடுத்துக் கூறவும் கற்றுக் கொடுக்கவும் அரசு உதவுமேயானால் இக்கலை மட்டுமல்ல எக்கலையும்

சூறா வளிக்கும், காட்டாறுக்கும் தளராது நிமிர்ந்து நிற்கும். நாணல்களைப் போல் என்றும் அழியாது நிலைத்திருக்கும் என்பது உறுதி.

குறிப்புகள்

1. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப. 81
2. சு.சக்திலே, நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 174
3. கே.ஏ.குணசேகரன், நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள், ப. 24
4. மேலது, ப. 25
5. மேலது, ப. 25
6. கல்யாணி வெற்றியூர் (08.02.09)

◆

முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 24.

76
சேவையாட்டம்

பேரா. பால்சாமி

தமிழ்நாட்டில் கம்பளத்தார் கலைகளுள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒன்று சேவையாட்டமாகும். இதனைத் தெலுங்கில் சேவாட்டுலு என்று குறிப்பிடுகின்றனர். சேவையாட்டம் என்பது 'சேவை - ஆட்டம் -- சேவையாட்டம் (சேவை - சேவித்தல், தொண்டு செய்தல், வணங்குதல்) இறைவனைச் சேவிப்பதற்காக, வணங்குவதற் காக ஆடப்பெறும் ஆட்டம் என்பர். வெவ்வேறு பகுதிகளில் குறிப்பாக குரும்பர் சேவையாட்டம் என்றும் திருச்சி மாவட்ட குரும்பர் மக்களால் ஆடப்பெறுகின்றது. தர்மபுரி மாவட்டத்தில் வன்னியர் சேவையாட்டம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. அரையர் சேவை என திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், திருச்சி அரங்கநாதப் பெருமாள், ஆழ்வார் திருநகரி ஆகிய கோவில்களில் வைகுண்ட ஏகாதசி தொடங்கிய பத்து நாட்களுக்கு ஆடப்படுகிறது என்று ஒ. முத்தையா சேவையாட்டம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.[1]

கம்பளத்தார்களால் வடக்குச் சீமை என்று திண்டுக்கல், சேலம் பகுதிகளில் கம்பளத்து நாயக்கர்களால் மட்டும் ஆடப்பட்டு, தெற்குச் சீமை என்று அழைக்கப்படும் தேனி, விருதுநகர் பகுதிகளில் கம்பளத்து நாயக்கர்களால் மட்டும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. திண்டுக்கல், சேலம் பகுதிகளில் இருக்கும் கம்பளத்தார்கள் வடக்குச் சீமை, தெற்குச் சீமை என்பதனை 'காவேட்டி', 'பையோட்டி' என்று குறிப்பிடுகின்றனர்.

காவேட்டி என்பது காவேரிக்கு மேல் பகுதியில் வாழ்பவர்களைக் குறிப்பதாகும். 'பையோட்டி' என தேனி, விருதுநகர், தூத்துக்குடி போன்ற மாவட்டத்தில் வாழ்பவர்களைக் குறிக்கின்றது. அனைத்துப் பகுதிகளிலும் இவ்வாட்டம் 'சமூக இனச்சார்பு' ஆட்டமாகவும் நிகழ்த்தப்படுகின்றது. தற்போது பின்வரும் சூழல்களில் இச்சேவை யாட்டம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. அதாவது,

1 சென்றாய்ப் பெருமாள் கோவில் திருவிழாவில் (வத்தலகுண்டு)

2 வீரபாண்டி கௌமாரியம்மன் விழாக்களில்

3 வேறுபல கிராம விழிப்புணர்வுக் கூட்டங்களிலும் அரசியல் கூட்டங்களிலும் நிகழ்த்தப்படுகின்றன.

4 ஒரு புதிய கம்பெனி தொடங்கப்படும்போதும், பண்பாட்டுத் திருவிழாக்கள் நடைபெறும்போதும் சடங்குச் சார்பின்றிச் சாதாரணமாக நிகழ்த்தப்பெறும்[2]

அமைப்பு

ஆட்டம் மனித மனச் செயற்பாடுகளினால் உருவாக்கப்படும் ஓர் அமைப்பினைக் கொண்டது. இவ்வமைப்பும் இது உருவாவ்தற்கு வாய்ப்பாக அமையும் என்பதனையே சேவையாட்டத்தில் காணலாம். வடக்குச் சீமை அமைப்புக் குழுக்கள், கோமாளி முன் நிற்க, ஒன்பது பேர்களும் வரிசையாக நின்று ஆடுவர். தெற்குச் சீமை ஆட்டமைப்பு என்பது கோமாளி என்பவர் உள்ளே நிற்க ஒன்பது ஆட்டக்கலைஞர்கள் அவரைச் சுற்றி ஆடுகின்றனர்.

சேவையாடும் முறை

சேவையாட்டத்தில் சேவைப்பலகை (ஒரு முகமுள்ள தப்பு), சேகண்டி, தேவதுந்துமி (உறுமி), ஜால்ரா போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. மேலும் கோமாளியை மையமாகக்கொண்டு ஆட்டத்தில் பாடல்கள் முக்கியத்தும் பெறுகின்றன.

சேவையாட்டத்தின் அமைப்பு

கம்பளத்தாரில் பெரும்பாலானோர் ஜக்கம்மாவைக் குலதெய்வ மாக வழிபடுகின்றனர். மழைத் தெய்வமாகவும் (ஜக்க - மழை - அம்மா - தெய்வம்) வாழ்க்கையை வழிநடத்தும் தெய்வமாகவும் ஜக்கமா விளங்குகின்றது. ஜக்கம்மாவை மையமாக வைத்து ஐந்து முழுக்கு, ஏழு முழுக்கு என்று பிரித்துக் கொள்கிறார்கள். ஏழு முழுக்கு வகையினைச்

சேர்ந்தவர்கள் மட்டும் சேவையாட்டம் ஆடுகின்றனர். ஐந்து முழுக்கு வகையைச் சேர்ந்தவர்கள் சட்டையைக் கழற்றித் தேவராட்டம் ஆடும் முறையை மேற்கொள்கின்றனர். சேவையாட்டத்தின் ஆட்ட அமைப்பு என்பது தப்பு, சேமக்கலம், தேவதுந்துமி, பாடல், ஆட்டம் ஆகிய பல்வேறு உறுப்புகளின் செயல்பாடுகளால் உருவாக்கப்படுகின்றது. இவ்வுறுப்புகள் பல்வேறு வகையில் இணைந்து சேவையாட்டம் என்ற ஒரே அமைப்பாகத் தோற்றம் கொள்கின்றது என ஒ. முத்தையா சேவையாட்டம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.[3]

சேவையின் தொன்மக் கதை

சிவபெருமானுக்கும், பிரம்மாவுக்கும் நான்கு தலைகள் இருந்தன. பார்வதிதேவி கையிலாயத்தில் இருக்கும்போது சிவன் வருகிறார் என்று பதட்டப்பட்டு எழுந்து நிற்பாள்.அருகில் வந்து பார்த்தால் பிரம்மாவாக இருப்பார். இதே போன்று பலமுறை நடந்தது. பார்வதிதேவி சிவபெருமானிடம் இதைத் தவிர்க்க முடியாதா என்று கேட்டாள். சிவபெருமான் பிரம்மாவிடம் நடந்தவற்றைக் கூறினார். அம்மையார் கலங்கும்போது தன் தலையில் உள்ள ஒரு தலையை வேண்டுமென்றால் எடுத்து விடுங்கள் என்றார். சிவன் பிரம்மாவின் தலையைக் கிள்ளி எடுக்கும் போது கபாலம் சிவபெருமானின் கையினைக் கவ்விக் கொண்டது. சிவன் வலிபொறுக்க முடியாமல் காடு மலைகளில் ஓடித் திரிந்தார். இதனையே பிரம்ம ஹஸ்த்தி தோஷம் என்று அழைப்பர். தெய்வசபையில் தேவர்கள் கூடி பேசி விஷ்ணுதான் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டி நின்றனர் அப்போது,

> " பனை மரத்தைப்போல கையும் காலும் பாருங்க
> பச்சரிசி போல பல்லைப் பாருங்க
> குச்சிவீடு போல தலையில் குள்ளாவியைப் பாருங்கள்"[4]

என்று விஷ்ணு கோமாளி வேஷம் போட்டு ஆடினார். ஒன்பது நவகிரகங்களும் கழுத்துக்குக் கீழ் பெண்வேடமும் தலைக்குமேல் ஆண்வேடமும் போட்டு ஆடினார்கள். அதனைக் கண்ட தேவர்கள் அனைவரும் பார்த்துச் சிரித்தனர். அனைவரும் சிரிப்பதைப் பார்த்துக் கையினைக் கவ்விய கபாலமும் சிரித்தது. சிவபெருமான் கையில் உள்ள கபாலம் கிழே விழுந்தது. சிவபெருமானுக்குப் 'பிரம்ம ஹஸ்தி தோஷம்' நீங்கியது. அதன் பொருட்டே விஷ்ணு ஆடிய ஆட்டமாதலால் கம்பளத்தார்கள் இன்று ஆடி வருவதாகவும் கூறப்படுகின்றது.[4] கம்பளத்து நாயக்கர்கள் விஷ்ணு ஆட்டத்தை மனிதர்கள் ஆடுவதால் கலப்படத்தண்ணீர் குடித்து சாம்பிராணி புகைகாட்டி ஆட்டக்

காரர்களின் கால்களில் விழுந்து வணங்குகின்றனர். (பெரும்பாலும் ஊர் பெரியவரிடம்) இவ்வாறு செய்வது மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்துவதாக இச்சடங்கினைக் கருதலாம். ஏனெனில் கோமாளி திருமாலாகவும் மற்றவர்களை நவகிரகங்களாகவும் கருதி வணங்கும் நிலை உள்ளது. சேவையாட்டக்காரர்கள் கைகளில் வைத்துள்ள தப்பையும், சேமக்கலத்தையும் வாசிக்கத் தொடங்குகின்றனர். முதலில் கோமாளி ஆட்டத்தைத் தொடங்க மற்றவர்கள் அவரைத் தொடர்ந்து ஆடுகின்றனர். சேவையாட்டத்தின் தொடகத்தில் தேவதுந்துமியின் இசைக்கு ஏற்றவாறு சில ஆட்டங்கள் ஆடுகின்றனர். அவற்றை,

1. ஒட்டிகால் ஆட்ட (ஒரு அடி வைத்து ஆடுவது)
2. ரெண்டுகால் ஆட்ட (இரண்டு அடிவைத்து ஆடுவது)
3. மூடு மெட்டுலு ஆட்ட (மூன்று அடிவைத்து ஆடுவது)
4. ஐந்து மெட்டுலு ஆட்ட (ஐந்து அடிவைத்து ஆடுவது)
5. ஏழு மெட்டுலு ஆட்ட (ஏழு அடிவைத்து ஆடுவது)
6. தொம்மதி மெட்டுவ ஆட்ட (ஒன்பது அடிவைத்து ஆடுவது)

இந்த ஆட்டங்களை எல்லாம் ஆடியவுடன் உறுமி வாசிப்பவர் தனது இசைப்பினை நிறுத்திக்கொள்கிறார். உறுமி இசைக்கப்படும் போது பாடல்கள் எதுவும் பாடுவதில்லை. அதன்பின்னர் ஸ்ரீரெங்க பெருமாள் பாடல்களைப் பாடுகின்றனர்.

தெய்வங்களைப் பாடிய பின் முதன் முதலாக வண்ணான் பாட்டு பாடுகின்றனர். வண்ணான் போன்று வேடமிட்டு பாடி வருகின்றனர்.

**"வண்ணான் வந்தேனே வண்ணாரு சின்னான் வந்தேனே வண்ணான
வண்ணாத்தி வின்னாரம் பேசினால் கண்ணை கண்ணைச்
சிமிட்டினால் கண்டு மகிழ்ந்திட வண்ணான் வந்தனே வண்ணாரு
சின்னான் வந்தேனே"[5]**

என்று பாடி வருகின்றனர். பிரம்ம ஹஸ்தி தோஷம் நீங்கும் பொழுது வண்ணானுக்கு வெற்புநோய் இருந்தது நீங்கியதன் பொருட்டாக பாடியதாகக் கூறுகின்றனர். அவரைத் தொடர்ந்து இடையர் என்பவரும் பாடுவது போன்று வேஷம் கட்டி வருகின்றனர்.

**"மதிச்ச இடத்திலே குடியிருக்கிறது
மதுரையில் பாலுவிக்கிறது தயிறு விற்கிறது"**

என்று பாடுவதாகக் கூறுகிறார்கள்.

பொழுது போக்கு ஆட்டங்களாக குறவன் குறத்தி ஆட்டம், கரடியாட்டம் என மக்களை மகிழ்ச்சிபடுத்துகின்றனர். சிறிது நேரம் கழித்து மீண்டும் சேவையாட்டத்தைத் தொடர்கின்றனர். இவ்வாறு மாறிமாறி விடியவிடிய ஆடுகிறார்கள். சேவையாட்டம் ஒப்பனை செய்வதை சேவபூட்டேதி (சேவைபூட்டுதல்) என்றும் ஆட்டம் முடிந்து ஒப்பனை களையப்படுவதைச் சேவ துவிசேதி (சேவயையைக் கழற்றுதல்) என்று குறிப்பிடுகின்றனர். சேவையாட்டம் இரவு நேரங்களில் மட்டும் ஆடப்பெறுவதால் தீவட்டி பிடித்து ஆடிவரும் மரபு காணப்படுகின்றது. சேவையாட்டம் நிகழ்த்தும் கம்பளத்தார்கள் தனித்துவம் கொண்டவர்கள் என்பதை மேற்கண்ட விளக்கங்களில் தெரிந்து கொள்ள முடிகின்றது.

சேவையாட்டம் இனச்சார்பு சமூக ஆட்டக்கலையாக ஆடப்பட்டுவருகிறது என்பதை உணரமுடிகின்றது. இனச்சார்பு கலை என்பதால் அம்மக்களின் பிரிக்க முடியாத கூறாய் விளங்குகின்றது. இன்றும் உயிரோடு தம் இருப்பைக் காட்டி வருகிறது.

அடிக்குறிப்புகள்

1. முனைவர் ஒ. முத்தையா. சேவையாட்டம், பக், 19 - 21
2. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள், ப. 19
3. தகவலாளி சீனிசாமிநாயக்கர், . வயது, 80, சித்தார்பட்டி
4. தகவலாளி, பொன்னுச்சாமி, வயது, 60, வேலாயுதபுரம்
5. மேலது.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் கல்லூரி,
மதுரை - 14.

77
கைச்சிலம்பாட்டம்

முனைவர் ச. பாலாபழனி

முன்னுரை

வரலாறு என்பது இயற்கை வளர்ச்சியின் படிநிலை என்பர் அறிஞர்.[1] கடந்த கால வரலாறுகள் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையை வளப்படுத்த உதவுகின்றன. முன்னோர்களின் செயல் பாடுகள் இக்கால மக்களுக்குக் கலங்கரை விளக்கம்போல் வழிகாட்டி உதவுகின்றன. பழங்கால மக்களின் கலை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை அறிவதற்கான வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்வது நம் நாட்டுப்புறக் கலைகளே ஆகும். ஒரு நாட்டின் கலாச்சாரமும், பண்பாடும் அந்த மக்களின் நாட்டுப்புற மரபில் வெளிப்படுகின்றன.

விழாக்கள்

ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டையும், நாகரிகச் சிறப்பையும் பறை சாற்றுவன விழாக்களேயாகும். "விழை" என்ற சொல்லடியாகப் பிறந்தது விழா என்ற சொல். விழை என்ற சொல் விருப்பம் எனப் பொருள்படும். மக்கள் விருப்பம் மிகுந்து மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுவது "விழா" எனக் காரணப்பெயர் பெற்றது.

> "மேலோர் விழைய விழாக்கோள் எடுத்த
> நாலேழ் நாளினும்"[2]

என்னும் பாடல் பகுதி இதனைத் தெளிவுறுத்த வல்லது. மக்கள் இன்பத்தை விரும்பியே விழாக்கொண்டாட முற்படுகின்றனர். விழா

என்பது மகிழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகக் கொண்டாடப்படுகின்றது. "ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு விழா நடந்து கொண்டேயிருப்பது கிராமங்களின் இயல்பு. தமிழர் கொண்டாடிய விழாக்கள் வேடிக்கைக்காக மட்டும் அமைந்தன அல்ல; வீடும் நாடும் ஒருசேரப் பயன்பெறும் வகையில் அவ்விழாக்கள் கொண்டாடப் பெற்றன"[3] என்ற அறிஞர் கூற்று தமிழ்நாட்டு விழாக்களின் மாண்பைப் புலப்படுத்தும். இயற்கையில் மாற்றம் ஏற்பட்டபோது தன்னுடைய ஆரவாரத்தைச் சில ஆடல்களின் மூலம் வெளிப்படுத்தினான். இவ்வாறான ஆடல்களின் தொடர்ச்சி நிகழ்ந்தது. நாளடைவில் விழாக்கள், தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன எனலாம். மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி, மாசி மாதம் சிவராத்திரி தொடங்கிப் புரட்டாசி மாதம் முடிய விழாவிற்கு ஏற்ற காலமாகக் கருதப்படுகின்றது. இவற்றுள் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய நான்கு மாதங்களில் விழாக்கள் அதிகமாக நடைபெறுகின்றன.

கைச்சிலம்பாட்டம் - விளக்கம்

"கையில் சிலம்பை வைத்து ஆடுவதால் இந்த ஆட்டம் கைச்சிலம்பு ஆட்டம் என்று அழைக்கப்படுகின்றது. கைச்சிலம்பாட்டம் புதுவையில் பெருமளவில் ஆடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் காஞ்சிபுரம், தென்னாற்காடு மாவட்டம், சென்னையில் சில பகுதிகளில் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

சிலம்பு எளிய பொருள்களாலும் செய்யப்பட்டு அணிவிக்கப் பெற்றமை கொண்டு ஓர் உண்மையை உணர முடிகின்றது. இது ஒரு "மரபு அணி" என்பதே அவ்வுண்மை. பெண்களுக்குரிய அறிகுறி அணி என்பது மட்டுமின்றி அவளுடைய கன்னித் தன்மையைக் குறிக்கும் சின்னமாகவும் கொண்டே சிலம்பணி அமைந்திருந்தது.

"சிலம்பு உலோகத்தால் செய்யப்பட்டது. சிலம்பின் உடல் பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் அவரவர் செல்வ நிலைக்கேற்பச் செய்யப்பட்டது. இதற்கேற்ப உள்ளே செய்யப்பெற்ற பரல்கள் கல், வெள்ளி, பொன் உருண்டைகளாகவும், முத்து, மாணிக்கங்களாகவும் ஒருவகைப் பரலாகச் செய்யப்பெற்றன. இவை நடக்கும்போது குலுங்கி இனிய ஒலியை எழுப்பும். இப்பரல்களைக் கொண்டு "பொன்னிச் சிலம்பு" அரிச் சிலம்பு, முத்தரிப் பொற்சிலம்பு, இன்மணிச் சிலம்பு"[4] எனப்பட்டது.

கண்ணகியே மாரியம்மன் ஆன கதை

கண்ணகியே மாரியம்மனானாள். “ஆடித்திங்களில் மாரியம்மனின் விழா நடைபெறுகிறது. மாரியம்மன் விழாவில் சிலம்பு கொண்டு ஆடும் கைச்சிலம்பாட்டம் நிகழ்கிறது. ஆதலால், கண்ணகித் தெய்வமே மாரியம்மனாயிற்று என்று கருதுவாரும் உளர். மாரியம்மன் என்றால் மழைத் தெய்வம், கண்ணகி தேவிக்கு விழாக் கொண்டாடியதும் மழைபெய்தது” என்ற குறிப்பும் அம்மன் கோவில்களில் இன்றும் மழை வேண்டிக் கைச்சிலம்பாட்ட நிகழ்ச்சி நடைபெறுவதும் ஈண்டு நினைத்தற்குரியது” இதனை ஆடும் கலைஞர் கூறுகிறார் (பெருமாள் நேர்காணல் 27.3.2002).

கைச்சிலம்பாட்டத்தின் களம்

புதுவை மற்றும் கடலூர்ப் பகுதிகளில் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள பகுதிகளில் இவர்கள் தொடர்ந்து கைச்சிலம்பாட்டத்தினை நிகழ்த்தி வருகின்றனர். புதுவையில் பல்வேறு கலைக்குழுக்களைக் கொண்டு கைச்சிலம்பாட்டம் நடைபெற்று வருகின்றது. மேலும், இக்கலைஞர்கள் வெளி மாநிலங்கள், வெளி நாடுகளிலும் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளனர். அவ்விடங்களில் எல்லாம் புதுவையில் ஆடப்படுகின்ற கைச்சிலம்பாட்டமானது புகழ்பெற்று வந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சிலம்பாட்டத்தின் கலைக்கூறுகளை உள்ளடக்கமாகக் கொண்டு கைச்சிலம்பாட்டம் உருவாகி இருக்கவேண்டும் எனக் கருதலாம். சிலம்பாட்டத்தின் கலைக்கூறுகளான கையால் சிலம்புக் கழிகளைச் சுற்றுவதால் ஏற்படும் ஓசை, கால் வைப்புமுறை, அடவுகள் என்ற மூன்று வகையான தன்மைகள் கைச்சிலம்பாட்டத்தில் பயன்படுத்தப் பட்டு இக்கலை உருவாகியிருக்கலாம்.

சிலம்பாட்டத்தில் சிலம்புக் கழியினை கையில் பிடித்துச் சுழற்றுவது போலவே கைச்சிலம்பாட்டத்திலும் கையில் சிலம்பினைப் பிடித்து ஆடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சிலம்பாட்டத்தில் உள்ள கால் வைப்பு முறையிலான அடவுகளைப் போன்று கைச்சிலம்பாட்டத்தின் அடவுகள் இருக்கின்ற காரணத்தால் சிலம்பாட்டத்தின் அடவுகளை உள்வாங்கியே கைச்சிலம்பாட்டத்தின் அடவுகள் தோன்றியிருக்கலாம் எனக் கருத முடிகின்றது. சிலம்பாட்டத்தில் குரு வணக்கம் இருப்பது போன்று கைச்சிலம்பாட்டத்திலும் உள்ளது.

கைச்சிலம்பாட்டங்களில் காணப்படுகின்ற பொதுவான அடவு களைக் காணும்பொழுது சுழற்றுதல், ஓசை எழுப்புதல், உட்காருதல், குதித்தல், நடத்தல் என்பதாக உள்ளது. சிலம்பாட்டத்தில் கழிகளை ஊன்றித் தலைகீழாக நிற்றல், கைச்சிலம்பாட்டத்தில் சிலம்புகளை ஊன்றித் தலைகீழாக நிற்றல் என்பது இரு ஆட்டங்களிலும் காணப்படு கின்ற முக்கிய பொதுக்கூறுகளாக உள்ளன. இக்கருத்துகளை மெய்ப் பிக்கும் வகையில், "சிலம்பு கடவுளுக்கு உரியது; அதை நாங்களும் காலில் வைத்து ஆடக்கூடாது என்பதால் நாங்கள் கையில் வைத்து ஆடுகிறோம்; அதையும் அழகுபடுத்தி ஆடுகிறோம். ஓரிடத்தில் வீரச் செயலையும் காட்டுகிறோம். இருவர் ஆடும்பொழுது வெவ்வேறு குருவுடையவீரத்தன்மை அங்கு வெளிப்படும். அப்போது அந்த ஆட்டம் வீரவிளையாட்டு கலந்ததாகி விடுகிறது" (பெருமாள் என்பவர் நேர்காணல் - 27.3.2002) என்று கைச்சிலம்பாட்டக்காரர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆடுகளம்

கைச்சிலம்பாட்டம் கோயில் திருவிழாக்களிலும், கடவுள் சிலைகள் வீதி உலா வருகின்ற பொழுதும், சாமிகள் முன்னே செல்ல பின்னால் கைச்சிலம்பாட்டம் ஆடி வருவர். வீதி உலா எந்தெந்த தெருக்களில் போகின்றதோ அதைத் தொடர்ந்து அத்தெருக்கள் அனைத்திலும் சாமியைப் பின்தொடர்ந்து கைச்சிலம்பாட்டம் ஆடிச் செல்கின்றனர். சில சமயங்களில் கோவில் வளாகங்களிலும் கைசிலம்பாட்டம் ஆடப்படுவது உண்டு.

சடங்கு முறை நிகழ்வான காதணி விழாவில் குலதெய்வத்தை வேண்டிப் பொங்கல் இட்டு மொட்டையடித்து வீட்டிற்கு வருவர். அவ்வாறு வருகின்றபொழுது அதன் முன்னர் கைச்சிலம்பு ஆடிக் கொண்டு வருவர். பின்னால் மொட்டையிலே வருகின்ற குழந்தைகளை ஏந்தி உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் வருவர். குலதெய்வம் உள்ள இடத்தில் தொடங்கி வீடுவரை உள்ள தெருக்கள் வழியாகச் கைச்சிலம் பாட்டம் ஆடி வருகின்றனர். எனவே, கைச்சிலம்பாட்டமானது பெரும்பாலும் கோயில் விழாக்களில் கோயில்களிலும், விழா ஊர்வலத்தின்போது வீதிகளிலும் நிகழ்த்தப்படுகின்றன.

துணைநிலை ஆட்டங்கள்

கைச்சிலம்பாட்டத்தின் துணைநிலை ஆட்டங்களாகக் கரகாட்டம், காளி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம் மற்றும்

மயிலாட்டம் போன்றவை இதன் துணைநிலை ஆட்டங்களாக ஆடப்படுகின்றன.

புதுவையில் சிலம்பாட்டக் கலைக்குழுக்கள் உள்ளன. இவற்றில் பாகூர் குப்பத்தில் உள்ள பெருமாள் வாத்தியாரின் பாகூர் கைச்சிலம் பாட்டக் குழு மற்றும் ஞானராஜ் தலைமையிலான அங்காளம்மன் கலைக்குழு ஆகிய இரண்டு கலைக்குழுக்களும் குறிப்பிடத்தக்கன. இக்கலைக்குழுவை நடத்தி வருகின்ற திரு. பெருமாள் மற்றும் ஞானராஜ் ஆகிய இருவர் பன்முக ஆட்டக் கலைகளை அறிந்தவர்கள். இப்பன்முக ஆட்டக் கலைகளின் விளைவாக தங்களுடைய கலைக்குழுக்களில் கைச்சிலம்பாட்டத்தை மட்டும் தனித்து ஆடாமல் அதனுடன் கரகாட்டம், மயிலாட்டம், குறவன் குறத்தி, காளியாட்டம் போன்ற துணைநிலை ஆட்டங்களையும் இணைந்து ஆடிவருகின்றனர்.

கோயில் திருவிழாக்களில் பலமணி நேரம் ஆடவேண்டிய சூழ்நிலையில் ஒரே ஆட்டத்தை ஆடினால் இது பார்வையாளர்களுக்கு அலுப்பு ஏற்பட ஆரம்பித்துவிடும்.மேலும், ஆட்டக் கலைஞர் சோர்ந்துவிட வாய்ப்புண்டு. இதன் விளைவாகத் துணைநிலை ஆட்டங்கள் இடம்பெற்று இருக்கவேண்டும். எனவேதான், கரகாட்டம், மயிலாட்டம், குறவன் குறத்தி, காளியாட்டம் போன்ற துணைநிலை ஆட்டங்கள் கைசிலம்பாட்டத்துடன் இணைந்து ஆடப்படுகின்றன.

ஆட்டக்கலைஞர்கள்

கைச்சிலம்பாட்டக் கலைஞர்கள் தொழில்முறைக் கலையாகக் கைச்சிலம்பாட்டத்தை ஆடிவருகின்றனர். திருவிழாக் காலங்களில் ஆட்டத்தையும் மற்ற நேரங்களில் விவசாயத்தையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். பல்வேறு சாதியைச் சார்ந்த ஆட்டக் கலைஞர்கள் ஆடுகின்றனர். அவர்களில் நாயுடு, வன்னியர், உடையார் போன்ற சாதியினர் இதனை ஆடிவருகின்றனர். இக்கலைஞர்கள் அனைவரும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளனர். தற்போதைய நிலையில் பல இளைஞர்கள் இதனைக் கற்று ஆடிவருகின்றனர். ஆனால், இளம்கலைஞர்கள் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. இதற்குக் காரணம் அதிக வருமானம் கிடைக்கவில்லை என்பதுதான். எனவே, இளைஞர்கள் ஆடுவது மிகக் குறைவு.

கைச்சிலம்பாட்டக் கலைஞர்களில் பெருமாள், ஞானராஜ், ஏழுமலை மற்றும் சென்னையில் உள்ள பழனி பூசாரியின் மகன்களான சீனிவாசன் மற்றும் தங்கவேல் பூசாரி, கள்ளிமேட்டு சுப்ரமணி போன்றவர்கள் குறிப்பிடத்தக்குந்த கலைஞர்களாக உள்ளனர்.

ஆட்டமுறை

கைச்சிலம்பாட்டமானது இரண்டு முதல் ஆறு பேர் வரை ஆடக்கூடியதாகும். பொதுவாக நான்கு பேர் கைச்சிலம்பாட்டம் ஆட, இரு பெண்கள் கரகம் வைத்து ஆடுகின்றனர். சில சமயங்களில் கரகம் இல்லாமல் கைச்சிலம்பாட்டக் கலைஞர்கள் மட்டும் ஆடுவதுண்டு.

பம்பை, உடுக்கை, நையாண்டி மேளம் போன்ற இசைக் கருவிகள் வாசிக்க; ஒரு கலைஞர் பாடலைப் பாட, மற்ற இசைக் கலைஞர்கள் சேர்ந்து பாடுகின்றனர். "கையில் சிலம்பு இருக்கும்; காலில் கச்சை இருக்கும்; கச்சை என்றால் சிலம்பு என்று பொருள். கையில் வைத்து இருக்கும் இந்த சிலம்பு சுதியோடு விஷயம் தெரிந்தவர்கள் சிலம்புக்கும் கச்சைக்கும் தாளம் தகுந்தாற்போல் ஆடுவாங்க; அதே நாதஸ்வரமும் மேளமும் நலமான பம்பை, உடுக்கை, சிலம்பும் காதினில் டோம் டோம் என முழங்கிட வாத்தியங்கள் நல்ல முறையில் முழங்கும் பொழுது ஆடல் தானாக வரும். நாலுபேரு ஒன்னா சேர்ந்து ஆர்வத்தோடு ஆட மக்களும் ஆர்வத்தோடு பாப்பாங்க'' (பெருமாள் கைசிலம்பாட்டக் கலைஞர் *27.3.2002*).

"இசைப்பு என்ற இசையை வைத்துக் கொண்டு சிலம்பை கையில் வைத்துக் கொண்டு ஆடும்போது சலசல என ஒரு சத்தம் வரும். அவங்க கொடுக்கும் தாளத்திற்குத் தகுந்தாற்போல் ஆடுவர்'' இது மூன்று வகையான தாளகதியில் ஆடப்படுகின்றது. வேகத்தின் அளவுக்கு நையாண்டி, நட நையாண்டி, சமயம் என்ற நிலையில் ஆடப்படு கின்றது. கரகாட்டத்தில் உள்ள ஒன்னாங்காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் என்ற நடை தாளத்திற்கு ஏற்பவும் ஆடப்படுகின்றது.

"கோவில்களில் கரகம் புறப்படும்போதும் கரவக்காரர் காப்பு கட்டும்போதும் மத்தவங்க கங்கணம் கட்டிகிட்டு ஆட வருவாங்க. அம்மனுக்குத் தீபாராதனை நடக்கும். தீபாரதனை நடந்தவுடன் வரிசை முறையோடு அதை வெளியே கொண்டு வந்து கொடுப்பாங்க. அதன்பின் அம்மன் புறப்பட்டுப் போனவுடன் இரவு முழுவதும் ஆடுவோம்'' (பெருமாள் கைச்சிலம்பாட்டக் கலைஞர் *27.3.2002*).

சாமி புறப்பட்டுச் செல்லும் சாமி ஊர்வலத்தினைத் தொடர்ந்து ஆடிக்கொண்டு செல்கின்றனர். கைச்சிலம்பாட்டக் கலைஞர்கள் பார்வையாளர்களைக் கவர்வதற்குச் சில வீரசாகசங்களைச் செய்வர். இதைப்பற்றி பெருமாள் கூறும்பொழுது,

"இரண்டு ஊசியை நட்டு வைத்துவிட்டு இரண்டு கண்ணால் ஊசியை எடுப்போம். இதெல்லாம் பார்வையாளர்களைப்

பரவசமூட்டுவதற்குச் செய்வது என்று குறிப்பிடுகிறார். மேலும் ரூபாய் நோட்டுக்களைத் தரையில் போட்டுக் கண்ணால் எடுப்பது மற்றும் ஆடும் கலைஞரின் கண்களைக் கட்டிவிட்டு மற்றொரு கலைஞர் படுத்துக்கொண்டு நெற்றியில் வாழைக்காயை வைத்துக் கூர்மையான கத்திகொண்டு வாழைக்காயை நறுக்குவது மற்றும் வயிற்றில் வைத்து வாழைக்காய் சீவுவது போன்ற பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை இக்கலைஞர்கள் பயன்படுத்திப் பார்வையாளர்களை மகிழ்ச்சிப் படுத்துகின்றனர். இந்நிகழ்ச்சியினைப் பார்வையாளர் சூழ்ந்துகொண்டு பார்த்து மகிழ்கின்றனர். இந்த சாகச நிகழ்ச்சிகள் அனைத்தும் பிற்சேர்க் கையாகச் சேர்ந்த நிகழ்ச்சியாகும். இவ்வாறு, கைச்சிலம்பாட்டம் ஆடப்படுகின்றது.

முடிவுரை

நவீன கலை இலக்கிய வளர்ச்சியின் விளைவாக இக்கலைகள் மிகவும் நலிவுற்று வருகின்றது. இக்கலைக்கோ, கலைஞர்களுக்கோ எந்த உதவியும் இதன் வளர்ச்சிக்கு அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. பன்முகத்தன்மைகள் கொண்ட ஆட்டக் கலைஞர்களாக இவர்கள் திகழ்கின்றனர். அழிந்து வரும் இக்கலையை புதுப்பிக்கவும், புத்துணர்வு அளிக்கவும் அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும். இக்கலை அழியாமலும் கலைஞர்கள் வறுமை நிலையை அடையாமல் காப்பது அரசு மற்றும் தமிழின மக்களின் கடமையாகும்.

அடிக்குறிப்புகள்

1. நவரத்தினம். க, *தென்னிந்தியச் சிற்பவடிவங்கள்*, ப. 2.
2. பரமசிவானந்தம், அ.மு. *தமிழ்நாட்டு விழாக்கள்*, ப. 3
3. இராமநாதன், ஆறு. *நாட்டுப்புற ஆய்வுகள்*, ப. 6, 1993.
4. பாலுசாமி, நா.மு. பதிப்பாசிரியர், *வாழ்வியற் களஞ்சியம்*, தொகுதி ஒன்பது, 1988, ப. 36.

◆

37, மாரியம்மன் கோயில் தெரு,
அரங்கனூர்,
பாகூர் வழி, புதுச்சேரி.

78

கும்மி

அ. பானுமதி

முன்னுரை

வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு பகுதியாகவும், அழகுணர்ச்சியின் வெளிப்பாடாகவும், பொழுது போக்காகவும் மக்களால் உருவாக்கப்படும் அல்லது நிகழ்த்தப்படும் மரபுவழிக் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் என்று குறிப்பிடலாம். நாட்டுப்புறக் கலைகள் திட்டவட்டமான இலக்கண வரையறைகள் அற்றவை. பெரும்பாலும் அடித்தட்டு மக்களோடு தொடர்பு கொண்டவை. நாட்டுப்புறக் கலைகள் எப்போது தோன்றின என்று கூற இயலாது. ஆனால், நமது தொன்மை நூலான தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியங்களின் வித்தையும் வேரையும் பண்ணத்தியில் காணலாம். இளங்கோவடிகள் கி.பி.2ஆம் நூற்றாண்டில் அம்மானை வரி, மாணிக்கவாசகர் தோணோக்கம், திருவுந்தி, ஊசல் முதலியவற்றையும் பாடியுள்ளார்கள். இவற்றினைப் பாட நாடோடிப் பாடல்கள் காரணமாக இருக்கவேண்டும் என்பது புலனாகிறது. எந்தவிதமான இயக்க ஆற்றலுக்கும் அடங்காத இக்கலைகள் மக்கள் மத்தியில் சமய உண்மைகளை எடுத்துக் கூறிக் கொண்டுள்ளன. சிலப்பதிகாரம், அகநானூறு போன்றவற்றில் கும்மி என்ற நாட்டுப்புற வடிவம் கொம்மை என்று காணப்படுகிறது. சான்றாக "கொம்மைஅம் பசுங்காய்க் குடுமி" (அகம் - 15:3)"கொம்மை வாடிய

இயவுள்" (அகம் - 29:16)"கொம்மை வரி முலை" (சிலம்பு - 28:16)

நாட்டுப்புறக் கலைகள் சாதி முதலான வெவ்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டவை.

சாதியினடிப்படையில் பிறந்து பெயர் சூட்டப்பட்ட கலை

வடுகர்கள் ஆடும் கும்மி "வடுகக் கும்மி" என அழைக்கப்படுகிறது.

ஆடும் முறையை அடிப்படையாகக் கொண்டு பெயர் சூடப்பட்டவை

கும்மியாட்டத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்படும் ஒயிலாட்டமானது "ஒயில் கும்மி" என அழைக்கப்படுகிறது.

இந்த ஆய்வில் நாட்டுப்புறக் கலைகளில் கும்மியின் தோற்றம், கும்மி கொட்டும் முறை, கும்மியின் வகைகள், கும்மி கொட்டும் பொழுது, போன்றவை பற்றி ஆய்வில் காண்போம்.

கும்மி

கைகளைக் கொட்டுவதிலே ஓர் ஒழுங்கு முறையை உருவாக்கி இசைத்தன்மையை மேலேற்றிப் பெண்கள் வட்டமாக நின்று அவ்வொலிக்கேற்ப ஆடும் ஆட்டமே கும்மி ஆகும். "பல பேதையரும் பெதும்பையரும் வட்டமாகச் சுற்றிவந்து பாடிக் கைகுவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்படும். கைகுவித்தடிக்கும் விளையாட்டாதலால் இது கும்மி எனப்பட்டது". (தமிழ்நாடு விளையாட்டுகள் - தேவநேயன்.ஞா, சென்னை 1962 ப. 133) "கும்மாளம்" என்ற சொல்லுக்கு "குதித்தாடுதல்" என்று பொருள். கும்மாளமிட்டு ஆடுவதைக் "கும்மி" என்று குறிப்பிட்டுள்ளனர். கும்மியைப் பெண்கள் கைகளைக் கொட்டி ஆடும்போது பயன்படுத்தப்படும் பாட்டு என்று அ.கி.பரந்தாமனார் குறிப்பிடுவார். "குழுமி" எனும் சொல்லே "கும்மி" என மருவிற்று. பெண்கள் வயது வேறுபாடில்லாமல் ஒருங்கிணைந்து ஒருவர் பாட ஏனையோர் பின்பாட கைகுவித்தடித்துக் கொண்டே வட்டமாகச் சுற்றி வந்து ஆடும் ஆட்டத்தினைக் "கும்மி" என்று சுட்டுகின்றனர். கும்மிபாடல் பற்றி குறிப்பிடும் பாரதியார்,

> "வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
> கொட்டி இசைத்திடுவோர் கூட்டமுதப் பாட்டு"

என்று கும்மியாட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். கும்மி

கும்மி கொட்டும் முறை

பெண்கள் வட்டமாக நின்று கும்மி கொட்டுவார்கள். குத்து விளக்கு, கிருஷ்ணன் சிலை, மலர்க்கூடை, பலகாரக்கூடை போன்றவற்றை வைத்துச் சுற்றி நின்று ஆடுவார்கள். கும்மி கொட்டும் பெண்கள் சாந்துப்பொட்டு, சந்தனப் பூச்சு, கூந்தல் ஒப்பனை ஆகியவற்றைக் கொண்டு விளங்குவர். அங்கக்கடகம், அரைநூல் மாலை போன்றவற்றையும், அணிந்திருப்பர். காலால் குதிப்பதும் கையை வீசி அடிப்பதும் உண்டு. பெண்களில் பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடின்றி இணைந்து நின்று ஆடுவர். பெரும்பாலும் சிறுமியரும், கன்னியரும் கும்மி கொட்டுவதுண்டு. வளைந்தும் வணங்கியும் குதித்தும் ஆடுவர். கைகளைத் தட்டும்போது விரல் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு போன்றவை உள்ளன. முழுப்பாதமும் தரையில் படல், கட்டை விரல் தரையில் படல், முன்னங்கால்கள் தரையில் படல், குதித்தல் போன்றவைகளும் உள்ளன. மேலும், கீழும்; இடமும் வலமும்; இடையுமாக எழும்பும் கையொலிகள் பாத ஒலிகளுடன் இழைந்து நருத்ய கதியின் வலிவையும் வனப்பையும் மிகைப்படுத்துவன.

கும்மி கொட்டும் பொழுதுகள்

சங்கராந்திப் பொங்கலன்று பெண்கள் ஆறு, குளம், ஏரி போன்ற இடங்களுக்குச் செல்லும்போதும், பருவமுற்ற பெண்களுக்குச் சடங்கு நிகழ்த்தும்போதும், மாவிளக்கு ஏற்றி விரதமிருக்கும்போதும், சக்தி கோயில்களில் நடைபெறும் விழாக்களின்போதும், அம்மன் தெய்வங்களுக்கு முளைப்பாரியிட்டு வழிபாடு செய்து குலவை போடும் போதும், விநாயகர் சதுர்த்தியின் மறுநாள் பிள்ளையார் சிலையை ஆற்றில் கரைத்துவிடும்போதும், மழையில்லாத வறண்ட காலங்களில் மழைக்காகப் பெண்கள் வேண்டுதலுடன் வழிபாடு நடத்தும்போதும், விழாக்காலங்களில் பொழுதுபோக்கின்போதும், நாட்டுப்புறங்களில் பெண்கள் கும்மி கொட்டி ஆடிப்பாடுகின்றனர். கிறித்தவ திருவிழாக் களின்போது கும்மியாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம் போன்ற நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. பெரும்பாலும் கோவிலுக்கு அருகேயுள்ள இடங்களிலேயே இந்நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைகள் அனைத்தும் கோவில் விழாக்களோடு இணைந்துள்ளன. ஆகவே, கோவில்கள்தான் கலைக்கூடங்களாகத் திகழ்கின்றன. கோவில் திருவிழாக்களில் இறை வழிபாட்டிற்கு உதவும் வகையில் பலவிதமான நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பிட்ட தெய்வங்களுக்குக் குறிப்பிட்ட கலைகள் வகுக்கப்பட்

டுள்ளன. இத்தகைய கலைகள் விழாக்களின்போது கோவில் முன்போ அல்லது தெய்வங்கள் தெருவில் உலா வரும்போதோ நடத்தப்படுகின்றன. மேலும், ஆலயங்களுக்குச் செல்லும் வழி மற்றும் சந்தி (4 அல்லது 3 சாலைகள் இணையுமிடம்) போன்ற இடங்களில் நடத்தப்படுகின்றது. தற்போது அரசியல் தொடர்பாகவும் நாட்டுப்புறக் கலைகள் இடம் பெறுகின்றன. பொதுவாக இக்கலைகள் பொழுது போக்கிற்காக நடத்தப்பட்டாலும் அதன் முக்கிய நோக்கம் இறைப்பணி, இறையருளைப் பெறுதலே ஆகும்.

கும்மியைப் பற்றிய விளக்கம் கொண்ட மற்ற நாட்டுப்புறப் பாடல்கள்

"கூந்தலழகுக் காரியெல்லாம் – காலைக்
குதித்துக் கும்மியடிங்கடி"

இப்பாடலில் காலைக் குதித்துக் கும்மியடிக்கவேண்டும் எனும் முறையினைக் காணலாம்.

"கும்மியென்ன கூட்டமென்ன – கண்மணியே
குனிந்து நிமிர்ந்தும் குத்திக்கிட்டு"

இப்பாடலில் குனிந்தும் நிமிர்ந்தும் கும்மியடிக்கும் முறையினைக் காணலாம்.

"விஸ்தாரமாக நின்று கொண்டு
வீசிக் கும்மியடிங்கடி"

இப்பாடலில் பரந்து நின்று வீசிக்கொண்டு கும்மியடிக்க வேண்டும். எனக் கூறுவதைக் காண முடிகிறது.

"கும்மியடிக்கிற பக்கத்துல கூட்டமென்னடி ஆண்பிள்ளைக்கு"

இப்பாடலில் பெண்கள்தான் கும்மியடிப்பார்கள். ஆண்களுக்கு அங்கு இடமில்லை என்ற கருத்து வந்துள்ளது.

கும்மிப்பாடல் பாடும் முறை

"தன்னன்ன னாதினம் தன்னானே – தனம்
தன்னன்ன னாதினம் தன்னானே"

இந்த மெட்டினைக் கும்மிப் பாடலில் பயன்படுத்துகின்றனர். ஒரு அடியை ஒருவர் முன்பாட்டாகப் பாட அதையே பின்பாட்டாக மற்றவர்கள் திரும்பிப் பாடுவார்கள். இப்பாடல்கள் துள்ளல் ஓசையில் அமைந்திருக்கும். இப்பாடல்களின் பண் இந்தளம் அல்லது சீகாமரத்தில் இருக்கும். பெரும்பாலும் கைஒலியே இயற்கையாக தாளமாய்

அமையும். இராமநாதபுர மாவட்டத்தில் சமீப காலமாகக் கும்மியாட்டத்தில் கை கொட்டலுக்கு ஏற்ப நையாண்டி இசைக்குழுவில் உள்ள 'தவில்' இசைக்கப்படுவதாக கே.ஏ.குணசேகரன் (1992 : 17) குறிப்பிடுகின்றார்.

கும்மியின் வகைகள்

பொதுவாக கும்மி நடனத்தை 4 வகையாகப் பிரிக்கிறார்கள்.

1.கோவிலைச் சார்ந்தது 2.சமூகச் சடங்குகளைச் சார்ந்தது 3. பொழுது போக்குகளைச் சார்ந்தது 4. விழிப்புணர்வைச் சார்ந்தது. கும்மியின் மற்ற வகைகளாக இயற்கும்மி (கும்மி), ஒயிற் கும்மி (ஆண்கள் ஒயிலுடன் ஆடுவது), சமயக் கும்மி (பாடலால் மட்டும்), புராணக் கும்மி (பாடலால் மட்டும்), வாழ்வியல் கும்மி (பாடலால் மட்டும்), வரலாற்றுக் கும்மி (பாடலால் மட்டும்)

மேலும், சமயக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதற்கு ஏட்டிலக்கியப் புலவர்கள் மிகுதியாகக் கையாண்ட நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் தாலாட்டும், கும்மியுமே ஆகும். கும்மிப் பாடலின் எளிய வடிவமும் இதற்குக் காரணம். முதலில் இந்துக்கள் தங்களின் சமயக் கருத்துக்களையும், புராணக் கதைகளையும் கூறக் கும்மி வடிவத்தைக் கையாண்டனர். சான்றாக வள்ளியம்மை கும்மி, சண்முகர் கும்மி போன்றவற்றைக் கூறலாம். இதனைத் தொடர்ந்து கிறித்துவ மதக்கருத்துகளை மக்களிடையே பரப்பவும் கும்மிப்பாடல் வடிவத்தினைப் பயன்படுத்தினர். சான்றாக, வேதநாயக சாஸ்திரிகள் எழுதிய ஞானக் கும்மி, சாஸ்திரக் கும்மி போன்றவற்றைக் கூறலாம். இவற்றுள் சாஸ்திரக் கும்மி இந்துக்களின் மூடப்பழக்க வழக்கங்களைக் கேலி செய்வதாக அமைந்துள்ளது. இசுலாமியர்களும் கும்மிப்பாடல் வடிவத்தினைப் பயன்படுத்தி இசுலாமிய மதக்கருத்துகளை எடுத்துரைத்தனர். அமீபு சாகிபு துரை எழுதிய 'ஞானப்பெண் கும்மி' போன்ற நூல்களைச் சான்றாகக் கூறலாம். பாரதியாரின் 'பெண்கள் விடுதலைக் கும்மி' பெண் கல்வியை வலியுறுத்துகிறது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் மக்களுக்கு தேசப்பற்றினை ஊட்டுவதற்கும் கும்மிப் பாடல் வடிவம் பயன்படுத்தப்பட்டது. பெண்கள் கும்மியடித்துக் கொண்டே வட்டமாகச் சுற்றிவருவதை 'சுத்துக்கும்மி' என்பர். இதற்கு மாறாக வரிசையாக நின்றுகொண்டே பாடல் பாடி கைகுவித்தடிக்கும் கும்மியினை 'நிண்ணு கும்மி' என்று கூறுகின்றனர்.

புகழ்பெற்ற சில கும்மிப் பாடல்கள்

வள்ளியம்மைக் கும்மி, ஞானக் கும்மி, அரிச்சந்திரன் கும்மி, நளன் கும்மி, பெண் விடுதலைக்கும்மி, அகத்தியர் வைத்யக் கும்மி, கட்டபொம்மன் கும்மி, சிவகங்கைச் சரித்திரக் கும்மி, மழைக்கும்மி, பொங்கல் கும்மி, சின்னமலைக் கும்மி, இராட்டைக் கும்மி

"தேசம் செழித்திடவே
செல்ல மழை பெய்ய வேணும்"

இப்பாடலில் மழையை வேண்டுவதோடு வனம் பற்றிய செய்திகளே நிறைந்து காணப்படும்.

"வாங்கடி வாங்கடி தோழிப் பெண்களா – வள்ளி
மாமயில் பாட்டப்பாடுங்கடி"

இப்பாடல் வள்ளியம்மை விழாவில் பாடப்படுவது. முருகன் - வள்ளி மணம் முடித்த செய்திகளைக் கொண்டது.

"வெட்டும் துரைமகன் சின்னமலை – வரும்
வேடிக்கைத் தன்மையும் பாருங்கடி"

கோவை மாவட்டத்தில் சின்னமலையின் சிறப்பினை இவ்வாறு பாடுவர்.

"தைமாதப் பெண்களெல்லாம்
தட்டாப் புறப்பட்டார்
கொட்டாப் புறப்பட்டார்"

இப்பாடல் பொங்கல் விழாவினைச் சிறப்பித்துக் கூறுவது.

"உரியிலே வெண்ணெய் இருக்கோ – கிருஷ்ணன்
உரிஞ்சிக் குடிச்சாரு"

இப்பாடல் கிருஷ்ணபகவானின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய செய்திகளைக் கொண்டது.

"அடி இராட்டை இன்னாராட்டை
இருப்பூட்டு இராட்டை"

இப்பாடல் காந்தியடிகள் மீது பற்றுக்கொண்டு இராட்டைத் தொழிலில் ஈடுபட்டோர் பாடும் பாடல்.

"நெல்லு விளைஞ்சதப் பாருங்கடி
நெல் சாஞ்சதப் பாருங்கடி
நேத்துப் பிறந்த அத்தைமகனுக்கு
மீசை முளைச்சதப் பாருங்கடி"

இப்பாடலில் கும்மியடிக்கும் பெண்களில் யாருடைய அத்தை மகனாவது கும்மியடிக்குமிடத்துக்கு வந்தால் அவர்களைக் கிண்டல் செய்வது விளக்கப்பட்டுள்ளது. இதனால், கும்மிப்பாடலில் கேலியும் கிண்டலும் நிறைந்துள்ளதைக் காணலாம்.

தமிழ் நாட்டில் பல இடங்களில் காணப்படும் நாட்டுப்புறக் கலைக் குழுக்களில் கும்மியும் இடம் பெறுகிறது. அவற்றில் ஒருசில 1. நாகர்கோவிலில் களரி கலைக்குழு : Fr. வின்சென்ட்.பெ. வில்சன் என்பவரால் நடத்தப்படுகிறது. இதில் நாட்டுப்புறக் கலைகள் கற்றுத்தரப்படுகின்றன. கும்மியில் இவர்கள் கைகளை மேலிருந்து கீழ் நோக்கியும், கீழிருந்து மேல் நோக்கியும் தட்டுகின்றனர். இவர்கள் ஆண்கள் ஆடும் முளைப்பாரி கும்மியில் பானை, தோல் பானை, சிங்கி போன்ற இசைக்கருவிகளை பயன்படுத்துகின்றனர். காலில் சலங்கை கட்டி ஆடும் வழக்கம் இவர்களிடம் காணப்படுவதில்லை. விழிப்புணர்வு மிக்க பாடல்களே இதில் அதிகம் இடம் பெறுகிறது.

2. காஞ்சிபுரத்தில் விடுதலை நடவு கலைக்குழு: Fr. ஜான்சுரேஷ் என்பவரால் நடத்தப்படுகிறது. இதில் நாட்டுப்புறக் கலைகளுடன் கும்மி கற்றுத் தரப்படுகிறது. கையைத் தட்டும் விதம் நாம் சாதரணமாக கையை தட்டுவதுபோல் கும்மி கொட்டப்படுகிறது. இடம் பெறும் இசைக்கருவிகள் பறை, Tambrin, காலில் கட்டும் (கயிற்றில் கட்டி யிருக்கும்) சலங்கையைக் கையில் வைத்துக் கொண்டு தட்டுவது. இவர்கள் கலைக்குழுவில் ஆண்களும் இடம் பெறுகின்றனர். இவர்கள் சாதாரணமாக நாட்டுப்புற மக்கள் கட்டும் புடவையை போல் கட்டுகின்றனர். 3. திண்டுக்கல்லில் சக்தி கலைக்குழு: சகோதரி சந்திரா என்பவரால் நடத்தப்படுகிறது. பெண்களுக்காக மட்டும் நடத்தப் படுகிறது. இதில் கையை தட்டும் விதம் நாம் சாதரணமாக கையை தட்டுவது போல் கும்மி கொட்டப்படுகிறது. இடம் பெறும் இசைக்கருவிகள் தவில், உறுமி. விழிப்புணர்வு பாடல் இடம் பெறுகிறது. 4. தூத்துக்குடியில் பவளம் கலைக்குழு: Fr. ஜெரால்டு S. ரவி என்பவரால் நடத்தப்படுகிறது. இதில் கை கொட்டும் விதம் களரி கலைக் குழுவைப் போல் கொட்டப்படுகிறது. குறுந்தகடு அல்லது ஒலிப்பேழையின் மூலம் ஆடப்படுகிறது. விழிப்புணர்வு பாடல் இடம் பெறுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கும்மியாட்டத்தில் வலதுகால் முன் வைத்தல், குனிதல், இருகைகள் கொட்டுதல் , இடக்கால் பக்கவாட்டில் நகருதல், வலக்கால் பின்வரல், நிமிர்தல், கைகள் இயல்பு நிலைக்கு வரல், என்னும் ஆட்ட அசைவுக்கூறுகள் பாடல் பாட

ஆடும்போது முறையே தொடர்ந்து அமைகின்றன. உள்ளங்கைகளை மட்டும் இணைத்துக் கொட்டுவதும், இடது உள்ளங்கையில் வலது கையின் நான்கு விரல்கள் மட்டும் பொருந்தக் கொட்டுவதும் இரு கைகளாலும் கும்பிடுமாறு குவியக் கொட்டுவதுமான கைக் கொட்டுதல்கள் கும்மி ஆட்டத்தில் காணப்படுகின்றன.

பிற இடங்களில் கும்மி

குன்னுவர் எனும் பழங்குடி மக்களிடம் கும்மியாட்டம் காணப்படுகிறது. பெயர் வேறுவேறாக இருப்பினும் கும்மியாட்டத்தின் சாயல்தான் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. கேரளாவில்- "கைகொட்டிக் களி" என்றும், ஆந்திராவில் - கொப்பிகொட்டுதல்" என்றும், ராஜஸ்தானில் - "கும்மார்" என்றும் அழைக்கப்படுகிறது. சமண மதத்தைச் சேர்ந்தவர்கள் கும்மியை 'சோபனம்' என்று சுட்டுகின்றனர். இவ்வாறு தமிழகத்தில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் கும்மி நடைபெறுவது பெருமைக்குறியது.

முடிவுரை

இந்த ஆய்வில் நாட்டுப்புறக் கலைகளில் கும்மியின் தோற்றம், கும்மி கொட்டும் முறை, கும்மியின் வகைகள், கும்மி கொட்டும் பொழுது, போன்றவை பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் கள ஆய்வில் வெவ்வேறு கலைக்குழுக்களில் கும்மி கொட்டும் முறை, பயன்படுத்தும் இசைக்கருவிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆண்களும் கும்மியில் இடம் பெறுகின்றனர் என்பது புலனாகிறது.

துணை நின்ற நூல்கள்

1. முனைவர் ஆறு. இராமனாதன் - நாட்டுப்புற கலைகள்

2. குச. வின்சென்ட்.பெ. வில்சன் - அடவு கட்டி ஆட

◆

வீணை விரிவுரையாளர்,
கலைக்காவேரி நுண்கலைக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

79

ஈழத்து நவீன நாடக அரங்கில் கூத்தின் செல்வாக்கு - ஓர் ஆய்வு

ஸ்ரீ. பிரசாந்தன்

முன்னுரை

கிராமியக் கலைமரபாகிய கூத்து ஈழத் தமிழர்களின் பழகலைகளுள் மிக முக்கியமான ஒன்றாகும். பொதுமக்கள் பெரும்பாலும் அறிந்து வைத்திருந்த புராண, இதிகாசக் கதைகளையோ, இந்திய ஈழத்துச் சரித்திரக் கதைகளையோ மையமாகப் பின்னிப் பெரும்பாலும் திறந்தவெளி அரங்குகளில் நடத்தப்படும் ஆட்டக் கலைகளே கூத்துகளாம். இக்கூத்துகளின் பலதிறப்பட்ட செல்வாக் கினைப் பெற்ற இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்து நாடக அரங்குகளிலே செல்வாக்குப் பெற்ற நவீன நாடகங்களிலே பரக்கக் காணலாம். இத்தாக்கத்தின் மிகமுக்கியமான அம்சங்களை எடுத்துரைப் பதாக இவ்வாய்வுக் கட்டுரை விளங்குகின்றது.

ஈழத்துக் கூத்துகள் ஒரு சுருக்க அறிமுகம்

ஈழத்தில் மிகப் பழங்காலந்தொட்டு யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை (தம்பலகாமம்), சிலாபம், முல்லைத்தீவு, மலைநாடு முதலிய தமிழர் பிரதேசங்களிலே கூத்துகள்

சிறப்புற ஆடப்பட்டு வந்துள்ளன. பிதேசத்துக்குப் பிரதேசம் ஆட்ட முறைகள், கூத்து வகைகள் வேறுபட்டுள்ளன. வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து என்பன யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் சில ஒருமைப்பாடுகளும், வேறுபாடுகளும் விளங்க ஆடப்படுகின்றன. இவற்றுள் தென்மோடி ஆட்டங்கள் வடமோடியிலும் நுணுக்கமானவையாகவும் சிரமமானவை யாகவும் விளங்குகின்றன. இவற்றோடு காத்தான் கூத்து, வசந்தன் கூத்து என்பனவும் ஆடப்படும். யாழ்ப்பாணத்தில் இசை நாடகங்கள் மிக முக்கியத்துவம் பெற்றவை. இன்றும் கூத்துகள் சிறப்புற நடைபெறும் இடங்களில் ஒன்றான மன்னாரில் பெரும்பாலும் கிறித்துவ நிலைப்பட்ட கூத்துகளே இடம்பெறுகின்றன. இங்கு யாழ்ப்பாணப் பாங்கு, மாதோட்டப் பாங்கு, வாசாப்பு ஆகிய கூத்துகளும் இடம்பெறுகின்றன. மன்னார்க் கூத்துகளில் பிரதானம் பெறாத ஆடலுக்குச் சிறப்பான முக்கியத்துவம் தருகின்ற மட்டக்களப்பு பிரதேசத்தில் வசந்தன், மகிடி முதலான கூத்துகளும் சிறப்புற்றுள்ளன. மகிடிக் கூத்து ஆடப்பெறும் பிறிதொரு பிரதேசமான முல்லைத்தீவில் தென்மோடிப் பாங்கான கோவலன் கூத்து பிரபலமானதாகும். மத்திய மலைநாட்டில் அருச்சுனன் தபசு, காமன் கூத்து, பொன்னர் சங்கர் ஆகிய கூத்துகள் பெருவழக்கின. இந்த அருச்சுனன் தபசு கூத்திலிருந்து சில வேறுபாடுகளுடன் கூடிய அருச்சுனன் தபசு நாடகம் மட்டக்களப்பிலும் ஆடப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் இக்கூத்துகள் அனைத்துமே முற்காலங்களில் கோயில்களின் முன்பு இதற்கென அமைக்கப்பட்ட கூத்துக்களரி எனப்படும் திறந்தவெளி அரங்குகளிலேயே ஆடப்பட்டு வந்துள்ளன.

தமிழ் நாடக உலகில் கூத்தின் செல்வாக்கு

தமிழ்நாடக உலகு நாட்டுப்புற நாடகங்களாலும், கீர்த்தனை நாடகங்களாலும், கூத்துகளாலுமே ஆரம்ப காலங்களில் செழுமை யுற்றது. பின் மேனாட்டாரின் வருகையினால் அறிமுகமான நவீன நாடகங்கள், முன்னைய மரபுகளில் இருந்து பல்வேறு கூறுகளைப் பெற்றுக்கொண்டே தமிழகத்தில் வளர்ச்சியுற்றன.

"சங்கரதாசு சுவாமிகளின் காலத்திற்குப் பிறகு பாடல்களின் எண்ணிக்கையைக் குறைத்தும், உரைநடைப் பகுதிகளைப் பெருக்கியும் நவீன கருத்துகளைப் பாடுபொருளாகக் கொண்ட மேடை நாடகங்கள் வளரத் தலைப்பட்டன. எனவே, இன்றைய மேடை நாடகங்கட்கு முன்னோடி தெருக்கூத்து எனலாம்"[1] எனத் தமிழ்நாட்டு நவீன நாடக

உலகில் தெருக்கூத்தின் தாக்கத்தைக் கூறுவர் ஆய்வாளர். இதைத் தவிர்க்க முடியாததொரு நிலையெனவே கொள்ள வேண்டும். பின்னைய கலைவடிவங்களில் அவற்றுக்கு முற்பட்டவற்றின் சாயல் தொடர்வது தவிர்க்க முடியாததே. இவ்வாறானதான நிலையையே ஈழத்து நவீன நாடக அரங்குகளிலும் காணமுடிகிறது. பாரம்பரிய ஈழத்து நாட்டுக் கூத்துகளின் தாக்கம் ஏதோவொரு வகையில் இந்நவீன நாடகங்களில் செல்வாக்குச் செலுத்தியே உள்ளன.

ஈழத்து நவீன நாடக அரங்கில் கூத்தின் செல்வாக்கு

பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வியின் நிமித்தமாக உத்தியோகங்கள் பெரிதும் வழங்கப்பட்டதால், ஆங்கிலங்கற்ற மத்திய வர்க்கத்தின் தோற்றம் ஈழத் தமிழ்ச் சமுதாயத்திலும் நிகழ்ந்தது. இம் மத்திய வர்க்கத்தினர்கள் பல நாடக சபாக்களை நிறுவி நவீன நாடகங்களின் வளர்ச்சிகட்குத் துணை புரிந்தனர். லங்கா சபோத சபை, சரஸ்வதி சபை, சுகிர்தவிலாச சபை, சங்கீத விலாச சபை, தமிழ் நாடக சபை முதலிய சபைகள் இவ்வாறு ஈழத்தில் நாடக முயற்சிகளில் ஈடுபட்டன. எனினும், இதே கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உருவாகிய கலையரசு சொர்ணலிங்கமே நவீன நாடக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். இவருடைய நாடகங்கள் இயற்பண்பு சார்ந்தவையாக இருந்தன. எனினும், இவ்வகை நவீன நாடகங்களில் கூத்தின் செல்வாக்கைக் காணமுடியவில்லை. இவை ஐரோப்பிய நாடகப் பாணிகளுள் ஒன்றான இயற்பண்பு சார் நாடகங்களைப் பெரிதும் பின்பற்றியவையாக விளங்கின.

ஆயினும் 1960களில் இடம்பெற்ற சில புதிய முயற்சிகள் ஈழத்து நாடக அரங்க வரலாற்றைப் புதிய பாதையிலே திருப்பின. இவற்றுள் சு. வித்தியானந்தனின் கூத்து மீள் எழுச்சிப்பணி குறிப்பானது. திறந்த வெளி அரங்குகளில் பலமணிநேரம் நடைபெற்று வந்த கூத்துகளை வித்தியானந்தன் காலவரையறை செய்து, சில செம்மைசார் விடயக் கூறுகளைப் புகுத்தி மூடிய அரங்குகளுக்கேற்பத் தயாரித்து வழங்கினார். இவ்வகையில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை போன்ற கூத்துகள் பிரதானமானவை. இவ்வாறு இசை நாடகங்கள் சிலவும் நேரவரையறை செய்யப்பட்டு மூடிய அரங்குகளில் வழங்கப்பட்டன. இவ்வகைய பாரம்பரியக் கூத்துகளில் நவீன மேடை நாடக அசைவுகள் முதலிய புதுமைகள் புகுத்தப்பட்டன. இதனால், ரசிகர்களுக்குப் புதிய சுவையினவான நாடக அரங்க அறிக்கைகள் தோற்றம் பெறத் தொடங்கின. பின்னாட்களில் நவீன நாடகங்களில்

கூத்தின் செல்வாக்குப் பரவலாக இடம்பெற இம்மாற்றமே மூல வித்திட்டது எனலாம். இதன் தொடர்ச்சியாகக் கூத்துகளின் உருவ, உள்ளடக்கங்கள் பேசிய சங்காரம் கூத்தை சி. மௌனகுரு மேடை யேற்றினார். அம்பலத்தாடிகளின் கந்தன் கருணையும் முக்கியமானதோர் அளிக்கையாக விளங்கியது.

பின், "இயற்பண்புவாத நாடகங்களை விடுத்துப் புதிய மாற்றங்கள், பரிசோதனை முயற்சிகள் தொடங்கப் பெற்றன. இவ்வகையில் தாஸீசியஸ், சுந்தரலிங்கம், சுகைர்ஹமீட், சிவானந்தன், மௌனகுரு ஆகியோரின் பணிகள் குறிப்பிடத்தக்கனவாக இருந்தன. கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு, நாடக அரங்கக் கல்லூரி முதலியவற்றின் பணிகளும் பேசப்படத்தக்கனவாயின. 1970களுக்குப் பின்னால் கூத்து வடிவங்களையும் இயற்பண்பு நாடக நெறியினையும் இணைத்து மோடியுற்ற நாடகங்கள் ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படத் தொடங்கின"[2] என்பர் ஆய்வாளர்.

இக்காலகட்டத்திற்கும் பின்பு கூத்தின் செல்வாக்கு நவீன நாடகங்களில் பெரிதும் இடம் பெற்றது. இவ்வாறு இடம்பெற்ற பாங்கைப் பின்வருமாறு இரண்டு வகைப்படுத்தலாம்.

1. கூத்தின் ஒரு கூறை எடுத்துக் கொண்டு அதனை நவீன நாடக அளிக்கைக்கு ஏற்ப இயைபுபடுத்தல்.

2. கூத்தின் ஒரு சிறு பகுதியை அவ்வாறே அதனியல்பு கெடாது ஒரு நவீன நாடகத்தின் இடையே அமைத்துக் காட்டல். இதனால், பரதம் இடையிட்ட நாடகம் போன்று கூத்து இடையிட்ட நாடகம் மேடையேற்றப்பட்டது.

இவற்றுள், முதலாவது பாங்கே பெரிதும் பின்பற்றப் படுவதாயிற்று. உதாரணமாக, 'விழிப்பு' நாடகத்தில் விழிப்புணர்வு பெற்ற உழைப்பாளிகளின் திரட்சி, கூத்து ஆட்டமுறையின் மூலம் நடித்துக் காட்டப்பட்டதைக் கூறலாம். இவ்வாறே 'முறுவல்' நாடகத்தைத் தயாரித்த சுகைர் ஹமீட், அந்நாடக மழைக்காட்சியைக் கூத்து முறையிலும், 'புதியதொரு வீடு' பாநாடகத்தைத் தயாரித்த தாஸீசியஸ், புயல் காட்சியைக் கூத்து முறையிலும் அமைத்தளித்தனர். பாத்திரங்களின் இயக்கங்கள் கூத்தாட்ட முறைமையில் வெளிப்படுத்தப் பட்ட 'அபசுரம்' போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தோன்றின. குழந்தை சண்முகலிங்கத்தினால் கூத்துப் பாணியிலான சிறுவர் நாடகங்கள் வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்டன.

1980களில் பூதாகரமாக வளர்ந்த ஈழத்து இனப்பிரச்சினை நடவடிக்கைகள் அரங்க அளிக்கைகளில் பேசுபொருளையும், வடிவத்தையும் மாற்றத் தலைப்பட்டன. இதன் வெளிப்பாடாக அமைந்த 'மண்சுமந்த மேனியர்' அளிக்கை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மிகுந்த வெற்றி பெற்றது. குழந்தை சண்முகலிங்கத்தின் பிரதியை சிதம்பரநாதன் நெறிப்படுத்தி அரங்க அளிக்கையாகத் தந்த இந்நாடகம் குறித்து எழுதப்பெற்ற பின்வரும் வரிகள், இந்நாடகத்தில் கூத்தின் செல்வாக்கை உணர்த்த வல்லன.

"மோடியுற்ற நடிப்பு முறை, சோடனைகளாலும், திரைச்சீலை களாலும் மறைக்காது வெற்று மேடையை மாத்திரம் பயன்படுத்தி நடிகர்களின் அசைவுகளை மாத்திரம் கொண்ட காட்சிகளின் தொகுப்பு. ஊமம், உரைஞர்கள் நடிகர்களாயும் கதைகூறுபவர்களாயும் மாறும் கூத்து உத்திமுறை ஆசியன இந்நாடக அளிப்பு முறைகளாக அமைந்தன."[3]

போர்க் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், மக்களை நோக்கி அளிக்கைகள் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் நவீன நாடக உத்திகளை இணைத்தும் கூத்து மரபை ஓரளவு பின்பற்றியும் பெருவாரியான வீதி நாடகங்கள் நடிக்கப்படலாயின. இதனால் மக்களைக் கவர்வது இலகுவானதாக இருந்ததென்பது மனங்கொள்ளத்தக்கது.

எனினும் இவ்விடத்தில் நவீன நாடகங்களில் நாட்டுக்கூத்து செலுத்திய அதீத செல்வாக்கால் ஏற்பட்டதொரு குறைபாட்டையும் சுட்டுதல் வேண்டும். சில பிரதிகளில் கூத்து இயைபுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக அளிக்கை செய்யப்பட்டுப் பாராட்டுப் பெற்றதால், நாடகங்களில் பொருத்தமற்ற இடங்களிலும், சலிப்பு மிகும் வண்ணமும் கூத்து முறைமைகள் இடம்பிடித்தன. வர்க்க ஆதிக்கம், சாதி ஆதிக்கம், பெரும்பான்மை இன மேலாதிக்கம், ஆண் பலாத்காரம் போன்ற கொடுங்கோன்மை விடயங்களை உணர்த்த கறுப்பு ஆடை அணிந்த கூத்துப் பாணி நடிகர்கள் ஆடுகின்ற கூத்துகள் பெரும்பாலும் சகல நவீன நாடகங்களிலும் இடம்பெற்று, நாடகப் பிரதிகளின் பெறுமதியைத் தேய்வடையச் செய்து வருகின்றன.

முடிவுரை

"ஈழத்தின் தமிழ்ப்பிரதேசங்களில் சிறந்திருந்த பாரம்பரியக் கலைகளுள் ஒன்றான நாட்டுக் கூத்துகள், பின் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களால் நவீன நாடக ரசிகர்களுக்கு ஏற்றபடி

செவ்வியல் பான்மைப் படுத்தப்பட்டன. இதன் நீட்சியாகக் கூத்துகள் நவீன நாடக உத்திகளைப் பெற்றும், நவீன நாடக அளிக்கைகள் கூத்துகளின் கூறுகளைப் பெற்றும் பரஸ்பரம் செழுமையுற்றன. ஈழத்துத் தமிழ்க் கூத்துகள் ஈழத்தின் தமிழ் நவீன நாடகங்களில் மாத்திரம் செல்வாக்கும் செலுத்தாமல், ஈழத்துச் சிங்கள நாடக மரபிலும் செல்வாக்குச் செலுத்தியனவ்வாக விளங்குகின்றன."[4]

சான்றெண் விளக்கம்

1. *அறிவுநம்பி, அ. (1986), தமிழகத்தில் தெருக்கூத்து, காரைக்குடி அமுதன் நூலகம், ப. 4*
2. *மௌனகுரு. சி, (1992), பழையதும் புதியதும், மட்டக்களப்பு, விபுலம், ப. 131.*
3. *மௌனகுரு. சி, (2007), ஈழத்துத் தமிழ்நாடக அரங்கு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம், ப. 183.*
4. *வித்தியானந்தன். சு, (1990) நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள், நெல்லிப்பளை, தமிழகம், ப. 48.*

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம் - 608 002.

80

அரியலூர் மாவட்டக் குறவன் குறத்தியின் வாழ்வியல் கூறுகள்

சி. பிரபாகரன்

முன்னுரை

தமிழக வரலாற்றில் குறவன் குறத்தியர்கள் நாட்டுப்புற கலைகளைப் பாரம்பரியமாகப் போற்றி வருகின்றனர். சமுகநோக்கில் குறவன் குறத்தியரின் வாழ்க்கை நிலை வள்ளுவன் கூறிய குறளுக்கிணங்க,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

ஒழுக்கத்தின் மேன்மையை உணர்த்துவனவாக இல்லை. குறவன், குறத்தியருக்கிடையே உறவு முறைகள், திருமணமுறை, ஒற்றுமை உணர்வு போன்ற நிலைகளில் இக்கட்டுரையில் பகுக்கப்படுகிறது.

நரிக்குறவர்கள், முறம் பின்னும் குறவர்கள், பன்றி வைத்து வியாபாரம் செய்யும் குறவர்கள் என அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு குறவர்கள்இருந்தாலும் ஆட்டக் குறவன் குறத்தியின் வாழ்வியல் கூறுகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கணவன் - மனைவி உறவுநிலை

ஒரு ஆணுக்குப் பெரும்பாலும் இரண்டு மனைவிகள். இரண்டு மனைவிகளும் ஒற்றுமையோடு கணவனிடம் வாழ்கின்றனர். சில ஆண்கள் தாலி கட்டாமல் பல பெண்களைத் தன்னோடு வைத்துக் கொள்கின்றனர். காரணம், ஆட்டம் ஆடுவதற்குச் செல்லும்போது ஒருவருக்கொருவர் பழக்கம் ஏற்பட்டு அக்குறவர்களோடு பெண்கள் குடும்ப வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

தாய் - மகள் உறவு

தாய் - மகள் என்ற உறவு நிலைகள் குடும்பத்தில் இருக்கும் வரைதான். ஆட்டக் களத்திற்கு வந்தால் குறவனுக்கு மனைவியாக பாவிக்கும் நிலை.

சகோதர - சகோதரி உறவு

சமூக உறவு நிலையிலிருந்து மாறி ஆட்டக் களத்தில் சகோதரன் (குறவன்) கணவனாகவும், சகோதரி (குறத்தி) மனைவியாகவும் நடிக்கும் நிலைகள். உலகம் ஒரு நாடகமேடை அதில், நாமெல்லாம் நாடக நடிகர்கள். யாருக்கு என்ன வேடம் என்று வலியுறுத்த முடியாது என்று இவர்களின் வாழ்வியல் கூறுகள் எடுத்தியம்புகின்றன.

சமூக உறவு

குறவன் குறத்தியர்கள் சமூகத்தில் சுமூகமான உறவு நிலைகளைக் கொண்டிருக்கின்றனர். ஆட்டக் களத்தில் அவர்களுக்குள் தகாத வார்த்தைகளில் பேசிக்கொண்டாலும் சமூகத்தினரிடையே நாகரிகமான வார்த்தைகளைப் பேசிக் கொள்கின்றனர். வெவ்வேறு சாதி, மதத்தில் வேறுபட்டாலும் குடும்ப உறவு முறைகளைப்போல் பாவித்துத் தம் உறவுகளின் நிலையை மேம்படுத்துகின்றனர். குறவன் குறத்தியினரின் சாதியால் தாழ்த்தப்பட்டவராய் இருப்பினும் வெளியூர்க்கு ஆட்டம் ஆடுவதற்குச் சென்றால் உயர்ந்த சாதியினரும் கலைச்சமூகத்தைச் சார்ந்தவர் என்று சமத்துவ நோக்கில் பார்க்கும் நிலையில் சமுதாயத்தில் விழிப்புணர்வு உண்டாக்கி இருக்கிறது குறவன் குறத்தியரின் வாழ்க்கை முறை.

குறவன் குறத்தியர்கள்

அனைத்துப் போதை பழக்கங்களுக்கும் அடிமையாகி இருக்கின்றனர் என்றால் மிகையாகாது. ஆண்களும் பெண்களும்

ஆட்டம் ஆடும்போது சாராயம் குடித்துவிட்டு ஆடினால்தான் அலுப்பு தெரியாது என்கிறார்கள். வெற்றிலையில் போதைப் பாக்கு வைத்துப் போடும் பழக்கம் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் இருக்கின்றன. அக்கூட்டத்தில் சிலர் எந்தவித கெட்டப் பழக்கங்களும் இல்லாதவர் களாக அச்சமூகத்தில் வாழ்கின்றனர் என்றால் வியப்புக்குரியதாக உள்ளது.

பழக்கவழக்கங்கள்

ஒரு சிலர் தன்னுடைய பிள்ளைகளைத் தங்களுடையக் குலப்பெருமையைக் காக்க, தக்க பயிற்சி அளிக்கப்பட்டு களம் இறக்கித் தங்களின் பெயரை அடைமொழியாக வைத்து சமூக வரலாற்றில் இடம் பிடிக்கச் செய்கின்றனர். "புகழ் தேடினால் பணம் தானாக வரும்'' என்பார்கள். அப்பொன்மொழி இவர்களுடைய வாழ்க்கைமுறைக்குப் பொருத்தமாக அமையும். இளமை இருக்கும்வரைதான் குறவன் குறத்தி ஆட்டத்தில் புகழும் பணமும் பெற முடியும். இளமையைத் தவறவிட்டவனின் நிலையை ஒரு கவிஞன் கூறும் பொழுது,

> "இளமை இருக்கும்போது
> பேனாவில் மை நிரம்பி இருந்தது
> எழுதுவதற்கு ஒன்றும் தோன்றவில்லை
> முதுமை வந்தபோது
> எழுதுவதற்கு நிறைய தோன்றுகிறது
> பேனாவில் மையில்லையே''

இளமையைத் தவறவிட்டவனுக்கு அக்கவிஞனின் கருத்தும், குறவன் குறத்தியின் வாழ்க்கை நிலையும் சமுதாய உறவுகளுக்குப் பாடமாகக் கருதுவதுதான் நிதர்சனமானது.

குறவன் குறத்தியரின் திருமண வாழ்க்கையில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்துத் திருமணம் செய்யும் நிலை தற்போது பெருகியது என்றால், நாகரிகச் சமுதாயத்தில் வாழ தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றனர் என்பதுதான் உண்மை. ஒருசிலர் குடும்பத்தில் தன் மகனை ஆட்டக் குறவனாக ஆக்காமல் நன்முறையில் படிக்க வைத்துச் சமுதாயத்தில் மதிக்கத்தக்க வகையில் வாழச் செய்கின்றனர்.

உதாரணமாக, கீழப்பழூர் செல்வராசு ஆட்டக்காரரின் மகன் சோதிடக் கலைபடித்து வெளி மாநிலங்களில் சென்று புகழ் பெற்ற சோதிட நிபுனராகத் திகழ்வது.

பொருளாதார நிலை

பொருளாதார நிலையில் ஒரு காலத்தில் நல்ல முன்னேற்றம் இல்லாமல் இருந்தனர். மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர். இப்போதுள்ள குறவன் குறத்தியர்களின் பொருளாதார நிலை திருவிழாக் காலங்களில் வருமானம் மிகுதியாக இருக்கும். இப்போதுள்ள குறவன் குறத்தி ஆட்டக்குழு மகிழ்வுந்தில் சென்று ஆட்டங்களை நடத்தி வருகின்றனர். கிராமங்களில் மட்டுமே நிகழ்ந்த குறவன் குறத்தி ஆட்டம் நகரங்களிலும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றதால், சாதாரண ஆட்டக் குழுவிற்கு எட்டாயிரம் ரூபாயும், புகழ்பெற்ற குறவன் குறத்தி ஆட்டக் குழுவிற்கு பதினைந்தாயிரம் ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர்.

சாதாரண மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்கள், குழு குழுவாக இடம்பெயர்ந்து கூரைவீடுகளில் வாழ்ந்து வந்தவர்கள், மாடிவீடுகட்டி, வீடுகள் வாடகைக்கு விடும் நிலைக்கு இப்போது உயர்ந்திருக்கிறார்கள். ஆட்டம் ஆடும் நாட்கள் தவிர, பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுக் குடும்ப முன்னேற்றத்தை உயர்த்துகின்றனர். சிலர் விவசாயம் செய்பவர்களாகவும் சிலர் ஐஸ்விற்பவராகவும், சிலர் கம்பெனி போன்றவற்றில் தினக்கூலியகாவும் வேலை செய்கின்றனர். புகழ் பெற்ற ஆட்டக்காரர்கள் வெளிநாடுகளிலும் சென்று தங்கள் திறமையை வெளிப்படுத்தி வருமானத்தைப் பன்மடங்கு பெருகச் செய்கின்றனர்.

கலைப்புகழ்

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம் கீழக்குளத்தூர் கலியன் ஆட்டக் குறவன் புகழ் பெற்ற ஆட்டக்காரர். இறந்த பிறகு அவருடைய மகன் குமார் தஞ்சையில் தஞ்சம் புகுந்து கீழவாசலில் மிகவும் வசதிபடைத்தவராக இருந்து வருகிறார். கீழவாசலில் குமார் அவருடைய சகோதரிகள் ரீட்டா, கீதா, சீதா, கீழப்பழுவூரில் எம்.ஜி.ஆர். என்ற செல்வராசு அவருடைய மனைவி கண்ணம்மா, அயன் சுத்தமல்லி மகாலிங்கம், செல்லம்மாள், விளாங்குடி கைகாட்டி சங்கர், கீழப்பழூர் சவுந்தர்ராஜ், கீழப்பழூர் தருமராஜ் போன்றோர் புகழ்பெற்ற குறவன் குறத்தியர்கள்.

ஒற்றுமை

பிறப்பால் பல்வேறுபட்ட சாதி உட்பிரிவினராய் இருந்தாலும் திருமணம், தொழில், காதல், நட்பு போன்ற சூழல்களால் ஒன்றுபட்டு

கொடுக்கல் வாங்கல் அளவுக்கு முன்னேறிக் குறவன் குறத்தியரின் சமூகம் என்ற ஒரு அமைப்பினராய் வாழும் நிலை, சமுதாய விழிப்புணர்வுக்கு இவர்களின் வாழ்க்கை முறை எடுத்துக்காட்டாய் திகழுகின்றது. உயர்வு, தாழ்வால் சிக்கிச் சீரழிந்து வரும் தமிழர் இனத்துக்கு இவர்கள் வாழ்க்கைநிலை சான்றாவணமாக அமைகிறது.

புறநானூற்றுக் கவிஞன் கணியன் பூங்குன்றனார் கனவான "யாதும் ஊரே யாரும் கேளிர்'' என்ற சமத்துவ உணர்வினைக் குறவன் குறத்தியரின் வாழ்க்கை நிலை உணர்த்துவதை சங்ககாலத்திலே படம் பிடித்துக் காட்டினார்.

முடிவுரை

சுற்றுலாத்தலங்களுக்கும், வரலாற்றுக் கோயில்களுக்கும், வளர்ந்து வரும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் புகழ்பெற்ற அரியலூர் மாவட்டத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் உயிர் விட்ட மொழிப் போர் தியாகி சின்னச்சாமி வாழ்ந்த கீழப்பழூவூரில் பல்வேறு கலைகளை வளர்த்தாலும் குறவன் குறத்தி ஆட்டத்தின் புகழைப் பரப்பிய பங்கு அவ்வூரில் வாழும் மக்களுக்கு மிகுதயாக உண்டு. பல்வேறு ஊர்களில் வாழும் குறவன் குறத்தியரின் வாழ்க்கைக் கூறுகளை எடுத்துரைப்பதும், சமுதாய விழிப்புணர்வு ஊட்டுவதும் இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தகவலாளர்கள்

1. எம். செல்வராஜ், வயது 47, மனைவி அருள்மேரி, வயது 42, கீழப்பழூவூர்
2. மகாலிங்கம், வயது 48, அயன் சுத்தமல்லி
3. செல்லம்மாள், வயது 45, அயன் சுத்தமல்லி
4. சங்கர், விலாங்குடி கைகாட்டி
5. சவுந்தரராஜ், வயது 31, கிழப்பழூவூர்
6. தருமராஜ், கீழப்பழூவூர்

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலைத் தமிழாய்வுத் துறை,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 20.

81
சில்லாக்காட்டம் அல்லது நொண்டி ஆட்டம்

த. பிரபாவதி

முன்னுரை

மனிதன் கூடி வாழத் தொடங்கிய நாள்முதல் இயற்கையோடு இயைந்து வாழ முற்பட்டான் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாரமாக விளங்குபவை நமது கிராமப்புறப் பண்பாட்டு மரபுகள் ஆகும். இத்தகைய கிராமப்புறப் பண்பாட்டு மரபு வழிப்பட்ட பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் நிகழ் கலைகள் கதைப்பாடல்கள் தெய்வங்கள் மருத்துவம் போன்றவற்றைப் பற்றிய விரிவான அறிவுத்திறன்களை விளக்கிக் காட்டி வருவது நாட்டுப்புற இயல் ஆகும். இவ்வகையில் நாட்டுப்புற விளையாட்டுக்களும் நாட்டுப்புறவியலின் முக்கியக் கூறுகளாக அமைகின்றன.

தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறக்கலைகள்

நமது தொன்மையான இலக்கியமான சங்க இலக்கியம் முதல் இன்றைய படைப்பாளிகள் படைக்கும் நாவல்கள் சிறுகதைகள் புதுக்கவிதைகள் திரைப்படங்கள் நாடகங்கள் ஆகிய எல்லாவற்றிலும் நாட்டுப்புறக் கலை இலக்கியங்களின் வடிவங்கள் உள்ளடக்கங்கள் ஆகியவை மாற்றியமைக்கப்பட்டும் புதியதாக சிலவற்றைச் சோத்தும் இன்றைய காலகட்டங்களில் பயன்படுத்தி வருகின்றனர். எடுத்துக் காட்டாக ஓரிரு குறிப்புகளை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

கூத்தராற்றுப் படையில் ஆடுகள மகன், ஆடுகள மகள் என்றும் கூத்தர், விறலியர் என்றும் குறிப்பிடக் காணலாம். கலையைத் தொழிலாகக் கொண்டு வாழும் இன்றைய நாட்டுப்புறக் கலைஞர்கள் எனத் தமிழ் இலக்கயங்களில் குறிப்பிடப்படும் கலைஞர்களைப் பற்றி எண்ணிப் பார்க்கலாம். இம்மண்ணின் இசை என்று கூறப்படும் நாட்டுப்புற இசை சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதை அறியலாம்.

i) குறிஞ்சிப் பண் (மலை வாழ் மக்கள் இசை)

ii) முல்லைப் பண் (காட்டுப் பாடலிசை)

iii) மருதப் பண் (வயற்களப் பாடலிசை)

iv) நெய்தல் பண் எனும் செவ்வழிப்பண் (மீனவர் பாடலிசை)

v) பாலைப்பண் (எயினர் பாடலிசை)

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெறும் வகைக்கூத்து, புகழ்க்கூத்து, விநோதக் கூத்து, குன்றக்குரவை போன்றவை நாட்டுப்புறக் கலை இலக்கிய வடிவங்கள் ஆகும்.

இவ்வாறு தோன்றிய நாட்டுப்புறக் கலை, மன்னர் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்வந்த காலகட்டங்களில் சிற்றிலக்கிய மாகவும் வளர்ச்சி பெற்றன. நாட்டுப்புறக்கலையில் முக்கியத்துவம் பெற்றது நாட்டுப்புற விளையாட்டுகள் ஆகும்.

நாட்டுப்புற விளையாட்டுக்கள்

நம் நாட்டு மக்களுடைய வாழ்வின் அடிப்படை காதலும் வீரமுமே. காதல், வீரம் இரண்டிற்கும் அடிப்படை உள்ளுணர்வும் உடல் ஆரோக்கியமுமாகும். உடல் ஆரோக்கியம் பெற்றுத் திகழ விளையாட்டுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

நாம் வாழும் மண்ணின் வாசனையை நுகரும் மக்களின் நாகரிகம், பண்பாடு இவற்றைத் தொடர்ந்து நிலைக்கச் செய்ய வருங்கால மக்க ளுக்கு வழிகாட்ட நல்ல சமுதாயம் உருவாக ஆதாரமாக விளங்குபவை நம் வாழ்வோடு ஊடாடிக் கொண்டிருக்கும் விளையாட்டுகளே. எனவே, பிறந்த மண்ணின் பெருமையைப் பதிவு செய்யும் நோக்கில் எழுந்ததே "நாட்டுப்புற விளையாட்டுகள் அன்றும் இன்றும்" என்ற ஆய்வுக் கட்டுரை ஆகும்.

நாட்டுப்புற விளையாட்டின் வகைகள்

பொதுவாக நாட்டுப்புற விளையாட்டுகளை அக விளையாட்டு புற விளையாட்டு எனப் பிரிப்பர். இது மட்டுமின்றி மேலும் பல வகையில் நாட்டுப்புற விளையாட்டுகளைப் பகுக்க முடியும்.

அவ்வாறு பகுக்கப் பெறும் பகுப்புக்கள் பின்வருமாறு :

1) கால அடிப்படை

2) கருவி அடிப்படை

3) வயது அடிப்படை

4) ஆடுகள அடிப்படை

5) பங்கு பெறுவோர் அடிப்படை

6) பால் அடிப்படை

7) பாடல் அடிப்படை

8) தன்மை அடிப்படை

9) போட்டி அடிப்படை

10) செயல் அடிப்படை

இதில் பால் மற்றும் வயது அடிப்படையிலான விளையாட்டுக் களில் பெண்களில் ஒரு பிரிவினரான சிறுமியர் விளையாடும் விளையாட்டாகச் சில்லாக்காட்டம் அமைந்துள்ளது.

சில்லாக்காட்டம் அல்லது நொண்டி ஆட்டம்

ஓட்டுச்சில்லைப் பயன்படுத்துவதால் சில்லாக்காட்டம் என்றும் நொண்டியடித்துக் கோடிட்டு விளையாடுவதால் நொண்டிக் கோடு ஆட்டம் என்றும் பெயர் பெற்றது.

ஆடுகருவி

நான்கு சமக்கட்டங்கள் கொண்ட நீள் சதுர அரங்கும், ஆளுக்கொரு சில்லும் கருவிகளாகப் பயன்படுகின்றன. அரங்கின் மேற்பகுதியான இடத்திற்கு மலை என்று பெயர்.

ஆடும் முறை

முதற் கட்டத்தில் சில்லையெறிந்து நொண்டியடித்து அந்தக் கட்டத்தைத் தாண்டி அடுத்த கட்டங்களை ஒவ்வொரு காலடி மிதித்துச் சென்று கடைசிக் கட்டத்திற்கு வெளியே காலூன்றி மீண்டும்

முன்போல் நொண்டியடித்துக் கீழ் வந்து சில்லை மிதித்து வெளியே தள்ளி அதை ஓர் காலடியில் மிதித்தல் வேண்டும்.

இவ்வாறு, பிற கட்டங்களிலும் தொடர்ந்து சில்லெறிந்து ஆடல் வேண்டும். மேல் கட்டங்களில் எறிந்த சில்லை ஒவ்வொரு கட்டமாய்க் கீழே தள்ளிக் கொண்டு வந்து ஆடிக் கட்டத்திலிருந்து வெளியே தள்ளி ஓரே காலடியில் மிதித்தல் வேண்டும்.

கட்டங்களின் வழியே செல்லும் போதும் மீளும் போதும் நொண்டியடிக்க வேண்டிய போதெல்லாம் நொண்டியடித்தே சென்று மீள வேண்டும். எறியப்பட்ட சில்லு கட்டத்திற்கப்பால் விழுந்தாலும், கட்டத்திற்குள் விழாமல் கோட்டின் மேல் விழுந்தாலும், நொண்டி யடித்துக் கட்டத்திற்குள்ளும் வெளியேயும் ஒரே காலடியில் சில்லை மிதிக்கத் தவறினாலும் கோட்டின் மேல் மிதித்தாலும் நொண்டியடிக்கும் போது தூக்கிய காலைக் கட்டத்திற்குள் ஊன்றினாலும், காலால் வெளியே தள்ளப்பட்ட சில்லை முதல் கட்டத்தினின்று ஒரே காலடியில் மிதிக்க முடியாதவாறு நெடுந்தொலைவிற்கு சென்றாலும் ஆடுபவர் தோற்றவராவார். அதன் பின் அடுத்தவர் ஆடல் வேண்டும். அடுத்தவரும் தவறினால் முன்னவர் மீண்டும் ஆடல் வேண்டும். இங்ஙனம் ஆட்டம் முடியும் வரை இருவரும் மாறிமாறி ஆடுவர்.

நாலு கட்டத்திலும் சில்லெறிந்தாடியபின் அகங்கையில் ஒருமுறையும, புறங்கையில் ஒரு முறையும், குத்து, கொழுக்கட்டை, கைக்கிடுக்கி, கால்கிடுக்கி, புறங்கால் இவ்வாறாகச் சில்லை வைத்துக் கொண்டு மலைவரை நொண்டியடித்துச் சென்று மீளவும் மலையில் காலூன்றிக் கொள்ளலாம்.

அதன் பின் தலைமேல் சில்லை வைத்துக் கொண்டு ஒவ்வொரு கட்டத்தையும் ஒவ்வோர் காலடியில் மிதித்து மலைவரை நடந்து சென்று நடந்து மீள வேண்டும். பின்பு அரங்கிற்கு முன்நின்று மலையில் அல்லது மேற்புற வெளியில் சில்லெறிந்து முன்போல் நொண்டி யடித்துச் சென்று அதை மிதித்தல் வேண்டும். பின்பு அங்கிருந்து நொண்டியடித்து திரும்பி வந்து அதை மிதித்தல் வேண்டும்.

பின்னர், மீண்டும் ஒருமுறை மேற்புற வெளியில் சில்லெறிந்து கண்ணை மூடிக் கொண்டு அல்லது மேல் நோக்கிக் கொண்டு “கிச்சா கினியா, காயா, பழமா?” என்று கூறிக்கொண்டே ஒவ்வொரு கட்டத்திற் குள்ளும் ஒவ்வொரு காலடி வைத்து நடந்து சென்று சில்லை மிதித்தல் வேண்டும். கால் கோட்டில் படாமல் காலடி சரியாயிருப்பின் எதிரியார்

உடன் சரியா சரியா என்று வழிமொழிவர். சரியில்லாவிடின் இல்லை என்பர். அதன்பின் எதிரியார் ஆடல் வேண்டும்.

"கிச்சா, கினியா, காயா, பழமா?" - என்ற பகுதி தவறாது முடிந்த பின் எதிரியாரை நோக்கி 'மேட்டா, கீட்டா' என்று வினவ 'மேட்டு' என்று சொல்லின் நிமிந்து நின்று தலைக்கு மேலாகவும் 'கீட்டா' என்று சொல்லின் குனிந்து இருகாலுக்கும் இடையே சில்லை ஒரு கட்டத்திற்குள் எறிய வேண்டும். அது எந்தக் கட்டத்திற்குள் விழுகிறதோ அக்கட்டத்தில் மூலைக் குறுக்குக் கோடுகள் கீறல் வேண்டும்.அது பழம் எனப்படும். 'மச்சு' என்றும் கூறுவார்.

பழம் போட்ட கட்டத்திற்குள் எதிரியார் கால் வைத்தல் கூடாது. அதைத் தாண்டியே செல்ல வேண்டும். எதிரியான் வசதிக்காக அக்கட்டத்திற்கு வெளியே வலப்புறத்தில் அல்லது இடப்புறத்தில் கட்டத்தையொட்டி ஓர் அரைவட்டம் அமைத்துக் கொடுக்கப்படும். அதற்கு யானையடி என்று பெயர். இங்ஙனம் ஒவ்வொரு ஆட்டக் காரரும் தத்தம் பழக்கட்டத்தின் பக்கமாக எதிரியாருக்கு யானையடி அமைத்துக் கொடுப்பர்.

ஒரு முறை பழம்போட்டவர் மறுமுறை முந்தியாடுவார். மறுமுறை பழத்திற்கு சில்லெறியும் போது அது பழக்கட்டத்தில் விழுந்து விடின் தவறாகும்.

ஒருவரோ அல்லது இருவருமோ எல்லாக் கட்டத்திலும் பழம் போட்ட பின் விளையாட்டு கலைக்கப்பட்டு மீண்டும் தொடங்கப் படும். மேற்குறிப்பிட்ட ஆட்டம் ஒற்றைச் சில்லாக்காட்டம் எனப் படும். இவ்வாட்டத்தில் இரட்டை மற்றும் வட்டச் சில்லாக்காட்டம் எனப்பல்வேறு வகைகளும் உண்டு.

நொண்டி ஆட்டம் ஆடும்பொழுது பாடும் பாடல் :

"உங்க வீட்டு நாயி
எங்க வீட்டுக்கு வந்துச்சு
கல்லால் அடிச்சேன் - அது
காலொடிஞ்சு போச்சு
காலொடிஞ்சு போச்சு
காலொடிஞ்சு போச்சு"

தகவலாளி

வெ. ஹரிப்பிரியா, நம்பியூர், கோபிச்செட்டிபாளையம் தாலூக்கா, ஈரோடு மாவட்டம், வயது 14 நாள் : 18.02.09.

முடிவுரை

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றிய தெளிவான சிந்தனைகளின் தெளிவான வெளிப்பாடுகள் தரமான கலை இலக்கியங்களாகப் பரிணமிக்கின்றன. இக்கலை இலக்கியங்கள் மக்களின் நிலையை உள்வாக்கிக் கொண்டு அதனை மாற்றியமைத்து ஒரு உன்னதமான பண்பாட்டுப் பாரம்பரிய எழுச்சியை உருவாக்கு மானால் அவை தரமான கலை இலக்கியங்களாக மதித்துப் போற்றப்படும்.

துணை நூற்பட்டியல்

1. அறவாணன் க.ப அற்றை நாட்காதலும் வீரமும், பாரிநிலையம் சென்னை - *1978*

2. டாக்டர். குணசேகரன் கே.ஏ, நாட்டுப்புற நிகழ்கலைகள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, *1993.*

3. முனைவர் தமிழரசி ந, நாட்டுப்புற விளையாட்டுகள் தமிழ்மதி பதிப்பகம், சீனிவாசபுரம், தஞ்சாவூர், *2005.*

4. அன்னகாமு. செ, ஏட்டில் எழுதாக் கவிதைகள், கழக வெளியீடு, திருநெல்வேலி, *1987.*

5. இராமநாதன். ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், அணியகம், சென்னை *30, 1979.*

◆

விரிவுரையாளர்,
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு.

82

வில்லுப்பாட்டு

திரு. அ. பிரின்ஸ்

முன்னுரை

நாட்டுப்புறக் கலைகளில் பல வழக்கிழந்து மறைந்து வரும் இந்நாளில் மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிக் கலந்து இன்று வரை நின்று நிலவும் தமிழ்க் கலைகளுள் ஒன்றாக விளங்குவது வில்லுப்பாட்டு. 'வில்' என்ற இசைக்கருவியை அடித்துக் கொண்டு ஒரு குழுவினர் நிகழ்த்தும் கலைநிகழ்ச்சி வில்லுப்பாட்டு என்று அழைக்கப்படுகிறது.

வில் - சொற்பொருள் விளக்கம்

யாழுக்குத் தாய் வில். வில்லிலிருந்து தான் யாழ் பிறந்தது. அதனால் வில்லுக்கு ஆதியாழ் என்ற பெயரும் உண்டு. எந்த இசைக் கருவிக்கும் இல்லாத சந்தச் சுகமும், இறைமையும் வில்லுக்கு உண்டு.

திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கோயில்களில் நடைபெறும் கொடை விழாக்களில் தெய்வ வரலாறுகளையும், வீரர் சரித்திரங்களையும் வில்லுப்பாட்டு மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றனர். அம்மன் கோயில்களில் மிகுதியாகவும், சுடலைமாடன் கோயில்களில் குறைந்தளவிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இக்கலை வில்,

வில்லு, வில்லடி, வில்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.

வில் பிறந்த கதை

தென்பாண்டி நாட்டில் ஒரு குறுநில மன்னன் தனது கூட்டத்துடன் காட்டுக்கு வேட்டையாடப் போனான். பல்வேறு மிருகங்களையும் கொன்று குவித்தான். அந்தியில் இளைப்பாறினான். அப்போது குற்றுயிரான விலங்குகளின் அவல ஒலி கேட்டது. மன்னன் மனம் மாறி வருந்தினான். பரிகாரம் தேடினான். கொலைக்கருவி கலைக் கருவியானது. தோளில் கிடந்த வில்லை மடியில் படுக்க வைத்து காட்டுத் தேன் கொண்டு போவதற்காக வைத்திருந்த மண் குடத்தை வில்லோடு இணைத்துக் கட்டி, அம்பினால் நாணில் தட்டித்தட்டி தமிழ் மறைகளையெல்லாம் பாடினான். சுற்றி இருந்தவர்கள் "ஆமா! ஆமா! என்று ஆமோதித்தனர். வில்லிசைக் கலை பிறந்தது.

இலக்கியச் சான்றுகள்

வில்லின் வடிவமுள்ள ஒரு வகை யாழைக் கொண்டு பாணன் ஒருவன் இசை எழுப்பிப் பாடினான் என்று பெரும்பாணாற்றுப்படை எனும் பத்துப்பாட்டு நூலில் கூறப்பட்டுள்ளது.

"வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி'' (பெரு. 180-182)

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில், 'பேரிசை, படகம், இடக்கை, உடுக்கை' என்று இசைக்கருவிகளைப் பட்டியலிடுகிறார். "குக்கிலி நோக்கமும் குடுக்கையும், குடமும்'' என்ற கூத்த நூல் அடியில் வில்லுப்பாட்டில் பயன்படும் குடம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

வில்லிசைக்கும் முறை

வில்லுப்பாட்டுப் பாடுபவரை புலவர் என்றும் 'மூத்த புலவனார்' என்றும் கூறுவர். அவர் நடுநாயகமாய் வீற்றிருப்பார். ஒரு குழுவில் ஏழு அல்லது எட்டுப்பேர் இடம் பெறுவர். முதலில் வில்லுக்கும் மற்ற கருவிகளுக்கும் தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டுவர். புலவர் காப்பு விருத்தம் பாடி நிகழ்ச்சியைத் தொடங்குவார். புலவர் பாடும்போது கருவிகள் மெல்ல இசைக்கப்படும். புலவர் பாட்டைப் பின்பாட்டாய் மற்றவர்கள் வாங்கிப் பாடும்போது கருவிகள் உரத்த நிலையில் இயக்கப்படும். புலவர் பாட்டின் இடையே உரைநடையில் விளக்கம் தருவார். புலவர் பாடியும் உரை சொல்லியும் செல்லுகையில் இடை

யிடையே சிலர், “ஆமா”, “ஆகா!” “அப்படியா?”, “எப்படி?” “சரி” என்பன போலும் சொற்களைத் தகுந்தவாறு கூறிக் கதைக்குத் தெம்பூட்டுவர்.

ஒரே கருத்தை அல்லது வருணிப்பைப் பலமுறை வெவ்வேறு சொற்களால் அடுத்தடுத்துச் சொல்லி அதற்கு அழுத்தம் கொடுத்துப் பாடும் முறையினை வில்லுப்பாட்டில் காணலாம். பின்பாட்டுக் காரர்களும் அவ்வப்போது விடுகதைகள், சிறுகதைத் துணுக்குகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூறி அவையோரை மகிழ்விப்பார்கள். நிறைவாகக் கதை பாடி முடியும் நிலையில், கோயில் கொண்டுள்ள எல்லாத் தெய்வங்களையும் வாழ்த்திப் பாடுவர். கதை கேட்ட அவையோர், கோயில் பொறுப்பாளர், நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தோர் எல்லோரையும் வாழ்த்திப் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்வார்கள்.

குமரி மாவட்த்தில் வில்லுப்பாட்டுக் குழுவினர் தமக்குள் இருபிரிவினராகி எதிர்எதிராகக் கேள்விகள் கேட்டு லாவணிப் பாட்டுப் போன்றதோர் இடை நிகழ்ச்சியை நடத்துவர். மலையாளப் பகுதியில் ‘வில்லடிச்சான் பாட்டு’ என இக்கலை வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டில் இடம்பெறும் பாடல்கள்

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் ஒப்பனைக்கென முக்கியத்துவம் தருவதில்லை. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பாடுவதற்கென்றே ஏராளமான கதைப்பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. தற்போது பாடலும் வசனமுமாக எழுதப்பட்டுள்ள கதைகளை வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் பயன்படுத்துகின்றனர். பார்வையாளர்களுக்கு ஏற்ப அவ்வப்போது மாற்றங்கள் செய்து பயன்படுத்துவதும் உண்டு. இடையிடையே பல உபகதைகளும் பாடப்படுகின்றன. சில கதைகள் வாய்மொழி மரபாக மட்டுமே உள்ளன.

கதைகள் இருவகை. ஒன்று நெடும் பாட்டு, மற்றது இடையில் உரைநடையில் அமைந்தது. வில்லுப்பாட்டுக் கதைகளில் உரையிடையிட்ட பாட்டு வடிவம் நீண்ட நெடுங்காலமாய் வழங்கி வருகிறது. தொல்காப்பியரே,

“தொன்மை தானே உரையொடு புணர்ந்த
பழைமை மேற்றே”

என்று உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளைப் பற்றிக் கூறுகிறார்.

இசைக் கருவிகள்

வில்லுப்பாட்டில் நரம்புக் கருவி, தோற்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. போர் வீரரின் முதற்கருவியாகிய வில்லே இக்கதையில் பயன்படும் முதன்மையான இசைக்கருவியாகும்.இதற்குத் துணையாகப் பயன்படும் உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் மிகப் பழங்காலம் முதல் தமிழ் மக்களிடையே வழங்கி வரும் இசைக்கருவிகள் ஆகும்.

வில்லுப்பாட்டு பெரும்பாலும் வழிபாட்டுச் சடங்குக் கலையாகக் காணப்படுகிறது. தற்போது கோயில்கள் அல்லாத பிற இடங்களில் பொழுதுபோக்கை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஆனாலும் குமரி, நெல்லை மாவட்டப் பகுதிகளில் வழிபாட்டை நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் போக்கே மிகுதியாகக் காணப்படுகிறது. சிலவேளைகளில் கதை பொழுது விடியும்வரையிலும் கூட நடைபெறும். கதை முடியாவிட்டால் மறுநாள் தொடரும். அப்போது “விட்ட கதை நாங்கள் பாட, வேலவனே துணை வருவாய்'' என்று தொடங்குவர்.

கதைகளின் கட்டமைப்பு

கதைப்பொருளின் அடிப்படையில் வில்லுப்பாட்டுக் கதைகள் பொதுவானதோர் கட்டமைப்பின்படி உருவாகியுள்ளன. அவை

காப்பு விருத்தம், வரு பொருள் உரைத்தல், குருவடியாடுதல், அவையடக்கம், நாட்டு வளம் (அல்லது) கயிலைக் காட்சி, கதைத் தலைவன் (அல்லது) தலைவி வாழ்க்கை நிகழ்ச்சி, வாழிபடுதல்.

காப்பு விருத்தம்

கதை இடையூறின்றி நிறைவேற இறைவனை வணங்கிப் பாடுதல்.

> **“தந்தனத்தோம் என்று சொல்லியே - வில்லினில் பாட**
> **வந்தருள்வாய் கணபதியே''**

என்னும் பாடல், பெரும்பாலும் எல்லா வில்லுப்பாட்டுக் கலைஞர்களாலும் பாடப்படுகிறது.

வருபொருள் உரைத்தல்

இதில், அடுத்து என்ன கதையினைப் பாடப் போகிறார்கள் என்ற குறிப்பு வரும்.

அவையடக்கம்

கதை கேட்கக் கூடிய கூட்டத்தினர் முன் பாடும் புலவர் தனது எளிமை தோன்றும்படியாக அவைக்கு அடங்கிப் பாடும் பாடல்

நாட்டுவளம் அல்லது கயிலைக் காட்சி

“நாடு நல்ல நல்ல நாடு – எங்கும்
நாவலர்கள் புகழும் நாடு
மாதம் மூன்று மழை பொழியும்”

என நாட்டினை வாழ்த்தித் தொடங்குதல்.

தலைவன் (அல்லது) தலைவியின் கதை கூறுதல்

பாட்டின் இறுதிப் பகுதி வாழிபடுதல் ஆகும். பொதுவாக வில்லுப்பாட்டுகள்,

“ஆல் போல் தழைத்து... நல்ல
அருகுபோல் வேரூன்றி”

என்று வாழ்த்தி முடிவடைகின்றன.

கதைகளின் வகைப்பாடுகள்

கதைப்பொருளின் அடிப்படையில் வில்லுப்பாட்டுகள் வகைப் படுத்தப்படுகின்றன. அவை புராணம் தொடர்பான தெய்வக் கதைகள், இதிகாசம் தழுவிய கதைகள், கொடுந்தெய்வக் கதைகள், சமுதாயப் பாங்கான கதைகள், வரலாற்று வீரர்கள் கதைகள் ஆகியவை ஆகும்.

புராணக் கதைகள்

ஐயன் கதை, இரணியன் சம்ஹாரம், வள்ளியம்மன் கதை, பார்வதியம்மன் கதை, அரிச்சந்திரன் கதை, கிருஷ்ணசுவாமி கதை, மாகாளியம்மன் கதை, மகிடாசூரன் கதை, குசேலர் கதை ஆகிய கதைகள் ஆகும்.

வில்லுப்பாட்டின் தற்கால வளர்ச்சி

கோயில் திருவிழாக்களிலும், கிராமங்களிலும் மட்டும் இடம் பெற்று வந்த வில்லுப்பாட்டு இன்று பொது மேடைகளிலும் பாடப் படுகின்றது. இலக்கியம் தொடர்பான கதைகளையும் ‘காந்திமகான்’ போன்ற வரலாற்று நிகழ்ச்சிக் கதைகளையும் வில்லுப்பாட்டில் பார்க்க முடிகிறது. பாமர மக்கள் மட்டுமே போற்றி வந்த கலை, கற்றவர்க்கும்

களிப்பினைத் தரும் கலையாய் இன்று உருவாகியுள்ளது. கட்ட பொம்மன், வ.உ.சி., காந்தியடிகள் போன்றோரின் வரலாறுகளும் பாடப்படுகிறது.

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் மட்டுமே நிலவி வந்த வில்லுப்பாட்டின் இசை நாடு முழுவதும் பரவும் வகை செய்த பெருமைக்கு உரியவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்தான். தாம் நடித்த ஒவ்வொரு திரைப்படத்திலும் ஒரு நாட்டுப்புறக்கலை இடம்பெறுமாறு செய்தார். கலைவாணருடன் கூட இருந்து பாடியவர்கள் அவரது மறைவுக்குப் பின் அவர் வழியைப் பின்பற்றி வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

கலை வளர்த்த கலைஞர்கள்

கலைவாணருக்குப் பின், அவர் வழியைப் பின்பற்றி வில்லுப்பாட்டைப் பெருமைப்படுத்தியவர்கள் கவிஞர் சுப்பு ஆறுமுகம், தங்கப்பா, காலஞ்சென்ற குலதெய்வம் ராஜகோபால் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் முக்கியமானவர் சுப்பு ஆறுமுகம். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் தேவைப்படும் பாடல்களை எழுதி வந்தார். அவற்றுள் 'காந்தி வந்தார்', 'ஐயப்பன் சரிதம்', 'வள்ளி திருமணம்' வள்ளுவர் கதை போன்ற கதைகள் குறிப்பிடத்தகுந்தவை. வானொலி யிலும், தொலைக்காட்சியிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு எனச் சிறப்பிடத்தைப் பெற்றுத் தந்த பெருமை இவரையே சாரும். தேசத் தலைவர்களின் நினைவு நாட்களில் அல்லது பிறந்த தினங்களில், அவர்களது நினைவைப் போற்றும் வகையில் வில்லிசை இடம் பெறுகிறது. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் கருத்துகளை விளக்குவதற்கு நல்ல சாதனமாய் இதனைப் பயன்படுத்துகின்றனர். 'வயலும் வாழ்வும்', 'மனை மாட்சி', 'காண்போம் கற்போம்', 'நலவாழ்வு' போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் வில்லில் கதைபாடி அறிவுரை வழங்கப் படுகிறது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தார் நடத்தும் கிராமியக் கலை விழாக்களில் வில்லுப்பாட்டு தவறாமல் இடம் பெறுகிறது.

முடிவுரை

வில்லுப்பாட்டு இன்று அனைவராலும் விரும்பப்படும் ஒரு கலையாகிவிட்டது. புதிய உத்திகளுடன், புதிய கதைகளைப் பாடவும் காலத்திற்கேற்ற கருத்துக்களைப் பரப்பவும் வில்லுப்பாட்டு இனிமையும், எளிமையும் ஆன கலையாகப் பயன்படுகிறது. மக்களை மகிழ்விக்கப் பயன்படும் இக்கலையைப் போற்றிப் பாதுகாப்போம்.

பார்வை நூல்கள்

1. டாக்டர் ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக் கலைகள்
2. டாக்டர் கு. முருகேசன், தமிழக நாட்டுப்புற ஆட்டக் கலைகள்
3. மறைமலை ராமசாமி, நாட்டுப்புறக் கலைகள்
4. நா. இராமச்சந்திரன், துடியான சுவாமிகள்.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
இலயோலா கல்லூரி,
சென்னை-34.

83
தற்காலச் சூழலில் நாட்டார் நிகழ்த்துக் கலைகள்

மை. பீட்டர் ஆரோக்கியராஜ்

வாழ்வியல் சடங்குகள் மற்றும் நாட்டார் தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாகவோ, பொழுது போக்குக்காகவோ அல்லது அழகுணர்ச்சியின் வெளிப்படுத்தலாகவோ மக்கள் இனக்குழுக்களால் கூட்டுப் படைப்பாக நிகழ்த்தப்படும் அல்லது உருவாக்கப்படும் மரபுவழிக் கலைகள் அனைத்தையும் நாட்டுப்புறக் கலைகள் எனலாம்.

நாட்டுப்புறக் கலைகள், 1. நிகழ்த்துக் கலைகள், 2. நிகழ்த்தாக் கலைகள் என இருவகைப்படும்.

தெருக்கூத்து, தேவராட்டம், வில்லுப்பாட்டு, பெரிய மேளம் போன்றவற்றை நிகழ்த்துக் கலைகளுக்கும், சுடுமண் சிற்பம் செய்தல், மரக்கடசல், கைவினைப் பொருட்கள் செய்தல் போன்றவற்றை நிகழ்த்தாக் கலைகளுக்கும் எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

நாட்டுப்புறக் கலை வடிவங்கள் அவை நிகழ்த்தப் பெறும் பண்பாட்டுச் சூழலில், அவை சார்ந்த வட்டார மக்களால் பெயர் சூட்டப்படுகின்றன.

'கணியான்' எனும் சாதியைச் சார்ந்தவரால் மட்டுமே நிகழ்த்தப்பெறும் கூத்து கணியான்கூத்து என்று சாதியின் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆடும் முறை அல்லது அடவு முறையைக்

கொண்டு ஒயிலாட்டம் எனும் கலை வடிவம் பெயர் பெற்றுள்ளது. நிகழ்த்துக் கலை வடிவத்தில் இசைக்கப்படும் இசைக்கருவியின் பெயரால் சில கலைகள் வழங்கப்படுகின்றன. பறை எனும் இசைக்கருவி இசைக்கப்படும் நிகழ்வு பறையாட்டம் என்றும், வில் எனும் கருவியைப் பயன்படுத்துவதால் அது வில்லுப்பாட்டு என்னும் பெயர் பெற்றுள்ளமை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மாடு, மயில், புலி, குரங்கு என்று ஒப்பனை செய்து கொண்டு ஆடப்படும் ஆட்டங்கள் அந்த ஒப்பனைகளின் அடிப்படையில் முறையே மாடாட்டம், மயிலாட்டம், புலியாட்டம், குரங்காட்டம் என்று வழங்கப்படுகிறது.

நிகழ்த்துக்கலை வடிவங்களில் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கொண்டும் சில கலை வடிவங்கள் பெயர் பெற்றுள்ளன. எ.கா. களியலாட்டம், கோலாட்டம், சக்கைக் குச்சி ஆட்டம்.

தெருக்கூத்து எனும் நிகழ்த்துக் கலை வடிவம் அது நிகழ்த்தப்படும் வெளியை மையமாகக் கொண்டு பெயர் பெற்றது. இதனைத் தவிர புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டும் இசைக்கருவிகளின் அளவைக் கொண்டும் இவை பெயர் பெறுகின்றன.

நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவங்களைப் பற்றிப் பேசுகையில் அவற்றின் இயல்புகளைப் பற்றிப் பார்ப்பது அவசியம். இக்கலைகள் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வருபவை. பெரும்பான்மையான கலைகள் குறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்தே இருக்கும். அவ்வட்டாரத்தைச் சார்ந்த குறிப்பிட்ட இனக்குழுவினரின் வாழ்க்கை வட்டச் சடங்குகளுடனும், அவர்களுடைய நாட்டார் தெய்வ வழிபாடுகளுடனும் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கும். இத்தகைய சூழல்களிலிருந்துதான் அவை வெளிப்படுகின்றன அல்லது வடிவம் கொள்கின்றன என்றால் அது மிகையாகாது. சில கலை வடிவங்களுக்கென்று குறிப்பிட்ட பண்பாட்டு எல்லைகள் வரையறுக்கப் படுவதுண்டு. ஏனெனில், அக்குறிப்பிட்ட பண்பாட்டு எல்லைக்குள் இருக்கும் மக்களால் மட்டுமே அதனை எளிமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

சில கலைகள் நாட்டார் தெய்வ வழிபாட்டில் தெய்வத்தின் அருளை, கோமரத்தாடியின் மீது ஏற்றுவதற்காக நிகழ்த்தப்படும்.

நாட்டார் நிகழ்த்துக் கலைகளில் புராணங்கள் மற்றும் கதைப் பாடல்களைப் பயன்படுத்தும் கலை வடிவங்கள் பார்வையாளர்களையே கதாப்பாத்திரங்களாக மாற்றும் தன்மை படைத்தவை. மேலும், அவை

நிகழ்த்துநர் - பார்வையாளர் இடையேயான ஊடாட்டத்தையும் ஏற்படுத்துபவை. தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கணியான்கூத்து போன்ற கலைவடிவங்களில் இது சாதாரணமாக நிகழும். கதை சொல்வதில் தவறு இருந்தால் பார்வையாளர்களே அதனைத் திருத்துவர். கதையை இடையிடையே விட்டு, நடத்திச் சென்றாலும் அதனைக் குறிப்பிட்டு, மறுபடியும் பாடச் சொல்லும் நிகழ்வும் நடைபெறும்.

இவ்வாறு பல இயல்புகளைக் கொண்டிருக்கும் இந்த நாட்டார் நிகழ்த்துக்கலை வடிவங்கள் அதன் எல்லையைவிட்டு வெளியே வரும்போது, அதன் பண்பாட்டுச் சூழலைவிட்டு வெளிக்கொணரும் போது, அதன் இயல்பான தன்மையை விடுத்து வெளியே கொண்டு வரும்போது, அதன் மரபினைத் தாண்டி வெளியே வரும்போது என்ன நிகழ்கிறது என்பதை உற்று நோக்குதல் அவசியம்.

உதாரணமாக, கணியான்கூத்து எனும் நிகழ்த்துக்கலை வடிவம் நெல்லை மாவட்டத்திற்கே உரித்தானது. அது நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில்தான் வழக்கில் உள்ளது. அது நிகழ்த்தப்பெறும் பண்பாட்டுச் சூழல் என்பது சடங்கியல் சார்ந்தது. சுடலைமாடன், இசக்கி அம்மன் போன்ற நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டுச் சடங்குகளுடன் மிகநெருங்கிய தொடர்புடையது. கணியான் இல்லாத சுடலைக் கொடையா? என்று கேட்குமளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அக்கலை வடிவம் அப்பண்பாட்டுச் சூழலை விட்டு வெளியே பொது மேடையிலோ, திருவிழாக்களிலோ நிகழ்த்தப் பெறும்போது அது அதன் சடங்கியல் தன்மையை இழந்து, வேறுமனே பொழுதுபோக்குத் தன்மைக்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. அச்சமயத்தில் அக்கலை வடிவத்தின் பண்பாட்டுக்கூறுகள் மக்களால் புரிந்து கொள்ளப்படுமா?! என்றால், இல்லை என்றே கூறலாம். பொழுது போக்கிற்காக, மக்களை மகிழ்விப்பதற்காக நிகழ்த்தப்படும் கரகாட்டம் முதலான நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட மிகக் குறைவான அதிர்வையே இக்கலை ஏற்படுத்த முடியும்.

அதேபோல், தேவராட்டம் எனும் கலைவடிவம், தென் மாவட்டங்களில் உள்ள கம்பளத்து நாயக்கர் எனும் குறிப்பிட்ட இன மக்களால் மட்டுமே அவர்களது தெய்வ வழிபாட்டுச் சடங்குகளிலும், வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் நிகழ்த்தப்பட்டு வந்தது. சக்கம்மா தேவி எனும் தெய்வத்தின் முன்பே நிகழ்த்தப்பட்டு வந்த அந்தக் கலை வடிவம், சமீப காலமாக அதன் பண்பாட்டு எல்லையைத் தாண்டி வெளி மேடைகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இந்த இரண்டு கலை வடிவங்களிலும் இரண்டு வித்தியாசமான இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. கணியான் கூத்தில் 'மகுடம்' எனும் இசைக் கருவியும், தேவராட்டத்தில் 'தேவதுந்துபி' எனும் உறுமியை ஒத்த இசைக் கருவியும் பயன்படுத்தப் படுகின்றன. நாம் கவனத்தில் இங்கு கொள்ள வேண்டிய ஒன்று என்னவென்றால் தாளத்திற்காகப் பயன்படுத்தப்படும் இந்த இரண்டு இசைக்கருவிகளும் திரைப்படங்களிலும், தகவல் தொடர்பு ஊடகங்களிலும் சமீப காலங்களில் பெற்றுள்ள மதிப்பு நிகழ்த்தப்படும் கலை வடிவத்திற்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. ஏனெனில், இசைக்கருவிகள் எழுப்பும் இசை ஏற்படுத்தும் தாக்கம் என்பது வேறு, நிகழ்த்துநர்கள் நிகழ்த்தும் நிகழ்த்துதல் ஏற்படுத்தும் தாக்கம் வேறு. இசைக் கருவிகளின் இசை பல்வேறு வகைகளில், பல்வேறு துறையினரால் அவர்களுடைய பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டு வியாபாரமாக்கப்படுகிறது. ஆனால், அதனை இசைக்கும் நிகழ்த்துக் கலைஞர்களுக்கு இதனால் எந்த வகையிலும் பயனில்லை.

மேலும், நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளில் பெரும்பாலான கலைகள் திருவிழாக்களிலும், கோவில் சடங்குகளிலும் விடிய விடிய நிகழ்த்தப்படுபவை. அவ்வாறு நிகழ்த்தப்படும்போதுதான் அக்கலை வடிவத்தின் முழுமையான வடிவத்தையும், அடவுகளையும் வெளிக் கொணர முடியும். எந்திரமயமாகிக் கொண்டிருக்கக்கூடிய தற்காலச் சூழலில் தொடர்ச்சியாகப் பல நாட்களாகவோ, விடிய விடியவோ நிகழ்த்தப்பெறும் நிகழ்த்துக்கலைகளை விரும்பிப் பார்க்கும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நாட்டுப்புறக் கலைஞர்களிடமிருந்து அக்கலை வடிவத்தைச் சில மாதங்களில் கற்றுக் கொண்டு மக்களின் தேவைகளைப் புரிந்து, அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திற்குள் ஒரு கலை வடிவத்தின் முக்கியமான கூறுகளை, அடவுகளை விரைவாக நிகழ்த்திக் காட்டிவிட்டு மக்களின் வரவேற்பைப் பெற்று விடுகின்றனர். அத்தகைய சுருக்கமான நிகழ்த்துதலையே மக்களும் விரும்பிப் பார்க்கின்றனர். ஆனால், நாட்டுப்புறக் கலைஞர்கள் அத்தகைய குறுகிய கால நிகழ்வுகளை நிகழ்த்த விரும்புவதில்லை. கலை வடிவத்தின் முழுவீச்சும் மக்களைச் சென்றடையவே அவர்கள் விரும்புகின்றனர்.

எனினும், நிகழ்த்துதலையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ள கலைஞர்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்காக நிகழ்ச்சி ஏற்பாடு செய்பவர்களோடு ஒத்திசைந்து செல்ல வேண்டிய கட்டாய நிலை

ஏற்பட்டுள்ளது. இதனைப் புரிந்துகொண்டு சில கலைஞர்கள் தங்களுடைய நிகழ்த்துதலைக் காலத்திற்கேற்றவாறு சுருக்கியும், சூழலுக்கு ஏற்றவாறு தங்களது ஒப்பனைகளைத் திருத்திக் கொண்டும், வட்டாரத்திற்கு ஏற்றவாறு வடிவத்தின் இயல்பைச் சிறிது மாற்றிக் கொண்டும், இசைக்கருவிகளை மாற்றியமைத்துக் கொண்டும் நிகழ்த்துதல்களைத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். எனினும், அத்தகைய நெகிழ்ச்சித் தன்மையை உள்வாங்கி நிகழ்த்திக் கொண்டிருக்கும் கலைஞர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

கலை, பண்பாடு தொடர்பான அரசின் நிறுவனங்களில் சில நாட்டுப்புற கலை வடிவங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தற்காலச் சூழலுக்கு ஏற்ற நிகழ்வும் தகவமைப்பும் செய்து கொள்வதைப் பற்றிய விளக்கமும் பயிற்சியும் அளித்தன. ஒப்பனை, உடை முதலான வற்றை அழகுபடுத்தவும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துக் கலை வடிவங்களுக்கும் அப்பயிற்சிகள் வழங்கப்பட்டால் அது கலைஞர்கள் வாழ வகை செய்யும்.

நாட்டுப்புறக் கலை வடிவங்களை நிகழ்த்துபவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களே. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் கிராமப்புறங்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்த கலைகள், இப்பொழுது நகரங்களிலும், மாநகரங் களிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. குறிப்பாகக் கடந்த மூன்று வருடங்களில் முதலில் சென்னையிலும், பின்பு தமிழகத்தின் பிற பகுதிகளிலும் இதற்கென விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தங்களது பண்பாட்டு எல்லையை வகுத்துக் கொண்டு அதற்குள்ளாகவே நிகழ்த்தப்பட்டு வந்த நாட்டுப்புறக் கலைவடிவங்களுக்கு அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி, இயல் இசை நாடக மன்றம், தென்னகப் பண்பாட்டு மையம், கலைப் பண்பாட்டு துறை போன்ற கலைகள் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவை குறைந்த அளவிலேயே விருதுகளும் தரச்சான்றும் அளித்து வந்தன. ஆனால், சமீப காலங்களில் கலைஞர்கள் தங்களது பண்பாட்டுத் தளத்தை விட்டு வெளியே வந்து நாட்டு மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் நிகழ்த்துக் கலைவடிவங் களை நிகழ்த்தி வருகின்றனர். மண் தரையிலும், வீதிகளிலும் நடத்தப்பட்டு வந்த கலைகள் பெருவிழாக்களிலும், மேடைகளிலும், அரசு விழாக்களிலும் நடத்தப்பட்டு, மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. தமிழக மக்கள் தங்கள் வாழ்வோடு இணைந்த பண்பாட்டு வரலாற்றை மீட்டெடுக்க இக்கலைகள் தற்போது சிறந்த பணியாற்றி வருகின்றன. ஆனாலும், இவற்றிற்கான தரச்சான்றிதழோ, மதிப்பூதி

யமோ, விருதுகளோ முன்பிருந்த அதே நிலையில்தான் இன்றும் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். திரைப்படம், செவ்வியல் கலைகள் ஆகியவற்றிற்கு அரசால் அளிக்கப்படும் விருதுகளும், தரச் சான்றிதழ்களும் மக்களின் பண்பாட்டை, கலாச்சாரத்தை, வரலாற்றை மீட்டெடுக்கும் நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவங்களுக்கு மிகச் சொற்ப அளவிலேயே வழங்கப்படுகிறது. அதிலும் முறைகேடுகளும், தரகுகளும் இடைச் செருகலாக உள்ளது என்பது நாட்டார் நிகழ்த்துக் கலைஞர்களை வேதனைக்குள்ளாக்குகிறது.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 'கலைமாமணி' என்ற அரசின் விருதும் குறைவான எண்ணிக்கையிலேயே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மாற்றாக அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மாவட்டம் வாரியாகக் 'கலை இளமணி', 'கலை நன்மணி', 'கலை முதுமணி' என வழங்கிவிட்டு, 'கலைமாமணி' விருதினை எட்டாக் கனியாக்கி விட்டது.

நாட்டுப்புறக் கலை நிகழ்வுகள் என்பது குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே நிகழும். இதனை மட்டுமே தொழிலாகக் கொண்ட கலைஞர்கள் ஏனைய காலங்களுக்கும் சேர்த்து அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் வருவாய் ஈட்டினால் மட்டுமே தங்கள் வாழ்வை நடத்திச்செல்ல இயலும். தலைமுறை தலைமுறையாய் கலைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் பல கலைஞர்களால், வாய்ப்புகளை எளிதாகப் பெற முடியவில்லை. மாற்றுத் தொழிலும் பலருக்கு இல்லை. தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் கைரேகை பார்க்கும் தொழிலையும், பலூன் விற்கும் தொழிலையும் செய்து வருகின்றனர். பாவைக்கூத்து நிகழ்வு என்பது மக்களால் முன்பு போல் விரும்பப்படாத காரணத்தால், அக்கலைஞர்கள் ஆடல், பாடல் நிகழ்ச்சி நடத்தி தங்களது வயிற்றுப் பிழைப்பைப் பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

வருடம் முழுவதும் மரபான கலை நிகழ்ச்சிகளை, நாடு முழுவதிலும் நடைபெறும் அரசு விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் நடத்த வழிவகை செய்வது என்பது கலைஞர் களின் வாழ்வாதாரத்தைப் பெருக வைக்கும். மேலும், பார்வையாளர் களை வரவழைப்பதற்கான கருவியாக மட்டுமல்லாமல் பார்வை யாளர்கள் கண்டுகளிக்கும் வண்ணமாக இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டால் நிகழ்த்துக்கலைகள் தலைமுறை தலைமுறையாய் எடுத்துச் செல்லப்படும்.

பார்வை நூல்கள்

1. சைமன் ஜான், சா., பீட்டர் ஆரோக்கியராஜ், மை., 2007. 'சென்னை சங்கமம் - வினையும் எதிர்வினையும்', சென்னை : நல்லேர் பதிப்பகம்.

2. பெருமாள், அ.கா., ராமச்சந்திரன், நா., 2001. 'தமிழக நாட்டார் நிகழ்த்துக் கலைகள் - களஞ்சியம்', சென்னை: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

3. வேலுச்சாமி, நா., 1986. 'கரக ஆட்டக்கலை', மதுரை: தேன்மொழி நூலகம்.

◆

ஆய்வாளர்,
நாட்டார் வழக்காற்றியல் துறை,
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி),
பாளையங்கோட்டை - 627 002.

84
கும்மி அன்றும் இன்றும்

முனைவர் இரா. புவனா

முன்னுரை

'கும்மியடி பெண்ணே கும்மியடி – கை
வளையல் குலுங்க கும்மியடி"

இசையும், பாட்டும் இரண்டறக் கலந்த வாழ்வைக் கொண்டவர்கள், தமிழர்கள். இவர்கள் எளிமையான செய்தியைக் கூடப் பாட்டாக்கி, இசையோடு வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்கள். கல்வியறிவு இல்லாத பாமரமக்கள் கூட எளிதில் புரிந்துக் கொண்டு ரசிக்கும் கலை கும்மியாகும். மேலும், கைகளையே கருவியாகக் கொண்டு ஆடும் கலை கும்மியாகும். அக்காலத்தில், இக்கலை பொழுதுபோக்கு அம்சமாகவும், கலாச்சார வடிவமாகவும் கருதப்பட்டுள்ளது. இன்றோ, அறிவியல் தொழில்நுட்பத்தால் இக்கலை வளர்க்கப்பட்டு வருகிறது. இக்கட்டுரை மூலம் கும்மியாட்டத்திற்கு அன்றும் இன்றும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், தளர்ச்சிகள் போன்றவை குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் 'கும்மி'

சங்க இலக்கியங்களில் 'கும்மி' எனும் சொல்லாட்சி வழக்கில் இல்லை. ஆனால் 'கொம்மை' எனும் சொல் காணப்படுகிறது. சங்க

அகப்பாடல்களிலும், பழமொழியிலும், சிலப்பதிகாரத்திலும், சீவகசிந்தாமணியிலும், நைடதத்திலும் 'கொம்மை' என்ற சொல் காணப்படுகிறது. இவற்றைக் கொண்டு, தமிழர்களுக்குக் 'கும்மி' புதிதில்லை என்பதை அறிய முடிகிறது.

இக்கும்மி குறித்து, திருச்சியைச் சேர்ந்த திருமதி. பாக்யலெட்சுமி அவர்களிடம் (இல்லத்தரசி) ஆய்வுத் தொடர்பாக கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தார். அவை பின்வருமாறு

- **கும்மி எப்போது அடிக்கப்படுகிறது?**

கும்மிக்கு என்று தனியாக விழா எடுத்து கும்மியடிப்பதில்லை. கிராமங்களில் காவல் தெய்வமாக விளங்கும் கருப்பசாமிக்கும், வைஸ்சூரியம், அம்மை போன்ற நோய்களைத் தடுத்து, மக்களைக் காப்பதற்காக மாரியம்மனுக்கும், காலரா நோயை தடுப்பதற்கு காளியம்மனுக்கும் என்று, அவ்வூர் மக்கள் ஆண்டிற்கு ஒருமுறை 'நம்ம ஊரு திருவிழா" என்று உரிமையோடு அனைவரும் இணைந்து கொண்டாடுகிறார்கள். இந்த திருவிழாக்களில்தான் கும்மியடிக்கப்படுகிறது.

- **எந்தெந்த மாதங்களில் திருவிழா கொண்டாடி, கும்மி அடிப்பீர்கள்?**

ஆடி மாதத்தில் காளியம்மனுக்கும், புரட்டாசி மற்றும் பங்குனி மாதத்தில் மாரியம்மனுக்கும் பொங்கல் வைத்துக் கும்மியடிக்கப்படுகிறது.

இத்திருவிழாக் காலங்களில் எந்தெந்த நாட்களில் கும்மியடிப்பீர்கள்?

திருவிழா ஏழு நாட்கள் நடைபெறும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விழா நடைபெறும்.

இதில், முதல் ஆறு நாட்களும், மாலை ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை பூரண கும்பத்தை நடுவில் வைத்து, பெண்கள் கும்மியடிப்பார்கள். ஏழாவது நாள் முளப்பாரியை வைத்துக் கும்மியடிப்பார்கள்.

- **எவ்வகைப் பாடல்களைப் பாடி கும்மியடிப்பீர்கள்? அதை பாடியும் காட்டுங்க?**

பக்திப் பாடல்களைப் பாடிக் கோயில் முன்பு கும்மியடிப்பார்கள் மஞ்சள் நீராட்டி அன்று அத்தைமகன், மாமன்மகள் போன்ற உறவுப் பிள்ளைகளைக் கேலி செய்தும் கும்மியடிப்பார்கள்.

'தன்னன்னே, தன்னன்னே, தன்னன்னே. . . . .
வீரநடைப்போட்டு வீரிய காளியம்மனுக்கு ஒரு கும்மியடி
மந்தமாரி ஆத்தாளுக்கு - ஒரு கும்மியடி
நம்ம குலங்காக்க வந்த காளியம்மனுக்கு ஒரு கும்மியடி
வெள்ளிக் குஞ்சங் கட்டி வீசி வராலே
வீரிய காளியம்மாவுக்கு - ஒரு கும்மியடி.'

அத்தை மகனை ஏய்த்துப் பாடும் பாட்டு

'நெல்லு விளைஞ்சதைப் பாருங்கடி
நெல்லு சாய்ந்ததைப் பாருங்கடி
நேத்து பிறந்த அத்தை மகனுக்கு
மீசை முளைச்சதைப் பாருங்கடி.'

திருச்சியிலுள்ள திரு. இரா. இராமர் (தொழிலாளி) அவர்களிடம் இக்கும்மி குறித்துக் கேட்டப்பட்ட வினாக்களும், விடைகளும் பின்வருமாறு:

தற்காலத்தில் கும்மியடிப்பதற்கு பெண்கள் ஆர்வமுடன் வருகிறார்களா?

தற்காலத்தில் கும்மியில் பல வேறுபாடுகள் காணப்படுகிறது. அன்று சாதி, இனவேறுபாடு கடந்த கலையாகக் கும்மி இருந்தது. மேலும், திருவிழாவில் பெண்களும் ஆர்வமுடன் கும்மியடிக்க முன்வந்தனர். ஆனால், இன்றோ நாகரிகத்தை நோக்கிப் பெண்கள் நகர்ந்து விட்டார்கள். அதிலும், நகர்ப்புறப் பெண்கள் கும்மியடிப் பதையே நகைச்சுவையாகக் கருதுகிறார்கள் என்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. மேலும், பள்ளி ஆண்டு விழாவிலும், கல்லூரிக் கலை நிகழ்ச்சிகளிலும் இக்கும்மி, அத்திப்பூத்தாற்போல் காணப்படுகிறது.

- **கும்மியாட்டம் இன்று மெருகேற்றப்பட்டு வருகிறதா?**

நாட்டுப்புறக் கலைஞர்கள் சிலர் உருவாகி வருவதால் இக்கலை சற்று வளர்ந்து வருகிறது. மேலும், தமிழ் திரையுலகினர், இக்கும்மியைத் திரைப்படங்கள் வாயிலாக மெருகேற்றி வருகின்றனர்.

உ.தா. 'சுப்ரமணியபுரம்" என்ற திரைப்படத்தில் வரும்

'மண்ணு மணக்கிற மல்லிகைப்பூ
எங்க மனச அள்ளிச் செல்லும்"

என்ற பாடல் காட்சியில் இக்கும்மியாட்டம் வருகிறது.

- **'அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி' கும்மியில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா?**

மாற்றத்தை அதிகமாகவே ஏற்படுத்தியுள்ளது. கைகளை மட்டுமே கருவியாகக் கொண்ட கும்மியில், பாட்டிற்கேற்ற பலவகை வாத்தியங்கள் வாசிக்கப்படுகின்றன. அவற்றை ஒலிப்பதிவுச் செய்து, ஒலிநாடாவாகவும் இன்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குறுகிய வட்டத்திலிருந்த கும்மியாட்டம் ஒலி-ஒளி செய்து, 'குறுந்தகடாக" நகரங்களில் நடைப்போட்டு கொண்டிருக்கிறது.

இத்துடன் கள ஆய்வு முடிவடைகிறது.

இவர்களின் கருத்துகளைக் கொண்டு கும்மியாட்டத்தை ஆய்வு செய்கையில் பல உண்மைகள் தெரியவருகிறது. அக்காலக் கட்டத்தில் திருவிழாக்கள் ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் என்று விரிந்து, மக்கள் திரண்டு கொண்டாடியிருக்கிறார்கள். ஆனால், இன்றோ, இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களோடு விழாக்கள் முடிவடைந்து விடுகின்றன. இதில் மஞ்சள் நீராட்டு, கும்மி போன்றவை தவிர்க்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அன்று, திருவிழாக் காலங்களில் சுற்று வட்டாரத்திலுள்ள சொந்த பந்தங்களை அழைத்து, உறவு முறைகள் பேசி, கும்மியடித்து மகிழ்ந்துள்ளனர். ஆனால், இன்று உறவு முறைகள் சுருங்கி, கலாச்சாரச் சீரழிவு ஏற்பட்டு வருகிறது. ஒரு சமுதாயத்தில் ஒரு கலை அழிக்கப்பட்டு வருகிறது என்றால், அங்கு அழிவது கலை மட்டுமல்ல, கலைஞர்களும் தான் என்பதை உணரவேண்டும்.

அன்று கிராமப்புறங்களில் கும்மியாட்டம் திருவிழாக்காலங் களிலும், சடங்கு வீடுகளிலும் அதிகமாகக் கும்மியடிக்கப் பட்டு வந்திருக்கிறது. இவற்றின் பாடுபொருளாக அன்று சமயக் கருத்துகள், புராணக் கருத்துகள், வரலாற்றுச் செய்திகள், வாழ்வியல் நிகழ்வுகள் போன்றவற்றை மையமாகக் கொண்டு கும்மி அமைந்திருந் தது. ஆனால் இன்றோ, பொழுதுபோக்கையும், நகைச்சுவையையும் பாடுபொருளாக வைத்துப் பாடுகிறார்கள். இதனால், கும்மி தனது சிறப்பிலிருந்து குன்றி வருகிறது. இந்நிலை மாறவேண்டும் எனில் இக்கலைகளை ஊக்குவிக்க, அரசு நிதியுதவி செய்து கலைஞர்களுக்கு விருது வழங்கிப் பாராட்ட முன்வரவேண்டும்.

முடிவுரை

ஒரு கலை வாழ்வதும், வீழ்வதும் அச்சமூக மக்கள் போக்கில் இருக்கிறது. கிராமப்புற மக்களிடம் போற்றப்பட்டு வந்த இக்கலை இன்று திரைப்படம் வாயிலாகவும், குறுந்தகடு (ஆல்பம்)களாகவும் இக்கலை வளர்க்கப்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரிய செயல் தான். இருப்பினும் இவை வியாபார நோக்கில் மட்டுமே எதிர்நோக்குகின்றன. அதாவது, இத்தகு குறுந்தகடு (ஆல்பம்)-களை வாங்கிக்கேட்டு, பார்த்து மகிழ்கின்றவர்கள் எத்தனைபேர் என்று கணக்கிட்டுப் பார்த்தால், மிக மிக குறைவானவர்களே. அதுபோல திரைப்படப் பாடல்களில் இக்கும்மிக்கு வழங்கும் மணித்துளிகள் ஒன்றோ அல்லது ஒன்றரை நிமிடங்கள் மட்டுமே. (இங்கு அதிகப்பட்சமாகவே சொல்லப்பட்டுள்ளது) இந்த சிறு மணித்துளிகளில் வரும் பாடலோடு சேர்ந்து வரும் இந்த கும்மியாட்டம் மக்களிடம் வெற்றி பெறுவதும் உண்டு, சில நேரங்களில் வெற்றி பெறாமல் போவதும் உண்டு.

எனவே, மக்களாகிய நாம் எத்தகு நாகரிகக் காலமானாலும் நமக்குரியப் பண்பாடு, கலாச்சாரத்திலிருந்து மாறுதல் கூடாது. மாற்றம் தேவைதான். ஆனால், மாற்றம் மட்டமானதாக இருக்கக்கூடாது என்பதுதான் இங்கு கூறப்படும் கருத்து. அழிந்து வரும் கலைகளை எந்தவித இலாப நோக்கத்தோடும் எதிர்நோக்காமல் கலைகளைக் காத்து வளர்ப்போம்.

'கரங்கள் கொடுப்போம்
கலைகளைக் காப்போம்'

◆

82/72 திருவள்ளுவர் தெரு,
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி - 620 005.

85
கும்மிப் பாடல்கள் காட்டும் சமுதாயச் சிந்தனைகள்

க. புவனேஸ்வரி

முன்னுரை

நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும். நாட்டுப்புற இயல் என்ற வார்த்தைக்குப் புராணக் கதைகள், கட்டுக் கதைகள் நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள், கலையின் பாற்பட்ட கணக்கற்ற கூறுகள் போன்றவைகளைப் பற்றிய அறிவு என்று பொருள் கொள்ளலாம். இவையெல்லாம் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும் இலக்கியத்தைப்போல நாட்டுப்புற இயலும் கலைவடிவம் கொண்டது. இது இசையோடும், ஆடலோடும், ஓவியத் தோடும், கைத்தொழில் கருவிகளோடும் தொடர்புடையது. ஆனால், வெளிப்படுத்தும் வழிமுறை என்பது வேறுபட்டிருக்கும்.

நாட்டுப்புற இயலானது மனித சமுதாயம் எதை அனுபவித் ததோ, எதைக் கற்றதோ, எதைப் பயிற்சி பெற்றதோ அவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும். நாட்டுப்புற இயலின் வேர்கள், மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பரவியுள்ளன. பண்பாட்டின் உயர்நிலைகளையும் அடைந்துள்ளன. "நாட்டுப்புற இயல் அறிவு" என்பது மனித அறிவின் கிளையாகும். கிராமிய நடனங்கள் புராதன வழக்கான அல்லது இன்னாரால் ஆக்கப்பட்டவை என்று உணர முடியாத வகையில் நமக்குக் கிடைத்துள்ளன.

ஆடற்கலை

"கிராமப்புறங்களில்தான் மனிதனின் முழுவடிவைக் காணமுடியும். புனைவு, பொய்மை, போலி போன்றவற்றைக் கடந்து விட்ட மெய்மைகளின் கலைக்கூடங்கள் நாட்டுப்புறங்களில்தான் உலா வருகின்றன"[1] நாட்டுப்புற ஆட்டங்களுள், 'கும்மி'யும் இத்தகைய மெய்மைகளுள் ஒன்றே.

கிராமிய ஆடல்களை மூன்று வகையாகப் பகுக்கலாம் அவையாவன:

1. பக்தி சார்ந்த ஆடல்கள். சான்று: கரகாட்டம்
2. வீரம் சார்ந்த ஆடல்கள். சான்று: தேவராட்டம்
3. சமூகம் சார்ந்த ஆடல்கள். சான்று: பொழுது போக்கு ஆடல், பாடல் நிகழ்ச்சிகள். இவற்றுள், கும்மியானது பக்தி, வீரம், சமூகம் ஆகிய மூன்றையும் தழுவிச் செல்லுகின்றது.

கும்மிப்பாடல்

"கும்மாளம்" என்ற சொல்லுக்குக் குதித்தாடுதல் என்று பொருள். கும்மாளமிட்டு ஆடுவதனைக் கும்மி என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

"கும்முதல்" என்ற சொல்லுக்குக் "கொட்டுதல்" என்று பொருள். கைகளைக் கொட்டி ஆடுவதைக் கும்மி என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்"[2]

"குழுமி" என்ற சொல்லினின்றும் கும்மி என்ற சொல் உருவாகி யிருக்க வேண்டும்" என்பார் அ.கி. பரந்தாமனார். மேலும், பெண்கள் குழுமி ஆடுவதால் இப்பெயர் பெற்றது.

கும்மியைக் குறிக்கும் பிற சொற்கள்

1. 'கொம்மை' என்று சீவகசிந்தாமணி குறிப்பிடுவது கும்மியையே ஆகும்.
2. அகநானூறு 'கொம்மி' என்று கும்மியைக் குறிப்பிடுகின்றது. ஆந்திரத்திலும், தமிழகத்தில் உள்ள செட்டிநாட்டிலும் இப்பெயரினைக் காணலாம்.
3. "கும்மியடித்தல், கும்மியாடுதல், கும்மி கொட்டுதல் என்று 'கும்மி' என்ற சொல்லை விரித்துரைப்பதை அறிய முடிகிறது."[3]

4. கும்மியை "கொம்மாய்" என்று "சோமலெ" அவர்கள் குறிப்பிடுகின்றார்.
5. 'கொம்மி' என்று குறிப்பிடும் வழக்கத்தினைச் 'சண்முகர் கொம்மி', 'நடேசர்கொம்மி' போன்ற நூற்பெயர்களால் அறியலாம்.

கும்மியின் தோற்றம்

சங்க இலக்கியத்தில் 'கும்மி' என்ற சொல்லாட்சியைக் காண முடியவில்லை. அகநானூறு குறிப்பிடும் "கொப்பி" என்பது "கும்மி" (அல்லது) கும்மியைப் போன்ற ஓர் ஆடலைக் குறிக்கும். எனவே, சங்க காலமே கும்மியின் தோற்றக் காலம் எனலாம். குரவைப் பாடலும் கும்மியை ஒத்தது என்ற கருத்து ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

கும்மி கொட்டும் முறை

1. பெண்கள் வட்டமாக நின்று கும்மி கொட்டுவர். நடுவில் குத்துவிளக்கு, கண்ணன் சிலை, மலர்க்கூடை, பலகாரக் கூடை போன்றவற்றை வைத்துச் சுற்றி நின்று ஆடுவர்."[4]
2. கும்மி கொட்டும் பெண்கள் சாந்துப் பொட்டு, சந்தனப்பூச்சு, கூந்தல் ஒப்பனை ஆகியவற்றைக் கொண்டு விளங்குவர்.
3. அங்கக் கடகம், அரைநூல், மாலை போன்றவற்றையும் அணிந்திருப்பர்.
4. காலால் குதிப்பதும், கையை வீசி அடிப்பதும் உண்டு.
5. பெண்களில் பெரியவர், சிறுமியர் என்ற வேறுபாடுகள் ஏதுமில்லாது இணைந்து நின்று ஆடுவர். பெரும்பாலும், சிறுமியரும் கன்னியரும் கும்மி கொட்டுவதுண்டு.
6. பாடலின் ஓசை, ஒலிகளுக்கு ஏற்ப வளைந்தும் வணங்கியும் குதித்தும் ஆடுவர்.
7. "மேலும் கீழும், இடமும், இடையுமாக எழுப்பும் கையொலிகள் பாத ஒலிகளுடன் இழைந்து வனப்பை மிகைப்படுத்தும் தன்மையுடையன."[5]

கும்மி கொட்டும் பொழுதுகள்

1. சங்கராந்திப் பொங்கலன்று பெண்கள் ஆறு, குளம், ஏரி போன்ற இடங்களுக்குச் சென்று கும்மி கொட்டுவார்கள்.

2. பருவமுற்ற பெண்களுக்குச் சடங்கு நிகழ்த்தும்போதும்
3. "மா விளக்கேற்றி விரதம் இருக்கும் போதும், அம்மன் தெய்வங்களுக்கு முளைப்பாரியிட்டு வழிபாடு செய்யும்போதும்"[6]
4. விநாயகர் சதுர்த்தியின் மறுநாள் பிள்ளையாரை ஆற்றில் கரைத்து விடும்போதும்.
5. நிலாக் காலங்களில் பொழுதுபோகும் போதும் நாட்டுப் புறங்களில் பெண்கள் கும்மி கொட்டி ஆடிப்பாடுகின்றனர்.

கும்மிப் பாடல் பாடும் முறை

1. தன்ன னாதினம் தன்னானே - தனம்

தன்னானே தன தன்னானே தன நானே

என்ற மெட்டினைக் கும்மிப் பாடலில் பயன்படுத்துகின்றனர்.

2. "ஒருவர் முன் பாட்டாக ஓர் அடியைப் பாட ஏனையோர் அதையே திருப்பிப் பின்பாட்டாகப் பாடுவர்.

சான்று: முன்பாட்டு - ஏ ரோட்டோரம் மாமன் மகன்

பின்பாட்டு - ஆமா! மாமன் மகன்"[7]

3. இப்பாடல்கள் துள்ளல் ஓசையில் அமைந்திருக்கும். இப்பாடலுக்குக் கையொலியே இயற்கையான தாளமாக அமைந்திருப்பது இதன் சிறப்பாகும்.

முடிவுரை

சிதறிக் கிடக்கும் உறுப்புகளைத் தொகுத்தமைத்து முழு உருவமாக வடிவப்படுத்துதல்போல் பரவிக் கிடந்த சொற்களைத் தொகுத்துக் கட்டமைப்பான ஒரு கலையுணர்வை உருவாக்குவதில் நாட்டுப்புற இலக்கியங்கள் குறிப்பாக, "கும்மிப் பாடல்கள்" முக்கிய பங்கு வகிக்கின்றன. உணர்வுக் கதவுகளைத் தட்டி எழுப்பி உன்னதமான கலைப்பண்புகளின் பிறப்பிடமாக விளங்குவது, இத்தகைய நாட்டுப்புறக் கும்மிப் பாடல்களாகும். இத்தகைய பாடல்களைக் கேட்கின்ற பொழுது சமுதாயச் சிந்தனைகள் மனித உணர்வுகளின் மனசாட்சியாக மதிக்கப்படுகிற ஒற்றுமை உணர்வின் உறைவிடமாக இருப்பதை அறிய முடிகிறது.

களப்பணிச் சான்று

சின்னப்புத்தூர் சித்திரை மாதத்தில் திருவிழா நிகழ்ச்சியில் ஓர் அங்கமாக இந்தக் கும்மியாட்டம் ஆண்டுதோறும் நடைபெறுவதாகப் பொதுமக்கள் மகிழ்வுடன் தெரிவித்தனர். மேலும், கீழவெளியூர், கள்ளடை, வடசேரி ஆகிய கிராமங்களிலும் கார்த்திகை மாதத் திருவிழாவிலும் இந்த ஆட்டம் கோலாகலமாக நடைபெறும் என்று களப்பணி ஆய்வின்போது ஊரப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

மாதிரிக் கும்மியாட்டத்தைக் கள்ளடை அமுதாவும், கீழவெளியூர் ஜாதியும் ஆடிக்காட்டி மகிழ்வித்தனர்.

சான்றெண் விளக்கம்

1. வள்ளி, வயது 48, பெண், சின்னப்புதூர், 18.02.09, மாலை
2. அமுதா, வயது 35, பெண், கள்ளடை, 18.02.09, மாலை
3. ராமாயி, வயது 60, பெண், கீழவெளியூர், 19.02.09, மாலை
4. மாரியாயி, வயது 65, பெண், வடசேரி, 19.02.09, மாலை
5. தெய்வானை, வயது 60, பெண், வடசேரி, 20.02.09, மாலை
6. ஜோதி, வயது 53, பெண், கீழவெளியூர், 21.02.09, காலை
7. அங்கம்மாள், வயது 45, பெண், சின்னப்புதூர், 21.02.09, காலை.

◆

விரிவுரையாளர்,
தேசியக்கல்லூரி,
திருச்சி.

86

புலம்பெயர்ந்த சேவையாட்டம்

பி.புவனேஷ்வரி

முன்னுரை

நாட்டுப்புறக் கலைகள் கிராம மக்களின் உயிர்த்துடிப்பாக விளங்குகின்றன. மனிதன் வேலைப்பளு காரணமாக தனது களைப்பு நீங்கும் பொருட்டு, இசையையும், ஆடலையும், பாடலையும் கண்டு பிடித்தான். அவற்றின் வழியாகத்தான் நாட்டுப்புறக் கலைகள் வளர்ந்தன. இன்று பல்வேறு தாக்கங்களால் தத்தம் சுய அடையாளங் களை இழந்தும், மங்கியும், ஆதரவற்றும் வருகின்றன என்பதைச் சேவையாட்டத்தின் வழியாக ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆடற்கலை இலக்கணம்

ஆட்டக்கலைகள் பாமர மனிதனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. ஆட்டக்கலைகள் தொன்று தொட்டுத் தமிழகத்தில் நிலவிவருவதை இலக்கியச் சான்றுகள் வழியாக அறிய முடிகின்றது.

"பாடல் ஓர்த்தும் நாடக நயந்தும்" (பட்டின - 55-56)

"நாடக மேத்தும் நாடகக் கணிகை" (சிலம்பு. பதிகம் - 113)

இச்சொற்களைக் கூர்ந்து நோக்கி விளக்கம் அறியும் பொழுது ஆடல் தொடர்பாக இருப்பதாக அறிய முடிகிறதே தவிர, நாடக

வடிவமாகத் தெரியவில்லை. கருவி இசைகளுடன் இணைந்து ஆடும் ஆட்டமே நாட்டியம் எனப்பட்டது. சங்க இலக்கியங்களும் ஆடற்கலையையே குறிப்பிடுகின்றன என்பதைப் பின்வரும் சில (எ.கா) மூலம் உய்த்துணரலாம்.

"ஆடுநர் கழியும் இவ்வுலகத்து" (புறம் - 24)

"ஆடினீர் பாடினீர் செலினே" (புறம் - 24)

என்ற வரிகள் மூலமும்

"ஆட்டமே கூத்தின் அடிவா ரம்மே" (கூத்துநூல் - வழிமுறை - 1)

நாடகத்தின் தோற்றத்திற்கு ஆட்டமே முதற்படியாக அமைந் துள்ளதைக் காணலாம்.

"அவை புகழ் அரங்கின் மேல்
ஆடுவாள் அணிநுதல் ... ஆடற்கலையையே சுட்டுகின்றன."

நடிப்பில் இரண்டு வகையுண்டு. ஒன்று கருத்துகளை நடித்துக் காட்டுதல். மற்றொன்று கதைகளை நடித்துக் காட்டுதல். கருத்துகளை நடித்துக் காட்டுதல் நாட்டியம் என்றும், கதைகளை நடித்துக் காட்டுதல் நாடகம் என்றும் அழைக்கப்பட்டன. இவ்விரண்டையும் பொதுவாகக் கூத்து என்று அழைத்தனர் என்பார் தமிழறிஞர் இளவழகனார். நாட்டியத்தின் ஒரு கூறாகவே சேவையாட்டம் விளங்குகின்றது. ஏனெனில், இங்கு பாவம் மட்டுமே முதன்மையாகக் கருதப்படுகின்றது.

நிரந்தரப் புலப்பெயர்வு

நிரந்தரப் புலப்பெயர்தலில் மக்கள் வாழிடத்தை மாற்றும் போது, ஒரு முறையான சுழற்சியைக் காண இயலாது. அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன் தன் மனைவி சந்திரமதியையும் மகன் லோகிதாசனையும் விலைக்கு விற்கிறான். இவர்கள் நிரந்தரமாகப் பிரிந்த செய்தியை அரிச்சந்திரப் புராணத்தில் காணமுடிகிறது. அடிமைகளை விற்பதும், வாங்குவதுமான சமுதாயத்தில் குடும்ப உறவுகளில் நிரந்தரப் பிரிவினைத் தவிர்க்க இயலாது. இன்று தமிழகத்தில் வசிக்கும் தெலுங்கு, கன்னடம், சௌராஷ்டிர மொழி பேசும் மக்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன் சமூகத்தோடு புலம்பெயர்ந்து வந்தவர்கள். இன்று தமிழகத்தினைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

தெலுங்கு அரசர்கள் தமிழகத்தை ஆட்சி செய்த நிலையில் தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட பல்வேறு இனத் தவர்கள் தமிழகத்தில் குடியேறியுள்ளனர். மேலும், இஸ்லாமியர்களின் அச்சுறுத்தலுக்கும் கொடுமைக்கும் அஞ்சித் தப்பித்து வந்தவர்களாகவும்

ஆட்சியாளர்களாகவும், படைவீரர்களாகவும், தொழில் மற்றும் வாழ்க்கை தேடியும் ஆந்திரப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கில் இவர்கள் தமிழகம் வந்துள்ளனர். அவர்களுள் ஒரு பிரிவினராகிய கம்பளத்து நாயக்கரின் இனம் சார்ந்த ஆடற்கலையாகச் சேவையாட்டம் விளங்குகின்றது. புலப்பெயர்வின் காரணமாகப் பண்பாட்டுக் கூறான சேவையாட்டம் இன்று தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

கம்பளத்து நாயக்கர் தமிழகத்தில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சி, கோயமுத்தூர், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவிலும் தொன்மையான பண்பாட்டு மரபுகளோடும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் 16-ஆம் நூற்றாண்டளவில் தமிழகம் வந்து குடியேறியதாகத் தர்ஸ்டன் குறிப்பிடுகின்றார்.

கம்பளத்தாரின் இனச்சார்பு ஆட்டக்கலைகள்

கம்பளத்து நாயக்கர்கள் தங்களுக்கென்று தனித்த பண்பாட்டைக் கொண்டிருப்பதைப்போல், தங்கள் இனத்திற்கென்று தனித்த ஆட்டக்கலையையும் கொண்டுள்ளனர்.

1. தேவராட்டம்
2. சேவையாட்டம்
3. பலவேட ஆட்டம்

ஆகியவை கம்பளத்தார் இன ஆட்டங்களாக ஆடப்பட்டு வருகின்றன. இம்மூன்றுமே கம்பளத்தார் வாழ்க்கை மற்றும் வழிபாட்டுச் சடங்குச் சூழல்களில் ஆட்டக் கலைகளாக ஆடப்பெற்று வருகின்றன. கம்பளத்தாரால் தேவராட்டம், சேவையாட்டம் ஆடப்பட்டு வந்தாலும் தேவராட்டத்திலிருந்து சேவையாட்டமானது அமைப்பிலும் ஒப்பனை, பாடல்கள், தாள, இசைப்பு முறைகளிலும் மாறுபட்டதாக அமைந்து காணப்படுகின்றது.

சேவையாட்டம்

கம்பளத்து நாயக்கர்களால் ஆடப்பட்டுவரும் இனச்சார்புக் கலை சேவையாட்டம். சேவாட்டலு, சேவையாட்டம், உறுமி கோமாளியாட்டம், தாதராட்டம் என்ற பெயர்களில் இவ்வாட்டம் அழைக்கப் பெறுகின்றது. சேவை + ஆட்டம் சேவையாட்டம் (சேவை

- சேவித்தல், தொண்டு செய்தல், வணங்குதல்) இறைவனைச் சேவிப்பதற்காக வணங்குவதற்காக ஆடப்பெறும் ஆட்டம் என்னும் பொருளில் இவ்வாட்டம் பெயர் பெறுகின்றது. பெருமாள் வழிபாட்டோடு சேவையாட்டம் நெருங்கிய தொடர்புடையதாய் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. சேவையாட்டம் சிவபெருமானுடைய பிரம்மஹத்தி தோசத்தைப் போக்குவதற்காகத் திருமாலால் ஆடப்பட்ட ஆட்டம் என்பதற்கான தொன்மக் கதையொன்று வழக்கில் உள்ளது.

சேவையாட்டக் கதையும் கலைத் தொடர்பும்

குறிப்பிட்ட கலைகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற தொன்மக் கதைகளுக்கும் அக்கலைகளுக்கும் இடையேயான தொடர்பையும் ஆய்வதன் மூலம் கதைக்கும் கலைக்குமான உறவுநிலையை அறிய முடிகின்றது.

'சிவபெருமான் கோபத்தில் பிரம்மனின் தலையைக் கிள்ளிவிட பிரம்ம கபாலம் சிவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள் கின்றது. இதனால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடிக்கின்றது. தோஷத்தால் அவதிப்படுகின்றார். இதைக்கண்ட மகாவிஷ்ணு தொப்பைக் கூத்தாடியாக (கோமாளி) வேடமிட்டுப் பாதி ஆணும் (மேல் பாதி) பாதிப் பெண்ணுமாக (கீழ் பாதி) ஒப்பனை செய்து கொண்டு சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, பிரம்ம கபாலத்தின் முன் வேடிக்கையான ஆட்டங்களை ஆட, சிரிப்பு தாளாமல் பிரம்ம கபாலம் தன் பிடியை விட்டுப் பூமியில் விழுகின்றது. சிவனின் பிரம்மஹத்தி தோஷம் நீங்குகிறது. இவ்வாறு, சிவபெருமானுக்குச் சேவை செய்வதற்காக விஷ்ணுவால் ஆடப்பட்ட வேடிக்கையான ஆட்டமே சேவையாட்டம் என்றும் அவ்வாட்டத்தையே கம்பளத்தார் இன்று ஆடி வருவதாகவும் கூறப்படுகின்றது. (கம்பளத்தார் சிவபுராணத்தில் இக்கதை மாறுபட்டுள்ளது)

கம்பளத்தார் சேவையாட்டம்

தொப்பைக் கூத்தாடி என்ற கோமாளியை மையமாகக் கொண்டு பாடலுக்கேற்பக் கம்பளத்தார் சேவையாட்டம் ஆடுகின்றனர். திருமாலின் அவதாரமாகக் கருதப்படும் கோமாளியே ஆட்டப் பாடல்களைப் பாடிச் சேவையாட்டத்தை வழிநடத்திச் செல்கின்றார். இவர் கோணங்கி, கோமாளி, தாசரி என்றெல்லாம் அழைக்கப்படு கின்றார். கோமாளியின் ஒப்பனையே நகைச்சுவையை வரவழைப்பதாக இருக்கும். "எள்ளல் இளமை பேதமை மடன்... நகை நான்கு என்ப"

(தொல். - 4) நகைச்சுவையாகப் பாடியும் ஆடியும் யாவரையும் மகிழ்விப்பதே சேவையாட்டத்தின் மையப் பொருளாகும். கோமாளி யுடன் ஏழு அல்லது ஒன்பது துணை ஆட்டக்காரர்கள் ஆடுகின்றனர். இவர்களின் ஒப்பனையானது மேல்பாதி உடை ஆணுக்குரியதாகவும், கீழ்ப்பாதி பெண்ணிற்குரியதாகவும் அமைந்துள்ளது. இத்தன்மையானது,

“பெண்மைவிட் டாணவா வுவபே டான்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்” (நன் - 264)

என்று நன்னூலில் சுட்டப்பெறுகிறது.

ஆணுமற்ற, பெண்ணுமற்ற திருநங்கையரைக் குறிக்கும் தன்மையுடைய ஆட்டக்கலையா என்பது ஆய்வுக்குரிய பகுதியாக உள்ளது. கோமாளி வட்டத்தில் நின்று பாடலைப்பாடி ஆட்டத்தைத் தொடங்கிப் பிறகு வட்டத்தின் மையத்தில் நின்று பாடுகின்றார். இதன்வழிப் புராண காலத்தில் தெய்வங்களால் ஆடப்பட்ட கலைகள் இன்றைய நிலையில் அத்தெய்வங்களை வழிபடும் இனமக்களால் ஆடப்பட்டு வருகின்றன. இதனால், அக்கலைகளின் வாழ்வானது நீட்டிக்கின்றது.

ஆடலும் இசையும்

சேவையாட்டம் பாடலை மையமாகக் கொண்டு ஆடப்பெறு வதால் பாடலுக்கேற்ப சேவையாட்டம் இயக்கப்படுகிறது. பாடலுக் கேற்ப ஆட்டக்கலைகள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளையும் இசைத்துக்கொண்டு ஆடுகின்றனர். பெருமாள் வழிபாட்டில் சேவையாட்டம் முக்கிய நிகழ்வாக அமைவதால் பெருமாள் அவதாரப் பாடல்களும் இராமாயணக் கதைப்பாடல்களும் சிறப்பிடம் பெறுகின்றன. எந்தக் கோயிலில் சேவையாட்டம் நிகழ்த்தப்படுகின்றதோ அக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் தெய்வத்தைப் பற்றிய பாடல்களே மிகுதியாக இடம் பெறுகின்றன.

இசை காதிற்கு இனிமையையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிக்கும் தன்மை வாய்ந்தது. இத்தோடு அபிநயம் சேர்ந்து வரக் காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தனிச்சிறப்பு ஆட்டக் கலைக்கு உண்டு.

“தென்றல் வடிவும் சிவனார் வடிவும், மன்றல் வடிவும்
முதன வடிவும் குன்றா... ஆய தாளங்... (பஞ்ச மரபு - 11-114)

நாட்டுப்புற ஆடற் கலைகளில் ஒருசில ஆடல்கள் மட்டுமே குறிப்பிட்ட பண்வகையைச் சார்ந்துள்ளன.

"பண்வழி நடக்கும் பாட்டின் போக்கு
பாட்டின் வழுவா தாளம் பயிலும்"

என்கிறார் இவ்வரிகள் மூலம் அடியார்க்கு நல்லார். அதன்வழி சேவையாட்டத்தில் இசைக்கேற்ப அரங்கநாதர் சேவைப்பாட்டு, சென்றாயப் பெருமாள் சேவைப்பாட்டு, போன்ற தொடக்கத்திலும் முடிவிலும் இந்தப் பாடல்கள்தான் இடம்பெற வேண்டும் என்ற ஒழுங்குமுறை சேவையாட்டத்தில் காணப்படுகின்றது. தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் பாடல்கள் இடம் பெறுகின்றன என்றாலும் மிகுதியான பாடல்கள் தெலுங்கிலேயே பாடப்படுகின்றன. மேலும், கோமாளிப்பாட்டு, ஜமீன்தார் பாட்டு என்ற பெயரில் வேறுசில பாடல்களும் ஆட்டத்தில் இடம் பெறுகின்றன. இவ்வாட்டம் அனைவராலும் ஆடப்படும் ஆட்டமாக அல்லாமல் கம்பளத்தாரில் சில பிரிவினரே இவ்வாட்டத்தை இன்றுவரை ஆடி வருகின்றனர்.

இன்றைய நிலை

வழிபாட்டு நிகழ்வுகளோடும், பண்பாட்டுச் சூழலோடும் நெருங்கிய தொடர்புடைய சேவையாட்டம் இன்று அரசு விழாக்கள், சாதி மாநாடுகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் ஊடகங்களில் பங்குபெறத் தொடங்கியுள்ளது. இந்த வளர்ச்சியானது மகிழ்ச்சிக்குரியதாகும். தொழில்முறைக் கலைஞர்களால் இன்று ஆட்டக்கலைகள் பொது நிகழ்ச்சிகளில் பங்குபெறுகின்ற பலர் முறையான பயிற்சி இல்லாமலே ஆடற்கலைகளில் ஈடுபடுகின்றனர். இத்தன்மையானது வளர்ச்சிக்கு வித்திடுவதற்குப் பதிலாக அவற்றின் அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லாமல் இருக்குமாயின் நலம் பயக்கும் என்றால் மிகையாகாது. வைணவ தெய்வக் கோவில் விழாக் களில் பிரிக்க முடியாத ஒரு சடங்காகத் தவறாமல் சேவையாட்டம் இடம் பெறுவது அதன் ஆன்மாவின் நீண்டகால இருப்பை உறுதி செய்வதாக உள்ளது. மேலும் "நாட்டுப்புறக் கலைகளை வளர்த்தெடுப் பது மக்களின் கடமையாகவும், அரசின் கடமையாகவும் உள்ளது எனில் மிகையாகா.

இறுதியாக

1. பழங்காலந்தொட்டே தமிழகத்தில் ஆடற்கலை இருந்து வருவதை இலக்கியத்தின் வழியாக அறியமுடிகிறது.

2. தெலுங்கின மக்களாகிய கம்பளத்தாரின் வருகைக்குப் பிறகே தமிழகத்தில் சேவையாட்டம் வளரத் தொடங்குகிறது.

3. இனச்சார்பு ஆட்டக் கலையாகச் சேவையாட்டம் உள்ளது.
4. சிவனின் பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கத் திருமாலால் ஆடப் பட்ட ஆட்டம் சேவையாட்டம் என்பதை உணரமுடிகிறது.
5. நகைச்சுவையை மையமாகக்கொண்டு, இசையோடு பாடி ஆடக்கூடிய ஆடற்கலையாக உள்ளது.
6. சேவையாட்டத்தின் இன்றைய போக்கினையும், வளர்த்தெடுக்க வேண்டிய நிலையையும் உணரமுடிகின்றது.

பார்வை நூல்கள்

1. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - நாடகத் தமிழ்
2. சேவையாட்டம் - ஓ.முத்தையா
3. புலம்பெயர்தல் - ப. சிங்காரவேலன் (புத்திலக்கியம் பிற - ஆ.தொகுதி)
4. தொல்காப்பியம் - ச.வே.சுப்பிரமணியம்
5. நன்னூல்

◆

நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்,
காந்தி கிராம கிராமியப்
பல்கலைக்கழகம்,
காந்தி கிராமம்,
திண்டுக்கல் - 624 302.

87

திரைப்படப் பாடல்களில் கரகாட்டம்

கி. புஷ்பம்

முன்னுரை

நாட்டுப்புறக் கலைகளில் பல உண்டு. நிகழ்த்துக் கலைகள், இசைநிகழ்ச்சிகள், ஆட்டங்கள், கருவி இசை ஆட்டங்கள், பாட்டு ஆட்டங்கள், அரங்கக் கலைகள், கதைகூறல் என்பன. இந்த ஆட்டங்களுக்குக் கரகாட்டம், காவடியாட்டம், பாட்டாட்டம், தப்பாட்டம் எனப் பல முகங்கள் உள்ளன. அவற்றில் கரகாட்டம் பற்றியே இந்தக் கட்டுரை ஆய்வு செய்ய முனைகிறது.

கரகாட்டம்

மண்ணாலோ, செம்பு பித்தளை முதலான உலோகத்தாலோ சிறுபானை வடிவில் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும். சூழலுக்கேற்ப ஒப்பனை செய்த கரகத்தினைத் தலையில் வைத்துக் கொண்டு கீழே விழுந்து விடாமல், கருவி இசைக்கேற்ப ஆடப்படும் ஆட்டத்தினைக் கரகாட்டம் என்று சுட்டுகின்றனர். கரகாட்டம் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற இடங்களில் கும்பாட்டம் என்றும், குட்டத்து ஆட்டம் எனறும் பல சொற்களால் சுட்டப்படுகிறது.

ஆட்டங்கள் நிகழும் இடங்கள்

இத்தகைய ஆட்டங்கள் ,

1. அம்மன் கோயில் வழிபாட்டுச் சடங்கின் ஒரு அங்கமாகத் திகழும் கரகாட்டம் சக்திக்கரகம் அல்லது அம்மன் கரகம் எனப்படும்.

2. கோயில் திருவிழா ஊர்வலங்கள், அரசியல் ஊர்வலங்கள், வாழ்வியல் சடங்குகள் தொடர்பான ஊர்வலங்கள், வரவேற்பு நிகழ்ச்சிகள் முதலான நிகழ்ச்சிகளில் பொழுதுபோக்குக்காக ஆடப்படும் கரகாட்டம் ஆட்டக்கரகம் எனப்படும்.

இத்தகைய கரக ஆட்டங்கள் எவ்வாறு திரைப்படப் பாடல்களில் இடம்பிடித்துள்ளன என்றும், அவற்றின் வளர்ச்சிநிலை மற்றும் இன்றைய போக்கு குறித்தும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

நையாண்டி மேளமும் கரகாட்டமும்

கரகாட்டத்தில் பாடல்கள் எதுவும் பாடப்படுவதில்லை. நையாண்டி மேளங்களுக்கேற்ப ஆடப்படுகிறது. திரைப்படங்களில் பாடல் பாடிக்கொண்டே கரகாட்டம் ஆடப்படுவதாகக் காட்டப்படு கிறது. ஆட்டத்தின்போது வசனங்களும் இடம்பெறு வதில்லை. கருவி இசைகளுக்கேற்பக் கரகாட்டம் ஆடப்படும். நாதசுரத்தில் பாடல்கள் வாசிக்கப்படுவதுண்டு.

கரகாட்டத்தில் "நையாண்டி மேளம்" என்று குறிப்பிடப்படும் இசைக்குழுவே தற்போது பயன்படுத்தப்படுகிறது. இதில் நாதசுரம்-2, தவுல்-2, பம்பை-2, தமுக்கு-1 ஆகிய இசைக்கருவிகளுடன் ஏழுபேர் இடம் பெற்றிருப்பர்.

நையாண்டி என்னும் சொல் கேலி, கிண்டல், என்னும் பொருளில் மக்களிடம் வழக்கத்தில் உள்ளது. பக்கவாத்திய இசையில் நாதசுரக் கலைஞர்கள் மற்ற தாள வாத்தியக் கலைஞர்களுடன் கருவியின் வாசிப்பு, அசைவு, உடலசைவு, என்னும் இவற்றின் வாயிலாக ஒருவரையொருவர் கேலியும், கிண்டலும் செய்து நையாண்டி செய்து கொண்டு ஆட்டக் கலைஞர்களுடன் தாமும் சேர்ந்து ஆடுவதால் இப்பக்க இசை நையாண்டி மேளம் என அழைக்கப்படுகிறது. (கு.முருகேசன், 1989:10)

திரைப்படப் பாடல்களிலோ கரகாட்டம் என்பது இசையுடன் கூடிய பாடல் மூலம் ஆட்டமாக வெளிப்படுகிறது. அதுமட்டு

மல்லாமல் கரகாட்டத்தின்போது இசைக்கப்படும் பாடல்கள் அங்கு நிலவும் சூழ்நிலைக்கேற்ப, நாட்டுப்புறப் பாடல்களும், காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாகப் பாடல்களும் திரை இசையில் அமைந்துள்ளன.

திரைப்படப் பாடல்களில் கரகாட்டம்

திரைப்படப் பாடல்களில் கரகாட்டம் பல்வேறு பரிமாணங்களில் இடம் பெறுகின்றது.

அம்மன் வழிபாட்டில் திரைப்படப் பாடலில் கரகாட்டம்

கண்ணாத்தாள் என்னும் திரைப்படப் பாடலில் கரகாட்டம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

"காமாட்சி அம்மனுக்கு கரகம் எடுப்பேன் – அந்த
கருமாரி அம்மனுக்கும் கரகம் எடுப்பேன்."

என்று பாடி தலையில் கரகம் வைத்துக் கொண்டு ஆடுவதையும், அம்மனை வழிபடும் முறையையும் கரகத்தின் மூலம் பாடியுள்ளனர். மேலும், பாளையத்து அம்மன் என்றும் திரைப்படப் பாடலில்,

"ஆடிவந்தேன் ஆடிவந்தேன்
அஞ்சு கொடைக் காரி"

என்று அம்மனின் சிறப்பைக் கரகாட்டத்தின் மூலம் விளக்கியுள்ளனர்.

கரகாட்டக்காரன் என்னும் திரைப்படம் கரகாட்டத்தை மையக் கருத்தாகக் கொண்டு அமைந்துள்ளதைப் பாடலின் வரிகள்,

"முந்தி முந்தி விநாயகரே
முப்பத்து முப்பது கோடி தேவர்களே
வானத்தில் சுத்துதடி ஒன்பதன்னா கிரகம்
தலையில் எடுத்து வந்தேன் மாரியம்மன் கரகம்"

என்று தெய்வத்தை முதலில் வணங்கி ஆட்டத்தை தொடங்குவது கரகத்தின் சிறப்பை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

மழைக்காகக் கிராம மக்கள் விநாயகருக்குக் கும்மியடித்துப் பாடுவதான நாட்டுப்புறப் பாடலானது படத்தில் புதிய பரிமாணத் துடன் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். பாட்டு, பார்ப்பவர் மனதில் புத்துணர்வு ஏற்படும் வகையில் அமைந்து கரகாட்டத்திற்கு இப்படம்மூலம் சிறப்பைச் சேர்த்துள்ளது. இவ்வோறே கரகாட்டக்காரர்கள் விநாயகரை வணங்கியே தொடங்குகின்றனர்.

சுப்பிரமணிய புரம் திரைப்படத்தில் வரும்

"மண்ணு மணக்கிற மல்லிகைப் பூ
இந்த மனச எடுத்துச் செல்லும்
வந்து நின்னு இரசிக்கிற ஊரு சனம்
இந்த தேர இழுத்துச் செல்லும்''

என்ற பாடல்கள் கரகாட்டத்தினை மையமாகக் கொண்டு அமைந்தது மட்டுமல்லாமல் இன்றைய இளைஞர்கள் மனதிலும் நீங்கா இடம்பெற்று ஆட்டத்தினை ஏற்படுத்துகின்றது. கரகாட்டத்தில் பெண்கள் பங்குகொண்ட மதுரையின் பெருமையினை இப்பாடல் விளக்குகிறது. இதுபோன்று பல திரைப்படப் பாடல்கள் கரகாட்டத்தின் வளர்ச்சியையும், சிறப்பையும் ஊக்குவிப்பதாக அமையப் பெறுவதைக் காணலாம்.

காதல் உணர்வு வெளிப்படுத்துவதில் கரகாட்டம்

'நாட்டுப்புறப் பாட்டு' என்னும் திரைப்படத்தில்

"ஒத்த ரூபாயும் தாரேன்
ஒரு ஒனுப்புத் தட்டும் தாரேன்''

என்ற வரிகள் ஒருவனது காதல் உணர்வை கரகாட்டத்துடன் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இது போன்றே கரகாட்டக்காரன் திரைப்படப்பாடல்,

"சாமத்திலே வாரேன்
சாமந்திப் பூ தாரேன்''

வரிகள் காரகாட்டத்தில் காதல் உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இது போன்று பல திரைப்படப் பாடல்களில் கரகாட்டம் இடம்பெற்று அதன் வளர்ச்சியை அதிகரிக்கும் விதமாக அனைத்து மக்களிடமும் சென்று சேரும் வகையில் ஒப்பனை செய்து கரகாட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், திரைப்படப் பாடலில் கரகாட்ட வித்தைகளும் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 'நாட்டுப்புறப்பாட்டு' என்னும் படத்தில் கரகாட்டப் பெண் கரகத்தை வைத்துக்கொண்டே தன் கண்ணினால் ரூபாய் நோட்டு எடுப்பதையும் கைக்குட்டையை வாயால் எடுப்பதையும் கரகம் கீழே விழாமல் நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

அழகி, என் ஆசை இராசவே, பருத்திவீரன், நாட்டுப்புற நாயகன், போன்ற திரைப்படப் பாடல்களிலும் சூழ்நிலைக்கேற்பக்

கரகாட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியும்போது கரகாட்டத்தின் வளர்ச்சியையும் அறிய முடிகிறது. ‘நாட்டுப்புற நாயகன்’ என்னும் படத்தில் மையக் கருத்தாகக் கரகாட்டத்தையும், அதை அயல்நாட்டுப் பெண் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவதையும், அவள் போற்றி ஆடும் விதமும் கரகாட்டத்தின் வளர்ச்சியை உணரச்செய்கிறது.

முடிவுரை

ஆந்திரம், கர்நாடகம் போன்ற தென்மாநிலங்கள் பலவற்றிலும் காணப்படும் கரகாட்டக் கலை தமிழகத்தின் செல்வாக்கு மிக்க கலையாகத் திகழ்கிறது. கரகாட்டம் இலக்கியங்களிலும் இருந்துள்ளது. இவ்வாறு, இடம்பெற்ற கரகாட்டம் திரைப்படப் பாடல்களின் மூலம் நடைபெற்று வளர்ச்சி நிலையைக் குறித்துச் செயல்பட்டுள்ளன. முழுமையாக இரவு முழுவதும் நடக்கும் ஆட்டம் திரைப்படப் பாடலில் ஐந்து நிமடங்களே நிகழ்கின்றது. அதனால், கரகாட்டத்தின் ஆட்ட நேரம் குறுகிய நேரத்தையும் அவற்றின் வளர்ச்சி அருகி வருவதையும் உணர முடிகின்றது. இயன்ற அளவு கரகாட்டக் கலையைப் போற்றி வளர்க்க இக்கால இளைஞர்களும், அரசாங்கமும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, பல திரைப்படப் பாடல்களில் இடம்பெற்ற கரகாட்டத்தின் நிலை அருகி வருவதைக் காணலாம். அதுமட்டு மல்லாமல், திரைப்படப் பாடலுக்கே நிகழ்வுகள் நிகழ்த்துவதையும் காணமுடிகின்றது.

கிராமங்களிலும் திருவிழா நேரங்களில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளே நடத்தப்படுகின்றது. அதனால், கரகாட்டக் கலை அருகிவருகின்றது. அதை வளர்க்க வேண்டியது நமது கடமை.

◆

முதுகலை சமூகவியல் துறை,
காந்தி கிராம கிராமியப்
பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

88
கும்மி

அ. பூங்கொடி

கல்லையும் இரும்பையும் ஆயுதங்களாகக் கண்டறிந்து வேட்டைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மனிதன், இருளுக்கும் தன்னை மீறிய பிரபஞ்சத்தின் ஆளுமைக்கும் அஞ்சி, அவ்வச்சத்தில் இருந்து விடுபட இறைக்கோட்பாட்டைக் கண்டு அதற்கான வழிபாட்டுச் சடங்கு முறைகளையும் அமைத்துக் கொண்டான். இச்சடங்குகளில் ஆட்டம், பாட்டம் என்பன முதன்மை வகித்தன. தமிழகத்தைப் பொருத்தவரை அதன் காலத் தொன்மைக்குச் சங்க இலக்கியமே ஆதாரமாக விளங்குகிறது. இறைவனுக்காக ஆடுகின்ற ஆட்டமாக, வெறியாட்டு என்ற விழா நிகழ்வு அமைந்திருப்பதைக் காண முடிகிறது. முருக வழிபாடு கூறப்படும் இடங்களெல்லாம் இவ்வெறியாட்டு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில்,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்''

என்று குறிப்பிட்டுள்ளார். "தமிழகத்தின் தொல் பழங்குடியின ராகக் கருதப்படும் தோடர்கள், குறும்பர்கள், கோத்தர்கள், இருளர்கள், நரிக்குறவர்கள் போன்ற மலைவாழ் மக்களின் விழாக்களிலும் சடங்குகளிலும் ஒய்வான நேரங்களில் குறிப்பாக நிலாக் காலத்தில் ஆண், பெண் இருவரும் கலந்து கைகளைக் கோர்த்து, வட்டவடிவ அமைப்பில் நின்று முன்னும், பின்னும் அசைந்து, பின்னர் ஒரு அடி

நகர்ந்து இதுபோல் தொடர்ந்து ஆடிவரும் பழக்கம் இருப்பதாக பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார்.''

இதுவே பிற்காலத்தில் பல நிலைகளில், பல முறைகளில், பல வடிவங்களில் கலை உணர்வோடு பல்வேறு ஆட்டங்களாக மாறின. அவ்வாறு மாறியவற்றில் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டுப்புற இயல் அறிஞர்கள் இவ்வகையான ஆட்டப் பாட்டங்களைக் கிராமிய நடனம் எனக் கூறிச்செல்வர். வேங்கடம் முதல் குமரிவரை விரிந்து கிடக்கும் தமிழகத்தில், எல்லைத் தெய்வங்களுக்கும் காவல் தெய்வங்களுக்கும் பெருந்தெய்வ வழிபாடுகளுக்கும் மக்கள் தாங்கள் அறிந்த இக்கிராமிய நடனங்களையே பெரிதும் பயன்படுத்துகின்றனர் என்பது வெள்ளிடைமலை.

மனிதனின் பொய்மை களைந்து மெய்மை காணும் நாட்டுப் புறங்களில் உலாவரும் ஆட்டக்கலைகளுள் ஒன்று கும்மி. அக்கும்மியின் வகைகளுள் ஒன்றான ஒயிற்கும்மியைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

கும்மி

தொடக்கத்தில் முருகனை வழிபடுங்கால் நோயுற்ற பெண்ணின் நோய்க்குறி நீங்கப் பூசாரியானவன் ஆடும் ஆட்டமே வெறியாட்டு என்ற பெயரில் அமைந்தது. பிற்காலத்தில் சமய வளர்ச்சிகளுக்குப் பிறகு 'கலந்தாடுதல்' என்ற கும்மிமுறை எல்லாத் தெய்வங்களுக்கும் பரிணமித்தது. மாரிக்கு முளைப்பாரி இடுகையில் கும்மியாகவும், கண்ணன் பிறந்த தினத்தை கோகுலாஷ்டமி எனவும் கூறுவர். அன்றைய நாளில் பெண்கள் கண்ணனைக் குறித்து ஆடும் ஆட்டம் கோலாட்ட மாகவும், சிறு தெய்வ வழிபாடுகளில் பெரும்பாலும் சடங்குச் சார்ந்த கும்மியாட்டத்தையும் ஆடுவர்.

"சங்ககாலத்தில் குரவை என்ற சொல் கும்மியைக் குறிக்கின்றது. இக்கும்மி என்ற சொல்லிற்குக் கும்மாளமிடல், கும்முதல், குமுமி, கொம்மை, கொப்பி, கும்மியடித்தல், கும்மியாடுதல், கொம்மாய், கொம்மி (சண்முகர் கொம்மி, நடேசர் கொம்மி) நன்னன்னா கொட்டுதல், தட்டியாய கொட்டுதல், கொண்டான் கொட்டுதல்'' என்று தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் கும்மி என்ற சொல்லிற்கு கூறும் பிற சொற்களை இயம்பியுள்ளார் டாக்டர் சு. சண்முகசுந்தரம்.

இக்கும்மி வட்டச் சுற்றில் ஆடுவதால் உடல் வளைந்தும், வளைக்கரங்கள் தாம் ஒலிக்கவும் பயின்று வரும் மெல்லிய நடையோடு இவ்வாட்டம் அமைவது பார்ப்பவர்க்கு மற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக அமைகிறது. குழுநடனமான இக்கும்மி ஆட்டத்தில் ஒருவர் பாட மற்றவர் எல்லோரும் அதைப் பின்வாங்கிப் பாடி அப்படிப் பாடும்போதே நடனத்தோடு அசைந்து செல்வது அந்நடனத்தின் இலக்கணமாக அமைகிறது. சிறுவயது முதல் பெரியவர்வரை பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டமாகும். ஆனால், ஒயில் கும்மி ஆண்கள் மட்டும் ஆடும் ஆட்டமாக விளங்குகிறது. கும்மியை இயற்கும்மி, ஒயிற்கும்மி எனச் சிறப்பாக வகைப்படுத்துவர்.

ஒயில் கும்மி

“ஒயில் என்றால் அழகு என்று பொருள். ஆண்கள் பல சந்தங்களுடன் மிக அழகாக ஆடிக்கொண்டே கும்மியடிப்பதனை ஒயில் கும்மி என்பர். இதனை ஒயிலாட்டம் என்றும் சுட்டுவர். ஒயில் கும்மியானது ஒருவகைக் கூத்து என்றும், மேடையின்றித் திரையின்றி வெறுந்தரையில் நடைபெறும் ‘ஓர் இசை நாடகம்’ என்றும் குறிப்பிடுவர். இதனை இயல் இசை நாடகம் கலந்த ‘முத்தமிழ்க் கூத்து’ என்பது முற்றிலும் பொருந்தும்” என்று ஒயில் கும்மிக்கு விளக்கம் தருகிறார் டாக்டர் சு. சண்முகசுந்தரம். ஆக, ஒயில் கும்மி ஆடல், பாடல், உரையாடல் என்ற மூன்று வகையில் அமையும் என்பதைக் காணமுடிகிறது.

ஒயிற்கும்மியில் 10 பேர் முதல் 12 பேர் வரை இடம் பெறலாம். அவர்கள் வட்ட வடிவமாகவும் இரு வரிசையாகவும் நிற்பதுண்டு. இதில் இரண்டு வரிசையில், ஒரு வரிசை சார்ந்தவரை ஏறுவரிசைக்காரரர் என்றும், பிறிதொரு சாராரை வாங்கு வரிசைக்காரரர் என்றும் கிழக்கு இராமநாதபுர மாவட்டத்தில் அழைக்கிறார்கள். இந்த இருவரிசைக் குரிய பெயர்கள் அந்தந்த மாவட்டத்தில் நடைமுறைச் சொல்லுகியை அமையும்.

ஒயிற்கும்மிக்குப் பயிற்சி தருபவரை ஆசான், அண்ணாவி வாத்தியார், தலைக்கட்டு, குரு போன்ற சொற்களால் மரியாதை நிமித்தமாக அழைப்பர். ஒயில் பயிற்சியைத் தரும் ஆசிரியர் மையத்தில் நிற்பார்.

ஒயில் கும்மி ஆடுபவர், கால்சட்டை, அணிவதும், வேட்டியையே நன்றாக இறுக்கிக் கோவணமாகக் கட்டுவதும் உண்டு.

பளிச்சென்ற வண்ணத்தில் கையில் பட்டுத்துணி அல்லது வெல்வெட் துணிகளைப் பிடித்திருப்பர். அவரவர் விருப்பப்படி நிறங்களைத் தேர்வுசெய்து கொள்வர். பெரும்பாலும் வெள்ளை, சிவப்பு, நீலம், மஞ்சள் போன்ற நிறங்களே பயன்படுத்துவர். அமங்கலம் கருதி கருப்பு அணிவது இல்லை. பரிவட்டம் கட்டுவது போன்ற குஞ்சம் அமைந்தபடியான தலைப்பாகையை (உருமாலையை) அணிந்திருப்பர். இந்தத் தலைப்பாகை ஜரிகை நிறைந்ததாக சூரிய, சந்திர ஒளிகளில் பளபளப்பு மிக்கதாக இருக்கும். மேலும், கழுத்துப்பட்டை, கால் சதங்கையும் அணிந்திருப்பர்.

இவ்வாறு, ஒப்பனை செய்வதின் நோக்கம் ஆட்டத்தின் போக்கை நிர்வகிப்பதாக இருக்கும். அதாவது நிறுத்துமிடம், ஆட்டத்தை வேகப்படுத்தும் இடம், ஆட்டத்தை மிதப்படுத்தும்இடம், ஆட்டத்தை ஊஞ்சல்போல முன்னும் பின்னுமாகச் செலுத்துமிடம் என்ற அமைப்பில் ஆடும்போதுதான் அணிந்திருந்த ஆடைகளின் அழகானது ஒயிற்கும்மியை மேன்மேலும் சிறப்படையச் செய்யும்.

இவ்வாட்டத்தை முறையாகப் பின்பற்ற ஒரு பழம்பாடலை ஜெ. முத்துச்செல்வன் குறிப்பிடுகிறார்.

"ஆளோடு ஆள் உரசாமல் - உங்கள்
ஆளிலே ஒரு முழம் தள்ளி - நின்று
காலோடு காலு உரசாமல் - உங்கள்
கைப்பிடித் துணி தவறாமல்
மேலோடு மேலு உரசாமல் - உங்கள்
வேருவை தண்ணி சிதறாமல் ஆடவேண்டும்''

ஒயில்கும்மி அவ்வூர் நலனுக்காக உயிர்நீத்த செம்மல் பற்றிய கதைகள், ஊர்த் தெய்வங்கள் பற்றிய கதைகள் போன்றன இவ்வாட்டத்திற்கு ஏற்ற கதைத் தளங்களாக அமைகின்றன. டாக்டர் சு. சண்முகசுந்தரம் சுட்டும்போது "ஒயில் கும்மியில் வேட்டைக்கும்மி, பனைமரக் கும்மி, இராமாயணக் கும்மி போன்ற பல வகைகள் உள்ளன" என்றும், வேட்டைக் கும்மியானது, வேட்டைத் தொழிலை முன் நிருத்திப் பரிக்குக் (குதிரை) கண்ணி வைத்தது, நரி வேட்டையாடியது போன்ற குறிப்புகளை உணர்த்துகின்றது. பனைமரக் கும்மியானது, பனைமரத்தின் பயன், சில இடங்களில் தெய்வமாக வணங்கப்படுவதற்கான காரணம் போன்றவற்றை இணைத்தும் ஒயில் கும்மியாக ஆடப்படுகின்றது.

பெரும்பாலும் தமிழகத்தில் பொதுவிழாக்களிலும், இறை சார்ந்த திருவிழாக்களிலும், தென்னாட்டில் கொடை என்று சொல்லப்படுகின்ற ஊர்த் தெய்வ விழாக்களிலும், பொங்கல் விழாக்களிலும் இந்த ஒயில்கும்மி ஊர்ப் பெரியோர்களால் மக்களுக்காக நிகழ்த்தப்படும்.

ஒயில் கும்மியை மேன்மேலும் சிறப்புச்செய்ய இசைக்கருவி களையும் சேர்க்கின்றனர். தோலால் கட்டப்படும் குடம், தவில், சிங்கி, டோலக் போன்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஒயில் கும்மி - ஆட்ட அடவு

ஒயில் கும்மியில் அடவு என்பது ஆடும் அசைவு அல்லது முத்திரையைக் குறிக்கும். அடவுகள் வேகத்தைப் பொறுத்து தக்கு, காலம் என இரு பிரிவுகள் அமையும் எனவும், ஆடுவது தக்கு எனவும், வேகமாக ஆடுவது காலம் எனவும் இவ்வாட்டக்காரர்கள் அழைப்பர். இக்காலத்தை ஒன்னாம் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் எனப் பிரித்து அடவுகள் கையாளப்படுகின்றன என்று ஜெ. முத்துச்செல்வன் அவர்கள் பிரித்துக் காட்டும் விதம் பின்வருமாறு:

அ. நேர்வரிசையில் நின்று ஆடுதல் : 1. சாதாரண ஒயில், 2. சட்டம் போடும் அடவு, 3. குத்தாட்டை திரும்பல் அடவு, 4. சலசலப்பு அடவு ஆ. இருவரிசையில் நின்று ஆடுதல்: 5. தன்னாள் சலசலப்பு அடவு, 6. சிங்கிட்டு சிக்கா அடவு, 7. கை வைக்கட்டும் அடவு, 8. ஓடம் அடவு, இ. வட்டத்தில் நின்று ஆடுதல்: 9. கும்பிட்ட அடவு, 10. கைவெட்டும் அடவு, 11. வட்ட குத்தாட்டை திரும்பல் அடவு, 12. வட்ட சலசலப்பு அடவு, எடுத்துக்காட்டிற்காக ஒரே ஒரு அடவு பற்றி விளக்கப்படுகிறது. ஒயில் அடவு இருவகையில் அமையும். ஒன்று கால் அசைவிற்கான அடவு, இரண்டு கை அசைவிற்கான அடவு ஆகும். இவ்விரண்டையும் அனுசரித்தே உடம்பின் பிற பாகங்கள் அசைகின்றன. அவ்வாறாக அமையும் நுணுக்கமான அசைவானது ஒரு கலைவடிவம் பெற்று ஒயில்கும்மியாகக் காண்போரைக் கவர்கிறது.

ஆசான் சாதாரண ஒயிலடவுக்கான கால் அசைவு முறை வருமாறு: ஒன்று என்று சொல்லும்போது வலது காலை நேராக முன்வைத்து இடதுகாலைத் தூக்க வேண்டும். இரண்டு என்று சொல்லும்போது இடதுகாலை அதே இடத்தில் ஊன்றி வலதுகாலைத் தூக்க வேண்டும். மூன்று என்று சொல்லும்போது, வலது காலைப் பின்னால் கொண்டுவந்து குதிக்கால் கீழே படாமல் வைத்து இடதுகாலைத் தூக்க வேண்டும். அடுத்து நான்கு என்று சொல்லும்

போது, இடதுகாலை அதே இடத்தில் வைத்து வலதுகாலைத் தூக்க வேண்டும் என்று கால் அடவுக்கு கூறியதுபோல ஜெ. முத்துச்செல்வன் அவர்கள் தன் நூலில் விளக்கம் தந்துள்ளார்.

இக்கிராமிய ஆட்டக்கலை தற்காலத்தில் நாகரிகம் கருதி அருகியே காணப்பட்டாலும் சில கிராமங்களில் தெய்வ விழாக்களிலும், பொங்கல் போன்ற விழாக்களிலும் தொழில் சார்ந்த கலைஞர்களைக் கொண்டு இக்கலையை வளர்க்கின்றனர். மேலும், அரசியல் மற்றும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் அரவணைப்பில் ஆட்டக் கலைகள் வளர்ந்து வருகின்றன. இயற்கையாக அமைந்த ஒயில் கும்மி போன்ற கலைகளில் செயற்கை ஊடுருவிச் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அவ்வாறு ஆட்டக்கலைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஒயில் கும்மி போன்ற கலைகள் இன்னும் நடைபெறு கின்றன என்பது கள ஆய்வு மூலம் உறுதிசெய்யப்படுகின்றது.

பயன்பட்ட நூல்கள்

1. தொல்காப்பியம் தெளிவுரை, முனைவர் ச.வே. சுப்பிரமணியன்.
2. மக்களும் மரபுகளும், நா. வானமாமலை
3. தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் - டாக்டர் சு. சண்முகசுந்தரம்
4. ஆத்தூர் வட்டாரக் கும்மிப் பாடல்கள், ஜெ. முத்துச்செல்வன்.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
மீனாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சென்னை - 24.

89
கூத்துப்பாடல்கள்

பெ. பெரியசாமி

நாட்டுப்புறக் கலைகளில் குறிப்பிடத்தக்க பொழுதுபோக்கு பொழுதுபோக்கு நிகழ்வாகச் சிறந்து விளங்குவது தெருக்கூத்தாகும். கிருட்டிணகிரி மாவட்டத்தில் பல கலைகள் போற்றப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இன்றும் சிறப்பாகப் போற்றப்பட்டு வரும் கலை தெருக்கூத்துக் கலையாகும். இரவு முழுவதும் தெருக்கூத்தைக் கண்விழித்துப் பார்த்து மகிழ்ந்து வீடு திரும்புவர். மரக்கட்டை அணிகலன்களைக் கட்டிக்கொண்டு திறந்தவெளியில் ஆடப்படுவதே தெருக்கூத்தாகும்.

தெருக்கூத்தென்பது "நாடோடிக் கூத்துவகையைச் சார்ந்ததாகும். நாடகமேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்தவெளிகளிலும் நடைபெறும். இக்கூத்துப் பெரும்பாலும் மக்களுக்குத் தெரிந்த காப்பிய, இதிகாச அல்லது புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டு எளிய முறையில் அமைந்திருக்கும். பொதுமக்களுக்குத் தெருக்கூத்து ஒரு நல்லபொழுது போக்காக அமைந்திருப்பதோடு நீதி புகட்டும் வாயிலாகவும் உள்ளது"[1] என்று கலைக்களஞ்சியம் கூறும்.

கூத்து என்னும் சொல், நாட்டியம், நாடகம் ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாகவே வழங்கப்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் முழுக்க முழுக்க நடனக் கலைமகளாகவே அறிமுகம் செய்யப்படும் மாதவியை.

"நாடகமேத்தும் நாடகக் கணிகை"[2]

என்று இளங்கோவடிகள் குறிப்பதைக் கொண்டும்,

"நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆறுதல் தூங்கல் வாணி குரலை
நிலையம் நிருத்தம் கூத்தெனப்படுமே"[3]

என்று திவாகரம் தரும் விளக்கத்தைக் கொண்டும் அறியக்கூடும்.

தெருக்கூத்து

இன்றைக்கும் 'கூத்து', 'நாடகம்', 'ஆட்டம்' என்றும் பல பெயர்களில் அழைக்கப்பட்ட போதிலும் தெருமுனைகளில், திறந்த வெளியில் அறிமுகப்படுத்திக் கொள்ளல், கதைகூறல், மங்களம் பாடுதல் என ஒரு மரபைப் பின்பற்றுகின்றனர். இதிகாசங்கள், புராணங்கள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் கருப்பொருளாகின்றன.

கட்டியங்காரன் பாடல்

'பபூன்' வெளியே வந்தவுடன் அவையோருக்கு வணக்கம் கூறுகின்றான். வணக்கம் கூறுவதையே பின்வருமாறு பாடி ஆடிக் கூறுகிறான்.

"வணக்கம். வணக்கம்... வணக்கமுங்க.... இங்கு
ஆட்டம் பார்க்க வந்திருக்கும் கூட்டத்திற்கொருவணக்கம்
இந்தக் கூட்டத்தில் ஆடவந்திருக்கும்
எங்கப்பன் வாத்தியாருக்கொரு வணக்கம்.
இந்த உலகம் சொந்தமுன்னு என்னை
அறிமுகப்படுத்திய எங்க அம்மாவுக்கொரு வணக்கம்
இந்த தேசம் எனக்குத்தந்து
சொந்த வேசம் போட்டுக்கொண்டு
சொர்க்க லோகம் போய் சேர்ந்த
எங்க தாத்தா பப்பூனுக்கொரு வணக்கம்
ஏ... வணக்கம் வணக்கமுங்க
...."[4]

இப்பாடலில் அவையோருக்கும் தன்னை ஈன்றெடுத்த

அன்னைக்கும் வணக்கம் கூறுவதோடு தன்னுடைய தாத்தாவிற்கும் வணக்கம் கூறுகிறான். இவருடைய தாத்தாவும் ஒரு சிறந்த தெருக்கூத்துக் கலைஞராக இருந்துள்ளார் என்பதும், "கோமாளி'' வேடம் தரித்து ஆடிய கலைஞர் என்பதும் தெரிகிறது. பரம்பரை பரம்பரையாக வந்த தெருக்கூத்துக் கலைஞன் என்பதை குறிப்பாக வெளிப்படுத்துகிறான். அதோடு நாட்டு நடப்பையும் தெளிவாகப் பாடலில் எடுத்தியம்பும் கட்டியங்காரன் திறம் போற்றத்தக்கது ஆகும்.

"...................

ஏ....................... என்னைக் கெடுத்தவன் உன்னைக் கெடுத்தான்
உன்னைக் கெடுத்தவன் இந்த ஊரைக் கெடுத்தான்
அவன் கோயிலுக்குப் போனா கோவிந்தா போடுறான்
குமரியைக் கண்டா கூடவே ஓடுறான்
ஏ வணக்கம் வணக்கமுங்க''[5]

அருச்சுனன் வருகை

தன் எதிரிகளை வெல்லச் சிவபெருமானிடம் பாசுபதம் வாங்க உயர்ந்த தவம் செய்ய வருகிறான் அருச்சுனன். இவன் வரும்பொழுது எளிய நடையில் சொந்தமாகப் பாடல்கள் அமைத்துப் பாடி வருகிறான். அவன் பாடிவரும் பாடல் இதோ

"கௌரி பங்கையனைக் கண்டு
கதைப் பெற்று வருவோம் என்று
மௌலியில் மச்சரேகை
வடிவெலாம் தான் மறைத்து
நவமணி உடைய மார்பில்
நலமுடன் கவசம் பூண்டு
தவமுனி வேசம் கொண்டு
தனஞ்சயன் வருகின்றேனே''[6]

இப்பாடலில் அருச்சுனன் அணிந்துவந்த வேடத்தைப்பற்றி எடுத்துரைக்கிறான். நவமணிகள், கவசம் முதலியவற்றை அணிந்து கொண்டு தவம்செய்யும் முனிவன்போல் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்து பாசுபதம் பெற வருகின்றேன் என்பதைப் பாடலின் மூலம் தெரிவிப்பதை அறிகிறோம். மேலும்,

"கொன்றை மலர் அருகு தும்ப முடிதனில் சாற்றித்
தொழுதபாதம் படிந்தவர்க்குத் துயரம் தீர்ப்பாய்!
எம்பெருமான்! எனக்கு எழுதொணாதா...
உமையாள் மைந்த வா உலகளந்த திருமால் மருகனே!

....
வெய்யவே வெந்நீரும் வெம்பலை ஆடையும்
வேலுறு இளமைந்தன் வைதரனைப் பெற்றெடுத்த
தயாபரனே! போற்றி...
இங்கிதோர் ஓமம் செய்து சிறந்ததோர்
வெண்ணீறு சாற்றி....
ஒப்பில்லாச் சிவன்பேரில் உயர்தவம் செய்யவேண்டி
அந்தவில்கணைவாங்க வல்ல விஜயனும் வருகின்றேனே!''[7]

படிக்காத பாமரன் இனிய இராகத்துடன் மேற்கண்டவாறு பாடி வருவதைக் கண்டு பார்ப்போர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. "கொன்றை மலர் அருகால் வணங்குபவரின் துயரினைத் தீர்ப்பாய்'' என்று இறைவனிடம் பிறருக்காகவும் அருச்சுனன் வேண்டுவது அவனின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. பிறருக்காக யார் இரக்கம் காட்டுகின்றார்களோ! அவர்களை நாடி இறைவன் வருவான் என்பதை உணர்ந்து செயல்படுகிறான் அருச்சுனன். இறுதியில் வெற்றியும் பெறுகிறான். உடம்பெல்லாம் வெண்ணீறு சாற்றி இருப்பவன் சிவபெருமான். எனவே அவனுக்குப் பிடித்த வெண்ணீறு சாற்றி உயர்தவம் செல்கிறேன் என்பதைப் பாடலில் அருச்சுனன் தெரிவிக்கிறான்.

ஈசன் ஏறும் வாகனத்தைக் கீழ்வரும் பாடலில் தெரிவிக்கிறான் அருச்சுனன்.

"ஓம் கங்காதர கங்காதர வாசா!
ஓம் கௌரீசா... பரமேசா!.... ஜகஸம்ஹாரனா...!
பச்சைவிடை மீதில் ஏறும் ஓம் பரமேசா!
ஓம் பரமேசா! கிரிவாசா! ஜெகசம்ஹாரனா...
வெள்ளை விடை மீதில் ஏறும்
விமலேசா! கிரிவாசா ஜெகஸம்ஹாரனா!
வரம் தரும் ஈசா...
நந்தி வாகனம் ஏறும் நாதா சங்கீத வாசா ஓம்
நாத! சங்கீதகிரி வாசா!
..................................''[8]

சிவபெருமான் காளை வாகனத்தை உடையவர் என்பதை 'பச்சை விடை, வெள்ளைவிடை, நந்தி' போன்ற சொற்கள் குறிப்பிடப் படுகின்றன.

"திங்கள்தான் குலத்தில் வந்தோன் – நான்
சீருடன் வடக்கே நோக்கி

சிவசங்கரா கங்காதரா என்றுமே
சீருடன் பயணம் ஆகினேன்''[9]

நிறைவுரை

கிருட்டிணகிரி மாவட்டத் தெருக்கூத்துப்பாடல்கள் பக்தி யுணர்வை ஊட்டுவதாகவும், நீதி புகட்டும் வாயிலாகவும் உள்ளன.

அடிக்குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், தொகுதி 6, ப. 131.

2. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்.

3. திவாகர நிகண்டு.

களப்பணி

திரு. கிருஷ்ணன், திரு. சின்னசாமி, பாம்பட்டி கிராமம், களர்பதி அஞ்சல், கிருட்டிணகிரி மாவட்டம்.

◆

90
தலித் நிகழ்த்துக் கலைகள்

வே. பொன்ராஜ்

தலித் நிகழத்துக் கலைகள் என்பன தலித்துகளால் நிகழத்தப் படக்கூடிய நாட்டுப்புறக் கலைகளாகும். இக்கலைகள் காண்போருக்கும் நிகழ்த்துவோருக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்படுத்துவதாக உள்ளன. ஏனெனில், இவை மக்களின் வாழ்வை அப்படியே பிரதிபலிக்கும் தன்மையுடையனவாகும். (2005:109). இக்கலைகளின் நிகழ்விடம் பெரும்பாலும் ஊரின் மையப்பகுதியாக, ஊரைச்சார்ந்த இடமாகக் குறிப்பாக மந்தை, பொட்டல், வயல்பகுதி என அமைவது இயல்பு. இஃது தற்போது உலக அரங்கில் அரிய பெரிய மேடைகளைத் தன்வயப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்டுரையானது தலித் நிகழ்த்துக் கலைகள் பற்றியும் அதன் தன்மை மற்றும் தற்கால நிலை குறித்தும் ஆய்வதாக அமைகிறது.

நிகழ்த்துக் கலைகள்

தலித் கலைகள் என்பன உழைக்கும் வர்க்கத்தினரான தலித் மக்களால் தங்களது உழைப்பின் வலி, சோர்வு நீங்க வேண்டியும், பொழுதுபோக்கிற்காகவும் ஏற்படுத்திக் கொண்டவையாகும். இவர்களால் நிகழ்த்தப்படும் கலைகளாகக் கரகாட்டம், குறவன்-குறத்தி ஆட்டம், இராசாராணி ஆட்டம், மாடுபிடி ஆட்டம் போன்ற முகப்போலி உரு நடனங்கள், காவடியாட்டம், தப்பாட்டம், கும்மி

ஆட்டம், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், போன்ற ஆட்ட வகைகள் உள்ளன. தவில், தப்பு (பறை), பம்பை, உறுமி, உடுக்கை போன்ற இசைக்கருவிகளைக் கொண்டிசைக்கப்படும் இசை வகைகளும், தெம்மாங்குப் பாடல்கள், சிந்துப் பாடல், கண்ணி, நையாண்டி இசைப்பாடல்கள், ஒப்பாரி, தாலாட்டு, கோடாங்கி இசைப்பாடல், வண்டிக்காரன் பாட்டு ஆகியனவும், தொழிற்பாடல்கள் மற்றும் சடங்குமுறைப் பாடல்களும் இவ்வகையினவாகும். காண்போர் அனைவரையும் மகிழ்விக்கும் வகையில் நாடகப் பாங்குடன் கூடிய கூத்துக் கலைகளான இராசாராணி ஆட்டம். கணியான்கூத்து, டப்பாங்கூத்து மற்றும் தெருக்கூத்து ஆகியவற்றில் வரும் கோமாளியும் தோல்பாவைக் கூத்தில்வரும் உச்சிக்குடும்பன் மற்றும் உழுவைத் தலையன் ஆகியோரும் தலித்தின் குறியீடாக இருப்பதைக் கவனத்தில் கொள்வோமானால் அவர்களது குரல்கள் நமக்கு நன்கு புரியும் *(2004:142)*. அவ்வாறு தலித் நிகழ்த்துக் கலைகளில் தலித்துகளின் மீதான ஆதிக்கச் சாதிகளின் ஒடுக்கு முறைகள் வெளிப்படுவதையும் காணமுடிகிறது.

நிகழ்த்துக் கலைகளின் தன்மைகள்

தலித் கலை இலக்கியங்கள் பெரும்பான்மையும் எழுத்து வடிவம் பெறவில்லை. இந்து மதம் தலித்துகளைச் சண்டாளர்கள், காட்டு மிராண்டிகள் என்று மனித சாதியிலிருந்து ஒதுக்கி வைத்தது. இதனால் தலித்துகள் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. எனவே, இவர்களது கலைகள் எழுத்து அடிப்படையில் பதிவு செய்யும் வாய்ப்போ, தேவையோ, வசதியோ இல்லாமல் போனது. தலித் மக்களின் கலைகள் வாய்மொழியிலேயே விளங்கியது. எனினும், அவை 'கலை என்பது மக்களுக்கானது; மக்களால் மக்களுக்காக நடத்தப் பெறுவது' என்ற கோட்பாடு உருவானதற்குப் பிறகே மீட்டுருவாக்கம் அடைந்துள்ளன. அவற்றுள் பல அழிந்துபோய் இன்று ஒரு சில மட்டுமே இன்றைய நவீனங்களையும் உட்கொண்டு விளங்குவதைக் காணமுடிகிறது *(1999:27)*. இந்தியக் கலாச்சாரக் கலைகளாகவும் உள்ளன.

நிகழ்த்தப்படும் கலைகளின் வெற்றி என்பது ஒரு கருத்து சரியான முறையில் பார்வையாளர்களைச் சென்றடைதல் என்பதைக் குறிக்கிறது. ஒரு கருத்து பார்வையாளனிடம் எளிதில் எட்டக் கூடியதாகவும், அவனுக்குப் புரியக்கூடிய அனுபவக் குறியீடுகளைக் கொண்டதாகவும், சோர்வூட்டாமல் சுறுசுறுப்படையச் செய்வதாகவும் அமைய வேண்டும்

(2006:166). இக்கருத்துகளைத் தாங்கியே தலித் கலைகள் உயிரோட்டமிக்க கலைகளாக விளங்குகின்றன. ஒடுக்கப்பட்டோரின் கலை இலக்கியங்கள் கலகச் செயற்பாடு கொண்டவையாகவும், ஆளும் வர்க்கத்தில் ஊறித் திளைத்த படைப்பாளிகளின் படைப்புகளுக்கு நேர்மாறானவைகளாகவும் அமையும். எதிர்க்கலாச்சாரம் மற்றும் மாற்றுக் கலாச்சாரத்தைக் கொண்டவையாகத் தலித் கலை இலக்கியங்கள் அமைவது இயல்பு என்கிறார் அர்ஜுன் டாங்ளே *(1999:35).* இத்தகைய எதிர்க் கலாச்சாரக் கோட்பாட்டை முன்னிறுத்துவனவாகவே தலித் கலைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

நிகழ்த்துக் கலைகளும் தற்கால நிலையும்

தலித் மக்களால் நிகழ்த்தப்படும் நிகழ்த்துக் கலைகள் தங்கள் வலிகளை நேரடியாக வார்த்தை மூலமும் ஆட்டமுறையாலும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. சான்றாக, மதுரை மாவட்டத்தில் பறையர் இன மக்களால் நிகழ்த்தப்படும் இராசாராணி ஆட்டம் நான்கு பேர்களால் ஆடப்படுவதாகும். இதில் மாடு திருட்டுக் கதை, பஞ்சாயத்துக் கதை எனப் பல கதைகள் நிகழ்த்தப்படுகின்றன. இக்கதைக்கருவானது தம்மை ஆதிக்கம் செலுத்துவோரை நையாண்டி தாக்குதல் செய்வதாக அமைகிறது. இந்த ஆட்டத்திற்கு வாசிக்கப்படும் நையாண்டி மேளக் கலைஞர்களும் தலித் மக்களே ஆவர்.

நையாண்டி மேளத்தில் பயன்படுத்தப்படும் தவில், நாயனம், பம்பை, உறுமி, தமுக்கு போன்றவை தோலிசைக் கருவிகளாகும். உறுமி நாயக்கர் காலத்தில் சக்கிலிய இனத்தவரால் கொண்டுவரப்பட்டுச் சேர்க்கப்பட்டதாகும். தமுக்கு என்பது ஊர்ப்பறை அறிவிக்கப் பயன்பட்டதாகும். இவ்வாறு தனித்தனியே தலித்துகளால் பயன்படுத்தப் பட்டு வந்த இசைக்கருவிகளின் கூட்டுச் சேர்க்கை 'நையாண்டி மேளம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இஃது தென் தமிழகத்தின் பெரும்பாலான கலை நிகழ்ச்சிகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தலித் மக்களின் கலைகள் அனைத்துமே மற்ற இனத்தினரின் கலைகளிலிருந்து மிகவும் வேறுபட்டதாக அமைந்திருக்கின்றன. தலித் மக்களின் சிறந்த இசைக்கருவியான பறை இவர்களின் நாடித்துடிப்போடு இயைந்த ஒன்றாகும். எனவேதான், சிறு குழந்தைகூட பறைச் சத்தத்தில் தன்னையே மறந்து ஆடுவதும் பறையை அடிப்பதில் திறமை பெற்றும் இருக்கிறது. இந்தப் பறையும் இதிலிருந்து எழும் கலைகள் அனைத்தும் வெறும் இரசனைக்கானது மட்டுமின்றி விடுதலைச் செய்திகளாகவும் விளங்குகின்றன.

பல்லாயிரம் மக்களுக்கு மத்தியிலும் ஒலிபெருக்கிகள் இல்லாமலேயே அனைவரையும் சென்றடையும் வலிமை மிக்கதாகப் பறைச் சத்தம் இருக்கிறது. பிற சத்தங்கள் அதிகமாகும்போது பறையின் சத்தமும் அதிகரிக்கிறது. அஃது 'எனது சத்தத்தை நீ அடக்க முயன்றால் நான் உன் சத்தத்தை அடக்குவேன்' என்ற அறைகூவல்போல் அமைகிறது. இதைப்போலவே தலித்துகளும் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து திமிறி எழும் நிலை அவர்களது விடுதலை வேட்கையைப் பறைசாற்றுகிறது (2007:149).

சாப்பறைக்கு மட்டுமே மேல்சாதி, மக்கள் பயன்படுத்தி வந்த இப்பறையாட்டம் - தப்பாட்டம் தற்போது அரசியல், அரசு, ஊர்விழா மற்றும் பல்வேறு இயக்கங்கள் வழியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சாப்பறை என்று மேல்சாதியினரால் அழைக்கப்பட்ட பறையாட்டக் கலை தலித் மக்களின் போர்ப்பறையாகத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பறை என்னும் இசைக்கருவி சங்க காலத்திலிருந்து செல்வாக்குப் பெற்ற இசைக்கருவியாக விளங்கயுள்ளது. முருக வழிபாட்டில் பறை இசைக்கருவி இடம்பெற்றுள்ளது. "தமிழும் தமிழ்நாடும் பல இயக்கங்களையும் கட்சிகளையும், தலைவர்களையும் சந்தித்துள்ளன. அவர்களில் பெருபாலானோர் இயற்றமிழையும், நாடகத் தமிழையும் மட்டும் பாதுகாத்தனர், வளர்த்தனர். ஆனால், இசைத் தமிழில், பிறமொழி இசையைக் கலந்து தமிழிசையை அழித்தனர். அந்த வகையில் அழிவின் விளிம்பில் உள்ளது தமிழிரின் முதல் இசையான பறை இசை. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்கள், எதற்கும் முந்தைய பாரம்பரியமிக்க பறை இசையைப் பாதுகாக்கவோ, வளர்க்கவோ வாழ வைக்கவோ முன்வரவில்லை" (தலித் முரசு, ஜன.2005:7) என்பது சிந்தனைக்குரியது.

'தலித்துகளின் வளர்ச்சிக்காக, மதுரை அரசரடியில் அமைந்துள்ள 'தலித் ஆதார மையம்' 'தலித் விடுதலைக்குக் கலைகளையும் கருவியாக்குவோம்' என்ற முனைப்போடு 1995-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் தலித் கலைவிழா என்ற ஒரு பெரிய விழாவினை எடுத்து அதன்மூலம் தலித்துகளின் பாரம்பரியமிக்க பல கலைகளை நிகழ்த்திக் கொண்டாடி வருகிறது. இக்கலை விழாவானது உயர் சாதியினரின் கலாச்சார ஆதிக்கத்தைத் தட்டிக் கேட்பதுடன் தலித் இளைஞர்கள் இக்கலை வடிவங்களின் சக்தியை உணரத் தூண்டுகிறது" (2005:29). இக்கூற்றானது, பறை குறித்த பார்வையை மேலும்

விரிவடையச் செய்கிறது எனலாம். "பரமக்குடிப் பகுதியிலுள்ள அருந்ததிய இனத்தவர்களின் முதன்மைத் தொழில் 'தப்பு' இசைத் தொழிலாகும்" (2004:11) என்று இரவிக்குமார் குறிப்பிடுகிறார். ஆக, இசை வாழ்வதே தலித் மக்களிடம்தான் என்றால் அது மிகையாகாது. 'தற்போது, தவில், பம்மை, பறை போன்ற தலித் கலைக்கருவிகளைப் பயன்படுத்தி மேடைப் பாடல்களும், கச்சேரிகளும் பெருமளவில் பரவத் தொடங்கியுள்ளன" (2005:125) என்று குணசேகரன் குறிப்பிடுகிறார்.

பொதுவாகக் "கலைகள் அனைத்தும் ஒவ்வொரு தனித்த இனக்குழுவிடம் இருந்துதான் தோன்றின. ஆனால், அவை அனைத்தும் ஒட்டுமொத்த மக்களுக்காகத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை, ஆதிக்க வாதிகளின் கலைகளுக்குத்தான் அரசும், சமூகமும் முக்கியத்துவம் தருகின்றன. அக்கலையை வளர்க்கவும், பாதுகாக்கவும் முயல்கின்றன. இதனால் மண்சார்ந்த மரபுவழிக் கலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன" (தலித் முரசு, ஜன.2005:7) என்னும் கூற்று மனங்கொள்ளத் தக்கதாகும்.

பிற தலித் கலைகளும் அவர்களது வாழ்விலிருந்து பிரிக்கமுடி யாததாக அமைந்துள்ளன. தற்போது அவை ஆதிக்கச் சாதியினரால் விரும்பிக் கற்கும் கலைகளாகவும் சமூக அந்தஸ்தைப் பெற்று விளங்குகின்றன. எனினும், கலையையே உயிர்மூச்சாகக் கொண்டு வாழும் தோல்பாவைக் கூத்து, தெருக்கூத்துக் கலைஞர்கள் பொருளாதார அடிப்படையில் வாழ்வில் மிகவும் நலிவடைந்து காணப்படு கின்றனர். இவர்களையும் இவர்களது நிகழ்த்துக் கலைகளையும் அழிவிலிருந்து காக்கும் பணியில் கிறிஸ்தவ நிறுவனங்களும் முனைப்புடன் செயப்பட்டு வருகின்றன என்பதற்குக் கலைகாவேரி, நாஞ்சில்நாதம், சக்தி, தூயசவேரியர் கல்லூரி கலைக்குழு முதலானவை சான்றுகளாக விளங்குகின்றன. மட்டுமின்றி, மத்திய மாநில அரசுகளும் இவர்களின் கலை மற்றும் வாழ்வில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும். தற்போது தலித் கலைகள் எச்.ஐ.வி/ எய்ட்ஸ், காசநோய், சுத்தம் சுகாதாரம், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, வரதட்சணை, சாலை விதிகள், பேரிடர் மேலாண்மை, இயற்கை வளம் காத்தல் முதலான விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளுக்காகவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை, பிற ஊடகங்களைப் காட்டிலும் வலுவான - அழுத்தமான இடத்தை வகிக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

முடிவாகச் சில

தலித் கலைகள் ஒவ்வொன்றும் தமக்குள் எதிர்க் கலாச்சாரத் தன்மையைக் கொண்டுள்ளதாக விளங்குகின்றன. அவற்றை அடையாளங்கண்டு ஏற்புடைய சமூகப் பிரச்சினைகளை முன்னிறுத்தி ஒருசில மாற்றங்களுடன் படைக்கும்போது அவை தலித் சமூகத்திற்கு மேலும் பயன் தருவதாக அமையும். குறிப்பாக அழிந்துவரும் தலித் நிகழ்த்துக் கலைகளைச் சமூக இயக்கங்களும் அரசும் கையிலெடுத்துக் கொண்டு சமூகப் பொறுப்புடன் செயல்படுத்தும்போது அஃது தலித் கலை வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் நிலைத்த பயனைத் தரும்.

அடிக்குறிப்புகள்

1. இரவிக்குமார், கு. 2004,'இராமநாதபுர மாவட்ட தலித் இனமக்களின் இசைக் கருவிகளின் இனவரைவியல்', மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
2. குணசேகரன், கே.ஏ.1999, 'தலித் கலை கலாச்சாரம்', ராகாஸ் பதிப்பகம், சென்னை.
3. குணசேகரன், கே.ஏ.2005,'ஒடுக்கப்பட்டோர் அரங்கியல்', நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை.
4. சண்முகசுந்தரம். சு, 2004, 'தமிழ் நாட்டுப்புற இலக்கியம் - ஒரு தலித்தியப் பார்வை', தலித்தியம், காவ்யா, சென்னை.
5. செந்தில்குமார், செ.தேவி. 2004, 'தலித் பண்பாடு', இலக்கியமும் சமூகமும்'. ஞாலத் தமிழ்ப் பண்பாடு ஆய்வு மன்றம், மதுரை.
6. தனஞ்செயன், ஆ. 2006. 'விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள்', வல்லினம், புதுவை.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி,
நாகர்கோயில்.

91
சிங்களாந்தபுரம் - தெருக்கூத்து ஓர் ஆய்வு

திருமதி து. மகேஸ்வரி

முன்னுரை

இறைவனது அருட்படைப்பு அனைத்திலும் கூத்து நிகழ்கின்றது. எவரிடமும் பயிற்சி பெறாமலும், கூத்துக்கலையின் பண்பைச் சிறிதளவும் கல்லாத மயில்கார் மேகத்தையும், இடிமுழக்கத்தையும் கேட்டவுடன் ஆடுகிறது. கொடிய நாகமும், மகுடியின் இசையில் மயங்கி ஆடுகிறது. அதேபோல் மனித இனம் தோன்றியது முதற் கொண்டே கூத்துக்கலை வளர்ச்சிப்பெற்று வருகிறது எனலாம். அக்கூத்துக்கலையில் ஒன்றான தெருக்கூத்துப்பற்றி திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், "சிங்களாந்தபுரம்" என்ற கிராமத்தில் தெருக்கூத்துக் கலைஞர்களிடம் கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வு செய்யப்பட்டதே, இவ்வாய்வுக் கட்டுரை.

சிங்களாந்தபுரம்

சிங்களாந்தபுரம் என்ற இவ்வூரைப் பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டும். இவ்வூர் துறையூர் - திருச்சி நெடுஞ்சாலையில் உள்ளது.

இவ்வூர் ஏழு சிற்றூர்களுக்கு தாய்க்கிராமமாக விளங்குகிறது. இவ்வூரில் சுமார் 5000 பேர் வசிக்கின்றனர். இவ்வூரில் எல்லா இன மக்களும் வசித்து வருகின்றனர். இவ்வூருக்கு இப்பெயர் வரக்காரணம் சிங்கள அந்தகபுரம் என்பதே சிங்களாந்தபுரம் எனவாயிற்று என்று இவ்வூரில் உள்ள அமர சுந்தரேஸ்வரர் கோவில் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. சிங்கள மன்னன் ஒருவனை இவ்வூரில் இராஜஇராஜசோழன் வென்றதாகவும், அவன் மகன் இராஜேந்திரசோழன் அதன் நினைவாக இக்கோவிலைக் கட்டியதாகவும், இக்கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவ்வூர் சிறந்த வணிகத்தளமாக இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக இவ்வூரின் நடுவே அமைந்திருக்கும் அன்னமடம் அருகில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரைப் பற்றி கல்வெட்டியல் துறையினர் தற்போதும் ஆய்ந்து வருகின்றனர். இவ்வூர் நகர்ப்புறம் போன்று தெருக்கள் வரிசையாக அமைந்துள்ளது. நான்கு தெருக்களும் சந்திக்கும் இடங்களில் கல்வெட்டு அமைக்கப்பெற்று இவ்வூர் பற்றிய அனைத்துத் தகவல்களும் இக்கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளன என்ற தகவலை இதே ஊரைச் சேர்ந்த முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் திரு. கருப்பையா பாரதி அவர்கள் தெரிவித்தார்.

தெருக்கூத்து

19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் செல்வாக்குடன் இருந்த நாடகக்கலை வடிவம் தெருக்கூத்து எனலாம். பெரும்பாலும் தெருக்களின் நாற்சந்திகளில் ஆடப்பெற்றமையால் தெருக்கூத்து எனப்பட்டது. இதுவும் பாடல்களும், ஆடல்களும் கொண்ட கூத்துக் களான பள்ளு, குறவஞ்சி, நொண்டி ஆகிய நாடகங்களின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக உருவானதாகும். பாடல்களோடு, பாடல்களின் விளக்கமாக உரையாடல் பகுதியும் சேர்க்கப்பட்டமை தெருக்கூத்தில் காணப்பட்ட புதுமையாகும். இந்நாடகங்களை ஆடியவர்கள் ஊர், ஊராகச் சென்று விழாக்காலங்களில், இரவு நேரங்களில், தெருக்களின் நாற்சந்திகளில் அல்லது களத்து மேடுகளில் அவ்வப்போது அடைத்துக்கொண்ட மேடைகளில் அல்லது மேடை போன்ற அமைப்புகளில் தெருக்கூத்து ஆடி வந்தனர். நாட்டுப்புறக் கதைகள், புராணக்கதைகள், காப்பியக்கதைகள் போன்றவை தெருக்கூத்து தளமாயின. தமிழகத்தில் "தெருக்கூத்து" என்ற நாட்டுப்புற நாடகம் செல்வாக்குடன் இருந்த காலத்தில் இந்தியா முழுவதும் இத்தகைய கலை வடிவம் இருந்தது ஒப்பு நோக்கத்தக்கது.

தொல்காப்பியத்தில்

கூத்து, கூத்தர் பற்றிய செய்தி - கணவன், மனைவி ஊடலை தீர்த்து வைக்கும் வாயில்கள் என்று சிலரைக் குறிப்பிடும்போது கூத்தரையும் குறிப்பிட்டுச் சொல்கின்றார். இதனை,

"தோழி, தாயே, பார்ப்பான் பாங்கன்
பாணன், பாடினி, யினையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர் -
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப''

தொல். கற்பு, நூ. 52.

என்ற நூற்பாவிலும், ஆற்றுப்படைக்கு இலக்கணம் குறிப்பிடும்போது,

"கூத்தரும், பாணரும் பொருநரும் விறலியும்''

தொல். புறம்., 30.

என்ற நூற்பாவின் மூலமும் கூத்தாடக்கூடியவர்கள் (நாடகக்கலைஞர்கள்) கூத்தர் எனப்பட்டனர் என அறியமுடிகிறது. மேலும், சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்கள் கூத்தர்களின் பெருமையை உணர்த்துவதே தனி ஒரு இலக்கியமாக வளர்ந்தது எனக் கூறலாம். பட்டினப்பாலையில் பௌர்ணமி தினத்தன்று மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாமல் நாடகம் (கூத்து) நடத்தியும், ஆடல் புரிந்தும் இரவு நேரத்தை மகிழ்வாகக் (விழாவாக) கொண்டாடினர் என்று குறிப்பிட்டு உள்ளார் உருத்திரங்கண்ணனார்.

தெருக்கூத்துக் கலைஞர்கள்

தெருக்கூத்து நடிக்கும் நடிகர்கள் கூத்தாடிகள் எனப்பட்டனர். இவர்கள் தனி இனத்தைச் சேர்ந்த பரம்பரைக் கூத்தாடிகளாகவும், பல இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் இரவு நேரங்களில் கூத்தாடி மக்களை மகிழ்விக்கின்றனர். பகல் நேரங்களில் பயிர்தொழில் செய்து வந்தனர். மேலும் பரம்பரைக் கூத்தாடிகள் தான் ஆடிய வேசத்துடன் பகலில் வீடு வீடாகச் சென்று பொருட்களை வாங்கிவருவர். தொப்பைக் கூத்தாடி மக்களை மகிழ்விப்பதற்காக அவர்களுக்கு பேச்சுச் சுதந்திரம் இருந்தது. இதுவே பிற்காலத்தில் தெருக்கூத்து தரமிழக்க ஒரு காரணமாக இருக்கலாம் என கருத இடமிருந்தது. மேலும், தெருக்கூத்துக் கலைஞர்கள் உச்சக்குரலில் பேசும், பாடும் வல்லமைப் படைத்தவர்கள்.

நிகழ்ச்சி அமைப்பு

தெருக்கூத்து வீதிகளில் களத்துமேடுகளுக்கு அருகில் உள்ள திறந்தவெளிகளில் அவ்வப்போது அமைக்கப்பட்ட எளிமையான மேடைகளில் ஆடப்பெற்றன. மேடையில் திரைக்குப் பதிலாக ஒவ்வொருப் புறத்திலும் இருவர் நின்று வேட்டியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு நிற்பர். நாடக நடிகர்கள் பாடிக்கொண்டே வந்து நிற்கத் தொடங்கியதும் இவ்வேட்டி அகற்றப்படும். பல வண்ணத் துணிகளையும் கட்டி திரைப்போல அமைத்து இருப்பர். மின்வசதி இல்லாத காலகட்டங்களில் வண்ணார் என்ற இனத்தைச் சேர்ந்தவர் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு நிற்பர்.

தெருக்கூத்துக்கள் தோடாயப் பாடலுடனேத் தொடங்கின எனலாம். விநாயகர் முதல் அனைத்து தெய்வங்களுக்குரிய பாடல்களும் திரைக்குப் பின்னால் இருக்கும் குழுவினரால் பாடப்படும். சில நேரங்களில் விநாயகர் முகத்திரை அணிந்தவரே வருவார். அவரை தெருக்கூத்து நடிகர் ஒருவர் வணங்கி பூசைகளைச் செய்வார்.

பின்னர் கட்டியங்காரன் வருவான், இவன் தெருக்கூத்தின் இறுதிவரை வருபவன். பின்னர் தொப்பைக் கூத்தாடி (நகைச்சுவை நடிகர்) வருவான், இவர்கள் இருவரின் உரையாடலின் மூலம் என்ன தெருக்கூத்து நடக்க விருக்கிறது என்பதை அறியமுடியும்.

உடை, ஒப்பனை

தெருக்கூத்து நாடகத்தில் உடை ஒப்பனை பளிச்சென்ற நிறத்தில் இருக்கும். காலுக்கு மெலிதான உடையும், அதற்குமேல் பாவாடை போன்ற உடையையும் கட்டியிருப்பார்கள். மகுடம், கை அணி, மார்பில் பதக்கம் போன்றவையும், பெண் வேடம் போடும் ஆண்கள், புடவைக்கட்டி பெண்களைப்போல் ஒப்பனை செய்து கொள்வர். கட்டியங்காரன் முதல் அனைத்து வேடம் போடுபவர்களும் காலில் சலங்கை அணிந்திருப்பார். அணிகலன் மரத்தால் செய்யப்பட்டு கண்ணாடி பதிக்கப்பட்டு இருக்கும்.

மேலும் தெருக்கூத்து நாடகங்களில் அவரவர் வேடத்திற்குத் தகுந்தாற்போல் உடையலங்காரம், அணிகலன்களும் அணிந்தும் கொள்கின்றனர்.

தெருக்கூத்தில் ஒப்பனைக்காக செந்தூரம், அரிதாரம், கரிப்பொடி ஆகியவற்றைப் பயன்படுத்துவர். தாடி, மீசை ஆகியவை ஒட்டுவதற்கு

அத்திப்பாலைப் பயன்படுத்துவர் என்றத் தகவலை நாடகக்கலைஞருள் ஒருவரான திரு. துரைசாமி என்பவர் குறிப்பிட்டார்.

பக்க வாத்தியம்

மத்தளம், புல்லாங்குழல், ஆர்மோனியம் ஆகியவற்றைப் பயன் படுத்தினர். ஒவ்வொரு வேடமிட்டவரும் பாடியவுடன் பின்பாட்டுப் பாடுவர். பின் அப்பாட்டிற்கு உரிய விளக்கமாக வசனம் பேசுவர்.

சிங்களாந்தபுரம் என்ற கிராமத்தில் நடக்கும் 63 நாயன்மார்களில் ஒருவரான சிறுதொண்ட நாயனாரின் வரலாற்றை விளக்கும் "சிறுதொண்டர் தெருக்கூத்து நாடகக்'' கலைஞர்களிடையே எடுக்கப்பட்ட நேர்காணலே இவ்வாய்வு.

களப்பிரர்கள் நம் தமிழகத்தை ஆட்சி செய்து வந்த காலத்தில், சமணத்திற்கும், சைவத்திற்கும் போட்டி ஏற்பட்டபோது சைவ சமயத்தின் பெருமையை விளக்கும் விதமாக இத்தெருக்கூத்து நாடகங்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று இவ்வூரில் வசித்து வரும் இத்தெருக்கூத்தில் நடித்த சில முக்கிய கதைமாந்தர்களிடம் இருந்து மட்டுமே ஆய்வு சுருக்கம் கருதி எழுதப்பட்டுள்ளது. மன்னன் காடவர் கோன், சிறுதொண்டர், நங்கை, சீராளன், சாமியார் (சிவன்), கட்டியங்காரன்.

சிறு தொண்டர்

சிவப்பிரகாசம், வயது - 65, ஐந்தாம் வகுப்பு வரை கற்றவர். இவர் இக்கூத்தில் முக்கிய வேடமான சிறுதொண்டர் வேடமணிந்து நடிக்கும் கலைஞர். அவர் பாடும் பாடல் ஒன்று.

பழுதில்லா அன்னதானம் படைத்திடும் காலம் தன்னில்
முழுதிலும் நிறைவேறாமல் மோசமாய் முடிந்ததென்று
அழுதுமே தொண்டர் நானும் ஆறுபோல் கண்ணீர் ஓட
தழுவியே தொண்டர் நானும் தயங்குவேன் மயங்குறேனே

என்ற பாடலில் சைவத்துறவிகள் ஒருவரையும் காணவில்லையே என்று சிறுதொண்டர் வருந்துவதைக் காணலாம்.

நங்கை

பெண் வேடமிட்டு, நடிப்பவர் பெயர் குணசேகரன் வயது - 55, 8-ம் வகுப்பு வரை படித்தவர். இவர் இப்பெண்வேடத்தில் மிகவும் சிறப்பாக நடிக்கக் கூடியவர். சீராளனைத் தாலாட்டும் பாடல்,

"சீரான வேதகுலம் செழிக்கவந்த திரவியமே
பேரும் விளங்க வந்த புத்திரனே நித்திரை போ
மானும், மழுவேந்தும் மகாதேவன் தன்னருளால்
நானிலத்தை ஆளவந்த நாயகமே கண் வளராய்''

என்றப் பாடலின் மூலம் தன் மைந்தனை தாலாட்டும் விதம் அறிய முடிகிறது.

சீராளன்

சிறுதொண்டர் - நங்கை தம்பதியரின் மகன் இவ்வேடம் போடுபவர் - பெயர் - பாபு, வயது 20, தற்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் கலைஞர். இவர் பாடும் பாடல்

"மடியில்தான் படுக்கின்றேன் மாதாவே உங்கள்
மனதில் சஞ்சலம் வேண்டாம் மாதாவே அம்மா
வருத்தங்கள் எதுவுமே எனக்கில்லை அம்மா''
....
....
அழாமல் என் கழுத்தை அறுத்திடுங்கள் அம்மா
பூலோகம் வாழ்கவெனச் சொல்லுவேன் அம்மா''

என்ற வரிகளில் நங்கை சீராளன் கழுத்தை அறுக்கத் தயங்கி கொண்டிருக்கும் வேளையில் சீராளன் பாடுவதாக அமைந்தது இப்பாடல்.

சாமியார் வேடம் (சிவன்)

இவ்வேடம் போடுபவர் பெயர் சுந்தர்ராஜ், வயது - 58, கல்வித்தகுதி 8-ஆம் வகுப்பு வரைப் படித்தவர். இவர் இந்நாடகத்தில் சாமியாராக வரும் சிவபெருமான் சிவதொண்டர்களை சோதனைக்கு ஆளாக்கி அவரின் பக்தி உணர்வை மக்களுக்கு வெளிப்படுத்துவர், அவர் பாடும் பாடல்,

"நடந்தாரே தம்பிரான் ஆத்தியைத் தேடி
ஆத்தி மரத்தைத் தேடியே நடந்தாரே தம்பிரான்
மாத்திய துயர் நங்கை மனைதனை விட்டு
ஐயர் நடந்தாரே''

என்றப் பாடலில் சாமியாராக வரும் சிவபெருமான் கோபம் கொண்டு ஆத்தி மரத்தடியில் அமர்ந்திருக்கும்போது பாடிய பாடல் இது.

கட்டியங்காரன், தொப்பைக் கூத்தாடி (பபூன்) கூத்து நடக்கும் நாட்களுக்கு ஏற்றவாறு சிலர் நடிப்பர். தொப்பைக் கூத்தாடி பாடும் நகைச்சுவையான பாடல் இதோ,

"மாட்டு வண்டி கட்டி ரோட்டில் நடப்பது
அக்காலமே போச்சு அது அக்காலமே போச்சு
இப்போ கம்பெனி ரோட்டிலே கும்பேனி சைக்கிள்
காத்தாப் பறக்கலாச்சு இப்போ காத்தாப் பறக்கலாச்சு
மண்குடம் எடுத்து தண்ணிக்கு போனது
அக்காலமேப் போச்சு அது அக்காலமேப் போச்சு
இப்போ செப்புக்குடம் எடுத்து சைசா நடக்கலாச்சு"

என்ற நகைச்சுவையாகப் பாடுகிறார். இப்பாத்திரம் தெருக்கூத்து பார்ப்பவர்கள் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நடிக்கக்கூடியவர். இவருக்குப் பேச்சுச் சுதந்திரம் இருந்தது. சிலர் கொச்சையாகப் பேசியதின் விளைவே தெருக்கூத்து. மக்களிடையே செல்வாக்கு குறைவதற்கு இதுவும் ஒரு காரணமாகக் குறிப்பிடலாம்.

தெருக்கூத்து நாடகம் செல்வாக்கு இழக்கக் காரணம்

தெருக்கூத்து நாடகங்களில் நடத்தப்பட்டவை பெரும்பாலும், புராண, காப்பியக்கதைகளே, இக்கதைகளையே மீண்டும், மீண்டும் மக்கள் கேட்பது, மேலும் பழகிப்போன பாட்டு, வசனம் துணுக்குகள் மற்றும் அவரவர் வசனங்களை தனக்கு ஏற்ற வகையில் உரக்கப் பேசி, பாடி நடித்தனர். அதனால் அது பெரும் கூச்சலாக இருப்பது போல் தோன்றியது. தெருக்கூத்து நிகழ்ந்த இடம், நேரம், கூத்துக்கலைஞர் களின் முறையற்ற வாழ்க்கைமுறை, புதுமை எதுவும் சேர்க்கப்படாமை போன்ற செயல்களால் தெருக்கூத்து நாடகங்கள் செல்வாக்கிழந்து வருகின்றன என்று குறிப்பிடலாம்.

முடிவுரை

மனிதஇனம் தோன்றியக் காலம் தொட்டே வளர்ந்து வரும் இக் கூத்துக் கலை தற்போது மறைந்து வருகிறது. இந்நிலை மாற வேண்டும். இக்கூத்துக் கலையின் பெருமையினை பள்ளிக் கல்லூரி மாணாக்கர் களுக்கும் உணர்த்தி இக்கலையில் வல்லவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். கரம் கொடுப்போம் இக்கூத்துக்கலையை வளர்ப்போம்.

◆

தமிழ்த்துறை விரிவுரையாளர்,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

92

காளியாட்டம் - ஸ்ரீபுரந்தான் காளி

திருமதி க. மல்லிகா

ஸ்ரீபுரந்தான்

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள கிராமம் ஸ்ரீபுரந்தான். கங்கை கொண்ட சோழ அரசனின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட ஜெயங்கொண்ட சோழபுரம் நகருக்கு (36. கி.மீ. தொலைவு) தெற்கிலும், வரலாற்றில் பெரும் போர் நிகழ்ந்த கும்பகோணம் வட்டம் திருப்புறம்புயம் என்ற நகருக்கு வடக்கிலும் (5 கி.மீ. தொலைவு) இவ்வூர் அமைந்துள்ளது. சோழர் காலத்தில் சதுர்வேதி மங்கலமாக விளங்கிய ஊராகும். ஸ்ரீபரந்தாகச் சோழன் என்னும் மன்னன் காலத்தில் ஸ்ரீபராந்தகனூர் என்று வழங்கி வந்த பெயர் மருவி தற்பொழுது ஸ்ரீபுரந்தான் என அழைக்கப்படுகிறது.

ஊரின் கீழ்ப்பகுதியில் சிவத்தலமும், மேற்கில் வேத நாராயணப் பெருமாள் கோவிலும், வடக்குப் பகுதியில் ஸ்ரீகாளியம்மன் கோவிலும், தெற்குப் பகுதியில் வள்ளியம்மன், செல்லியம்மன் ஆலயமும், தென்மேற்கில் அய்யனார் கோவிலும் உள்ளன. சிவன், பெருமாள் கோவில்கள் அறநிலையத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீ காளியம்மன் கோவில் கிராமவாசிகள் மற்றும், கிராம நாட்டாண் மைகளால் பராமரிக்கப்படுகிறது. தலைமை நாட்டாண்மைக்கே முழு அதிகாரம் உண்டு. அவரின் ஆலோசனைப்படியே அனைத்துக்

காரியங்களும் செய்யப்படுகின்றன. தினந்தோறும் மாலை நேரங்களில் மட்டும் (ஒரு வேலை) படையல் இடப்பட்டு (பொங்கல்) கிராமப் பூசாரியால் பூசை செய்யப்படுகிறது. செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் சிறப்புப் பூசையும், பக்தர்கள் வருகையும் அதிகமாக இருக்கும். பக்தர்களால் மாவிளக்குப் படையல் அம்மனுக்குச் செய்யப் படுகிறது. காளியின் தோற்றம் சிவப்பு நிறத்திலும், அணிவிக்கும் ஆடை சிவப்பு நிறத்திலும் இருப்பது சிறப்பளிப்பதாக உள்ளது.

கோவிலின் தோற்றம்

ஒரு சமயம் ஊரின் தெற்கில் அமைந்துள்ள (3 கி.மீ தொலைவு) கொள்ளிடம் ஆற்றில் (சிரசு மரத்தால் ஆனது) தண்ணீரில் மிதந்து வந்த அம்மனின் திருமுகத்தை வைத்து, கோவில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இக்கோவில் சிரசைக் கண்டு எடுத்துவந்தவரின் வழிந்தோன்றல்கள் என்று கருதப்படுவோர்களுக்கு இன்றளவும் மரியாதை செய்யப்படுகிறது. வீட்டு விலக்காகும் பெண்கள் கோவில் பக்கமாகப் போகவோ, அக்குளத்தில் இறங்கவோ கூடாது. மீறினால் பல பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் என்பதை மக்கள் நம்புகின்றனர்.

காளியாட்டம்

ஸ்ரீ காளியம்மனுக்கு அவ்வூர் மக்களால் நடத்தப்படும் திருவிழாவைக் "காளியாட்டம்" என அழைக்கின்றனர். பங்குனி மாதம் அல்லது சித்திரை மாதத்தில் இத்திருவிழா நடத்தப்படுகிறது. நாட்டாண்மை தலைமையில் ஊர்மக்கள் கூடித் திருவிழா பற்றிய முடிவுகளை எடுக்கிறார்கள். திருவிழாவிற்கு ஆகும் செலவிற்கான தொகை நிர்ணயிக்கப்படுகிறது. அத்தொகை சமமாகப் பகிர்வு செய்யப் பட்டு ஊர் மக்களிடம் வரி என்ற பெயரில் வசூலிக்கப் படுகிறது.

திருவிழாவின் தொடக்கமாகக் காப்பு கட்டுதல் நடைபெறுகிறது. மாதத்தின் முதல் செவ்வாய்கிழமை காப்பு கட்டப்படுகிறது. காப்பு கட்டிய காப்பாளிகள் (வழி வழியாக வந்தவர்கள் - ஆண்கள் மட்டும்) திருவிழாக் காலம் முடியும்வரை விரதம் மேற்கொள்கிறார்கள். தங்களுக்கான உணவைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். முதற் செவ்வாய்க்கிழமை தொடங்கி மூன்றாம் செவ்வாய்க்கிழமை காளியம்மன் புறப்பாடு நடக்கின்றது. முதல் செவ்வாய் முதல் தினத்தோறும் மண்டகபடிகள் என்று சொல்லப்படும் பூசைகள் நடைபெறுகின்றன.

இரண்டாவது செவ்வாய் முதல் வள்ளியம்மன் செல்வியம்மன் வீதி உலா நடைபெறும். வீடுகள்தோறும் தீபாராதனை செய்யப்படும். மூன்றாவது செவ்வாய்க்கிழமை காலை காளியம்மன் புறப்பாடு நடைபெறும். அம்மன் சிரசுவை தலையில் மாட்டிக்கொண்டு, அம்மனை நேராகப் பார்ப்பது போன்ற தோற்றத்துடன் (வழிவழியாக இப்பணியைச் செய்பவர்) அம்மன் கோவிலை விட்டு வெளியே ஓடி வரும் காட்சியும், அம்மன் நடனமாடும் காட்சியும் காண்பவரைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடும். அவ்வாறு ஓடிவரும் அம்மன் நேராகக் கோவிலின் சற்று தொலைவில் உள்ள இடமான படுகளம் என்ற இடத்தில் சென்று நிற்கும். படுகளம் என்பது ஒரு கம்பம் நட்டு கம்பத்தின் கீழ் ஒரு குழியில் மூன்று பேர் பிணம்போல் படுத்துக் கிடப்பார்கள். காளியம்மன் கம்பத்தில் ஏறி குறி சொல்லியபின் அந்த மூன்று பேரையும் எழுப்பும்; அதற்குப் படுகளம் எழுப்புவது என்று பெயர். அதன் பிறகு அந்த ஊரின் தெற்கில் அமைந்துள்ள சிறிய ஊரான அரண்கோட்டை என்ற பகுதிக்குச் சென்று பின் ஸ்ரீபுரந்தானுக்கு வருகை தரும்.

திருவிழாவிற்காக வீடுகள்தோறும் தூய்மை செய்யப்பட்டு, பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வீடாக அம்மன் சென்று அங்குப் பந்தலின் உள்ளே போடப்பட்டுள்ள நாற்காலியில் அமர்ந்து, மாவிளக்கு, தேங்காய், வாழைப்பழம், போன்றவை அடங்கிய படையல்களை ஏற்று அவ்வீட்டிலுள்ளவர்களுக்குக் குறி சொல்லிப் புறப்படுகிறது. அம்மன் தங்கள் வீடுகளுக்கு வந்து செல்வதில் மக்கள் பெரிதும் மகிழ்கிறார்கள். இவ்வாறு, கோவிலில் இருந்து புறப்பட்ட அம்மன் அனைத்து வீடுகளுக்கும் சென்று கோவில் திரும்புவதற்கு 5 அல்லது 6 நாட்கள்வரை ஆகிவிடும். அம்மன் ஒப்பனை செய்துகொள்பவர்கள் இரண்டு அல்லது மூன்று பேர்கள் இருப்பார்கள். அவர்கள் மாற்றி, மாற்றி ஒப்பனை செய்துகொள்வார்கள். சில மணிநேரம் இடையில் ஓய்வுக்காகவும், இரவிலும், கிராமத்தில் உள்ள மற்றொரு கோவிலான வேதநாரயணப் பெருமாள் கோவிலில் தங்குவார்கள். ஊரின் சில முக்கியப் பகுதியில் ஊஞ்சல் அமைக்கப்பட்டு அங்கு அம்மன் ஊஞ்சல் ஆட்டமும் நடைபெறும். அம்மன் வீடுகள் தோறும் அப்படிச் செல்லும்போதும், ஊரின் குறிப்பட்ட இடத்தில் நடனம் ஆடுவதும் நிகழும்.

இவ்வாறு, திருவிழா நடைபெறும் பொழுது வெளியூர் பக்தர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று மக்கள் கூட்டம் ஊரில் அதிகமாகக் காணப்படும். ஊரே விழாக்கோலம் கொண்டிருக்கும். அக்கால கட்டத்தில் அம்மனை நிழற்படம் எடுக்கவோ, ஒளிப்படம் எடுக்கவோ

முயன்றால் எவ்வளவு கூட்டம் இருப்பினும் அம்மனால் அடையாளம் காட்டப்பட்டுத் தண்டிக்கப்படுவர். தண்டனையாக அபராதம் விதிக்கப்படும். மேலும், திருவிழாவில் கர்ப்பிணிப் பெண்களும், வீட்டு விலக்கான பெண்களும் கலந்து கொள்ளக் கூடாது என்பதும் காலங்காலமாக கடைபிடிக்கப்படுகிறது. அலகு குத்துவதும் திருவிழாவில் உண்டு. இவ்வாறு முதல் செவ்வாய் தொடங்கி நான்காவது செவ்வாய்க்குள் காளியாட்டம் முடிவுறும். தொடங்கும் மாதத்திலேயே முடிவடைய வேண்டும் என்ற நியதியும் உண்டு. இறுதியாக மஞ்சள் நீராட்டம் நடைபெறும். அதன் பின் வேதநாராயணப் பெருமாள் கோவில் அமைந்துள்ள தெருவில் பல்லுபாடி நாடகம் நடத்தப்படுகிறது. அதன் பிறகு இறுதியாக காப்பறுப்பு நடைபெறுகிறது. இத்துடன் திருவிழா இனிதாக நிறைவு பெறுகிறது.

காளியாட்டம் இன்றும் மேற்கண்டவாறு குறிப்பிட்ட மாதங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது மக்கள் வழிக் கள ஆய்வில் அறியப்பட்ட செய்தியாகும்.

அடிக்குறிப்பு

1. இக் கட்டுரை ஓர் கள ஆய்வு.

2. ஸ்ரீபுரந்தான் (அல்லது) திருபுரந்தான் என்ற ஊரில் கள ஆய்வு செய்யப்பட்ட தகவல்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

2. கட்டுரையாளர் தாம் பிறந்த ஊரைப் பற்றியது இக்கட்டுரை.

3. தகவல் கொடுத்து உதவியவர்கள் நாட்டார் பாலி பி. அய்யாசாமி

5. ஊர்ப் பிரமுகர் : திரு ரெ. கணேசன்

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தொலைதூரக் கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

93

சங்ககாலம் முதல் இக்காலம் வரை - சாமியாட்டம்

பொ. மரகதம்

முன்னுரை

மனிதன் மீது சாமி வந்து ஆடும் ஆட்டத்திற்குச் சாமியாட்டம் என்று பெயர். உலகில் மனிதன் பலவிதமான ஆட்டம் ஆடிவருகிறான். ஆனால், அனைத்தும் வேறுபட்டுக் காணும் ஆடல் வகைகளில் ஒன்று சாமியாட்டம். மனிதன் தன் உடலில் இரண்டு கைகள் இருப்பதை அறிந்தவன். அதன் மூலம் பல ஆட்டங்கள் ஆடுகிறான். குறிப்பாக கோலாட்டம், கும்மியாட்டம், கைச்சிலம்பாட்டம், உறியடி, தப்பாட்டம், உடுக்கடி இவை போன்று சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், உடல் உறுப்புகளில் இல்லாத ஒரு கை நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் மீது பற்று வைத்து ஆடும் ஆட்டம் சாமியாட்டம். இவை மற்ற ஆட்டங்களைவிட முற்றிலும் வித்தியாசமான ஒன்றாகும். இவ்வாட்டம் சங்க காலம் முதற்கொண்டு இன்றுவரை எவ்விதம் காணப்படுகிறது என்பதைப்பற்றி ஆராய வேண்டியது அனைவரின் கடமைகளில் ஒன்றாகும்.

நம்பிக்கை

நம்பிக்கையானது மனித வாழ்க்கையின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்கின்றது. யானைக்கு அதன் பலம் தும்பிக்கையில் உள்ளது போல் மனிதனுக்கு அவனுடைய பலம் நம்பிக்கையில் உள்ளது.

"யானைக்கு அதன் பலம் தும்பிக்கை"
"மனிதனுக்கு அவன் பலம் நம்பிக்கை"

இதையே பல தெய்வங்களும் கூறி வருகின்றன.

"நம்பினோர் கைவிடப்படார்" என்றும், மனிதனின் மூன்றாவது கை நம்பிக்கை என்றும் கூறி வருகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தது சாமியாட்டம் என்று கூறும் வகையில் இவை அமைந்துள்ளன.

சாமியாடி - தோற்றமும் ஆட்டமும்

பெரும்பாலும் சிறுதெய்வக் கோயில்களில் பூசாரிகள் சாமியாடிகளாக இருப்பதில்லை. வழிபடும் அடியார்களிலேயே ஒருவர், இருவர் அல்லது சிலர் சாமி ஆடுவர். இரண்டு மூன்று சாதிகளுக்குரிய கோயில்களில் சாதிக்கொரு சாமியாடியும் உண்டு. பெண் தெய்வக் கோயில்களில் ஆண்களும் ஆண் தெய்வக் கோயில்களில் பெண்களும் ஆடுவதுண்டு. சாமியாட்டம் திருவிழாக்காலம் மற்றும் சில முக்கிய தினங்களிலும் நடைபெறுகின்றன.

சாமியாடுவோர் ஆண்களாக இருப்பின் வேட்டியை வரிந்து கட்டியும், பெண்களாக இருப்பின் தலைமுடியை விரித்து ஆடும் நிலையில் இன்றும் காணப்படுகின்றன.

மாரியம்மன் போன்ற கோயில்களில் மஞ்சள் நிறச் சேலையில் பெண்கள் சாமியாடும் தன்மை இன்றும் நிலவி வருகின்றது.

"ஆருகடன் இருந்தாலும்
மாரிகடன் ஆகாது"

'மாரி கடன் ஆகாது' என்று இன்றும் நாட்டுப்புற மக்கள் மட்டும் அல்லாமல் நகர்ப்புற மக்களும் மாரியிடம் வேண்டும் பழக்கம் அனைத்து நகர்ப்புறங்களிலும் காணப்படுகிறது.

வழிபாடுகள்

மக்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்துப் பல உருவம் கொண்டு வழிபட்டு வருகின்றனர். அந்த உருவத்திற்கு ஏற்றாற்போல் சாமியாடும் பழக்கமும் காணப்படுகிறது. மாரியம்மன் என்றால் மஞ்சள் நிறம் கொண்டும், ஆதிபராசக்தி என்றால் சிவப்பு நிறம் கொண்டும், முருகன் என்றால் காவி நிறம் கொண்டும், ஐயப்பன் என்றால் கருப்பு நிறம் கொண்டும் உடை அணியும் பழக்கம் இன்றும் நிலவி வருகின்றது.

காலம் மாறினாலும், கலாச்சாரம் வேறானாலும் வழிபாடு என்று சொன்னால் போதும்; அனைவரும் ஒரே நிலை என்ற தன்மை காணப்படுகிறது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முது மொழிக்கு ஏற்ப அனைத்து ஊர்களிலும், ஏன் சில ஊர்களில் அனைத்துத் தெருக்களிலும் கோயில் காணப்பட்டு வருகின்றது. இந்த அமைப்பு சங்க காலம் முதல் இன்றும் காணப்பட்டு வருகின்றது. கோயில்களில் வழிபடுதல் மூலம் இறைவனின் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் அனைவரும் வழிபாடு செய்கின்றனர்.

"நம்பிக்கைதான் வாழ்க்கை
வாழ்க்கையே நம்பிக்கையாகக் கூடாது"

என்பதை அறிந்து மக்கள் இன்றும் வழிபாடு செய்து வருகின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டின் முதுகெலும்பு கிராமம் ஆகும். எனவே, கிராம மக்கள் தெய்வங்களை எவ்வாறு வழிபட்டுச் சிறப்புப் பெற்றனர் என்பதை இன்று நகர்ப்புற மக்களும் பின்பற்றும் அளவுக்கு முக்கியத்துவம் கொண்டவை நாட்டுப்புறத் தெய்வங்கள். தெய்வங்களை டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் ஏழு பிரிவாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

"இயற்கை வழிபாடு, ஆவியுலக வழிபாடு, குலக்குறி வழிபாடு, புனித போலிப் பொருள் வழிபாடு, முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்று பிரித்துக் காட்டியுள்ளார்.

டாக்டர் சு.சண்முகசுந்தரம் ஆறு பிரிவாகக் காட்டுகிறார்.

"ஊர்த் தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலதெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள் என்று டாக்டர் துளசி இராமசாமி கூறுகிறார்.

நூல்களின் வழி

மனிதன் வாழ்க்கை நம்பிக்கை என்ற அச்சாணியில்தான் உருண்டோடுகிறது. அந்த அச்சாணி என்பது மனித மனம் ஆகும்.

"மனம் ஒரு குரங்கு" என்ற பழமொழி நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அந்தக் குரங்கினை அடக்கி ஆளும் வித்தைகளில் ஒன்று நம்பிக்கை என்ற சாமியாட்டம். சாமி என்பதன் மூலம் ஒரு பயம்,

பக்தி, நம்பிக்கை, வெற்றி, முயற்சி என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

சாமி - ஓர் தானியம்

சாமி - கடவுள், அருகன், முருகன், மூத்தோன், குரு, எசமானன், தலைவி, பொன் என்று சொல்லகராதி குறிப்பிடுகிறது.

இதன் அடிப்படையில்தான் சங்க இலக்கியத்தில் "வெறியன் ஆட்டம்" என்ற ஆட்டம் காணப்படுகிறது. "முருகன் வெறியாட்டு என்ற தன்மையும் காணப்படுகிறது.

பாரதியார்

காளி, மாதா என்று தன்னுடைய ஒவ்வொரு செயலுக்குப் பின் தெய்வம் உள்ளது என்பதைக் கூறும் வகையில் பாடல் பாடியுள்ளார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்"

என்ற பாடல் வரிமூலம் பாரதி தெய்வப்பற்று உள்ளவர் என்றும் நாம் அறிய முடிகிறது.

பாரதிதாசன்

பாரதி என்றால் அதற்கு அடுத்து நாம் நினைவில் வருவது பாரதிதாசன்தான். அவரும் தெய்வப்பற்று கொண்டு பல பாடல்கள் பாடியுள்ளார். இவர் பாரதியை சாமி என்ற தன்மையில் பாடல் பாடியுள்ளார்.

"பொழுது விடியப் புதுவையிலோர் வீட்டில்
விழிமலர்ந்த பாரதியார் காலை வினை முடித்து"

என்ற வரிகள் மூலம் பாரதிதாசன் பாரதியை ஒரு தெய்வ நிலைக்கு எடுத்துக்காட்டுவது இதன்மூலம் அறியப்படுகிறது.

எனவே, சங்க இலக்கியத்தில் சாமி என்பதை பயம் போக்கும் நிலையில் தலைவிக்கு வெறியாட்டு ஆடுவதன் மூலமும், குறி பார்த்தல் மூலமும் அறிய முடிகிறது. அடுத்த கால கட்டத்தில் பாரதி தாய், தாய் நாட்டைச் சாமியாகப் பாவித்து பாடியது புலனாகிறது. பாரதிதாசன் வழிகாட்டியாக விளங்குபவர்களையும், மூத்தோர்களையும் தெய்வமாகப் போற்றும் நிலையும் காணப்படுகிறது.

திருக்குறளில் முயற்சியே தெய்வத்துக்கு ஈடானது என்று கூறி முயற்சியை முதன்மைப் படுத்திக் காட்டும் நிலையும் காணப்படுகிறது.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்"

என்ற வரிமூலம் முயற்சியே முதன்மைப்படுத்தி காணப்படுகிறது.

திரைப்படம்

திரைப்படம் என்பது மனிதனின் வாழ்க்கையை எடுத்துக்கூறும் ஒரு கருவியாகச் செயல்பட்டு வருகிறது. நடந்தவை, நடப்பவை, நடக்கப்பபோன்றவை என்ற நிலையில் காணப்படுவது திரைப்படம் ஆகும். இன்று மனிதன் ஒருவனே தெய்வம் என்ற தன்மையில் 'நான் கடவுள்' திரைப்படம் வெளிவந்துள்ளது. இதன் மூலம் மனிதன் ஒருவன் மற்றவர்களைக் கடவுள் என்று கூறுவதைவிட நாமே கடவுளாக இருக்க வேண்டும் என்ற தன்மையில் மக்களுக்கு விழிப்புணர்வு காட்டுகிறது.

மன நோய்கள்

சாமியாட்டம், புகைபிடித்தல், மது அருந்துதல், கணவன் மனைவி பிரச்சினைகள் இவை அனைத்தும் மனரீதியான பாலியல் பிரச்சினை என்று கூறும் டாக்டர் மு.திருவருட்செல்வம் "சாமியாட்டம்" என்பது ஒரு மனநோய் தொடர்பு உடையது என்று கூறியுள்ளார்.

பாரதியை அவர் காலத்தில் மன நோயாளி என்று பலர் கூறினார்கள். ஆனால், இன்று அவரை இன்றைய தலைமுறையினர் கடவுளுக்கு இணையாக மதிக்கின்றனர்.

அறிவியல் அறிஞர் பலரை முட்டாள் என்றும், பைத்தியம் என்றும் கூறினர். ஆண்டுகள் பல ஆனபின் அவரை அறிஞர் என்று போற்றினர்.

அரிஸ்டாட்டில் போன்றோர் பலரைக் கூறலாம். இயேசு பிரான் பல செயல்கள் செய்தார். அவரை உயிரோடு தொங்கவிட்டனர். ஆனால், இன்றோ அவரைக் காண நாம் உயிரோடு தொங்கிக் கொண்டு இருக்கிறோம்.

எனவே, உலகம் இருக்கும் வரை சாமி இருக்கும். சாமி இருக்கும் வரை சாமியாட்டம் இருக்கும்.

முடிவுரை

மனிதன் உயிரோடு இருக்கும் வரை சாமி என்றும் இருக்கும். சாமி இருக்கும் வரை சாமி ஆட்டமும் காணப்படும். சாமியாட்டத்தின் மூலம் ஒரு பெண் இறந்ததாகச் செய்தி வெளியாகி உள்ளது. இவை எந்த அளவுக்கு உண்மை என்று அனைவரும் அறிய வேண்டியது அவசியம். "தலைவலியும், வயிறு வலியும்" தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதற்கு ஏற்றாற்போல் இவை அனைத்தும் ஒருவர் கூறுவதன் மூலம் மற்றவர் அறிய முடியாது. அனைவரும் உணர்வுப் பூர்வமாக அறிய வேண்டிய ஒன்றாகும். எனவே, மனிதன் மனிதனைத் தூற்றும் அவலம் போய், மனிதனை மனிதன் போற்றும் காலம் வரும் காலத்தில் சாமியாட்டத்தின் உண்மை புலப்படும்.

துணை நூல்கள்

நாட்டுப்புறக் கலைகள் - முனைவர்.ஆறு.இராமநாதன்.

நாட்டுப்புற இயல் ஆய்வு - டாக்டர்.சு.சக்திவேல்.

நாட்டுப்புற இயல் - டாக்டர் சு.சண்முகசுந்தரம்.

பவானந்தர் தமிழ்ச்சொல்லகராதி - ச.பவானந்தம்பிள்ளை.

பாரதியார் கவிதைகள் - இ.சுந்தரமூர்த்தி.

பாரதிதாசன் பாடல்கள் - கல்பனாதாசன்.

திருக்குறள் - எஸ்.கௌமாரீஸ்வரி.

கணிப்பொறி - (கூகுள்)

◆

நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்,
காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகம்,
காந்திகிராமம், திண்டுக்கல்.

94

வில்லுப்பாட்டு : அன்றும் இன்றும்

ஜான். மனுவேல்

மனிதன் இயல்பாக அழகுணர்ச்சி உடையவன்; அந்த உணர்ச்சியும் கலைகளுக்குத் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும். இன்பமும், துன்பமும் இணைந்தது மனித வாழ்வு, அவற்றை உணர்ந்து அனுபவிப்பது மனம்; மனிதனின் மனத்திலிருந்து பல்வேறு உணர்வுகள் உதித்து எழுகின்றன; உணர்வின் பயனாகத் திறமைகள் வெளிப்படுகின்றன. நுட்பமான அறிவால் திறமையை வெளிப்படுத்தும் மனவுந்தலில் கலை முகிழ்ப்பு ஏற்படுகின்றது. ஒருவர் தன்னுடைய நல்லறிவால் ஓர் அருஞ்செயலை நுட்பமாகவும், திறமையாகவும் செய்து பிறர் வியந்து பாராட்டி அதனை விரும்புமாறு காட்டுவதில் கலைத் தன்மை அமைகிறது. கலைத் தன்மைக்கு அடிப்படையாக வேண்டியது மனிதனின் கலைவுணர்வாகும். கலைஞனும், சுவைஞனும் கலை உணர்வுக்கு ஆட்படுவதில் கலை சிறந்து வளர்கிறது.

கலையும் - வளர்ச்சியும்

கலைகளின் வளர்ச்சி நிலைகளை மூன்று படிகளாகக் காணலாம். (1) தொன்மைக் கலை நிலை (2) நாட்டுப்புறக் கலை நிலை (3) திருந்திய கலை நிலை ஆகியவையாகும்.

சமூக அமைப்பு காலத்துக்குக் காலமும், இடத்துக்கு இடமும் மாறுவதைச் சமூகவியல் விளக்கும். மன வளர்ச்சியை மானிடவியலும்,

இயற்கைச் சூழலை புவியியலும், மனித வாழ்வைப் பாதிக்கும் கூறுகளாக உள்ளன. இத்தகைய பாதிப்புகள் கலை உலகையும் விட்டு வைக்கவில்லை. இயற்கையோடு ஒன்றி வாழும் இயல்புடைய மிகப் பழங்கால மனிதனின் கலையாக்கங்கள் இடத்திற்கு இடம், மாறுபடுவதற்கு இதுவே காரணமாக அமைந்துள்ளது. மணிப்பூர் நடனத்தின் ஆடல்முறை இயற்கைச் சூழலை வெளிப்படுத்துவதைக் காணலாம். மரம் சுழன்று ஆடி கீழே விழுவதைக் கண்ட மணிப்பூர் வாசிகளின் நடனம் அவ்வாறே உள்ளது. பழங்குடிகளான லம்பாடிகள் வண்ண, வண்ண ஆடைகளைக் கட்டுவதில் மிகவும் ஆர்வம் உடையவர்களாக உள்ளனர். ஆனை மலையிலுள்ள காடர்கள் குறிஞ்சி நில இயல்புக்குத் தக்க பண்பாடுகளையும், கலைகளையும் கொண்டு விளங்குவதை இன்றும் காணலாம். பழங்குடிகளின் கலையிலிருந்து கலையுணர்வு வெறித் தன்மையுடையதாகவும், கடுமையானதாகவும், தோற்றம் பெற்றுப் பின்னர், விதிமுறைக் கட்டுப்பாடுகளுடன் திறன்மிக்க செயல்களுடன் கலைகள் வளரத் தலைப்பட்டன. மிக நுட்பமான அறிவுடன் செம்மைப்பட்ட கலைகள் திருந்திய கலையாக நாகரிக மக்க ளால் மதிக்கப்பட்டன. கலைஞர்கள் கலையோ தன் உணர்வு கொண்டு ஒன்றுவதை விடவும், தங்கள் திறமைகளைக் காட்டிக் கலைக் கூறுகளைப் புலப்படுத்துவதில்தான் அதிகம் நாட்டம் செலுத்துகின்றனர்.

வில்லுப்பாட்டு

நாட்டுப்புறக் கலைகளில் மிகச்சிறந்த ஒரு கலையாக வில்லுப் பாட்டை உறுதியாகக் கூறலாம். தமிழகத்தின் தென்கோடியிலுள்ள திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் வில்லுப்பாட்டின் தாயகமாக விளங்குகின்றன. இக்கலை இல்லாமல் இப்பகுதி நாட்டுப் புறத் தெய்வங்களுக்கு விழா நடத்துவது இல்லையென்றே கூறலாம். வில்லுப்பாட்டுக்குக் குறைந்தது ஐந்து பேர் வேண்டும்; ஏழு பேர் இருந்தால் சிறப்பாக இருக்கும். 'வில்' மூங்கிலால் செய்யப்பட்டிருக்கும். அதன் இருபகுதிகளையும் தோல் அல்லது நரம்பினால் ஆன நாண் கயிற்றால் வளைத்துக் கட்டியிருப்பர். வில்லிசைக்குத் துணையாக உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படும். இப்போது சிலர் புல்லாங்குழல், ஆர்மோனியம் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்வதுண்டு. இந்தக் கருவிகளின் கூட்டொலியும், புலவர்களின் பாட்டொலியும், பாடுகின்ற கதைப் பொருளும், இணைந்து நாட்டுப்புற மக்களைக் கிறுகிறுக்கச் செய்துவிடும். அனைவரும் இரவெல்லாம் விழித்து வில்லிசையில் ஒன்றி விடுவதைக்

காண வில்லுப்பாட்டின் உண்மையான சிறப்பும்,உயர்வான கலைத் தன்மையும் உள்ளவாறு விளங்கும்.

வில்லின் வலது பக்கம் தலைமைப் பாடகர் வீசுகோலும் கையுமாக இருப்பார். அவரை 'மூத்த புலவனார்' அல்லது மூத்த பாட்டாளி என்று கூறுவர். அவர்தான் முதன்முதலில் பாடலைப் பாடி விடுவார். அவருக்குத் துணையாக வலதுபுறம் அமர்ந்திருப்போரை 'வலப்புற ஜால்ரா' என்றும், இடப்புறம் அமர்ந்து இருப்போரை 'இடப்புற ஜால்ரா' என்றும் வேடிக்கையாக அழைப்பதுண்டு. நடுவர் முதலில் பாட, அவர் பாடிய பாடல் வரிகளை, இருபுறமும் அமர்ந்திருப் பவர்கள் பாடுவார்கள். சில சமயம், இட, வலது அமர்ந்திருப்போர் தலைமை பாடிய பாடல் வரிகளை முழுவதும் உச்சரிக்காமல், பாடல் வரியின் கடைசியில் உள்ள சரணங்களை மட்டும் நீண்ட ஓசையுடன் இழுத்து உச்சரிப்பதுண்டு. தலைமையை அண்ணாச்சி என்று அன்போடு அழைப்பதைப் பார்க்கலாம்.

முதலில் காப்பு, வாழ்த்து, வணக்கம் ஆகியவற்றைப் பாடிவிட்டுக் கதையைத் தொடங்குவார். முத்தாலம்மன், சுடலை மாடன், இசக்கியம்மை, மாரியம்மை, தோட்டுக்காரி, பூலங்கண்டாள், வெங்கலராசன், சேத்திரபாலன், ஐவர் ராஜா, வெள்ளைக்காரன் முதலிய தெய்வக் கதைகள் தென்மாவட்டங்களில் புகழ்பெற்ற வில்லுப் பாட்டுகள். முத்துப்பட்டன், மதுரைவீரன், காத்தவராயன், கட்ட பொம்மன், மந்திரமூர்த்தி, சின்னத்தம்பி ஆகியவை வீரக் கதைப் பாடல்கள் ஆகும். இவை தவிர இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் சில பகுதிகளையும், வில்லில் பாடுவது உண்டு.

வில்லுப்பாட்டை ஒரு பழந்தமிழ் இசைக்கலை என்று பெருமை யாகக் கூறலாம். அதன் எளிமையும், இனிமையும் அனைவரையும் கவர வல்லது. போர்க் கருவியான வில்லே இக்கலையின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். வில்லின் நாணைச் சுண்டும்போது எழும் ஒலி முதலில் மனிதனைக் கவர்ந்திருக்க வேண்டும்.

முதன் முதலில் போரில் வெற்றி பெற்றவர்கள் வில்லைத் தட்டி இன்பக் களியாட்டம் நடத்தியிருப்பர். வீரப் பாட்டுகளைப் பாடி மகிழ்ந்திருப்பர். அதற்குத் துணையாகப் போர் முரசுகளும், கிணைப் பறைகளும் மகுடங்களும் தாளம் போட்டிருக்கும். பின்னர் வில்லில் இசைப் பெருக்க மணிகளையும், பலவித இசைக்கருவிகளையும், பொருத்தங்கண்டு இணைத்திருப்பர். போர் செய்யும் வில்லின் இரு முனைகளிலும் பூண் கட்டி வீரமணிகளைக் கட்டியிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.[2]

இன்றைய நிலை

தொடக்கக் காலத்தில் தென்மாவட்டங்களில் தோன்றிய இக்கலை இன்று எல்லா மாவட்டங்களிலும் குடிகொண்டுள்ளது என்றே சொல்லலாம். முன்பெல்லாம் வில்லுப்பாட்டில் தேர்ந்த இசைக் கலைஞர்கள் இப்பாடல்களையும், நிகழ்ச்சிகளையும் பாடி, ஆடி நடத்தி வந்தனர். இன்று சாதாரண இசையார்வம், சிறிதளவு மனிதத் திறமை கொண்டவர்கூட இந்நிகழ்ச்சியில் ஈடுபட்டு 'பேரும் புகழும் ஈட்டி வருவதைக் காண முடிகின்றது. தொடக்கக் காலத்தில் நாட்டுப்புறத் தெய்வங்களின் கதைகள், புராணக் கதைகள் போன்றவை வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம் பெறுவதுண்டு. ஆனால், இன்று கிருத்துவ சமுதாயத்தில் பேரும், புகழும் பெற்றுச் சீரிய முறையில் இயங்கி வருகின்றது என்றே கொள்ளலாம். வாழ்த்துப் பாடல்களும் கிருத்துவ பக்திப் பாடல்களுமே இடம் பெறுகின்றன.

ஆதாம் ஏவாள் முதற்கொண்டு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தொடர்ந்து புதிய ஏற்பாட்டின் யோவான், மத்தேயு போன்ற சீடர்கள் கதைகள்வரை இன்று கிராமப்புறங்களில் சொல்லப்பட்டு வருவதைக் காணலாம். பண்டிகை நாட்களிலும், திருவிழா நிகழ்ச்சிகளிலும், சில முக்கிய இல்ல நிகழ்வுகளிலும் வில்லுப்பாட்டு சிறப்பாக நடை பெறுவதைக் காண முடிகின்றது.

தற்போது வில்லுப்பாட்டு கலை நிகழ்ச்சியில் இசைக்கருவிகள் பல இடம்பெற்று மேலும் நிகழ்ச்சிக்கு மெருகூட்டுகின்றன. கேஷியோ, தபலா, ஆர்மோனியம், ட்ரம் போன்றவைகளும் இடம்பெற்றுப் பார்ப்பவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கச் செய்கின்றன. பணம் வசூலிப்பது கட்டாயமாக்கப்பட்ட நிலையில் இக்கலை இயங்கி வருவது தெரிய வருகின்றது. சீருடைகள் அணிந்தும் வில்லுப்பாட்டு இயங்கி வருவதைக் காணலாம். அக்காலத்தில் மேடையின்றி விழா நிகழ்வு மைதானங்களில் இயங்கி வந்த வில்லுப்பாட்டுக் கலைநிகழ்ச்சி இன்று அதற்கென போடப்பட்டுள்ள மேடையில் வண்ண, வண்ண மின் விளக்குகள் ஒளி சிதற, வியக்கும் வண்ணம் நடைபெறுவது பார்க்கக் கண் குளிர வைக்கின்றது, முன்பெல்லாம் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைக் கலைஞரே இறை வணக்கத்டன் துவக்கி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், இன்று பஞ்சாயத்துத் தலைவர் முதற்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் வரை தலைமைப் பொறுப்பை வகித்து ஆரம்பித்து வைக்கும் பழக்கம் வழக்கிலுள்ளது.

சிறப்புகள்

உணர்ச்சிப் பிழிவின் உண்மை வடிவாய் உருவாகி இணக்கமாய் மக்களைக் கவரும் தன்மையுடன் விளங்குவது நாட்டுப்புறக் கலைகளின் இயல்பான போக்காக உள்ளது. எளிதில் விளக்கவும், இயல்பாகச் சுவைக்கவும், மக்களால் முடியும் என்ற நிலையில் சிறப்பாக அமைந்துள்ளன. பல்வேறு வடிவில் தோன்றி மனிதனின் மனத்தில் எழும் உணர்ச்சிகளைக் குறைவில்லாது காட்டும் கலைப் படைப்புகளாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன.

தொன்று தொட்டே வழக்கத்தில் உள்ள நாட்டுப்புறக் கலைகள் மரபு முறைகளைக் காத்து மனிதனின் வளர்ச்சிப் படிகளை உணர்த்தும் தன்மையுடன் காணப்படுகின்றன.

இடத்திற்கிடம் கலைகளும், கலையழகும், முறைகளும் மாறியமைகின்றன. இருப்பினும் கலை உணர்வில் மாற்றம் இன்றி நடைபெறுகின்றன.

பயன்கள்

பயனற்ற செயல்கள் பாழ்பட்டு அழிவதே உறுதி. கலைகள் ஏன் நடத்தப்படுகின்றன என்பதை அறிந்து கொண்டால், அதன் பயன் மிக எளிதாகக் கிடைக்கும். விழாக் காலங்களில்தான் அவை பெரும்பாலும் நடைபெறுகின்றன. விழாக்கள் மனிதனுக்கு இன்ப நிறைவையும் மன ஆறுதலையும் தருவன. இவற்றைப் பெறுவதற்காக நல்ல சூழலை உருவாக்கப் பலவிதமான கலைகளை விழாக்களுக்குத் தொடர்பான முறையில் சுவையாக மக்கள் நடத்துகின்றனர். இதிலிருந்து கலைகளின் முக்கியமான பயனை அறியலாம்.

கலைகள் - இன்றைய நிலை

சுவைமிக்க நாட்டுப்புறக் கலைகளை இன்றும் நாட்டுப்புற மக்கள் உயிரூட்டி வளர்த்து வருவதைக் காணலாம். இக்கலைகளுடன் இறைத் தொடர்பான புனிதத் தன்மை ஒட்டி இருப்பதினால் மக்களால் அவற்றைப் புறக்கணிக்க முடியவில்லை. சமய நம்பிக்கையில் உறுதியுடைய நாட்டுப்புற மக்கள் இவற்றைச் சமயச் சடங்காகக் கருதி வழிபாட்டுடன் ஒட்டுறவாடச் செய்து மகிழ்கின்றனர். நெல்லை, குமரி மாவட்டங்களில் இன்றும் இக்கலை இவ்விதியைப் பின்பற்றி வருகின்றது. நாகரிகத்தால் மக்களின் நம்பிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ, தகர்த்து எறியவோ இயலாது என்பதற்கு இப்பழக்கம் நல்ல சான்றாக உள்ளது.

துணைநின்ற நூல்கள் :

(1) Projesh Banerji, Te Folk dances of India., P.4.,

(2) முனைவர், பெருமாள், ஏ.என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள், ப.7

(3) மேற்படி, ப. 11.,

◆

தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்,
திருப்பதி - ஆந்திர மாநிலம்.

95
கழியலாட்டம் தோற்றமும் வளர்ச்சியும்

முனைவர் இரா. மாதவி

இயற்கையின் குழந்தைகளாக நாகரிகத்தின் தொட்டில் பருவத்திலே வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கையும் வரலாறும் தனிச்சுவை உடையவை. நெஞ்சில் வஞ்சமில்லாமல் வாழும் அவர்களுடைய வாழ்க்கைப் பழக்க வழக்கங்களும், பேச்சும், பாட்டும், ஆட்டமும் ஆராய்ந்து இன்பம் காணுபவர்களுக்குக் குழந்தையைக் காணுவது போலவும் அதன் மழலைச் சொல்லைக் கேட்பது போலவும் இருக்கும். இந்தப் பின்னணியைக் கருத்திற் கொண்டு கழியலாட்டம் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோற்றம்

தொல்குடித் தமிழர்கள் தற்காப்புக் கலைகளில் அதிக ஆர்வமுடையவர்கள். எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள கத்தி, கம்பு, வாள், அரிவாள் போன்ற கருவிகளைக் கொண்டு பயிற்சி செய்வதை இன்றும் காணமுடிகிறது. இதுபோன்ற பல கலைகளிலிருந்து தழுவி வந்ததுதான் கழியலாட்டம். இவ்வாட்டம் ஆடவர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வரும் ஒருவகைக் கோலாட்டக் கலையாகும். கம்பு, கழி, கோல், பிரம்பு என்பன ஒரு சொல்லுக்குரிய பன்மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றன. கைகளில் கழிகள் என்ற கோல்களை ஏந்தி, அடித்து ஒலியெழுப்பிச் சிலம்பாட்டத்தின் பல

அடவுகளைக் கொண்டு மெதுவாகவும், வேகமாகவும் சுழன்று ஆடும் நடனம் கழியலாட்டம் எனப்படும். கம்பு (கழி) என்ற பொருளைத் தருவதால் இது கழியல் ஆட்டம் எனப் பெயர் பெற்றது. தலித் மக்களின் வீரக் கலைகளுள் ஒன்றுதான் கழியலாட்டம். கைகளில் இரண்டு முழம் நீளமுள்ள கனமான உருட்டுக் கோல்கள் வைத்து அடித்துத் தாளத்தோடு ஆட்டத்திற்கு ஏற்றாற்போல் பாடல்களுடன் ஆடுகிறார்கள். நின்றும், சாய்ந்தும், அமர்ந்தும் குதித்தெழுந்தும் வலது கைக்கோலால் நேருக்கு நேர் சுற்றியும் அடிப்பார்கள். கலைஞர்களின் முகத்தோற்றமும் உடல் அசைவுகளும் சண்டை போடுவது போல் காட்சியளிக்கும்.

ஆடும்முறை

கழியலாட்டம் ஆடவர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வருகிறது. இதுவும் ஒருவகைக் கோலாட்டக் கலையாகும். கழியலாட்டக் கருவியாகிய கம்பு முதன்மை பெறுகிறது. கழியலாட்டத்தில் குறுகிய கம்புகளும், நீண்ட கம்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. தற்காப்புக் கலை உத்திகள் பலவற்றைக் காணமுடிகிறது. இவ்வாட்டத்தில் ஆடப்படும் அடவு முறைகளும் ஆட்டக் கருவியான கம்புகளும் போர்க் கலையை நினைவூட்டுகின்றன. கழியலாட்டத்தில் கம்படிக்கின்ற உத்தி முறைகள் வாள், வேல், கம்பு, போன்ற ஆயுதங்கள் கொண்டு போர் வீரர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளும் உத்தி முறையில் அமைந்துள்ளன.

வட்டமாக ஆடும் இவ்வாட்டம் முந்தைய காலங்களில் இரவில் நிகழ்ந்தது. அப்போது வட்டத்தின் நடுவில் விளக்கை ஏற்றிவைத்து ஆடுவர். உரலைக் கவிழ்த்துப்போட்டு குத்துவிளக்கு வைத்து ஆடுவர். இப்போது பெட்ரோமாக்ஸ் விளக்கைப் பயன்படுத்துகின்றனர். தாளத்தோடு சுழன்று கோலால் அடித்துப் பார்ப்பதற்கு மிகக் கடுமையான சண்டை நடப்பதுபோல் தெரியும். நேருக்கு நேர் சுழன்றும், எகிறிக் குதித்தும் தாள லயத்தோடு இருக்கும். கோபத் தோற்றத்தோடு ஓங்கி அறைவதும், பண்டைய காலச் சண்டையை நினைவூட்டுகின்றது.

ஆட்டத்தில் எட்டு ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். இவர்கள் இரண்டு இரண்டு பேராக நான்கு ஜோடிகளாகப் பிரிவர். வட்டத்தில் தனக்கு எதிர் நின்று ஆட்டத்தை ஆரம்பிப்பவர் 'தன்னாள்' என்று அழைக்கப்படுகிறார். தன் ஆட்டக் கூட்டாளியான தன்னாளைக் கவனித்தே ஆடுவார்கள். ஆட்டத்தின் மாற்றங்களும் ஆட்டத்தின் நகர்வுகளும் தன்னாளை அடிப்படையாகக் கொண்டே அமையும். தன்னாளை அடையும்வரை ஆட்டம் பொதுவாக ஒரே சீராகச்

செல்லும். எட்டுப்பேரும் நான்கு இணைகளாகத் தன்னைப் பார்த்து வட்டமாக நிற்கும்போது தன்னாளின் பின்புறமிருந்து தனக்கு எதிர் வருபவர் பின்னாள் ஆவார். ஆட்டத்தில் முன்னாள், பின்னாள் இவர்களைக் கவனித்தே ஆட வேண்டும். ஆட்டத்தின் நிகழ்வுகள் 'அடவு' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இது நடனத்தின் ஒரு அளவைக் குறிக்கும். கழியல் ஆட்ட முறையில் கை, கால், உடல் அசைவுகள், நகர்வுகள், பாடல்கள் ஆகியன இணைந்து ஓர் சிறந்த ஆட்ட முறையை உருவாக்குகின்றன. கழியல் ஆட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் விருத்தம், கும்பிடு முறை, செய்தியைக் கூறும் பாடல்கள், மங்களம் என்ற ஒரே முறையில் நிகழ்த்தப்படுகின்றன.

கழியலாட்டத்தின் - வேறு பெயர்கள்

கழியலாட்டம் பல பெயர்களைக் கொண்டு விளங்குகிறது. பாம்புக் கழியல், பருந்துக் கழியல், சதுரக் கழியல், வட்டக் கழியல், முக்குக் கழியல், கும்மிக் கழியல், சிலுவைக் கழியல், பிரண்டு கழியல், நெடுங்கழியல் என வட்டாரத்திற்கு வட்டாரம் வகை, வகையான ஆட்டங்கள் இருக்கின்றன.

கழியலாட்டம் ஆட்டம் ஆடப்படும் இடங்கள்

இவ்வாட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகர்கோவில் மாவட்டங்களில் பல்வேறு சூழல்களில் நிகழ்த்தப்படு கிறது. தென் தமிழகத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் மட்டுமே இக்கழியலாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் கார்த்திகை, மார்கழி மாதங்களில்தான் ஆடப்படுகிறது. கிறிஸ்து பிறப்பு நாள், புத்தாண்டு விழா, கத்தோலிக்கத் திருவிழாக்கள், புதுமனைப் புகுவிழா, பூப்புச் சடங்கு போன்ற விழாக்களிலும் ஆடப்படுகிறது. ஒருசில இடங்களில் ஊர்வலத்திலும் கழியல் அடிக்கப்படுகிறது. மேலும், கலைவிழா மேடைகளிலும் திருவிழாக் கொண்டாட்டங்களிலும் காணலாம். பொதுவாகக் கழியலாட்டம் ஆடுவதற்கு உரிய காலம் இது என்று வரையறை இல்லை. எல்லாக் காலத்திலும் எல்லா நேரத்திலும் இது ஆடப்படுகிறது. இந்துக்களின் கோவில் திருவிழாக்கள், பண்டிகை நாட்கள், திருமணம் முதலிய மங்கல விழாக்கள், இறப்பு நிகழ்ச்சிகள் ஆகிய பல்வேறு நிகழ்வுகளில் இவ்வாட்டம் ஆடப்படுகிறது.

கழியலாட்டத்தில் பங்கேற்போர்

இவ்வாட்டத்தைப் பொதுவாக நாடார், பறையர், பரதவர், அருந்ததியர், ஈழவர், புலையர் ஆகிய சாதியினர் நிகழ்த்துகின்றனர். சமுதாயத்தில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும், சமயத்தைச் சேர்ந்தவர்களும் தொழிலைச் செய்பவர்களும் கழியல் ஆட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

கழியலாட்டக் கம்பு - பயிற்சி முறை

ஆட்டத்திற்கு மலைக்காரைக் கம்பே சிறந்தது என்று கூறுகின்றனர். மலைக்காரை மரத்தில் முண்டுகள் இல்லாத நேரான கம்புகளை வெட்டி ஒன்றாகப் பல நாள் காயவைத்து ஒரு சாணும், நான்கு விரல்கட்டை அளவிலும் கம்புகளை வெட்டி ஒரே சீராக்குகின்றனர். மந்தமான ஓசை உடைய கோல்களை ஒதுக்கிவிடு கின்றனர். ஆடுபவர்கள் கையில் இருக்கும் இரண்டு கோல்களிலும் சலங்கை கட்டப்பட்டிருக்கும். இவை இனிய ஓசையைக் கொடுக்கின்றன.

கழியலாட்டம் எட்டு அல்லது ஒன்பது வயதில் பயில்வது வழக்கமாக இருக்கிறது. பயிற்சி கொடுப்பவர் அண்ணாவி என்று அழைக்கப்படுகிறார். அண்ணாவிதான் சூடம் ஏற்றிக் கம்புகளை ஆட்டக்காரர்களுக்கு எடுத்துக் கொடுக்கிறார். நன்றாகப் பழகும்வரை தினமும் 5 மணி முதல் 6 மணிவரை கற்றுக் கொடுக்கிறார்கள். ஆட்டக் கலைஞர்கள் வேட்டி கட்டியோ, தார்பாய்ச்சிக் கொண்டோ, தலைப்பாகை அணிந்தோ ஆடுகின்றனர். ஒப்பனை அதிகம் செய்து கொள்வதில்லை.

பாடல்களும் - இசைக் கருவிகளும்

கழியலாட்டத்திற்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பல இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தவில், மிருதங்கம், ஆர்மோனியம், துத்தி, கால்சலங்கை முதலிய வாத்தியக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சிறுதெய்வ மற்றும் சமயப் புராணக் கதைகளையே பாடுபொருளாகக் கொண்டு குழுவினரால் ஆட்டம் நிகழ்த்தப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் சமுதாயப் பாடல்களும், புரட்சிப் பாடல்களும் இந்நடனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

முடிவுரை

நாட்டுப்புற நடனங்களின் மூலமாக மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. காலத்தால் அழியாமல் கலாச்சாரமாகி நம் வாழ்வோடு இணைந்து கலந்துவிட்ட கிராமியக் கலைகளை வாழ்த்துவோம்! வளர்ப்போம்! அழிந்து வருகின்ற இக்கலையை அழியாக் கலையாக மாற்றுவோம்!

◆

விரிவுரையாளர்,
இசைத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

96

பாவைக் கூத்து

முனைவர் திருமதி பா. மாலினி

மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில் களையும் கலைகள் என்று அழைக்கலாம். தச்சுவேலை, கருமார் வேலை, உழவு, வாணிபம், நெசவு, மருத்துவம் முதலிய தொழில்கள் யாவும் கலைகளே. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்று தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. மனிதனுக்கு இன்பத்தைத் தருவது அழகுக் கலைகளே. இக்கலைக்கு இன்கலை, கவின்கலை, நற்காலை என்ற வேறு பெயர்களும் உண்டு. அழகுக் கலைகள் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும், இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கின்ற படியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; போற்றி வளர்க்கிறார்கள்; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள். அழகே ஒரு கலையாகும். சங்க காலத்தில் பூம்புகார் ஒரு கலைக்கூடமாகத் தோற்றமளித்தது. இக்கலைகள் பெரும்பாலும் ஐந்து வகைப்படும். அவை கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பன. நாடகத் தமிழில் நடனம், நாட்டியம், கூத்து என்பனவும் அடங்கும்.

கூத்துக்கலை

கூத்துக்கலை இசைக்கலையைப் போலவே பழைமை வாய்ந்ததாகும். வாயினால் பாடப்பட்ட இசைப்பாட்டுக்குச்

செந்துறைப்பாட்டு என்றும், கூத்துக் கலைக்குரிய பாட்டுக்கு வெண்டுறைப் பாட்டு என்றும் பெயர் உண்டு. கூத்துக் கலையில் பதினோரு ஆடல் உண்டு. இக்கூத்து தெய்வங்களின் பெயரால் ஆடப்பட்டபடியால், தெய்வ விருத்தி என்றும் அழைக்கப்படும். தெய்வங்கள் தமது பகைவரான அவுணர்களுடன் போர்செய்து வென்று, அவ்வெற்றியின் மகிழ்ச்சி காரணமாக ஆடிய ஆடல்கள் இவை. அவை அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டுரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என பதினோரு ஆடலாகும். இவைகளில் முதல் ஆறும் நின்று ஆடுவன; பின் ஐந்தும் வீழ்ந்து ஆடுவன.

"அல்லியம் கொட்டி குடைகுடம் பாண்டுரங்கம்
மல்லுடன் நின்றாடல் ஆறு''
"துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து''

இந்த கூத்துகளை ஆடத் தொடங்கும் முன்னர், முகநிலையாகத் திருமாலுக்கும், சிவனுக்கும், திங்களுக்கும் தேவபாணி பாடப்படும். அப்பாடல்களை அடியார்க்கு நல்லார் தமது உரையில் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

சிலம்பில் இளங்கோவடிகளின் தமயனான சேரன் செங்குட்டுவன், வஞ்சி மாநகரத்திலே, ஆடக மாடம் எனும் அரண்மனையின் நிலா முற்றத்திலே, மாலை நேரத்திலே தன்னுடைய தேவியோடு வீற்றிருந்தான். அவ்வமயம், கூத்தச் சாக்கையன் எனும் நாடகக் கலைஞன் தன் மனைவியுடன் வந்து இருவரும் சிவபெருமான் உமையவள் போன்று வேடம் புனைந்து, இந்த கொட்டிச்சேதன் எனும் ஆடலை ஆடிக்காட்டினான். அதனைச் செங்குட்டுவன் தன்தேவியுடன் கண்டு மகிழ்ந்தான் என்று சிலம்பு நம்மை மகிழ்விக்கிறது.

"உமையவள் ஒருதிற னாகி ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பார்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்துச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து''

என்பது அப்பகுதியாகும்.

பஞ்சலோகத்தினால் செய்யப்பட்ட குடத்தைக் கொண்டு ஆடப்படும் குடக்கூத்தை.

"வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீள்நிலம் அளந்தோன் ஆடிய குடம்''

என்பது சிலம்பு. இவ்வாறு இவற்றை விளக்கினால் விரியும் என்று சுருங்கக் கூறி இந்த பதினோருவகை ஆடல்களையும் அந்தந்தப் பாத்திரத்தின் ஆடை அணிகளை அணிந்து, மாதவி என்னும் கலைச்செல்வி மேடைமேல் ஆடி மக்களையும், மன்னனையும், தேவியையும், மகிழச் செய்தாள் என்பது சிலம்பு.

பாவைக் கூத்து, குழந்தைகள் முதல் பெரியவர்வரை, நீதிக் கதைகளைப் புகட்டி நன்னெறிப்படுத்த அன்று முதல் இன்றுவரை பயன்பட்டு வருகின்றது. இக்கூத்து பாமரர் கூத்தாகும்; நகர்ப்புறங்களை விடக் கிராமங்களில்தான் இக்கூத்திற்கு இன்றும் உயிரோட்டம் இருக்கிறது. என்றும் எக்கலைக்கும் கிராமங்கள்தாம் வாழ்வளிக்கின்றன; அழிந்தொழியாமல் காத்து வருவன கிராமங்களே. பெரும்பாலும் இப்பாவைக்கூத்து பழைய காலங்களிலும் பாமரக் கூத்தாகத்தான் இருந்திருக்கிறது. இதை அடியார்க்கு நல்லார் உரை "எழுவகைக் கூத்து மிழிகுலத்தோரை, ஆட வகுத்தன னகத்தியன் றானே" (உ.வே. சாமிநாதய்யர், *1944, 80)* என்று குறிப்பிடுகிறது. "இழிஞர்" என்பது "பாமரர்" என்று பொருட்படுத்தலே சாலச் சிறந்தது. (மு. இராமசாமி, *1983: 1)* ஆக, கூத்தெல்லாம் பாமரர்-நாட்டுப் புறத்தார் கூத்தாகவே இருந்திருக்கிறது; இருக்கிறது. பாவைக்கூத்து கிராமத்தில் "பண்பாட்டுக் கலைக்களஞ்சியமாக"ப் போற்றப்பட்டு வந்திருக்கிறது.

பாவைக்கூத்து இருவகைப்படும். ஒன்று மரப்பாவைக் கூத்து; இன்னொன்று தோல்பாவைக் கூத்து. பாவைக்கூத்து என்றால் இருவகை கூத்துகளையும் குறிப்பிடுவதுதான். மரப்பாவைக் கூத்தைப் பொம்மலாட்டம் என்று வடமாவட்டங்களில் வழங்குகிறார்கள். கிராமங்களில் பாவைக்கூத்து, மரப்பாவைக் கூத்து என்றுதான் அழைக்கிறார்கள்.

மரத்தால் பொம்மைகள் செய்து அவற்றைக்கொண்டு கூத்து நடத்துவது மரப்பாவைக் கூத்து. தோலில் ஓவியம் வரைந்து அவற்றைக் கூத்தில் காட்டுவது தோல்பாவைக் கூத்து ஆகும். திரைக்கு வெளியே பாவையைக் குதிக்கச் செய்து கூத்து நடத்துவது மரப்பாவைக் கூத்து. திரைக்குள்ளே தோல்பாவையைக் காட்டி, ஆட்டி பார்வையாளர்கள் பார்க்கும்படிக் கூத்து நடத்துவது தோல்பாவைக் கூத்து ஆகும்.தோல் பாவைக்கூத்தில் நிழலைத்தான் பார்வையாளர்கள் திரையில் காணமுடிகிறது. ஆகவே, இதைத் தோல்பாவை நிழற்கூத்து என்றும் கூறுகிறார்கள். இத்தகைய நிழற்கூத்தில் மர அட்டை, தகரம் ஆகிய இவற்றைக் கொண்டும் கூத்து நடத்துகிறார்கள்.

மரப்பாவைக் கூத்து நாட்டுப்புறக் கலையாக இருந்தாலும், கிராமங்களை விட்டு விலகி நகர்ப்புறம் நோக்கி வந்து விட்டதாகத் தெரிகிறது. தோற்பாவை நிழற்கூத்து போன்று கிராமங்களில் தொழில்முறையாக நடத்தவில்லை. ஒரு குடும்பக் கலையாக - வாழ்க்கைக்குப் பொருள் தேடிக்கொடுக்கும் கலையாக இதை நடத்தவில்லை. கோயில் விழாக்களிலும், பொருட்காட்சிகளிலும் பொழுதுபோக்குவதற்காகவும், நீதிக் கதைகளைப் புராணங்களிலிருந்து எடுத்துரைத்து உணர வைப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

பாவைக்கூத்து என்பது பொதுப்பெயர் என்பதும், மரப்பாவைக் கூத்து, தோல்பாவைக் கூத்து என்று இருவகையாக அழைக்கப்பெறும் என்பதும் தெளிவாகின்றன. பாவைக்கூத்து பொதுப்பெயராக இருந்தபோதிலும் மரப்பாவைக் கூத்தைக் குறிப்பிடவே பெரும்பாலும் பயன்பட்டு வந்திருக்கிறது என்றும் தெரிகிறது. தோல் பாவைக்கூத்து, தோல்பாவை நிழற்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. தோல்பாவையும் மரப்பாவையும் நிழலாகக் காட்டி கூத்து நடத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

சங்க இலக்கியங்களில் குறுந்தொகையின் 'நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி' என்பதற்கு உரையெழுதுகையில் பாவையை மகவாகக் கொண்டு விளையாடுதல் மகளிர் வழக்கம் என்பர் (குறுந்தொகை, 114). 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல' (குறுந். 8) என்ற உவமையின் வழியும் பாவைக்கூத்தைப் பற்றிய செய்தி சொல்லப்பட்டுள்ளது.

> "வெறிகமழ் துறுமுடி தயங்க நல்வினைப்
> பொறியழி பாவையின் கலங்கி..."

என்ற பாடலில் கயிற்றிலிருந்து அறுந்து விழுகின்ற பாவையைப் பற்றிய குறிப்பு வருகின்றது.

அல்லியம் என்பது பாவைக்கூத்தாகும். அல்லிய நடன வகையைச் சிலப்பதிகாரமும் கூறுகிறது. பதினோருவகை ஆடலில் அல்லியமும் ஒன்று. பெயர் தெரியாத உரையாசிரியர் அல்லியத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்த பாவைகள் நடனமிடுவது உண்டு என்று கூறுகிறார். இதிலிருந்து பாத்திரங்கள் நேரடியாக ஏற்று நடிப்பது பாவைக்கூத்தில் உண்டு என்பது தெரிகிறது.

அல்லியம் என்பது வரிக்கூத்தாகும். குரவையாகிய வரிக் கூத்தாகும். குரவைக் கூத்துதான் அல்லியமாகும். அல்லியமாகிய

குரவைக் கூத்தைப் பாவைக்கூத்தில் காட்டுவது அல்லியப் பாவைக் கூத்தாகும். அதாவது, குரவைக்கூத்தில் பயன்படும் பாடல், நடன முறையைப் பாவைக்கூத்தில் பயன்படுத்தி ஆடுவது அல்லியப் பாவைக் கூத்தாகும்.

மரப்பாவைக் கூத்தைப் பொம்மலாட்டம் என்று கூறுதுண்டு. பாவைக்கூத்து என்ற பொதுப்பெயராலும் சொல்லுவதுண்டு. மரத்தாலாகிய பொம்மைகளை வைத்துக் கூத்து நடத்துவதே மரப்பாவைக் கூத்து என்று முன்னைய பகுதியில் சொல்லப்பட்டது. ஆனால், கூத்துக் கலைஞர் பாலசுப்பிரமணியம் பொம்மலாட்டத்துக்குச் சரியான தமிழ்ப் பதம் பாவைக்கூத்து என்கிறார். தோல்பாவை நிழற்கூத்தும் இருப்பதால் வேறுபடுத்திக் காட்டுவதற்காக மரப்பாவைக் கூத்து என்றே சொல்லுவது சாலச் சிறந்தது.

மரப்பாவைக் கூத்தில் பயன்படுத்தும் பாவை அனைத்தும் மரத்தாலானவைதாம். ஆனால், அவற்றைக் கூத்தில் இயக்கும் முறையைக் கொண்டு பாகுபடுத்தப்படுகின்றன.

நூல் பாவை

பாவையின் கை, கால், தலை இடுப்பு ஆகியவற்றில் இணைப்பு இருக்கும். இந்த இணைப்பில் நூல் கட்டியிருப்பார்கள். அந்த நூல் கயிற்றை இயக்குபவர் பாவையை ஆட்டி, பிடித்து, அசைத்து இயக்குவார். இந்த நூல் அசைப்பால் பாவை அசைகிறது; இயங்கக் கூத்தாடுகிறது. ஆகவே, இத்தகைய மரப்பாவைக் கூத்தை நூல் பாவை என்றும் கூறுவர்.

கையுறைப் பாவை (Glove Puppet)

பாவையின் அடிப்பாகத்திலுள்ள உள்ளீடற்ற பகுதியைப் பெருவிரல், ஆட்காட்டி விரல், சுட்டுவிரல் ஆகியவற்றோடு பொருத்தி, அசைத்து ஆட்டிக் கூத்து நடத்துவது உண்டு. இத்தகைய பாவையைக் கையுறைப் பாவை என்று கூறுகிறார்கள்.

கம்பிப் பாவை (Rod Puppet)

பாவையின் தலை, கால், இடுப்பு, கை போன்ற பகுதிகளிலுள்ள இணைப்பில் கம்பியைப் பொருத்திப் பாவையை இயக்குவது கம்பிப் பாவையாகும். பெரும்பாலும் பெரிய உருவத்தோடு கூடிய பாவைகளையே கம்பிகொண்டு இணைத்துப் பாவைக்கூத்து

நடத்துகிறார்கள். இந்நாடகத்தில் இத்தகைய பாவைக்கூத்து மிகுதியாக நடத்துகிறார்கள்.

ஆக, மரப்பாவைக் கூத்து நூல்பாவை, கைப்பாவை, கையுறைப் பாவை, கம்பிப் பாவை என்று நான்கு வகைப்படும். இயக்கும் சக்திகளால் பாவைக்கூத்து வகைப்படுத்தப்படுகிறது.

கைப்பாவை (Hand Puppet)

பாவையின் தலைப்பகுதியோடு இணைத்த மரச்சட்டத்தைக் கையில் பிடித்துக் கொண்டு பாவையை ஆட்டுவது கைப்பாவையாகும். ஆங்கிலத்தில் பாவைக்கூத்தை puppet show - என்று கூறுகிறார்கள்.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தஞ்சாவூர்ப் பகுதியில்தான் இப்பாவைக் கூத்து பரவலாக நடத்தப்பட்டு வந்தது. தமிழகமெங்கும் இன்றும் அப்பகுதியினரே பாவைக்கூத்து நடத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்போது ஆசு வீர கவிராயர் என்பவர் அரிச்சந்திர புராணத்தைச் செய்யுளாக்கியிருந்தார். பின் "அதை நாடகத்திற்காக உரைநடை, தரு, விருத்தம், ஓரடிப்பதம், கீர்த்தனை என்று ஆக்கம் செய்தார்கள். இம்மாதிரி ஆக்கம் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் தண்டாச்சிப் பிள்ளையாவார். அவருடைய அரிச்சந்திரக் கதையின் நாடக ஆக்கம் அச்சிடப்பட்டு விற்பனைக்கும் வந்தது. இவருடைய அரிச்சந்திர நாடகம்தான் பாவைக் கூத்துக் கதையானது. முதன் முதலில் இந்த அரிச்சந்திர கதையை பாவைக்கூத்தில் தஞ்சாவூருக்கருகில் உள்ள சித்தநாயக்கன் பேட்டையைச் சார்ந்த நாணு அய்யங்கார், கூத்துக் கதையாகப் பயன்படுத்தினார்.

பாவைக் கூத்து கோயில் விழாக் காலங்களில் நடத்தப்பட்டு வந்தது. நேர்த்திக் கடனாகப் பாவைக்கூத்து நிகழ்ச்சிகளை நடத்தச் செய்தார்கள். கிராம தெய்வங்களை அமைதிப்படுத்த வேண்டியும் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பாவைக்கூத்து நடத்துவது நல்லது என்ற நோக்கில் மக்கள் இருந்தார்கள். பெரும்பாலும் பாவைக்கூத்து ஊர் மந்தைகளிலேயே நடத்தப்பட்டு வந்தது. முக்கிய தெருச் சந்திப்புகளிலும் நடத்துவது உண்டு. இதற்காக 200 அல்லது 300 மீட்டர் நீளத்தில் பந்தல் போடுவது உண்டு. பாவைக்கூத்தில் மேடையில் தோன்றும் கலைஞர்கள் மனிதர்களாக இருப்பதில்லை. பொம்மைகளின் ஆதிக்கம் தான். அவைகளை இயக்கும் இயக்குநர்களாகப் பாவையாட்டிகளையும், பின்னணிக் குரல் கொடுப்பவர்களையும், வாத்தியக் கருவிகளை இசைப்பவர்களையும் இங்கு கலைஞர்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

பொதுவாகப் பாவைகளை இயக்குவதற்கு இருவர் இருப்பர். அவருக்குத் துணையாக ஒருவர் பாவைகளை எடுத்துக் கொடுக்க இருப்பார். உரையாடல்களைப் பேசுவதற்கு ஒருவரும் பாடல்களைப் பாடுவதற்கு ஒருவரும் இருப்பார். இவ்விருவரும் பாடல்களையும் உரையாடல்களையும் சேர்த்தும் தனித்தும் தருவார்கள். பாவைகளின் இணைப்பில் பிணைக்கப்படும் ஆதாரத்தைக்கொண்டு பாவைகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு, பிணைக்கப் பயன்படும் ஆதாரம் சுண்டுக் கயிறு என்று அழைக்கப்பெறும். சுண்டுக் கயிறுகள் குச்சியில் கட்டப்பட்டுள்ள வகை, குச்சி வகை என்று அழைக்கப்பெறும்.

குச்சி வகை

பொம்மையின் தலை, கை, கால், முதுகு ஆகியவற்றில் பிணைக்கப்பட்டுள்ள சுண்டுக் கயிறுகளின் மற்றொரு முனை அரை அடி நீளமுள்ள மூங்கில் குச்சிகளில் கட்டப்பட்டிருக்கும். பாவையாட்டி இக்குச்சிகளைப் பிடித்துக்கொண்டு கயிறுகளை அசைக்கும்போது பொம்மைகள் ஆட்டப்படுகின்றன - இயக்கப்படுகின்றன.

வளைய வகை

பொம்மையின் தலை, முதுகில் உள்ள சுண்டுக் கயிறுகள் ஒரு வளையத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. பொம்மையின் கைகளில் கயிறுகளுக்குப் பதிலாகக் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன. இதைக் கம்பிப்பாவை என்றும் கூறுவர். பரத நாட்டியம் போன்ற ஆட்டம் ஆடப் பயன்படும் பாவைகளுக்கு இத்தகைய அமைப்பில்தான் சுண்டுக் கயிறுகள் இணைக்கப்படுகின்றன. இம்மாதிரி உள்ள கயிறு அமைப்பு பொம்மை நாட்டியமாடும்போது தலை, கை அசைவுகளை நன்கு காட்டப் பெரிதும் உதவுகிறது. வளையத்தில் மட்டும் ஆறு சுண்டுக் கயிறுகள் கட்டப்படுகின்றன. இந்தவகைப் பொம்மையின் கைகள் போலவே, தோள், முட்டி, மணிக்கட்டு ஆகிய மூன்று இடங்களில் இணைப்புகள் உடையதாகச் செய்யப்படுகின்றன. இதனால், நாட்டிய மகளிர் கைகளால் இடும் முத்திரை போன்ற அபிநயங்களை ஓரளவுக்குச் செய்துகாட்ட முடிகிறது.

பாவையாட்டி தன் தலையில் கட்டப்பட்டுள்ள சும்மாடு போன்ற தலைப்பாகையில் வளையத்தை மாட்டிக்கொண்டு தன் இரு கைகளாலும் பொம்மைகளின் கைகளில் உள்ள கம்பிகளைப் பிடித்துக் கொண்டு பாவையினை இயக்குகிறான். பாவையின் தலைக்கயிறு அனைத்தும் வளையத்தில் கட்டப்பட்டிருப்பதால், பாவையாட்டி தன்

தலையினை அசைக்கும்போது அதற்கேற்றவாறு பாவையின் தலையும் அசைகின்றது. இப்பொம்மையை “கிஞ்சன் பொம்மை” என்றும், இது ஆடும் நடனம் “கிஞ்சன் டேன்சு” என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பின்னணி இசைக்கருவிகள்

இக்காலத்தில் பாவைக்கூத்து நிகழ்ச்சியில் ஆர்மோனியம், தபேலா, டோலக், சால்ரா, சலங்கை ஆகிய கருவிகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. ஆனால், முன் காலத்தில் துத்தி, சுதி, மத்தளம் ஆகிய இசைக்கருவிகள் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிய வருகின்றது.

கூத்து நடத்தும் பாங்கு

பாவைக்கூத்து மேடை ஆக்கம் மூன்று வகைகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. கடவுள் வாழ்த்து, நகைச்சுவைப் பகுதி, கதைப்பகுதி என்ற முறைகளே அவை.

கடவுள் வாழ்த்து

எல்லாக் கூத்துகளும் தொடங்கும்போது பாடப்பெறும் பிள்ளை யார் பாட்டுதான் இங்கும் பாடப்படுகிறது. பபூன் பிள்ளையாரிடம் சென்று அன்றைய கூத்து செம்மையாக இடையூறின்றி நடந்தேற வேண்டும் என்று வேண்டுவான். இந்த முறையில் இக்காட்சி இருக்கிறது.

கேளிக்கைப் பகுதி

மந்திர தந்திரக் காட்சி, பரத நாட்டியக் காட்சி, பூசாரி கரகமெடுத்து ஆடும் காட்சி, பூசாரி பேயோட்டும் காட்சி ஆகிய காட்சிகள், கூத்துக்கதை ஆரம்பிக்கும் முன் துவங்குகின்றன. கூட்டம் சேருவதற்காகவும், கூத்தில் பார்வையாளர்களை ஒருங்கிணைப்பதற்கா கவும் இக்காட்சிகள் இடம் பெறுகின்றன. சங்கரதாஸ் நாடகத்தில் பபூன் - கோமாளி செய்யும் செயல் போன்று இக்காட்சிகள் இடம் பெறுகின்றன. இவற்றில் சில காட்சிகள் மீண்டும் கதையில் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக இடையில் காட்டப்படுவதுண்டு.

கதைப்பகுதி

கும்பகோணப் பகுதியில் நடக்கும் பாவைக்கூத்துக் கதைகளுக்கு முன்னோடியாக இருந்தது அரிச்சந்திரன் கதைதான். அதன்பின் வள்ளித்

திருமணம், சீதா கல்யாணம், பிரகலாதன், அருணகிரி நாதர், அய்யப்பன், பாமா விஜயம், கண்ணகி, மார்க்கண்டேயன், நல்லதங்காள், சிறுத்தொண்ட நாயனார், ஸ்ரீசங்கீத தியாக பிரும்மம், பக்த ருக்மாங்கதா என்ற நாடகங்கள் பாவைக் கூத்துக் கதைகளாக நடத்தப்படுகின்றன.

மதுரைப் பகுதியில் தோல்பாவை நிழற்கூத்துதான் மிகுதியான அளவில் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றது. ஆனால், மரப்பாவைக் கூத்தைப் புதிய முறையில் மதுரை இறையியல் கல்லூரி தொடர்பியல் துறையைச் சேர்ந்த திரு. பரட்டைக் குழுவினர் நடத்தி வருகின்றனர். மற்ற அரங்கக் கலைகளைவிட மக்களுக்கு இக்கலையின் வழியாகச் செய்திகளை இலகுவாகக் கொண்டு செல்லலாம். புரியாத, விளக்க முடியாத பிரச்சினைகளைக்கூடப் பாவைக்கூத்தின் வழியாகப் புரிய வைக்கலாம் என்பதைத் தெரிந்து கொண்டு பாவைக்கூத்து நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகவும் முறையாகவும் நடத்தத் திட்டமிட்டனர்.

இப்பாவைக் கூத்திற்கு முன்னோடியாக இருந்தது பெங்களூர் மெஸ்கா குழுதான். மெஸ்கா தன் குழுவினருடன் கன்னடத்தில் சமுதாயப் பிரச்சினையை எடுத்துக்கூறுவதற்காகப் பாவைக்கூத்து நடத்தி வருகிறார். அவர் பயன்படுத்தி வருவதும் கைப்பாவைகளே (Hand Puppet) ஆகும். மெஸ்கா மதுரைக்கு வந்தபோது திரு. பரட்டை அவர்கள் பாவைக் கூத்து நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார். மெஸ்காவும் வேண்டிய உதவிகளைச் செய்திருக்கிறார். தான் பயன்படுத்திவரும் பாவைகளைப் பற்றியும், அவைகளை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றியும் சொல்லியிருக்கிறார். நிகழ்ச்சிகளை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார். அதன்பின் மதுரைக் குழுவினர் உடனே நிகழ்ச்சிகளைத் தயாரித்துப் பாவைகளை அங்கங்கே கிடைக்கக்கூடிய உடைந்த பொருட்களைக் கொண்டு தயாரித்து வண்ணம் தீட்டி, அரங்கேற்றி விட்டனர். இதுதான் மதுரைப் பகுதிப் பாவைக்கூத்தின் சுருங்கிய வரலாறு.

பாவைகளை இயக்கும் விதம்

கூத்தரங்கின் திரைக்குப்பின் பாவையாட்டி அமர்ந்திருப்பார். அவர் வலது காலில் ஒருகட்டை, கையில் ஒரு சலங்கை, சுற்றிலும் பொம்மைகள் இருக்கும். அவர் தலைக்கு மேலே ஒரு விளக்கு பெட்ரோமாக்ஸாகவும் மின்சார விளக்காகவும் இருக்கலாம். அதன் ஒளியில் அந்த விளக்கிற்கு முன்னால் பாவையாட்டி ஆட்டுகின்ற

பாவையின் நிழல் திரைக்கு வெளியே தெரியும். இவ்விடத்தை வட்டமான துணியால் மறைத்திருப்பர். பாவையாட்டி ஒருவரே பாவைகளை எடுத்து ஆட்டுவார்; குரல் கொடுப்பார்; சண்டைக் காட்சியில் கால் கட்டையை ஓங்கி அடித்து ஒலியெழுப்புவார். நிஜப் போர்க்களம் போன்று இருக்கும்.

கதைப்பகுதி

கடவுள் வாழ்த்து, கூத்துத் தொடக்கம், கதைப்பகுதி, முடிவு என்ற முறையில் நிகழ்ச்சி பகுக்கப்படுகிறது.

கடவுள் வாழ்த்துப் பாடலில் கணபதி, சரஸ்வதி ஆகிய தெய்வ வணக்கங்கள் கூறப்படுகின்றன. கணபதி பாவையைத் திரையில் காட்டுவர். கடவுள் வாழ்த்து முடிந்தவுடன் கோமாளி தோன்றி, கதைக்கு முன்பகுதியைக் கூறுவார். அதன்முன் தன் அறிமுகப் பாடலைப் பாடுவார். பின் சில கேளிக்கை நிகழ்ச்சிகளைக் காட்டுவார். கோமாளிகளாக உச்சிக் குடும்பன், உழுவைத் தலையன் ஆகிய இருவர் இருப்பார்கள்.

இதன்பின் கூத்து அறிமுகம் நடக்கும். இதைக் கோமாளியே சொல்வார். இக்கூத்து அறிமுகப் பகுதி, அமைதிப்படுத்தல், கிராம தேவதை வணக்கம், கிராம மக்கள் வணக்கம், குற்றங் குறைகள் பொறுக்க வேண்டல், கதை நிகழ்ச்சி, சிறுவர்களுடன் நகைச்சுவை, அடுத்த நாள் கதை நிகழ்ச்சி, வேண்டுகோள் என்ற முறையில் அமையும். பின் கதை தொடங்கும். கதை முடிந்தவுடன் முடிவுரையாக அடுத்த நாள் நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு கூறப்படும். இராமாயணம், பாரதக் கதைகளையே பெரும்பாலும் நடத்துகின்றனர். நல்லதங்காள் கதை பாவைக் கூத்தின் சிறப்பம்சமாகும்.

மக்கள் ஊடகமாக - தொடர்பாக இருக்கும் நாடகம், கூத்து வழியாகச் செய்திகளைச் சொல்லிப் பதவியைப் பிடித்தவன், மீண்டும் தன் செய்திகளைச் சொல்லிப் பதவியைப் பிடித்தவன், மீண்டும்தன் செய்திகளைக் கூற அதே ஊடகத்தைப் பயன்படுத்துகிறான். ஆகவே, அந்த அரசியல் தலைவன் இங்கு மீட்டுருவாக்கம் பெறுகிறான். இந்த மீட்டுருவாக்கத்திற்குப் பயன்படுவது பாவைக்கூத்தே.

பாவைக்கூத்து மக்களின் தொடர்புக்கும், சமுதாயத்தின் ஒரு பகுதியின் பரிமாற்றத்திற்குமான கலை. பாவைக்கூத்து மக்களின் தகவல் தொடர்புக்குப் பயனாகி வரும் கலையாகும். வளர்ந்துவரும் நாகரிக உலகில் புதுமையான நிகழ்ச்சிகளின் வழியாகச் செய்திகளை மக்களுக்கு

உணர்த்தும் அரிய சாதனமாகப் பாவைக்கூத்து இருந்து வருகிறது. சமுதாயத்தின் பல அங்கங்களிலும் ஊடாடிய நிகழ்ச்சிகளைத் தெளிவாக மக்களுக்கு உணர்த்தும் ஊடகமாக இக்கலை இருந்து வருகிறது.

மக்கள் சமுதாயத்தில் அவர்களுக்கே தெரியாது நடக்கும் கெடுதல்களையும், நல்லவைகளையும் கதைகளின் மூலம் சுட்டிக்காட்டும் ஊடகமாகச் செயல்படுகிறது. தூரத்தே நடைபெறும் எதிரிடைச் சமூகச் செயற்பாடுகளையெல்லாம் கூர்ந்து கவனித்து நிகழ்ச்சிகளாக்கி, மக்களுக்குத் திருத்தமுறும் தகவலைக் கொடுக்கும் அரிய சாதனமாகவும் - தகவல் தொடர்பாகவும் செயல்படும் செயல்முறை விளக்கமாகப் பாவைக்கூத்து இருக்கிறது. சுயமரியாதைப் பிரச்சாரத்திற்காகவும் சமயப் பிரச்சாரத்திற்காகவும் பயன்படும் பாவைக்கூத்து கல்வி புகட்டும் ஊடகமாகவும் கல்வி நிலையங்களில் செயற்படுத்தப்படுகிறது. பள்ளிக் குழந்தைகள் இக்கலையின் வழியாக இலகுவில் அரிய கருத்துகளையும் புரிந்து கொள்ளும்படியாகச் செய்து வருகிறார்கள்.

பாவைகளை இயக்கும் விதம்

மேடைக்கு - திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு பாவை யாட்டி, மேடையில் தோன்றச் செய்ய வேண்டிய பாவையை எடுத்துக் கொள்கிறார். பாவையின் கால் போன்ற சட்டத்தை ஒரு கையில் பிடித்துக்கொண்டு அடுத்த கையைப் பாவையின் கையாகிய குறுக்குச் சட்டத்தின் வழியே, செயல்படுத்த வைத்துக் கொள்கிறார். இக்குறுக்குச் சட்டத்தில் சட்டையின் கைப்பகுதி இருக்கும். ஆகவே, பாவையாட்டி கையை இதன் வழியே நீட்டும்போது குறுக்குச் சட்டம் தெரியாது. பாவையாட்டியின் கைதான் பாவையின் கைபோன்று இருக்கும். ஆகவே, இக்கைகளால் பாவைகளே முகம் சொரிவது போன்ற காட்சிகளைத் தத்ரூபமாகச் செய்துகாட்டி வருகிறார்கள். ஆண், பெண் இணைந்த காட்சியில் பெண் பாத்திரத்திற்குப் பாவையாட்டியாகப் பெண்களே சில சமயங்களில் இருக்கிறார்கள். கைகளைக் கொண்டுதான் இத்தகைய பாவைக் கூத்திற்கு உயிரோட்டம் ஏற்படுகிறது. இவ்வாறு, பாவையாட்டியின் ஒரு கை பாவையின் கால் சட்டத்தைப் பிடிக்க, அடுத்த கை சட்டத்தின் வழியே சட்டையின் கைப்பகுதியில் செயலில் இருக்கும். திரைக்கு மேலேதான் இச்செயல் நடக்கிறது.

நாட்டியம் ஆடும்போது பாவையாட்டியும் நாட்டியம் ஆடுகிறார். பாவையாட்டியின் உடலசைப்பினைக் கொண்டுதான் பாவையின் அசைவும் இருக்கிறது.

பாவைக்கூத்து என்பது பொதுப்பெயர் என்றும், மரப்பாவைக் கூத்து, தோல்பாவைக் கூத்து என்று இரண்டு வகையாக அது அழைக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிய வருகிறது. மரப்பாவைக் கூத்து இன்று உயர்குடி மக்களாலும், தோல்பாவை நிழற்கூத்து சமுதாயத்தில் தாழ்ந்த மக்களாலும் நடத்தப்பட்டு வந்தாலும், முன்னைய காலகட்டங்களில் இரண்டும் சாதாரண - கிராமச் சமுதாய மக்களாலேயே நடத்தப்பட்டு, மக்கள் கலையாக - நாட்டுப்புறக் கலைகளாக இருந்தன என்றும் அறிய முடிகின்றது.

இன்று உலக நாடுகளில் எல்லாம் பாவைக்கூத்து நிலைபெற்று இருந்தாலும் அதற்குத் தோற்றம் என்று சொல்லும்படியான நாடுகளில் தமிழ்நாடும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று தெரிகிறது. அவ்வளவு பழமையானது நம் நாட்டுக்கலை.

◆

பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

97

தெருக்கூத்து அன்றும் இன்றும்

ப. மீனாட்சி

முன்னுரை

மனிதனிடம் இயல்பாகவே கலை உணர்வு உள்ளது. தங்களது இன்ப துன்ப நிகழ்வுகளின் வடிகாலாகக் கலையைப் பயன்படுத்து கின்றனர். நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் ஜீவ ஊற்றாகும். ஏனென்றால், அவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள நிகழ்வுகளே கலையில் வெளிப்படுகின்றன. இதில் நிகழ்த்துக் கலை என்பது மக்களின் பொழுதுபோக்கிற்காகவும் அறக்கருத்துக்களை விரும்பத்தக்க வகையில் எடுத்துக் கூறக்கூடியதாகவும் இருக்கின்றது. நிகழ்த்துக் கலையில் சிறப்பிடம் பெறுவது கூத்தாகும். இது கண்ணுக்கும் செவிக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிக்கும் தன்மை உடையது. நாடக முறையில் கட்டைகளால் ஆன அணிகலன்கள் அணிந்து ஏதேனும் ஒரு கதையை ஆடலும் பாடலுமாக நடத்திக் காட்டுவதே கூத்து எனப் படும்.[1] இத்தகைய கூத்து பலவகைப்படினும் மக்கள் வரவேற்கத்தக்க வகையில் தெருக்கூத்து உள்ளது. இக்கூத்து நாடக மேடையோ திரை களோ இல்லாமல் எளிய முறையில் திறந்தவெளியில் நடத்தப் படுகிறது.

தெருக்கூத்து விளக்கம்

“தெருக்கூத்து ஒலி வடிவமாகக் கேட்டுப் பாதுகாத்து வளர்க்கப் பட்டு வந்திருப்பது போற்றுதற்குரியது.”[2] தெருக்கூத்து என்பதற்குப்

பலரும் பலவிதமான கருத்துகளை தெரிவிக்கின்றனர்.

"நாட்டுப்புற நாடக வடிவமான தெருக்கூத்து தமிழகத்தின் பழங்கலைகளில் தலையாய ஒன்று. வீதிகளில் நிகழுகின்ற நாடகம் சாம்பெனகல்.''[3]

"தெருக்கூத்து என்ற கலைக்கு கட்டை கட்டியாகம் நாடகம் என்பது சரியான விளக்கமாக அமையும். மரக்கட்டை அணிகலன்களைக் கட்டிக்கொண்டு திறந்த வெளியில் ஆடப்படுவதே தெருக்கூத்தாகும்.[4]

திண்டிவனம் வி.ர.சுப்புராயப்பிள்ளை அவர்கள் கூத்தென்பது அம்மன் கோவிலுக்கு மட்டுமே உரிய கலை; வேறு கோவில்களில் ஆடுவது மரபில்லை''[5] என்று கூறினார்.

தெருக்கூத்து என்பது நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்தது. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளிகளிலும் நடைபெறும் இக்கூத்து பெரும்பாலும் இரவு நேரங்களில் நடைபெறும் என்று தமிழ்க் களஞ்சியம் கூறுகிறது.

"கட்டை கட்டியாடும் கூத்து என்ற பெயரில் இன்றும் கட்டைகளாகிய அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து'' என்பார் டாக்டர் அ. அறிவுநம்பி.[6]

தெருக்கூத்தர்களின் வகைகள்

நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச்சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கைமுறை முதலியவற்றை எடுத்து விளக்கக்கூடிய தெருக்கூத்தர் களை டாக்டர் அறிவு நம்பி அவர்கள் வகைப்படுத்தியுள்ளர்.

1. மரபு முறைக் கூத்தர்கள்

அ. கூத்தையே தொழிலாகக் கொண்டோர்.

ஆ. கூத்தைத் துணைத்தொழிலாகக் கொண்டோர்.

2. பயில் முறைக் கூத்தர்கள்.

3. இனமுறைக் கூத்தர்கள்.

பரம்பரை பரம்பரையாகக் கூத்தாடும் தொழிலை மட்டுமே செய்பவர்கள் மரபுமுறைக் கூத்தர்கள். கூத்து கிடைக்காத தருணத்தில் பிற தொழிலுக்குச் செல்லும் வழக்கமும் உண்டு. தன் பரம்பரைத் தொழிலை விட்டுவிடக் கூடாது என்பதற்காக அதனைத் துணைத்

தொழிலாகச் செய்பவர் கூத்தைத் துணைத் தொழிலாகக் கொண்டோர் வகையைச் சேர்வர். பயில்முறைக் கூத்தர்கள் விருப்பத்தின் பொருட்டும், ஆர்வத்தின் பொருட்டும் கற்றுக் கொள்வர். இனமுறைக் கூத்தர்கள் தங்கள் இனத்தாரின் கோவில் திருவிழாக்களில் மட்டும் தெருக்கூத்து நடத்துவர்.

இத்தகைய கூத்து சங்க காலத்திலிருந்து உள்ளது என்பதைச் சிலப்பதிகாரத்திலிருந்து (குரவைக்கூத்து) அறியலாம். இதனைக் கதை தழுவியவை என்றும், உடல் திறமையை வெளிப்படுத்துவன என்றும் பிரிப்பர்.

1. கதை தழுவிய கூத்து

அ. மனிதர்களின் கூத்து

ஆ. பொம்மைகளின் கூத்து என்பவையாகும்.

இதில் தெருக்கூத்து, கணியான் கூத்து, டப்பாங்கூத்து போன்றவை மனிதர்களின் கூத்து வகையைச் சார்ந்தன ஆகும்.

அன்றைய தெருக்கூத்து

மக்களுக்கு நல்ல கருத்துகளை நாட்டிய நாடக வடிவில் எடுத்துரைப்பதற்கும் பக்தியை வெளிப்படுத்துவதற்கும் தெருக்கூத்து ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அதற்கென்று ஒரு வரன்முறை யைப் பின்பற்றல் வேண்டும். அதன்படி தெருக்கூத்திற கென்று சில வரன்முறைகள் உள்ளன. அதனை நான்கு கூறுகளாகப் பாகுபடுத்தலாம். அவை:

1. கோமாளியின் வருகை.

2. பாத்திரங்களின் சுய அறிமுகம்.

3. நாடகக் கதை.

4. பின்பாட்டு.

என்பவை ஆகும். 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்ற பழமொழிக்கு ஏற்ப நகைச்சுவை கலந்த உணர்வுடன் கருத்துகளை எடுத்துரைக்கிறது.

தெருக்கூத்து ஆடப்பெறுவதற்கான காரணம்

மனிதன் தனக்கு மிஞ்சிய சக்தி ஒன்று உள்ளது என்பதில் நம்பிக்கை உடையவன். ஆரம்ப காலத்தில் இயற்கையின் சீற்றம் கண்டு அஞ்சிய மனிதன் அதனைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினான். அதற்குப் பிறகு சிவன், மாரியம்மன், முருகன் என்று பலவிதப் பெயர் சூட்டினான். அத்தெய்வத்திற்கு என்று விழாக் கொண்டாட ஆரம்பித்தான்.

பஞ்ச காலத்தில் வறுமை நீங்கி வளம் பெற வேண்டுமென்பதற்காக அம்மன் கோவிலில் கெங்கையம்மன் கூத்து நடத்துவர். ஆட்கொல்லி நோய்க்கு ஊரே பலியாகும்போது தெய்வத்தின் கோபம் என்று கூறிச் சனீசுவர ஒழிப்புக் கூத்து ஆடுவர். இக்கூத்து முதல் நாள் இரவு 10 மணியளவில் தொடங்கப்பட்டு மறுநாள் காலை ஆறரை மணியளவில் முடிக்கப்பெற வேண்டும் என்பது மரபு. இதனை,

கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்[7]

என்னும் பழமொழி உணர்த்துகிறது. இக்கூத்து தமிழ்நாட்டில் கோடைக்காலத்தில்தான் பெரும்பாலும் நடத்தப்பெறும். ஏனெனில், கிராமப்புறங்களில் வயலில் வேலை இல்லாமல் மக்கள் ஓய்வாக இருப்பர். பல புத்தகங்களைப் படித்துப் பெற்ற அனுபவ அறிவை ஒரு சில நொடிகளில் மக்களை அடையச் செய்கிறது.

தெருக்கூத்துக் கதைகள்

தென்னாற்காடு மாவட்டம் தெருக்கூத்தின் தாயகமாகும். இங்குள்ள திரௌபதி அம்மன் வழிபாட்டு முறையுடன் இணைந்த கலையாகக் கூத்து உருவானது. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தமிழர் பண்பாட்டை மரபெனக் காத்துவரும் இராமாயணக் கதையும் தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் மறுபடியும் தர்மம் வெல்லும் என்னும் நியதியை உணர்த்தும் மகாபாரதக் கதையும் தெருக்கூத்துக் கதைகளாகும். இதிகாசத்தில் இடம்பெறும் ஏதேனும் சில நிகழ்ச்சிகளே தெருக்கூத்தாக நிகழ்த்தப் பெறுகின்றது. பாஞ்சாலி கோவிலுக்கும் தெருக்கூத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தெருக்கூத்தென்பது பக்தி வழியில் கருத்துகளைப் போதிக்கும் கல்வியாக உள்ளது. அதன் புனிதத் தன்மையை மனதில் கொண்டு தெய்வீகக் கலை என்று கூறுவர்.

அன்றைய தெருக்கூத்து அறக்கருத்துகளை அழகாக எளிய முறையில் எடுத்துரைத்தது.

தெருக்கூத்து பிற கலைகளுடன் கொண்ட தொடர்பு

தெருக்கூத்து தமிழ்நாட்டின் கிராமிய அரங்கக் கலை. உண்மையில் இதுதான் தமிழ் அரங்கக் கலையாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இத்தகைய தெருக்கூத்தை யட்சகானம், வீதி நாடகம், கதகளி போன்றவற்றுடன் தொடர்புபடுத்திக் கூறுகிறார்கள்.

கேரள நடன வகையில் சிறப்பிடம் பெற்றிருக்கக் கூடிய கதகளியில் கலைஞர்கள் பாடுவதில்லை. பின்பாட்டுக்காரர்கள் மட்டுமே பாடுகின்றனர். ஆனால், தெருக்கூத்தில் கலைஞர்கள் தாங்களே பாடி நடிக்கின்றனர். மன உணர்வுகளை முக பாவனைகளிலும் கைமுத்திரையிலும் சிறப்பாக தெருக்கூத்துக் கலைஞர்கள் எடுத்துரைக்கின்றனர். கதகளியில் இத்தன்மை கிடையாது. மேலும், யட்சகானம் என்னும் கலையும் தெருக்கூத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. 'ஆள்பாதி ஆடைபாதி' என்பதுபோல் ஒப்பனையும் 4 அடி உயரம் வரை குதித்து ஆடும் இயல்பு யட்சகானத்தில் காணப்படும். ஆனால், தெருக்கூத்தில் குதித்து ஆடும் இயல்பு கிடையாது. தெருவில் நடத்தப்பெறுகிறது என்னும் கூற்றே தெருக்கூத்துடன் பொருந்திவரக் கூடியது.

இன்றைய தெருக்கூத்து

இயந்திர உலகில் இயந்திரமாய் வாழும் மனிதன் நிஜத்தை ஏற்க மறுக்கிறான். அவன் ஏற்க மறுக்கும் நிஜங்களைத் தெருக்கூத்து வெளிக் கொணர்கிறது.

சமுதாய வளர்ச்சியில் தெருக்கூத்து பெரும்பங்கு வகிக்கிறது. இக்கூத்து தொடர்புச் சாதனமாகவும் கிராம மக்களிடையே உள்ள சாதனமாகவும் இருக்கிறது. காலத்திற்கேற்ப கருத்துக்களைச் சொல்லும் விதமும் மாறுபடல் வேண்டும். நிகழ்காலப் பிரச்சினை என்னவென் பதையும் அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் மக்கள் சிந்திக்கும் வகையில் எடுத்துரைக்கின்றனர். இன்று நம் மக்களிடையே உள்ள பிரச்சினை குடிப்பழக்கம், வரதட்சணை, சாதிக் கொடுமை, குடும்பக் கட்டுப்பாடு போன்றவை ஆகும். இதனை மையக் கருவாகக் கொண்டு தெருக்கூத்து நிகழ்த்தப்படுகிறது.

ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கான காரணம் என்னவென்பதையும் அப்பிரச்சினையால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தையும் காட்சியாகக் கண்முன் வைக்கின்றனர். கிராம மக்களின் அறியாமை இருளை அகற்றுகின்றனர். கூத்து மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணையப்

பெற்றிருப்பதால் இக்கலை மேலும் வளர அரசு உதவ வேண்டும். பல முன்னேற்ற நிறுவனங்களை அமைத்திடல் வேண்டும்.

முன்னேற்ற நிறுவனம்

மக்களை ஊக்குவிக்க அரசால் நிறுவனங்கள் நிறுவனப்படு கின்றன. இந்நிறுவனங்கள் விருதுகளையும் பரிசுகளையும் தந்து கலைஞர்களை ஊக்கப்படுத்துகின்றனர். 1985-86 உளுந்தூர்பேட்டை சமுதாய முன்னேற்ற நிறுவனம் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கூத்துக் கலைஞர்களை ஒன்றுதிரட்டி தென்னாற்காடு மாவட்ட தெருக்கூத்துச் சங்கத்தை நிறுவியது. தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தார் புரிசை திரு.நடேசத் தம்பிரான் திரு.கே.எம். சிவஞான பாண்டியன் திரு.கண்ணன் தம்பிரான் முதலிய தெருக்கூத்துக் கலைஞர்களுக்குக் 'கலை மாமணி' என்ற பட்டமும் விருதும் வழங்கியுள்ளனர் என்று ஆறு. அழகப்பன் கூறுகிறார்.[8]

முடிவுரை

தெருக்கூத்து இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் இணைந்த உன்னதக் கலை. மக்கள் வாழ்வினுக்குப் பயன்தரக்கூடிய கருத்துகளை மூலை முடுக்குகளில் எல்லாம் எடுத்துச் செல்கிறது. அன்றும் இன்றும் என்றென்றும் வாழும் இயல்பினை உடையது.

சான்றென் விளக்கம்

1. அறிவுநம்பி அ. தமிழகத்தில் தெருக்கூத்து, பக். 2
2. இராகவன்.வி.எஸ் என்றும் வாழும் தெருக்கூத்து, பக். 26
3. அறிவுநம்பி. அ. தமிழகத்தில் தெருக்கூத்து, பக். 1
4. மேலது, பக். 2
5. மேலது, பக். 6
6. சண்முகசுந்தரம் சு. நாட்டுப்புற இயல், பக். 182
7. சக்திவேல்.ச. நாட்டுப்புறவியல், பக். 182.
8. அறிவுநம்பி.அ. தமிழகத்தில் தெருக்கூத்து, பக்.4

◆

நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
கிராமியப் பல்கலைக் கழகம்,
காந்திகிராமம்.

98
திருப்பத்தூர் வட்டாரக் கும்மிப்பாடல்கள்

சி. முடியரசன்

மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்ப மனித இனத்தின் கலை இலக்கிய வடிவங்களிலும் மாற்றம் ஏற்படுவதைக் காண முடிகிறது. நாட்டார் கலை வடிவங்கள் எனப்படும் நாட்டுப்புறக் கலைகளில் அடிப்படையைத் தவிர்த்து, நிகழ்த்து நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரை திருப்பத்தூர் வட்டாரக் கும்மிப்பாடல்களை ஆய்வு செய்கிறது.

கும்மி

பல பெண்கள் இணைந்து இன்ப உணர்வைப் புலப்படுத்தும் வண்ணம் கைகொட்டிக் களித்துப் பலபொருள் குறித்து வரும் கதைப்பாடல்களைச் சமய, சமூக விழாக்களில் சுவை ததும்பப் பாடியும் ஆடியும் பிறரை மகிழ்விப்பது கும்மியாகும் (பெருமாள், ஏ.என், *1982:3*).

இதனைக் கும்மியடித்தல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் எனப் பலவாறு அழைக்கின்றனர். கொம்மை கொட்டுதல் எனவும் வழங்குவர்.

மனிதன் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கைகளைத் தட்டி ஆர்ப்பரித்து ஆடுவது இயல்பாக உள்ளது. இக்கருத்துப் புலப்பாட்டுச் செயல் பின்னாளில் முறைப்படுத்தப்பட்டுக் கும்மியாகப் பரிணமித்திருக்கலாம் (உமாதேவி. தி. *1998:6*).

கும்மிப் பாடல்களைத் தலைமைத்துவம் வாய்ந்த ஒருவர் பாட ஏனையோர் அதனைப் பின்பற்றிப் பாடுவர். ஒரே நேரத்தில் பாடுவதும் ஆடுவதுமாக நிகழ்த்தப்பெறும் இக்கலை வடிவம், கோயில் மற்றும் சமுதாய நிகழ்வுகளில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் வட்டம்

தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் சிவகங்கை மாவட்டம் அமைந்துள்ளது. இம்மாவட்டம் ஆறு வட்டங்களைக் கொண்டது. சிங்கம்புணரி, திருப்பத்தூர், எஸ்.புதூர் ஆகிய மூன்று ஒன்றியங்களை யுடையது திருப்பத்தூர் வட்டம். இவ்வட்டத்தில் 91 ஊராட்சிகள் உள்ளன. பருவமழையைப் பெரிதும் நம்பியிருக்கும் இவ்வட்டார மக்கள் கரும்பு, துவரை, நிலக்கடலை, நெல் ஆகியவற்றை விளைவிக்கின்றனர். தென்னை இவ்வட்டாரத்தின் பணப்பயிராகும். வருவாய் குறைந்திருந்தபோதும் இவ்வட்டார மக்கள் ஆண்டுதோறும் கோயில் திருவிழா, முளைப்பாரி, பரிவேட்டை போன்ற பண்பாடு தொடர்பான நிகழ்வுகளைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர்.

திருவிழாக்கள்

சிறுதெய்வ வழிபாட்டில் பெரிதும் நம்பிக்கை கொண்ட மக்கள் கோவில் விழாக்கள், அவை தொடர்பான சடங்குகளை நிகழ்த்துவதில் ஆர்வமுடன் உள்ளனர். திருப்பத்தூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள வேலங்குடி என்ற ஊரில் மாசி மாதம் இரண்டாவது வாரத்தில் காப்புக் கட்டுகின்றனர். அதனை அடுத்த ஒருவாரத்தில் மூன்று நாள் திருவிழா நடைபெறுகிறது. அதைப்போல் எஸ்.புதூர் ஒன்றியத்தில் பங்குனி மாதம் 10ஆம் தேதியிலிருந்து 25ஆம் தேதிவரை கும்மிக் கொட்டு விழா நிகழ்த்துகின்றனர். இந்நிகழ்வு உலகம்பட்டி, குன்னத்தூர், புழுதிபட்டி, குறும்பலூர், புதூர் ஆகிய ஊர்களில் நடைபெறுகிறது. சிங்கம்புணரி ஒன்றியம் பிரான்மலை போன்ற ஊர்களிலும் பங்குனி, சித்திரை ஆகிய மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

கும்மி நிகழ்த்தும் விதம்

வேலங்குடியில் உறங்காபுளிக்கருப்பர், அங்காளம்மன் ஆகிய உடன்பிறந்த தெய்வங்களுக்கு மாசி மாதம் திருவிழா எடுக்கின்றனர். காப்புக் கட்டிய நாளில் இருந்து திருவிழாவின் முதல் நாள்வரை கும்மி நிகழ்த்துகின்றனர். இளம்பெண்களும் நடுத்தர வயதுப் பெண்களும் சிறுமியருமாகக் கூடிக் கும்மியடிக்கின்றனர். ஓரடிக்கும்மி, ஈரடிக்கும்மி,

மூன்றடிக்கும்மி என வகைப்படுத்திப் பாடுகின்றனர். வயது முதிர்ந்த பெண்களில் மூன்றுபேர் ஒருவர் மாறி ஒருவர் எனப் பாடல்களைப் பாடுகின்றனர். இதில் கணவனை இழந்த பெண்களும், ஆண்களும் கலந்து கொள்வதில்லை. இவர்கள் பார்வையாளர்களாக மட்டுமே உள்ளனர்.

பூலாங்குறிச்சி, துவார், பரியாமருதுபட்டி, நெற்குப்பை, புதூர், புழுதிபட்டி, குறும்பலூர், உலகம்பட்டி ஆகிய ஊர்களில் 'வைந்தானை' என வழங்கப்படும் கோலாட்டம் நிகழ்த்திய பின்னரே கும்மிக் கொட்டுகின்றனர். இவ்வூர்கள் சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய இரண்டு மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள ஊர்களாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதிக்கு அருகில் உள்ளது கொன்னையூர். இவ்வூரைச் சுற்றியுள்ள முந்நூறுக்கும் அதிகமான ஊர்மக்கள் கொன்னையூர் முத்துமாரியம்மனை வழிபடுகின்றனர். பங்குனியில் இங்கு நடக்கும் பொங்கல் விழாவை ஒட்டிக் கும்மி நிகழ்த்தப்படுகிறது. மாவட்டத்தின் எல்லைகளில் அமைந்த ஊர்களாத லால் மாவட்ட வேறுபாடுகளில்லாமல் மக்கள் இவ்விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

முற்காலத்தில் ஊர் நடுவே அமைந்த விளக்குத் தூணினை (லாந்தர் கல்) மையமாக வைத்துச் சுற்றி நின்று ஆடியுள்ளனர். தற்போது ஒலி, ஒளி அமைத்துப் பாடுகின்றனர். ஒருசில ஊர்களில் பந்தல் அமைத்துள்ளனர். சிறுதெய்வம் உறையும் கோவில் வாசலில் கும்மியாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. கோயிலின் மையத்தில் உள்ள பெரிய கம்பத்தில் வேப்பிலைகள் கட்டப்பட்டிருக்கும். அக்கம்பத்தி லிருந்து நாலாபுறமும் தென்னை ஓலையாலும் வேப்பிலையாலும் ஆன தோரணங்கள் தொங்க விட்டுள்ளனர். முன்னிரவு 8 மணிக்குத் தொடங்கப்படும் கும்மி நள்ளிரவு 12 (அ) 1 மணிவரை நடைபெறும். இடையில் இடைவேளை விடப்படுகிறது. அந்நேரத்தில் சுண்டல், சர்க்கரைப் பொங்கல், பால், பழம் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக உணவு வழங்குகின்றனர். இதை யாரேனும் ஒருவர் உபயமாக வழங்குகின்றார்.

நிகழ்த்து நிலையில் சில வேறுபாடுகள்

வேலங்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் கும்மி நிகழ்த்தப்படும் போது ஒலிபெருக்கி இறுதி நாளில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இதில் ஆண்கள் கலந்துகொள்வதில்லை. அதிக அளவாக இருபதிலிருந்து இருபத்தைந்துபேர் மட்டுமே கலந்து கொள்கின்றனர். துவார்,

பூலாங்குறிச்சி, குறும்பலூர், படமிஞ்சி, புதூர் காலனி, உலகம்பட்டி ஆகிய இடங்களில் கும்மி தொடங்கிய நாளிலிருந்து ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. இங்கு பெண்களுடன் ஆண்களும் சேர்ந்து கும்மியடிக்கின்றனர். பெரும்பாலான ஊர்களில் பெண்களுக்கு நிகராக ஆண்கள் பாட்டுப் பாடுபவர்களாக உள்ளனர். புதூர் காலனி கோபாலன், உலகம்பட்டி ராசு பாக்கியம், புழுதிபட்டி ராசு, குறும்பலூர் பெருமாள், பூலாங்குறிச்சி சுப்பிரமணியன் ஆகியோர் பாடுவதில் குறிப்பிடத் தகுந்தோர். இவர்கள் ஆண்கள் மட்டும் நிகழ்த்தும் ஒயில் கும்மிப் பாடலுடன் பெண்கள் பாடும் கும்மிப் பாடல்களையும் பாடுகின்றனர்.

வேலங்குடி, பூலாங்குறிச்சி, புழுதிபட்டி, குன்னத்தூர் ஆகிய ஊர்களில் ஒரே வட்டத்தில் நின்று கும்மியடிக்க, துவார், குறும்பலூர் போன்ற ஊர்களில் உள்வட்டம் அமைத்து இருவட்டங்களாகக் கும்மியடிக்கின்றனர். வேலங்குடிப் பகுதியில் வைந்தானை நிகழ்த்து வதில்லை. நேரடியாகக் கும்மி மட்டும் நிகழ்த்தப்படுகிறது. மற்ற ஊர்களில் 'வைந்தானை' ஆட்டத்தை ஆண்கள் நிகழ்த்த, பெண்கள் பார்வையாளர்களாக உள்ளனர். பின்னர், பெண்கள் இணைந்து கும்மி நிகழ்த்தியபின் ஆண்கள் மட்டும் ஒயில் கும்மி நிகழ்த்துகின்றனர்.

பெண்கள் மட்டும் ஆடும் கும்மி இயற்கும்மி என்றும் ஆண்கள் ஆடும் கும்மி ஒயிற்கும்மி என்றும் கூறுவர் (பெருமாள் ஏ.என். 1982:8). ஒயிற்கும்மி பூலாங்குறிச்சி முத்துராஜா தெருவிலும், குறும்பலூர் புழுதிபட்டி ஆகிய இடங்களிலும் நிகழ்த்தப்படுகிறது. இதில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. பார்வையாளர்களாக மட்டும் உள்ளனர்.

கும்மி நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது கொட்டுபவர்களுக்குச் சோர்வு ஏற்பட்டால் இடையிடையே சத்தமாகக் குலவை இடுகின்றனர். குலவை என்பது வாயைக் குவித்து நாவினால் எழுப்பும் தொடரொலி ஆகும். இவ்வொலிமையை எழுப்புவதால் ஆடுவோர் மத்தியில் சோர்வு நீங்கி உற்சாகம் ஏற்படுகிறது. ஆடுகிறபோது முன்பைவிட நடை வேகமெடுக்கிறது. இச்செயல் பூலாங்குறிச்சி முத்துராஜா தெருவில் நடைபெறுகிறது. இதை ஏனைய இடங்களில் காணமுடியவில்லை. உலகம்பட்டியில் கும்மியோடு சால்ரா எனும் இசைக்கருவி இசைத்துக் கும்மியடிக்கின்றனர்.

கும்மிப்பாடல் பாடுகிறபோது நிகழும் மாற்றங்கள்

கும்மி தொடங்கும்போது இரண்டு மூன்று சுற்றுகள் ஓரடியாகக் கொட்டி வருகின்றனர். இச்செயல் மக்களின் வருகைக்காகவும், வட்டம்

சீராகச் செல்வதற்குமாகும். பின்னர், இறைவனைத் தொழுது கொட்டுகின்றனர்.

"நன்னன்னே என்னன்னே னன்னானே-தன
னானனன்னன்னே னன்னானே
முந்தி முந்தி விநாயகரே-நல்ல
முப்பத்து முக்கோடி தேவர்களே
கந்தருக்கு நல்ல முன்பிறந்த-கத்திக்
கணபதி முன் நடவாய்''

(அமராவதி. மு. 2008)

என்று விநாயகரைத் தொழுது பாடுகின்றனர். பெரும்பாலான ஊர்களில் இப்பாடல்கள் பாடப்படுகின்றன. பூலாங்குறிச்சி, புதூர் போன்ற இடங்களில் விநாயகர் வணக்கப் பாடல் மாறுபடுகிறது.

"முந்திவி முந்திவி நாயகரே - நல்ல
முருக சரஸ்வதி என்குருவே
நாவில் சரஸ்வதி வந்திடம்மா - வாயில்
நன்றாய் குடியிருக்க வேணுமம்மா ''

(சுப்பிரமணியன்.வி. 2008)

முன்னர் பாடிய பாடலில் முருகன், விநாயகர் என இரு கடவுளர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. பின்னர், அமைந்த பாடல் முருகன், விநாயகரோடு சரஸ்வதியும் துணைபுரிய வேண்டும் எனப் பாடப்படுகிறது.

"முந்திமுந்தி ஏலேலோ நாயகராம் ஏலேலோ
முக்கண்ணனார் ஏலேலோ தன்மகனாம் ஏலேலோ
கந்தருக்கு ஏலேலோ முன்பிறந்த ஏலேலோ
கணபதியே ஏலேலோ முன்னடவாய் ஏலேலோ ''

(ராசு.து. 2008)

புழுதிபட்டியில் பாடிய பாடல் விநாயகரோடு முக்கண்ணார் எனப்படும் சிவபெருமானையும் குறிப்பிடுகிறது.

இதைப் போன்றே குலதெய்வங்களை முன்னிறுத்திப் பாடுகிற பாடல்கள் ஒரே பொருளில் இறைவனின் பெயர் மட்டும் மாற்றம் பெற்று அமைகின்றன.

"ஆனை வாரதப் பாருங்களே - ஆனை
அசஞ்சு வாரதப் பாருங்ளே
ஆனத்தடம்போல கொன்னையூர் மாரிக்கு
அட்டிகை மின்னலைப் பாருங்களே''

(ஜோதி. செ. 2008)

"ஆனை வாரதப் பாருங்களே- ஆனை
அசஞ்சு வாரதப் பாருங்களே.
ஆனைத் தடம்போல அங்காளம்மனுக்கு
அட்டிகை மின்னலைப் பாருங்களே"

(அமராவதி. மு. 2008)

கொன்னையூர் மாரி, அங்காளம்மன், மகமாயி, பெரிய கருப்பர், சின்னக்கருப்பர், காத்தான், சின்னையா எனத் தெய்வங்களின் பெயர்கள் மட்டும் அந்தந்த ஊருக்கேற்ப மாறுவதைக் காணமுடிகிறது. தொடர்ந்து வருகிற பாடலடிகள் பெரும்பான்மையும் ஒரே மாதிரி அமைகின்றன. திருப்பத்தூர் வட்டாரத்தில் பாடுவது போன்றே பரவலாக எல்லாப் பகுதியிலும் பாடுவதை உணர முடிகிறது.

அருகருகே இருக்கின்ற ஊர்களில் பாடப்படும் பாடல்கள் பெரும்பான்மை ஒத்தே அமையும். ஆனால், உலகம்பட்டி, படமிஞ்சி எனப்படும் இரண்டு ஊர்களும் மிகவும் அருகமைந்த ஊர்கள். ஒரே சந்தத்தில் அமைந்த பாடலைப் பாடுவதில் மாற்றம் உள்ளதைக் காணமுடிகிறது.

பாடுவோர் : தன்னேனன்னா ஏலேலோ இல நானானை
குழு : ஆ . . கோ. .
பாடுவோர் : அப்டி னானானை
குழு : போடு போடு
பாடுவோர் : னான னன்னா ஏலேலோ இல தானானை ஏலேலோ

(பாக்கிய லெட்சுமி. 2008)

இப்பாடல் படமிஞ்சி என்ற இடத்தில் பாடப்பட்டது. பாடுவோர் முதலடி பாடியதும் குழுவினர் இடையில் ஒற்றை வார்த்தையில் சந்தம் சொல்லப் பாடல் தொடர்ந்து அமைகிறது. பின்னர், இரண்டாவது முறை கூறுகிறபோது முறை மாறுகிறது. பாடுவோர் பின் குழுவினர் என்றமைந்த முறை குழுவினர் பின் பாடுவோர் என முறை, மாறி அமைகிறது.

இதே வடிவம் உலகம்பட்டி, புதூர், புழுதிபட்டியிலும் இருக்கிறது. ஆனால், பாடலுக்கு இடையே வரும் ஒற்றை வார்த்தையில் மாற்றம் உள்ளதைக் காணமுடிகிறது.

பாடுவோர் : சுப்பையா ஏலேலோ கோவிலுல
குழு : ஏலே லோ.
பாடுவோர் : அப்டி கோவிலுல

குழு : அய்லல்லோ

பாடுவோர் : சூட்சிகமா ஏலேலோ இல வெள்ளிரதம் ஏலேலோ

(ராசு.சி.2008)

என்று உலகம்பட்டியில் பாடப்படுகிறது. முன்னர் பாடிய பாடலில் ‘ஆ..கோ’ ‘போடுபோடு’ என வந்த வார்த்தைகள் பின்னர் பாடிய பாடலில் ‘ஏலேலோ’ ‘அய்லல்லோ’ என வருகிறது. இந்த வார்த்தை மாற்றம் படமிஞ்சியில் மட்டும் நிகழ்வதைக் காணமுடிகிறது.

தகவலாளரிடம் இதற்கான காரணம் கேட்கப்பட்டது. அவர்கள், தங்களுக்கு முன்னர் பாடியவர்களைப் பின்பற்றிப் பாடுவதாகவும் புதிய செய்தி எதனையும் புகுத்தவில்லை எனவும் கூறினர். வழிவழியாகப் பாடப்பட்டு வந்தபோதும் தனித்து அடையாளப்படுத்தவும், சுவையுடையதாகவும் விறுவிறுப்பு ஏற்பட வேண்டியும் இம்மாற்றம் அமைந்திருக்கும் எனக் கருத இடமுண்டு. இவைபோன்ற மாற்றங்கள் நிறைய இப்பாடல்களில் உள்ளன.

சமுதாயப் பின்புலம்

நாட்டுப்புறப் பாடல்கள் நலிவுறவும், வளம் பெறவும் சமுதாயப் பின்புலம் மிகமுக்கியக் காரணியாக அமைகிறது. கும்மிப் பாடலில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கும், நிகழ்த்து நிலையில் ஏற்படுகிற மாற்றத்திற்கும் மக்களின் வாழும் சூழல் காரணமாகும். நாட்டுப்புறக் கலைகள் வளர்ச்சி யடைந்ததற்குக் காரணமாக விவசாயத் தொழிலைக் குறிப்பிடலாம். ஆண்டு முழுவதும் வயல்வெளிகளில் உழைத்து அதன் பயனாக அறுவடை செய்கின்றனர். இவ்வாறு, வேளாண்மை செய்யும் காலம் ஆடி தொடங்கி தை வரை ஆகும். தை முழுவதும் அறுவடை நடக்கும். மாசி தொடங்கி ஆடி வரை திருவிழாக்கள் நடைபெறும். இவ்வாறாக, திருவிழாக்கள் நடைபெறுகின்ற நாட்களில் நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. இது வளர்ச்சி நிலைக்கான சமுதாயக் காரணியாகும்.

வீழ்ச்சியடைவதற்கான ஒரே காரணம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அமையாமை மட்டுமே. இதனால், மக்கள் நகர்ப்புறங் களை நோக்கி இடம்பெயர்கின்றனர். இந்த நகரமயமாதல் நாட்டுப்புறக் கலைகள் மீதான ஈடுபாட்டைக் குறைக்கச் செய்கிறது. மேலும், புதிது புதிதாக வளர்ச்சி பெறும் ஊடகங்களின் போக்கால் இவை முற்றிலும் புறந்தள்ளப்படுகின்றன.

மாற்று

இக்காலகட்டத்திலும் இடைவிடாது இக்கலையை நிகழ்த்து கின்ற மக்களும் உள்ளனர். தெய்வத்தின்மீது கொண்ட அளவற்ற நம்பிக்கைகள், கலைமீது கொண்ட ஆர்வம் இவையே இவர்களுக்கு உந்துசக்தியாக அமைகின்றன. குறிப்பிடும்படியாக வெளிநாட்டில் இருந்து வேண்டுதலின்படி கும்மி நிகழ்த்துவதற்காக வந்த பாலாஜி என்ற இளைஞர் பூலாங்குறிச்சியைச் சேரந்தவர். ஐந்து நட்சத்திர உணவகத்தில் பணியாற்றும் போஸ் என்ற இளைஞர் குறும்பனூரைச் சேர்ந்தவர். இவர்கள் பொருளாதார நிலையில் உயர்ந்தபோதும் தாங்கள் பரம்பரையாகப் பெற்றுக்கொண்டவை அழிந்து விடாமலிருக்கும் பொருட்டுக் கும்மியை முறையாகக் கற்று நிகழ்த்துகின்றனர்.

உறங்காப்புளிக் கருப்பர், அங்காளம்மன், முத்துமாரியம்மன் ஆகிய சிறுதெய்வங்களுக்குப் பாடுவது மட்டுமன்றி, கீரணிப்பட்டி முத்துமாரியம்மன், குன்னத்தூர் குறத்தியம்மன் ஆகிய தெய்வங்களுக்குப் பொங்கலிட்டு இக்கும்மியை நிகழ்த்தியும் வருகின்றனர். இம்மக்களின் வேண்டுதல் மழைப்பொழிவை வேண்டியே அமைகின்றது.

இதனால், பக்தியும் பண்பாடும் வளர்க்கப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் இணைந்து நிகழ்த்துவதால் பெண்களிடம் உள்ள வெட்கம், நம்பிக்கையின்மை, தனிமை, தயக்கம் ஆகியவை நீங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இவை, திருப்பத்தூர் வட்டாரத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் நிறைந்திருப்பதற்கு தக்க சான்று.

துணை நூல்கள்

1. *ஆய்வுக் கோவை, பத்தாவது கருத்தரங்கம், தொகுதி-1, 1978.*
2. *பெருமாள், ஏ.என், தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.*
3. *பெருமாள், ஏ.என், கும்மிப் பாடல்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.*
4. *வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-ஏழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.*
5. *தி. உமாதேவி, கழியலாட்டமும் கும்மியும் ஒப்பீட்டாய்வு, வெள்ளிக்கிழமை கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.*

தகவலாளர்கள்

1. கோபாலன் (ஆ), *62,* த/பெ. பழனி, புதூர் காலனி, *20.3.2008.*
2. சின்னாத்தாள் (பெ), *58,* க/பெ. முருகன், புதூர் காலனி, *20.3.2008.*
3. சுப்பிரமணியன் (ஆ), *59,* த/பெ. விலாவன், பூலாங்குறிச்சி முத்துராஜா தெரு, *19.3.2008.*
4. பாக்கிய லெட்சுமி (பெ), *36,* க/பெ. மணி, படமிஞ்சி, *21.3.2008.*
5. பெருமாள் (எ) மகாலிங்கம் (ஆ), *60.* த/பெ. சின்னப்பெருமாள், குறும்பலூர், *24.3.2008.*
6. ராசு (ஆ), *45.* த/பெ. சின்னையா, உலகம்பட்டி, *21.3.2008.*
7. ராசு (ஆ), *65.* த/பெ. தும்பச்சிராமன், புழுதிபட்டி, *23.3.2008.*
8. வெள்ளையம்மாள் (பெ), *42.* க/பெ. சின்னக்கருப்பன், துவார், *18.3.2008.*
9. ஜோதி (பெ), *20.* க/பெ. செல்வம், பூலாங்குறிச்சி, காங்கேயன் தெரு, *19.3.2008.*

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை-113.

99
தேவராட்டம்

ச.மேனகா

முன்னுரை

கலைகள் நிலைத்து இருப்பன அன்று; வளர்ந்து வருவன. நாட்டுப்புற ஆட்டங்களான கரகாட்டம், காவடி, பொய்க்கால் குதிரை, மாடு ஆட்டம், மயிலாட்டம், கரடி ஆட்டம், வழியாட்டம், புலியாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், சேவையாட்டம் போன்ற ஆட்டங்களில் தேவராட்டம் ஒரு இனக்குழு நடனமாக விளங்குகின்றது. ஒரு இனத்தவரால் ஆடப்படும் ஆட்டம் தேவராட்டம் ஆகும். தேவராட்டத்தின் தொன்மக் கதைகளைப் பற்றியும், ஆடப்படும் இடம் மற்றும், ஆடுவோரைப் பற்றியும் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

இனக்குழு நடனம்

திருமாலின் அருள்பெற்று அவர் வழிவந்த தேவர்கள் என்று கூறிக்கொள்ளும் விஜயநகரத்து நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்த கம்பளத்து நாயக்கர்களால் ஆடப்படும் நடனம். தேவர்களை வணங்கி ஆடும் ஆட்டம் என்பதால் தேவராட்டம் என்று அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. தோக்கலவார், சில்லவார், கொல்லவார், சிலவார், பில்லவார், பாவலார், மாலாடு, நித்திரவார், மதியவார் என்னும் ஒன்பது பிரிவுகளை உடைய - தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் 'ஒன்பது கம்பளம்' எனறு அழைக்கப்படுகின்றனர். இவர்களுள்

நித்திரவார் என்னும் பிரிவினர் குடுகுடுப்பைக்காரர்களாகவும், மதியவார் என்னும் பிரிவினர் தோல்தொழில் செய்பவர்களாகவும் உள்ளனர். ஏனைய ஏழு பிரிவினரும் 'கம்பளத்து நாயக்கர்' என்று சுட்டப்படுகின்றனர்.

கம்பளத்து நாயக்கர்களின் இனக்குழு நடனமாகக் கருதப்படும் தேவராட்டத்தில் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஒக்கலிகார் அல்லது காப்பிலியக் கவுண்டர், குறும்பைக் கவுண்டர், குலாலர் (மண்பாண்டம் செய்பவர்) ஆகியோரும் சில பகுதிகளில் சேர்த்து ஆடுகின்றனர்.

தேவராட்ட தொன்மக் கதைகள்

கைலாய மலையில் சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் திருமணம் நடைபெற்றபோது தேவர்கள் கூடி மகிழ்ச்சியாக ஆடிய ஆட்டம் தேவராட்டம் என்றும், சிவனும் பார்வதியும் கோபங்கொண்டு ஆடிய நிலையில் அவர்களின் சினம் தணியத் தேவர்கள் ஆடிய ஆட்டமே இது எனவும், மகாவிஷ்ணு மோகினி வடிவெடுத்த நிலையில் அதனைக்கண்டு பரவசமடைந்த சிவபெருமான் மோகினியின் மேல் மையல் கொண்டு ஆடிய ஆட்டம் என்றும் கம்பளத்தார் கூறுவர். இவ்வாறு, தெய்வங்கள் ஆடிய ஆட்டத்தைத் தெய்வ வழிபாடுகளில் தாங்கள் ஆடுவதாகவும், தேவராட்டம் ஆடித் தெய்வங்களைப் பூமிக்கு அழைப்பதாகவும் கம்பளத்தார் கூறுகின்றனர்.

தேவராட்டம் அதிகம் ஆடப்படும் இடங்கள்

திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், திருச்சி, சேலம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு முதலான கம்பளத்து நாயக்கர்கள் மிகுதியாக வாழும் மாவட்டங்களில் தேவராட்டம் காணப்படுகிறது. கோவை மாவட்டத்தில் முருகன் - வள்ளி திருமணக் கதையைப் பாடி ஆடுவர்.

தேவராட்டம் ஆடுவோர்

ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம் இது. ஆடுவோர் எண்ணிக்கை வரையறை ஏதுமில்லை. நூறுபேர்கூட ஒரே நேரத்தில் ஆடலாம். பார்வையாளராக இருப்போர் விரும்பும்போது ஆட்டக்காரர்களோடு இணைந்து ஆட்டக்காரராகவோ, ஆட்டக்காரர் பார்வையாளராகவோ மாறுவதுண்டு.

தேவராட்டம் ஆடுவோர் பெரும்பாலும் இளைஞர்களாக இருப்பர். மெதுவான உடல் அசைவுடன் தொடங்கி வேகமான உடலசைவுடன் முடியும் இந்த ஆட்டத்தில், ஆடக்கூடிய உடல்திறன் பெற்றவர்கள் மட்டுமே கலந்துகொள்ள இயலும்.

தேவராட்டம் மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக நிகழ்த்தப்படும் ஆட்டம் ஆகும். தொழில் முறை ஆட்டம் அல்ல. ஆகவே, ஆட்டத்தின்போது ஆண்கள் ஒப்பனை ஏதும் செய்து கொள்வதில்லை. ஆனால், சமீப காலமாகத் தேவராட்டம் மேடைகளில் நிகழ்த்தப்படுகிறது. இத்தகைய வாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கும் காரணத்தால் ஆட்டக் குழுவினர் ஒரே வண்ணத்தில் உடை அணியும் போக்கு காணப்படுகிறது. கால்களில் சலங்கை அணியாமலும், வெற்று உடம்புடனும், தலையில் பளபளப்பான துண்டுகளோடு இவர்கள் ஆடுவார்கள்.

தேவராட்டம் ஆடும் முறை

தேவதுந்துமி என்ற இசைக் கருவியின் இசைப்பு முறைக்கேற்பவே தேவராட்டம் ஆடப்படுகிறது. இவ்விசைக்கருவியின் இசைப்பு முறையே தேவராட்டம் ஆடுவோரின் உடலசைவு முறைகளைத் தீர்மானிக்கின்றது. தேவராட்டத்தில் ஒவ்வொரு வகை ஆட்டமும் இசைப்பு முறையிலும் உடலசைவு முறைகளிலும் வேறுபட்டு அமைகின்றன. சிலவகை ஆட்டங்கள் ஒன்றுபோலத் தோன்றினாலும் அவற்றைத் திரும்பத் திரும்பக் காண்பதின் வாயிலாக ஆட்டங்களில் நுட்பமான வேறுபாடுகள் இருப்பதைக் கண்டறியலாம்.

ஆட்டங்களைப் பொதுவாக அதன் வடிவ அமைப்பு அடிப்படையில்

1. நேர்க்கோட்டு அமைப்பு முறை ஆட்டங்கள்
2. வட்ட வடிவ அமைப்பு முறை ஆட்டங்கள்

ஆட்டம் ஆடப்படும் அமைப்பு அடிப்படையில் தேவராட்டம் நேர்க்கோட்டு அமைப்பு முறைகொண்ட ஆட்ட வகையாக விளங்குகிறது. தேவராட்டம் ஆடத்தொடங்கும் முன்னர் ஆடுவோர் அனைவரும் நேர்வரிசையில் நிற்கின்றனர். ஆடுவோரின் எண்ணிக்கை அதிகமாகவும், ஆடுகளத்தின் பரப்பு சிறியதாகவும் இருந்தால் இரண்டு வரிசையாகவோ, எதிர்எதிராக நேர் வரிசையில் நின்றோ ஆடுகின்றனர். வரிசையாக நின்று தேவராட்டம் ஆடுவோர்க்குப் பக்கவாட்டில் நின்று தேவதுந்துமி இசைக்கப்படுகிறது. தெய்வ அழைப்புகளின்போது

தேவதுந்துமி இசைப்போர் முன்னே இசைத்துச் செல்ல தேவராட்டம் ஆடுவோர் பின்னே ஆடிவருகின்றனர். ஒன்றுக்கு மேற்பட்டோர் தேவதுந்துமி இசைக்கும்பொழுது ஆட்டம் விறுவிறுப்பான நிலையை அடைகிறது. தேவராட்டத்தில் ஒவ்வொரு ஆட்ட வகைக்கும் தனித்தனியான இசைப்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தேவராட்டம் ஆடப்படும்போது தோள்களும், இரு கைகளும், இடுப்புப் பகுதியும், கால்களும் அதிகமாக இயக்கப்படுகின்றன.

தேவராட்டம் ஆடப்படும் சூழல்

கம்பளத்து நாயக்கர் இன மக்களின் வாழ்வு மற்றும் சாவுச் சடங்குகளிலும் வழிபாட்டுச் சடங்குகளிலும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பூப்புச் சடங்கின் பதினாறாம் நாளன்று பூப்பான பெண்ணை மந்தைக்கு அழைத்துச் சென்று சடங்குகளை முடித்து வீடு திரும்பும்போது தேவராட்டத்துடன் வீடுதிரும்புகின்றனர். திருமணத்தில் மணமகனைக் குதிரையில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் செல்லும்போது தேவராட்டம் ஆடப்படுகிறது. திருமணம் முடிந்ததும் மணப்பெண்ணால் நிகழ்த்தப்படும் சில சடங்குகளை முடித்து வீடு திரும்பும்போது தேவராட்டம் நிகழ்த்தப்படுகிறது. கம்பளத்து நாயக்கர்களுள் ஒருவர் இறந்த பதினாறாம் நாள் சடங்கினை மந்தையில் முடித்துவிட்டு வீட்டிற்குச் செல்லும்போது தேவராட்டம் ஆடப்படுகிறது.

ஆடி அல்லது புரட்டாசி மாதம் வெள்ளிக்கிழமை நடைபெறும் சக்கம்மா வழிபாட்டின்போது தேவராட்டம் நிகழ்த்தப்படும். வீரபாண்டியிலுள்ள கௌமாரியம்மன் கோயிலில் சித்திரை மாதம் நடைபெறும் திருவிழாவிற்கு கம்பளத்து நாயக்கர்களும் பிற சாதியினரும் சென்று வழிபடுவர். இத்திருவிழாவின் ஐந்தாம் நாளன்று இரவில் பல்வேறு ஊர்களிலும் வாழும் கம்பளத்து நாயக்கர்கள் வந்து தேவராட்டம் ஆடுவர். இவ்வாறு, கம்பளத்து நாயக்கர்களின் வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையதாகத் தேவராட்டம் காணப்படுகிறது.

முடிவுரை

தேவராட்டம் ஒரு கலை என்ற நிலையிலிருந்து மாறிக் கம்பளத்தாரின் வாழ்க்கையில் காலங்காலமாக இருந்துவரும் மாறாத பண்பாட்டு மரபு என்பதை உணர்த்தி நிற்கின்றது. தேவராட்டம் பொழுது போக்கிற்கானதாக அல்லாமல் சடங்கின்போது ஆடப்படும் கம்பளத்தாரின் பண்பாட்டு அடையாள வெளிப்பாடாகவும்

ஆடப்பட்டு வருவது இதன் தனிச் சிறப்பாகும். நாட்டுப்புறக் கலைகள் நமது பாரம்பரியச் சொத்து. தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றால் நாட்டுப்புறக்கலைகளைச் சிறப்புறச் செய்யவேண்டும். நாட்டுப்பறக்கலைகள் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப மாறிவருகின்றன. பழங்காலத்தில் நாட்டுப்புறக்கலைகள் எப்படி இருந்தன; இப்போது எப்படி உள்ளன என்பதையும், சங்க இலக்கியங்களில் இந்த தேவராட்டம் பற்றிய செய்திகள் குறிப்புப் பொருளாக உணர்த்தப்படுகின்றதா என்பதை நாம் ஆய்வு செய்து அறியலாம்.

பார்வை நூல்கள்

1. தேவராட்டம் - ஒ.முத்தையா

2. சேவையாட்டம் - ஒ.முத்தையா

3. நாட்டுப்புறக் கலைகள் - ஆறு.இராமநாதன் (நிகழ்த்துக் கலைகள்)

4. நாட்டுப்புற இயல் ஆய்வு - சு.சக்திவேல்

5. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு - ஆ.பிச்சை

6. தமிழ்ப் பண்பாட்டு மரபுக் கலைகள் - துளசி. இராமசாமி.

◆

நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம், திண்டுக்கல்.

100

பேயோட்டும் சடங்கு

வை. மோகன்

முன்னுரை

மனிதருக்கு ஏற்படும் உளநலக்கேட்டினை நோய்வகைப்பட்டது என்று மருத்துவர் கூறுவர். நாட்டுப்புறங்களில் இத்தகைய கேட்டினைப் 'பேய் பிடித்துவிட்டது' என்பர். இவ்வாறு மனிதனைப் பிடித்துக் கொண்டதாகக் கருதப்படும் பேயை அகற்றுதல் உளநலத்திற்கும், உடல்நலத்திற்கும் நன்று என்பர். பேய் பிடித்தவர்கள் அப்பேயை ஓட்டவேண்டிப் பேயோட்டும் தொழிலை மேற் கொண்டவர்களை நாடுகின்றனர். அத்தகையோரைக் கோடாங்கிகள் என்று நாட்டுப்புறத்தில் அழைக்கின்றனர்.

நாட்டுப்புற மக்கள் பேயைப்பற்றிக் கொண்ட கருத்து போலவே கோடாங்கியையும் பேயை விரட்டும் ஆற்றல் பெற்றவர் என்று நம்புகின்றனர். எனவே, பேய் பிடிக்கப்பட்டவரிடமிருந்து அப்பேயை விரட்ட வேண்டிக் கோடாங்கிகளை நாடுகின்றனர்.

கோடாங்கி, பேயோட்டும் முறையினையே 'பேயோட்டும் சடங்கு' என்பர்.

மந்திரச் சடங்கு

தொன்றுதொட்டு 'மக்கள் இயற்கைக்கு அஞ்சி அதன் இயக் கத்தை நன்கு புரிந்துகொள்ள முடியாத சூழ்லையில் தங்கள்

வாழ்க்கைக்கு வகுத்துக் கொண்ட வழியே 'மந்திரச் சடங்கு' என்பர். எனவே, அம்மக்கள் தம்முடைய சக்தியை அடிப்படையாகக் கொண்டு தமக்குப் புறம்பாக உள்ள இயற்கையிலும் அச்சக்திகளைக் கண்டு, அவற்றைப் பயன்படுத்தி, அடக்கக் கண்ட கருவியே 'மந்திரம்' என்று குறிப்பிடுகின்றனர். இக்குறிப்பு மந்திரச் சடங்குகளின் இன்றியமை யாமையைச் சுட்டுவதாகும்.

மந்திரச் சடங்குகள் சில விளைவுகளை எதிர்நோக்கிச் செய்யப்படும் நிகழ்ச்சியாகும். பேயோட்டுதல் நிகழ்ச்சியும் பேயை விரட்ட வேண்டும் என்ற நோக்கம் கருதிச் செய்யப்படுகிறது. எனவே, பேயோட்டும் சடங்கு பண்டைய நாளின் மந்திரச் சடங்குடன் தொடர்புடையதாகும்.

சடங்குகளும் படையல்களும்

பேயோட்டும் சடங்கில் பேயோட்டும் கோடாங்கியே இன்றியமையாத இடத்தைப் பெறுவார். அதனால், பேயோட்டும் நிகழ்ச்சியின் இயக்குநர் 'கோடாங்கி' என்று குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்.

பேயோட்டச் செல்லும் கோடாங்கி தன்னுடன் 'உடுக்கு' என்ற தோல் இசைக்கருவி, திருநீறு, பிரம்பு, வேப்பந்தழை ஆகியவற்றைக் கொண்டு செல்வார். அவற்றில் திருநீறு, பிரம்பு, புளியம் விளாறு, வேப்பந்தழை என்பவை பேய்க்குப் பகைப்பொருள்கள் என்பர். மேற் கண்ட இப்பொருட்கள் பேயோட்டும் சடங்கிற்குத் துணைக்கருவிகளாகும். பேய் பிடித்தவர் வீட்டிலிருந்து சேவல் (அ) கோழி, தேங்காய், வெற்றிலை பாக்கு, கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, பூக்கள், ஒரு செம்பில் குளிர்ந்த நீர் முதலியவற்றைப் பெற்றுப் பேய்க்குப் படையலாகப் படைப்பர். இப்பொருள்கள் புனிதமானவை என்பதனால் இப்பொருள்களில் தெய்வம் வந்து உறையும் என்று நம்புகின்றனர்.

இப்படையல்களின் முன்னர் பேய் பிடித்தவரை இருக்கச் செய்து, எதிர்ப்புறத்தில் கோடாங்கி அமர்ந்து கொள்வார். பேயோட்டும் களம் (இடம்) தெய்வம் வந்துறையும் இடம்போல் புனிதப்பட்டுப் பொலிவு தரும். இக்காட்சி பேய்பிடித்தவரின் உள்ளத்தில் நம்பிக்கைகளையும், தெய்வ உணர்வினையும் உருவாக்கக் கூடியதாக அமைகிறது.

பேயோட்டும் நிகழ்ச்சி

பேயோட்டும் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கோடாங்கி உடுக்கை இசைத்து ஓசை எழுப்புவார். உடுக்கின் இசை இனிமையானது;

உள்ளத்தைக் கிளர்ச்சியடையச் செய்யும் பண்பினது. உடுக்கின் பிடிக்கயிற்றில் (நாடா) ஒலி எழுப்பும் மணி கட்டப்பட்டிருக்கும். உடுக்கு இசையுடன் மணியும் அதிர்ந்து ஓசை எழுப்பும். மணியோசைக்குப் பேய்கள் அஞ்சும் தன்மையுடையன. இக்குறிப்பினை,

'இசை மணியெறிந்து காஞ்சிபாடி. . .'

என்ற புறப்பாட்டில் காணமுடிகிறது.

சடங்கு நிகழ்ச்சியின்போது சுற்றுப்புறச் சூழலும் இசையும் பேய் பிடித்தவரின் உணர்ச்சிகளைத் தூண்டுகிறது. நேரம் அறிந்து கோடாங்கி பேயை ஓட்டப் பாடலைப் பாடுவார். இப்பாடல்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்பக் கோடாங்கிகளால் பாடப்படுகின்றன.

பாடலில் சடங்குகள்

சடங்கின் நிகழ்ச்சியினை உள்ளடக்கியதே கோடாங்கியின் பாடல் ஆகும். சடங்கிற்கான ஆயத்தம் முடிந்ததும் பாடல் தொடரும். பாடலுடன் உடுக்கின் இசையும் இணைந்தே வரும். கோடாங்கியே பாடவும் உடுக்கடிக்கவும் செய்வார்.

பாடலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தினை,

'அரி கர ராமு ராமு
அனுதினமும் நா(ன்) மறவேன்'

என்று பாடித் தனது குரு, குலதெய்வ வணக்கமாகக் "குருபாத தஞ்சமுண்டு" எல்(ை)ல வணங்குகிறேன் என்று வணங்குகின்றார். இவ்வணக்கங்களினால் அத்தெய்வங்களின் அன்பு பெற்றவன் கோடாங்கி என்று அறிய வைக்கின்றார். இறைவனை வாழ்த்தி வணங்குதல் தமிழரின் மரபு ஆகும். முன்னோர் வணக்கம் என்பது பிதிர்க்கடன் எனப்படும். இது முன்னோரின் நினைவாக அவரது சந்ததியினர் இறந்த முன்னோரது ஆவிக்குச் செய்யும் உண்பித்தலும் வழிபாடும் அடங்கிய ஒன்றாகும். இத்தகு சிறப்பான ஆவிகளைத் தமது குலதெய்வம் எனக்கொள்வது உண்டு. தமது முன்னோரின் ஆற்றல் தமக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில் பாடப்பெறும். மேலும், பேயோட்டும் தம் தொழிலுக்குத் துணையாக முன்னோர் இருக்க வேண்டும் என்று கோடாங்கி பாடுகிறார்.

நீராட்டல்

குளிர்ந்த நீரை முகத்தில் தெளித்துப் பின்னர், பேயினால் பட்டவரை நீராட்டுவர். நீராட்டுதல், பண்டை_நாள் முதல் கொண்ட

பழக்கமாகும். பழங்காலத்தே புனிறு தீட்டுக் கழியவும், குழந்தைகளின் மீது எந்தவிதமான தீய சக்தியும் படாமலும் இருக்க எண்ணியும் இதுவரை இருந்த தீட்டுக் கழிய எண்ணியும் நீராட்டுவர். 'மஞ்சள் நீராட்டு' என்பதனை இன்றும் நாட்டுப்புறங்களில் காணமுடியும். பேய்த் தீட்டுக் களைய நீராட்டிப் புனிதப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையைக் கருத்தில் கொண்டே பேய் பிடித்தவரை நீராட்டுவர்.

பிற சடங்குகள்

நீராட்டிய பின்னர் மும்முறை திருநீறைப் பேய் பிடித்தவர் முன் 'தூ' என்று ஊதித் தலையில் தெளித்து, நெற்றியில் பூசி விடுவர். திருநீறு தெய்வச் சின்னமாகும். இத்தெய்வச் சின்னம் கண்டு பேய் அச்சம் கொள்ளும் என்று நம்புகின்றனர்.

பேய் பிடித்தவர் தலையில் ஒரு கல்லை வைத்து, ஊருக்கு வெளியில் கல்லை எறிந்து விட்டு வரச்செய்வர். பின்னர், பேய் பிடித்தவரின் தலைமுடியில் சிறிது வெட்டி எடுத்து, புளியமரத்தில் ஆணி கொண்டு அறைந்து விடுகின்றனர். இதனால், பேயை மரத்தில் கட்டிப் போட்டதாகப் பொருள் கொள்கின்றனர். மேலும், புளியமரம் பேய் வாழும் இடங்களுள் ஒன்று என்பதனால் 'பேய் புளியமரத்தில் ஏறியதுபோல' என்ற நாட்டுப்புற மொழியால் தெளியலாம். தலைமுடியில் பேயின் ஆற்றல் உள்ளது என்பது நம்பிக்கை. அதனாலே, பேய் பிடித்தவரிடம் கோடாங்கித் தலைமயிரை அவிழ்த்து விட்டு ஆடு என்று பேயோட்டும் நிகழ்ச்சியில் கூறுவது குறிப்பிடத்தக்கது. இதனை,

"அஞ்சு சட முன்னால் வர
ஆட்டிவிடு ஒன் தலைய"

என்ற கோடாங்கியின் பாடல் வரியால் அறியலாம். கூந்தலில் ஆற்றல் உள்ளது என்பதனை, வென்ற காளையின் தோலை மயிர் சீராது முரசின் உட்பக்கம் வைத்துப் போர்த்துவதனால், அக்காளையின் வீரம் அம்முரசிற்கும் வரும் என்ற நம்பிக்கையைக் கூறும் சங்கப்பாடல் கருத்து இங்குச் சுட்டுவது ஒரு புடை ஒப்புமை உடையது. மேலும், கிரேக்க வீரனான சாம்சனின் வலிமை அவனது தலைமுடியில் உள்ளது என்று நினைத்து, அவனை மொட்டை அடித்து வீரிழக்கச் செய்த செயலினையும் இங்குச் சுட்டுவது, முடிமீது மானிடர் கொண்ட நம்பிக்கைக்கு அரண் ஆகும். இத்தகு நம்பிக்கைகளின் அடிப்படையிலே தாம் பேய் பிடித்தவரின் தலைமுடியில் பேய் நாட்டம் உளது என்று கருதுகின்றனர் போலும்.

முடிவுரை

பாடல் மூலம் உள்ளத்துப் பதிந்து உணர்ச்சிகளை வெளிக் கொணரும் பொருள் பொதிந்த முறையே பேயோட்டும் சடங்கு ஆகும்.

பலவகையான அச்சங்களினால் உளநிலைக்கேடு ஏற்படும். பேய்க் கருத்தால் உளநிலைக்கேடு அடைந்தவர்களிடமிருந்து அச்சத்தை நீக்கிக் கையாளும் சமயம் சார்ந்த நம்பிக்கையின் நடவடிக்கையே பேயோட்டும் சடங்கு ஆகும்.

மனிதனது சிந்தனை தொடங்கும் காலம் முதல் பேயைப் பற்றிய கருத்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அச்சப்படவும் அதிர்ச்சியடையவும் பேய் காரணமாகிறது என்ற நம்பிக்கை மேலோங்கி மாந்தரிடையே நிலவுகிறது.

உள்ளம் அன்றி, உடல்நலக் கேட்டிற்குப் பேய் காரணம் என்பதனால், அப்பேயை ஓட்ட முடியும் என்ற கருத்து உருவாக்கம் பெற்றது.

அச்சம் தரும் (பேய்) நிலையில் ஆட்பட்ட உளநிலைத் திரிபு பேய் பிடித்தவனுக்கு அடித்தளமாகிறது. பேய் தம்மிடமிருந்து விரட்டப்பட்டது என்ற நம்பிக்கையினை உருவாக்குவதன் மூலம், மனம் உடல் எனும் இவைகளை நலமாக்க முடியும் என்ற நிலையின் வழிபட்ட நிகழ்ச்சியே பேயோட்டும் சடங்கு ஆகும்.

குறிப்புகள்

1. கா. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப. 74

2. க. சாந்தி, தமிழர் பழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 250

தகவலாளர் பட்டியல்

1. மு. பேயன், ஆண், பள்ளர், 73, விவசாயக் கூலி.

2. இரா. ரவி, ஆண், பள்ளர், மூன்றாம் வகுப்பு, 38, விவசாயக் கூலி.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

101

நிகழ்த்துக் கலைகளில் நையாண்டி மேளம்

த.ரெஜித்குமார்

மனித இனம் என்று தோன்றியதோ அன்றே கலைகளும் தோன்றிவிட்டன. இக்கலைகள் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றித் தரவுகளைச் சேகரிக்கும் ஒரு சாதனமாகவும், பண்பாட்டைச் செம்மைப்படுத்தும் ஊடகமாகவும் திகழ்கின்றன. இக்கலைகளை உருவாக்குதல், நிகழ்த்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் பொருட்கலைகள் (Material Arts) நிகழ்த்து கலைகள் (Performing Arts) என்று வகைப்படுத்துவர். மக்கள் முன்னிலையில் கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைகள் நிகழ்த்துக் கலைகள் எனப்படும். இக்கலைகள் நிகழ்த்தப்படும்போது பின்னணி இசையாக விளங்குகின்ற நையாண்டி மேளத்தின் பங்களிப்பினைப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நையாண்டி மேளம்

நையாண்டி மேளம் என்பது நிகழ்த்துக் கலைகளுள் ஒன்றாகும். இதனை மக்கள் மேளம் அல்லது கொட்டு என்றே அழைக்கின்றனர். தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பரவலாக இக்கலை நிகழ்த்தப் படுகிறது. இவை தனியாகவும், பிறகலைகளான கரகாட்டம், காவடி யாட்டம், சாமியாட்டம் போன்றவற்றிற்குப் பக்க வாத்தியமாகவும் நிகழ்த்தப்படுகின்றன. “பக்க இசையின் நாதசுரக் கலைஞர்கள் இருவரும்

தங்களுக்குள்ளாகவும், மற்ற தாளவாத்தியக் கலைஞர்களுடனும், பக்க வாத்தியக் கலைஞர்கள் ஆட்டக் கலைஞர்களுடனும், கருவி வாசிப்பு, கருவியுன் அசைவு, உடலசைவு இவற்றின் வாயிலாக ஒருவரை ஒருவர் கேலியும் கிண்டலும் செய்து கொள்கின்றனர். இவ்வாறு, கேலியும் கிண்டலும் செய்து நையாண்டி செய்து கொண்டு ஆட்டக் கலைஞர்களுடன் தாமும் சேர்ந்து ஆடுவதால், இப்பக்க இசை நையாண்டி மேளம் என்று அழைக்கப்பட்டது'' *(1989:10)* என்று முருகேசன் குறிப்பிடுகிறார்.

நையாண்டி மேளத்தில் நாதஸ்வரம் (நாயனம்) தவில், பம்பை, தாளம் (ஜால்ரா) ஒத்து (சுதிப்பெட்டி), கிடுகட்டி, கோந்தளம் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் உறுமியும் பயன்படுத்தப்படுகிறது. நையாண்டி மேளத்திற்கு முதன்மையாக, இரு தவில்களும், இருநாதசுரங்களும், ஒன்று அல்லது இரண்டு பம்மைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

நாதசுரம்

துளைக்கருவிகளுள் ஒன்றாகிய இக்கருவியை மங்கலச் சின்ன மாகவும் அதன் ஓசையை மங்கல இசையாகவும் மக்கள் கருதுகின்றனர். தமிழகத்திற்குத் தனிச்சிறப்பு நல்கும் இசைக்கருவிகளுள் நாதசுரம் சிரப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. இக்கருவியினை நாதசுரம், நாதஸ்வரம் என்றும் மக்கள் கூறுவர். இக்கருவியின் ஓசை கனமுள்ளதாகவும், ஒலிபெருக்கியின் துணையின்றி நீண்டதூரம் கேட்கும் ஆற்றலுடைய தாகவும் இருக்கும். எனவே, பழங்காலத்தில் இதனை நெடுவாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளனர். இஃது 'ஆச்சா' என்னும் ஒருவகை மரத்தினைக் கடைந்து குழலாக்கிச் செய்யப்படும் துளைக்கருவியாக விளங்குகின்றது. இதன் மேல்பாகம் சிறிதாகவும் அடிப்பாகம் சற்றுப் பெருத்தும் வட்டவடிவில் கிண்ணம் போல அமைந்திருக்கும். இதன் அடிப்பாகம் விரிந்து இருப்பதால் நாதசுரத்தின் ஒலி நெடுந்தூரம் கேட்கிறது. நாதசுரம் வாசிப்பது கஷ்ட சாத்யமானது. பெரிய நாதசுரம் 'பாரிவாத்யம்' எனவும் சாதாரண அளவிலுள்ள நாதசுரம் 'திமில்' எனவும் வழங்கப்படுகிறது. நாதசுர கோஷ்டியைப் 'பெரியமேளம்' என்று சொல்வதுண்டு. நாதசுர கோஷ்டியில் பங்கு கொள்ளுபவர்கள் நாதசுர வித்துவான், ஒத்து ஊதுபவன், தவில் வாசிப்பவன், தாளம் தட்டுபவன் முதலியோர் ஆவர். சில சமயங்களில் இரண்டாவது நாதசுரமும், தவிலும்கூட இருப்பதுண்டு. தமிழ்நாட்டில் மங்கல வாத்தியம் நாதசுரமே. நாதசுரம், நாயணம் என்ற பெயர்களில் இந்த வாத்யம் குறிப்பிடப்படுகிறது'' *(2001: 45)* என்று கிருஷ்ணன் விளக்குகிறார்.

நாதசுரத்தை வாசிக்கும்போது இடக்கை மேலும், வலக்கை கீழும் வைத்து வாசிப்பதை மரபாகக் கருதுகின்றனர். வலக்கை மேலும் இடக்கை கீழும் வைத்து வாசிப்பவர்களுள் உண்டு. அவ்வாறு வாசிக்கும்போது சீவாளியை உதட்டில் வைத்து காற்றானது வாத்தியத்தினுள் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில் கை விரல்கள் சுரத் துளைகளைத் தேவைக்கு ஏற்ப மூடியும் திறந்தும் ஒலி எழுப்பும் வகையில் செயல்படுகின்றன. இஃது இரண்டரையடி நீளம் கொண்டது.

தவில்

இது மிகப்பழமையான தோல் இசைக் கருவியாகும். இதன் நடுப்பகுதி பீப்பாய் போன்ற வடிவத்தில் இருக்கும். இஃது பலா, வேங்கை மரத்தினால் குடைந்து பீப்பாய் போன்று செய்யப்பட்டுள்ளன. இதன் இருவாய்ப் பகுதியும் மாட்டின் தோல் அல்லது கன்றுக் குட்டியின் தோலைப் பதப்படுத்தி மூடப்பட்டிருக்கும். இதன் இரண்டு பக்கத் தோலையும் இறுக்கமாக வைப்பதற்குத் தோல் வாரினைப் பயன்படுத்துகின்றனர். தற்போது இரும்புப் பட்டையின் மூலம் அதனை இறுக்கமாக்குகின்றனர். இதில் ஒருவாய் பெரியதாகவும், மறுவாய் சிறிதாகவும் இருக்கும். பெரிய வாய் மிதமான தன்மை கொண்ட ஒலியையும், சிறிய வாய்ப்பகுதி கடினமான ஒலியையும் எழுப்புகின்ற தன்மை கொண்டதாக அமைந்துள்ளன. இதனைத் தோளில் இடுவதற்குத் துணியினால் ஆன 'கச்சை' யினைப் பயன்படுத்துகின்றனர். இக்கருவியைக் கம்பினாலும், கையாலும் அடித்து ஒலி எழுப்புகின்றனர். இதன் எடை சுமார் 22 கிலோ இருக்கும்.

பம்பை

இரண்டு தோல் கருவிகள் ஒன்றாக வாசிக்கப்படுவது பம்மை ஆகும். இதனை அசுர வாத்தியம் என்பர், "ஒரே மாதிரியான இரண்டு தோலிசைக் கருவிகள், இவற்றில் ஒன்றின் உடல் பகுதி மரத்தினாலும், இன்னொன்றின் உடல்பகுதி பித்தளையாலும் செய்யப்பட்டிருக்கும். மரத்தினால் செய்யப்பட்டது பெண் பம்பை என்றும், உலோகத்தால் செய்யப்பட்டது ஆண் பம்பை என்னும் சில இடங்களில் அழைக்கப்படுகின்றன. பெண் பம்பையின்மேல் ஆண்பம்பை வைக்கப்பட்டிருக்கும். அங்காள பரமேஸ்வரி வழிபாடானது இக்கருவியுடன் தொடர்புடையது. கொடிய அரக்கனைக் கொன்று அவன் தோலை உரித்து அம்மனால் உருவாக்கப்பட்டதுதான் இவ்விசைக்கருவி என்ற கதை ஆனைமலைப் பகுதி செம்படவர்களிடம்

வழக்கிலுள்ளது "(2001"457, 58) என்று பெருமாள், இராமச்சந்திரன் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். சில இடங்களில் பெண் பம்பையினை 'மந்தம்' என்றும், ஆண் பம்பையினை 'வீராணம்' என்றும் கூறுகின்றனர்.

இசைக்கலை ஒரு குறிப்பிட்ட சாதிக்குரிய கலையன்று. மருத்துவர் (நாவிதர்) வண்ணார், அருந்ததியர், பள்ளர், பறையர், கம்பர், தேவர், போன்ற பல சாதியினர் இக்கலையை நிகழ்த்துகின்றனர். குமரி மாவட்டத்தில் பெரும்பாலும் மருத்துவ இன மக்களே இக்கலையினை நிகழ்த்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலை கோயில் விழாக்களில் தனியாகவும், சாமியாட்டத்தை வரவழைப்பதற்காகவும், கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், இராசாராணி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம் போன்ற நிகழ்த்துக் கலைகளில் உயிர்நாடியாக - பக்கவாத்தியமாக இக்கலை நிகழ்த்தப்படுகின்றது.

கரகாட்டம்

நிகழ்த்துக் கலைகளைப் பொறுத்தவரை கரகாட்டம் தமிழகத்தின் எல்லாப்பகுதிகளிலும் நிகழ்த்தப்படும் கலையாகக் காணப்படு கிறது.இதனைக் கும்பாட்டம் என்றும் கூறுவதுண்டு. கும்பம், கரகம் இவையிரண்டும் பானையினையே குறிப்பிடுகிறது. பானையினைத் தலையில் வைத்து ஆடுவதினால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது. இக்கலை நிகழ்த்தப்படும்போது நையாண்டி மேளம் மிகவும் தேவையான ஒன்றாக விளங்குகிறது. தலையில் கரகத்தை வைத்து ஆடும் கலைஞரின் ஆட்டத்தின் வேகத்தையும், தன்மையினையும் தீர்மானிப்பது இவர்களே. இவர்கள் வாசிக்கின்ற இராகத்திற்கும், இசைக்கும் ஏற்ப கரகாட்டத்தின் ஆட்ட முறைகள் அமையும். சில நேரங்களில் அவர்களுடன் சேர்ந்து நையாண்டி மேளக்காரர்களும் ஆடுவதுண்டு. ஆட்டம் தொடங்கும் போது மெதுவாகத் தொடங்கி உச்சநிலைவரை ஆட்டத்தின் தன்மை மேளக்காரர்கள் நிகழ்த்துகின்ற இசையினை அடிப்படையாகக் கொண்டமையும். நையாண்டி மேள இசையானது தெம்மாங்கு, ஆரவல்லி போன்ற மிகவும் பழமையான இராக தாளத்திலும், திரைப்படப் பாடல்களின் இராகத்திலும் வாசிக்கின்றனர். அதற்கேற்ப ஆட்டக் கலைஞர்கள் ஆடச் செய்கின்றனர்.

காவடியாட்டம்

காவடியாட்டம் கோவில்களில் நேர்ச்சையாகவும் கோயில் சடங்கின் ஒரு பகுதியாகவும் நடைபெறுகிறது. காவடியாட்டம்

பெரும்பான்மையும் முருகன் கோவில்களில் ஆடப்படுகின்றது. இக்கலை நிகழும்போது நையாண்டி மேளம் வாசிப்பவரின் தன்மைக்கு எடுப்பவர் ஆடுவார். நையாண்டி மேளக் கலைஞர்கள் நடந்துகொண்டே இசைத்துச் செல்லுவர். இதனைப் பின்தொடர்ந்தே இக்காவடியாட்டம் ஆடப்படுகிறது. நையாண்டி மேள இசைக்கேற்ப காவடியாட்டக் கலைஞர்கள் கால் அடவுகள் போட்டு ஆடுகின்றனர். இசைக்கலை ஞர்கள் காவடியாட்டத்திற்கு காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, கிளிக்கண்ணி, மகுடி போன்ற பல இராகத்தில் (மெட்டில்) இசையினை வாசிக்கின்றனர். இந்த இராகத்திற்கு ஏற்ப கலைஞரின் கால் அசைவுகளும் அல்லது காவடி அசைவுகளும் அமைகின்றன.

சாமியாட்டம்

சாமியாட்டம் என்பது குறிப்பிட்ட ஒருவர் மீது இறைவன் இறங்கி (அருள்) வந்து ஆடுவதாகும். அவ்வாறு ஒருவர் மீது அருள் வருவதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது நையாண்டி மேளம் ஆகும். அவ்வாறு சாமியாடுபவர் மீது சாமி வரவழைக்கும்போது நையாண்டி மேளக் கலைஞர்களும் ஆடுவதுண்டு. கோவிலில் உள்ள எல்லா சாமிகளையும் வரவழைப்பது இவர்களின் கடமையாகும். அவ்வாறு வரவழைக்க ஒவ்வொரு சாமிக்கும் வெவ்வேறு இராகத்தில் இசையினை வாசிக்கின்றனர். அம்மனுக்குத் தாலாட்டு இராகத்திலும், சுடலை, முண்டனுக்கு மகுடி இராகத்திலும், வாதைக்கு வேட்டுவளி இராகத்திலும் வாசிக்கின்றனர். சாமியினை வரவழைப்பதுதான் இக்கலை நிகழ்த்தப்படுவதன் முக்கிய நோக்கமாகும். எப்படியும் சாமியை வரவழைத்து விடுவதாகக் கூறுகின்றனர். இவ்வாறு, சாமி வந்து ஆடும்போது பக்தர்களுக்கு அருள் வாக்குக்கூறுவர். பதிலுக்கு கிரீடம், சதங்கை இவற்றைக் கட்டி விடுவர். சாமி உரக்கக் குரல் கொடுத்தே ஆடும். உடலில் சந்தனத்தைத் தடவிப் பின் இருகையிலும் தீ பந்தத்தை வைத்துக் கொண்டு அதன் வெப்பத்தினால் உரக்க குரல் கொடுக்கும். மக்கள் அதனைச் சாமியின் ஆவேசக் குரலாகக் கருதினர். இவ்வாறு, உரக்கக் கத்துவதினால் உடல் வலியிருந்து ஆடுபவர் ஆறுதல் பெறுகிறார். இதனை, "அவருக்கு உடல்வலி ஏற்படும் போதெல்லாம் மகுடத்தை வேகமாக அடிக்கச் சொல்கிறார். மகுட இசைக்கேற்ப ஆடுகிறார். இதனால் அவருடைய உடல்வலியையும் மனச்சோர்வையும் போக்கிக் கொள்கிறார். மகுட இசை தெய்வத்தை வரவழைக்கும் ஆற்றல் வாய்ந்தது" (*2007:478*) என்று இராமநாதன் குறிப்பிடுகிறார். நையாண்டி மேளக் கலைஞர்கள் சாமி ஆட்டம் வருவதற்கு முன்

தொடங்கி சாமி ஆட்டம் முடியும்வரை தன் இசைக்கலையினை நிகழ்த்திக் கொண்டே இருப்பர். ஆட்டம் முடிந்து கீழே விழும் நிலையிலும் உச்சக்கட்ட ஒலியினை எழுப்புகின்றனர்.

முடிவுரை

நிகழ்த்துக் கலைகளில் ஒன்றாக நையாண்டி மேளமும் திகழ்கிறது என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. கரகாட்டம், காவடியாட்டம், சாமியாட்டம் போன்ற நிகழ்த்துக் கலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உயிர்நாடியாக நையாண்டி மேளம் விளங்குகின்றது. இக்கலையினைக் குருகுலக் கல்வி முறையில் முன்பு பயின்று வந்தனர். தற்போது மூன்றாண்டு சான்றிதழ் (Diploma) பாடத்திட்டம் முறையில் கற்றுக் கொடுக்கின்றனர். கலாச்சார மாற்றத்தினூடே நாட்டுப்புற இசைக்கலையாக இருந்த நையாண்டி மேளம் செவ்வியல் இசைக்கலையாக மாறிவருதைக் காணமுடிகிறது. இக்கலையினை நிகழ்த்துபவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

பயன்பட்ட நூற்கள்

1. இராமநாதன், ஆறு. தமிழர் கலை இலக்கிய மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், புதுத் தெரு, சிதம்பரம், 2007

2. கிருஷ்ணன், ஆர்,வி. சங்கீதசாரம், இசைத் தகவல் தொடர்பு மையம், காமராஜ்நகர், சென்னை, 2001.

3. பெருமாள், அ.க., இராமச்சந்திரன். நா, (பதி)நாட்டார் நிகழ்த்துக் கலைகள் களஞ்சியம், தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றம், சென்னை, 2001.

4. முருகேசன், கு. தமிழக நாட்டுப்புற ஆட்டக் கலைகள், தேவி பதிப்பகம், சென்னை, 1989

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி,
நாகர்கோவில்.

102
தெருக்கூத்தும் பார்வையாளர்களும்

ஜா. லாலி எதேஷ்

ஆயகலைகள் அறுபத்தி நான்கு. அந்த அறுபத்தி நான்கு கலைகளுள் ஒன்றாகக் கருதப்படும் தெருக்கூத்து கிராமங்களிலே மிகுதியாக நடைபெறுவதால் கூத்தில் விளைவுகொண்ட பார்வையாளர் களாகக் கிராம மக்களே அமைகின்றனர். "கிராமத்தின் கோவில் நிகழ்ச்சி யாகத் தெருகூத்து அமைவதால் ஆண்டுக்கொருமுறை நாட்டுபுறக் கலையான தெருக்கூத்தினைக் கிராம மக்கள் கண்டு களிக்கின்றனர். கோடைக்காலத்தில் வயல் வேலைகளற்ற வேளைகளில் கிராம மக்கள் கூத்துப் பார்வையாளர்களாகப் பங்கு கொள்கின்றனர். பாமர மக்களும், உழைக்கக்கூடிய உழவர்களும் படியாதவர்களும், சிறுவர் சிறுமியர்களும் வயதான பெரியோர்களும், தாய்மார்களும் கொட்டும் பனியிலும் குளிரிலும் சலியாது கண்மூடாது விரும்பிக் கலையுணர்வோடு கண்டுகளிக்கிறார்கள். இதில் பல நீதிகள் கற்றுக் கொள்கிறார்கள் கிராம மக்கள் காசு செலவு செய்யாது கண்டு தெளியும் ஒரு கலையாகும் தெருக்கூத்து நடைபெற ஏற்பாடு செய்பவர்களாகவும். அவற்றைச் சுவைப்பவர்களாகவும் கூத்திலிருந்து நல்லது கெட்டது களைப் பெறுபவர்களாகவும் கூத்து நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர் களாவும் கிராமபுறத்துப் பார்வையாளர்கள் அமைகின்றனர்."[1] அப்பார்வையாளர் களுக்குத் தெருக்கூத்துடன் அமைகின்ற தொடர்புகளும் பிறச் செய்திகளும் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

தெருக்கூத்தும் கிராம மக்களும்

கிராமங்களில் கோவில் விழாக்களில் கூத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் அக்கிராமங்களைச் சேர்ந்தவர்களே. அக்கிராம மக்களின் நன்கொடையால்தான் கூத்திற்குரிய செலவுகள் கவனிக்கப்படுகின்றன. சில கிராமங்களில் வீட்டிற்கு இவ்வளவு தொகை என்று வசூலிக்கப்படும். இதற்குத் தலைக்கட்டு என்று பெயர். கோவில் சார்பில் கூத்து நடைபெற்றாலும் கிராமவாசிகளின் பொருட்துணை யுடன் அவர்களின் விருப்பத்திற்கேற்பக் கூத்து நடத்தப்பெறுவதனை இதன் மூலம் அறிந்துகொள்ள முடியும், கூத்திற்குச் சேர்க்கப்பட்ட தொகை குறைவாயிருந்தாலோ இரண்டு மூன்று நாள் கூத்தை அதிகமாக நடந்த வேண்டுமென்றாலோ ஊர்மக்கள் ஒன்றுகூடி அதுபற்றி விவாதிப்பர். ஊரிலுள்ள பெருந்தனக்காரர்களோ அல்லது ஊர் மக்கள் எல்லோருமாகச் சேர்ந்தோ செலவுத் தொகையை ஏற்றுக்கொள்வர். அதன் பிறகு கூத்திற்குரிய நாட்கள் முடிவாக்கப்படும்.

"கோவில் சார்பிலன்றித் தனியே கூத்திற்கு ஏற்பாடு செய்பவர் களும் இக்கிராமத்துள்ளோரே. கிராமத்தில் குழந்தைகள் பிறப்பதற்காக வேண்டிக் கொண்டோரும் பல காரணங்களுக்கு தெய்வத்தை வேண்டிக் கொண்டாரும் கூத்திற்கு ஏற்பாடு செய்வர். கோவில் தவிர தனி நாடகங் களும் நடக்கும். திருப்பதி போய் வந்த சிலபேர் நாடகம் நடத்துவார்கள். சில பெரியவர்களுடைய இறப்புச் சடங்குகள் முடிந்த பிறகு அவர்கள் மோட்சத்திற்குப் போவதற்கான நாடகம் நடத்துவார்கள்"[2]

கிராமங்களில் சாதியடிப்படையிலோ செல்வாக்கு நிறைந்த நபர்களிடையேயோ உண்டாகும் போட்டிகளாலோ, தேர்தல் தகராறு காரணமாகவோ, தண்ணீர் பாய்ச்சுவது அல்லது மீன் பிடிக்க குத்தகை எடுப்பது பற்றிய மோதல்களாலோ ஒரு சாதியைச் சேர்ந்த பெண்ணுடன் மற்றொரு சாதிக்காரன் கள்ளக்காதல் கொண்டிருப்பதால் சண்டை மூண்டோ, கட்சிகள் ஏற்பட்டு கிராமம் இரண்டுபடும். இதனால் கிராமங்களில் பல கேடுகள் விளையும்; கிராமத்தின் முன்னேற்றம் தடைபடும். இரண்டு கட்சியாரும் சமரசம் செய்து கொண்டதும் கூத்து நடப்பது வழக்கம்.

"ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்" என்பது பழமொழி.

கூத்திற்குரிய நாள், கூத்துக் கதைகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் கிராம மக்களே. ஆண்டுதோறும் பாரதக் கூத்தையே கண்டு வருகிறீர்

களே சலிப்பேற்படாதா? வெவ்வேறு கதைகள் நடத்தினால் மக்களுக்கு உற்சாகமாயிருக்குமே?[3] என்ற வினாக்களுக்கு கிடைத்த பதில் பாரதக் கதை பாவமழிக்கும் என்பது பொருள். அதாவது பாரதக்கதையை ஆடுவோரும், பாடுவோரும் ஆட்டத்தைக் காணுவோரும் பாட்டுகளைக் கேட்போரும் தத்தம் பாவங்கள் நீங்கப் பெற்றவராவர் என்பது பெறப்படும் செய்தியாகும்.

ஏதோ ஆடினார்கள், ஏதோ கண்டோம் என்ற எண்ணத்தில் காணுவோரும், ஏதோ கூடினார்கள் ஏதோ ஆடினோம் என ஆடுவோரும் கருதாமல் தங்கள் பாவம் அழிக்கும் ஞானக் குளியலாகத் தெருக்கூத்தைக் கருதுகின்றனர். எனவே, கூத்திற்கும் கிராம மக்களுக்கும் உள்ள தொடர்புகள் பலதிறத்தன என்பதையும், அவையே கூத்துக் கதைகளுக்கும், நாட்களின் எண்ணிக்கைக்கும், கூத்து ஏற்பாட்டிற்கும் கூத்துக் கலைஞர்களின் உபசரிப்புக்கும் காரணங்களாகின்றன என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

கூத்தும் பார்வையாளர்களும்

கூத்து ஓர் ஊரில் நிகழுமாயின் அவ்வூர் மக்கள் மட்டுமின்றி பக்கத்து ஊர் கிராம மக்களும் அமைவர். ஒவ்வொரு ஊர்க் கூத்திலும் பிறவூர் மக்களும் கலந்து கொள்ளுவதற்கேற்ப நாட்கள் அமைக்கப்படும். கோடைக்காலம் முழுவதும் கூத்துகள் பல கிராமங்களில் நிகழ இதுவே காரணம். ஓர் ஊரைச் சேர்ந்தவர்கள் பிறவூர்களுக்கு விழா அழைப்பிதழ் அனுப்பி அவர்களையும் தெருக்கூத்து காண அழைப்பர். நாட்டுப்புற மக்கள் நாடகத்தை விரும்பிப் பார்த்தனர். அதைத் தங்களுக்கு இன்பமளிக்கும் பொழுதுபோக்காக மட்டும் கருதாமல் தாங்கள் வணங்கும் கடவுளரின் கதைப்பதிவை நேரில் கண்டுகளிக்கும் பேறாகவும் மதித்தனர். "நாடகம் எந்த ஊரில் நடந்தாலும் அந்த ஊருக்குக் கூட்டம் கூட்டமாகச் சென்று கூடிவர உறவினர்களையும் அழைப்பர்"[4]

பார்வையாளர்களின் எண்ணங்களும், நம்பிக்கைகளும்

கூத்து பார்ப்பதில் மிகுதியான ஆர்வங்காட்டும் பார்வையாளர்கள் கூத்தைக் காணுவதிலும் கூத்தின்போது கூத்தர்களைப் போற்றுவதிலும் சில நம்பிக்கைகளைக் கொண்டிருக்கின்றனர். கூத்தினைப் பார்க்கும் போது தங்கள் பாவங்களிலிருந்து விமோசனம் பெறுவதாக அவர்கள் நம்பிக்கை அமைவதால்தான் இறைத் தொடர்பான கதைகள் ஆடுகளத்தில் இடம் பெறுகின்றன. கூத்து நிகழ்ச்சிகளை உண்மையெனக் கருதிக் காட்சிகளைப் புனிதமாகவும் உண்மையான தாகவும்

கருதினர். மக்களின் வாழ்வும் செயலும் நாடகங்களில் மாறி சீர்திருத்தின.''[5] பெண்கள் இக்காட்சியில் கண்ணில் நீர் பெருகிக் கலங்குவர். கூத்தாடு களத்தில் வேடம் பூண்டு வருபவர்களைப் பார்வையாளர்கள் அந்த நேரத்தில் தெய்வங்களாக நம்பி மகிழ்கின்றனர். கூத்து துவக்கத்தில் இராமனின் தர்பார் காட்சி வரும். திரை விலக்கப் பட்டவுடன் தர்பார் காட்சியில் இராமன், சீதை, மற்றவர்களைப் பார்வையாளர் தெய்வங்களாக நம்பி மகிழ்ந்தனர்.

கூத்து துவக்கத்தில் இறைவனின் திருசன்னதியில் தீப ஆராதனை நிகழுங்கால் ஆடுநர்கள் வணங்கிப் பின் கூத்தைத் துவங்குவர். அதற்கு முன் கொலுக் காட்சியில் ஆடுநர்கள் முன்பாகத் தேங்காய், பழம் வைத்தும் தீப ஆராதனை செய்தும் அவர்களைப் பார்வையாளர்கள் போற்றுவர். சர்க்கரை, பழம் போன்றவற்றைப் பார்வையாளர்கள் சிலர் படைக்கவும் காணலாம்.

பாரதக் கூத்து நடைபெறும்போது துகில் உரிதலைக் காணுவது பாவமென்றும் அதற்குப் பிராயசித்தமாகவே தபசுக் கூத்தைப் பார்க்க வேண்டும் என்னும் வழக்கமுண்டு. "துகில் உரிதல் கூத்துப் பார்ப்பது பாவகாரியத்திற்குரியது என்ற காரணத்தால்தான் பெண்கள் பலர் அன்றையதினம், கூத்துப் பார்க்க வருவதில்லை.''[6]

பார்வையாளர்களின் பங்கும் பார்வையும்

சில சமயங்களில் வேடிக்கையான நிகழ்ச்சிகளும் பார்வையாளர் களால் ஆடுகையில் நிகழ்வதுண்டு. கோமாளிக்கு வேடிக்கையான பரிசுகளைக் கொடுப்பர். அரிசிப்பொரி, வடை, பொட்டுக்கடலை ஆகியவற்றை மாலையாக அணிவிப்பர். கூத்து மக்களின் மனவிளைவைப் பொறுத்து அமையும். இதைப் போலவே, துரியோதனன் சம்ஹார கூத்தின் மறுநாள் தீயில் சாடுதல், சாடுதல் உற்சவம் நிகழும்போது கூத்துக் கலைஞர்களுடன் ஊர் மக்களும் பங்குபெறுவர். துரியோதனன் வதம் அல்லது படுகளம் என்ற தலைப்பில் கூத்து நடக்கும். மறுநாள் ஊரில் பரந்த வெளியில் துரியோதனுக்கு ஊர் மக்கள் பெரிய கொடும்பாவிக்கு தீயிடும் காட்சி நடைபெறும். கூத்தர்களே தீயிடுவர். தீ மிதித்தல் தீமிதி உற்சவம் எனப்படும்.

கூத்தினை தெய்வீகக் கலையாகவே காண்பவர்கள் மிகுதி. பாத்திரங்களைத் தெய்வங்களாகக் கருதும் போக்கும் கூத்து பாவத்தைத் தீர்த்து விமோசனம் தரும் கலையென்று எண்ணங்களும் இதற்குக் காரணம்.

கூத்து பார்க்கும் மக்கள் இப்படிப் பெண் வேஷம் வரும் போதெல்லாம் இறந்த உறவினர்கள் பேரிலும் கட்சித் தலைவர்கள் பேரிலும் குலத்தெய்வங்கள் பேரிலும் பணம்போட்டு வாழ்த்தும்படிச் சொல்லுவார்கள் என்பதைப் பாடல்கள் வழியாகத் தெரிவிப்பதைக் காணலாம்.

பார்வையாளர்களிடத்தே கூத்தின் பாதிப்புகள்

கூத்தினைக் காணுகின்ற பார்வையாளர்கள் மனத்தில் சில மாற்றங்களைக் கூத்து ஏற்படுத்துகின்றது. கோவில் நிகழ்ச்சி என்பதற்கு அப்பால் கூத்திலிருந்து பல இடங்களைப் பார்வையாளர்கள் பெறுகின்றனர். பாவம் செய்யப் பயப்படும் மனநிலை பாமர மக்களிடையே கூத்தினால் பரவுகிறது. கூத்துக்கதைகள் போராட்டங்கள் கொண்டதாயும் நன்மைகளுக்கு வெற்றி என நீதியை தருவதாகவும் அமைகிறது. தெருக்கூத்தின் பாடல்கள் மனத்தில் பதிந்து விடுவதால் அப்பாடல்களைப் பார்வையாளர்கள் வேலை செய்யும் போது உண்டாகும் களைப்பை நீக்கவும் பாடி மகிழ்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, "நாத்தனாரும் நாத்தியுமாய் நடுவீட்டில் சண்டையிட்டார்

சோத்துக்காக வந்தேனம்மா சோறுங்காணோம் நீருங்காணோம்

சாதம்போட வந்தீர்களா? இங்கே சண்டை போட வந்தீர்களா?

என்று அதே மெட்டில் சிறுவயதில் கவிகட்டிப் பாடினேன் என்றும் கூறுகின்ற நாமக்கல் கவிஞர், வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் கவிபாடும் சக்தி தெய்வப் பிரசாதமானால் அந்த தெய்வப்பிரசாதம் எனக்கு தெருக்கூத்து பாட்டின் மூலமாக வந்ததென்று எண்ணி அதனை வாழ்த்துகின்றேன் என்று குறிப்பார்"[8].

இவ்வாறு, கூத்தின் ஆடல் பாடல்கள், உணர்ச்சிகள், கதைகள் பார்வையாளர்கள் மனத்தளவிலும் பிறவற்றிலும் மாற்றங்கொள்ளச் செய்கின்றன என்பதையறியலாம்.

பயன்பட்ட நூற்கள்

1. சடையப்பன், "கலையுலகில் தெருக்கூத்து, தாமரை, சென்னை, டிசம்பர் - *1976*, பக். *14-16*
2. கூத்துக் கலைஞர் நடேசத்தம்பிரான் ஆனந்த விகடன் இதழுக்கு அளித்த பேட்டி. சென்னை - *20.03.1966*

3. தமிழகத்தில் தெருக்கூத்து, முனைவர். அ. அறிவு நம்பி, சென்னை, 1989, ப. 21

4. ஏ. என்.பெருமாள் தமிழ்நாடகம் ஓர் ஆய்வு. ப. 368

5. ஏ. என். பெருமாள், தமிழ்நாடகம் ஓர் ஆய்வு ப. 371

6. முனைவர் அ. அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து, சென்னை, ஆகஸ்டு 1989,ப.210

7. நாமக்கல் கவிஞர்.வெ. இராமலிங்கம் பிள்ளை தாயார் கொடுத்த தானம், பக் 28-40

◆

ஆய்வு மாணவி,
தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்.

103

கரகாட்டம் - தோற்றச் சூழல்

முனைவர் கி.லோகேஸ்வரி

நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளில் ஒன்றான கரக ஆட்டக் கலை எங்கு, எப்பொழுது ஏன் தோன்றியது? என்பதற்கான விடை தேடலின் விழைவில் விளைந்ததே இவ்வாய்வுக் கட்டுரையாகும். கரகாட்டத்தின் தோற்றச் சூழலை ஆராய்வதற்கு முன் ஆட்டக் கலையின் தோற்றக் காரணம் மற்றும் வகைப்பாடு பற்றி மிகச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டுவது இவண் தேவையாகிறது.

1. ஆட்டக்கலை - தோற்றக் காரணம்

மனிதன் இன்பத்தில் மகிழும் போதும், துன்பத்தில் துடிக்கும் போதும், கோபத்தில் குமுறும் போதும், பக்தியில் மூழ்கும் போதும் உணர்ச்சிக் குவியலாகின்றான். இவ்வுணர்ச்சியின் உந்துதல் காரணமாக உடலில் அசைவுகளும், ஆட்டங்களும் தோன்றுகின்றன. இதனையே தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்ற சொல்லால் குறிப்பார் இவ்வசைவுகளும் ஆட்டங்களும் நெறிப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப் படும்போது அவை ஆட்டக் கலையாக ஆக்கம் பெறுகின்றன. மனிதனின் இவ்வியல்பூக்கமே ஆட்டக் கலையின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும்.

ஆட்டக்கலை - வகைப்பாடு

ஆட்டக் கலைகளைத் தற்கால ஆய்வாளர்கள் செவ்வியல் கலை, (Classical art), நாட்டுப்புறக்கலை (Folk art) என்ற இருவகைப்

பாகுபாட்டில் அடக்கிக் காட்டுகின்றனர். "செவ்வியல் கலை என்பது திட்ட வட்டமான இலக்கண வரையறை கொண்டது. தீவிர முறையான பயிற்சிக்குறியது. பெரும்பாலும் உயர் வர்க்கத்தினரோடு தொடர் புடையது"[1] எனவும் "நாட்டுப்புறக் கலை என்பது திட்டவட்டமான இலக்கண வரையறையற்றது. எளிய பயிற்சி மற்றும் நெகிழ்வுத் தன்மைக்கு உரியது. பெரிதும் அடித்தட்டு மக்களோடு தொடர் புடையது"[2] எனவும் இவ்விரு வகைப்பாட்டிற்கு விளக்கம் தருகின்றனர். இன்றைய ஆய்வாளர்களின் இவ்வகைப்பாட்டினைச் சிலப்பதிகாரம் 'வேத்தியல்', 'பொதுவியல்' என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வகைப்படுத்திக் காட்டியுள்ளமை குறிப்பிடற்குரியதாகும்.

'வேத்தியல்' என்பது அரசர்குரியது எனும் பொருளில் செவ்வியல் கலையாகவும், 'பொதுவியல்' என்பது பொதுமக்கட்குரியது எனும் பொருளில் நாட்டுப்புறக் கலையாகவும் விளங்கியுள்ளமையினை உரையாசிரியர்கள் கூற்றினால் அறியலாம். இவ்வாறு இவ்விரு கலைகளும் வேறுபடுத்திக் காட்டப்பட்டாலும் இவை ஒன்றோடு ஒன்று கொண்டு கொடுத்து, ஒன்றையொன்று வகைப்படுத்தியும், ஒன்று மற்றொன்றாக மாறியும் வருவது குறிப்பிடற்குரியதாகும். சான்றாக 'சதிர்' என்ற நாட்டுப்புறக் கலை 'பரதம்' என்ற செவ்வியல் கலையாக மாறியுள்ளமையைக் காட்டலாம். பரதநாட்டியக் கலையின் பல கூறுகள் நாட்டுப்புறக் கலைகளில் இடம் பெறுவதும் உண்டு.

கரகாட்டம் - விளக்கம்

நாட்டுப்புறக் கலையான கரகாட்டம், கரகம் எனப்படும் செம்பு (அல்லது) பானையினைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டமாகும். இக்கரகாட்டம் பக்தி உணர்வின் வெளிப்பாடான வழிபாட்டோடு தொடர்புடையது. பெரிதும் அம்மன் கோவில் வழிபாட்டுச் சடங்கில் இவ்வாட்டம் நிகழ்கிறது. இதனை அம்மன் கரகம் (அல்லது) சக்திக்கரகம் என்ற பெயரில் அழைக்கின்றனர். மேலும், இவ்வாட்டம் பொழுதுபோக்குக் கலையாகத் திருவிழாக்கள், ஊர்வலங்கள், வாழ்வியல் சடங்குகள், அரசியல் நிகழ்வுகள் ஆகியவற்றிலும் நிகழ்த்தப்படுகின்றன. இதனை 'ஆட்டக்கரகம்' எனக் குறிப்பிடுகின்றனர். எனவே, கரகாட்டம் என்பது வழிபாட்டுநிலை மற்றும் பொழுதுபோக்கு நிலை என்ற இருவகைநிலையில் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுத் திகழ்கிறது.

கரகாட்டம் - தோற்றச் சூழல்

இனிக் கரகாட்டத் தோற்றச் சூழல் பற்றிக் காண்போம். பெரும்பாலும் கலைகளும், வாழ்வியல் சடங்குகளும் 'போலச் செய்தல்' (அ) 'பாவனை செய்தல்' (அதாவது போலச் செய்தல் என்பது அன்றாட வாழ்வில் நாம் செய்யும் வேலைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைத் தாம் படைக்கும் கலைகளிலும், சடங்குகளிலும் பின்பற்றுதல் எனப்படும் அடிப்படையிலேயே அமைகின்றன. இந்நிலையைப் பின்பற்றியே கரகாட்டக் கலையும் தோற்றம் கொண்டு வளர்ந்து வந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

அதாவது, ஆதிகால மனிதன் தண்ணீர் எடுத்து வரவும், உணவை எடுத்துச் செல்லவும் மண்பாண்டங்களையே பயன்படுத்தினான். இவற்றைத் தலையில் வைத்துச் சுமந்து செல்லும் பழக்கமே அன்றைய வழக்கமாகும். இன்னும் நாட்டுப்புறங்களில் (கிராமங்களில்) பெண்கள் தண்ணீர் பானையைத் தலையில் வைத்துக் கொண்டு இருகைகளையும் வீசிக்கொண்டு ஒய்யாரமாக நடந்து செல்வதைக் காணலாம். சிலர் தலையில் பானையையும், இடுப்பில் குடத்தினையும் வைத்துக் கொண்டு செல்வதும் உண்டு. மேலும், வயற்காட்டிற்கு உணவு எடுத்துச் செல்லும் பெண்கள் ஒன்றன் மீது ஒன்றாக இரண்டு அல்லது மூன்று பானைகளை அடுக்கி வைத்து வயல் வரப்புகளில் கைகளை வீசிக்கொண்டு மிக லாவகமாக நடந்து செல்வர்.

இவ்வாழ்வியல் தொழில் பழக்க முறையே 'போலச் செய்தல்' என்ற நிலையில் 'அம்மன்கரக' வழிபாடாகத் தோற்றம் கொண்டது. 'மழைவளம்' வாழ்வின் ஆதாரம் என உணர்ந்த பண்டைய மனிதன் மழைவளம் குன்றியபோது அம்மழையை வரவழைக்க எண்ணி மழையின் அடையாளமாக அல்லது குறியீடாக 'நீர்க்குடத்தை' அழகுபடுத்தி, பக்தியுடனும் இசையுடனும் ஆரவாரத்துடனும் தலையில் சுமந்து வந்து ஓர் இடத்தில் வைத்து வழிபட்டான்.

மனிதன் வேளாண்மைத் தொழிலை அறிந்து கொண்ட பின்னரே இவ்வழிபாட்டுமுறை தோற்றம் கொண்டிருக்க வேண்டும். இங்கு "சிறிதளவு நிலையான வாழ்க்கையினை மலைச்சாரல் வேளாண்மை மனிதக் குழுக்களுக்கு அளித்தது. அக்காலத்தில் அவனுக்குச் செழிப்புப் பற்றிய சிந்தனை தோன்றிற்று. மந்திரமும், சடங்காச்சாரமும் தோன்றின. பின்னர் வழிபாடு தோன்றியது. இவற்றின் கூட்டுவிளைவாகக் கலைகள் தோன்றின."[3] எனும் நாட்டுப்புற அறிஞரின் கூற்று அதற்குரியதாகும்.

இவர் கூற்றின்படி மந்திரமும், சடங்கும் வழிபாட்டிற்கு முன்னர் தோன்றியது என்பது ஏற்றற்கில்லை. வழிபாடு தோன்றிய பின்பே மந்திரமும், சடங்கும் தோன்றியிருக்க வேண்டும் அல்லது வழிபாட்டோடு இணைந்து தோன்றியிருத்தல் கூடும். எனினும், வழிபாட்டு முறையினின்று கலை தோன்றியது எனும் கருத்து ஏற்றற்குரியதாகும்.

வேளாண்மை வளவழிபாடான நீர்க்குட வழிபாடு நீர்க்கரக வழிபாடாகி 'கரகாட்டம்' தோற்றம் கொண்டது. இது வேளாண் வளமை வழிபாடு என்பதை இவ்வழிபாட்டில் நிகழ்த்தப்படும் முளைப்பாரி எடுத்தல் சடங்கும் உறுதிப்படுத்தும். "முளைப்பாரி எடுத்தல் சடங்கு ஒரு வேளாண் வளச் சடங்காக இருந்து...... ஒருவகையில் பயிர் நன்றாக வளரவேண்டும் என்பதையும், மழை வேண்டும் என்பதையும் பாவனையாக நடத்திக் காட்டும் பாவனைச் சடங்காக அமைகின்றது."[4] எனும் நாட்டுப்புறவியலாரின் கூற்று இவண் நோக்கத் தக்கதாகும்.

"கொங்கு வேளாளக் கவுண்டர் இன மக்களிடம் இன்றும் திருமணம் நடந்தவுடன் நடைபெறும் 'முதலிரவுச் சடங்கு' 'கரகப் பொங்கல் வைத்தல்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது"[5]. திருமணம் நிகழ்ந்த அன்று மாலை விநாயகர் கோவிலில் புதுமணப்பெண் பொங்கல் வைக்க, மணமக்களோடு மணவீட்டாரும் இணைந்து பொங்கலைச் சாமிக்குப் படைத்து வழிபடுவர். கரக வழிபாடு வேளாண்வளமை வழிபாடாவதுபோல் கரகப் பொங்கல் வழிபாடு இல்லற வளமைவழிபாடாக இருத்தல் வேண்டும்.

மழைவேண்டிச் செய்யப்பட்ட வழிபாடு ஆரம்பத்தில் 'மாரி' வழிபாடு என்றழைக்கப்பட்டது. மாரி என்பதன் பொருள் மழை என்பதாகும். கால வளர்ச்சியில் மாரி வழிபாடு மாரியம்மன் வழிபாடு ஆகியது. கரகத்தை அழகுபடுத்தி வழிபட்ட நிலையினின்று முன்னேறிக் கரகத்தில் அம்மன் உருவத்தினை வரைந்து வழிபடும் முறை தோன்றியது. "கரகத்தில் மஞ்சளை அரைத்துப் பூசி அம்மன் முகத்தை வரைகின்றனர்."[6] எனும் நாட்டுப்புற ஆய்வாளர் கூற்று இக்கருத்தினை உறுதிப்படுத்தும். இதன் பின்னர், கரகத்தின் மீது அம்மன் உருவம் வைத்து அழகுபடுத்தி வழிபடும் முறையும் உருவாகியது. இம்மாரியம்மன் வழிபாட்டு முறையான 'கரக வழிபாட்டுமுறை' பிற அம்மன் வழிபாட்டு முறைகளிலும் பின்பற்றப்பட்டது.

வழிபாட்டு நிலையில் போலச் செய்தலால் உருவாக்கப்பட்ட இக்கலை பின்னர் பொழுது போக்கு நிலையில் ஆட்டக் கரகமாகியது. ஆரம்ப நிலையில் மண் கரகங்கள் பயன்படுத்தப்பட்டன. உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் செம்பு, பித்தளைக் கரகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் இன்றளவும் அம்மன் கரகங்கள் மண்ணாலேயே செய்யப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

கரகாட்ட வரலாறு

கரகாட்டம் தமிழர்க்கு உரிமை உடைய கலையாகும். தொன்மைக் காலத்திலேயே காரகாட்டக் கலை தோன்றியுள்ளமைக்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றுபகர்கின்றன.

'நூலே கரகம் முக்கோல் மணையே' எனத் தொல்காப்பியத்திலும், 'உறித்தாழ்ந்த கரகமும்' எனக் கலித்தொகையிலும். 'கரகம்' என்ற சொல் இடம் பெறுகிறது. மேலும், புறநானூறு, ஆசாரக் கோவை, சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றிலும் 'கரகம்' என்ற சொல் குறிக்கப் பெறுகிறது. கரகம் என்பதற்குக் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி கங்கை, பூங்குடம் எனப் பலபொருள்கள் உள்ளன எனப் பேராசிரியர் சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார் எனினும் கரகாட்டம் பற்றிய செய்தி சிலப்பதிகாரத்திலேயே காணக்கிடைக்கின்றது.

மாதவி ஆடிய பதினோராடல்களுள் ஒன்றாகக் 'குடக்கூத்து' இடம் பெறுகின்றது. 'குடக்கூத்து' என்பதற்கு 'நின்றாடும் ஆட்டம்' என அடியார்க்கு நல்லார் விளக்கம் தருகிறார். அதாவது, குடத்தை வைத்துக் கொண்டு ஆடிய ஆட்டமே பின்னர் குடத்தைவிடச் சிறிதான கரகத்தினை வைத்து ஆடும் ஆட்டமாகிக் கரகாட்டம் என அழைக்கப் பட்டிருக்க வேண்டும். இவ்வாட்டம் இன்றும் மலையாளத்தில் 'கும்பக்களி', 'குட்டத்து ஆட்டம்' எனச் சுட்டப்படுகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இது 'கும்பாட்டம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது என்பது குறிப்பிடற்குரியதாகும்.

கண்ணன் 'குடத்கூத்து' ஆடியதாக இலக்கியங்களும் வாய்மொழிக் கதைகளும் கூறுகின்றன. குடக்கூத்திற்கு பெரியவாச்சான் பிள்ளை, "தலையிலே அடுக்குக் குடமிருக்க, இரண்டு தோள்களிலும் குடங்களிருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை ஏந்தி ஆகாசத்தில் எறிந்தாடுவதொரு கூத்து" என விளக்கமளிக்கிறார்.

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து அறியப்படுவன

1. கரகாட்டம் வழிபாட்டின் மூலம் தோன்றிய, தமிழருக்குரிய கலை.
2. கரகாட்டம் என்பது 'போலச் செய்தல்' மூலம் தோன்றிய கலை.
3. கரகாட்டம் சிலம்புக் காலந்தொட்டு அல்லது அதற்கு முன்பிருந்து வழக்கில் இருக்கிறது.
4. கரகாட்டத்தைச் சுட்டும் பழஞ்சொல் குடக்கூத்து அல்லது குடக்கூத்தே கரகாட்டமாகிறது.
5. கரகாட்டத்தைப் பெண்களும் (மாதவி) ஆண்களும் (கண்ணன்) ஆடியுள்ளனர்.

சான்றாதாரம்

1. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக்கலைகள் (மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், டிசம்பர் 2001) ப. 23.
2. மேலது. ப.23
3. மேலது. ப.17
4. தே. ஞானசேகரன், கொங்குநாட்டு நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு (வெளியீடு - அறிவகம், கோவை, முதற்பதிப்பு பிப். 2002)ப. 86.
5. தகவலாளர் கி. இராசம்மாள் (வயது 80). காசிப்பாளையம், திண்டுக்கல் மாவட்டம்.
6. மேலது. ப. 45

◆

இணைப்பேராசிரியர் - தமிழ்,
அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும்
பண்பாட்டுக் கல்லூரி,
பழனி - 624 601.

104
வழிபாடு தொடர்பான நாட்டுப்புற ஆட்டங்கள்

சு. வடிவுக்கரசி

கலைகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு இணைந்து மகிழ்ச்சியைத் தருகின்றன.

"மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகாலாயிருந்தன. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததினால் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து, வளர்ந்துகொண்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகள் நாட்டுபுற மக்களின் ஜீவ ஊற்றாகும்" (நாட்டுப்புற இயல் ஆய்வு, சு,சக்திவேல், ப,16).

இக்கூற்றின் அடிப்படையில் வழிபாட்டுக் கலைகளின் பயன் பாட்டைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

நாட்டுப்புறக் கலைகளின் வகைப்பாடு

நாட்டுப்புறக் கலைகள், சமூக மற்றும் வீரக் கலைகள், சமயம்சார் கலைகள், தொழில்சார் கலைகள், கதைச் சார்புடைய நாட்டுப்புறக் கலைகள், கதைச் சார்பில்லா நாட்டுப்புறக் கலைகள், தொழில்முறைக் கலைகள் என்று பல அறிஞர்களாலும் பல்வேறு வகையினவாக வகைப்படுத்தப்பெறுகின்றன.

வழிபாடு தொடர்பான ஆட்டங்கள்

சமயம்சார் கலைகளில் வழிபாடு தொடர்பான ஆட்டங்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் காவடி ஆட்டம், கரகாட்டம், மன்மத

ஆட்டம் போன்றவற்றைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரை தொகுத்தளிக்கிறது.

காவடி ஆட்டம்

காவடி சொற்பொருள்

காத்தண்டு, இறைவன் வேண்டுதலுக்கு எடுக்கும் காவடி, காவுதடியிற் கொண்டுபோகும் பொருள் என்று தமிழ்- தமிழ் அகர முதலியும்; கா, காத்தண்டு, தோட்சுமை என்று கழகத்தமிழ் அகராதியும் காவடி என்ற சொல்லுக்குப் பொருள் அளிக்கின்றன.

இவற்றிலிருந்து இரண்டு பிரிவு கம்புகளைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு பொருள் என்பதும், அது தோளில் சுமந்து செல்லும் வகையாக அமைக்கப்பட்டது என்பதும் தெளிவாகிறது. பழங்காலத்தில் காவடி தூக்கிச் செல்ல தனிச் சாதியினர் இருந்திருக்கின்றனர். அவர்கள் 'காவடி' என்று அழைக்கப்பட்டதை அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.

வழிபாட்டில் காவடி

முருக வழிபாட்டு மரபில் காவடி ஆட்டம் முதன் முதலில் தோன்றியது. அதற்குப் புராணக் கதை அடிப்படையாகிறது. இடும்பன் சிவகிரி, சந்திரகிரி என்ற மலைகளைக் காவடிபோல் தூக்கி வந்தான். அதுபோல் காவடி தூக்கி வரும் அடியார்க்கு, அருள்புரிய வேண்டும் என அவன் கேட்டுக்கொண்டான். அதிலிருந்து காவடியாட்டம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. தற்போது சிறு தெய்வ வழிபாடுகளிலும் காவடி எடுக்கப்படுகிறது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் முருக வழிபாட்டில் காவடியாட்டம் சிறப்பாக நடைபெறுகிறது.

காவடியின் அமைப்பு

காவடி குறுந்தடியால் செய்யப்பட்டு வளைந்த அமைப்பில் இருக்கும். இருமுனைகளிலும் பால்குடங்கள் கட்டப்பட்டிருக்கும். வெட்டிவேர், வண்ணக் காகிதங்கள் கொண்டு அலங்கரிக்கப் பட்டிருக்கும். காவடி எடுப்போர் நாக்கிலும் உதடுகளிலும் அலகு குத்திக் கொள்வர்.

காவடியின் வகைகள்

பால் காவடி, பன்னீர் காவடி, சந்தனக் காவடி, புஷ்பக் காவடி, சர்ப்பக் காவடி, சேவல் காவடி, மச்சக் காவடி, வேல் காவடி, செடல்

காவடி, பறவைக் காவடி என்ற பலவகையான காவடிகள் வழிபாட்டின் போது எடுக்கப்படுகின்றன.

ஆட்டவகை

சுழன்றாடுதல், வளைந்தாடுதல், குனிந்தாடுதல், வில்லாடுதல், வரவேற்க ஆடுதல், கைவிரித்து ஆடுதல் போன்ற ஆட்டங்கள் தொழில் முறைக் காவடி ஆட்டங்களில் காணப்படுகின்றன. வழிபாட்டில் கால் தூக்கி ஆடுகின்றனர். காவடி எடுப்பவருக்கு முன்னே காவடி தூக்காதவர்கள் பாடி ஆடி, விசில் அடித்து உற்சாகப்படுத்துவர். அதனால், காவடி தூக்குபவர்களுக்கு விரதம் இருக்கும் களைப்பு, தோட்சுமை தெரியாமல் இருக்கும்.

இவ்வாட்டத்தின்போது தப்பு இசைக்கப்படும். அவ்விசைக்கேற்ப ஆட்டமும், அருள்வந்து ஆடும் சாமியாட்டமும் நடைபெறும்.

காவடிச் சிந்து

ஓரெதுகை பெற்ற இரு அடிகள் அளவொத்து வருவது சிந்து எனப்படும். அது காவடிச் சிந்து, தங்கச் சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக் களிப்பு தெம்மாங்கு எனப் பலவகைப்படும்.

காவடிச் சிந்து பல்லவி, சுருதி பல்லவி, சரணம் ஆகிய மூன்று உறுப்புகளைக் கொண்ட இசைப்பாடலாகும். இது முச்சீர் இரட்டையும், முடுகும், தனிச்சீர் எடுப்பும் உடைய அமைப்பாகும். காவடிச் சிந்து பாடுவதில் சென்னிகுளம் அண்ணாமலையார், மதுரை பாண்டித்துரையார் போன்றோர் சிறப்பு பெற்றோராவர்.

"சென்னி குளநகர் வாசன் - தமிழ்
தேறும் அண்ணாமலைதாசன் - செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புல வரையிற் புனை
தீரன் அயில் வீரன்''

இப்பாடல் 'கோயில் வளம்' என்ற பாடலில் அண்ணாமலையார் காவடிச்சிந்தாகும்.

'வேலடி மலைக்குமரி பாலா தமிழ்க்கருள் செய்
மீனுலவுங் குளிர்வானதி தந்திடு செய்யனே - புகழ்
வானளவுஞ் சிவஞான புரந்திகழ் துய்யனே''

என்பது பாண்டித்துரையாரின் காவடிச் சிந்தாகும்.

கரகாட்டம்

சொற்பொருள்

கரகாட்டம் மாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்பு உடையது. கரகம் என்ற சொல் தொல்காப்பியம், கலித்தொகை போன்ற நூல்களில் இடம் பெற்றிருக்கிறது. பேராசிரியர் அதற்குக் 'குண்டிகை' என்று பொருள் கூறுகிறார்.

கரகாட்டத்தின் வகைகள்

வழிபாட்டுக் கரகம் 'சக்திக் கரகம்' என்றும், தொழிற் முறைக்கரகம் 'ஆட்டக்கரகம்' என்றும் இரு வகையாகப் பெயர் பெறுகின்றன.

சக்திக் கரகம்

இது பக்தர்கள் விரதம் இருந்து, காப்புக் கட்டி எடுத்துச் செல்லும் கரகமாகும். இதன் கும்பத்தில் தண்ணீரும், அதன் மேல் வேப்பிலையும், தேங்காய் கும்பத்தை நூலும் சுற்றியிருக்கும். கரகம் தூக்கி வரும்போது தப்பும், பிற தாளக் கருவிகளும் இசைக்கப்படும்.

ஆட்டக்கரகம்

ஆட்டக்கரத்தின் அடிப்பாகம் குழியாக இருக்கும். உச்சியில் பொம்மை இருக்கும். குடத்தில் அரிசி நிரப்பப்பட்டிருக்கும். அடி வைப்பு மாற்றி ஆடும் ஒன்பது களங்கள் உள்ளன. ஆடும்போது தொடக்க நிலை, வேகநிலை, அதிவேக நிலை என்ற மூவகை நிலைகள் உள்ளன. கரகத்தின் நடுவே கோமாளி ஆட்டம் நடைபெறும். ஆட்டக் கரகங்கள் மாரியம்மன் கோயில் திருவிழாக் காலங்களில் நடத்தப்பெறும் கலை நிகழ்ச்சியாகவும், பொது மற்றும் திருமண ஊர்வலங்களிலும் நடத்தப் பெறுவதாகவும் அமைகிறது.

மன்மத ஆட்டம்

மன்மதனைச் சிவன் எரித்த புராணக் கதையுடன் தொடர்பு கொண்டதாகக் காமன் திருவிழா நடைபெறுகிறுது. காமனுக்குத் தனிக்கோயில் விளக்குமாடம் போ.ன்ற அமைப்பில் மன்மதன் ஓவியம் தீட்டப்பட்டிருக்கும்.

கோயில் முன்பு கொடிமரம் அமைத்து அதன் கொடியில் மன்மதன் இரதி ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கும். கொடியேற்றி ஒரு மாதம் திருவிழா நடைபெறும்..

கோயில் இல்லாத ஊர்களில் தெரு முனைகள், சந்துகளில் கரும்பைநட்டு, வைக்கோற்பிரி சுற்றி எரிக்கப்படும். பின் ஆற்றில் கரைக்கப்படும். அத்திருவிழாவில் மன்மத ஆட்டம் நடைபெறும். மன்மத வேடம் போட்டவர் ஊர்வலமாகக் கரகாட்டத்தின் நடுவே செல்வார்.

மன்மத வேடத்தின்போது மன்மத ரதி ஊர்வலத்தின் போதும், மன்மதன் சிவன் மீது அம்பு தொடுத்த போதும், மன்மதனை எரித்த போதும் பாடல்கள் பாடப் பெறுகின்றன.

"பொன்போன்ற நன்மொழியான்
பூவை மனங்களித்து
கன்னி ரதி கிளியான்
கண்ணாயினுக்(கு) உரைப்பாள்
மன்மதரே இந்தாடும் என்று
மகிழ்ந்து தாம்பூலமளித்தாள்''

"கரும்பு வில்லை மன்மதனும் கைப்பிடித்தான்
அரும்பு கணை எடுத்தான்
பரம்பொருள் மீது விட பஞ்ச பாணம் துணிந்தான்
விஷமுண்ட ஈசனுக்கு விவரம் புரிந்தது பார்
ஆற்றொணாக் கோபங் கொண்டார்
அச்சுதன் மகனைக் கண்டார்
அவர் நெற்றிக் கண்ணைத் திறந்து
நீறாக்க மனந்துணிந்தார்''

(ஒரே ஒரு ஊர்ல, சோலை சுந்தர பெருமாள்)

முடிவுரை

மேற்கண்ட ஆட்டங்கள் நாட்டுப்புற மக்களுக்குப் புராணக் கதை கூறுபவைகளாகவும், மனமகிழ்ச்சி தருவனவாகவும், பலரும் கூடி இரசிக்கும் வகையிலும் அருள் வேண்டியும் அமைந்திருக்கின்றன.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
ஏனாதி இராஜப்பா கலை அறிவியல் கல்லூரி,
பட்டுக்கோட்டை.

105
கரக ஆட்டக்கலை

கு. வசுமதி

கரக ஆட்டத்தின் தோற்றம்

நம் முன்னோர்கள் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களைக் கலையாகக் கண்டனர். அத்தகைய கலைகள் அறுபத்து நான்கு வகைப்படும் என்றனர். 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்' என்பது கம்பர் வாக்கு. அவ்வறுபத்துநான்கு கலைகளுள் 'நிருத்தம்' என்பதும் ஒன்று. இது ஆடற்கலையைக் குறிக்கும். கலைகளில் முழுமை பெற்றது ஆடற்கலை. மனிதன் இன்பத்தின் மிகுதியால் கைகால்களை அசைக்கிறான், தாவுகிறான், குதிக்கிறான், துன்பத்தின் மிகுதியாலும் கைகால்களை அசைக்கிறான், அலைகிறான், துடிக்கிறான். இவ்வாறு, மனிதன் தன் இன்ப துன்ப உணர்ச்சிகளை உடலசைவுகளால் வெளிப் படுத்துகிறான், ஆடுகிறான். இந்த நிலையைப் பிறர் அபிநயத்துக் காட்டுகின்றபோது ஆடல் பிறக்கின்றது[1]. ஆடலானது ஒரு கதையை (அ) நிகழ்ச்சியை விவரிக்கும்போது 'கூத்து' என்று பெயர் பெறுகிறது[2].

கரகம் என்ற சொல் முதலில் கமண்டலத்தையும், பின்னர் புனித நீர் தாங்கிய குடத்தையும், செம்பையும் குறிப்பதாயிற்று. 'கரகம் என்னும் சொல்லுக்குக் கமண்டலம் என்றும், பிரார்த்தனையாக எடுக்கும் பூங்குடம் என்றும் பொருளுண்டு' என்ற கலைக்களஞ்சியக் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது[3]. கரகம் (அ) கும்பம் புண்ணியச்

செயலுக்காகப் புனித நீர் வைக்கப்பட்டுள்ள 'குடம்' ஆகும் என்பது சோமலெ தரும் விளக்கமாகும்''[4]. கரகம் என்பது தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒரு பொதுவான சிறந்த கலையாகக் கிராம தேவதைகளின் விழாக்காலங்களில், தேவதையின் ஊர்வலம் நடைபெறும்போது, அதன் முன்னால் பலவித ஆட்டங்கள் நடைபெறும். அவற்றுள் கரகமாடுதல் ஒன்று[5] என்று கலைக்களஞ்சியமும், நாட்டு மக்களிடையே பிரபலமாக விளங்கும் கரகம், இசையும் நடனமும் கலந்த ஓர் அழகிய கேளிக்கைபாற்படும் என்று தென் இந்தியக் கிராமிய நடனங்கள் என்ற நூலும் கரகாட்டம் பற்றிக் குறிப்பிடுகின்றன[6].

தமிழ் இலக்கியத்தில் கரக ஆட்டம்

'கரக ஆட்டம்' என்பது தமிழக நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று. கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம், தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து, ஒயிலாட்டம் முதலியன தமிழக நாட்டுப்புறக் கலைகளாகும்.

கரகம் என்பது செம்பு அல்லது பித்தளையினால் ஆகிய சொம்பை அலங்கரித்துத் தலையில் வைத்துக்கொண்டு, அச்சொம்பு கீழே விழாதவாறு, நையாண்டி மேளத்தின் துணையோடு தாளத்திற்கேற்ப ஆடப்பெறுவதாகும். நாட்டுப்புறங்களில் மண்குடத்தை அலங்கரித்துத் தலையில் வைத்து ஆடுவார்கள். இதனைத் தோண்டிக் கரகம் என்பார்கள். இன்றைய கரக ஆட்டத்தின் தொடக்க வடிவம் 'குடக்கூத்து' எனப்படும்.

1. தொல்காப்பியத்தில் கரகம்

தொல்காப்பியத்தில் கரக ஆட்டம் பற்றிய செய்தி காணப்படவில்லை எனினும், கரகம் என்ற சொல் காணப்படுகிறது.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"[7]

என்பது தொல்காப்பிய நூற்பா. இங்குக் 'கரகம்' என்பது நீர் தாங்கிய கமண்டலத்தைக் குறிக்கும்.

2. கலித்தொகையில் கரகம்

கரகம் என்ற சொல் கலித்தொகையிலும் இடம் பெற்றுள்ளது.

"உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்"[8]

மற்றும் புறநானூறு *(1:12)*, ஆசாரக்கோவை *(46:3)*, சிலப்பதிகாரம் *(30:64,90)*, மணிமேகலை (பதிகம் *12)* ஆகிய நூற்களில்

கரகம் என்ற சொல் கமண்டலம் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது.

3. சிலம்பில் கரகம்

சிலப்பதிகாரத்தில் கரகம் என்ற சொல் காணப்படுகிறது. "உறித்தாழ் கரகமும் உன்கைய தன்றே"[9] "உறித்தாழ் கரகமும் என்கைத் தந்து"[10] என்ற இடங்களில் கரகம் என்ற சொல் கமண்டலம் என்ற பொருளில் வழங்கப்படுகிறதே தவிர அச்சொல் இன்றைய கரக ஆட்டத்தைக் குறிக்கவில்லை.

கரக ஆட்டத்தின் வளர்ச்சி

1. சக்திக்கரகம்

கரகம் இருவகைப்படும். *1.* தெய்வ வழிபாட்டுடன் இணைந்தது. *2.* தொழிலாக நடத்தப்படுவது. தெய்வ வழிபாட்டுக் கான ஆட்டம் சக்திக்கரகம் எனப்படும்.

சக்திக்கரகமே மாரியம்மன் விழாவோடு மிகவும் இணைந்து விளங்குவது. ஆட்டக்கரகம் இல்லாமலும் சக்திக்கரகமெடுத்தல் உண்டு. ஆனால், சக்திக் கரகமில்லாமல் கோயில் விழாக்களில் ஆட்டக் கரகம் மட்டும் தனித்து நிகழ்வதில்லை. தற்போது பொது நிகழ்ச்சிகளில் சக்திக்கரகமில்லாமல் ஆட்டக்கரகம் மட்டும் ஆடப்பட்டு வருகிறது. சக்திக்கரகக்காரர் அம்மன் அருள்வந்து ஆடுவதல்லால் தம் திறமை புலப்படுமாறு தாள ஞானத்தோடு ஆட்டக்காரரைப்போல் ஆடுவதில்லை.

2. ஆட்டக்கரகம்

தொழிலாக அல்லது வருவாய்க்காக ஆடுவது ஆட்டக் கரகம் எனப்படும். சக்திக் கரகத்திற்குத் துணையாகவும், ஊராரை மகிழ்விப் பதற்காகவும் ஆட்டக்கரகம் தோன்றியது என்பர். ஆட்டக் கரகம் இரண்டு வகைப்படும். அவை *1.* தோண்டிக் கரகம் *2.* சொம்புக் கரகம் என்பன.

அ. தோண்டிக்கரகம்

தோண்டிக் கரகம் என்பது மண்ணால் செய்யப்பட்ட பானையை அலங்கரித்த கரகமாகும். இதுவே மிகப் பழங்காலத்திலிருந்து ஆடிவருவதாகும். தொன்மையான குடக்கூத்தின் பண்டைய வடிவம் இத்தோண்டிக் கரகம். காலத்தின் வளர்ச்சிக்குத் தக்கபடி,

மண்தோண்டிக்குப் பதிலாகத் தற்காலத்தில் பித்தளையாலும் ஐம்பொன்னாலும் செய்த குடத்தில் ஒப்பனை செய்து ஆடுகின்றனர்.

ஆ. சொம்புக்கரகம்

தோண்டிக் கரகத்தையடுத்து உருவானது சொம்புக்கரகமாகும். இன்று மிகப் பொரும்பாலோர் ஆடுவது இச்சொம்புக்கரகமே. குடம் தலையில் உருள்வது போல் அல்லாமல் சொம்பு நன்றாக நிற்பதாலும், கலைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்த மிகுந்த வாய்ப்புகள் இருப்பதாலும் சொம்புக்கரகத்தின் செல்வாக்கு இன்று மிகுந்து வரலாயிற்று.

3. ஆண்கள் பெண் வேடமிட்டு ஆடுதல்

கரக ஆட்டத்தை இந்தியா விடுதலை பெற்ற காலத்தில் ஆண்களே ஆடி வந்தார்கள். நாடகத்திலும், தொடக்க காலப் பேசும் படங்களிலும் ஆண்களே பெண் வேடமிட்டு நடிக்கும் பழக்கம் இருந்தது. அப்பழக்கத்தின் தாக்கத்தால், கரக ஆட்டக்காரர்களிலும் சிலர் பெண் வேடமிட்டு ஆடத்தொடங்கினர். அவர்களில் கலைமாமணி எம். எஸ். அங்குப் பிள்ளை, கலைமாமணி ஓம். பெரியசாமி, சாரங்கபாணி ஆகியோர் குறிப்பிடத்தக்க கலைஞர்களாவர். பெண் வேடம் போடாவிட்டாலும், பெண் போல் நீண்ட முடி வளர்த்துக் கொண்டை போட்டுக்கொண்டு கரகம் ஆடினவர் உண்டு. அவர்களில் கரகம் சுந்தரராஜூ நாயுடு, பெரியராமு ஆகியோர் குறிப்பிடத்தக்கோர்.

4. பெண்கள் கரகமாடுதல்

ஆண்களின் கரக ஆட்டத்தைப் பார்த்துச் சலிப்பேற்பட்ட தாலும், ஆண்கள், பெண் வேடமிட்டு ஆடுவதைவிடப் பெண்களே ஆடினால் கவர்ச்சியாக இருக்குமென்ற உணர்வு ஏற்பட்டதாலும், அங்குப்பிள்ளையின் பயிற்சிப்பள்ளி ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டதாலும் பெண்களும் கரகம் பயிலவும் ஆடவும் தலைப்பட்டனர்.

மதுரையில் முதன் முதலாகக் கரகமாடிய பெண் கலைஞர்கள் அங்குப்பிள்ளையால் உருவாக்கப்பெற்றவர்களே. அவர்களில் பாண்டி யம்மாள், மாரியம்மாள், பஞ்சவர்ணம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

கரக ஆட்ட வரலாற்றில், பெண்கள் கரகம் ஆடத் தொடங்கியதை ஒரு திருப்புமுனை நிகழ்ச்சியாகக் கருதலாம். கரக

ஆட்டத்தில் பெண்கள் ஈடுபட்டதால் விளைந்த நன்மை தீமைகளைப் பற்றிப் பின்னர் காணலாம்.

5. கரக ஆட்டப் போட்டிகள்

ஆண்களோடு பெண்களும் ஆடத் தொடங்கிவிட்டபிறகு, பல்வேறு கரக ஆசிரியர்களின் மாணவர்கள் கோயில் விழாக்களில் பங்குகொள்ள முனைந்தனர். அந்நிலையில் அவர்களிடையே போட்டி உருவாவதற்கு வாய்ப்பேற்பட்டது. கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தி ஆற்றலை அளவிட்டுக் காட்டுவதற்காக ஆங்காங்கே சில போட்டி நிகழ்ச்சிகளும் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் மேலூரில் 1949 இல் நடைபெற்ற போட்டி குறிப்பிடத்தக்கதாகக் கருதலாம். இப்போட்டிகள் கரக ஆட்டக்கலை வளர்ச்சிக்கு நன்மையே செய்துள்ளன.

முடிவுரை

தமிழகத்தின் பாரம்பரிய கலைகளுள் கரகாட்டமும் ஒன்று. கரகாட்டம் தமிழகத்தில் மட்டுமல்லாமல் மலையாளம், மைசூர், ஆந்திரம் முதலிய பகுதிகளிலெல்லாம் காணப்படுகிறது. கரகக் கலைஞர்களின் சமூக வாழ்க்கையும் கலை வாழ்க்கையும் மகிழ்ச்சியான நிலையில் இல்லை. மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தி ஆடிப்பாடி வாழும் இவர்களது வாழ்க்கையோ வாடி வதங்கியுள்ளது என்பது உண்மை. கரகக் கலைஞர்களில் பெரும்பாலானோர் கல்வி, தொழில், பொருளா தாரம், சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் போதிய முன்னேற்றங் காணவில்லை.

அடிக்குறிப்புகள்

1. ச. தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், ப.11.
2. மேலது, ப. 11.
3. கலைக்களஞ்சியம் - தொகுதி 3 - ப.237.
4. சோமலெ, தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப. 196.
5. கலைக்களஞ்சியம், தொகுதி - 3; ப.237.
6. தென்னிந்திய கிராமிய நடனங்கள், ப.21.
7. தொல்காப்பியம், மரபியல், 71.

8. கலித்தொகை, 9:2.

9. சிலப்பதிகாரம், வரந்தரு காதை, அடி. 64.

10. மேலது, அடி 90.

துணைநூற்பட்டியல்

1. சோமலெ - தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்.
2. நா. வேலுசாமி - கரக ஆட்டக்கலை.
3. தொல்காப்பியம் - கழக வெளியீடு.
4. சிலப்பதிகாரம் - கழக வெளியீடு.
5. கலித்தொகை - கழகவெளியீடு.

◆

இளமுனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

106
நாட்டுப்புறப்பாடலில் கும்மி

மு. விசாலாட்சி

வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்ற நாட்டுப்புற மக்களின் வாழ்வையும் வாழ்க்கைக் கூறுகளையும் படம் பிடித்துக் காட்டும் இயல் நாட்டுப்புறவியலாகும். தமிழகத்தில் நாட்டுப்புறவியல் வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்றாகும். நாட்டுப்புறவியல் ஆய்வு 'களப்பணி'யை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுள், நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளைப்பற்றி ஆராயப் புகுவோமானால் அக்கலைகளின் வடிவத்தை நேரில் சென்று கூர்ந்தறிந்தாலன்றி எள்ளளவேனும் ஆய்வை மேற்கொள்ள முடியாது. ஒரு நாட்டின் பண்பாட்டை அறிவதற்குப் பெரிதும் பயன்படும் முதன்மைச் சான்றாதாரங்களுள் ஒன்றாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன. நாட்டுப்புறக் கலைகள் அழகியலைச் சார்ந்தவை. மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலை உணர்வாகும். இயற்பாகத் தோன்றி இயற்கையோடி யைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகள் 'நாட்டுப்புறக் கலைகள்' ஆகும். இத்தகைய நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாகத் திகழ்வது 'கும்மி' ஆகும். இத்தகைய கும்மியானது காலங்காலமாக நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படுபவை. கைகொட்டிக் களிப்பதுடன் வாய் திறந்து பாடுவதும், இணைந்து கலைத்தன்மைக்கு ஆட்படுத்தப்படுவதன் வாயிலாகக் 'கும்மியாட்டம்' ஒரு கலையாகத் தோன்றி வளரத் தலைப்படுகிறது. இத்தகைய கும்மிப்பாடலைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

நாட்டுப்புறப் பாடல்கள் - வரையறை

அறிவியல் கண்டுபிடிப்புகள் தகவல் தொடர்புச் சாதனங்களை நவீனப்படுத்தியுள்ளன. நாட்டின் பல குக்கிராமங்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டன. மக்களின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் பெரும் அளவில் தகவல் தொடர்புச் சாதனங்கள் மாற்றிவிட்டன. கிராம மக்கள் பண்பாட்டையே மாற்றி வரும் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் பெருகிவிட்ட இந்நாளில், அவர்களின் வாய்மொழி இலக்கியமாக ஏட்டில் எழுதாத காவியமாக நாட்டுப்புறப் பாடல்கள் விளங்குகின்றன.

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். ஒவ்வொரு மொழியிலும் எழுத்துத் தோன்றுவதற்கு முன்னர் பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கிவிட்டன. நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப் பாடல்கள் என்றும் கூறலாம். நாட்டுப்புறப் பாடல் என்று பிறந்தவை, எவரால் பிறந்தவை என்று கூற முடியாது. இவை பெரும்பாலும் காடு கழனிகளிலும், தோட்ட வயல்களிலும் தொழில் செய்யும் இடங்களிலும் பிறந்திருக்கலாம். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. “மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடற் பொருளாகின்றன என்றும், மண்ணின் மைந்தர் தம் மனக் கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடே நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும்”[1] என்று சு. சக்திவேல் கூறுகின்றார். நாட்டுப்புறப் பாடல்கள் முன்பிருந்தவர்கள் கேட்கப் பாடுவது, கேட்பாரின் மனத்தில் மகிழ்ச்சி, சோகம், பெருமை, பணிவு, பெருமிதம், ஆர்வம், வியப்பு, வெறுப்பு முதலிய உணர்ச்சிகளை எழுப்பும் நிகழ்ச்சிகளையோ, கதைகளையோ சொல்வது நாட்டுப்புறப் பாடல்களாகும்”[2] என்று எடுத்துரைக்கிறார் நா. வானமாமலை.

“பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே”[3]

என்ற நூற்பா வரிகளில் குறிப்பிடுகிறார். பண்ணத்தி என்ற சொல் இன்றைய நாட்டுப்பாடல்களைக் குறிக்கின்றது.

நாட்டுப்புறப் பாடலின் பல்வேறு பெயர்கள்

நாட்டுப்புறப் பாடல்களுக்குப் பல பெயர்கள் உண்டு.

1. நாடோடிப் பாடல், நாட்டார் பாடல்

2. நாட்டுப்பாடல், வாய்மொழிப் பாடல்

3. பாமரர் பாடல், வாய்மொழிப் பாடல்

4. ஏட்டில் எழுதாக் கவிதை, மலையருவி

5. காட்டு மல்லிகை, செவிவழிப் பாடல்

6. நாட்டுப்பாடல்கள், மரபுவழிப் பாடல்கள் என்ற பல பெயர்கள் நாட்டுப்புறப் பாடல்களுக்கு உண்டு. இத்தகைய பல பெயர்கள் இருந்தாலும் "நாட்டுப்புறப் பாடல்கள் அல்லது கிராமியப் பாடல்கள் என்று அழைப்பதுவே சாலப் பொருந்தும்"[4] என்று கூறுகிறார் சு. சண்முகசுந்தரம்.

கும்மி

பெண்கள் பலர் வயது வேறுபாடில்லாமல் ஒன்றாகக் கூடி ஒருவர் பாட ஏனையோர் பின்பாட கை குவித்து அடித்துக் கொண்டே வட்டமாகச் சுற்றிவந்து ஆடும் ஆட்டத்தினைக் 'கும்மி' என்று அழைக்கலாம். பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி வளைக்கரம் தட்டி ஆடும் ஆட்டம் 'கும்மியாட்டம்'. "தமிழக நாட்டுப்புற உழைக்கும் வர்க்கப் பெண்களிடையே பொதுவாகக் காணப்படும் ஆடல் வகை கும்மி ஆகும். பல பேதையரும், பெதும்பையரும் வட்டமாகச் சுற்றி வந்து பாடி கைகுவித்தடிக்கும் கூத்து 'கும்மி' எனப்பட்டது"[5] என்று ஆறு. இராமநாதன் எடுத்துரைக்கிறார்.

கும்மியின் வேறு பெயர்கள்

கும்மி என்பதற்கு வேறு பல பெயர்களும் உண்டு. சங்க இலக்கியமான அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களிலும் கும்மி என்பதைக் 'கொம்மை' 'கொப்பி' என்று பல பெயர்கள் இட்டு அழைக்கப்படுகின்றன.

"கொம்மை வரிமுனை வெம்மை வேதுறீஇ"
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேல் கூடிக் குலவேந்தன்"

என்று சிலப்பதிகாரமும்,

"குஞ்சரங் கூற்றொடு கொம்மை கொட்டுவ"
"கொம்மை அம் பசுங்காய்க் குடுமி விளைந்த"

என்று சீவகசிந்தாமணியும், அகநானூறும் 'கும்மி' என்பதற்கு 'கொம்மை' என்று வேறுபெயர் வழங்கி வருவதைக் காணலாம்.

கும்மியின் வகைகள்

இயற்கும்மி

பெண்கள் மட்டுமே கூடியாடும் ஆட்டம் 'இயற்கும்மி' என்று அழைக்கப்படுகிறது. ஆட்டமும் பாட்டும் கலந்த இந்த விளையாட்டு மகளிர்க்கே உரிய விளையாட்டாகும். இயற்கும்மியில் ஒருசில இடங்களில் கந்தன், வள்ளி, இருவரைப்பற்றிப் பாடல்களைப் பாடுகின்றனர். இத்தகைய பாடல்களில் கந்தன், வள்ளி இருக்கும் வனத்துக்கு வளையல் கொண்டு செல்வதாக அமைந்த ஒரு பாடல்,

"தன்னே நன்னே நன்னே னானா
ஆட வளையல் வளையலென்று
கந்தன் வள்ளியிருக்கும் வனம் தனிலே
கிளையோ கிளையலென்று கீர்த்தியுடனே
வளையல் தோளில் போட்டு''

(தகவலாளி, கிருஷ்ணன், *04.03.2006*)

என்று வள்ளியைக் காண்பதற்காகவும், அவளுடன் பேசுவதற்கும் கந்தன் வளையல் விற்கும் செட்டியாராக வேடம் போட்டான் என்பதை இப்பாடலின் மூலம் அறியலாம்.

ஒயிற்கும்மி

பலர் ஒன்று கூடி வட்டமாக நின்று பாடியாடும் ஆட்டம் 'ஒயிற்கும்மி' எனப்படும். ஒயிற்கும்மி என்பது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டமாகும். ஆண்கள் கால்களில் சலங்கைகளைக் கட்டிக்கொண்டு புராணக் கதைகளைச் சொல்லியவாறு ஆடுவது மரபு. 'ஒயில்' என்றால் 'அழகு' என்று பொருள்படும். இதில் *12* முதல் *20* பேர் வரை பங்கு கொள்வர். ஆசிரியர் ஒருவர் நின்று பாடலைப் பாட மற்றவர்கள் பின்பாட்டாகப் பாடலைப் பாடி ஆடலுக்கு அழகு சேர்ப்பார்கள். இவ்வகைக் கும்மி ஆண்களால் மட்டுமே ஆடப்பெறும். ஆனால், ஒரிரு பாடல்களுக்குப் பெண்களும் ஆடுவதாகக் கூறுகின்றார்கள்.

விநாயகர், முருகன், வள்ளி, பெண் தெய்வங்கள் போன்ற கடவுள்களுக்கு ஒயிற்கும்மி அடித்தும் பாடல்களைப் பாடுவார்கள். ஜக்கம்மாதேவி எக்காலத்திலும் துணையாக இருப்பாள் என்பதை,

"தன்னன்னன்னே னானன்னன்னே னானான...
ஒயிலே இந்த நிலவு வெளிச்சத்துக்கு
ஒயிலே சந்தன பொட்டு விலாசத்துக்கு

ஒயிலே தெக்கத் துருமாலு வாங்கிக்கட்டி
ஒயிலே திருநெல்வேலி சோமம் சொங்கணிந்து''

(தகவலாளி, திருமலைச்சாமி, 23.11.2005)

என்ற இந்த பாடலின் மூலம் அறியலாம்.

வள்ளியம்மை கும்மி

வள்ளியம்மை கும்மியும் ஒருவகை ஒயிற்கும்மி வகையைச் சார்ந்ததாகும். வள்ளி பரண்மேல் ஏறிநின்று கதிர்களைத் தின்பதற்காக வருகின்ற கிளிகளை விரட்டுவதாக ஒரு கும்மிப் பாடல் உண்டு. அது,

"சித்திரை மாதத்திலே – வள்ளி
சீருடனே பயிர் வளர்த்து
வைகாசி மாதத்திலே – பயிர்
வாழைப்போல் பட்டை – தள்ளி
ஆனியந்த மாதத்திலே – பயிர்
அருமையாய்க் கதிர்விளைய''

(தகவலாளி, மயிலாத்தாள், 29.1.2006)

என்பதாகும். இதைப் போலவே சுப்பிரமணியர் வேடன் வேடம் அணிந்து வள்ளியைச் சிறையெடுக்கப் போகும்போது அவளின் அழகைக் கண்டு சுப்பிரமணியர் மயங்குவதாகப் பாடல் ஒன்று உண்டு.

கும்மிப்பாடல் தோன்றும் களமும், சூழலும்

எந்த ஒரு படைப்பும் திடீரென்று தோன்றுவதில்லை. பல்வேறு காலச் சூழலும், சமுதாய நிலையும், மக்களின் நிலை, படைப்பாளியின் மனநிலை முதலியவற்றிற்கு ஏற்ப படைப்பை உருவாக்க முடியும். இவற்றின் அடிப்படையில் தோன்றியதுதான் கும்மிப்பாடல்.

கும்மிப்பாடலுக்கான களங்கள்

பொங்கல், தைப்பூசத் திருவிழாக் காலங்களிலும் ஏதேனும் ஒரு கோயில் (அ) பொதுவான இடத்திலோ பெண்கள் எல்லோரும் சேர்ந்து கும்மியடிப்பது வழக்கம். இத்தகைய இடங்களே கும்மியாட்டத்திற்குக் களமாக அமைகின்றன. கும்மி, திருவிழாக் காலங்களில் இரண்டு நேரங்களிலும் (பகல், இரவு) பிறநாட்களில் நிலவு வெளிச்சத்திலும் பொழுதுபோக்கிற்காகவும் பெண்களால் விரும்பி ஆடப்படுகின்றது. இத்தகைய பொங்கல் விழாவில் ஆண்களும், பெண்களும் கும்மியடிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். பொங்கல் போன்ற திருவிழாக் காலங்களில்தான் பெண்களால் இரண்டு, மூன்று நாட்கள்

ஒய்வாக இருக்க முடியும். அத்தகைய சூழ்நிலையில்தான் தங்களின் மகிழ்ச்சியை அவர்களால் வெளிக்காட்ட முடிகிறது.

"பெண்கள் கலையாக வளர்ந்து வரும் கும்மிப்பாடல்கள் தனக்கென்று சில கூறுகளை அமைத்துக் கொண்டு வளர்ந்திருப்பதை அறிய முடிகிறது. கிராமங்களில் வாழும் மக்கள் தை மாதப் பொங்கலன்று அடுத்து வரும் மூன்றாம் நாள் காணும் பொங்கல் நாளிலும் பெண்கள் அனைவரும் ஒன்றுகூடி பொது இடத்தில் பல வகையான பாடு பொருள்களுடன் கூடிய கும்மிப்பாடல்களைப் பாடி கும்மியடிப்பது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைவிப்பதாகும்."[6]

தை மாத விழாக்காலங்களில் கும்மி

தைமாதம் பிறந்த உடன் பெண்கள் எல்லோரும் மகிழ்ச்சி அடைவர். 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பதற்கேற்பத் தை பிறந்த நன்னாளை மிகவும் சிறப்பாகப் பாடியும், கும்மி அடித்தும் கொண்டாடு வார்கள். அவ்வாறு கும்மி அடிக்கும்போது முதலில் இறைவனையோ இறைவியையோ வணங்கிய பின்னரே பாடலைத் தொடங்குகின்றனர். இத்தகைய தை நோன்பில் மிகவும் சிறப்பாகவும் முக்கியமாகவும் கருதப்படுவது 'பூ' நோன்பு ஆகும். இந்தப் பண்டிகையன்று ஊரிலுள்ள சிறுவயதுப் பிள்ளைகளும், கன்னிப் பெண்களும் கோவிலின் முன்சென்று பூக்கூடைகளை வைத்து ஆடிப்பாடிப் பூப்பறிக்கிறார்கள்.

'பூப்பறிக்கிற பெண்டுகளே
பூ முடிந்தால் ஆகாதா?
பறித்த பூவையும் பெட்டியிலிட்டுப்
பூவோ பூவு......... ...."

(தகவலாளி, கவிதா, 25.01.2006)

இவ்வாறு, பறித்த பூக்கடைகளையும், பலகாரக்கூடைகளையும் கோவில் கோவிலாகக் கொண்டுசென்று, அம்மனை நினைத்துக் கும்மியடிப்பார்கள்.

"தன்னானே நாதினம் தன்னானே – தன
தன்னானே நாதினம் தன்னானே
குச்சிக்கும் குச்சிக்கும் பொன்னாலே
ஆவரங் குச்சிக்கும் பொன்னாலே
வடக்கு பார்த்த உச்சிமாகாளி
வலது கையும் பொன்னாலே
......................."

(தகவலாளி, தங்கமணி 27.01.2006)

கும்மிப்பாடலுக்கான சூழல்

"நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் ஒன்றுகூடி வாழும் இயல்புள்ளவர்கள். அவ்வாறு ஒன்றுகூடி மகிழும் விளையாட்டாக அமைவதே 'கும்மி'. திருவிழாக் காலங்களிலும், பண்டிகைக் காலங்களிலும் ஓய்வாக இருக்கும்போதும் கும்மியடித்தும் பாடல்களைப் பாடி மகிழ்வர்"[7] இத்தகைய விழாக்களும் பண்டிகைகளும் சூழலாக அமைகின்றது என்கிறார் சற்குணவதி.

இதைத் தவிர மக்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது அதன் களைப்பு தெரியாமல் இருக்கப் பாடல்களைப் பாடி வேலை செய்வார்கள்.

"தன்னானே ஏலேலோ நாணன்னே ஐலலா
நாணன்னே சொல்லுமச் சொல்லு
ஒரு கடையா ஏலேலோ பலசுரக்கா, ஐலலோ
பல சுரக்கா சொல்லுமச் சொல்லு
முருகனுடே ஏலேலோ சன்னதியா ஐலலா
சன்னதியா'' சமுத்திரமா ஐலலா
சமுத்திரமா சொல்லுமச் சொல்லு''

(தகவலாளி, வீரம்மாள் 29.01.2006)

குறிப்புகள்

1. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப. 28
2. ஜி. வசந்தா, தஞ்சைமாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு சமுதாய ஆய்வு, ப. 2
3. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப்புறப்பாடல், ப. 9.
4. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா, 109.
5. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப. 186.
6. க. இராதா, கும்மிப்பாடல்களின் அமைப்பு, ப. 280.
7. மு. சற்குணவதி, தமிழக நாட்டுப்புறவியல், ப. 28.

பயன்பட்ட நூல்கள், துணைநூற்பட்டியல்

1. இராமநாதன். ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1986.
2. சக்திவேல். சு. நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம்,

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 008, 2001.

3. சண்முகசுந்தரம். சு, நாட்டுப்புற இயல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 18, 1999.

4. சற்குணவதி. மு., தமிழக நாட்டுப்புறவியல், தமிழ்க்கடல் பதிப்பகம், அரக்கோணம், 1999.

5. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், கழகவெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2001.

6. வசந்தா. ஜி., தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள். ஓரிரு சமுதாய ஆய்வு தென்றல் பதிப்பகம், தஞ்சாவூர், 7, 2000.

7. வானமாமலை. நா. - தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41, பி. சிட்கோ, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் சென்னை, 2000.

◆

முனைவர் பட்ட ஆய்வாளர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி

107
கரகாட்டம்

க. வினோத்குமார்

முன்னுரை

கரகாட்டம் என்பது நாட்டுப்புற இசைக் கலைகளில் முக்கியமான ஆட்டமாகக் கருதப்படுகிறது. இது தமிழர் மரபின் அடையாளச் சின்னமாகும். கரகம் என்பது செம்பிலான சிறு குடம் ஆகும். இக்குடத்தை அட்டைத் தாளினால் அழகு செய்திருப்பர். கரகக் கூம்பின் நுனியில் செயற்கைக் கிளியை செய்து வைத்திருப்பர். இதைத் தலையில் வைத்துக் கைப்பிடிக்காதவாறு சுழன்றாடுவது ஆகும். இவ்வாறு, ஆட்டம் நிகழ்த்துகின்றபோது இதனைச் சுற்றி மேள இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. கரகாட்டம் கோயில்கள் மற்றும் பொது இடங்களில் நிகழ்த்தப்படுகின்றது.

கரகாட்ட முறை

கரகாட்டத்தில் முறைப்படியான ஆட்ட நிலைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:-

இசைக்கருவி சபை வணக்கம்.

இசைக்கருவியாளர்களுக்கு வணக்கம்.

மண் வணக்கம்.

கரகாட்டக் கலைஞர்களுக்கு வணக்கம்.

வட்ட வளை நிலை ஆட்டம்.
ஒன்னாங்காலம் ஆட்டம்.
இரண்டாங்காலம் ஆட்டம், தொடர்ந்து 6வது காலம் ஆட்டம்.
கிரிக்கி எனும் சுழன்றாடும் ஆட்டம்.

கரகாட்டத்தில் இசைக் கருவிகள்

கரகாட்டத்தில் பலவகை இசைக் கருவிகள் காணப்படுகின்றன. அவை, தோல் கருவிகளாகவும், காற்றுக் கருவிகளாகவும், கஞ்சக் கருவிகளாகவும் அமைகின்றன. தவில், நாதசுரம், பம்பை, உறுமி, தமுக்கு, தாளம், சுருதிப் பெட்டி என இவை ஆகும்.

இசையின் வகைகள்

கரகாட்டத்தில் நையாண்டி இசை முதன்மையான இசையாக வாசிக்கப்படுகின்றது. நையாண்டி இசையில் பல வகைகள் உண்டு. அவை:

சிவகங்கை நையாண்டி இசை.
மம்பட்டி வெட்டு நையாண்டி இசை.
சோலைமலை நையாண்டி இசை.
விளம்ப நையாண்டி இசை.
தெக்கத்தி நையாண்டி இசை.
துரித நடை நையாண்டி இசை.

இவை மட்டுமல்லாமல் பல நடனங்கள் மற்றும் கூத்துகளில் இடம் பெறும் இசை வகைகள் பல உள்ளன. அவையாவன ஆரவல்லி சூரவல்லி இசை, ராஜபார்ட் இசை, கட்டபொம்மு இசை, மூக்க ராசப்பார்ட் அல்லது மூக்க வேளாளர் இசைப்பாட்டு, சிந்து இசை, கும்மி (முளைப்பாரி), பவளக்கொடி, நாயகனி இசை எனும் பாம்பாட்டி இசை, தெம்மாங்கு, தெக்கத்தித் தெம்மாங்கு, இழவைத் தெம்மாங்கு ஆகியவை அமைகின்றன.

கரக விளையாட்டுகள்

(1) தீப்பந்த விளையாட்டு

கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு நீளமான கம்பியின் இருமுனைகளிலும் அமைந்த தீப்பந்தத்தைச் சிலம்பு விளையாட்டுப் போல சுழற்றிய நிலையில் சுழன்றாடுதல்.

(2) கத்தி விளையாட்டு

கரகம் வைத்து ஆடும் ஆடவர் கைகளில் கத்தி வைத்துக்கொண்டு ஆடுவது ஆகும். இவ்வாறு ஆடும்போது போர் நடனம் போலவே இருக்கும்.

(3) சிலம்பு விளையாட்டு

குச்சி விளையாட்டு என்றும் சிலம்பு விளையாட்டு என்றும் இதனைக் கூறுவர். ஆடவர்க்கென ஒதுக்கப்பட்ட சிலம்ப விளையாட்டினைப்போலச் செய்து பெண்கள் கரகாட்டத்தில் ஆடுவர்.

(4) வளையம் விளையாட்டு

இரும்புக் கம்பியால் வட்ட வடிவில் வளைத்தெடுக்கப்பட்ட வளையம் ஒன்றை, தலைக்குள் மாட்டிக் கைகளை ஒவ்வொன்றாக வளையத்துக்குள் செலுத்தி உடம்பு முழுவதும் வளையத்துக்குள் செலுத்திக் கால் வழியே வளையத்தை வெளியேற்றும் விளையாட்டு இதுவாகும்

(5) கட்டை உருட்டுதல்

ஒரு சாண் நீளம் கொண்ட மரத்தாலான உருளைக்கட்டை ஒன்றை உருளுமாறு வைத்து அதன்மேல் 2 அடி அல்லது 3 அடி நீளம் கொண்ட செவ்வகப் பலகை ஒன்றை வைத்து வலதுகால், இடதுகால் பலகையில் இரு ஓரங்களில் வைக்கப்பட்ட நிலையில் கால்களின் துணைகொண்டே கரகத்தைத் தலையில் வைத்தாடுவர்.

(6) தீச்சட்டி விளையாட்டு

கரகம் இருந்த தலையில் தீச்சட்டியை வைத்தாடுவதை தீச்சட்டி விளையாட்டு என்பர்.

(7) ஏணி விளையாட்டு

இரண்டு ஏணிகளை ஒன்றோடொன்று எதிர் நிலையில் பொருத்தி நிற்கவைத்து ஏறி இறங்கி கரகம் விழாது ஒவ்வொரு படிக்கட்டிலும் நின்று ஆடி இறங்குவர்.

(8) கரகம் தலை இறக்கும் விளையாட்டு

கரகத்தைக் கை தொடாமல் நெற்றிக்குக் கொண்டு வருதல், அசைத்து அசைத்து பிடரிக்குக் கெண்டு வருதல், பிடரிக்குக் கரகத்தைக் கொண்டுவந்த நிலையில், கைகளைக் கட்டிய நிலையில் எலுமிச்சைப்

பழத்தை ஊசி நூலால் கோர்த்தல், கண் இமைகளில் ரூபாய் நோட்டை எடுத்தல், போன்றவை இதில் நடைபெறும்.

கரகத்தில் துணை நிற்கின்ற ஆட்டங்கள்

(1) கரகாட்டத்தில் கோமாளி

கரகாட்டத்தில் கோமாளி என்பவன் நாட்டு நடப்புகளை எடுத்துக்கூறி ஆடிப்பாடுவான். கரகாட்டப் பெண்மணிகள் ஆடிக் கொண்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு ஊடாகக் கோமாளி ஆடிக் கொள்வான். கரகாட்டத்தில் கலர் பாட்டிலை வாயால் உடைக்கும் போது கைகளைப் பின்புறத்தே கட்டி விடுவதால் 25 அடி உயரம் பார் (steel) கட்டி, கரகாட்டக் கலைஞர் ஏணி விளையாட்டுச் செய்யும்போது நெஞ்சில் கல் வைத்துக் கோடரி அல்லது சுத்தியல் கொண்டு கரகாட்டக் கலைஞர் உடைக்கும்போதும் கோமாளி உடன் நின்று நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்தத் துணை செய்வான்.

(2) ராசாராணி ஆட்டம்

மதுரை மாவட்டத்தில் பறையர் இனம் மட்டும் ஆடிய இந்த ராசாராணி ஆட்டம் எனும் நாலுபேர் ஆட்டத்தை இன்று வேறு சில இனத்தவர்களும் ஆட முன்வந்துள்ளனர். செம்பட்டிச் சந்தை காமிக், பெண்மக்கள் திருமணம், ஊர்ப் பஞ்சாயத்து போன்ற கதைகளை ஆடிப்பாடி, வசனம் பேசி ராசாராணி இவர்களுக்கு உற்ற தோழன், தோழி எனப் பாத்திரங்கள் அமையக் கலைநிகழ்ச்சி நடத்துவர்.

(3) குறவன் குறத்தியாட்டம்

மலைக்காடுகளிலும், மலையடிவாரங்களிலும் வாழும் குறவர், குளுவர் போன்ற குறவர் இனத்தில் பல்வேறு குழுவினர் காடுகளில் கிடைத்த மரத்தாலான சீப்பு, முத்து(விதை) மாலை, சிவப்பு முத்தான பவளம், போன்ற பொருள்களைத் தரையில் வாழும் பொதுமக்களிடம் பண்டமாற்றுச் செய்ய வேண்டி ஆடுவர்.

(4) பொய்க்கால் குதிரை ஆட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்குக் குந்தளம் எனும் ஒரு புறமுழவு கொண்ட இரு பகுதிகள் இணைந்ததாகும். இன்று கரகாட்டத்தில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நிலை ஆட்டமாக இணைந்துள்ளது.

(5) காவடியாட்டம்

காவடி முருகனுக்கு உகந்ததால் காவடிச்சிந்து இசை நாதசுவரத்தில் வாசிக்க ஆட்டம் ஆடப்படுகிறது. கைகள், தலை, தோள்கள் என்ற நிலையில் காவடியை அமர்த்தி ஆடுவது சடங்கு முறை ஆட்டமாக இருக்கிறது.

(6) முகப்போலி நடனங்கள்

கரகாட்டத்தில் பல்வேறு கலைவடிவங்கள் இணைந்து கொண்ட பட்டியலில் முகப்போலி நடனங்களும் அடங்கும். கரடியாட்டம், மந்தியாட்டம், கிழவன் - கிழவி நடனம், மாடுபிடி நடனம், மயிலாட்டம் போன்றவையாகும்.

முடிவுரை

கரகாட்டத்தில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. ஏணி விளையாட்டு, வளையம் விளையாட்டு போன்ற சாகச விளையாட்டுகளும், தீச்சட்டி விளையாட்டு, மாடுபிடி நடனம் போன்ற விபரீத விளையாட்டுகளும் கொண்டதாய் அமைகின்றது. நாட்டு நடப்புகளைக் கூறுவதோடு அல்லாமல் பழைய வரலாறுகளும் கரகாட்டத்தில் இடம் பெறுகின்றன.

கட்டுரைக்குத் துணைநின்ற நூல்கள்

1. ஆளவந்தார். ஆ., தமிழர் தோற்கருவிகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. (1981).
2. குணசேகரன்.கரு.அழ., தமிழ் மண்ணின் மரபுக் கலைகள், மித்ரா ஆர்ட் மற்றும் கிரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, சென்னை-24.

◆

இளமுனைவர்,
சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

108

வாய்மொழி இலக்கியத்தில் கூத்து

ம. வெண்ணிலா

கூத்து என்பது தமிழரின் மரபு வழியைச் சேர்ந்த கலைகளில் ஒன்றாகும். சங்கஇலக்கியக் காலத்தில் இருந்தே கூத்துக்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. சிலப்பதிகாரமும் கூத்துக்கள் தொடர்பான பல செய்திகளை எடுத்தியம்புகிறது. சங்க காலம் முதலாக இன்றுவரை தொடர்கின்ற, வளர்கின்ற ஒரு கலையாகக் கூத்துக்கலை காட்சிதருகிறது. இசையோடு ஆடலும் பாடலும் கலந்து இரவு முழுவதும் நிகழ்த்தப்பெறும் கலையாகக் கூத்துக்கலை விளங்குகிறது. இன்று கூத்துக்கலை பல்வேறு வகைகளாகக் கிளைத்துள்ளது. 1. தெருக்கூத்து (கதையை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் முன்நிலையில் இசை முழக்கத்துடன் ஆடலையும் பாடலையும் உரை யாடலையும் இணைத்து, பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துவன வாக நிகழ்த்தப்பெறுவது.) 2. கழைக்கூத்து (மூங்கில் கொம்பின் மீதும் கம்பி இழையின் மீதும் ஏறி ஆடுவது. 3. கணியான் கூத்து (ஒருவர் பாட அவரோடு சேர்ந்து அவரது குழுவினர் ஆடுவர்; பாடுவர். 4. பாவைக் கூத்து (பாவைகளைக் கொண்டு நிகழ்த்தப்பெறுவது; பெரும்பாலும் தோற்பாவைகளே பயன்படுத்தப்படுகின்றன.)

பழமையும் பண்பும் கலந்த இக்கூத்துக் கலையானது தமிழகத் தில் மட்டுமல்லாது அயல் மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும்

நிகழ்த்தப்பெற்று வருகின்றது. சூழலுக்குத் தக்க வகையில் வளர்ச்சிக் கும் மாறுதலுக்கும் இடம் கொடுத்து நின்ற இக்கூத்துக் கலையானது பல்வேறு வகைகளில் மாறுதல் அடைந்து ஆங்கிலேயர்களின் நாடக வடிவமைப்பையும் உள்வாங்கிக்கொண்டு நாடகமாக நடிக்கப் பெற்றது. பிற்காலத்தில் திரைப்படங்களாக மறுவடிவெடுத்தது.

கூத்துக்களுக்கான பாடுபொருளை இலக்கியம், புராணம், இதிகாசம் முதலியவற்றிலிருந்தும் மக்களுடைய வாழ்க்கையிலிருந்தும் எடுத்துக் கொள்கிறார்கள். சிலப்பதிகாரம், இராமாயணம், பாரதம், ஆரவல்லி சூரவல்லி கதை முதலானவை கூத்துக்கலையின் கருவாக அமைந்துள்ளன.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரக் கதை இன்றும்கூடப் பல இடங்களில் கூத்தாக நடிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. ஆனால், ஏட்டிலக்கியத்தில் காணப்படுகின்ற சிலப்பதிகாரமும் தெருக்கூத்தில் காணப்படுகின்ற சிலப்பதிகாரக் கூத்துகளும் கதை அமைப்பில் பல வேறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றன.

சிலப்பதிகாரம் கண்ணகி மானிடப் பெண்ணாகத் தோன்றி இறுதியில் தெய்வ நிலையை அடைந்தாள் என்று கூறுகிறது. கூத்துக்கள் தெய்வமாகிய காளியே கண்ணகியாகப் பிறந்தாள் என்று இயம்புகின்றன.

கண்ணகி வழிபாடு

தமிழகத்தில் அம்மன் என்னும் சிறுதெய்வ வழிபாடு காலங் காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஊரின் எல்லை யோரப் பகுதிகளில் இருந்து மக்களைக் காத்து வருபவள் எல்லையம்மன் எனப் பெயர் பெறுகிறாள். அவளே கன்னியாக இருந்து காவல் புரியும்போது கன்னிகா பரமேசுவரி என்றழைக்கப்படுகிறாள். தலை மட்டுமே கொண்டவளாக இருந்து இரேணுகா அம்மனாக வழிபடப்படுகிறாள். பல இடங்களில் உயிர்களை வாழ வைக்கும் மாரியின் அடையாளமாக நின்று மாரியம்மனாகக் காட்சிதருகிறாள். தீமை கண்டு சினக்கின்ற போது உக்கிரக்காளி அம்மனாகக் காட்சிதருகிறாள்.

இளங்கோவடிகள் அன்பும் அமைதியும் நிரம்பப் பெற்றவளாகக் கண்ணகியை அறிமுகப்படுத்துகிறார். கோவலன் கொலையுண்ட பிறகு சீற்றங்கொண்டு மதுரையை எரியூட்டிய பிறகே வழிபாட்டிற்குரிய

பத்தினி தெய்வமாக உருப்பெறுகிறாள். ஆனால், கூத்துக்களில் காளியின் அவதாரமாகவே கண்ணகி காட்டப்படுகிறாள். அதனாலேயே, மாரியம்மன் கோயில் திருவிழாக்களில் இன்றியமையாத கூறாகச் சிலப்பதிகாரக் கூத்து இன்றுவரை நிகழ்த்தப்பட்டு வருகிறது. கண்ணகி காளியின் அவதாரமே என்று கூத்துப் பாடல்கள் இயம்புகின்றன. கோவலன் கதையிலும் கண்ணகி காளிதேவியின் அவதாரமாகவே காட்டப்படுகிறாள்.

கோவலன் கதை

கோவலன் கதையில் கண்ணகியும் கோவலனும் முற்பிறவியில் வாணிச்சியும் வாணியனுமாக வாழ்ந்து வருகின்றனர். அப்பொழுது மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனுக்குக் குழந்தை இல்லாததால், குழந்தை வரம்பெற விரும்பி, காளிக்குப் பலி கொடுக்க விரும்புகிறார்கள். இஃதறியாத கோவலன் காளி கோயிலுக்கு வந்து விளக்கேற்றுகிறான். காளிக்குப் பலியிட விரும்பிய பாண்டியனால் கோவலனின் தலை வெட்டப்படுகிறது.

"காளி மடிமேலே கடுகெனவே தான்வீழ்ந்து
கதறிய முகிறானே கட்டழக னப்போது
உபகாரஞ் செய்தேனம்மா அபகாரம் நேர்ந்ததுவே
என்ன அப்போது காளியம்மன் அஞ்சாதே மகனேயென்று
ஆதரவு சொல்லியல்லோ அடைவாக ஏதுசொல்வாள்
ஒருவன் பழிக்கு நாளை உலகம்பழி வாங்கிவைப்பேன்
மைந்தன் பழிக்கு நாளை மதுரைபழி வாங்கிவைப்பேன்"

என்று காளிதேவி வாணியனுக்கு ஆறுதல் கூறுகிறாள். காளிதேவி சிவபெருமானிடம்,

"அரனே இப்பிறப்பு நீக்கி மறுபிறப்பு யான்பிறந்து
வணிகச்செட்டி கோவலற்கு மனையாட்டியாக வந்து
விளக்கவித்த பாண்டியரை வெட்டித் தலைசாய்த்து
மணிகுடலைத் தான்பிடுங்கி வந்திடுவேன் கோயிலுக்கு"

என்றுரைக்க அதனைக் கேட்ட சிவபெருமான் பாண்டியன் மனைவியான ராஜகன்னி கோவிலிங்கி என்பவள் பிள்ளை பெற வேண்டித் தவமிருந்தபோது, காளியின் உயிரை எலுமிச்சம் பழமாக ஆக்கி அதனைக் கோவிலிங்கிக்கு வழங்கினார். அதனை உண்ட கோவிலிங்கிக்குப் பெண் குழந்தை பிறக்கிறது.

"வலதுகால் செஞ்சிலம்பு இடதுகை செப்பேடு
கழுத்திலே பூமாலை கன்ன வழியாக

கன்னத்து வழியாகக் கட்டழகி பெண்பிறந்தாள்''

என்று கண்ணகியின் பிறப்பு காளிதேவியின் பழிவாங்கும் அவதாரமாகக் காட்டப்படுகிறது. பாண்டியனின் குடிக்கு ஆகாதென்று சோதிடர் கூறியதால் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுகின்றனர். ஆற்றில் அடித்துக்கொண்டு வரும் அக்குழந்தையை ஐந்துதலை நாகம் ஒன்று கண்ணகி என்று பெயர் சூட்டிப் பாதுகாக்கிறது.

“காளியென்று ரூபமதைக் கண்ணகியுந்தா னெடுத்தாள்
சிங்கப் பல்லுஞ் செஞ்சடையும் சிவனுடைய ரூபத்தால்
கோடலிப் பல்லழகுங் கோழி முட்டைக் கண்ணழகும்
இரண்டுகரந் தனிலே எடுத்தாள் திரிசூலம்
சூலமொரு கையில் சுக்குமாந்தடி யொருகை
பாசமொரு கையில் பன்னிருவேல் தானொருகை''

என்று கண்ணகியின் தோற்றக் காட்சி காட்டப்படுகிறது. காளி தேவியின் உருவத்துடன் முதலில் பாண்டியர்களைப் பழி வாங்குகிறாள்.

“ஆயிரம் பாண்டியரை அன்பாகத் தானிருத்தி
சூலத்தைக் கொண்டுமவள் குத்தினாள் பாண்டியரை
சிறுகுடலும் பெருங்குடலும் சேர்த்துப் பிடுங்கினாளே''

அடுத்ததாகப், பொற்கொல்லனாகிய வஞ்சிப்பத்தனின் வீட்டிற்கு வந்து பரணில் ஒளிந்திருந்த வஞ்சிப்பத்தனைப் பிடித்து இழுத்துக் கொலை செய்கிறாள்.

“குத்திச் சரித்து மவன் குடலைப் பிடுங்கிக் கொண்டாள்
தோள்மாலை தானணிந்தாள் தோகை''

என்ற வரிகளில் அவளுடைய சீற்றத்தைக் காணமுடிகிறது.

அனைவரையும் பழிக்கு இரையாக்கிய பிறகு கேரளத்திற்கு வந்து பகவதியாள் என்ற பெயருடன் சில காலம் தங்குகிறாள். அங்கும் அமைதியடையாமல் திருவொற்றியூருக்கு வருகிறாள். திருவொற்றியூரில் சிவனும் சக்தியும் சொக்கட்டான் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். அங்கு வந்த கண்ணகியைக் கண்டு சக்தி அஞ்சி ஒளிகிறாள். சிவபெருமான் ‘எங்கு வந்தாய்’ என்று கேட்டவுடனே கண்ணகி குடிப்பதற்கு நீர் வேண்டும் என்று கேட்கிறாள். உடனே சிவபெருமான் ஒரு ஆழமான சுனையை ஏற்படுத்தி ‘உள்ளே சென்று நீர் அருந்துவாயாக’ என்கிறார். கண்ணகி சுனையில் இறங்கிய உடனே அதன் வாயிலை ஒரு பெரிய பாறையைக் கொண்டு முடிவிடுகிறார்.

நம்பூதிரிமார் வீதி, பூந்தோட்டம், காசி குளம் முதலிய இடங்களில் எழ முயன்றபோதும் சிவபெருமான் அங்கெல்லாம் பாறைகளைக் கொண்டு வழி அடைத்து விடுகிறார். இறுதியில் சிவபெருமான் 'இன்று முதல் நீ இங்கேயே தங்கிவிடு. சித்திரை மாதத்தில் நல்ல நாளில் முதல் பூசையை உனக்குத் தருகிறோம். இன்னும் விரும்பியதைக் கேள்' என்று கூறுகிறார். உடனே கண்ணகியும்.

"எட்டுக்குட்டி எட்டுப்பொட்டை எட்டுமுட்டை எட்டுச்சட்டி
கம்மாளர் பலியெனக்குக் கடவுளே தரவேண்டும்
வருஷத்துக்கோர் பலி வகையாய்க் கொடுக்கவேண்டும்''

என்று கேட்கிறாள்.

கோவலன் கண்ணகிக் கதை

குமரி மாவட்டப் பகுதியில் வழங்கப்படுகின்ற கோவலன் கண்ணகிக் கதையிலும் கண்ணகி அம்மனின் அவதாரமாகவே காட்டப்படுகிறாள். திருமால் துர்க்கையைக் கண்ணகியாகப் பிறவி எடுக்கச் செய்கிறார். கண்ணகி தன் சிலம்பை உடைத்த பிறகு துர்க்கையின் உருவெடுக்கிறாள்.

"சூரியன் தன்னொளி வடிவதானாள்
துர்க்கையென்னும் வடிவதானாள்
பாண்டியனைக் கொன்ற பிறகு
பதினாறுமணிச் சூலத்தோட
பயிந்தொடியாளம்மே வந்துபிறந்தாள்
மாயப்பொன்னும் கயிலாயபுரத்திலே
வந்தடி தொழுதவள் வரமது கேட்டாள்''

என்று கண்ணகி சினங்கொண்டெழுந்து மதுரையை எரியூட்டிய பிறகு மீண்டும் துர்க்கையாகிக் கயிலாயத்தை அடைவதாகக் காட்டப்படுகிறது.

கோவலன் கதை

கேரளப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஏட்டுச் சுவடியாகிய கோவலன் கதையில் கணவனை இழந்த கண்ணகி காளியின் உருவத்தோடு பாண்டியனின் அரண்மனைக்குச் செல்கிறாள். அவளுடைய தோற்றத்தை,

"மஞ்சநல்ல பாவாடை மடித்துடுத்தா ளன்னேரம்
மஞ்சரவிக்கை யிட்டாள் மஞ்ஞைநல்லாள் கன்னகையாள்
சிவனை நினைந்தாளே திருநீறணிந்தாள் தேகமெல்லாம்

கையிலே வேப்பங்குழை கக்கத்திலே தானிடுக்கி
வாறாளே கன்னகையாள் மாசித்தெரு வீதிவந்தாள்"

என்று கண்ணகி கொண்ட கோலம் காளியின் கோலமாகவே காட்டப்படுகிறது.

தமிழக மக்கள் மாரியம்மன் வழிபாட்டைக் கண்ணகி வழி பாடாகவே கருதுகின்றனர். கேரளாவில் கண்ணகிக்கென்று தனியாகக் கோயில் உள்ளது. ஆனால், தமிழக மக்களின் மனங்களில் நீங்கா இடம்பெற்றுள்ள கண்ணகிக்கு அவள் பெயரில் தமிழகத்தில் தனியாகக் கோயில்கள் ஏதுமில்லை. கண்ணகி காளியின் வடிவ மாகவும் அம்மனின் வடிவமாகவும் மக்கள் மனங்களில் பதிவாகி இருத்தல் வேண்டும். அம்மனுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலிகொடுப்பது இதனை உறுதிப்படுத்துகிறது. அம்மன் கோயில்களில் நடைபெறுகின்ற தீமிதித் திருவிழாவும் இக்கருத்திற்கு வலுவூட்டுகிறது. எனவே, தமிழகத்தில் கண்ணகி வழிபாடு அம்மன் வழிபாடாக உருப்பெற்றிருத்தல் வேண்டும்.

◆

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
மீனாட்சி மகளிர் கல்லூரி.
கோடம்பாக்கம், சென்னை.

109
காவடியாட்டம் அன்றும் இன்றும்

செ.ஜான்சிராணி

முன்னுரை

மக்கள் வாழ்க்கையிலிருந்து தாமாகவே தோன்றிய நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்கள் வாழ்க்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளன. "கலைகளை கேள்விக் கலைகள், காட்சிக் கலைகள், நிகழ்வுக் கலைகள் என மூவகைப்படுத்தலாம்.[1] இதில் நடனம் நாடகம் போன்றவை நிகழ்வுக் கலைகளாகும். தமிழகத்தில் நிகழ்த்தப்பெறும் நாட்டுப்புறக் கலைவடிவங்களில் 'காவடியாட்டம்' குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற நாட்டுப்புறக்கலைகள் மரபுவழிப் பட்டனவாக மட்டுமின்றித் தொன்மையான கலைகளாகவும் விளங்கி வருகின்றன. கரகாட்டமும் காவடியாட்டமும் சமயச் சடங்குகளிலிருந்து தோன்றி வளர்ந்துள்ள ஆட்டக்கலைகளாக விளங்குகின்றன.

காவடியாட்டம் - விளக்கம்

"காவடி எடுத்தல் என்பது முருகக் கடவுளுக்காகச் செய்யப்படும் ஒரு வழிபாட்டுச் சடங்கு நிகழ்ச்சியாகும். இரு முனைகளிலும் எடைகளைக் கட்டித் தொங்கவிட்ட ஒரு தண்டினைத் தோளில் வைத்துச் சுமத்தல் 'காவுதல்' எனப்படுகிறது. 'தோளாற் காத்தண்டு சுமத்த' லாகிய இச்செயல் 'காவினெங் கலனே' என்ற புறநானூற்றுத்

தொடரால் அறியலாம்.''[2] காவுதண்டு அல்லது காவுதடி, காவடியின் தண்டு (அ) காவடித் தண்டு என்றாகியது. இது பின்னர் காவடி எனச் சுருக்கமாக வழங்கப்பட்டது. முருகக் கடவுளின் கோயிலுக்கு நீண்ட தொலைவில் இருந்து செல்லும் பக்தர்கள் முருகனுக்குத் தாங்கள் படைக்க விரும்பும் காணிக்கைப் பொருள்களை இதுபோன்ற தண்டுகளின் இரு முனைகளிலும் கட்டித் தோளில் சுமந்து செல்கின்றனர். முருகனின் வழிபாட்டுச் சடங்காகக் கருதப்பட்ட இக்காவடி எடுத்தல் என்னும் செயலில் இருந்து காவடியாட்டம் எனப்படும் ஒரு ஆட்டக்கலையே உருவாகி விட்டது.

காவடி வகைகள்

முருகனின் அடியவர்கள் பலவகையான காவடிகளைச் சுமந்து செல்கின்றனர். சுமக்கப்படும் பொருளின் அடிப்படையில் இக்காவடிகள் பெயர் பெறுகின்றன. ஆனால், காவடியின் அமைப்பு மாறாமல் அப்படியே உள்ளது. ஒரு மூங்கில் தண்டின் இரு முனைகளில் பால் நிரம்பிய இரு குடங்களைக் கட்டி முருகனுக்குரிய காணிக்கைப் பொருளாகப் பாலைச் சுமந்து செல்வது பாற்காவடி என்றும், இளநீரைக் கட்டிச் சுமந்து செல்வது இளநீர்க் காவடி என்றும், உணவு தானியங்கள் (அ) சமைத்த உணவைக் கட்டிச் சுமந்து செல்வது அன்னக்காவடி என்றும் வழங்கப்படுகின்றன. பன்னீர்க் காவடி, சாக்கரைக் காவடி என்றெல்லாம் காவடி பெயர்பெறுகின்றது. என்றும் பூப்பந்துகள் (அ) பூக்கூடைகள் கட்டித் தொங்கவிடப்படும் காவடி பூக்காவடி (அ) புஷ்பக்காவடி என்றும் சுட்டப்படுகின்றன. முதுகில் அலகு குத்தி அதில் பிணைக்கப்பட்ட சிறு தேரை இழுத்து வருவதைத் தேர்க்காவடி என்றும் உடல் முழுதும் அலகு குத்திக்கொண்டு குப்புறப்படுத்த நிலையில் தொங்கிக்கொண்டு வருவதைப் பறவைக் காவடி என்றும் அழைப்பதை அறியமுடிகிறது.

காவடியாட்ட அடவுகள்

மனிதன் தன் உள்ள எழுச்சிகளை வெளியிடும் கருவியாக நடனத்தைக் கண்டுபிடித்தான். சந்த ஒழுங்கமைவோடு தொடர்ச்சியாக நிகழ்த்தப்பெறும் பல அமைப்புகளைக் கொண்ட உடல் இயக்கங்கள் நடனம் எனப்படும். கட்டிடத்திற்கு எவ்வாறு செங்கற்கள் தேவையோ அதுபோல் ஆட்டத்திற்கு அடவுகள் தேவை. இதனை,

> "அடவு என்பது ஆடப்படும் கலைகளுக்கு ஜீவநாடி
> போன்றதொரு ஆதார உறுப்பாகும்''[3]

என்னும் மொழிகளால் அறியலாம். காவடியை உடலின் பல பகுதிகளில் வைத்து, அது கீழே விழுந்து விடாதவாறு உடல் அல்லது உடற்பகுதியைச் சமனிலையில் வைத்துக் கொண்டு, காவடியை மேலும் கீழும் அசைத்துக் கொண்டும் இயங்கும் நிலையில் காலில் போடப்படும் சில அடவுகள் காவடி ஆட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நாட்டுப்புற ஆட்டத்திலும் அந்தந்த ஆட்டத்திற்கே உரிய சில சிறப்பான அடவுகள் அமைந்துள்ளன.

காவடி ஆட்டமுறை

1. முதலில் அழகர் வருணிப்பு: காவடியாட்டக் கலைஞர் கும்மிட்டபடி நிற்பார். நாதசுரம் சாமியை நினைத்து வாசிக்கப்படும் தருணத்தில் கலைஞர் அருள் வருவது போல் இலேசாக அசைந்து ஆடுவார்.
2. தவில் வாசிக்கப்படும்போது காவடியாட்டக் கலைஞர் அதற்கேற்ப வட்டமாகச் சுற்றிவருவார்.
3. கெட்டிமேளம் வாசிக்கும்போது ஆட்டக் கலைஞர் காவடியைக் கீழே வைத்து அதனைக் கையால் தொடாமல் கழுத்தை நுழைத்துத் தூக்கிக் கரகரவெனச் சுற்றுவார்.
4. நாதசுரத்தில் காவடிச் சிந்து வாசிக்கப்படும். ஆட்டக் கலைஞர் தோளில் காவடியைச் சுமந்தபடி கீழே குனிந்து மெல்லக் காவடியை முதுகுக்குக் கொண்டு வந்து காவடியை உருட்டுவார் பின்னர் கைகளுக்குக் கொண்டுவந்து ஆடுவார் மீண்டும் தோளுக்குக் கொண்டு வந்து பிடரி வழியே உச்சந்தலைக்குக் கொண்டுசென்று தலையில் நிறுத்தியவாறு இசைக்கேற்ப வட்டமாகச் சுற்றிவந்து ஆடுவார். இதுவே காவடி ஆட்ட முறையாகும்.

காவடியில் இசைக்கலை

முருகனைப் பற்றிய பாடல்களை ஒருவர் பாட, பாடலின் ஒவ்வொரு அடிக்கும் அங்குக் குழுமியுள்ள பக்தர்கள் 'அரோகரா' என்று குரலெழுப்புவர். பூசாரி தீபாராதனை செய்வார். நையாண்டி மேள இசையே இதற்கும் சிறந்த பக்க இசையாக இசைக்கப்படுகிறது. காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து, கிளிக்கண்ணி, மகுடி போன்ற பல மெட்டுக்களைக் கொண்ட பாடல்கள் காவடியாட்டத்திற்கு இசைக்கப் படுகின்றன.[5] காவடியாட்டத்திற்குத் தேவைப்படும் காவடி, நாதஸ்வரம், தவில், பம்பை, கிடுகட்டி, உருமி, ஒத்து, தாளம் போன்ற நையாண்டி

மேளப் பக்கஇசைக்கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் முறைகளை அறிவது இக்கலையை நன்கு புரிந்து கொள்ள உதவும். சென்னிக்குளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்கள் மிக்க புகழ்பெற்றவையாகும். இப்பாடல்களைப் பாடிச் செல்லும் அடியவர்கள் அவ்வப்போது 'வேல் வேல் அரோகரா' என்னும் ஒலியை எழுப்பிக் கொண்டே செல்வர்.

'காவடிக் கூட்டங்களாம் வேண்டிய
கருமலை சந்நிதியில் – (அரோகரா)'[6]

என்று பாடுவர்.

மாவட்டந்தோறும் காவடியாட்டக் கலை

"காவடியாட்டம் தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, தென்னாற்காடு, அம்பேத்கர், சம்புவராயர், கோயமுத்தூர், சென்னை ஆகிய மாவட்டப் பகுதிகளில் ஆடப்பட்டு வரும் ஒரு நாட்டுப்புறக் கலையாக விளங்கி வருகிறது."[8]

தஞ்சை மாவட்டம்

"தஞ்சையில் நாட்டுப்புறக் கலைஞர்கள் மிகுந்து காணப்படு கிறார்கள். வடக்கு வாசல் யாகுப்பியா தெருவிலுள்ள கலைமாமணி விநாயகம் என்பவரும் சிவாஜி என்ற கலைஞரும் தலைசிறந்த கலைஞர்களாக விளங்குகின்றனர்.

மதுரை மாவட்டம்

மதுரையில் தலைசிறந்த காவடியாட்டக் கலைஞராக விளங்கிய ஓம் பெரியசாமியின் இளைய மகன் சௌந்தரபாண்டி ஒரு தலை சிறந்த காவடியாட்டக் கலைஞராகத் திகழ்கிறார்.

கோவை மாவட்டம்

கோவையில் இராமநாதபுரம் பகுதியில் கலைமணி, நாகராஜன் என்ற இரு காவடியாட்டக் கலைஞர்கள் உள்ளனர். இவர்கள் இருவரும் இணைந்து பரத நாட்டிய முறையில் நையாண்டி மேளத்திற்கேற்பக் காவடி ஆடுகின்றனர்.

நெல்லை மாவட்டம்

திருநெல்வேலியில் இரண்டு காவடியாட்டக் கலைஞர்கள் உள்ளனர். பாளையங்கோட்டைப் பகுதியில் காவடியாட்டக்

கலைஞர்கள் இருக்கிறார்கள். புளியகரை மகாலிங்கம் என்பவர் தலைசிறந்த நாயனக்காரராக விளங்குகிறார். இவர் காவடிச் சிந்து வாசிப்பதில் கெட்டிக்காரராக உள்ளர்.[7]

முருகனுக்கு வேண்டுதல் நிறைவேற்றும் பொருட்டு மாவட்டந் தோறும் காவடி எடுத்து ஆடப்படுவதால் இக்காவடி ஆட்டத்தில் சமயத் தாக்கம் இருப்பதாகக் கொள்ளலாம்.

இன்றைய காவடியாட்டம்

ஆரம்பகாலக்கட்டத்தில் கோயில் உற்சவங்களில் காவடியாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. முருகன் கோயில்களுக்கு உரியதாக இருந்து வந்த காவடி எடுத்தல் தற்போது அய்யனார் கோயில்களிலும் காளியம்மன் மாரியம்மன் முதலான அம்மன் கோயில்களிலும் நிகழ்வதைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறிய முடிகிறது. ஆண்மகன் மட்டுமின்றிப் பெண்களும் காவடி எடுக்கின்றனர். பழங்காலம் தொடங்கி சமீபக் காலம்வரை பாரந்தூக்குவதற்குப் பயன்பட்ட காவடி வடிவ மாற்றத்துடன் முருகன் கோயில் வழிபாட்டுச் சடங்கில் முதன்மை பெற்று, பிறகோவில் சடங்குகளிலும் விரிவடைந்து வருவதை அறிந்து கொள்ள முடிகிறது. சமீப காலமாகத் தொழில் முறையில் காவடியாட்டம் வளர்ச்சி பெறுகிறது. காவடியாட்டக் கலைஞர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ளனர். இவர்கள் இந்தியாவில் பல பகுதிகளுக்கும் பல நாடுகளுக்கும் சென்று காவடியாட்ட நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

கும்பாபிஷேகம், வீதியுலா, சிவராத்திரி, வருடப்பிறப்பு, சித்ரா பவுர்ணமி போன்ற சிறப்பு நாட்களில் காவடியாட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. "தஞ்சை அந்தோணியர் கோயிலிலும், அதிராம்பட்டினம் முஸ்லீம் கோவிலிலும், பரங்கிப்பேட்டையில் சுன்னத் கல்யாணத்திலும் காவடியாட்டம் ஆடியதாக விநாயகம் குறிப்பிட்டார்" என்பதிலிருந்து காவடி ஆட்டம் எம்மதமும் சம்மதம் என்னும் உயரிய கொள்கை உடையது என்பதை அறியலாம். மலேசியா சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளிலும் காவடியாட்ட நிகழ்ச்சி வரவேற்கத் தக்க வகையில் உள்ளது. காவடியாட்டம் பொழுதுபோக்குக் கலையாக வளர்ச்சி பெற்று இருப்பினும் அதற்கான ஒப்பனை கோயிற்கலையோடு தொடர்பு உடையது. அரசு ஏற்பாடு செய்யும் பல நிகழ்ச்சிகளிலும் காவடியாட்டம் இடம் பெறுகிறது.

பக்திக்காகவும் நேர்த்திக் கடனுக்காகவும் எடுத்த காவடியை தொழிற்முறைக் கலையாக சமுதாயம் மாற்றிவிட்டது.

முடிவுரை

இந்திய நிகழ்த்துக் கலைகளைப் பொறுத்தவரை மதத்தோடும் புராண இதிகாச மரபுத்தொடர்ச்சி உடையதாகவும் மறை ஆற்றலுடைய ஆழ்ந்த உட்பொருளை உடையதாகவும் விளங்குகின்றன.

சான்றெண் விளக்கம்

1. முருகேசன். மு, முனைவர் காவடியாட்டம், பக். 1
2. மேலது. பக். 28
3. மேலது. பக். 55
4. இராமநாதன் ஆறு. முனைவர், நாட்டுப்புறக் கலைகள், பக். 86
5. முருகேசன். மு. முனைவர், காவடியாட்டம், பக். 30
6. சண்முகசுந்தரம்.சு. நாட்டுப்புற இயல், பக். 96
7. முருகேசன்.மு. முனைவர், காவடியாட்டம், பக். 193-196.

◆

நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

110
ஒயிலாட்டம்

சௌ. ஸ்டெல்லா புஷ்பா

நாட்டுப்புறக்கலைகள் அழகியல் சார்ந்தவை. நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்துக் கலைகள்,கைவினைக் கலைகள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

நிகழ்த்துக் கலைகள்

நாட்டுப்புறக் கலைப்புலத்துள் நிகழ்த்துதல் என்பது குறித்து இருவகைக் கருத்தாக்கங்கள் காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள், விடுகதைபோடல், கதை சொல்லல் போன்றவையும் நிகழ்த் துதல்களே என்பது ஒன்று. நிகழ்த்துக் கலைகளாகிய வில்லுப்பாடல், கணியான் கூத்து, தேவராட்டம், ஒயிலாட்டம், கரக ஆட்டம், பாவைக் கூத்து, தெருக்கூத்து போன்றவையும் நிகழ்த்துதல்களில் அடங்கும்.

நாட்டுப்புறக்கலைப் பண்புகள்

நாட்டுப்புறக்கலைகள் தேங்கி நிலைத்துப் போனவை அல்ல. இலக்கண வரையறைக்குள் அடங்கியவையும் அல்ல. ஒவ்வொரு கலைஞனும் தனது திறமைக்கேற்ப படைப்புத்திறன் கொண்டவன். மரபுக்கும் கட்டுப்பட்டவன். மரபுக்குக் கட்டுப்பட்டவன் என்றாலும் புதியன புனைபவன், நாட்டுப்புறக் கலைகளுள் தனிமனித நிகழ்த்துதல்களும், கூட்டு நிகழ்த்துதல்களும் அடங்கும்.

கலை நிகழ்த்துதல்களின் கூறுகள்

1. நிகழ்த்துதலில்தான் அர்த்தமும், கலைத்திறமும், வெளிப்படும். வெறும் சொற்களுக்கு மட்டும் இங்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதில்லை. அவை எவ்வாறு மக்கள் முன் வழங்கப்படுகின்றன என்ற வினைத்திறனிலும் கவனம் செலுத்தப்படும்.
2. பார்வையாளர்களும், அவர்தம் எதிர்பார்ப்புகளும், உள்ளிட்ட எல்லாப் பங்கேற்பாளர்களின் நடத்தைகளும் ஊடாட்டமும் நிகழ்த்துதலைப் புரிந்து கொள்ளத் துணைபுரியும்.
3. ஒரு குறிப்பிட்ட நிகழ்த்துக்கலை வாய்மொழி நடையியல் கூறுகளைச் சார்ந்து அமையாது. வாய்மொழி சாராத இசை, சைகை, நடனம் அல்லது ஆடை, அணிகலன்கள், ஒப்பனையும் கூட இன்றியமையாத கூறுகளாக அமையும்.
4. கலைஞர்களின் கலைத்திறமும், மரபுவழிக் கட்டுபாட்டு விதிகளும் கவனித்தறியப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் நாட்டுப்புறக் கலைகள்

தமிழ்நாட்டில், தெருக்கூத்து, பாவைக்கூத்து, கணியான் கூத்து, கழைக்கூத்து, ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கரகாட்டம், கழியலாட்டம், கொக்கலிக்கட்டையாட்டம், மயிலாட்டம், தப்பாட்டம், வில்லுப்பாட்டு என்று பல்வேறு நாட்டுப்புறக் கலை வடிவங்கள் காணப்படுகின்றன.

ஒயிலாட்டம்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் ஒன்றான ஒயிலாட்டம் என்பது ஆண்கள் குழுவாக இணைந்தாடும் ஆட்டமாகும். குழுவினர் அனைவரும் ஒரே நிறத்தில் தலைக்கட்டுடன், கைக்குட்டையையும் பிடித்துக் கொண்டு ஆடுவர். வெள்ளை வேட்டியைத் தார்பாய்ச்சிக் கட்டி, காலில் சலங்கை கட்டிக் கொண்டு பெரும்பாலும் இரவிலேயே இக்கலை நிகழ்த்தப்பெறும். ஒயிலாட்டத்தின் தன்மையை,

“ஆளோடு ஆளு உரசாமல் - உங்கள்
ஆளிலே ஒரு முழம் தள்ளி நின்று
காலோடு காலு உரசாமல் - உங்கள்
கைப்பிடித் துணி தவறாமல்
மேலோடு மேலு உரசாமல் - உங்கள்
வேருவைத் தண்ணி சிதறாமல்”

எனும் பாடல்வழி அறிய முடிகின்றது.

நிகழ்த்துவோர்

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உடையார்பட்டி, ஆலங்குளம் வட்டத்தில் இரதமுடையார்குளம், புளியம்பட்டி, நெல்லை சந்திப்பு போன்ற பகுதிகளிலும், மதுரை மவட்டத்தில் அழகர் கோயிலுக்கு அருகிலுள்ள வலையப்பட்டிக் கிராமத்திலும், திருச்சி, கோவை ஆகிய இடங்களிலும் இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் நாயக்கர் இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஊர்களில் இவ்வாட்டம் நிகழ்த்தப் பெறுகின்றது. தேவர், ரெட்டியார் இனத்தைச் சார்ந்தவர்களும், இடைநிலைச் சாதியினரும், தாழ்த்தப்பட்டோரும் இக்கலையை இக்காலத்தில் நிகழ்த்துகின்றனர்.

மேலும், ஒயிலாட்டத்தை மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த முக்குலத்தோர் குறிப்பாக மறவர் சாதியினர் மிகுதியாக ஆடுகின்றனர். மதுரை மாவட்டத்தில் மலைவேடர், வலையர், பள்ளர், நாடார், ஆசாரி, சேர்வை ஆகிய சாதியினர் ஒயிலாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிகழிடம்

ஒயிலாட்டம் கோயிற்திருவிழாக்களின் போதும், பொது நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப் பெறுகிறது. ஊர்க்காவல் தெய்வங்களையும், முன்னோர்களையும் வழிபடும் மாசிக்களரி விழாவிலும், அம்மன் எடுப்பு, கொடை விழாவிலும் இவ்வாட்டம் நிகழ்த்தப் பெறுகின்றது. கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சியிலும், விநாயகர் கோயில் விழாக்களிலும் இவ்வாட்டம் நிகழ்த்தப் பெறகிறது. இந்துக் கோயில்களில் மட்டுமல்லாது கத்தோலிக்கக் கிறிஸ்தவக் கோயில்களிலும் இக்கலை நிகழ்த்தப் பெறுகிறது. வழிபாட்டு நிகழ்வுகளில் மட்டுமல்லாது திருமணம், பூப்பெய்தல், காதுகுத்தல் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளிலும் இவ்வாட்டம் ஆடப்படுகிறது.

நிகழ்த்து முறை

ஒயிலாட்டக்காரரர்கள் ஐந்தைந்து பேராக இருவரிசையில் மொத்தம் பத்துபேர் அல்லது பன்னிரண்டு முதல் இருபதுபேர் என வரிசையாக நின்று இக்கலையை நிகழ்த்துகின்றனர். பெண்கள் இவ்வாட்டத்தில் பங்கு பெறுவதில்லை. எனினும் தூத்துக்குடி, நாகர்கோயில் போன்ற பகுதிகளில் சில இடங்களில் மட்டும் பெண்களும்

ஒயிலாட்டம் ஆடுவதைக் காணமுடிகிறது. இக்கலையில் வாய்ப்பகுதி தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது "தப்பு" என்ற கருவியும் பயன்படுத்தப்படுகிறது.

இவ் இசைக்கருவிகளின் இசையோடு கலைஞர்கள் காலில் கட்டியிருக்கும் "கச்சம்" எனப்படும், சலங்கையின் இசையும் ஒலித்து ஆட்டத்திற்கு அழகு சேர்க்கிறது.

ஆடும் முறை

ஒயிலாட்டத்தில் கழுத்துக்குக் கீழும், இடுப்புக்கு மேலும் உள்ள பகுதி வளைவதில்லை. இது ஆட்டத்திற்குக் கம்பீரத்தைத் தருகிறது. ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஒவ்வொரு பாடல் உள்ளது. ஆட்டத்தின் பொருளும் பாடலின் பொருளும் பொதுவாக இணைந்தே செல்கின்றன. ஒவ்வொரு ஆட்டத்திற்கும் தனியான தொடக்கமும் முடிவும் உண்டு.

ஒயிலாட்டத்தின் ஒவ்வொரு ஆட்டமும் ஒரு வரிசை அல்லது நேர்கோட்டு ஆட்டமாக உள்ளது. இவ்வாட்டத்தில் ஆசிரியரோ, தலைவரோ, வரிசைக்கு முன்னால் நின்று ஆடுவார். முதலில் கடவுள் வணக்கமாகக் கைகூப்பி நின்று ஒரு காலை மட்டும் தட்டித் தாளத்திற்கு ஏற்ப ஆடத் துவங்குகின்றனர். கடவுள் வணக்கத்தைத் தொடர்ந்து ஆடப்படும். சபை வணக்கத்தின்போது தரையைத் தொட்டு வணக்கம் செலுத்துகின்றனர். அதன்பின் ஆட்டம் துவங்கி உச்ச நிலையை அடையும். ஆட்டத்திற்கேற்ப பல இடைவெளியில் இருக்கலாம். கடைசிப் பாடலுக்கு முன்னால் வரும் இடைவெளியில் குரு அண்ணாவி நன்றி கூறுவர். பின்பு இறுதிப் பாடலில் தரையைத் தொட்டு வணங்கி ஆட்டத்தை நிறைவு செய்கின்றனர்.

ஒயிலாட்ட நிகழ்வுகள்

ஒயிலாட்ட நிகழ்வுகளானது

1. பாடல்
2. உரையாடல்
3. ஆடல்

என மூன்று நிலைகளைக் கொண்டு ஆடப்பெறுகிறது. ஆனால், இக்காலத்தில் உரையாடல் பகுதி வழக்கில் இல்லை. பெரும்பாலும் இராமாயணக் கதையே பாடலாகப் பாடப்பெறுகிறது. பாரதம், பவளக்

கொடிக் கதை, காத்தவராயன் கதை, கோவலன் கதை, மதுரைவீரன் கதை, வள்ளித் திருமணக்கதை, சிறுத்தொண்டர் கதை ஆகிய கதைகள் ஒயிலாட்டத்திற்காகப் பாடப்பெறுகின்றன. எனினும், கட்டபொம்மன் கதை, சக்கதேவி எனப்படும் சக்கம்மாள் கதையும் உணர்ச்சி வெளிப்பாட்டோடு பாடி ஆடப்படுகிறது. இவ்வாறு, பாடி ஆடும் முறையைச் சங்கீதக் கும்மி என்பர்.

ஒயிலாட்ட அடவுகள்

ஆடும் முறையை அடிப்படையாகக் கொண்டு, ஒயிலாட்டத்தின் அடவுகளை,

1. அடி
2. சாரி
3. தட்டு

என மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

அண்ணாவி அல்லது முன்பாட்டாளர் முதல் சந்தத்தைப் பாட குழுவினர் அதைத் திருப்பிப் பாடி ஆடுகின்றனர். அடவுகள் உடம்பின் கீழ்ப்பகுதியைச் சார்ந்தே அமைகின்றன. அடவுகளின் வேகத்தைப் பொறுத்து,

1. தக்கு
2. காலம்

எனப் பிரிக்கின்றனர். மெதுவாக ஆடுவது "தக்கு" என்றும் வேகமாக ஆடுவது "காலம்" என்றும் அழைக்கப்படுகின்றன. வேகமாக ஆடும் காலத்தை

1. ஒண்ணாம் காலம்
2. ரெண்டாம் காலம்
3. மூன்றாம் காலம்

எனப் பிரித்து ஆடுகின்றனர்.

ஒப்பனை

ஒயிலாட்டத்தில் பங்கு பெறும் கலைஞர்கள் ஒப்பனை என்று சிறப்பாக எதுவும் செய்து கொள்வதில்லை. பளிச்சென்று உடையலங் காரம் செய்து கொள்வர். பச்சை, சிவப்பு, பஞ்சுமிட்டாய் நிறம் போன்ற வண்ணங்களில் சட்டையும், கால்சட்டையும், கழுத்துப்பட்டையும் அணிந்திருப்பர். அனைவரும் சிவப்பு வண்ணக் கைக்குட்டையைக் கையில் பிடித்திருப்பர். தலைவர் மட்டும் பச்சைநிறக் கைக்குட்டையை

வைத்திருப்பார். கழுத்தில் பூமாலையும், கையில் காப்பு மாலையும் சில நேரங்களில் அணிந்து கொண்டு ஆடுகின்றனர். காலில் அணிந்து கொள்ளும் சலங்கையே தோற்றத்திற்குப் பொலிவையும், ஆட்டத்திற்கு அதிர்வையும் கொடுக்கிறது.

சலங்கை

ஒயிலாட்டம் ஆடுபவர்கள் காலில் கட்டியிருக்கும் சலங்கைகளின் எண்ணிக்கை 25 முதல் 100 வரை அமையலாம். மணிகளின் எண்ணிக்கை மிகுந்திருப்பது சிறப்பாகவும், அவ்வாறு ஆடுபவர்கள் சிறப்பு மிகுந்தவர்களாகவும் கருதப்படுகின்றனர். கச்சத்தின் முழக்கம் ஆட்டக்காரரின் தரத்தைக் காட்டிவிடும் இயல்புடையது.

ஒயிலாட்ட அசைவுகள்

ஒயிலாட்ட அசைவுகளை "இயக்கத் தொகுதி" என்றழைக் கின்றனர். "ஒயிலாட்ட இயங்கங்களை உடலுறுப்புகளின் வாயிலாகப் பகுத்துக்காண்பது ஆய்வுக்காக மட்டுமேயாகும். ஒயிலாட்டம் ஆடப்படும்போது, அனைத்து உறுப்புகளும் ஒன்று போலவே இயங்குகின்றன. ஒரு நேரத்தில் உருவாக்கப்படும் பல இயங்கங்கள் அடுத்தடுத்து அமைந்து முருகியக்கப் பொருளுடைய ஒரு வகை அமைப்பினை உருவாக்குகின்றன. இவ்வமைப்பு பல இயக்கங்களின் தொகுதியாக அமைகிறது. எனவே, இதனை "இயக்கத்தொகுதி" எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

உடல் இயக்கங்களைக் கொண்டு இயக்கத் தொகுதியை 7 வகையாகப் பிரிக்கலாம்.

இடுப்புக்கு மேலும், கழுத்துக்குக் கீழும் உள்ள மேலுடம்பு பகுதி நேராக நிமிர்ந்து இருக்க வேண்டும்.

தலை இருவகைகளில் இயங்குகிறது. இடப்பக்கமும், வலப்பக்கமும் திரும்புவதும் மேலும் கீழுமாக குனிந்து நிமிருவதும் தலையின் இயக்கங்களாகும்.

ஆட்டத்தின்போது கைக்குட்டையை வலுதுகையில் மட்டும் பெரும்பான்மையும் பிடிக்கும் வழக்கம் காணப்படுகிறது. ஆட்டக் கலைஞர்கள் கைக்குட்டையைச் சுழற்றும்போது, மணிக்கட்டு இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் அசைகிறது.

இடது கையில் கைக்குட்டை போன்ற பொருள் எதுவும் இல்லாததால் அதன் இயக்கம் பல நேரங்களில் குறைவானதாகவே காணப்படுகிறது.

இடுப்பின் இயக்கம் கால்களின் இயக்கங்களுக்கு ஏற்றவாறு அமைகின்றது. கால்களின் இயக்கங்களே ஒயிலாட்டத்திற்கு இன்றியமையாத இயக்கங்களாக விளங்குகின்றன. இடது காலை விட வலது காலின் இயக்கமே அதிகம் உள்ளது.

ஒயிலாட்டக் கூறுகள்

இயக்கத் தொகுதிகளின் செயற்பாடுகளை அறிந்திருக்கும் ஆட்டக் கலைஞர்கள், மக்கள் அவற்றைப் புரிந்து கொள்வதற்கும், பழகும் இளைய கலைஞர்கள் கற்றுக் கொள்வதற்கும் ஏற்ப, சிறந்த எளிய கூறாக விளக்கிச் சொல்கின்றனர். சில இயக்கத் தொகுதிகளின் “வைப்பு முறை” தெரிந்தாலும், பெயர்கள் தெரியவில்லை. மூத்த கலைஞர்கள் மட்டுமே அறிந்துள்ளனர். இளைஞர்கள் அறியும்பொருட்டு இயக்கத் தொகுதிகள் பலவகைப்படும்.

(நிலை, குத்து, ஏற்ற இறக்கம், அடி அடித்தல், அடி, மிதி, இழுவை, செண்டிப்பு, எட்டுப்போடுதல், மடக்கு, குதித்தல், சறுக்கு, புரளல், உருளாட்டம், கிறுக்கி, திரும்புதல், பானா ஆட்டம், குத்தாட்டம், பின்னிறக்கம், மூன்றடி போட்டுப் பக்கமாக ஏறிவரல், சுற்று, உட்காருதல், கொட்டு, நிறுத்துதல், கைகளின் பாவனைகள்)

இத்தகைய இயக்கத் தொகுதிகள் சில குறிப்பிட்ட முறைப்படி இணையும்போது ஆட்டம் உருவாகிறது.

முடிவுரை

இங்ஙனம், கோயில்களின் வழிபாட்டுக்கு உரியதாக விளங்கிய ஒயிலாட்டம், நாளடைவில் அழகுக் கலையாக விளக்கம் பெற்ற பாங்கினை அறிந்துகொள்ள முடிகிறது.

◆

இளநிலை ஆய்வாளர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

111

டண்டணக்கா

முனைவர் ந. விஜயசுந்தரி

தமிழிசை வரலாற்றில் இசைக்கருவிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. சிலப்பதிகாரம் தொடங்கி பல்வேறு நூல்களிலும் தமிழகத்தில் விளங்கிய பண்டைய இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. இவற்றுள் இசைத்துக்கொண்டு நடனமாடக் கூடிய தோல் கருவி பறை எனப்படும். இந்நடனக்கலையைப் பறையாட்டம் என்பர். சங்க இலக்கியங்களில் பறை என்ற சொல் இடம்பெற்றுள்ளது. எனினும் இது நடனமாடும் கலையாகக் குறிப்பிடப்பெறவில்லை.

பறையாட்டம் - விளக்கம்

'பறை' என்பதனை 'தப்பு' என்ற சொல்லாலும் குறிப்பர். இத்தோல்கருவியை இடது தோளில் தொங்கவிட்டு மார்புடன் அணைத்துக்கொண்டு, நீளமான குச்சியை இடதுகையில் ஏந்தி கருவியின் மேல்புறத்திலும், சிறிய குச்சியை வலதுகையில் ஏந்தி கருவியின் கீழ்ப்புறத்திலும் அடித்துக்கொண்டு அடவுகளை ஏற்படுத்தி ஆடுதல் பறையாட்டம் எனப்படும். இதனைத் 'தப்பாட்டம்' என்றும் கூறுவர்.

பறையறிவித்தல்

சங்க காலத்தில் பறை என்பது செய்தியை அறிவிக்கும் கருவியாகப் பயன்பட்டது. குறிப்பாக அரசாங்க அறிவிப்புகள், திட்டங்கள், அவசரத்தேவைகள், போர்க்கால நடவடிக்கைகள் ஆகியவற்றை இப்பறையை வாசித்துக் கொண்டு வீதிகள் தோறும் சென்று அறிவித்தனர்.

இன்றும் கிராமப்புறங்களில் அரசு அறிவிப்புகள், திட்டங்கள், நலவாழ்வுமுகாம் நடப்புகள், கோயில் திருவிழாக்கள், இறப்புச் செய்திகள் ஆகியன பறை வாசித்துத் தெரிவிக்கப்படுகின்றன. இதனை 'தண்டோரா போடுதல்' என்று குறிக்கின்றனர்.

'பறைதல்' என்றால் 'அறிவித்தல்' என்று பொருள்படுதலால் பறை என்ற பெயரில் இலக்கியச் சிற்றிதழ் ஒன்றும் தமிழில் வெளிவருகிறது.

பறைகளுடன் சம்பந்தப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கு ஓரளவு காரணமாக இருந்த இரு தொழில்கள் தச்சு வேலையும், மண்பாண்டத் தொழிலும் ஆகும். ஒரு மரத்தை வெட்டி அதன் உட்புறத்தை குடைந்து பறைக்கு வேண்டிய கூடாக அதை உபயோகிப்பது பழைய வழக்கம். இதன் ஒரு பக்கத்தையோ, இரு பக்கங்களையோ தோலினால் மூடினால் ஒரு பறையாகும். ஆதி காலத்துப்பறைகள் மிகப் பெரியனவாகவும், தரையின் மேல் மரங்களைப் போல் நிறுத்தி வைக்கப்பட்டனவாகவும் இருந்திருக்கலாம்.

இதுபோன்ற செங்குத்தான பறைகள் நம்மிடையே இன்றும் வழக்கில் இருந்து வருகின்றன. ஆந்திர நாட்டின் ரோன்ஸா அல்லது ருன்ஸா என்ற பறை இவ்வகையைச் சேர்ந்தது. தற்சமயம் மரத்திற்குப் பதிலாக பித்தளையை உபயோகித்து பறையைக் கூம்பு வடிவத்தில் அமைக்கின்றனர். ஆப்பிரிக்கா, மெக்ஸிகோ முதலிய நாடுகளிலும், சிற்சில பழங்குடி மக்களிடையேயும் மரத்தினாலான பறைகள் உருளைகள் வடிவத்தில் காணப்படுகின்றன. இவற்றின் நீளம் மூன்று மீட்டர் ஆகும்.

கல்வி நிலையங்களில்

நாட்டுப்புறக்கலையைக் கற்பிக்கும் தனிக்கலைக் கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் மற்ற ஆட்டக்கலைகளைக் காட்டிலும் தப்பாட்டக் கலைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படு கிறது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் இக்கலையைப் பயின்று

வருகின்றனர். ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடும் ஆட்டங்களும், முழுவதும் பெண்களே ஆடும் ஆட்டங்களும் இன்று பெருகி வந்துள்ளன.

இன்றையச் சூழலில் பறையாட்டம்

'பறையர்' என்ற குறிப்பிட்ட சாதியினரால் தொடக்கக்காலத்தில் நிகழ்த்தப்பட்டதால் இக்கலையை பறையாட்டம் என்றனர். ஆனால் இன்று குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமின்றி விரும்புபவர் அனைவரும், எப்பிரிவைச் சார்ந்தோரும் இந்த ஆட்டக்கலையைப் பயில்கின்றனர். குறிப்பாகப் பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றில் மாணவர்களுக்காக நிகழ்த்தப்படும் மாவட்ட, மாநில அளவிலான போட்டிகளில் இக்கலை இடம்பெறுவதால் கலையார்வம் கொண்ட மாணவர்கள் அனைவரும் விரும்பிப் பயில்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும்இக்கலையில் புதிய நுணுக்கங்களைப் புகுத்துகின்றனர்.

இல்ல நிகழ்வுகளில்

அரசு அறிவிப்புகளை விளக்கும் கருவியாக மட்டுமின்றி கல்யாண வீடுகளில் வலம் வரும் மங்களக் கருவியாகவும் பறை தற்போது விளங்குகிறது. சிலர் தமது திருமணம், காதுகுத்து, பூப்புனித விழா போன்றவற்றிற்கும் தப்பு அடிக்கின்றனர்.

அலங்காரம் செய்யப்பட்ட வண்டியில் மாப்பிள்ளையின் வீட்டில் இருந்து கோயிலுக்கோ, சத்திரத்துக்கோ ஊர்வலமாக அழைத்து வருவர். இவ்வாறு அழைத்து வரும்போது எட்டு அல்லது பத்து பேர் கொண்ட தப்பாட்டக் குழு ஊர்வலத்துக்கு முன் தப்படித்து ஆடிக்கொண்டே செல்லும். கல்யாண ஊர்வலங்களில் இவர்கள் அனைவரும் ஒரே வண்ணத்தில் உடை அணிந்திருப்பர். ஊர்வலமாகச் செல்லும் போது ஆங்காங்கு ஓர் இடத்தில் நின்று ஆடுவர். இது பார்வையாளர்களின் கூட்டத்திற்கேற்ப நிகழ்த்தப்படும். கல்யாண ஊர்வலத்திற்கென்று குறிப்பிட்ட ஓர் அடியைத் தொடர்ந்து அடிப்பர்.

உடையலங்காரம்

முன்பு தப்பாட்டக்கலைஞர்களுக்கு என தனி உடையலங்காரம் எதுவும் இல்லை. ஆனால் இன்று சீருடைகள் பலவும் ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆடையலங்காரம் மட்டுமின்றி மாலை அணிதல், தலையில் துணி கட்டிக்கொள்ளல், ஒற்றைக் காலில் துணி கட்டுதல் ஆகியன இன்று மாற்றம் பெற்றுள்ளன.

பயிலும் முறை

முதலில் தாளங்களை தப்பு வைத்து அடிக்காமல் ரெண்டு கோல்களைப் பயன்படுத்தி தரையில் அடித்து பழகுவர். நன்றாகத் தரையில் அடிக்கத் தெரிந்ததும் தப்பில் அடித்துப் பழகுவர். அதன்பிறகு கால் அடவை மெதுவாகப் போட்டு, தப்பில் ஆடிப் பழகுவர். அதன்பிறகு தானாகவே அடியும், ஆட்டமும் வரும்.

துணைக்கருவிகள்

தப்புடன் இசைக்கப்படும் துணைக்கருவிகள் இடத்திற்கு இடம் மாறுபடுகன்றன. குறிப்பாக திண்டுக்கல், மதுரை போன்ற இடங்களில் டிரம், மொராக்கஸ், சிங்கி போன்றவையும் தஞ்சாவூர், பாண்டிச்சேரி போன்ற இடங்களில் தவில், நாதஸ்வரம் போன்றவையும் நாகர்கோவில் பகுதிகளில் செண்டை மேளமும் சேர்க்கப்படுகிறது.

சமூகச் சிக்கல்களைச் சாடல்

இறப்புக்காலத்திலும், திருவிழாக்காலங்களிலும், வாசிக்கப்படுதல் என்ற நிலையிலிருந்து மாறி இன்று சமூகச் சிக்கல்களை எடுத்துரைக்கும் போர்க்குரலாகப் பறை இசைக்கப்படுகின்றது. ஏதேனும் ஒரு சிக்கலை மையப்படுத்தி இயற்றப்பட்ட கருத்தமைந்த பாடலை பாடிக்கொண்டு பறை முழக்குகின்றனர்.

பெண்களின் பங்கு

பெண்களே முழுமையாகத் தலைமை வகித்து குழுக்களாகி இசைக்கும் பறைக்குழுகள் உள்ளன. பெண் என்பவள் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினைச் சார்ந்தவள் என்பர். அவளுக்கு முக்கியத்துவம் அளிக்க இக்கலை பயன்படுகிறது. கருவில் தொடங்கும் பெண்களின் பிரச்சினைகள் இவ் ஆட்டக்கலையில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில், கலாச்சாரப் பின்னணிகளை வரையறுப்பதிலும், அவற்றைக் கட்டிக்காப்பதிலும் பறையாட்டத்திற்குத் தனியிடம் உண்டு என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

◆

விரிவுரையாளர்,
தமிழாய்வுத்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.



இயற்கைக்கும் மாந்த வாழ்விற்கும் இடையேயான உறவுகளை நாட்டுப்புற ஆட்டக்கலைகள் வளர்த்தெடுத்துள்ளன. மாந்த வாழ்வின் தொடக்கத்தில் 'சேய்' போல உருவாகிய நாட்டுப்புறக் கலைகள் குமுகாய வளர்ச்சி நிலைகளுக்குத் தக்கவாறு தம்மைத் தகவமைத்துக் கொள்கின்ற நிலையானது இக்கருத்தரங்கின் சிறப்பான நோக்கத்தின் உள்ளீடாக விளங்குகிறது. இங்கு வழங்கப்பட்டுள்ள கட்டுரைகளிலிருந்து இந்த நோக்கம் நிறைவேறியுள்ளது. இதிலிருந்து இக்கருத்தரங்கத்தின் பயனை நிகழ்கலைத் துறையானது அடைந்துள்ளது. கருத்தரங்கில் பங்கு கொண்ட அனைத்துக் கட்டுரையாளர்களையும் நிகழ்கலைத் துறைத்தலைவர் முனைவர் த.கனகசபை மற்றும் துறை ஆசிரிய உதவியாளர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். வாழ்த்துகள்.....

-துணைவேந்தர் மு.பொன்னவைக்கோ

நிகழ்கலைத்துறை

தமிழகத்தில் கலைகளின் களஞ்சியமாக விளங்கும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் எழிலார்ந்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டினையொட்டி (2006-07) பல்கலைக்கழகத்தில் 13.11.2006 அன்று முன்னைத் துணைவேந்தர் பெருந்தகை முனைவர் சி.தங்கமுத்து அவர்களால் "தமிழிசை, நிகழ்கலை மையம்" தொடங்கப்பட்டது.

"தமிழிசை, நிகழ்கலை மையம்" (Centre for Tamil Music & Performing Arts) என்ற பெயரானது 04.10.2006 ஆட்சிக் குழுவால் சீர்செய்யப்பெற்று நிகழ்கலைப்பள்ளி (School of Performing Arts) என்ற பொதுப்பெயரால் வரையறுக்கப்பட்டது.

மாண்பமை துணைவேந்தர் பெருந்தகை முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்கள் 11.09.2008 அன்று நிகழ் கலைப்பள்ளியில் நிகழ்கலைத்துறையை உருவாக்கி முனைவர் த.கனகசபைக்குக் களத்தலைவர் (Chair) மற்றும் துறைத்தலைவர் (Head) ஆகிய பணிப்பொறுப்பினை வழங்கியுள்ளார்.

நிகழ்கலைத்துறையில் தமிழிசை, நாட்டுப்புற நடனம் ஆகிய முழு நேர இளநிலைப் பட்டய வகுப்புகளும் தப்பாட்டக்கலை, இசையலகுக்கட்டை (Keyboard), வீணை, வயலின், மேளம், நாகசுரம் ஆகிய பகுதிநேர முதுநிலைப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.